# இந்தியப் புரட்சியின் அரசியல் பாதையும் இராணுவப் பாதையும்

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# இந்தியப் புரட்சியின் அரசியல் பாதையும் இராணுவப் பாதையும்

தமிழ் மாநில அமைப்புக் கமிட்டி,
இந்தியப் பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்),
தமிழ்நாடு.

முதற் பதிப்பு : ஜூலை, 1982.
விலை : ரூ 17-00

# தமிழ் மாநில அமைப்புக் கமிட்டியின் மூன்றாவது பிளீன அரசியல் கோட்பாட்டு ஆவணங்கள்-பகுதி IV

தமிழ் மாநில அமைப்புக் கமிட்டி
இந்தியப் பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)யின்
மூன்றாவது பிளீனத்தில் (செப்டம்பர் 18-21, 1981)
நிறைவேற்றப்பட்டது.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# பொருளடக்கம்

I. இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களும் வழிகாட்டும் நெறிமுறைகளும் வகுப்பதற்கான மார்க்சிய-லெனினிய அணுகுமுறைகளை வரையறுக்க வேண்டும் ........................................ 1

II. இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர விதிகளும் வழி காட்டும் நெறிமுறைகளும் வகுப்பதற்கான முன்தேவை: மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டு முடிவுகளும் திட்டமும்......................32

III. இந்தியப் புரட்சிக்கான அரசியல்—இராணுவ யுத்ததந்திரங்களின் அவசியம் —பிறநாடுகளின் அனுபவங்கள்—இந்திய புரட்சியின் அரசியல் இராணுவப்பாதை...............66

IV இந்தியப் புரட்சிக்கான அரசியல் யுத்ததந்திரம்-அதன் கூறுகளும் விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளும் பருண்மையான பிரயோகத்துடன் .....................100

V அரசியல் போர்த்தந்திர விதிகள்
மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளை
வகுப்பதற்கான மார்க்சிய-லெனினிய
அணுகுமுறை ........................................148

VI போர்த்திர விதிகள் வழிகாட்டும்
நெறிமுறைகளின் பருண்மையான பிரயோகம்
அரசியல் போர்த்தந்திரத்தின் கூறுகள்
பற்றிய வரையறுப்புகள் ..............................184

VII இந்தியப் புரட்சிக்கான இராணுவ
யுத்ததந்திர போர்த்தந்திர விதிகளும்
நெறிமுறைகளும். இந்தியப் புரட்சிக்கான
பாதை—மக்கள் யுத்தப்பாதையே......................261

VIII அரசியல் மார்க்கத்தையும் இராணுவ
மார்க்கத்தையும் இணைக்கும் முறை.
சில நடைமுறைப் பிரச்சினைகள்.
செஞ்சேனையையும் செந்தளப்பிரதேசத்தையும்
நிறுவி வளர்க்கும் போக்கு..............................335

இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) தமிழ் மாநில அமைப்புக் கமிட்டியின் மூன்றாவது பிளீனத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் - கோட்பாட்டு ஆவணங்களைக் கீழ்க்கண்ட வரிசைக்கிரமத்தில் படிக்கின்ற பொழுது அவைகள் சர்வதேசிய, தேசியப்புரட்சி பற்றிய ஓர் ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தைத் தரும்.

## (அ) சர்வதேசியப் புரட்சி குறித்து:—

இரு முக்கிய முடிவுகள்.

(i) சர்வதேசியப் புரட்சியின் சக்தி வாய்ந்த போர் ஆயுதம் மூன்றுலகக் கோட்பாடு.

(ii) மரம் ஓய்வை நாடினாலும் காற்று தணிந்துவிடாது -லியு-தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபுவாதம் : ஓர் எதிர்மறை ஆசிரியன்.

## (ஆ) தேசியப் புரட்சி குறித்து:—

பகுதி I இந்தியாவின் சமுதாயப் பொருளாதாரப் படிவம்.

பகுதி II வர்க்கப்போராட்டத்தின் கேந்திரமான கண்ணி.

பகுதி III இந்திய சமுதாயத்தில் நிலவும் அடிப்படை முரண்பாடுகளும் பிரதான முரண்பாடும்.

பகுதி IV இந்தியப் புரட்சியின் அரசியல் பாதையும் இராணுவப் பாதையும்.

# இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களும் வழிகாட்டும் நெறிமுறைகளும் வகுப்பதற்கான மார்க்சிய - லெனினிய அணுகுமுறைகளை வரையறுக்க வேண்டும்.

---

''பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரப் போராட்டத்தின் தலைமை முறை பற்றிய விஞ்ஞானமாக அமைவது லெனினிசத்தின் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் ஆகும்'' என்றார் ஸ்டாலின். யுத்த தந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய இந்த வரையறையின் முழுப்பொருளையும் முழுப்பரிமாணத்தோடு புரிந்து கொள்ளும்பொழுது மட்டுமே இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர வழியை ஆக்கப்பூர்வமான முறையில் வகுப்பதற்கும் பிரயோகிப்பதற்குமான முன்முயற்சியையும் திறவுகோலையும் பெற்றவர்களாவோம்.

புரட்சிகர இயக்கத்தின் புறவயமான போக்குகள் மீது நேரடியாக எந்த மாற்றத்தையும் செய்ய இயலாது எனினும் புரட்சியின் குறிக்கோளை அடைவதற்கரிய இயக்கத்தின் உணர்வுபூர்வமான அகநிலைப் போக்குகளை இயக்குவதும், வழி நடத்திச் செல்வதில் முற்றிலும் தீர்மானகரமான செல்வாக்கு செலுத்துவதும் யுத்ததந்திரமும் போர்த்தந்திரங்களுமே ஆகும். பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரப் போராட்டத்தில் இவைகளே மிகவும் செயலூக்கமிக்க துறைகளாகும். ஏனெனில் இயக்கத்தின் உணர்வுபூர்வமான பகுதியாகிய அகநிலையில் யுத்த தந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் செயல்படும் அரங்கம் மிகவும் பரந்து விரிந்ததும் பனமுகமானதுமாகும். யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் சரியான அல்லது தவறான தன்மைகளைப் பொருத்து அவை இயக்கத்தை துரிதப்

படுத்தவோ, மந்தப்படுத்தவோ அல்லது பின்னிழுக்கவோ முடியும்; இயக்கத்தை நிச்சயம் வெற்றிக்குரிய மற்றும் சுருக்கமான பாதையில் வழி நடத்த முடியும்; அல்லது மிகவும் இடர்ப்பாடுகள் மிக்க, துன்ப துயரங்கள் மிக்க சிரமமான பாதையில் திசை திருப்பிவிடவும் முடியும்.

ஒரு பாட்டாளி வர்க்க கட்சி, புரட்சியின் குறிக்கோள், இலக்கு, உந்து சக்திகள், தன்மைகள், கட்டம் பற்றிய பொதுவான நிலைப்பாடுகளில் சரியாக இருப்பினும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரப் பிரச்சனைகளில் தவறிழைக்கலாம், இயக்கம் தோல்வியடையலாம், பின்னடைவுக்குள்ளாகலாம்; அடிப்படைப் பிரச்சனைகளில் ஒத்த கருத்திருப்பினும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரப் பிரச்சனைகளில் வேறுபாடு கொள்ளலாம், இருவழிப் போராட்டங்கள் எழலாம், பிளவுபடலாம். அடிப்படைப் பிரச்சனைகள் பலவற்றில் சரியாக இருப்பினும் ஒன்றுபட்டிருப்பினும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரப் பிரச்சனைகளில் தவறிழைக்கப்பட்டதற்கும், இயக்கம் தோல்வியடைந்ததற்கும், பின்னடைவுக்குள்ளானதற்கும், இருவழிப் போராட்டங்கள் எழுந்து உக்கிரமடைந்து சிலசமயம் பிளவுபட்டதற்கும் உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் நிறைய எடுத்துக்காட்டுகள் உண்டு.

1905, 1917 பிப்ரவரி ருஷியப் புரட்சியானது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி, புரட்சியின் குறிக்கோள் ஜாரிசத்தை தூக்கியெறிவது போன்றவற்றில் போல்ஷிவிக்குகளும் மென்ஷிவிக்குகளும் ஒன்றுபட்டிருப்பினும், யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர வழிகளில் வேறுபட்டனர். அதாவது விவசாயிகளின் விவசாயப் புரட்சி, பாட்டாளிகள்-விவசாயிகளின் சர்வாதிகாரம், ஊசலாடும் சமரசப்படுத்தும் முதலாளிகளைச் செயலிழக்கச் செய்வது போன்ற போல்ஷிவிக்குகளின் யுத்ததந்திர போர்த்தந்திர நிலைப்பாடுகளுக்கெதிராக முதலாளிகளின் விவசாயப் புரட்சி, முதலாளித்துவ சர்வாதிகாரம், விவசாயிகளைப் புறக்கணித்து முதலாளித்துவத் தலைமையை ஏற்பது போன்றவை மென்ஷிவிக்குகளின் யுத்ததந்திர போர்த்தந்திர நிலைப்பாடுகளாக இருந்தன. எனவே ருஷியப் பாட்டாளி வர்க்க இயக்கம் உக்கிரமான இருவழிப் போராட்டத்தைக் கண்டது; போல்ஷிவிக்குகளும் மென்ஷிவிக்குகளும் இறுதியிலும் கூட இணைய முடியாமற் போனது; பாட்டாளி வர்க்க இயக்கம் பிளவுபட்டிருந்ததானது 1905-1907 ருஷியப்புரட்சி தோல்வியுற்றதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்தது.

சீனப்பொதுவுடமைக் கட்சிக்கெதிராக 1927ல் சியாங்-கேஷேக் கும்பல் எதிர்ப்புரட்சி குடைகவிழ்ப்பு நடத்தியதற்கு சற்றுப் பின்வரை நீடித்திருந்த சென்-து-சியுவின் டிராட்ஸ்கிய வலது சந்தர்ப்பவாதம் சீனப்புரட்சியின், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்ற தன்மை, சீனா அரைக்காலனிய அரை நிலப்பிரபுத்துவ நாடு என்ற கணிப்பு, விவசாயிகளின் விவசாயப்

புரட்சி, புரட்சியின் இலக்கான தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ பிரதிநிதி சியாங்-கே-ஷேக் ஓர் எதிர்ப் புரட்சிக் கும்பல் போன்ற அடிப்படை நிலைப்பாடுகளை எதிர்த்தது. 1930-33ல் சீனப் பொதுவுடமைக் கட்சித் தலைமையில் இருந்த 'இடது' சந்தர்ப்பவாத வாங்மிங், சாங்-கோதோ கும்பல் சீனப்புரட்சியின் அடிப்படை நிலைப்பாடுகளை மறைமுகமாக மறுத்தது. இந்த இரு தவறான போக்குகளும் புரட்சிகர இயக்கத்தை தோல்வியிலும் பின்னடைவிலும் தள்ளின. டிராட்ஸ்கிய சென்-து-சியுவின் வலது சந்தர்ப்பவாதம், வாங்மிங்கின் 'இடது' சந்தர்ப்பவாதம் ஆகிய இரு தவறான போக்குகள் சீனப் பொதுவுடமைக்கட்சியில் தலைமை ஏற்றிருந்த காலம் தவிர இவை இரண்டிற்குமிடையே இருமுறை 'இடது' சந்தர்ப்பவாதம் தலைமையேற்றிருந்தது. சியாங்-கே-ஷேக்கின் எதிர்ப்புரட்சி குடைகவிழ்ப்பைத்தொடர்ந்து எழுந்த அராஜக அதிதீவிர வெறியாட்டத் தன்மையுடைய (புட்சிசம்) 1927-28 'இடது' சந்தர்ப்பவாதம் மற்றும் 1929-30 லிலிசன் 'இடது' சந்தர்ப்பவாதம் ஆகிய இரு தவறான போக்குகளும் — சீனப்புரட்சி விவசாயிகளின் விவசாயப் புரட்சி, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி, தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் நிலப்பிரபுக்களின் பிரதி சியாங்-கே-ஷேக் எதிர்ப்புரட்சிக் கும்பலை முறியடிப்பதே குறிக்கோள் போன்ற — அடிப்படை நிலைப்பாடுகளில் பெரும்பாலும் சரியாக இருந்தன. இவற்றில் கட்சி ஐக்கியப்பட்டிருந்தது; இருப்பினும் அவ்விரு போக்குகளும் பிரதானமாக யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர வழிகளில் தவறிழைத்தன; புரட்சிகர இயக்கத்தை தோல்வியிலும் பின்னடைவிலும் தள்ளின. அவற்றின் விளைவாக எழுந்த உக்கிரமான இருவழிப் போராட்டங்கள் சரியாக கையாளப்பட்டதால் தவறான போக்குகள் களையப்பட்டு ஐக்கியப்பட்ட கட்சியாக முன்னேறியது.

எனவே சமுதாயத்தன்மை, புரட்சியின் தன்மை, குறிக்கோள், இலக்கு, உந்து சக்திகள், கட்டம், எதிர்காலம், போன்ற அடிப்படை நிலைப்பாடுகளில் சரியாக இருப்பினும், ஒன்றுபட்டிருப்பினும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர பிரச்சனைகளில் நாம் முக்கியத்துவம் செலுத்த வேண்டும்; அவை சரியாகத் தீர்க்கப்பட வேண்டும். உலகப் பாட்டாளி வர்க்க இயக்கம் இவற்றையே போதிக்கின்றது.

புறவயமான போக்குகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் வந்தடையும் மார்க்சிய - லெனினியக் கோட்பாட்டு முடிவுகளும், அதிலிருந்து வகுக்கப்படும் மார்க்சிய-லெனினியத் திட்டத்தின் குறிக்கோள்களும் முறையே யதார்த்த நிலைமைகளையும், பாட்டாளி வர்க்கத்தின் சித்தத்தையும் மட்டுமே குறிக்கின்றன. இவை மிகச் சரியாகவும் துல்லியமாகவும் இருக்க வேண்டும். ஆனால் புரட்சியாளர்களின் நோக்கம் நிலைமைகளை வியாக்கியானம் செய்வதையும் சித்தத்தை வகுப்பதையும் விட மேலே செல்கிறது. நிலைமைகளை மாற்றவும் சித்தத்தை செயலாக்க

வும் வேண்டும். யுத்ததந்திரமும் போர்த்தந்திரங்களுமே அதைச் சாதிப்பதற்கான நிச்சயமான வழி வகைகளை வகுத்தளிக்கின்றன. எனவே தான்,

"நடைமுறைப் புரட்சி நடவடிக்கைகளின் சூழ்நிலைமைகளைப் புரிந்து கொள்ளவோ அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடவோ முந்திய பொருள்முதல்வாதம் திறனற்றிருந்ததானது அதன் பிரதான குறைபாடுகளில் ஒன்று என்பதை 1844-45 லேயே தெளிந்துரைத்து விட்டார் மார்க்ஸ். ஆகவே அவர் தமது கோட்பாட்டு வேலையோடு கூடவே, பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் பற்றிய (யுத்த தந்திரம்-மா.அ.க.) மற்றும் போர்த்தந்திரப் பிரச்சனைகளிலே தமது வாழ்க்கை நெடுகிலும் அயராது கவனம் செலுத்தி வந்தார்... இந்த அம்சத்தை தன்னகத்தே கொண்டிராத பொருள்முதல்வாதம் உறுதியற்றதாய், ஒருதலைப் பட்சமானதாய் இருக்கும் என்று மார்க்ஸ் முழு நியாயத்தோடு கருதினார் என்பதை வலியுறுத்துகிறோம்". (லெனின், மார்க்ஸ் – எங்கல்ஸ் - மார்க்சியம் பக்.54)

மார்க்ஸ் - எங்கல்சுக்குப்பின், லெனினுக்கு முன்னிருந்த—இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைமை மேலோங்கியிருந்த—காலகட்டம், பாட்டாளி வர்க்கம் எதிர்த்தரப்பாக மட்டுமே இருக்கவேண்டியிருந்த நிலைமைகளில் கிட்டத்தட்ட அமைதியான வளர்ச்சிப் போக்குடையதும், பாட்டாளி வர்க்க அரசியல் படையை உருவாக்கிப் பயிற்றுவிப்பதும், நாடாளுமன்ற, சட்டபூர்வ வழிகளைப் பயன்படுத்துவதோடு வரம்பிட வேண்டியதும் அடங்கியதாகும். எனவே நிலைமைகளுக்கேற்பவும், பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் பற்றிய மதிப்பீடுகளுக்கேற்பவும் ஒருங்கிணைந்த யுத்ததந்திரமோ விரிவான போர்த்தந்திரமோ இருந்திருக்க முடியாது. யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய துண்டு துண்டாக சிதறிய கருத்துக்கள் தவிர யதார்த்தத்தில் யுத்ததந்திரமோ போர்த்தந்திரங்களோ இல்லை. ஆனால் இரண்டாவது அகிலத்தின் பிரதான தவறு அச்சமயத்தில் நாடாளுமன்ற, சட்டபூர்வ வழியை மிகைப்படுத்தி ஒரே வடிவமாகக் கருதியதிலும் வெளிப்படையான போர்கள் வெடித்த போதும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலான போராட்ட வடிவங்கள் பற்றிய பிரச்சனை முன்னுக்கு வந்த போதும் கூட புதிய கடமைகளை எதிர்கொண்டு தோள் கொடுக்காது புறமுதுகிட்டதிலும் அடங்கியிருந்தது.

அதையடுத்த காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலம் முதலாளித்துவ வர்க்கத்தை தூக்கியெறியும் பிரச்சனை உடனடிப் பிரச்சனையானபோது, பாட்டாளி வர்க்கத்தின் சேமிப்புகள் (ரிசர்வுகள்) பற்றிய பிரச்சனை எரியும் பிரச்சனையாக மாறியபோது நாடாளுமன்ற, சட்டபூர்வ வடிவங்கள் மட்டுமின்றி எல்லா வடிவங்களிலுமான போராட்டங்களும் அமைப்புகளும் தெளிவாக முன்னணிக்கு வந்தபோது மட்டுமே

பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்திற்கான ஒருங்கிணைந்த யுத்ததந்திரமும் விரிவான போர்த்தந்திரங்களும் வகுக்கப்பட முடிந்தது.

"இந்தக் காலத்தில்தான் யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் பற்றிய மார்க்ஸ், எங்கல்ஸின் கருத்துக்களை— இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளால் இருட்டடிப்பு செய்யப்பட்ட கருத்துக்களை—லெனின் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். ஆனால் மார்க்ஸ், எங்கல்சினுடைய குறிப்பான போர்த்தந்திர நிர்ணயிப்புகளை நிலைநாட்டியதோடு மட்டும் லெனின் தனக்கு வரம்பிட்டுக்கொள்ளவில்லை. அவர் அவற்றை மேலும்வளர்த்தார்; தமது புதிய கருத்துக்களையும் நிர்ணயிப்புகளையும் கூடுதலாக இணைத்தார்; பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்தின் தலைமை முறைக்கான விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளது ஒரு கட்டமைவாக இவை எல்லாவற்றையும் இணைத்தார்" (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சனைகள்—பக்கம் 80)

மார்க்ஸ்-எங்கல்ஸ் புரட்சிகரமான முறையில் உருவாக்கி லெனின் மீண்டும் நிலைநாட்டி வளர்த்து, ஸ்டாலின் தொகுத்தளித்த பாட்டாளி வர்க்கப் புரட்சிகரப் போராட்டத்தின் தலைமை முறைக்கான விஞ்ஞானமாகிய யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களை காலனிய, அரைக்காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளுக்குப் பிரயோகிப்பது பற்றிய கோட்பாடுகளை—குறிப்பாக புதிய ஜனநாயகம் மற்றும் மக்கள் யுத்தப் பாதை பற்றிய கோட்பாடுகளை—மாவோ மேலும் வளர்த்தார்.

எனவே இந்தியப் புரட்சி பற்றிய அடிப்படை நிலைப்பாடுகளாகிய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தின் தன்மை உற்பத்திமுறை, அரசு வடிவமுறை, உள்ளடக்கம், ஆட்சிமுறை அடிப்படை மற்றும் பிரதான முரண்பாடுகள், புரட்சியின்தன்மை கட்டம், குறிக்கோள், இலக்கு, உந்துசக்திகள் போன்றவைகளில் சரியான முடிவுகளை வந்தடைந்தால் மட்டும் போதாது பாட்டாளி வர்க்கத்தின் இன்றைய கட்டத்தின் புரட்சிகர போராட்டத்தினுடைய தலைமை முறை பற்றிய விஞ்ஞானமாகிய ஒருங்கிணைந்த யுத்த தந்திரம் மற்றும் விரிவான போர்த் தந்திர வழிகளை சரியான முறையில் வகுப்பதற்கும் முக்கியத்துவமளிக்க வேண்டும். அனைத்துலக பாட்டாளி வர்க்க இயக்க அனுபவங்கள் மற்றும் அதன் ஆசான்களது போதனைகளைத் தொகுத்து அவற்றின் சாராம்சங்களைக் கிரகித்து படைப்பூக்கமையாகப்பிரயோகித்து இந்தியப்புரட்சிக்கான யுத்ததந்திரம்மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய விதிகளையும் வழிகாட்டும் நெறி முறைகளையும் வகுத்து வரையறுக்க வேண்டியது இந்தியப் புரட்சியாளர்களது கடமை.

ஒருபுறம், இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைமையின் நேர் வாரிசுகளாகிய இந்தியத் திரிபுவாதிகளும்

நவீனத் திரிபுவாதிகளும் யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் பற்றிய மார்க்சிய லெனினிய விதிகளையும் வழி காட்டும் நெறிமுறைகளையும் இருட்டடிப்பு செய்வது, அவர் களது ஒரே வடிவமாகிய நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதையை நியாயப்படுத்தும் தந்திரமே என்பதை நன்கறிவோம். மற்றொருபுறம், சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் மாவோவின் மக்கள் யுத்தப்பாதை என்னும் இராணுவ யுத்த தந்திரம் மற்றும் அதன் ஒரு பகுதியாகிய கொரில்லாப் போர் முறை என்னும் ராணுவப் போர்த்தந்திரத்தின் போராட்ட வடிவம் ஆகியவற்றை கொச்சையாக லின்-பியௌ தொகுத்தளித் தவாறு பிரயோகிப்பதன் மூலம் யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் பற்றிய மார்க்சிய-லெனினிய விதிகளையும் வழி காட்டும் நெறிமுறைகளையும் இருட்டடிப்பு செய்வது அவர்களது ஒரே வடிவமாகிய ''வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பது'' என்ற 'நரோத்னிச' அதிதீவிர பாதையை நியாயப்படுத்தும் தந்திரமே என்பதையும் நன்கறிவோம்.

ஆனால் சாருவின் இடது சந்தர்ப்பவாதத்தை நிராகரிப் பதாகக் கூறிக்கொள்ளும் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்களின் நிலைமையோ காலனிய இந்தியாவைப் பற்றி மார்க்ஸ்கூறினாரே அதே போன்று, இருந்ததையும் இழந்து புதிதாக எதையும் பெறாத நிலை; இந்நிலையிலிருந்து மீள முடியாத அளவுக்கு வரம்பிட்டுக் கொண்டுள்ளன. அதாவது சீனப்புரட்சியை வழி நடத்திய மாவோ வளர்த்தெடுத்த யுத்த தந்திரம்மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறி முறைகள் மட்டுமே பொதுத் தன்மைகள் காரணமாக இந்தியப் புரட்சிக்குப் பொருந்தும் மற்றவை எதுவுமே பொருந்தாது என்றே கருதுகின்றனர். அந்த அடிப்படையிலேயே சீனப்புரட்சி யின் போக்குகள் போன்ற இணையான முடிவுகளும் வெறுமனே ஒப்பீடு செய்யும் முறைகளும் பின்பற்றப்படுகின்றன. இணையான முடிவுகள் எடுப்பது, ஒப்பீடு செய்யும் முறை என்னும் நோய் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் ஆழமாகப் புரையோடிப் போயிருக்கிறது. இந்தியப் புரட்சிக்கான சிறப்பான குணாம்சங்கள் எதையும் பற்றி அக்கறையின்றி இருப்பது பொது வாக மக்கள் யுத்தப்பாதை என்ற யுத்ததந்திரத்தை ஏற்பது, ஜப்பானிய எதிர்ப்புப் போர் சீனப்புரட்சியில் வந்தது போன்ற சூழ்நிலை வந்தால் மட்டுமே போர்த்தந்திரப் பிரச்சனைகள் எழும் என்றிருப்பது, அதுவரை எல்லா வடிவங்களிலுமான போராட்டங்கள் மற்றும் அமைப்புகள் வேண்டும். சட்டபூர்வ மானதையும் சட்டவிரோதமானதையும், வெளிப்படையானதை யும் ரகசியமானதையும் இணைக்க வேண்டும். இவ்வாறு எல்லா வற்றையும் தொகுப்பாக வைப்பது இவையே பிற மார்க்சிய லெனினிய குழுக்களின் அணுகுமுறையாக இருக்கிறது. சீனப் புரட்சியின் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளின் சாராம்சத்தை கிரகித்து இந்தியாவின் பருண்மையான நிலைமைகளுக்குப் பிரயோகித்து

இந்தியப்புரட்சியின் குறிப்பான குணாம்சங்களைக் கிரகிக்க வேண்டியதின் அவசியத்தைக் கொள்கையளவில் எல்லா மார்க்சிய லெனினியக் குழுக்களும் அங்கீகரிக்கின்றன. ஆனால் உண்மையில் கோட்பாடு மற்றும் நடைமுறையில் அவை சீனப்புரட்சியின் மறு பதிப்பாகவே இந்தியப்புரட்சி இருப்பதாக அணுகுகின்றன.

யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரம் பற்றிய மாவோ வின் பொதுவான விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் காலனி, அரைக்காலனி மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளின் புரட்சிக்கு மட்டுமல்லாது எல்லாப் புரட்சிகளுக்கும் பொருந்தும்; குறிப்பான விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் இந்தியா போன்ற அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ மற்றும் காலனிய நாடுகளுக்குக் கூடுதலாகப் பொருந்தும்; இவையனைத்தும் மறுக்க முடியாத உண்மைகளாகும். ஆனால் ஒவ்வொரு நாட்டிற்கு இடையேயும் ஒவ்வொரு காலகட்டத்திற்கு இடையேயும் தேசிய ரீதியிலும் சர்வதேசிய ரீதியிலும் பருண்மையான நிலைமைகள் ஒரே அச்சாக அப்படியே இராமல் மாறுபடுகின்றன. எனவே குறிப்பான குணாம்சங்களுக்கேற்ப யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திர விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் பருண்மையான மாறுபாடுகளுடன் வகுக்கப்பட வேண்டும். ஒப்பீடு செய்யும்முறை இணையான முடிவுகள் எடுப்பது ஆகிய அணுகுமுறைகள் இதற்கு முற்றிலும் விரோதமானவை.

அதுமட்டுமல்ல, யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய மாவோவின் விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் பெரும்பாலும் நடைமுறையில் பிரயோகிக்கப்பட்ட வடிவத் திலேயே இருக்கின்றன. அவற்றின் விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் தனியே பிரித்து பொதுமைப்படுத்தி சாராம்சத்தை தொகுப்பது அதாவது யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் வகுப்பதற்கான அணுகுமுறையை (methodology) வரையறுப்பது மற்றும் பருண்மையாகப் பிரயோகிப்பது ஆகிய இரு பணிகள் உள்ளன. இவ்விரு பணிகளில் எதில் தவறு நேர்ந்தாலும் பாரதூர மான விளைவுகள் ஏற்படும்.

பிற மார்க்சிய-லெனினியக் குழுக்களோ யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனை அடிப்படையிலான விதிகளும் வழிகாட்டும் நெறிமுறை களும் வகுப்பதற்கான அணுகுமுறையின் அவசியத்தை உணர்ந்து கிரகித்துக் கொண்டிருப்பதாக தெரியவில்லை; இந்தியப் புரட் சிக்குப் பருண்மையாகப் பிரயோகிப்பது அடுத்த பிரச்சனை. அதற்கான அணுகுமுறையைக் கிரகிப்பதும், பருண்மையாக-பிரயோகிப்பதும் — இவை ஒரு விஞ்ஞானபூர்வமான மார்க்சியப் லெனினிய அணுகுமுறைதான் எனினும் — கூட வரட்டுக் கோட் பாட்டு முறை, முதலாளித்துவ அறிவுஜீவிகளின் வகுப்பறைவாதம் என்று உதாசீனப்படுத்துவோரும் உண்டு. எனவேதான் யுத்ததந்

திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் என்றால் என்ன? அவற்றின் கூறுகள் என்ன? அவற்றை வகுப்பதற்கான அடிப்படைகள், முன் தேவைகள் என்ன? போன்ற சாதாரணப் பிரச்சனைகளை எழுப் பினாலே எரிச்சலடைகின்றனர், சாடுகின்றனர், திரிபுவாதம், வகுப்பறைவாதம் என்று முத்திரை குத்துகின்றனர். இவற்றின் மூலம் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரம் பற்றிய பாமரத் தனத்தையே இவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

சான்றாக, இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் (மார்க் சிஸ்ட் - லெனினிஸ்ட்) முதலாவது மத்தியக் கமிட்டியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரான ஆர் பி. சராப் அவர்களை எடுத் துக்கொள்ளுங்கள். இவரது நிலைப்பாட்டின்படி யுத்ததந்திரம் என்பது: புரட்சியின் இலக்கு (பிரதான முரண்பாட்டின் பிரதான அம்சமாகிய ஏகாதிபத்தியம், தரகு அதிகார வர்க்க முதலாளித் துவம் மற்றும் நிலப்பிரபுத்துவம்), உந்து சக்திகள், தலைமைச் சக்தி, யுத்ததந்திரப் பணி, ஆயுதப் போராட்டம் அதாவது ஒரு நீண்டகால மக்கள் யுத்தப்பாதை, புரட்சியின் தன்மை, புரட்சி யின் எதிர்காலம், — சோசலிசம் மற்றும் கம்யூனிசம் — இவை யனைத்தும் சேர்ந்த ஒரு கலவையாகும். போர்த்தந்திரம் என்பது: "பிரதானப் பணி (அதாவது குறிப்பான ஒருமுனைப்படுத்துதல்— மீண்டும் பிரதான முரண்பாட்டின் பிரதான அம்சமாகிய ஏகாதி பத்தியம், தரகு அதிகார வர்க்க முதலாளித்துவம் மற்றும் நிலப் பிரபுத்துவத்தை தூக்கியெறிவது — மா.அ.க.) மற்றும் இப் பணியை நிறைவேற்ற கட்சிகட்டுவது, ஆயுதப் போராட்டம், ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று அடிப்படை புரட்சிகர ஆயுதங் கள் பற்றியது போர்த்தந்திர வழி." (ஆர்.பி. சராப் குழுவின் எ ரெவெலூஷனரி வ்யு பாய்ண்ட் தொகுதி-1 எண்-1, ஜனவரி - மார்ச் 1978, பக்கம் 85-97)

இனியொரு சான்றாக, இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) முதலாவது மத்தியக்கமிட்டி உறுப் பினர் ஏ. எம். கே (இன்றைய மக்கள் யுத்தக்குழு தலைவர்களில் ஒருவர்) அவர்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவரது நிலைப் பாட்டின்படி "ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் யுகத்தில் 'ஏற்கனவே உள்ள அரசு இயந்திரத்தை நொறுக்குவதும், அழிப்பதும் மெய்யான மக்கள் புரட்சி ஒவ்வொன்றுக்கும் முன் னிபந்தனையாகும்' என்பது மார்க்சிய - லெனினியத்தினுடைய யுத்ததந்திரமாக (Strategy) அமைந்தது." "ஆயுதப்படை கொண்டு அரசியல் அதிகாரத்தை வெல்வது என்பது தான் பாட்டாளி வர்க்கத்தின் யுத்ததந்திரமாகும்." (சமரன், மார்ச்- ஏப்ரல் '79 எண் 4-5, பக்-28) மற்றொரு இதழில் 'மக்கள் ஜன நாயகப் புரட்சியின் யுத்ததந்திரம்' என்ற தலைப்பிட்டு புரட்சி யின் இயல்பு, கட்டம், இலக்குகள், உந்து சக்திகள், தலைமை, ஐக்கிய முன்னணி, விடுதலைப் பாதை என்று கோட்பாடு, திட்டம் மற்றும் யுத்ததந்திரத்தில் சில கூறுகளைச் சேர்த்து அனைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளன. யுத்ததந்திரத்தின் உயிராதாரமான

அம்சமாகிய பிரதான தாக்குதல் திசைவழி பற்றி எதுவுமில்லை. இவரது நிலைப்பாட்டின்படி போர்த்தந்திரங்கள் என்பதில் மேற் கண்டவை அனைத்தும் அடங்கியதும் கூடவேகட்சியைக்கட்டுவது, விவசாயப்புரட்சி, கொரில்லா மண்டலங்கள், தளப்பிரதேசங்கள், மக்கள்படை அமைப்பது, நகர்ப்புற வேலைகள், ஐக்கியமுன்னணி இவை அனைத்திலும் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைக் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன; (நமது போர்த்தந்திர வழி, மக்கள் யுத்தக்குழு வெளியீடு); சொல்வதானால் புரட்சி முடியும் வரை மேற்கொள்ளும் நடைமுறைகளுக்கான பொதுவான மேலோட்டமான கொள்கைத் தொகுப்பு.

இவ்விருவரும் அவர்களை சேர்ந்த குழுக்களும் மற்றும் சீனப் புரட்சி பற்றிய மாவோவின் சில கட்டுரைகளிலுள்ள முடிவுகளை இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போதந்திர வழி என்று தொகுத்துத் தந்துள்ள சுனிதிகோஷ் ஆகியோரும் தவிர மற்ற எந்த மார்க்சிய—லெனினியக் குழுவும் இவைபற்றி மூச்சுவிடுவதே இல்லை. அவர்கள் பின்பற்றுவதோ ஒப்பீடு செய்வதும் இணையான முடிவுகள் எடுப்பதுமாகிய மார்க்சிய— லெனினிய விரோத அணுகுமுறை; இதில் சுய திருப்தி வேறு. எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்துவிட்டதாகவும், இனி நடைமுறை மட்டுமே பாக்கி என்றும் அணுகும் இவர்கள் தமது முடிவுகள் எவ்வாறு மார்க்சிய— லெனினிய அடிப்படை நிலைப்பாடுகளைப் பருண்மையாகப் பிரயோகித்து அவற்றி-லிருந்து வளர்க்கப்பட்டவை என்று நிலைநாட்ட அக்கறை கொள்வதுமில்லை. சிந்தாந்தப்போராட்டத்தில் புகுந்தால் நடைமுறை இருக்கிறதா என்று சந்தேகிப்பது அல்லது மீண்டும் ஒப்பீடு செய்வதும் இணையான முடிவுகள் எடுப்பதும் ஆகிய ஒரு முடிவற்ற சுழற்சியில் சிக்குண்டுள்ளனர்.

உண்மையில் யுத்ததந்திரத்தின் பிரதானப் பணி என்ன? ''யுத்ததந்திரத்தின் அதி முக்கிய பணி தொழிலாளர் வர்க்க இயக்கம் மேற்கொள்ள வேண்டியதும், திட்-டத்தில் உருவாக்கி முன்வைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு, தனது எதிரியின் மீது மிகவும் சாதகமான முறையில் பாட்டாளிவர்க்கம் பிரதான தாக்குதல் தொடுப்பதுமான பிரதான திசைவழியைத் தீர்மானிப்பதாகும். ஒரு யுத்ததந்திரத் திட்டம் என்பது தாக்குதல் அதிக பட்ச விளைவுகளை மிகவும் பெரும்பாலும் சாதிக்கக் கூடிய திசையில் தீர்மானகரமான தாககுதலுக்-கான ஸ்தாபனத்திட்டமாகும்.'' (ஸ்டாலின், தொகுதி-5 பக் 166) இவ்வாறு பிரதான தாக்குதல் திசை, வழியைத் தீர்-மானிப்பதற்கானபொதிசை, பொதுப்பாதை மற்றும் சமு-தாய அரங்கில் பொதுவாக சக்திகளைப் பிரித்து ஒதுக்கு-வது— இவைகளே யுத்ததந்திரம் பற்றிய வரையறுப்பாகும்.

போர்த்தந்திரங்கள் என்றால் என்ன? ''போர்த்தந்தி ரங்கள் என்பது இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது, புரட்சியின் அலை ஓங்குவது அல்லது ஓய்வதுமாகிய

ஒப்புநோக்கில் குறுகியதான காலகட்டத்தில் தொழிலாளர் வர்க்கத்தினுடைய நடத்தை வழியைத் தீர்மானிப்பது; பழைய போராட்ட வடிவங்களுக்கும், பழைய அமைப்பு வடிவங்களுச்கும் பதிலாக புதிய போராட்ட வடிவங்களையும், அமைப்பு வடிவங்களையும் கையாள்வதன் மூலமாகவும் பழைய முழக்கங்களுக்குப் பதிலாக புதிய முழக்கங்களை வைப்பதன் மூலமாகவும், இந்த வடிவங்களை எல்லாம் இணைப்பதன் மூலமாகவும் இன்னும் பிற மூலமாகவும் இந்த நடத்தை வழியை நிறைவேற்றுவதற்காகப் போராடுவது:'' (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சனைகள், பக். 87). ''போர்த்தந்திரத்தின் அதிமுக்கியப் பணி ஒரு குறிப்பிட்ட தருணத்தில் பருண்மையான சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமானமுறையில் யுத்ததந்திர ரீதியிலான வெற்றிக்கு நிச்சயமாக வழிசெய்யும் வழிவகைகள் மற்றும் சாதனங்களையும் போராட்ட வடிவங்கள் மற்றும் போராட்ட முறைகளையும் தீர்மானிப்பது ஆகும்.'' (ஸ்டாலின், தொகுதி 5, பக் 169)

யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் பிரதானப் பணிகள் பற்றி ஸ்டாலின் தொகுத்தளித்த பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்துக்கான தலைமைமுறை பற்றிய விஞ்ஞானமாகிய மார்க்சிய—லெனினிய வரையறைகளையே மாவோ சீனப்புரட்சிக்குப் பிரயோகித்து வளர்த்தெடுத்தார். ஆனால் தமது சொந்த பாமரத்தனமான வரையறுப்புகளைக் கொண்டு சீனப்புரட்சியிலிருந்து ஒப்பீடு செய்து எடுக்கப்பட்ட இணையான முடிவுகளை நியாயப்படுத்தும் சாருவும், பிற 'இடது' சந்தர்ப்பவாதிகளும் மற்றும் பிற மார்க்சிய—லெனினிய குழுக்களும் மாவோவின் அணுகுமுறைகள் முற்றிலும் வேறானதென்றும், பிறநாடுகளது பாட்டாளிவர்க்க இயக்க அனுபவங்கள் மற்றும் அதன் ஆசான்களது வரையறுப்புக்கள் இந்தியப் புரட்சிக்குப் பொருந்ாது என்றும் கூறுகின்றனர். சீன, இந்தியப் புரட்சிகளுக்கு மட்டுமல்ல, எல்லா நாடுகளின் புரட்சிகளுக்கும் மற்றும் சர்வதேசப் புரட்சிகர இயக்கத்துக்கும் கூட யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய மார்க்சிய—லெனினிய மாவோ சிந்தனை அடிப்படையிலான விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகள் பொது அணுகுமுறைகளையும் பொது வரயறைகளையும் கொண்டுள்ளன. ஆனால் அவற்றின் பருண்மையான பிரயோகம் தனிச்சிறப்பான குணாம்சங்கையும் கொண்டிருக்கும்.

எனவே சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கம் மற்றும் பல்வேறு நாடுகளது புரட்சியின் நடைமுறை அனுபவங்களிலிருந்தும் பாட்டாளி வர்க்கத்தினுடைய மாபெரும் ஆசான்களின் போதனைகளிலிருந்தும் இந்தியப்புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளை வகுப்பதற்கான சாராம்சமாகிய அணுகுமுறைகளைத் தனியே தொகுத்தறிய வேண்டும்; அவற்றை இந்தியாவின் பருண்மையான நிலைமைகளுக்குப் பிரயோகிக்க வேண்டும்.

மேலும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் சரியாக கிரகித்து பருண்மையாகப் பிரயோகிக்க வேண்டுமானால் (1) புறநிலை மற்றும் அகநிலைக் கூறுகள் (2) கோட்பாடு மற்றும் திட்டம் (3) ஒருபுறம் கோட்பாடும் திட்டமும், மறுபுறம் யுத்ததந்திரமும் போர்த்தந்திரங்களும் (4) அரசியல் யுத்ததந்திரம், அரசியல் போர்த்தந்திரங்கள், அரசியல் படை, அரசியல் போராட்டங்கள், அரசியல் போராட்ட அமைப்புகள் அடங்கிய அரசியல் பிரச்சனைகள் மற்றும் இராணுவ யுத்ததந்திரம், இராணுவ போர்த்தந்திரங்கள், ஆயுதமேந்திய படை, ஆயுதப் போராட்டங்கள், ஆயுதப்போராட்ட அமைப்புகள் அடங்கிய இராணுவப் பிரச்சனைகள் ஆகிய நான்கு தொகுதிகளிலும் உள்ள ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியே பிரித்தும் பரஸ்பரம் உள்ள உறவுகளில் இணைத்தும் ஆய்ந்தறிய வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள இரு பிரிவுகளும் ஒன்றோடொன்று நேரடியாகவும் நெருக்கமாகவும் தொடர்புடையன என்றாலும் தனித்தனியே பிரித்தும், பரஸ்பரம் உள்ள உறவுகளில் இணைத்தும் ஆய்ந்தறிவது இயல்பாகவே மிகவும் இன்றியமையாததாகும்; அத்துடன் கூடுதலாக 'இடது', வலது, சந்தர்ப்பவாதிகளால் அவை பெரிதும் குழப்பப்பட்டிருக்கின்றன என்பதால் இப்பணி மேலும் கூடுதலான முக்கியத்துவம் பெறுகின்றது.

புரட்சிகர இயக்கத்தை வழிநடத்திச் செல்லும் பாட்டாளி வர்க்க கட்சி அதன் வேலைத்திட்டங்கள், ஆணைகள், யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் செயல்படும் வரம்புகளையும், பிரயோகிக்கும் அரங்குகளையும் தீர்மானிக்கும் கூறுகளையும் வரையறுத்துத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். புரட்சிகர இயக்கத்தின் உணர்வு பூர்வமற்ற தன்னெழுச்சியான ஒரு பக்கம் தான் புறநிலைக் கூறுகளாகும்; உணர்வு பூர்வமான திட்டமிடப்பட்ட மற்றொரு பக்கம்தான் அகநிலைக் கூறுகளாகும். பாட்டாளி வர்க்க கட்சியின் வேலைத்திட்டங்கள், ஆணைகள், கொள்கைகள், யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களைத் தீர்மானிக்க அடிப்படைகளாக விளங்குவது புறநிலைக் கூறுகளாகும்; அவற்றின் செயல்படும் அரங்கமாக விளங்குவது அகநிலைக் கூறுகளாகும்.

> "புறநிலையாக உள்ளவை என்பவை பாட்டாளி வர்க்கத்திற்கு வெளியிலும் அதைச் சுற்றியும் நிகழும் வளர்ச்சிப் போக்குகளை உள்ளடக்கியதாகும். இவை பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மற்றும் அதன் கட்சியின் சுயவிருப்பத்துக்கு அப்பால் சுயேச்சையாக இயங்குபவை. இறுதியாக கவனிக்கையில் இவை சமுதாயம் முழுவதன் வளர்ச்சியைத் தீர்மானிப்பவை" (ஸ்டாலின், தொகுதி 5, பக்.63)

அதாவது தேசிய சர்வதேசிய அரசியல் பொருளாதார மாறுதல்கள், இந்தியாவின் அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு, அதில் ஏற்படும் மாறுதல்கள், இந்த ஆட்சி அமைப்பின் சிதைவு, அரசியல் பொருளாதார நெருக்கடிகள், புரட்சிகர வர்க்

கங்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள், வர்க்கங்களுக்கிடையிலான தன்னெழுச்சியான மோதல்கள் இவையும் இன்ன பிறவும் நமது நாட்டின் புறநிலைக் கூறுகளில் அடங்கும்.

"அகநிலையாக உள்ளவை என்பவை புறநிலையாக உள்ள நிகழ்ச்சிப்போக்கு பாட்டாளிவர்க்கத்தின் உணர்வில் ஏற்படுத்தும் பாதிப்புகளாகும். அகநிலை உணர்வானது புறநிலையான நிகழ்ச்சிப் போக்கை முடுக்கவோ அல்லது மட்டுப்படுத்தவோ முடியும். ஆனால் தீர்மானிக்க முடியாது" (ஸ்டாலின், டி நூல், பக்63)

அதாவது, குறிப்பிட்ட இலக்கை நோக்கிய பாட்டாளி வர்க்கத்தின் உணர்வுபூர்வமான, முறையான திட்டமிட்ட இயக்கமாகும். பாட்டாளி வர்க்கத்தின் வேலைத்திட்டம், ஆணைகள், கொள்கைகள், யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களால் வழிநடத்தப்படும் அரசியல் போராட்டங்கள், ஆயுதப்போராட்டங்கள் இவையும் இன்ன பிறவும் அடங்கிய இயக்கமாகும்.

புறநிலை மற்றும் அகநிலைக் கூறுகளிடையே உள்ள உள்ளுறவையும், வேறுபாட்டையும் தெளிவுபடுத்தி வரையறுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பாட்டாளிவர்க்க கட்சி உணர்வு பூர்வமாக திட்டமிட்ட வழியில் முன்னேற இயலும்.

"நாம் பிரச்சனைகளை அகநிலைப்பட்ட விதத்தில் அணுகுவதை எதிர்க்கின்றோம் என நாம் கூறும்போது, அதன் பொருள் புறவயமான உண்மைகளை அடிப்படையாகக் கொள்ளாத, அல்லது அவற்றுடன் பொருந்தாத கருத்துக்கள் கற்பனையானவையும் பொய்யானவையும் ஆகும். அவற்றைப் பின்பற்றிச் செயலாற்றினால் தோல்விக்கு இட்டுச்செல்பவையாகுமாகையால் நாம் அவற்றை எதிர்க்க வேண்டும் என்பதாகும். ஆனால் செய்யப்படும் எதுவும் மனிதர்களால்தான் செய்யப்பட வேண்டும்; நீண்டகால யுத்தமும் இறுதிவெற்றியும் மனிதச் செயலின்றி ஏற்படமாட்டா. இத்தகைய செயல் பயனுள்ளதாக இருப்பதற்குப் புறவயமான உண்மைகளிலிருந்து எண்ணங்களையும் தத்துவங்களையும் கருத்துக்களையும் தருவித்து, வேலைத் திட்டங்களையும், கோட்பாடுகளையும் கொள்கைகளையும், யுத்ததந்திரங்களையும் போர்த்தந்திரங்களையும் முன்வைப்பவர்கள் தேவை. கருத்துக்கள் முதலானவை அகநிலைப்பட்டவை செயல்கள் அல்லது நடவடிக்கைகள் அகநிலைப்பட்டதை புறவயமாக மாற்றியவை, இவ்விரண்டும் மனிதர்களுக்கே பிரத்தியேகமான இயக்கப் பாத்திரத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன புறவயமான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவையும் அவற்றுடன் பொருந்துபவையுமான கருத்துக்கள் எல்லாம் சரியான கருத்துக்கள், சரியான கருத்துக்களின் அடிப்படையிலான செயல்கள் அல்லது நடவடிக்கைகள் எல்லாம் சரியான நடவடிக்கைகள்" (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ படைப்புக்கள், பக்கம் 464-65)

புறநிலைக் கூறுகளின் வளர்ச்சிப் போக்கையோ மாறுதலையோ தீர்மானிப்பதில்லையாயினும், நேரடியாகப் புறநிலை இயக்கப் போக்குகளின் மீது பிரயோகிக்கப்படுவதன் மூலம் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் புறநிலை இயக்கப் போக்கில் மறைமுகமாக தாக்கத்தை ஏற்படுத்தவே செய்கின்றன. அதாவது ஒரு நாட்டின் புறநிலைக் கூறுகளான பொருளாதார வளர்ச்சிப் போக்கை பாதிக்கின்றன; பழைய ஆட்சியின் வீழ்ச்சியை விரைவுபடுத்துகின்றன அல்லது தாமதப்படுத்துகின்றன; வர்க்கங்களுக்கு இடையிலான மோதல்களை முரண்பாடுகளை கூர்மைப் படுத்துகின்றன அல்லது மழுங்கடிக்கின்றன. இயக்கத்தின் புறநிலைப்போக்குகளை யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் ஆய்வு செய்வதில்லை. இருப்பினும் புறநிலைப்போக்குகளை அறிந்து அவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்கின்றன. அப்பொழுதுதான் இயக்கத்தின் தலைமை தவறுகளையும் பேரழிவுகளையும் தவிர்க்கமுடியும். அதாவது புறநிலைப்போக்குகளின் விதிமுறைகளைப் புரிந்துகொண்டு அவற்றைப் பிரயோகித்து சமுதாயம் இயல்பாகவே எந்தக் கட்டத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறதோ அதையடைய உணர்வுபூர்வமாக செயலாற்றத் திட்டமிட்டு புரட்சிகர இயக்கத்தை வழிநடத்திச் செல்ல யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் வகுக்க வேண்டும்.

எனவேதான், "எந்த ஒரு அரசியல் அல்லது அமைப்பு வழியின் சரி அல்லது தவறு அதன் சித்தாந்த வேர்களைக் கொண்டிருக்கிறது. மார்க்சிய-லெனினிய இயங்கியல் பொருள்முதல்வாதம் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல் வாதக் கண்ணோட்டத்திலிருந்து அந்த வழி தொடங்குகிறதா இல்லையா என்பதைப் பொருத்தும், சீனப்புரட்சியின் புறநிலை யதார்த்தம் மற்றும் சீனமக்களின் புறநிலைத் தேவைகளிலிருந்து தொடங்குகிறதா இல்லையா என்பதைப் பொருத்தும் அமைகிறது." (மாசேதுங், தேர்ந்த கட்டுரைகள், நேஷனல் புக் ஏஜென்சி, பக். 347)

இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் வகுப்பதற்கான முதல் முன்தேவை புறவயமான வளர்ச்சிப்போக்குகளை ஆய்வு செய்யும் மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளை வந்தடைவதாகும். மார்க்சிய - லெனினியக் கோட்பாடுகளின் அடிப்படை முடிவுகளை அடித்தளமாகக் கொண்டு செயல்படும் போதும் வகுக்கப்படும் போதும்தான் மிகச்சரியானதாக மார்க்சிய-லெனினிய யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் அமையும். புறநிலைப் போக்குகளை ஆய்ந்தறியும் மார்க்சிய-லெனினியக் கோட்பாடு இரண்டு கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்கிறது. ஒன்று யுத்ததந்திரக் கண்ணோட்டம், மற்றொன்று போர்த்தந்திரக் கண்ணோட்டம். இவை ஒன்றோடொன்று கலந்திருந்தாலும் வேறுபடுத்தியும் பகுத்தறிய வேண்டும்.

யுத்ததந்திரக் கண்ணோட்டத்துடன் கூடிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடு ஒரு சமுதாயக் கட்டத்திலிருந்து

மற்றொரு சமுதாயக் கட்டத்துக்கு அல்லது ஒரு வரலாற்றுத் திருப்பத்திலிருந்து மற்றொன்றுக்கு மாறிச்செல்லும் வரையிலான புறநிலைப் போக்குகளை ஆய்வு செய்கிறது. ஒரு சமுதாயத்தில் உள்ள வர்க்கங்கள் அனைத்துக்கும் இடையிலான ஒட்டு மொத்த பரஸ்பர உறவுகளை விதிவிலக்கின்றியும், அதன் விளைவாக அச் சமுதாயம் அடைந்துள்ள வளர்ச்சியின் கட்டத்தையும், அதற்கும் இதர சமுதாயங்களுக்கும் இடையிலான பரஸ்பர உறவுகளையும் ஆய்வுசெய்கிறது.

*"மார்க்சியக் கோட்பாடு பிரதானமாக புறநிலையான நிகழ்ச்சிப் போக்குகளை அவற்றின் வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் அராய்கிறது; வளர்ச்சியின் போக்கை வரையறுக்கிறது. தவிர்க்க முடியாதவாறு எந்த வர்க்கம் அல்லது வர்க்கங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி வளர்கின்றன அல்லது வீழ்ச்சியடைகின்றன, வீழ்ச்சி அடையும் என்பதை மார்க்சிய கோட்பாடு சுட்டிக்காட்டுகிறது."* (ஸ்டாலின், தொகுதி 5. பக் 63.)

போர்த்தந்திரக் கண்ணோட்டத்துடன் கூடிய மார்க்சிய—லெனினியக் கோட்பாடு ஒரு சமுதாயக் கட்டத்துக்கும் மற்றொரு சமுதாயக் கட்டத்துக்கும் இடையிலான ஒவ்வொரு சிடைக்கட்டத்திலும் அல்லது ஒரு வரலாற்றுக் திருப்பத்துக்கும் மற்றொரு வரலாற்று திருப்பத்துக்கும் இடையிலான ஒவ்வொரு தருணத்திலும் நிகழும் புறநிலைப் போக்குளை ஆய்வு செய்கிறது, ஒரு குறிபிட்ட யுத்ததந்திர காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தருணத்தின் எழுச்சி அல்லது வீழ்ச்சி, மோதிக்கொள்ளும் சக்திகளின் உறவு, இயக்கத்தின் வடிவங்கள், வீச்சு ஒவ்வொரு தருணத்தின், ஒவ்வொரு பகுதியின் போராட்ட அரங்கம் ஆகியவை பற்றி குறிப்பாகவும் பருண்மையாகவும் ஆய்வு செய்கிறது.

*ஆனால் மார்க்சிய-லெனினியக் கோட்பாடு பற்றி நாம் எத்தகைய கண்ணோட்டம் கொள்ள வேண்டும்? "புரட்சிகர தத்துவமின்றி ஒரு புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது. சந்தர்ப்பவாதத்தை போதனை செய்வதும் அரைகுறையான குறுகிய வடிவங்களிலான நடைமுறை நடவடிக்கைகளும் கைகோர்த்துச் செல்வது கவர்ச்சியான பாணியாக (ஃபேஷனாகி) உள்ள தருணங்களில் இந்தக்கருத்தை மிகவும் பலமாக வலியுறுத்த முடியாது"* (லெனின், என்ன செய்ய வேண்டும்? பக்.25 மாஸ்கோ வெளியீடு 1973) *"நமது கருத்துப்படி இந்த உலகில் ஒரே வகையான தத்துவம் மட்டும் தான் உள்ளது; புறவயமான யதார்த்தத்திலிருந்து பெறப்பட்டு, பினனா புறவயமான யதார்த்தத்தால் சரிபார்க்கப் பட்டதே தத்துவமாகும்; வேறு எதுவும் தத்துவம் என்று அழைக்க லாயக்கற்றது. நடைமுறையுடன் தொடர்பற்ற தத்துவம் நோக்கமற்றது என்று ஸ்டாலின் கூறினார். நோக்கமற்ற தத்துவம் பயனற்றதும் பொயானதும் ஆகும். எனவே இது வெறுத்தொதுக்கப்பட வேண்டும்."* (மாவோ, தேர்ந்த கட்டுரைகள், பக். 685)

ஏகாதிபத்திய உலகப் பொருளாதார கட்டமைப்பு என்னும் சங்கிலியில் உலகநாடுகள் பிணைக்கப்பட்டபின் ஒரு குறிப்பிட்ட நாட்டின் புரட்சிக்கான முன்தேவைகளை வரையறுப்பதற்கு தனிப்பட்ட அந்நாட்டின் பொருளாதார நிமையைப் பகுத்தறிவது மட்டும் போதுமானதாக இருக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட நாட்டின் புரட்சிக்கான புறநிலைமைகள் முதிர்ச்சியுற்றிருக்கின்றதா என்பதை கணிக்க தனிப்பட்ட அந்த நாட்டின் புறநிலைமையைப் பகுத்தறிவது மட்டும் போதுமானதாக இருக்க முடியாது. ஏனெனில் ஏகாதிபத்திய நிதி மூலதனத்திற்கு அடிமையாகிவிட்ட உலகு தழுவிய ஏகாதிபத்திய கட்டமைப்பு முழுவதும் ஏற்கனவே முதிர்ச்சியுற்றுவிட்டது. எனவே' "உலக ஏகாதிபத்தியக் கட்டமைப்பில் உள்ள முரணபாடுகளினுடைய வளர்ச்சியின் விளைவாகவே, ஒன்று அல்லது மற்றொரு நாட்டில் உலக ஏகாதிபத்திய முன்னணி என்ற சங்கிலியை உடைத்தெறிவதன் விளைவாகவே இப்போது பிரதானமாக பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் கருத வேண்டும்." (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சனைகள், பக்.27)

> "புறநிலை நிகழ்ச்சிகள் பற்றிய ஆராய்வில் இயங்கியலை உபயோகிக்கும் பிரச்சைனயில் மார்க்சும் எங்கல்சும் அதே போல் லெனினினும் ஸ்டாலினும் எந்தவிதத்திலும் அகநிலைவாதமுடையவராகவும், தான்தோன்றித்தனமாகவும் இருக்க கூடாதென்றும் இந்த நிகழ்ச்சிகளின் யதார்த்த புறநிலை இயக்கத்திலுள்ள பருண்மையான நிலைமைகளிலிருந்து அவற்றின் பருண்மையான முரண்பாடுகளையும், ஒவ்வொரு முரண்பாட்டிலுள்ள ஒவ்வொரு அம்சத்தினதும் பருமையான நிலைமையையும், முரண்பாடுகளின் பருண்மையான பரஸ்பர உறவுகளையும் கண்டுபிடிக்க வேண்டுமெனவும் எப்போதும் ஆணையிட்டுள்ளனர்." (தேர்ந்த கட்டுரைகள், மாவோ. பக்.673)

சர்வதேசிய, தேசிய ரீதியில் நிலவும் உற்பத்தி முறைகளில் உள்ள அடிப்படை முரண்பாடுகளே புறநிலைப் போக்குகளின் சாராம்சத்தைத் தீர்மானிக்கின்றன. ஏகாதிபத்திய மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்னும் சகாப்தத்தில் சர்வதேச ரீதியில்—

1. முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு,

2. ஏகாதிபத்தியத்திற்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் தேசங்களுக்கும் இடையிலான முரண்பாடு,

3. ஏகாதிபத்தியங்களுக்குள்ளே உள்ள முரண்பாடு,

4. ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிசத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு

ஆகிய நான்கும் அடிப்படை முரண்பாடுகளாகும். புறநிலைப் போக்குகளைத் தீர்மானிக்கும் அடிப்படை முரண்பாடுகளின் தன்மையும், புறநிலைப் போக்குகளின சாராம்சமும் மாறாமலிருக்கும்

போதே ஒரு நீண்ட நிகழ்ச்சிப்போக்கில் ஒரு கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்துக்கு மாறிச் செல்லும்போது அடிப்படை முரண்பாடுகள் மேலும் மேலும் கூர்மையடைகின்றன. இதனால் அடிப்படை முரண்பாடுகளால் தீர்மானிக்கப்படும் அல்லது பாதிக்கப்படும் பல்வேறு பெரியதும் சிறியதுமான முரண்பாடுகளில் சில மேலும் கூர்மையடைகின்றன; இன்னும் சில தற்காலிகமாக அல்லது பகுதியாக தீர்க்கப்படுகின்றன அல்லது மழுங்கடிக்கப் படுகின்றன; சில புதிய முரண்பாடுகள் தோன்றுகின்றன. சர்வ தேசிய ரீதியிலான அனைத்து அடிப்படை முரண்பாடுகளும் கூர்மையானதைத் தொடர்ந்து சர்வதேச வர்க்கப் போராட்டத்தில் அரசியல் சக்திகளின் மறுசேர்க்கை காரணமாக கீழ்வருமாறு புதிய முரண்பாடுகள் தோன்றியுள்ளன. அவை:

ஏகாதிபத்தியத்திற்கும் ஒடுக்கப்பட்ட தேசங்கள் மற்றும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு (1) முதலாம் உலகத்திற்கும் மூன்றாம் உலகத்திற்கும் இடையிலான முரண்பாடாகவும் (2) இரண்டாம் உலகத்திற்கும் மூன்றாம் உலகத்திற்கும் இடையிலான முரண்பாடாகவும் பருண்மையாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியங்களுக்குள்ளே உள்ள முரண்பாடு (1) முதலாம் உலகத்திற்கும் இரண்டாம் உலகத்திற்கும் உள்ள முரண்பாடாகவும் (2) முதலாம் உலகத்திற்குள்ளே உள்ள முரண்பாடாகவும் (3) இரண்டாம் உலகத்திற்குள்ளே உள்ள முரண்பாடாகவும் பருண்மையாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளது.

தேசியரீதியில் —

1. நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு

2. ஏகாதிபத்தியத்துக்கும் நமது நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு

—ஆகியவை இந்தியாவின் அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் உள்ள இரு அடிப்படை முரண்பாடுகள். இவையே இந்தியாவின் அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் சாராம்சத்தை தீர்மானிக்கின்றன. இவ்விரு அடிப்படை முரண்பாடுகள் கூர்மையடைந்து ஏகாதிபத்தியமும் அதன் உள்ளூர் பிற்போக்குவாதிகளும் நீடித்திருப்பதையே அச்சுறுத்தும் போது, அடிப்படை முரண்பாடுகளின் தன்மையும் அவற்றால் தீர்மானிக்கப்படும் புறநிலைப் போக்குகளின் சாராம்சமும் மாறாமலிருக்கும் போதே புதிய முரண்பாடாக பரந்துபட்ட மக்கள் ஒரு புறமும், ஏகாதிபத்தியம் அதன் உள்ளூர் பிற்போக்குவாதிகள் ஒரு புறமும் கொண்ட முரண்பாடு உருவாகலாம்.

எனவே இன்றைய புறநிலைப் போக்குகளை ஆய்ந்தறிவது என்பது சர்வதேசிய ரீதியில் நான்கு அடிப்படை முரண்பாடுகளையும், தேசிய ரீதியில் இரண்டு அடிப்படை முரண்பாடுகளையும் பருண்மையாக ஆய்ந்தறிவதும், ஒவ்வொரு முரண்பாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் பருண்மையாக ஆய்ந்தறிவதும், அடிப்

படை முரண்பாடுகளுக்கு இடையே உள்ள உறவுகளைப் பருண்மையாக ஆய்ந்தறிவதுமாகும். ஒவ்வொரு முரண்பாட்டிற்கும் அனைத்தும் தழுவிய இயல்பு தனிச்சிறப்பான இயல்பும் என்ற இரு தன்மைகள் இருக்கின்றன. ''முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்புக்கும் தனிச்சிறப்பான இயல்புக்கும் இடையிலுள்ள உறவுமுறை முரண்பாட்டின் பொதுப்பண்புக்கும் தனிப்பண்புக்கும் இடையிலுள்ள உறவுமுறையாகும் பொதுப்பண்பு தனிப்பண்பு ஆகியவற்றைப் பொருத்த சார்பற்ற நிலையையும் சார்பு நிலையையும் பொருத்த இந்த உண்மை பொருட்களிலுள்ள முரண்பாடு பற்றிய பிரச்சனையின் செறிந்த சாராம்சமாகும்.'' (மாவோ, தேர்ந்த கட்டுரைகள், பக். 674) விஷயங்களின் இயக்கத்திற்கும் வளர்ச்சிக்குமான பொதுக்காரணங்களையும், பொது அடிப்படைகளையும் கண்டறிய வேண்டுமானால் முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய இயல்பைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு விஷயத்தை மற்றொன்றிலிருந்து வேறுபடுத்தும் அதற்கே உரிய சாராம்சத்தை நிர்ணயிக்கவும் அந்த விஷயத்தின் இயக்கத்திற்கும் வளர்ச்சிக்குமான தனிச்சிறப்பான காரணங்களையும், அடிப்படைகளையும் கண்டறிய வேண்டுமானால் முரண்பாட்டின் தனிச்சிறப்பான இயல்பைப் புரிந்துகொள்ள வேண்டும்.

முரண்பாட்டின் சர்வ வியாபக இயல்பு அல்லது சார்பிலாத் தன்மை எல்லாப் பொருள்களின் வளர்ச்சிப் போக்கிலும் முரண்பாடு இருப்பதையும், ஒவ்வொரு பொருளிலும் வளர்ச்சிப் போக்கில் ஆரம்பம் முதல் இறுதிவரை எல்லாவற்றிலும் இயக்கமிருக்கிறது என்பதையும் காட்டுகிறது. ஒரு முரண்பாட்டின் இரு அம்சங்களுக்கிடையே ஒற்றுமையும் போராட்டமுமிருக்கிறது என்பதையும் அந்த முரண்பாட்டின் சர்வவியாபக இயல்பையும் விசேஷ இயல்பையும் ஆராயும்போது கற்றறிய வேண்டும். ஆனால் ஒற்றுமை நிபந்தனைக்குட்பட்டது, தற்காலிகமானது மாறக்கூடியது, சார்புடையது. போராட்டம் சார்பற்றது, நிரந்தரமானது. முரண்பாடும் போராட்டமும் அனைத்தும் தழுவியது, சார்பற்றது. ஆனால் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான போராட்ட முறைகள் முரண்பாடுகளின் தன்மைகளைப் பொருத்து மாறுபடுகின்றன.

> ''முரண்பாட்டின் விசேஷ இயல்பையும் சார்பு நிலையையும் பற்றி ஆராயும்பொழுது நாம் பிரதான முரண்பாட்டிற்கும் பிரதானமற்ற முரண்பாட்டிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டிலும், முரண்பாட்டின் பிரதான அம்சத்திற்கும் பிரதானமற்ற அம்சத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டிலும் கவனம் செலுத்தவேண்டும். முரண்பாட்டின் சர்வவியாபக இயல்பையும் முரண்பாட்டிலுள்ள எதிரானவற்றின் போராட்டத்தையும் பற்றி ஆராயும் பொழுது, நாம் வேறுபட்ட போராட்ட வடிவங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டில் கவனம் செலுத்தவேண்டும்'' (மாவோ, தேர்ந்த கட்டுரைகள், பக்கம். 687)

இவ்வாறு ஆய்வு செய்வதென்பது அரசியல் மற்றும் இரா ணுவப் பிரச்சனைகளில் யுத்ததந்திர போர்த்தந்திரக் கொள்கை களை வகுப்பதற்கு முக்கியமான அணுகுமுறையாக அமைகிறது. "முரண்பாடுகளிலுள்ள பல்வேறு அசமத்துவ நிலைகளையும், பிர தான முரண்பாட்டையும், பிரதானமற்ற முரண்பாட்டையும் ஒரு முரண்பாட்டின் பிரதான அம்சத்தையும் பிரதானமற்ற அம்சத் தையும் பற்றிய ஆராய்வு ஒரு புரட்சிகர அரசியல் கட்சி, அரசியல் விவகாரம், இராணுவ விவகாரம் இரண்டிலும் தனது யுத்ததந்திர போர்த்தந்திரக் கொள்கைகளை சரியாக நிர்ணயிப்பதற்கு பயன் படுத்தக்கூடிய ஒரு முக்கிய வழிமுறையாக அமைகிறது. பொது வுடைமையாளர்கள் அனைவரும் இதில் கவனம் செலுத்த வேண்டும்" (மாவோ, தேர்ந்த கட்டுரைகள், பக். 679)

எனவே அரசியல், ராணுவப் பிரச்சனைகளை பற்றிய யுத்த தந்திரம் மற்றும் போர்த்தந்திரக் கொள்கைகளை சரியாக நிர்ண யிக்கும் ஒரு முக்கிய வழிமுறையாக முரண்பாடு பற்றிய அணுகு முறைகளைப் பிரயோகித்து சர்வதேசிய, தேசிய ரீதியிலான அனைத்து அடிப்படை முரண்பாடுகளின் புறவயமான வளர்ச்சிப் போக்குகளை ஆய்ந்தறிந்து மார்க்சிய – லெனினிய—மாவோ சிந் தனை அடிப்படையிலான கோட்பாடுகளைத் தொகுப்பது யுத்தந் திரம் மற்றும் போர்த்தந்திரங்களை வகுப்பதற்கான முதல் முன் தேவையாகும்.

பாட்டாளிவர்க்க யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகளின் அடிப்படையில் இயக்கப் படும் பொழுதும், மார்க்சிய—லெனினிய திட்டத்தில் வகுக்கப்பட் டுள்ள இயக்கத்தின் நோக்கங்களால் வழிகாட்டப்பட்டு இயக்கப் படும் பொழுதும் மட்டுமே உண்மையான மார்க்சிய—லெனினிய மானதாக கருதமுடியும். மேலும் இயக்கத்தினுடைய புறவயமான போக்குகளை முதலிடத்தில் மார்க்சிய—லெனினியக் கோட்பாடு ஆய்ந்தறிகிறது. புறநிலைப் போக்குகளை ஆய்ந்தறிவதிலும்; யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் இயக்கத்துக்கு விவரங்கள் அளிப்பதிலும் கோட்பாடு, திட்டம் இரண்டுமே முக்கிய பாத்திரமாற்றுகின்றன. ஆனால் மார்க்சிய-லெனினியக் கோட்பாடு புறநிலைப் போக்குகளை ஆய்வு செய்வதோடு நின்று விடுகிறது. இக்கோட்பாட்டின் விவரங்களிலிருந்து தொடங்கு வதோடு மேலும் புறநிலைப் போக்குகளை ஆய்ந்தறிந்து புரட்சி கர இயக்கத்தின் குறிக்கோளை மார்க்சிய-லெனினியத் திட்டம் வகுத்தளிக்கிறது. யுத்ததந்திரமும் போர்த்தந்திரங்களும், குறிப் பாக யுத்ததந்திரம் திட்டத்தால் வழிகாட்டப்பட்டு வகுக்கப்பட் டாலும் கோட்பாடு அவற்றின் செயல்பாடுகளுக்கு அடிப்படை யாக அமைகின்றது. திட்டம், புறநிலைகளை ஆய்வுசெய்து வந் தடைந்த முடிவுகளை ஒரு பகுதியாகவும், இயக்கத்தின் குறிக் கோளாகிய அகநிலை முடிவுகளை மற்றொரு பகுதியாகவும் கொண்டிருக்கிறது. எனவே புறநிலை ஆய்வை மட்டும் கொண்டுள்ள கோட்பாட்டைவிட அகநிலை அம்சத்தையும் கொண்டிருக்கிறது என்கிற வகையில் திட்டம் மாறுபாடானது.

புறநிலைப் போக்குகளையும், அகநிலைப் போக்குகளையும் தனித்தனியே பிரித்தும், பரஸ்பரம் உள்ள உள் உறவுகளில் இணைத்தும் தொகுத்தும் அறியத் தவறுவது தன்னோக்கு வாதத்திலும் அனுபவவாதத்திலும் வெளிப்படுகிறது. புறவயமான புரட்சிகர நிலைமைகளை ஒருபுறம் வலது சந்தர்பவாதிகள் குறைத்து மதிப்பீடு செய்வது மற்றொரு புறம் 'இடது' சந்தர்ப்ப வாதிகள் மிகை மதிப்பீடு செய்வது என்ற முறைகளில் அகநிலை விருப்பங்களை புறவயமான போக்குகளில் நிலவுவதாகத் தவறாக மதிப்பீடு செய்வதில் தொங்கி பாட்டாளி வர்க்க இயக்கத்தில் கோபாடு முடிவுகள் எடுப்பதிலும், திட்டம் வகுப்பதிலும் வெளிப் படும்.

குறிப்பாக அரைநிலப்பிரபுத்துவ சமுதாயப் பொருளாதார அமைப்பைப் பாதுகாக்கவும், கெட்டிப்படுத்தவும் எடுக்கப்படும் பிரஷ்யன்—ஜங்கர் முறையிலான நிலப்பிரபுக்களை உருவாக்கும் நடவடிக்கைகள், தரகு அதிகாரவர்க்கத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்திமுறையின் மேலாண்மை, நிலப்பிரப்புத்துவ உற்பத்தி முறையின் மிகுநிலை, முதலாளித்துவ முறையிலான அரசு வடிவமுறை, உள்ளடக்கம், நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை ஆகிய அனைத்தும் அடங்கிய புறவயமான நிலைமைகளை ஒரு புறம் வலது சந்தர்ப்பவாதிகள் தமது நாடாளுமன்ற சமரசச் சரணடைவுப் பாதைக்குத் தகவுடையதாக தன்னோக்குவாதத்துடன் ஆய்வு செய்து முதலாளித்துவ உற்பத்தி முறை, தேசிய முதலாளிகளின் சுதந்திரமான அரசின் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை போன்ற கோட்பாட்டு முடிவுகளுக்கும் சோசலிசப் புரட்சி அல்லது ஜனநாயகப்புரட்சி அல்லது அதுவுமில்லாது ஒரு இடைப் பட்ட கட்டம் என்கிற அடிப்படையிலான கட்சித் திட்டம் வகுத்துள்ளனர்.

மற்றொரு புறம் இடது சந்தர்ப்பவாதிகள் மேற்கண்ட புறவயமான நிலைமைகளை அங்கீகரிக்காது துணிச்சல்வாத நரோதனிசப் பாதைக்குத் தகவானதாக தன்நோக்கு மற்றும் அனுபவவாதத்துடன் சீன நிலைமைகளின் மறுபதிப்பாகக் கருதி கோட்பாட்டு முடிவுகளும், இந்தியப் புதிய ஜனநாயகப் புரட்சிக்கான தனிச்சிறப்பான குணாம்சங்கள் அனைத்தையும் மறுக்கும் கட்சித் திட்டத்தையும் கொண்டுள்ளனர். ஆனால் இந்தியப் புரட்சியின் தன்மைகளும், போக்குகளும் பெரும்பாலும் சாராம் சத்திலும் சீனப்புரட்சியை ஒத்திருப்பதால் இடது சந்தர்ப்ப வாதிகளது பிரதானத் தவறு ஒரு புறம் கோட்பாடு மற்றும் கட்சித் திட்டம் ஆகியவற்றையும் மற்றொருபுறம் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் ஆகியவற்றையும் தனித்தனியே பிரித்தும், பரஸ்பரம் உள்ள உறவில் இணைத்தும் தொகுத் தறியத் தவறுவதில் வெளிப்படுகிறது. இவ்வாறு செய்வது ஏதோ நடைமுறையையும் கோட்பாட்டையும் பிரிப்பதல்ல; மாறாக முன்முயற்சியைக் கட்டவிழ்த்து விடுவதாகும். பாட்டாளி வர்க்க கட்சி தன்னோக்குவாதத்துடன் கூடிய, புறநிலைக்குப் பொருந் தாத கற்பனாவாதக் கருத்துக்களை எதிர்த்து புறநிலைக்கு

மிகவும் பொருத்தமான யதார்த்தபூர்வமான கருத்துக்களின் அடிப்படையிலான கோட்பாடு மற்றும் நடைமுறையையே கோரும். அதேசமயம் புரட்சிகர இயக்கத்தை வழி நடத்திச் செல்ல அதன் கட்டுப்பாட்டிலும் நேரடி செவாக்கிலும் உள்ள பகுதிகள் அல்லது கூறுகளை தெட்டத் தெளிவாக அறிவது, அதன் செயல்படும் அரங்கங்களைத் தீர்மானிப்பது, செயலூக் கத்தைக் கட்டவிழ்த்து விடும். புரட்சிகர இயக்கத்தின் செயல் வரம்புகளை அறியும் அதேசமயம் வரம்புகளுக்குட்பட்டு சாத்தியப்பாடான, ஆக்கபூர்வமான ஆற்றல்களை வெளிப்படுத்தும் சிறந்த முன்னணிப் படைத்தலைவனாக விளங்கும்.

இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தின் இயல்பு, உற்பத்திமுறை, ஆளும் வர்க்கங்கள், அரசின் வர்க்கத் தன்மை, புரட்சியின் இயல்பு, கட்டம், இலக்குகள், உந்து சக்திகள், துணைச் சக்திகள், குறிக்கோள், ஆகியவை தேசிய, சர்வதேசிய அடிப்படை முரண்பாடுகளின் வளர்ச்சிப் போக்கில் உள்ள புறவயமான நிலைமைகளின் ஆய்வு அடிப்படையிலான கோட்பாட்டு முடிவுகளும், திட்டமும் மட்டுமே ஆகும். இவற்றுடன் ஐக்கிய முன்னணியில் வெவ்வேறு வர்க்கங்களின் பாத்திரம் மற்றும் மக்கள் யுத்தபாதை என்ற இராணுவ யுத்ததந்திரம் ஆகியவற்றை இணைத்துவிடுவது, இவையனைத்தும் சேர்ந்து யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் ஆகாது. இந்தக் கண்ணோட்டத்தைத்தான் சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகள் மற்றும் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்களும் கொண்டுள்ளனர்.

யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் மார்க்சிய—லெனினியக் கோட்பாட்டு வரையறுப்புகளையே முற்றிலும் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்; மார்க்சிய-லெனினியத் திட்டத்தால் வகுக்கப்பட்டுள்ள இயக்கத்தின் நோக்கங்களால் வழி நடத்தப்படவேண்டும். இவ்வாறு கோட்பாட்டின் அடிப்படையில் இயக்கப்படுவதும், திட்டத்தின் நோக்கத்தால் வழி நடத்தப்படுவதும் இருப்பதால் அவை யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களில் பிரயோகிக்கப்பட்டிருக்கும் கோட்பாடு மற்றும் திட்டம் ஆகியவற்றின்—குறிப்பாக யுத்ததந்திரம்—பொதுவான அம்சங்களைக் கொண்டிருக்கும் அதாவது யுத்ததந்திர நோக்கம், இலக்கு, உந்து சக்திகள், துணைசக்திகள் ஐக்கிய முன்னணி வர்க்கங்களின் தன்மை போன்றவை யுத்ததந்திரத்திலும் நிச்சயம் இடம்பெறும். யுத்ததந்திரத்தின் ஒரு பகுதியாகிய போர்த்தந்திரங்களிலும் இவை பிரயோகிக்கப்பட்டிருக்கும். ஆனால் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் பிரதானப் பணி இவற்றை உள்ளடக்கி மட்டுமோ, இவற்றை வரையறுப்பதோ அல்ல.

துணைசக்திகளை (பிசகுகளை) வென்றெடுத்தும், உந்து சக்திகளைத் திரட்டியும் இலக்குகளை வீழ்த்தும் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பொதுத்திசை, பொதுப்பாதை சமுதாய அரங்கில் பொதுவாக சக்திகளைப் பிரித்தொதுக்குவது

ஆகியவற்றின் மூலமாக எதிரிக்கு எதிராக பிரதான அடி கொடுப்பதற்கான பிரதானத் தாக்குதல் திசைவழியைத் தீர்மானிப்பதும் நிறைவேற்றுவதும்தான் யுத்ததந்திரத்தின் பிரதானப்பணி. இந்த யுத்ததந்திரக் குறிக்கோளை வெற்றிகரமாக நிறைவேற்றும் வகையில் இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதைப் பொருத்து, புரட்சி அலை ஓங்குவது அல்லது ஓய்வதைப் பொருத்து ஒப்பீட்டு வகையில் குறுகிய காலகட்டத்திற்கான பருண்மையான நிலைமைகளுக்கேற்ற வகையில் குறிப்பிட்ட தருணத்திற்கான வழிகளையும் சாதனங்களையும் போராட்டங்கள் மற்றும் அமைப்புகளின் வடிவங்களையும் முறைகளையும் தீர்மானிப்பது போர்த்தந்திரங்களின் பிரதானப் பணியாகும். இந்த அடிப்படையில் கோட்பாடு மற்றும் திட்டத்திலிருந்து யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களை வேறுபடுத்தியும் பரஸ்பரம் உள்ள உறவுகளில் இணைத்தும் தொகுத்தறிய வேண்டும்.

புறவயமான நிலைமைகளை ஆய்ந்தறிந்து முடிவுகள் எடுப்பதோடு கோட்பாடு நின்றுவிடும். அதே சமயம், அத்துடன் மேலும் புறவயமான நிலைமைகளை ஆய்வு செய்வதோடு புரட்சியின் குறிக்கோள், இலக்கு, இயல்பு, உந்து சக்திகள், கட்டம், எதிர்காலம், இன்னும் பிறவற்றை வகுத்தளிப்பதால் புறநிலைமற்றும் அகநிலைக்கூறுகள் இரண்டையும் கொண்டிருப்பதாக திட்டம் முன்செல்கிறது. கோட்பாட்டு முடிவுகள் அடிப்படையில் இயக்கப்பட்டும் திட்டத்தால் வழிநடத்தப்பட்டும் வகுக்கப்படும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் முற்றிலும் அகநிலைக் கூறுகளின் ஒரு பகுதியாக அமைகின்றன. இந்த வகையிலே யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் கோட்பாடு மற்றும் திட்டத்திலிருந்து மாறுபடுகின்றன. இந்த மாறுபாடு காரணமாகத்தான் கோட்பாடு மற்றும் திட்டத்தில் கட்சி சரியாக இருந்தாலும் ஒன்றுபட்டிருந்தாலும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களில் தவறிழைக்கவோ, கருத்து வேறுபாடுகள் எழவோ வாய்ப்பிருப்பதோடு, முறையே இவற்றின் பாதிப்புகள் இயக்கத்தில் தோல்வி அல்லது பின்னடைவுக்குள்ளே சித்தாந்தப் போராட்டமாகவோ, அது தவறாக கையாளப்பட்டால் பிளவாகவோ சென்று முடியும்.

இது பிரச்சனையின் ஒரு அம்சம்தான்; ஒருபுறம் கோட்பாடு மற்றும் திட்டமும், மற்றொரு புறம் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களும் இவ்வாறு வேறுபடுவதும் பரஸ்பரம் உள்ள உறவில் இணைவதும் என்கிற அடிப்படையில் தொகுத்தறிவது பின்னதைச் செயலூக்கமிக்கதாகவும் அதேசமயம் அதன் யதார்த்தமான வரம்புகளை அறியச்செய்வதாகவும் தெளிந்துணர உதவுகிறது. அதன் மூலம் இயக்கத்தை துரிதப்படுத்தவோ, மந்தப்படுத்தவோ அல்லது பின்னிழுக்கவோ அடிப்படையாக அமையும் காரணிகளையும், நிச்சயம் வெற்றிக்குரிய மற்றும் சுருக்கமான பாதையில் வழிநடத்தவோ, அல்லது மிகவும் இடர்ப்பாடுகள் மிக்க துன்பதுயர மிக்க சிரமமான பாதையில் திசைதிருப்பி

விடவோ அடிப்படைகளாக அமையும் காரணிகளையும் பிரித்தறிவதும், நேர்மறை அல்லது எதிர்மறை அனுபவங்களைக் கற்று இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதும் முடியும்.

ஒருபுறம் அரசியல் யுத்ததந்திரம், அரசியல் போர்த்தந்திரங்கள், அரசியல்படை, அரசியல்போராட்டங்கள், அரசியல் போராட்ட அமைப்புகள், மற்றும் அரசியல் போராட்ட வடிவங்கள் ஆகியன அடங்கிய அரசியல் பிரச்சனைகள் மற்றொரு புறம் இராணுவ யுத்ததந்திரம், இராணுவ போர்த்தந்திரங்கள் ஆயுதமேந்திய படை, ஆயுதப்போராட்டங்கள், ஆயுதப் போராட்ட அமைப்புகள், மற்றும் ஆயுதப்போராட்ட வடிவங்கள் ஆகியன அடங்கிய இராணுவப் பிரச்சனைகள். இவ்விரு பிரிவுகளையும் தனித்தனியே பிரித்தும், பரஸ்பரம் உள்ள உறவுகளில் இணைத்தும் தொகுத்தறிவது யாவற்றிலும் இன்றியமையாததாகும். பரந்துபட்ட மக்களைப் புரட்சிக்குத் தயாரிப்பதாகக் கூறிக்கொண்டு நாடாளுமன்ற சட்டபூர்வ வடிவங்களிலான போராட்டங்களும் அமைப்புகளும் மட்டுமே வகுத்துக்கொண்டு நடைமுறைப்படுத்துவது; அரசியல் பிரச்சனைகள் என்ற பெயரில் அரசாங்கம் மற்றும் அரசியல்கட்சிகள்பற்றி மட்டும் விமர்சிப்பது, வியாக்கியானம் செய்வது; ஆழமானதும் மையமானதுமான அரசு பற்றிய பிரச்சனைகளை தெரிந்தே முற்றிலும் புறக்கணிப்பது; இந்த வகையிலான அரசியல் பிரச்சனைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பது திரிபுவாத, நவீன திரிபுவாதக் கட்சிகளின் அணுகுமுறையாக இருக்கிறது.

பரந்துபட்ட மக்களை புரட்சிகரமான முறையில் — திரிபுவாதிகள், நவீன திரிபுவாதிகள் ராணுவ நடவடிக்கைகளைப் புறக்கணிப்பதால் அதை மேற்கொள்வது மட்டுமே புரட்சிகரமானது என்கிற முறையில் — தயாரிப்பதாகக் கூறிக்கொண்டு வர்க்க எதிரிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை ஏதாவது ஒரு வகையில் வகுத்துக்கொண்டு நடைமுறைப்படுத்துவது; ஆயுதப் போராட்டப் பிரச்சனைகள் என்ற பெயரில் ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் நிலப்பிரபுக்களது ஆயுதமேந்திய குண்டர்களையும்— சமீப காலமாக தனியே செல்லும் போலிசார்களையும் — தாக்குவது; அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட எல்லா எதிர்ப்புரட்சி இராணுவம், போலீசு போன்ற வன்முறைக் கருவிகளைக் கொண்டுள்ள அரசு பற்றிய பிரச்சனைகளை முற்றிலும் புறக்கணிப்பது; இந்த வகையிலான ராணுவப் பிரச்சனைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பது சாரு மற்றும் பிற 'இடது' சந்தர்ப்பவாதிகளது அணுகுமுறையாக இருக்கிறது. திரிபுவாதிகளும் நவீனத் திரிபுவாதிகளும் ராணுவப் பிரச்சனைகளை மட்டுமல்ல, உண்மையில், அரசியல் பிரச்சனைகளையும் புறக்கணிக்கின்றனர். சாருவும் பிற 'இடது' சந்தர்ப்பவாதிகளும் அரசியல் பிரச்சனைகளை மட்டுமல்ல, உண்மையில், ராணுவப் பிரச்சனைகளையும் புறக்கணிக்கின்றனர். மார்க்சிய-லெனினியத்திலிருந்து விலகிப்போனவர்கள் இத்தவறுகள் புரிவது விசித்திரமான ஒன்றல்ல.

ஆனால் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்களோ அரசியல் பிரச்சனைகள் மற்றும் ராணுவப் பிரச்சனைகளையும் தனித் தனியே பிரித்தும், பரஸ்பரம் உள்ள உறவில் இணைத்தும் தொகுத்தறிவது மற்றும் அவை ஒவ்வொன்றின் கூறுகளையும் வரையறுத்து வகுப்பது ஆகிய சித்தாந்தப் பணிகளைப் புறக் கணிப்பதோடு இவை பற்றிய சுய திருப்தியில் மூழ்கித் திளைக் கின்றன. 'இடது' மற்றும் வலது சந்தர்ப்பவாதங்களை நிரா கரித்து மேலே குறிப்பிட்ட அரசியல் மற்றும் ராணுவப் பிரச்ச னைகள் இரண்டையும் இணைப்பதாகக் கூறிக்கொண்டாலும் இக்குழுக்கள் அனைத்தும் உண்மையில் இரு பிரிவுகளையும், அவற்றிலுள்ள கூறுகளையும் பிரிக்க முடியாத ஒருமையாக ஒரே பொருளில் வைத்துத்தான் அணுகுகின்றன. இப்பிரச்சனைகள் ஒன்றோடொன்று நெருக்கமாகப் பிணைந்திருப்பவை; எதிரெதி ரானவை அல்ல; மாறாக ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. இருப்பினும் வேறு வேறாகவும் பரஸ்பர உறவில் இணைத்தும் அணுகப்பட வேண்டியவை என்பதை உணரவேண்டும். ஆனால் இககுழுக்கள் அனைத்தும் இப்பிரச்சனைகள் எழுப்பப்படும் போதெல்லாம் இவற்றிலெல்லாம் சரியாக இருப்பதாக கூறிக் கொள்ளுகின்றனவேயொழிய, உண்மையில் பிரச்சனையின் ஆழத்தை உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. சான்றாக, அர சியல் யுத்ததந்திரம் மற்றும் ராணுவ யுத்ததந்திரம் ஆகியவற்றுக் கிடையிலான உறவு பற்றி எடுத்துக்கொண்டு இக்குழுக்களின் நிலைப்பாடுகளைப் பரிசீலிப்போம்.

இந்தியப் புரட்சிக்கான ராணுவ யுத்ததந்திரத்திலிருந்து வேறானதும் அதற்கு அரசியல் ரீதியில் வழிகாட்டுவதுமாகிய அரசியல் யுத்ததந்திரம், அதற்கான கூறுகள், அதை ஆளும் விதி களும் வழிகாட்டும் நெறிமுறைகளும் வகுத்து வரையறுக்கப்பட வேண்டும். இதன் அவசியத்தை உணராத பிற மார்க்சிய-லெனி னியக் குழுக்கள், இப்பிரச்சனையை எழுப்பினால் மாவோ வகுத் தளித்த மக்கள் யுத்தப்பாதையையே விளக்குகின்றனர். இது இராணுவ யுத்ததந்திரம் மட்டுமே என்பதை ஏற்றுகொள்ளும் நிலையில் புரட்சியை அல்லது கோட்பாடு மற்றும் திட்டத்தின் கூறுகளை அரசியல் யுத்ததந்திரமாகக் கூறுகின்ற குழுக்களும் உண்டு. அரசியல் யுத்ததந்திரம் அவற்றின் அடிப்படையிலான அரசியல் போர்த்தந்திரங்கள், அரசியல் முழக்கங்கள், அரசியல் போராட்டங்கள் மற்றும் அமைப்புகளின் வடிவங்கள் ஆகிய வற்றை வலியுறுத்தும்போது, இவற்றுக்குச் சகபாடிகளான 'ராணுவப் பிரச்சனைகளைப் புறக்கணிப்பதற்காகவே வலது சந்தர்ப்பவாதிகளால் எழுப்பப்படும் பிரச்சனைகள், வகுப்பறை வாதங்கள்' என்று முத்திரை குத்தி அரசியல், ராணுவப் பிரச்ச னைகள் எல்லாம் ஒன்றுதான் என்று கூறும் குழுக்களும் உண்டு. சீனப் புரட்சி மட்டுமல்ல உலகின் எல்லா நாட்டுப் புரட்சிகளிலும், சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்திலும் ராணுவ யுத்ததந் திரம், போர்த்தந்திரங்கள், ஆயுதப் போராட்டங்கள் ஆகியவை அடங்கிய ராணுவப் பிரச்சனைகள் தவிர அரசியல் யுத்ததந்திரம், போர்த்தந்திரங்கள் மற்றும் அரசியல் போராட்டங்கள் போன்ற

பிரச்சனைகள் மிகக் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டன. சீனப் புரட்சியில் ஆயுதப் போராட்டங்களும், அமைப்புகளுமே பிரதான வடிவங்களாக இருந்தன என்ற உண்மைகூட இதை மறுப்பதில்லை.

இனியும் ஒரு சான்றாக, அரசியல் போராட்டங்களுக்கும் ஆயுதப் போராட்டங்களுக்கும் இடையிலான உறவு பற்றிய பிரச்சனையை எடுத்துக்கொண்டு இக்குழுக்களின் நிலைப்பாடுகளைப் பரிசீலிப்போம். பொதுவாக ஆளும் வர்க்கங்களுக்கும் அரசுக்கும் எதிரான எல்லாப் போராட்டங்களும் அரசியல் போராட்டங்களே. அவற்றையே புரட்சிகர வன்முறையுடன் நடத்தினால் ஆயுதப் போராட்டங்கள் என்றும் குறிப்பாக கிராமப் புறங்களில் நிலப்பிரபுக்கள், அரசு ஆகியோரின் அடக்குமுறைக்கு எதிராயும் மற்றும் நிலத்திற்கானவை உட்பட எல்லாப் போராட்டங்களும் அரசியல் போராட்டங்களே, அவை புரட்சிகர வன்முறைப் போராட்டங்களாக மாறும்போது ஆயுதப் போராட்டங்களாக மாறுகின்றன என்றும் பெரும்பான்மையான மார்க்சிய-லெனினியக் குழுக்கள் கூறுகின்றன. எல்லாப் போராட்டங்களும் ஆயுதப் போராட்டங்களை நோக்கி எல்லா இடங்களிலும் வளர்க்கப்பட வேண்டும் என்று களம் மற்றும் கால வேறுபாடின்றி பொதுப்படையான போக்குகளையே அவை கொண்டுள்ளன.

இத்தவறான போக்குகளுக்கெல்லாம் இரு முக்கியமான காரணங்கள் உள்ளன. அவை 1) மாவோவின் படைப்புகளிலிருந்து சீனப்புரட்சிக்காக பிரயோகிக்கப்பட்டவை மற்றும் வகுக்கப்பட்டவை பொதுமைப்படுத்தி சாராம்சமாக யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் கிரகிக்காமல் ஒப்பீடு செய்து இணையான முடிவுகள் எடுப்பதும் யாந்திரிக முறையில் பிரயோகிப்பதும் குறிப்பாக "சீனாவில் ஆயுதந்தாங்கியப் புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சியுடன் போரிடுகின்றது. அது சீனப்புரட்சியின் விசேஷ அம்சங்களில் ஒன்றாகவும் அதன் சாதகமான அம்சங்களில் ஒன்றாகவும் இருக்கின்றது" என்ற சீனப் புரட்சியின் புறவயமான நிலைமைகளைப் பற்றிய ஸ்டாலினது மதிப்பீட்டை உறுதிப்படுத்தி சீனப் புரட்சியில் அரசியல் யுத்ததந்திரம் போர்த்தந்திரங்கள் போன்ற அரசியல் பிரச்சனைகளும் ராணுவ யுத்ததந்திரம், போர்த்தந்திரங்கள் போன்ற ராணுவப் பிரச்சனைகளும் நகமும் சதையுமாக ஒன்று கலந்திருப்பதாகவும், அரசியல் பிரச்சனைகளே ராணுவப் பிரச்சனைகளின் வடிவத்தில் இருப்பதாகவும், சீனாவில் யுத்தம் பிரதான வடிவமாகவும் இராணுவம் பிரதான அமைப்பு வடிவமாகவும் இருப்பதாகவும் மாவோ வரையறுத்தார். பாட்டாளிவர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சி காலகட்டத்தில் மட்டுமல்ல முதலாளித்துவ வர்க்கத் தலைமையிலான பழைய ஜனநாயகப் புரட்சிக் காலகட்டத்திலும் கூட சீனத்தில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருந்த ஒவ்வொரு ஆளும் வர்க்கப்பிரிவும், கட்சியும் மற்றும்

அரசியல் அதிகாரத்தைப் பெறப் போராடிய ஒவ்வொரு பிரிவும் கட்சியும் இராணுவத்தைப் பெற்றிருந்ததோடு பரஸ்பரம் யுத்தங்களிலும் ஈடுபட்டிருந்தன.

பிரதானமாக எதிர்ப்புரட்சி யுத்தத்திற்கெதிராக புரட்சிகர யுத்தம் தொடர்ந்து ஆரம்ப முதல் நீடித்திருந்தது என்ற புறவயமான நிலைமை யதார்த்தத்தில் நமது நாட்டில் இல்லை. ஆனால் தன்நோக்கு வாதத்துடன்புறவயமான போக்குகளை ஆய்வு செய்யும் இடதுசந்தர்ப்பவாதிகள் நமது நாட்டிலும் இதே நிலை இருப்பதாக கூறுகின்றனர். தனிப்பட்ட நிலப்பிரபுக்களின் குண்டர் படைகளையும் வன்முறையையும் சுட்டிக்காட்டுகின்றனர். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலேகூட முதலாளிகள் பாட்டாளி வர்க்கத்துக்கெதிராக குண்டர் படைகளை விலைக்கு வாங்கி வன்முறை வெறியாட்டமிடுகின்றனர்; இதைப் பாட்டாளி வர்க்கம் எதிர்த்து தாக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் அவை ஆயுதமேந்திய புரட்சி ஆயுதமேந்திய எதிர்புரட்சியுடன் போரிடுவதாகாது. அரசின் மேல் கட்டுமானங்களில் ஒன்றாக ஆளும் வர்க்கங்களும் கட்சிகளும் தனித்தனி படைகளைக் கொண்டு ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சியை நடத்துகின்றனவா, அதை எதிர்த்து ஆயுதமேந்திய புரட்சி சக்திகள் போரிடுகின்றனவா, இவை புறவயமான நிலைமைகளாக இருக்கின்றனவா என்பதே பிரச்சனை. எனவே இந்தியப்புரட்சியின் எல்லாக் காலங்களிலும் களங்களிலும் ஆயுதப் போராட்டமே பிரதான வடிவமாகவும், ஆயுதமேந்திய அமைப்பே பிரதான அமைப்பு வடிவமாகவும் இருக்க முடியாது. இந்தியப் புரட்சியிலும் யுத்தந்திர ரீதியில் யுத்தம் பிரதான போராட்ட வடிவமாகவும் இருக்கும் அதே வேளையில் பருண்மையான களங்களையும் காலங்களையும் போர்த்தந்திரங்களே தீர்மானிக்கின்றன. எல்லாப் போர்த்தந்திர காலகட்டங்களிலும் இவை பிரதானமாக இருக்க மாட்டா. சீன நிலைமை போன்று விசேஷமான அம்சங்களில் ஒன்றாகவும் சாதகமான அம்சங்களில் ஒன்றாகவும் ஆயுதமேந்திய புரட்சி, ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சியுடன் போரிடும் நிலைமை புரட்சியையும எதிர்ப்புரட்சியையும் பரந்துபட்ட மக்கள் இனங்கண்டு கொள்ளவும், ஆயுதப் புரட்சிக்கு நேரடியாக அவர்களைத் தட்டியெழுப்பவும் வாய்ப்புக்களை அளிக்கின்றன.

இந்த விசேஷமான, சாதகமான அம்சம் நமது நாட்டில் இல்லாத புறவயமான நிலைமை அரசியல் யுத்ததந்திரம், அரசியல் போர்த்தந்திரங்கள், அரசியல் போராட்டங்கள் அமைப்புகள் போன்ற அரசியல் பிரச்சனைகளை ராணுவப் பிரச்சனைகளிலிருந்து வேறுபடுத்தியும் பரஸ்பரம் உள்ள உறவில் இணைத்தும் தொகுத்தறிய வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன. இந்த அணுகுமுறையும் முக்கியத்துவமும் ருஷியப் புரட்சி மற்றும் முதலாளித்துவ நாடுகளுக்கு மட்டுமல்ல அதாவது நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய புரட்சிகர எழுச்சி மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் ராணுவ யுத்ததந்திர பொதுத்திட்டம் கொண்டுள்ள நாடுகளுக்கு மட்டுமல்ல, —சீனப்

புரட்சிக்கும் பொருந்தி இருந்தது என்பதை மாவோ மேற்கண்ட அரசியல் பிரச்சனைகளை வலியுறுத்தியதிலிருந்தும் தனித்தனியே பிரித்தும் பரஸ்பர உறவுகளில் இணைத்தும் தொகுத்தறிந்து பிரயோகித்ததிலிருந்தும் உணரலாம். ஸ்டாலின் தொகுத்தளித்த அரசியல் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய மார்க்சிய—லெனினிய விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும்தான் மாவோ பருண்மையாக சீனத்திற்கு பிரயோகித்து வளர்த்தெடுத்தார். அவ்வாறு செய்யத் தவறியதுதான் சீனப் புரட்சியில் 1927-28, 1929-30, 1930-33 காலகட்டத்து சீனப் பொதுவுடமைக் கட்சித் தலைமை 'இடது' சந்தர்ப்பவாத தவறுகளை இழைத்ததற்கான முக்கியமான தவறுகளில் ஒன்றாகும் என்றார். (மாவோ, கட்சிவரலாற்றுப் பிரச்சனைகள் பற்றிய தீர்மானம்: இணைப்பு—என்பதைப் பார்க்க)

ருஷியப் புரட்சியில் வகுத்து நடைமுறைப் படுத்தப்பட்ட நாடு தழுவிய ஆயுதமேந்திய புரட்சிகர எழுச்சி என்ற யுத்ததந்திரமும், சீனப்புரட்சியில் வகுத்து நடைமுறைப்படுத்தப்பட்ட கிராமப்புறங்களில் தளப்பிரதேசங்களை நிறுவி விரிவடையச் செய்து நகர்ப்புறங்களைச் சுற்றி வளைத்து இறுதியில் நாடு தழுவிய வெற்றியை அடைவது என்ற யுத்ததந்திரமும் ராணுவ யுத்ததந்திரங்களே. அவற்றுக்குப் பொருத்தமான ராணுவ போர்த்தந்திரங்கள், ஆயுதப் போராட்டங்கள், ஆயுதமேந்திய அமைப்புகள் போன்ற ராணுவப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன இவை மட்டுமின்றி, ருஷியப்புரட்சிக்கு மட்டுமல்ல, சீனப்புரட்சிக்கும் கூட வெவ்வேறு அரசியல் யுத்ததந்திரம், அரசியல் போர்த்தந்திரங்கள், அரசியல் போராட்டங்கள், அரசியல் அமைப்புகள் போன்ற அரசியல் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டன. ருஷியப்புரட்சியில் 1917 பிப்ரவரிப் புரட்சி மற்றும் 1917 அக்டோபர் புரட்சி இரண்டுக்குமே—நாடுதழுவிய ஆயுதமேந்திய புரட்சிகர எழுச்சி என்ற ராணுவ யுத்ததந்திரமும் மற்றும் பிற ராணுவப் பிரச்சனைகள் வகுத்து நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பினும் வெவ்வேறு அரசியல் யுத்ததந்திரம் மற்றும் பிற அரசியல் பிரச்சனைகள் தனித்தனியே வகுத்து வைக்கப்பட்டன. இவையனைத்தும், அரசியல் மற்றும் ராணுவப் பிரச்சனைகள் தனித்தனியே வேறுபடுத்திப் பிரித்தும், பரஸ்பரம் உள்ள உறவில் இணைத்தும் தொகுத்தறிய வேண்டும், வகுத்து வரையறுக்க வேண்டும் என்பதை தெளிவாக்குகிறன.

மேற்கண்ட தவறுகளை நடைமுறைகள் உணர்த்தியதை மறுக்க முடியாத நிலையில் பிற மார்க்சிய—லெனினியக் குழுக்கள் அந்த நிலைப்பாடுகளுக்கு நேரெதிராக கடைகோடித்தனமான பொருளாதாரவாதத்தை முன்வைக்கின்றன. ஆளும் வர்க்கங்களுக்கும் அரசுக்கும் எதிரான எல்லாப் போராட்டங்களும் அரசியல் போராட்டங்கள் என்றும் பொதுவாக எல்லாப் போராட்டங்களையும் ஆயுதப் போராட்டங்களை நோக்கி வளர்க்க வேண்டும் என்றும் கூறுகின்றன. சட்டவரம்புகளுக்குள்ளும், வெளிப்படையாகவும், அமைதி வழியிலும் மட்டும் நடத்தாது உணர்வுபூர்வமாக அவற்றுக்கு மேலே எடுத்துச்

செல்ல வேண்டும்; அவ்வாறு செய்வது ஆயுதப் போராட்டங்களுக்கும் புரட்சிக்கும் இட்டுச் செல்லும் என்றும் கூறுகின்றன.

"சமூக ஜனநாயகம், பாட்டாளி வர்க்கத்தை ஒரு குறிப்பிட்ட முதலாளித்துவக் குழுவினுடனான அதன் உறவில் மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை; மாறாக அதன் நவீனகால சமுதாயத்தினுடைய அனைத்து வர்க்கங்களின் உறவிலும், அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட ஒரு சக்தியான அரசின் உறவிலும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.' (லெனின், என்ன செய்ய வேண்டும் பக்கம் 87) என்றும் "அரசியல் துறையைத் தழுவும்போது மட்டுமே வர்க்கப் போராட்டம் உண்மையானதாகவும் தொடர்ச்சியானதாகவும் மாறுகிறது மற்றும் வளர்க்கப்படுகிறது. அரசியலிலும் கூட ஒருவர் சில்லறை விஷயங்களுடன் கட்டுப்படுத்திக் கொள்ளவும் முடியும்; ஆழமாகவும் ஆதி அந்தத்திற்கேயும் செல்ல முடியும். மார்க்சியம் ஒரு வர்க்கப் போராட்டத்தை, அது அரசியலை வெறுமனே தழுவினால் மட்டுமல்ல, அரசியலில் மிகவும் குறிப்பிடத்தக்கதானதில்—அரசு அதிகார அமைப்பு பற்றி—ஈடுபடும்போது மட்டுமே முழுக்கவும் வளர்ந்ததாகவும் 'நாடு தழுவியதாகவும்' அங்கீகரிக்கிறது" (லெனின், தொகுதி 19 பக்கம் 121-22) என்றும் "அரசியல் என்பது அரசு தொடர்பான விவகாரங்களில் ஈடுபடுவதாகும். அரசை வழி நடத்துவதாகும்; அரசு நடவடிக்கைகளின் வடிவ முறைகள், குறிக்கோள்கள், உள்ளடக்கம் ஆகியவற்றை தீர்மானிப்பதாகும்" (லெனின், அரசைப் பற்றி மார்க்சியம்) என்றும் லெனின் வரையறுத்தார்.

ஆனால் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்கள் பொதுவாக அரசியல் போராட்டங்கள் என்று கூறுவதெல்லாம் லெனினது இந்த வரையறுப்புகளின் அடிப்படையிலானவை அல்ல. எனவே, அரசியல் பற்றிய லெனினது மேற்கண்ட கருத்துக்கள் அடிப்படையிலான அரசியல் பிரச்சனைகளைக் குறிப்பாக ராணுவப் பிரச்சனைகளிலிருந்து வேறுபடுத்தியும், பரஸ்பர உறவில் இணைத்தும் ஆய்ந்தறிய வேண்டும்.

"பொருளாதாரத்தின் ஒன்று செறிக்கப்பட்ட வெளிப்பாடு அரசியல்" என்று சமுதாய அடித்தளத்துக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவையும் "அரசியலின் நீடிப்பே யுத்தம்" என்று அரசியலுக்கும் யுத்தத்துக்கும் இடையிலான உறவையும் லெனின் வரையறுத்தார். இந்த வரையறுப்புகளைப் பிரயோகித்த மாவோ 'அரசியலின் நீடிப்பே யுத்தம்' இந்த அர்த்தத்தில் யுத்தம் அரசியலாகவும், யுத்தம் தானே அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகிறது. புராதன காலம் முதல் அரசியல் குணாம்சம் இல்லாத யுத்தமே இருந்ததில்லை", என்றார். (மாவோ, தேர்ந்த கட்டுரைகள். பக். 395) அரசியல் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் மற்றும் சாதனங்களிலும், வடிவங்கள் மற்றும் முறைகளிலும் பிரதானமானதாக யுத்தம் விளங்குகிறது. புதிய ஜனநாயகப் புரட்சியின்

அரசியல் குறிக்கோளாகிய ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கியெறிவது —அதாவது தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களது சர்வாதிகாரத்தை தூக்கியெறிவது-மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவது, அதன் மூலம் தேசிய மற்றும் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவது என்ற குறிக்கோள்களிலிருந்து யுத்தத்தின் நோக்கம் பிரிக்க முடியாதது. புதிய ஜனநாயகப் புரட்சியில் அழுந்தி நிற்பது, புரட்சியின் உந்து சக்திகளையும் துணைச் சக்திகளையும் பொதுவாகவும் குறிப்பாகவும் சமுதாய அரங்கில் பிரித்தொதுக்கும் திட்டம், பொதுத்திசை, பொதுப்பாதை இவற்றோடு பொருந்திய ஐக்கிய முன்னணிக் கொள்கைகள், புதிய ஜனநாயக அரசியல் சக்திகளைத் திரட்டுவது அரசியல் படையைக் கட்டுவது, மக்கள் விடுதலைப் படையை உருவாக்கி வளர்ப்பது, மக்கள் விடுதலைப் படையிலேயே தலைமைக்கும் அணிகளுக்கும் இடையிலான ஐக்கியம் மற்றும் படைக்கும் மக்களுக்கும் இடையிலான ஐக்கியம் ஆகிய அரசியல் நெறிமுறைகள், இந்தியப் புரட்சிக்கு சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கம், சோசலிச நாடுகள் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களது ஆதரவைத் திரட்டுவது இப்படி பல அரசியல் பிரச்சனைகளோடு ராணுவப் பிரச்சனைகள் நகமும் சதையுமாகப் பிணைந்துள்ளன. எனவே தான், ''ஒரு வார்த்தையில் கூறினால், யுத்தம் தனியொரு கணத்திற்குத்தானும் அரசியலிலிருந்து பிரிக்க முடியாது'' என்றார் மாவோ.

ஆனால் இதைக் கொச்சையாக, எதிர்முடிவாக அரசியலை தனியொரு கணத்திற்குத்தானும் யுத்தத்திலிருந்து பிரிக்க முடியாது என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. ஏனெனில் தேசிய விடுதலை யுத்தத்தில் அரசியல் நோக்கம் எதுவுமில்லை என்று கூறி யுத்தத்தை அரசியலிலிருந்து பிரிப்பதன் மூலமும், 'யுத்தம் அறுதியானது' என்ற கருத்தை ஆதரிப்பதன் மூலமும் அரசியலைச் சிறுமைப்படுத்தும் தவறான போக்குக்கு எதிராக மாவோ இவ்வாறு கூறினார். எல்லா யுத்தங்களும் ரத்தம் சிந்தும் அரசியலைக் கொண்டிருக்கிறது என்கிற முறையில் யுத்தத்தை அரசியலிலிருந்து பிரிக்கமுடியாது. ஆனால் அரசியல் ரத்தம் சிந்தாத யுத்தமாக நீடிக்கிறது என்கிற முறையில் அரசியல் ரத்தம் சிந்தும் யுத்தத்தோடு முழுமையும் பகுதியுமாக இணைந்திருக்கின்றது. அதாவது அரசியல் முழுமையைக் குறிக்கிறது; யுத்தம் ஒரு பகுதியைக் குறிக்கிறது. பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்றவாறும் யுத்ததந்திர ரீதியிலும் யுத்தமே முழுமையில் பிரதானப் பகுதியாக இருக்கும். பகுதிகளின்றி முழுமை இல்லையெனினும் பிரதானப் பகுதியாக இருந்தாலும் கூட அது மட்டுமே முழுமையாகி விடுவதில்லை. ஆனால் உள்நாட்டு யுத்தமாகட்டும், தேசிய யுத்தமாகட்டும் யுத்தத்துக்கு அதற்குரிய விசேஷ குணாம்சங்களும் அதிமுக்கியத்துவமும் உண்டு. இந்தப் பொருளில் யுத்தத்தைப் பொதுவான அரசியலுக்கு வெறுமனே சமமாகக் கருதக்கூடாது.

''வேறு வழிகள் (அல்லது சாதனங்கள்) மூலம் யுத்தம் அரசியலின் நீடிப்பாக இருக்கிறது'. அரசியல் அதன்வழக்கமானவழி

களில் மேற்கொண்டு முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சியடைந்ததும் அதன் பாதையிலுள்ள தடைகளை நீக்குவதற்காக யுத்தம் வெடிக்கின்றது''. "யுத்தம் என்பது வர்க்கங்கள், தேசங்கள், நாடுகள், அரசியல் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் நிலவும் முரண்பாடுகள் குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சியடைந்ததும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய அதிஉயர்ந்த போராட்ட வடிவம்'' என்கிற முறையில் அரசியலின் தொடர்ச்சியாக நீடிக்கின்றது. "தடைகள் அகற்றப்பட்டு, அரசியல் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டதும் யுத்தமும் முடிவடைகின்றது. ஆனால் இத்தடைகள் முற்றாக நீக்கப்படாவிட்டால், அக்குறிக்கோள் பூரணமாக நிறைவேற்றப்படும் வரையில் யுத்தமும் தொடர்ந்து நடைபெறும்''. யுத்தம் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டோ, ஊசலாட்டக்காரர்களால் சமரசம் ஏற்பட்டோ, வேறு காரணங்களாலோ தற்காலிகமாகத் தள்ளிப் போடப்பட்டாலும் புரட்சிகர மக்களால் அதன் அரசியல் குறிக்கோள் அடையப்பெறும் வரை தொடர்ந்து நடத்தப்படுமாகையால் யுத்தம் மறுபடி வெடிக்கும். இந்தப் பொருளில் தான் "—...... அரசியலை ரத்தம் சிந்தாத யுத்தம் என்றும் யுத்தத்தை இரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம்'' என்றார் மாவோ.

புதிய ஜனநாயகப் புரட்சியின் அரசியல் குறிக்கோள்: புரட்சியின் இலக்கான ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தை தூக்கியெறிவதும் அதாவது தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களது சர்வாதிகாரத்தை அதன் அரசு எந்திரத்தை அடித்து நொறுக்கித் தூக்கியெறிவதும்-மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை அதன் அரசு எந்திரத்தை உருவாக்கி வடிவமைத்து நிறுவுவதும் அதன் மூலம் தேசிய மற்றும் மக்கள் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதும் ஆகும். யுத்தத்தின் உடனடி நோக்கம் என்ன? "இங்கு நாம் மனிதனின் ரத்தம் சிந்தும் அரசியல் என்ற வகையில், எதிரெதிரான சேனைகளின் பரஸ்பர படுகொலை என்ற வகையில் யுத்தத்தின் அடிப்படையான குறிக்கோளைப் பற்றிப் பேசுகிறோம். யுத்தத்தின் நோக்கம் குறிப்பாக 'தன்னைப் பாதுகாத்து, எதிரியை அழிப்பதாகும்' (எதிரியை அழிப்பது என்றால், அவனை நிராயுதபாணியாக்குவது, அதாவது, 'எதிர்க்கும் ஆற்றலை அவனிடமிருந்து பறிமுதல் செய்வது' அன்றி அவனுடைய படைகள் முழுவதையும் பௌதீக ரீதியில் அழிப்பது அல்ல)'' என்றார் மாவோ. 'தன்னைப் பாதுகாத்து எதிரியை அழிப்பது' என்ற கொள்கையே மக்கள் விடுதலைப் படையைக் கட்டி வளர்ப்பதற்கான கொள்கையும் அதன் யுத்தத்திற்கான குறிக்கோளும் ஆகும். இறுதியில் பார்த்தால் யுத்தத்தின குறிக்கோள்—அரசியல் குறிக்கோளை நிறைவேற்றுவதில் பிரதான போராட்ட வடிவமாக இருப்பது யுத்தம்—அரசியல் குறிக்கோளை அடைவதாகும். ஆனால் யுத்தத்தின் உடனடிக் குறிக்கோளும் அவற்றை ஆளும் விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் தனிச்சிறப்பான குணாம்சங்களையும் கொண்டிருக்கின்றன. அரசியல் மற்றும் யுத்தம் ஆகியவற்றின் நோக்கங்களை அடைய வேண்டுமானால் அரசியல் சக்திகள் மற்றும்

ராணுவ சக்திகள் திரட்டப்பட வேண்டும்; அரசியல் மற்றும் ஆயுதப் போரரட்டங்கள் நடத்தப்படவேண்டும். இவ்விரு பிரிவுகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை, பிரிவு முடியாதவை ஆகும். ஒன்றுக்கொன்று எதிரானவை என்றோக அல்லது வேறு வேறு கட்டங்களில் கடைபிடிக்கப்பட வேண்டியவை என்றோ தவறாகக் கருதக்கூடாது. மாறாக இவை இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தும் ஒன்றின் தேவையை மற்றொன்று இட்டு நிரப்புவதாகவும் இருக்கின்றன.

அரசியல் சக்திகளுடன் ஆயுதமேந்திய சக்திகளை இணைப்பதும், அரசியல் போராட்டங்களுடன் ஆயுதப் போராட்டங்களை இணைப்பதும் புரட்சிகர மக்கள் யுத்தத்துடன் ஆயுதம்தாங்கிய உள்ளூர் மக்கள் எழுச்சியை இணைப்பதும் புரட்சிகர இயக்கத்தை வழிநடத்தும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்திரங்கள் பற்றிய மார்க்சிய-லெனினியப் பொதுவிதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் ஆகும்.

ஆனால் அரசியல் பிரச்சனைகள் மற்றும் ராணுவப் பிரச்சனைகளின் வெவ்வேறான தனிச்சிறப்பான குணாம்சங்களிலிருந்து குறிப்பான விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளின் வெவ்வேறு தொகுப்புகளும் பரஸ்பரம் நெருக்கமான தொடர்டைய ஒன்றையொன்று சார்ந்து நிற்கிற வெவ்வேறு போக்குளும் தோன்றுகின்றன. இங்கு வெவ்வேறு அமைப்புத் தொகுதிகள் என்பது அரசியல் பிரச்சனைகளில் அரசியல் படைகள், சோவியத்துகள் மற்றும் அவற்றோடு சம்பந்தப்பட்ட அனைத்துமாகும்; ராணுவப் பிரச்சனைகளில் ஆயுதப்படைகளும் மற்றும் அவற்றோடு சம்பந்தப்பட்ட அனைத்துமாகும். இங்கு விதிகள் வழிகாட்டும் நெறிமுறைகளின் வெவ்வேறு தொகுப்புகள் என்பது அரசியல் பிரச்சனைகளில் புரட்சிகர இயக்கத்தை வழிநடத்தும் அரசியல் யுத்ததந்திரம் மற்றும் அரசியல் போர்த்தந்திரங்களுமாகும்; ராணுவப் பிரச்சனைகளில் புரட்சிகர யுத்தத்தை வழிநடத்தும் ராணுவ யுத்ததந்திரம் மற்றும் ராணுவப் போர்த்தந்திரங்களுமாகும். இங்கு பரஸ்பரம் நெருக்கமான தொடர்புடைய ஒன்றையொன்று சார்ந்து நிற்கிற வெவ்வேறு போக்குகள் என்பது அரசியல் பிரச்சனைகளில் எதிரெதிரான அரசியல் படைகள் தத்தமக்குச் சாதகமானவையும் எதிரிக்கு பாதகமானவையுமான அரசியல் யுத்ததந்திரம் மற்றும் அரசியல் போர்த்தந்திரங்களைப் பயன்படுத்தி புரட்சி அல்லது எதிர்ப்புரட்சிக்காக (ரிசர்வுகளை) உந்து சக்திகளையும், துணைச் சக்திகளையும் வென்றெடுத்துக் கொள்வதற்கான அரசியல் அணிதிரட்டலாகிய சமூக நடவடிக்கையின் குறிப்பான ஒரு வடிவமாகும்; ராணுவப் பிரச்சனைகளில் எதிரெதிரான ஆயுதப் படைகள் தத்தமக்குச் சாதகமானவையும் எதிரிக்கு பாதகமானவையுமான ராணுவ யுத்ததந்திரம் மற்றும் ராணுவப் போர்த்தந்திரங்களைப் பயன்படுத்தி ஒன்றையொன்று தாக்கி அழிப்பது அல்லது ஒன்று மற்றதற்கெதிராகத் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான ரத்தம் சிந்தும் முறையிலான சமூக நடவடிக்கையின் குறிப்பான ஒரு வடிவமாகும்.

"வெல்ல விரும்புவது ஆனால் அரசியல் அணிதிரட்டலைப் புறக்கணிப்பது, 'தேரை வடக்கே செலுத்தி தெற்கே போக' விரும்புவது போலாகும். அதன் விளைவு தவிர்க்கமுடியாதபடி வெற்றியைப் பறிகொடுப்பதாகவே இருக்கும்'' எனவே அரசியல் அணிதிரட்டல் புரட்சிகர இயக்கத்தின் வெற்றி பிரதானமாகத் தங்கி நிற்கும் பிரம்மாண்டமான முக்கியத்துவமுடையது என்று அரசியல் பிரச்சனைகள் குறித்தும், "தன்னைப் பேணிக்கொண்டு எதிரியை அழித்தல் என்ற யுத்தத்தின் குறிக்கோள் யுத்தத்தின் சாராம்சமும் யுத்த நடவடிக்கைகள் அனைத்தினதும் அடிப்படையுமாகும்'' என்று ராணுவப் பிரச்சனைகள் குறித்தும் மாவோ போதித்தவைகளே புரட்சியின் அரசியல் ராணுவ விவகாரங்களில் வழி நடத்தும் கோட்பாடுகளாகும்.

ஆக, இந்தியப்புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திர விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் மிகச் சரியான மார்க்சிய—லெனினிய—மாவோ சிந்தனையின் ஒளியில் தேசிய சர்வதேசியப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அனுபவங்களைத் தொகுத்து பருண்மையாகப் பிரயோகிக்க வேண்டுமானால்—ஒப்பீடு செய்யும் முறையும், இணையான முடிவுகள் எடுப்பதுமாகிய புரையோடிப் போன நோயைப் பூண்டோடு ஒழித்து ஆக்கபூர்வமான முறையில் பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரப் போராட்டத்தின் தலைமைமுறை பற்றிய ஒரு விஞ்ஞானம் என்கிற முறையில் இதுவரையிற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் அணுக வேண்டும். அப்பொழுதுதான் புரட்சியிலும் புரட்சிகர யுத்தத்திலும் உணர்வு பூர்வமான, ஆக்கபூர்வமான ஒரு மனிதஇயல்பின் இயக்கப் பாத்திரம் வெளிப்படுகிறது.

"உணர்வுபூர்வமான இயக்கப்பாத்திரம் ஒரு மனிதஇயல்பு. யுத்தத்தில் மனிதன் இந்த குணாதிசயத்தை வன்மையாகக் காண்பிக்கிறான். யுத்தத்தில் வெற்றியோ தோல்வியோ இரு தரப்புகளிலுமான ராணுவ, அரசியல், பொருளாதார, புவியியல் சூழ்நிலைகளாலும் ஒவ்வொரு தரப்பும் நடத்தும் யுத்தத்தின் இயல்பாலும் ஒவ்வொரு தரப்பும் கொண்டுள்ள சர்வதேச ஆதரவாலும் நிர்ணயிக்கப்படுகின்றது என்பது உண்மைதான்; ஆனால், இது இவற்றால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை; தம் அளவில் இவை யாவும் வெற்றி அல்லது தோல்வியின் சாத்தியக் கூறை மட்டுமே தருகின்றன, வெற்றியையோ தோல்வியையோ முடிவாக்குவதில்லை, வெற்றி தோல்வியை முடிவாக்க அகநிலைப் பட்ட பிரயாசையும் அதாவது யுத்தத்துக்கு வழிகாட்டுவதும் நடத்துவதும் யுத்தத்தில் மனிதனின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரமும் சேரவேண்டும்.

"ஒரு யுத்தத்தை நடத்துபவர்கள் புறச்சூழ்நிலைகள் இடும் எல்லைக் கோடுகளைத் தாண்டிச் சென்று யுத்தத்தில் வெற்றி பெற முடியாது. இருந்தும், இந்த எல்லைகளுக்குள் நின்று ஆற்றலுடன் யுத்தத்தில் வாகை சூடமுடியும்; சூடவும் வேண்டும். ஒரு யுத்தத்தில் தளபதிகளுக்கான செயல் அரங்கு புறநிலைச்சாத்தியப்பாடுகளில் கட்டியமைக்கப்பட வேண்டும். ஆனால் அந்த அரங்கில் ஒலியும் வண்ணமும், ஆற்றலும் கம்பீரமும் நிறைந்த பல நாடக நிகழ்ச்சிகளை அவர்கள் அரங்கேற்றமுடியும்''(மாவோ ராணுவப் படைப்புகள்,பக்கம் 465-66)

# II. இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர விதிகளும் வழி காட்டும் நெறிமுறைகளும் வகுப்பதற்கான முன்தேவை: மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டு முடிவுகளும் திட்டமும்

மார்க்சிய — லெனினிய — மாவோ சிந்தனையைப் பிரயோகித்து சர்வதேசிய தேசியரீதியிலான அனைத்து அடிப்படை முரண்பாடுகளின் புறவயமான வளர்ச்சிப் போக்குகளையும் பருண்மையாக ஆய்வு செய்து வந்தடைந்த கோட்பாட்டு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தை வகுப்பது அடுத்த முக்கியமான பணியாகும். அதாவது புரட்சியின் இலக்குகள் அல்லது எதிரிகள், கடமைகள் அல்லது பணிகள் உந்து சக்திகள் குணாம்சங்கள், கட்டம், தொலைநோக்கு, எதிர்காலம் ஆகியவற்றைத் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

மார்க்சிய—லெனினியத் திட்டம் என்பது மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகளையும், அவற்றிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட முடிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுச்சியுறும் வர்க்கங்களின் புரட்சிகர இயக்கத்தின் குறிக்கோளை வகுப்பதாகும். புரட்சிகர இயக்கத்தின் புறவயமான போக்குகளை கோட்பாடு பிரதானமாக ஆய்வு செய்தாலும், திட்டமும் கூட ஆய்வு செய்கிறது; ஆனால் திட்டத்தின் பிரதானப்பணி, கோட்பாடுகளின் முடிவுகளிலிருந்து தொடங்கி புரட்சிகர இயக்கத்தின் நோக்கங்களை வரையறுப்பதாகும். மார்க்சிய லெனினியத் திட்டம், இலக்குகள் பணிகள் உந்துசக்திகளை மட்டும் சுட்டிக் காட்டி உந்துசக்திகளைக் கொண்டு எதிரிகளைத் தூக்கியெறிந்து ஆற்றவேண்டிய பணிகளை மட்டும் நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை. இந்த கட்டத்தில் அதன் அவசியத்தைப் பற்றி சித்தாந்தபூர்வமாக விவரிப்பது மட்டுமில்லை அதன் பணி. புறநிலைப்

போக்குகளை ஆய்வு செய்த கோட்பாட்டின் அடிப்படையில் அவற்றை விளக்குவதோடு இன்றைய கட்டத்தையும், அடுத்த கட்டத்தையும், பாட்டாளி வர்க்க இறுதி லட்சியத்தையும் இணைத்து தொலைநோக்கையும், எதிர்கால நோக்கங்களையும் அவை உள்ளடக்கியிருக்க வேண்டும். புரட்சிகர இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கும் எதிர்காலத்திற்கும் பாட்டாளி வர்க்க இறுதி லட்சியத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்கான கூறுகளையும், பணிகளையும் திட்டம் வகுத்து வரையறுக்க வேண்டும். இல்லையானால் அது மார்க்சிய –லெனினியத்திட்டமாக இருக்காது; சந்தர்ப்பவாத திட்டமாகவே இருக்கும்.

ஒரு சமுதாயத்தில் நிலவும் சொத்துடமையின் வடிவங்களும் உற்பத்தி உறவுகளின் சட்டபூர்வமான வெளிப்பாடுகள்— அவற்றின் அடிப்படையிலான உற்பத்தி முறைகளுமே (இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட உற்பத்தி முறைகளையும் சொத்துடமை வடிவங்களையும் உடைய கலப்பு சமுதாயப் பொருளாதாரப் படிவத்தையே குறிப்பிடுகிறோம்) அச்சமுதாயத்தின் நிலவுகின்ற வளர்ச்சிக் கட்டத்தையும், சமுதாயத்தின் சாராம்சத்தையும் தீர்மானிக்கின்றன. சமுதாயப் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சமுதாயத்தின் பொருளாயத உற்பத்தி சக்திகள், அப்பொழுது நிலவும் உற்பத்தி உறவுகளுடனும் சொத்துடமை வடிவங்களுடனும் மோதிக் கொண்டு முரண்பட்டதாகின்றன. அதுவரை உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தேவையாக இருந்த உறவுகளும் வடிவங்களுமே தடையாக மாறிவிடுகின்றன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் அவற்றுக்குத் தடையாகிப்போன உற்பத்தி உறவுகள் மற்றும் சொத்துடமை வடிவங்களுக்கும் இடையிலான முரண்பாட்டின் விளைவாகவே சமுதாயப்புரட்சி வெடிக்கிறது.

ஒரு சமுதாயப் பொருளாதாரப் படிவத்திலேயே ஒன்றுக்கும் மேற்பட்ட உற்பத்திமுறைகள், சொத்துடமை வடிவங்கள் நிலவினால் அவற்றில் பிரதான வடிவமும் முறையுமே மற்றதின் வளர்ச்சி மீது ஆதிக்கம் செலுத்துவதாகவும் தீர்மானிப்பதாகவும் இருப்பினும் புரட்சிகர காலகட்டங்களில் பிரச்சனை சிக்கலாகவும் மாறுதலடைவதாகவும் இருக்கிறது. பழைய உற்பத்திமுறையும் சொத்துடமை வடிவமும் பிரதானமானதாக மேலாண்மை பெற்றதாக நீடிக்கும், அதே வேளையில் ஓரளவு புதிய உற்பத்தி சக்திகளும் அவற்றின் கருவடிவிலான புதிய உற்பத்தி உறவுகளும் வளரத் தொடங்கியிருக்கும்; தொடர்ந்து பின்னது பரிணாம வளர்ச்சியில் இருக்கும். இப்பரிணாம வளர்ச்சியினால் எழும் பழைய உற்பத்தி உறவுகளுக்கும், புதிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டால் புதிய முரண்பாடு வெடிக்கும் அதாவது பழையதைக் காக்கும் அமைப்பு அல்லது வர்க்கத்துக்கும் அதற்கு எதிரான புதியதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு அல்லது வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு வெடிக்கும்; அதன் முதிர்ச்சிக்கேற்றவாறு அகநிலைச் சக்திகளைத் திரட்டி புரட்சிகரமான முறையில் அரசியலதிகாரத்தைக் கைப

பற்றி புதிய உற்பத்தி உறவுகளையும் சொத்துடமை வடிவத்தையும் நிறுவுவதன் மூலம் உற்பத்தி சக்திகளுக்கிருந்த தடைகளை அகற்றுவது சமுதாயப் புரட்சியாளர்களின் பணியாகும்.

ஆனால் மேற்கண்ட பரிணாம வளர்ச்சியின் மூலமே சீர்திருத்தங்களினாலேயே புதிய உற்பத்தி முறைகளையும், சொத்துடமை வடிவங்களையும் புதியதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊசலாட்ட சக்திகள் கொண்வர யத்தனிக்கின்றன. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சியைக் கண்டஞ்சியே அவ்வாறு செய்கின்றன. அதன் மூலம் மாறுதல்களை சமரசமாகவே சேதமின்றி கொண்டுவந்துவிடமுடியும் என்றும் கொண்டு வந்துவிட்டதாகவும் கூட பசப்புகின்றன. பாட்டாளி வர்க்க இயக்கத்திற்குள் இருக்கும் முதலாளித்துவப் போக்காளர்களோ இதை ஏற்பதோடு இதேமாதிரியான யுத்ததந்திரங்களையும் போர்த்தந்திரங்களையும் முன்வைக்கின்றனர். சீர்திருத்தம் என்றாலே மாறுதல் ஓரளவு சாதகமானது என்று ஏமாற்றி வீங்கித் திரியும் திரிபுவாதிகளும் உண்டு. ஆனால் பரிணாம வளர்ச்சி மூலமும் சீர்திருத்தப் பாதை மூலமும் மாறுதல் என்ற போக்கு பழைய முறைகளையும் வடிவங்களையும் கட்டிக்காப்பதோடு மிகவும் வேதனையான, அழிவுமிக்க, மிகமிக மந்தமான பாதையையே முன்வைக்கிறது. பரிணாம வளர்ச்சி மற்றும் சீர்திருத்தத்தின் மூலமே மாறுதல் வேகமாக வந்து கொண்டிருப்பதாகவும் வந்துவிட்டதாகவும் முதலாளித்துவ அரசியல், சமூகவியலாளர்களும், திரிபுவாதிகளும் புள்ளிவிவரங்களைக் கேடாகப் பயன்படுத்தி அள்ளி வீசுகின்றனர். இந்தமுறையிலான பரிணாம மாறுதல்களை என்றுமே புரட்சியாளர்கள் ஏற்பதில்லை; யுத்ததந்திரம் போர்த்தந்திரங்களை வகுக்க மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். எவ்வளவுதான் புள்ளிவிவரங்களை அள்ளி வீசினாலும் அவையல்ல, மாறாக, பழைய உற்பத்திமுறை மற்றும் சொத்துடமை வடிவங்களுக்கும் புதிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டில் வெடிக்கும் வர்க்க மற்றும் தேசிய முரண்பாடுகளே இறுதியில் யாவற்றையும் தீர்மானிப்பவை.

ருஷியாவில் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான நடவடிக் மூலம் முதலாளித்துவத்தைக் கொண்டு வருவதாக ஸ்டோலிபின் பிற்போக்கு சீர்திருத்த மற்றும் முதலாளிகளின் கேடட் கட்சி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டபோது அது நிச்சயம் முதலாளித்துவ வர்க்கத்துக்கான நடவடிக்கையே, ஆனால் விவசாயிகளைத் தண்டிக்கும் துயரமிக்க பரிணாம வளர்ச்சி மற்றும் சீர்திருத்தப் பாதையிலானது என்பதால் போல்ஷவிக் கட்சிஎதிர்த்தது; மாறாக, விவசாயிகளின் விவசாயப் புரட்சித் திட்டத்தை முன் வைத்தது. முதலில் ருஷியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை மிகையாக மதிப்பிட்டிருந்த போல்ஷவிக் கட்சி 1907ல் விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான முரண்பாட்டின் கூர்மை மற்றும் மோதலை அடிப்படையாக் கொண்டு தவற்றைத் திருத்திக்கொண்டது. ஆனால் மென்ஷவிக்குகளோ பரிணாம வளர்ச்சி மற்றும் சீர்திருத்த நடவடிக்கை

களையே ஆதரித்து நின்றனர். ருஷியாவில் முதலாளித்துவப் பரிணாம வளர்ச்சிதான் இருக்கிறது. முதலாளித்துவமுறை வந்துவிட்டதா இல்லையா என்பதற்கான அளவுகோல் புள்ளி விவரங்கள் அல்ல விவசாயிகளது போராட்டமே என்றார் லெனின். ஜெர்மனியில் பரிணாம வளர்ச்சி மற்றும் சீர்திருத்தம் மூலம் விதிவிலக்காக அல்லது மிகவும் துன்பகரமான பாதையில் பிரஷ்யன் ஜங்கர் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவத்தைக் கொண்டுவந்ததற்கே கூட நடந்து முடிந்த, ஆனால், சமரசம் செய்துகொண்ட முதலாளித்துவப் புரட்சியின் விளைவேயாகும்.

ருஷிய முதலாளிகளைப் போன்றுதான் அரசு ஏகபோக மூலதனத்தை சோசலிசமாக பல்வேறு முதலாளிகளும், திரிபுவாதிகளும் பசப்புகின்றனர். அரசு ஏகபோக மூலதனம் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைத்தான் காட்டுகிறதேஒழிய புதியஉற்பத்தி முறையை அல்ல. எனவே புதிய உற்பத்திமுறை நிலைநாட்டப்படுவதே புரட்சிகரமான முறையில் புதியதின் பிரதிநிதிகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலிருந்து மட்டுமே தொடங்குகிறது. சமுதாயதின் வளர்ச்சிக் கட்டத்தையும் புரட்சிகரமான காலகட்டங்களில் அளப்பதற்கான கருவி பழைய உற்பத்தி உறவுகளுக்கும் புதிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டால் வெடிக்கும் வர்க்க முரண்பாடும் அதன் முதிர்ச்சியும் ஆகும்.

அதனால்தான் லெனின் பின்வருமாறு கூறினார்: "ஒரு சமுதாயத்திலுள்ள வர்க்கங்கள் அனைத்துக்கும் இடையிலான பரஸ்பரம் ஒட்டுமொத்த உறவுகளிலும் புறநிலையைக் கணக்கில் எடுத்துக் கொள்வது, இதன் விளைவாக அச்சமுதாயம் அடைந்துள்ள வளர்ச்சிக்கட்டத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வது. அதற்கும் இதர சமுதாயங்களுக்கும் இடையிலான பரஸ்பர உறவுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்வது இவைதான் முன்னேறிய வர்க்கத்தின் போர்த்தந்திரத்துக்கு அடிப்படையாக விளங்கும். அதேவேளையில் எல்லா வர்க்கங்களையும், எல்லா நாடுகளையும் நிலையமைதியில் பார்க்காமல் இயக்க நிலையில் பார்க்கிறோம். அதாவது, அவற்றை அசையாத நிலையிலே பார்க்காமல் இயங்கிக்கொண்டிருக்கும் நிலையிலே பார்க்கிறோம் (இந்த இயக்கத்தின் விதிகளை நிர்ணயிப்பவை ஒவ்வொரு வர்க்கத்தின் பொருளாதார வாழ்வு நிலைமைகள்தான்)." (லெனின், மார்க்ஸ் — எங்கல்ஸ் — மார்க்சியம், பக்கம் 54-55) அதேசமயம் இறுதியாகப் பார்க்கும்போது வர்க்க உறவுகளைத் தீர்மானிப்பது, குறிப்பாக புரட்சிகர கட்டத்தில் மோதிக்கொள்ளும் வர்க்க முரண்பாடுகளைத் தீர்மானிப்பது, பழைய உற்பத்திமுறை மற்றும் சொத்துடைமை வடிவங்களுக்கும் புதிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடே என்கின்ற முறையில் சமுதாயத்தின் வளர்ச்சிக் கட்டத்தை சமுதாயப் பொருளாதார அடித்தளமே தீர்மானிக்கிறது. அதன்மூலம் புரட்சியின் சாராம்சத்தையும் தீர்மானிக்கிறது. அதாவது, புரட்சியின் இலகுகள், பணிகள், உந்து சக்திகள், குணாம்சங்கள், கட்டம், தொலைநோக்கு, எதிர்காலம் ஆகியவற்றைத் தீர்மானிக்கிறது:

இந்திய சமுதாயப் பொருளாதாரப் படிவத்தில் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்திமுறை மற்றும் நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை ஆகியன உள்ளன. அதன் விளைவாக எழும் ஏகாதிபத்தியத்துக்கும் நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய இரு அடிப்படை முரண்பாடுகளே இந்தியப் புரட்சியின் சாராம்சத்தை தீர்மானிக்கின்றன. குறிப்பிட்ட சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடு அல்லது முரண்பாடுகளைத் தீர்த்து சிறைப்பட்டிருக்கும் உற்பத்தி சக்திகளின் சுதந்திரமான வளர்ச்சிக்கு வழிவகுத்து சமுதாயத்தை அதன் இயல்பான வளர்ச்சிப் போக்கின் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டு மார்க்சிய-லெனினியத் திட்டம் வகுக்கப்படுகிறது.

"முதலாளித்துவ வளர்ச்சிக்கட்டம் முழுவதையும் உள்ளடக்கியதாக முதலாளித்துவத்தைத் தூக்கியெறிந்து சோசலிச உற்பத்தியினை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டும் திட்டம் வடிவமைக்கப்படலாம் அல்லது முதலாளித்துவ வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட இடைக்கட்டத்தை மட்டும் கணக்கில் கொண்டும் வடிவமைக்கப்படலாம். உதாரணமாக, நிலப்பிரபுத்துவ — வரம்பற்ற எதேச்சதிகார கட்டமைவின் நீடிப்புகளைத் தூக்கியெறிந்து முதலாளித்துவத்தின் சுதந்திரமான வளர்ச்சிக்கான நிலைமைகளை உருவாக்குவதாக இருக்கலாம். இதற்கேற்ப குறைந்தபட்ச திட்டம், அதிகபட்ச திட்டம் என்று இரு பகுதிகளைக் கொண்டதாக இருக்கலாம்." (ஸ்டாலின், தொகுதி 5, பக். 165)

உதாரணத்திற்கு ஒரு காலனிய நாட்டை எடுத்துக்கொள்வோம். இந்தச் சமுதாயத்தில் ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடும், நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடும் என்று இரு அடிப்படை முரண்பாடுகள் இருக்கின்றன. இந்த அடிப்படை முரண்பாடுகளால் தீர்மானிக்கப்படுகின்ற எதிரிகளான ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவமும் சமுதாயத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அதாவது சுதந்திரமான முதலாளித்துவ உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன. எனினும், இந்த இரண்டில் ஏகாதிபத்தியமானது பிரதான எதிரியாக நாடு முழுவதன் மேலும் ஒரு பாறாங்கல்லைப் போல் அழுத்திக் கொண்டிருக்கும் எதிரியாக உள்ளது. நாட்டு மக்களின் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் போன்ற எல்லாத் துறைகளிலும் அது ஆதிக்கம் செலுத்தி ஒடுக்குகிறது எனவே அதை தூக்கியெறிவதே முதலாளித்துவ உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு உடனடித் தேவையாக அமைகின்றது. எனவே இரு அடிப்படை முரண்பாடுகளையும் தீர்க்க முன்வைக்கப்படுகின்ற திட்டம் ஏகாதிபத்தியத்தை மட்டும் தூக்கியெறிவதை குறிக்கோளாகக் கொண்ட இடைக்கட்டத்திற்கான குறைந்தபட்ச திட்டம் என்றும் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் இரண்டையும் தூக்கியெறிவதைக் குறிக்கோளாகக் கொண்ட முழுக் கட்டத்திற்கான அதிகபட்ச

திட்டம் என்ற இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான பிரதான முரண்பாடுதீர்க்கப்படும்போது குறைந்தபட்சத் திட்டம் நிறைவேறும் என்ற அடிப்படையில் இது வகுக்கப்படுகிறது. ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு மட்டும் தனியே தீர்க்கப்பட முடியாது என்று சிலர் கருதுகின்றனர். மாறாக, இது சாத்தியம் என்பதை ஆயுதப் போராட்டம் மூலம் அரசியலதிகாரத்தை அடைந்த இந்தோனேசியா, அல்ஜீரியா கினியா-பிசாவு, மொசாம்பிக் போன்ற நாடுகள் சுட்டிக்காட்டுகின்றன.

'ராணுவ—நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்தியமாகிய' ஜாரிச ருஷியாவில் ஒருபுறம், நிலப்பிரபுத்துவ - வரம்பற்ற எதேச்சதிகார கட்டமைவுக்கும் மற்றொரு புறம், பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளுக்கு இடையிலான முரண்பாடு, முதலாளித்துவ வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு என்ற இரு அடிப்படை முரண்பாடுகள் இருந்தன. ருஷிய சமுதாயத்தில் நிலப்பிரபுக்களின் பிரதிநிதியான ஜாரிஸ்ட் ஆட்சி தூக்கியெறியப்படுவதற்கு முன்பே முதலாளித்துவம் வளர்ந்து முதலாளித்துவத்தையும் ஒழித்துக்கட்டி சோசலிச-கட்டத்திற்குச் செல்வதற்கான கணிசமான அளவு சமுதாயப் புற நிலைமைகள் முதிர்ச்சி பெற்றிருந்தன. எனவேதான் மேற்கண்ட இரு அடிப்படை முரண்பாடுகள் அச்சமுதாயத்தில் இருந்தன. நிலப்பிரபுத்துவ —வரம்பற்ற எதேச்சதிகார கட்டமைவு, முதலாளித்துவ வர்க்கம் என்ற இரு எதிரிகள் இருந்தனர். இந்த இரு எதிரிகளையும் தூக்கியெறிந்துவிட்டு சமுதாயம் முன்னேறுவது அவசியமாக இருந்தது. எனினும் அவ்வாறு முன்னேறுவதற்கு முதற்பட்சமாக, உடனடிப் பணியாக ஜாரிசத்தை வீழ்த்த வேண்டியது அவசியமாக இருந்தது. ஏனென்றால் நிலப்பிரபுத்துவ — வரம்பற்ற எதேச்சதிகாரத்திற்கு எதிரான முரண்பாடே பிரதான முரண்பாடாக விளங்கியது. ஆகவே நிலப்பிரபுத்துவ—வரம்பற்ற எதேச்சதிகார கட்டமைவுக்கு எதிரான முரண்பாட்டின் தீர்வு குறைந்தபட்ச பகுதியாகவும், இரு அடிப்படை முரண்பாடுகளின் தீர்வு அதிகபட்சப் பகுதியாகவும் கொண்டு திட்டம் வகுக்கப்பட்டது. அதைத்தான் முதலாளித்துவ வளர்ச்சிக்கான முழுக் காலத்தையும் உள்ளடக்கியதாகக் கொண்டு முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவதை நோக்கமாகக் கொண்ட திட்டமாகவும் (அதிகபட்சம்) அல்லது முதலாளித்துவ வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட இடைக்கட்டத்தைக் கொண்டு நிலப்பிரபுத்துவ—எதேச்சதிகார கட்டமைவைத் தூக்கியெறிவதைக் குறிக்கோளாகக் கொண்ட திட்டமாகவும்(குறைந்தபட்ச)வகுக்கலாம் என மேலே குறிப்பிட்ட மேற்கோளில் ஸ்டாலின் சுட்டிக்காட்டுகிறார்.

காலனிய,நவீன காலனிய, அல்லது அரைக்காலனிய—அரை நிலப்பிரபுத்துவ சமுதாயமாகிய சீனா போன்ற நாடுகளின் நிலப்பிரபுத்துவத்துக்கும் — பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியத்துக்கும்—நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய இரு அடிப்படை முரண்பாடுகளும்

தீர்க்கப்படுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. இதில் நிலப்பிரபுத்துவத்துக்கும்— பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு பிரதானமாக இருந்து தீர்க்கப்படும் போது அதிகபட்ச திட்டம் நிறைவேறுவதால் மொத்தத் திட்டமும் நிறைவேறும் அல்லது ஒருபுறம் ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றுக்கும் மற்றொருபுறம் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான பிரதான முரண்பாடு என்ற ஒரு விசேஷமான சூழ்நிலையில் அதாவது உள்நாட்டுப் போர் முற்றும் போது ஏகாதிபத்தியம் ராணுவம் மற்றும் ஆயுதத் தலையீடு செய்கையில் (கம்போடியா) அம்முரண்பாடு தீர்க்கப்படும் போதும் மொத்தத் திட்டமும் நிறைவேறும்.

நிலப்பிரபுத்துவ—வரம்பற்ற எதேச்சதிகார கட்டமைவை வீழ்த்தி பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் சர்வாதிகாரத்தை, ஜனநாயக குடியரசை நிறுவுவதை குறைந்தபட்சப் பகுதியாகவும் முதலாளித்துவத்தை வீழ்த்தி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதை அதிகபட்ச பகுதியாகவும் கொண்ட திட்டத்தை ருஷ்ய போல்ஷ்விக் கட்சி வகுத்துக் கொண்டதற்கான காரணம் சமுதாய வளர்ச்சிக் கட்டத்தின் குறிப்பாக, உற்பத்தி முறைகளின் புறவயமான நிலைமைகளே யாகும்.

> "பொருளுற்பத்தியின் சக்திகள் யாவும் வளர்ச்சியடைவதற்கு முன்பு எந்த சமூக அமைப்பும் மறைந்து விடுவதில்லை. முந்திய பொருளுற்பத்தி உறவுகளைவிட மேன்மையான புதிய பொருளுற்பத்தி உறவுகள் தோன்றி நிலைபெறுவதற்கு அவசியமான யதார்த்த நிலைமைகள் பழைய சமூகத்தின் வயிற்றிலேயே வளர்ந்து பக்குவநிலையை அடைய வேண்டும். இவ்விதம் பக்குவ நிலையை அடைவதற்கு முன்னால் புதிய மேன்மையான பொருளுற்பத்தி உறவுகள் தோன்றுவதில்லை.
>
> "ஆகவே, தன்னால் எந்த வேலைகளைச் செய்து சமாளிக்க முடியுமோ, அவற்றைத்தான் மனிதவர்க்கம் தன் வேலையாக வைத்துக் கொள்கிறது. ஏனெனில், இந்த விஷயத்தைக் கூர்ந்து கவனித்தால், இந்த வேலைகள் குறிப்பிட்ட நிலைமையில்தான் தோன்றுகின்றன என்பது விளங்கும். இவ்வேலைகளை செய்து முடிப்பதற்கு வேண்டிய யதார்த்த நிலைமைகள் ஏற்பட்டவுடனோ அல்லது இவை உருவாகிக் கொண்டிருக்கிற ஒரு கட்டத்திலோதான் மனித வர்க்கத்தின் முன்னால் மனிதவர்க்கம் சமாளிக்கக் கூடிய ஒரு பிரச்சனையாக—வேலையாக—அவை தோன்றுகின்றன''
> (மார்க்ஸ், தேர்ந்த படைப்புகள், எண் 1 (பக்கம் 356-57)

சமுதாய மாற்றம் பற்றிய இந்த விதியைப் பிரயோகித்துதான், போல்ஷ்விக் கட்சி அதன் திட்டத்தின் அதிகபட்ச பகுதியாக சோசலிசத்தையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் கொண்டிருப்பினும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி நிலைக்கேற்றவாறு அதன் வளர்ச்சிக்குத் தடையாக விளங்கிய நிலப்

பிரபுத்துவ—வரம்பற்ற எதேச்சதிகார கட்டமைவைத் தூக்கி யெறிந்து ஜனநாயக குடியரசை நிறுவும் குறைந்தபட்ச பகுதியை உடனடிக் கடமையாகக் கொண்டது.

"ருஷியாவின் பொருளாதார வளர்ச்சியின் அளவும் (இது ஒரு புறநிலைமை) பாட்டாளி வர்க்கத் திரள்களின் ஒழுங்கமைப்பின் அளவும் (இது புறநிலைமையோடு பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டுள்ள அகநிலைமை) தொழிலாளர் வர்க்கத்தின் உடனடியான முழுமையான விடுதலையை அசாத்தியமாக்குகின்றன." எனவே "ருஷியப் புரட்சியின் முதலாளித்துவ ஜனநாயக எல்லைகளைத் தாண்டி நாம் போக முடியாது. ஆனால் இந்த எல்லைக்குள்ளேயே நாம் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்காகவும் உடனடித் தேவைகளுக்காகவும் போராட முடியும், போராடவும் வேண்டும்." (லெனின், ஜனநாயகப் புரட்சியில் சமூக - ஜனநாயகத்தின் இரு போர்த்தந்திரங்கள், பக். 22 மற்றும் 57, மாஸ்கோ வெளியீடு 1976) ஏனெனில், அதுவே ஒரே சாத்தியமான, சரியான பாதையாக இருந்தது என்று லெனின் முதற்கட்ட புரட்சி பற்றி எழுதினார்.

முதல் ருஷியப் புரட்சி முதலாளித்துவத் தன்மை (சமுதாயப் பொருளாதார உள்ளடக்கத்தில்) கொண்டதென்று போல்ஷவிக்குகள் முடிவான துணிபுடன் அறுதியிட்டார்கள். ஏனெனில் பண்ட உற்பத்தி அடிப்படையும், நாகரிகமடைந்த முதலாளித்துவ நாடுகளோடு வர்த்தகத் தொடர்பும் கொண்டுள்ள ஒரு சமுதாயம் தன்னுடைய வளர்ச்சியில் ஒரு குறிபிட்ட கட்டத்தில் தவிர்க்க முடியாதபடி முதலாளித்துவப் பாதையில் முன்னேறுவதைத் தவிர வேறொன்றிலும் சாத்தியமில்லை. இது பொதுவாகவும் சரி குறிப்பாக ருஷியாவுக்கும் சரி பொருந்தும்.

ஏனெனில் "ருஷியா போன்ற நாடுகளில் முதலாளித்துவத்தால் தொழிலாளர் வர்க்கம் துன்பப்படுவதை விட போதாக்குறையான முதலாளித்துவ வளர்ச்சியாலேதான் அதிகமாகத் துன்பப்படுகிறது. எனவே, மிகமிக விரிவான, சுதந்திரமான, விரைவான முதலாளித்துவ வளர்ச்சியிலே தொழிலாளர் வர்க்கம் மிகமிக நிச்சயமாக அக்கறை கொண்டிருக்கிறது முதலாளித்துவத்தின் விரிவான, சுதந்திரமான, விரைவான வளர்ச்சியைத் தடங்கல் செய்யும் பழைய கட்டமைவின் தொடர்ச்சிகள் அனைத்தையும் அகற்றி விடுவது தொழிலாளர் வர்க்கத்துக்கு முற்றிலும் அனுகூலமானதாகும். முதலாளித்துவப் புரட்சி என்பது பழங்காலத்தின் தொடர்ச்சிகளை, பண்ணையடிமைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் கட்டமைவின் (இதில் எதேச்சதிகார முறை மட்டுமன்றி முடியரசு முறையும் அடங்கும்) தொடர்ச்சிகளை மிகவும் உறுதியாகத் துடைத்தெறிந்துவிட்டு முதலாளித்துவத்தின் மிகவும் விரிவான, சுதந்திரமான, விரைவான வளர்ச்சிக்கு மிக முழுமையாக உத்திரவாதம் செய்கிற

புரட்சி எழுச்சியாகும். எனவேதான் முதலாளித்துவ புரட்சி பாட்டாளி வர்க்கத்துக்கு மிக உயர்ந்த அளவிலே அனுகூலமானதாகும். பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு முதலாளித்துவப் புரட்சி முற்றிலும் அவசியமாகும்.'' (ஷை நூல், பக் 53-54)

இவ்வாறு பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு முதலாளித்துவப் புரட்சியின் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்திய லெனின் ''நாங்கள் சோசலிசப் புரட்சியைத் தள்ளிப்போடவில்லை. ஜனநாயக குடியரசுக்கான பாதை என்கிற ஒரே சாத்தியமான வழியில், ஒரே சரியான பாதையில் அதை நோக்கி முதல் அடி எடுத்து வைக்கிறோம்'' என்றார் (ஷை நூல்-பக் 22)

எனவே சமுதாயப் பொருளாதார வளர்ச்சிப் போக்கின் புறவயமான நிலைமைகள், குறிப்பாகப் பொருளாதார வளர்ச்சி (புறநிலைக்கூறு) மற்றும் பாட்டாளிகளது அமைப்பு ரீதியிலான வளர்ச்சி (புறநிலையின் பிரதிபலிப்பான அகநிலை) ஆகியவற்றை பொருத்துதான் கட்சித்திட்டமும் அதன் குறைந்த பட்சப்பகுதி மற்றும் அதிகப்பட்சப் பகுதியும் வரையறுக்கப்படுகின்றன. அதாவது பழைய பொருளுற்பத்தி உறவுகளுக்கும் — புதிய பொருளுற்பத்தி சக்திகளுக்கும் இடையிலானது மற்றும் பழைய மேற்கட்டுமானத்திற்கும்—புதிய அடித்தளத்திற்கும் இடையிலானது ஆகிய அடிப்படை முரண்பாடுகள் மற்றும் அதன் வெளிப்பாடான சமுதாய வர்க்க முரண்பாடுகள் ஆகியவற்றைப் பொருத்துதான் இவை வரையறுக்கப்படுகின்றன. புரட்சியின் தன்மை, கட்டம், இலக்கு, பணிகள், உந்துசக்திகளையும் இவையே தீர்மானிக்கின்றன.

எனவே இந்தியப் புரட்சியின் திட்டம் நிலப்பிரபுத்துவத்துக்கும்— பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு மற்றும் ஏகாதிபத்தியத்துக்கும்—நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய இரு அடிப்படை முரண்பாடுகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடே இன்றைய இடைக் கட்டத்தின் பிரதான முரண்பாடாக இருப்பதால் அதன் தீர்வே திட்டத்தின் அதிகபட்சப் பகுதியையும் நிறைவேற்றுவதால் இங்கே பொதுத்திட்டமும் அதேசமயம் நிறைவேற்றப்படும். ஏகாதிபத்தியத்துக்கும் - நாட்டுக்குமான முரண்பாடு பிரதான முரண்பாடாக ஆகும்பொழுது குறித்த திட்டம் வரையறுக்கப்பட வேண்டும். அதுவரை விவசாயிகளின் புரட்சியாக இருந்த விவசாயத் திட்டம் விவசாய சீர்திருத்தமாக மாறினும் புரட்சியின் இலக்காக ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவமும் நீடிக்கும்; அதேசமயம் அன்றைய இடைக்கட்டத்தின் இலக்காக ஏகாதிபத்தியத்துக்கும், துரோகிகளான அதன் அடிவருடிகளுக்கும் எதிராக மட்டுமே தாக்குதல் முனை திருப்பி விடப்படும், ஏகாதிபத்தியம் ஆக்கிரமிக்காது ராணுவ மற்றும் ஆயுதத் தலையீடு மூலம்

புரட்சியை முறியடிப்பதில் இறங்கும் போது, ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவம் ஒரு புறமும், பரந்துபட்ட மக்கள் மற்றொரு புறமும் ஆகிய பிரதான முரண்பாடு உருவாகும் பொழுதும் பொதுத்திட்டமும் அதிகபட்சப் பகுதியும் ஒன்றாகிறது. இந்திய சமுதாயப் பொருளாதார வளர்ச்சியின் புறவயமான நிலைமைகள் இவ்வாறுதான் திட்டம் வகுத்துக் கொள்ளும்படி கோருகின்றன.

தூக்கியெறியப்படும் உற்பத்தி உறவுகள் மற்றும் புறவயமான நிலைமைகளின் வளர்ச்சி, குறிப்பாக பொருளுற்பத்தி சக்திகளின் வளர்ச்சி ஆகியவற்றின் தன்மைகளைப் பொருத்து அவற்றால் எழும் அடிப்படை முரண்பாடுகள் அவற்றுக்கேற்ற முறையில் தீர்க்கப்படுகின்றன. ''தன்மையில் வேறுபட்ட முரண்பாடுகள் தன்மையில் வேறுபட்ட முறைகளால்தான் தீர்க்கப்பட முடியும். உதாரணமாக, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு சோசலிசப் புரட்சி முறையால் தீர்மானிக்கப்பட வேண்டும் பரந்துபட்ட மக்களுக்கும் நிலப்பிரபுத்துவ அமைப்புக்கும் இடையிலான முரண்பாடு ஜனநாயகப் புரட்சி முறையால் தீர்க்கப்பட வேண்டும். காலனிகளுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான முரண்பாடு தேசியப் புரட்சி யுத்தமுறையால் தீர்க்கப்படவேண்டும்.'' (மாவோ, முரண்பாடு பற்றி, பக் 22)

புரட்சியின் மூலம் தீர்க்கப்படும் முரண்பாட்டின் தன்மையும், தீர்க்கப்படும் முறையின் தன்மையும் புரட்சியின் கட்டத்தை தீர்மானிக்கின்றன. மார்க்சிய-லெனினியக் கோட்பாடு வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் எந்த முரண்பாடுகளால் எழும் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்குகள் நீடிக்கின்றன; அடுத்து வரலாற்று பூர்வமாக சமுதாயம் எந்த வரலாற்றுக் கட்டத்திற்கு செல்ல முடியும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த வரலாற்றுக் கட்டத்திற்கேற்ப வகுக்கப்படும் மார்க்சிய லெனினியத் திட்டத்தையே பொதுத்திட்டம் என்கிறோம். இவ்வாறு தீர்மானிக்கப்படுகிற வரலாற்றுக் கட்டத்தையே புரட்சியின் கட்டம் என்று குறிக்கிறோம்; சமுதாய புரட்சியின் கட்டத்தையே குறிக்கிறது. அதாவது அடிப்படையில் சமுதாய அமைப்பை மாற்றி அமைக்கும் புரட்சியின் கட்டமாகும். அடிப்படையில் சமுதாய மாற்றம் ஒன்றின்றியே அரசியல் புரட்சி மட்டும் நடைபெறலாம். அவை முக்கியமானவையே. ஆனால் அவை புரட்சியின் கட்டத்தை மாற்றியமைத்து விடுவதில்லை.

சான்றாக முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகள் மற்றும் சொத்துடைமை வடிவங்கள் புதிய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக மாறும்போது அவை தூக்கியெறியப்பட்டு தங்கு தடையற்றதாக சமுதாயப் பொருளாதார உள்ளடக்கத்தில் முதலாளித்துவத் தன்மையுடைய அமைப்பு நிறுவப்படுவது ஜனநாயகப் புரட்சி என்னும் கட்டத்தைக் குறிக்கிறது. அதேபோன்று, முதலாளித்துவ உற்பத்தி முறையும் சொத்துடைமை வடிவமும் தூக்கியெறியப்பட்டு சோசலிச அமைப்பு நிறுவப்படுவது சோசலிசப்புரட்சி

என்னும் கட்டத்தைக் குறிக்கிறது. ஆனால் ஏகாதிபத்தியத்துக்கும்—காலனி நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு தீர்க்கப்படுவதன் மூலம் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையும் சுரண்டலும் தூக்கியெறியப்படுவதன் மூலம் நிறைவேற்றப்படும் தேசியப் புரட்சி என்பது அரசியல் புரட்சியின் வகைப்பட்டதாகும். இது மட்டுமே சமுதாயப் புரட்சியின்றி நடைபெறுவது சாத்தியமே; ஆயினும் இது புரட்சியின் கட்டம் முடிந்துவிட்டதைக் குறிப்பிடுவதில்லை. அதேபோன்று புரட்சியின் மூலம் ஒரு பாசிச ஆட்சிமுறை தூக்கியெறியப்பட்டு ஜனநாயக ஆட்சிமுறை சமுதாயமாற்றமின்றியே அமைவதும் அரசியல் புரட்சியே. இதுவும் புரட்சியின் கட்டம் முடிவடைந்ததைக் குறிப்பிடுவதில்லை. எனவே அடிப்படை சமுதாய மாற்றத்தைக் கொண்டு வருவதே புரட்சியின் கட்டம் மாறுவதைக் குறிக்கிறது.

1917 பிப்ரவரி ருஷியப் புரட்சியில் நிலப்பிரபுத்துவ—வரம்பற்ற எதேச்சதிகாரத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் மூலம் தீர்க்கப்பட்டு, முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு நிறுவப்பட்டது. பாட்டாளி வர்க்க கட்சி சமுதாய மற்றும் பொருளாதார உள்ளடக்கத்தால் முதலாளித்துவத் தன்மையுடைய, ஆனால் அரசியல் ரீதியில் தொழிலாளர்கள்—விவசாயிகள் சர்வாதிகாரம் என்னும் திட்டத்தையே முன்வைத்தது. பாட்டாளி வர்க்கத் தலைமையில் புரட்சி வெற்றி அடையாவிடினும் புரட்சியின் கட்டம் மாறியது. 1917 அக்டோபர் புரட்சியில் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு தீர்க்கப்பட்டதால், முதலாளித்துவ அமைப்பு தூக்கியெறியப்பட்டதால் சோசலிச அமைப்பு நிறுவப்பட்ட போது புரட்சியின் கட்டம் மாறியது.

சீனப்புரட்சியில் நிலப்பிரபுத்துவத்துக்கும்—பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஜனநாயகப்புரட்சியாகிய சமுதாயப் புரட்சி மூலமும், ஏகாதிபத்தியத்துக்கும் நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு அரசியல் புரட்சியாகிய தேசிய விடுதலைப் புரட்சியாலும் தீர்க்கப்பட்டன. சீனப்புரட்சி முழுவதுமே ஒரே சமுதாயக் கட்டமாக ஜனநாயகப் புரட்சியாக இருந்தது. அரைக்காலனிய—அரை நிலப்பிரபுத்துவ சீன சமுதாயத்தை எடுத்துக் கொள்வோம். அங்கும் சீன சமுதாயம் ஜனநாயக கட்டத்தை அடையாமலிருந்தது. எனவே, சோசலிச வரலாற்றுக் கட்டத்தை அடைவது உடனடியாக இயலாத ஒன்றாயிருந்தது. முதலாளித்துவ உற்பத்திமுறை தரகு அதிகார வர்க்கத்தன்மை கொண்டதாக இருந்ததோடு தேசிய முதலாளித்துவ சக்திகளும் உற்பத்தி முறையும் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தன. எனவே, ஜனநாயக கட்டத்தை அடைவதைக் குறைந்தபட்சத் திட்டமாகவும் சோசலிசத்தை அடைவதை அதிகபட்ச திட்டமாகவும் கொண்டு சீனப் பொதுவுடமைக்கட்சி செயல்பட்டது.

குறிப்பிட்ட சமுதாயக்கட்டம் நிறைவுபெறும்வரை வைக்கப்படுகின்ற திட்டம் பொதுத்திட்டம் என்று அழைக்கப்படுகின்

றது. ஏனென்றால் இந்தக்கட்டம் முழுவதும் புரட்சியின் இலக்கு ஒன்றாக இருக்கின்றது, அடிப்படை முரண்பாடுகள் தீராமல் இருக்கின்றன. இந்த இலக்குகளை வீழ்த்தி அடிப்படை முரண்பாடுகளைத் தீர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு திட்டம் வகுக்கப்படுகிறது. அதனால்தான் புரட்சியின் கட்டம் முழுவதும் திட்டம் மாறாமல் இருக்கின்றது. எனவே இதை பொதுத் திட்டம் என்று சொல்கிறோம். ஆனால் இந்த ஒரே கட்டத்தில் கூட குறிப்பிட்ட காலகட்டங்களில் எதிரிகளும் நண்பர்களும் மாறும்பொழுது அதற்கேற்றவாறு குறித்ததிட்டங்கள் (Specific Programme) வகுக்கப்படுகின்றது. "உதாரணமாக வடதிசைப் படையெடுப்பு, விவசாயப் புரட்சி யுத்தம், ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆகிய காலங்கள் மூன்றிலும் புதிய ஜனநாயகத்தின் நமது பொதுத்திட்டம் ஒன்றாகவே இருந்தது. ஆனால், நமது குறித்த திட்டத்தில் மாறுதல்கள் இருந்தன. ஏனென்றால் இந்த மூன்று காலங்களிலும் நமது நண்பர்களும் எதிரிகளும் ஒன்றாக இருக்கவில்லை" என்று மாவோ குறிப்பிடுகிறார். (கூட்டரசாங்கம்பற்றி மாவோ, தேர்ந்த கட்டுரைகள்—பக் 267)

புரட்சியின் பொதுத்திட்டம் குறைந்தபட்ச பகுதி அல்லது குறித்த திட்டம் என்றும் அதிகபட்ச பகுதி என்றும் பிரிக்கப்படும் போது, புரட்சியின் கட்டம் ஜனநாயகப் புரட்சிக்கட்டம் சோசலிசப் புரட்சிக்கட்டம் என்று பிரிக்கப்படும்போது, பாட்டாளிவர்க்க கட்சி குறைந்தபட்ச திட்டத்திலிருந்து அதிகபட்சத் திட்டத்திற்கும், ஜனநாயகப் புரட்சி கட்டத்திலிருந்து சோசலிசப் புரட்சிக் கட்டத்துக்கும் தொடர்ந்து தங்கு தடையின்றி புரட்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான அதிகபட்ச அடிப்படைகளையும் கூறுகளையும் பெறுவதற்கான வகையில் திட்டம் மற்றும் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

இப்பிரச்சனையில்தான், குறிப்பாக, போல்ஷ்விக்குகள் மென்ஷ்விக்குகளிடமிருந்து மாறுபட்டார்கள் போல்ஷ்விக்குகள் புரட்சிகரமான முறையில் நிலப்பிரபுத்துவ—வரம்பற்ற எதேச் சதிகார அமைப்பைத் தூக்கியெறியும் விவசாயிகளின் முதாலாளித்துவப் புரட்சி மூலம் விவசாயிகள் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவப் போராடினார்கள். மென்ஷ்விக்குகள் முதலாளித்துவ சீர்திருத்தத்தை ஆதரித்து முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்காக நின்றார்கள். சீனப்புரட்சியும் ஜனநாயகப் புரட்சிக்கட்டத்தின் வகைப்பட்டது என்றாலும் பாட்டாளி வர்க்கத் தலைமை விவசாயிகளின் விவசாயப் புரட்சியை அச்சாணியாகக் கொண்டிருந்தது. பெரும் தொழில் களும், கூட்டுறவுத்துறை இவையனைத்தும் சோசலிசப் புரட்சி கட்டத்திற்கு புரட்சிகர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற் கான அடிப்படைகளும் கூறுகளுமாக இருந்தன.

## இந்தியப்புரட்சியின் பருண்மையான கோட்பாட்டு முடிவுகளும் திட்டமும்

மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையைப் பிரயோ-கித்து இன்றைய சர்வதேசிய, தேசிய ரீதியிலான அனைத்து

அடிப்படை முரண்பாடுகளின் புறவயமான வளர்ச்சிப் போக்கைப் பருண்மையாக ஆய்வுசெய்து பின்வரும் கோட்பாட்டு ஆய்வுரைகளை வந்தடைகிறோம்.

## சர்வதேசிய ரீதியில்

— பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை - சர்வதேச வர்க்கப் போராட்டத்தில் அவற்றின் பாத்திரம்; சமூக ஏகாதிபத்தியத்தின் தோற்றம்—அதனால் சோசலிச முகாமின் சிதைவு; முதலாளித்துவத்தின் ஏற்றத்-தாழ்வான வளர்ச்சி—அதனால் மேற்கு ஏகாதிபத்திய முகாமின் சிதைவு ஆகிய மாறுதல்கள் காரணமாக இன்றைய உலகம் ஒன்றோடொன்று தொடர்புடைய முரண்பாடுடைய மூன்று உலகங்கள் அல்லது மூன்றுவகை அரசியல் சக்திகளாகப் பிரிந்திருக்கின்றன.

— இன்றைய உலகின் மிகப்பெரிய சுரண்டலாளர்களாகவும் ஒடுக்குமுறையாளர்களாகவும் ஆக்கிரமிப்பு மற்றும் மேலாதிக்கவாதிகளாகவும் உலகமக்களின் பொது எதிரிகளாகவும்விளங்கும் சோவியத் சமூக ஏகாதிபத்தியமும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் முதல் உலகமாக அமைகின்றன.

— சர்வதேசப் பாட்டாளிவர்க்கத்தின் மிக முக்கிய ஆதாரமாய் இருக்கும் சோசலிச நாடுகளும், உலகமக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையாக இருக்கும் அடக்கி ஒடுக்கப்படும் தேசங்களும் நாடுகளும் மூன்றாம் உலகமாகும். இரு மேலாதிக்கவாதிகளுக்கு எதிரான உலகு தழுவிய போராட்டத்தில் பிரதான சக்தியாக மூன்றாம் உலகம் விளங்குகிறது.

— இவ்விரு உலகங்களுக்கு இடையிலுள்ள வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் இரண்டாம் உலகமாக அமைகின்றன. மூன்றாம் உலக நாடுகளை இன்னமும் அடக்கி ஒடுக்கியும் சுரண்டியும் வரும் அதேசமயத்தில், இருமேல்நிலை வல்லரசு-களால் கட்டுப்படுத்தப்பட்டும் அச்சுறுத்தி அடக்கப்பட்டும் வரு-வதால் இவை இரட்டைக் குணாம்சத்தைப் பெற்று முதல் உலகம், மூன்றாம் உலகம் ஆகிய இரண்டோடும் முரண்பட்டு நிற்கின்றன. ஆனாலும் உலக மேலாதிக்க சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் மூன்றாம் உலகத்தால் வென்றெடுக்கப்படக்கூடிய அல்லது மூன்றாம் உலகத்தோடு ஒன்றிணையக்கூடிய ஒருசக்தியாகவே இரண்டாம் உலகம் விளங்குகிறது.

— உலக மேலாதிக்கத்துக்கான இரு மேல்நிலை வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியில் எல்லா நாடுகளிலும் உள்ள மக்க-ளுக்கு இவர்கள் தரும் தொல்லையும், இவர்களுக்கு மக்கள் காட்டும் எதிர்ப்புந்தான் இன்றைய உலக அரசியலில் மையமான பிரச்சனையாக நிலவுகிறது.

— இருமேல்நிலை வல்லரசுகளுக்கு இடையிலான போட்டி ஒரு புதிய உலக யுத்தத்துக்கு வழிகோலுகிறது. இரு மேல்நிலை வல்லரசுகளுள் சோவியத் சமூக ஏகாதிபத்தியமே புதிய உலக யுத்தத்திற்கான பேரபாயமாகவும் ஊற்றுக்கண்ணாகவும் விளங்குகிறது.

— நாடுகள் சுதந்திரத்தை விரும்புகின்றன; தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன; மக்கள் புரட்சியை விரும்புகிறார்கள் என்ற வரலாற்றுப் பெருவெள்ளம் எந்த சக்தியாலும் தடுக்க முடியாதவாறு பொங்கிப் பெருகுகிறது என்பதே அனைத்துலக நிலைமையின் பிரதான போக்காகும். அதேசமயம் புரட்சிக்கான கூறுகள் வளர்வதைப் போலவே யுத்தத்திற்கான கூறுகளும் வளர்கின்றன- புரட்சி யுத்தத்தைத் தடுத்து நிறுத்தினாலும், அல்லது யுத்தம் புரட்சிக்கு வழிவகுத்தாலும் ஒன்று அல்லது மற்றொரு மேல்நிலை வல்லரசு மனித குலத்தின் விதியைத் தீர்மானிக்கப்போவதில்லை; இறுதியில் அன்றாடம் விழிப்புணர்வு பெற்றுவரும் கோடிக்கணக்கான உலக மக்களே தீர்மானிக்கப்போகிறார்கள்.

## தேசிய ரீதியில்

பரிணாம வளர்ச்சியின் மூலம் தானாகவே வளரவேண்டிய இந்திய சமுதாயம் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் தலையீட்டால் காலனிய—அரைநிலப்பிரபுத்துவ சமுதாயமாக்கப்பட்டது. 1947 அதிகார மாற்றத்துக்குப் பின் அது அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ சமுதாயமாக இருக்கிறது. இந்திய சமுதாயம் கீழ்க்கண்ட குணாம்சங்களைப் பெற்றிருக்கிறது.

1 நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் அடிப்படையாக விளங்கும் விவசாயிகளின் மீதான நிலப்பிரபு வர்க்கத்தின் சுரண்டல் இருக்கின்றது. இது ஏகாதிபத்தியங்கள் மற்றும் தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் தரகு அதிகார வர்க்கத் முதலாளித்துவ அடிப்படையிலான முதலாளித்துவ சுரண்டலுடன் இணைந்து இந்தியாவின் சமூகப் பொருளாதார வாழ்வில் தெட்டத் தெளிவான முறையில் ஆதிக்கம் செலுத்துகிறது.

— நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையே தேசிய வருவாயிலும் (40%க்கு மேல்) உழைப்புத்துறை கட்டுமானங்களிலும் (70%க்கு மேல்) அதிகமானதாக, பிரதானமானதாக, மிகுநிலை பெற்றதாக இருக்கிறது. தரகு அதிகார வர்க்கத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்திமுறை விவசாயத் துறையிலும் பிரஷ்யன்—ஜங்கர் முறையில் புகுந்துள்ளது. உற்பத்தி உறவுகளோ நிலப்பிரபுத்துவ உறவுகளாகவே தொடர்கின்றன. இந்த உற்பத்திமுறை கணிசமான அளவு வளர்ந்துள்ளதாக சொல்லப்படும் பகுதிகளில் கூட இந்த நிலைதான் நீடிக்கிறது.

— அரை நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்தில் 75% நிலம் 25% பெருநிலவுடைமையாளர்களிடம் குவிந்து கிடக்கிறது. அதே சமயம் கிராமப்புற மக்கள் தொகையில் 75 சதவிகிதத்தினர் 25% நிலத்தையே உடைமையாகக் கொண்டிருக்கிறார்கள். 50%க்கும் மேலானவர்கள் நிலம் இன்றியோ அல்லது மிகக் குறைந்த நிலம் உடையவர்களாகவோ இருக்கிறார்கள்.

— நிலப்பிரபுத்துவ அடக்குமுறை, நாளும் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம் அடிக்கடி ஏற்படும் பஞ்சம், வறட்சி

ஆகிய காரணங்களால் கிராமப்புற மக்கள் ஓட்டாண்டிகளாகி வருகிறார்கள். அடிமைக் காலம் போலவே தாழ்த்தப்பட்ட மக்கள் மீது அடக்குமுறைகள் ஏவிவிடப்படுகின்றன.

— அரசால் கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட கிராமப்புற சீர்திருத்தங்கள் நமது உற்பத்திசக்திகளின் மீதான விலங்குகளை உடைப்பதற்கு பதில் உழவர்களை மேலும் மோசமான சுரண்டலுக்கும் அடிமைத்தனத்திற்கும் தள்ளியிருக்கின்றன.

2 தேசிய முதலாளித்துவம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வளர்ந்து உள்ளது. ஆனால் அது இந்தியாவில் சமூகப் பொருளாதாரத்தின் பிரதான அங்கமாகி விடவில்லை. மிக பலவீனமாக இருக்கின்றது. அது அந்நிய ஏகாதிபத்தியத்துடனும் உள்நாட்டு நிலப்பிரபுத்துவ சக்திகளுடனும் வெவ்வேறு அளவுகளில் கூட்டு சேருவதாகவும் உள்ளது.

3 இரண்டு வகைகளில் தரகு அதிகார வர்க்கத் தன்மை உடைய முதலாளித்துவ உற்பத்தி முறை இந்திய அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ சமுதாயப் படிவத்தின் மீது மேலாதிக்கம் பெற்றுள்ளது. ஒன்று, தரகு அதிகார வர்க்கத் தன்மையுடைய முதலாளித்துவ உற்பத்தி முறையின் மறு உற்பத்திக்கு அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ அரசு உதவுகிறது. இரண்டு இந்திய சமுதாயப் படிவத்தில் மிகுநிலையாக உள்ள அரைநிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ வளர்ச்சிக்காக ஒருமுனைப்படுத்தப்படுகிறது. இவையிரண்டுமே அந்நிய ஏகாதிபத்தியங்களின் முதலாளித்துவ மறுஉற்பத்தி முறையின் மறு உற்பத்திக்காக நடத்தப்படுகின்றன. ஏகாதிபத்தியங்களின் பொருளாதாரத்தோடு பிணைக்கப்பட்டுள்ளன ஏகாதிபத்திய உலக கட்டமைவில் ஐக்கியமாகி இருப்பதாலும் 'உள்மயமாகி' இருப்பதாலும் அரசியலதிகாரத்தில்மேலாண்மைபெற்றிருப்பதாலும்தரகு அதிகார வர்க்க முதலாளித்துவம் இந்திய சமுதாயப் படிவத்தின் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்கான நிலைமைகளைப் பெற்றிருக்கிறது.

— குறிப்பாக இரு மேல்நிலை வல்லரசுகளும் நமது நாட்டின் பொருளாதாரத்தின் உயிராதாரமான துறைகளைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருக்கின்றன. நமது நாட்டின் மூலப்பொருட்கள், சந்தைகள், முக்கியமான யுத்தக்குறியிடங்கள், செல்வாக்கு மண்டலங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றவும் கட்டுப்படுத்தவும் அவர்கள் ஒருவருக்கொருவர் நாய்ச்சண்டைகளில் பிணைத்துக் கொண்டுள்ளார்கள் இவ்விரு மேல்நிலை வல்லரசுகளுக்குமே முக்கியமாக நமது நாடு ஓர் அரைக்காலனியாக மாறியிருக்கிறது; இதை ஒட்டி ஆளும் வர்க்கங்களும் இருபிரிவாக பிரிந்து உள்ளனர்.

4 இந்தியா இன்று பல்வேறு ஏகாதிபத்தியங்களின் மறைமுக ஆதிக்கத்தின் கீழான பெயரளவிலான சுதந்திரம் பெற்ற முதலாளித்துவ முறையிலான அரைக்காலனிய—அரைநிலப்பிரபுத்துவ அரசமைப்பை பெற்றுள்ளது—அதாவது

— அரைக்காலனிய-அரைநிலப்பிரபுத்துவ நாட்டின் சிறப்புத் தன்மைக்கேற்ற வகையில் முதலாளித்துவ அரசு எந்திரத்தின் வடிவமுறையைப் பெற்றுள்ளது.

— அரசு அதிகாரம் ஏகாதிபத்தியத்தின் சமூக அடிப்படைகளான தரகு அதிகார வர்க்க முதலாளிகள் நிலப்பிரபுக்களிடம் இருக்கின்றது.

— அரைக்காலனிய—அரைநிலப்பிரபுத்துவ அரசு நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையைக் கொண்டிருக்கிறது.

— தரகு அதிகார வர்க்க முதலாளிகள் நிலப்பிரபுக்களின் இந்த அரசு அமெரிக்க, சோவியத் ஏகாதிபத்தியங்களின் தொங்கு சதையாக, கைப்பாவையாக இருக்கின்றது. அதன் மூலம் இவ்விரு மேல்நிலை வல்லரசுகள் இந்தியாவின் பொருளாதார, நிதி ஜீவநாடிகளை கொள்ளையடிக்கவும், அரசியல் ராணுவ ஆற்றலைக் கட்டுப்படுத்தவும் ஆதிக்கம் செலுத்தவும் உதவி செய்கின்றது.

5 ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகிய இரண்டினதும் அடக்குமுறையால் பரந்துபட்ட இந்திய மக்கள் குறிப்பாக விவசாயிகள் மேலும் மேலும் வறுமைக்குள்ளாக்கப் பட்டுள்ளதோடு பெருந்தொகையில் ஓட்டாண்டிகளாகி அரைகுறை அரசியல் உரிமைகளுடன் பட்டினியிலும் பஞ்சத்திலும் வாடுகின்றனர்.

சர்வதேசிய, தேசிய ரீதியிலான அனைத்து அடிப்படை முரண்பாடுகளின் புறவயமான வளர்ச்சிப் போக்குகளையும் பருண்மையாக ஆய்வுசெய்து வந்தடைந்த மேற்கண்ட கோட்பாட்டு முடிவுகளை அடிப்படைகளாகக் கொண்டு மார்க்சிய-லெனினியத் திட்டத்தை அதாவது இந்தியப் புரட்சியின் இலக்குகள், உந்துசக்திகள், குணாம்சம், கட்டம், தொலைநோக்கு, எதிர்காலம் ஆகியவற்றைத் தெளிவாக வரையறுக்க வேண்டும்

## இந்தியப் புரட்சியின் குறிக்கோள்கள்

— அரைக்காலனிய, அரைநிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பைத் தூக்கியெறிந்து ஒரு சுதந்திரமான, ஜனநாயகமான சமுதாய அமைப்பை நிறுவுவது இந்தியப் புரட்சியின் இன்றைய கட்டத்தின் குறிக்கோளாகும்.

— புரட்சியை முன்னெடுத்துச் சென்று தேவையான நிலைமை முதிர்ச்சியுறும்போது ஒரு சோசலிச சமுதாயத்தை நிர்மாணிப்பது அடுத்த கட்டத்தின் குறிக்கோளாகும்.

## இந்தியப் புரட்சியின் இலக்குகள்

— அரைக்காலனிய - அரைநிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையால் இந்திய சமுதாயம் முன்னேறுவதற்குத் தடையாக இருந்து, இந்திய மக்களின் மிகப்பெரும் ஒடுக்குமுறையாளர்

களாகவும், சுரண்டலாளர்களாகவும் விளங்கும் நிலப்பிரபுத்துவம் தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியம்ஆகியவை இந்தியப் புரட்சியின் இன்றைய கட்டத்தின் இலக்குகள்.

## இந்தியப் புரட்சியின் பணிகள்

— தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ நிலப்பிரத்துவ சர்வாதிகாரத்தை தூக்கியெறிந்து மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவதன் மூலம் நிலப்பிரபுத்துவக் கொடுமைகளையும் சுரண்டலையும் ஒழித்துக்கட்ட ஜனநாயகப் புரட்சியும், ஏகாதிபத்தியம் மற்றும் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ ஒடுக்கு முறையையும் சுரண்டலையும் ஒழித்துக்கட்ட தேசியப் புரட்சியும் செய்து முடிப்பது ஆகியவை இந்தியப் புரட்சியின் இன்றைய கட்டத்தின் இரு கடமைகளாகும். இம்மாபெரும் கடமைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஏகாதிபத்திய, தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ ஒடுக்குமுறையையும், சுரண்டலையும் ஒழித்துக் கட்டவில்லையானால் நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கியெறிய முடியாது. ஏனெனில் ஏகாதிபத்தியமும் தரகு அதிகர வர்க்க முதலாளித்துவமும் நிலப்பிரபுத்துவத்தின் பிரதான ஊன்றுகோலாகும். நிலப்பிரபுத்துவ கொடுமைகளையும் சுரண்டலையும் ஒழித்துக் கட்டவில்லையானால் ஏகாதிபத்தியம், தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்தைத் தூக்கியெறிய பலம் வாய்ந்த புரட்சிகர மக்கள் தளத்தைக் கட்டமுடியாது; ஏனெனில் ஏகாதிபத்தியம், தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் பிரதான சமூக அடித்தளமாக நிலப்பிரபுத்துவம் விளங்குகிறது; பரந்துபட்ட விவசாயிகள் இந்தியப் புரட்சியின் பிரதான சக்தியாக விளங்குகின்றனர். எனவே ஜனநாயகப் புரட்சி மற்றும் தேசியப் புரட்சி ஆகிய இரு அடிப்படைக் கடமைகள் வேறு வேறானவையும் அதே சமயம் ஒன்றையொன்று சார்ந்தவையுமாகும்.

## இந்தியப் புரட்சியின் உந்துசக்திகள்

— இந்தியப் புரட்சி பற்றிய பல்வேறு வர்க்கங்களின் கண்ணோட்டமும் நிலைப்பாடும் சமுதாயத்தில் அவற்றின் பொருளாதார அந்தஸ்தை வைத்து மட்டுமே முழுமையாகத் தீர்மானிக்கப்படுகின்றன. இவ்வாறுதான் இந்தியப் புரட்சியின் இலக்குகளைப் போலவே மற்றும் கடமைகளைப் போலவே புரட்சியின் உந்துசக்திகளும் இந்தியாவின் சமுதாயப் பொருளாதார அமைப்பைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன

— இந்தியாவில் ஏகாதிபத்தியம் மற்றும் தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவ ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் பிரதான சமுதாய அடிப்படையாக நிலப்பிரபுத்துவ வர்க்கம் விளங்குகிறது. இவை தான் நிலப்பிரபுத்துவ கட்டமைவைக் கொண்டு பரந்துபட்ட விவசாய மக்களை அடக்கி ஒடுக்கி சுரண்டிக் கொழுக்கிறது; இந்தியாவின் அரசியல்,

பொருளாதார, கலாச்சார வளர்ச்சிக்குத் தடையாக அமை கிறது எந்தவகையிலும் முற்போக்கு பாத்திரமாற்றுவதில்லை. எனவே நிலப்பிரபுத்துவ வர்க்கம் இந்தியப் புரட்சியின் உந்து சக்திகள் அல்ல, எதிரிகள் அல்லது இலக்குகளாகும்.

— தரகு அதிகார வர்க்க முதாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்திய நலன்களுக்கு நேரடியாக சேவை செய்யும் வர்க்கமாகவும் ஏகா திபத்தியத்தால் ஊட்டி வளர்க்கப்படும் வர்க்கமாகவும் இராமப் புற நிலப்பிரபுத்துவ சக்திகளோடு எண்ணற்ற வகைகளில் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ள வர்க்கமாகவும் விளங்கு கிறது. எனவே தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கமும் இந் தியப் புரட்சியின் உந்து சக்திகளல்ல, எதிரிகள் அல்லது இலக்குகளாகும்.

— இந்தியப் புரட்சியின் அடிப்படை உந்து சக்திகள் பாட்டாளி வர்க்கம், விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளித்துவ வர்க்கம் ஆகியனவாகும். தேசிய முதலாளிகள் ஒரு குறிப்பிட்ட சமயத் திற்கும் குறிப்பிட்ட அளவும் புரட்சியின் உந்து சக்தியாகவும், ஊசலாடும், சமரச சக்தியாகவும் பங்காற்றுகிறது.

## இந்தியப் புரட்சியின் குணாம்சங்கள்

இந்தியா ஒரு அரைக்காலனிய—அரைநிலப்பிரபுத்துவ சமு தாய அமைப்பை உடையது; இந்தியப் புரட்சியின் பிரதான எதிரி கள் நிலப்பிரபுத்துவம் தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவம் மற் றும் ஏகாதிபத்தியம்; தேசிய மற்றும் ஜனநாயகப்புட்சி மூலம் இப்பிரதான இலக்குகளைத் தூக்கியெறிவது இந்தியப் புரட்சியின் பணிகள்; குறிப்பிட்ட சில சமயங்களில் குறிப்பிட்ட அளவு இந்திய தேசிய முதலாளிகள் இப்பணிகளில் பங்கேற்கின்றனர்; இந்தியப் புரட்சியின் பிரதான தாக்குதல் முனை நிலப்பிர புத்துவம், தரகு அதிகார வர்க்க முதலாளித்துவம் மற்றும் திபத்தியத்திற்கு எதிரானது; இந்தியத் தரகு அதிகார வர்க்க லாளிகள் புரட்சிக்குத் துரோகமிழைத்து அதன் எதிரிகளாக இருப்பினும் இந்தியப்புரட்சியின் தாக்குதல் முனை பொதுவாக முதலாளித்துவத்துக்கும் முதலாளித்துவத் தனியுடை மைக்கும் எதிரானதல்ல; இக்காரணங்களால் இன்றைய கட்டத்தில் இந்தியப் புரட்சியின் குணாம்சம் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியல்ல, முதலாளித்துவ ஜனநாயகத் தன்மையுடையது.

இருப்பினும் இன்றைய இந்தியாவின் முதலாளித்துவ ஜன நாயகப் புரட்சி, தற்போது காலாவதியாகிப்போன பழைய பொது வகைப்பட்டதன்று; ஆனால், புதிய சிறப்பு வகைப்பட்டதாகும். அனைத்துக் காலனிய, அரைக்காலனிய நாடுளின் புரட்சிகளைப் போலவே இரண்டு காரணங்களால் புதிய வகைப்பட்ட புதிய ஜனநாயகப் புரட்சியாகும். ஒன்று, இந்தியப் புரட்சி பழைய முத லாளித்துவ உலகப் புரட்சியின் ஓர் அங்கமல்ல; மாறாக, புதிய உலகப்புரட்சியின் ஓர் அங்கமாகும். மற்றது, இந்தியப் புரட்சி முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமையிலான பழைய வகைப் பட்ட முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியன்று. மாறாக,

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய வகைப்பட்ட புதிய ஜனநாயகப்புரட்சியாகும். முதல் ஏகாதிபத்திய உலகப் போரும், முதல் வெற்றிகரமான சோசலிசப் புரட்சியான மாபெரும் அக்டோபர் புரட்சியும் உலக வரலாற்றின் போக்கையே மாற்றி ஒரு புதிய சகாப்தமான லெனினிச சகாப்தத்தை-ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியுமான சகாப்தத்தை-தோற்றுவித்தன.

"இந்தப் புதிய சகாப்தத்தில்தான், உலகில் ஆறிலொரு பாகத்தில் உலகமுதலாளித்துவம் முற்றிலும் சரிந்து வீழ்ந்து விட்டது; உலகின் மற்ற பாகங்களிலே முதலாளித்துவ அழிவின் அறிகுறிகள் அப்பட்டமாக வெளிப்பட்டது; இந்த சகாப்தத்தில்தான், எஞ்சியுள்ள முதலாளித்துவ நாடுகள், முன்னெப்போதையும் விட காலனி, அரைக்காலனி நாடுகளை அதிகமாகச் சார்ந்து நில்லாமல் தாம் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டது; இந்த சகாப்தத்தில்தான் சோசலிச அரசு உருவாக்கப்பட்டதோடு, எல்லா காலனி, அரைக்காலனி நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆக்கபூர்வமான ஆதரவு அளிக்கத் தயார் என்று தனது விருப்பத்தை சோசலிச அரசு வெளியிட்டது; இந்த சகாப்தத்தில்தான் முதலாளித்துவ நாடுகளில் உள்ள சமூக ஜனநாயகக் கட்சிகளின் சமூக ஏகாதிபத்திய செல்வாக்கிலிருந்து அந்நாடுகளின் பாட்டாளி வர்க்கம் படிப்படியாக விடுபட்டு, காலனி, அரைக்காலனி நாட்டு மக்களின் விடுதலை இயக்கத்திற்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தது. இந்த சகாப்தத்தில் ஏகாதிபத்தியத்திற்கும், அதாவது சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக காலனி, அரைக்காலனி நாடுகளில் நடத்தப்படும் எந்தப்புரட்சியும் இனியும் பழைய உலக முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் வகையைச் சேர்ந்ததாக இருக்க முடியாது; அது புதிய வகையைச் சேர்ந்ததாகவே இருக்கும். இனி, அது பழைய உலக முதலாளித்துவப் புரட்சியின் ஒரு பகுதியாக நீடிக்க முடியாது. அது புதிய உலகப் பாட்டாளி வர்க்கத்தின், சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாகவே இருக்கிறது. இம்மாதிரியான புரட்சிகரமான காலனி, அரைக்காலனி நாடுகளை உலக முதலாளித்துவ எதிர்ப்புரட்சியின் நேச சக்திகளாகக் கருதக் கூடாது; ஆனால் அவற்றை உலக சோசலிஸ்ட் புரட்சி அணியின் நேச சக்திகளாகக் கருதவேண்டும்.

"காலனிய, அரைக்காலனிய நாட்டு மக்கள் நடத்தும் இந்தப் புரட்சியின் முதல் கட்டம், தனது சமூக குணாம்சத்தின்படி அடிப்படையில் இன்னமும் முதலாளித்துவ ஜனநாயகத் தன்மைகளையே கொண்டிருக்கிறது; அப்புரட்சியின் முதல் கட்டத்தின் பருண்மையான திட்டவட்டமான தேவைகள் முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் பாதையிலுள்ள தடைக்கற்களை அகற்றுவதாகவே உள்ளது; இப்படியிருந்த போதிலும், இத்தகைய புரட்சி இனி முதலாளித்துவ வர்க்கத்தால் தலைமை தாங்கப்படுவதும், முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவ சமுதாயத்தை

உருவாக்கும் நோக்கம் கொண்டதுமான பழைய வகையைச் சார்ந்த முதலாளித்துவப் புரட்சியாக இல்லை. மாறாக இது பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் புதிய வகைப்பட்ட புரட்சிகர வர்க்கங்கள் அனைத்தின் கூட்டு சர்வாதிகாரத்தின் கீழ் அரசை அமைப்பதாகும். இவ்வாறாக, இந்தப் புரட்சி சோசலிச வளர்ச்சிக்கான பாதையை விரிவாக்குவதற்கு உண்மையிலேயே சேவை செய்கிறது. இந்தப் புரட்சியின் முன்னேற்றத்தினுடைய வளர்ச்சிப் போக்கில் எதிரிகளின் பக்கமும் நமது நேச அணிகளிலும் ஏற்படுகின்ற சூழ்நிலைகளின் மாறுதல்களால் இன்னும் பல துணைக்கட்டங்கள் ஏற்பட்டாலும் புரட்சியின் அடிப்படை குணாம்சத்தில் எந்த மாற்றமும் இராது.

"இத்தகைய புரட்சி ஏகாதிபத்தியத்தை அதன் வேரிலேயே தாக்குகிறது; இதனால் இந்தப் புரட்சியை ஏகாதிபத்தியம் சகித்துக்கொள்ளாது; இதனால் இந்தப்புரட்சியைக் கடுமையாக எதிர்க்கும் எவ்வாறாயினும் இப்புரட்சி சோசலிசத்தாலும் சோசலிச நாட்டாலும், சர்வதேச சோசலிசப் பாட்டாளி வர்க்கத்தாலும் வரவேற்கப்பட்டு ஆதரிக்கப்படுகிறது.

"எனவே இத்தகைய புரட்சி தவிர்க்கமுடியாதவாறு, உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாகிறது" (மாவோ, தேர்ந்த கட்டுரைகள், பக். 61 – 62)

இந்தியாவின் புதிய ஜனநாயகப் புரட்சி அரசியல் ரீதியில் நிலப்பிரபுத்துவ வர்க்கம், தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கம் மற்றும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிகர வர்க்கங்களின் கூட்டுசர்வாதிகாரத்தை நிறுவுவதாகும்; இந்தியாவை முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தின் கீழான சமுதாயமாக மாற்றுவதற்கு எதிரானதாகும். இந்தியாவின் புதிய ஜனநாயகப் புரட்சி பொருளாதார ரீதியில் அனைத்து தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ ஏகாதிபத்திய பெரும் தொழில் நிறுவனங்களை தேசவுடமையாக்குவது; நிலப்பிரபுக்களது நிலத்தை உழவர்களுக்குப் பங்கீடு செய்வது; அதேசமயம் பொதுவாக தேசிய முதலாளிகளது தனியுடைமையை நீடிப்பது; பணக்கார விவசாயிகளின் பொருளாதாரத்தை ஒழிப்பதில்லை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது. இவ்வாறு ஒருபுறம் முதலாளித்துவத்துக்கான பாதையிலுள்ள தடைளை அகற்றுகிறது; மற்றொருபுறம் சோசலிசத்துக்கான முன்னிபந்தனைகளைத் தோற்றுவிக்கிறது. இந்தியப் புரட்சியின் இந்தக்கட்டம் அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தை ஒழிப்பதற்கும், சோசலிச சமுதாயத்தை நிறுவுவதற்குமான இடைப்பட்ட ஒரு கட்டமாகும். இதுவே புதிய ஜனநாயகப் புரட்சியின் நிகழ்ச்சிப்போக்காகும். இந்த நிகழ்ச்சிப்போக்கின் வழியாகத்தான் இந்திய சமுதாயம் சோசலிசத்தை நோக்கி முன்னேற முடியும்.

இந்தியப் புரட்சி சாராம்சத்தில் விவசாயிகளின் விவசாயப் புரட்சியாகும். இரு காரணங்களால் இந்தியப் புரட்சி சாராம்சத்தில் விவசாயிகளின் விவசாயப் புரட்சியாகிறது. ஒன்று, நிலப்

பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டைத் தீர்த்து நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் ஒழித்துக்கட்டும் ஜனநாயகப் புரட்சி என்கிற முறையில் விவசாயிகளின் விவசாயப் புரட்சியாகும். மற்றது, ஏகாதிபத்தியங்களுக்கும்—நாட்டிற்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டைத் தீர்த்து ஏகாதிபத்திய ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் ஒழித்துக்கட்டும் தேசியப் புரட்சி—சாராம்சத்தில் தேசியப் பிரச்சனை என்பது விவசாயிகளின் பிரச்சனை என்கிற முறையில் விவசாயிகளின் விவசாயப் புரட்சியாகும்.

ஏகாதிபத்தியங்களின் பிரதான சமூக அடிப்படையாக விளங்கும் அரைநிலப்பிரபுத்துவத்தைத் துடைத்தெறிந்து—நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான இன்றைய இடைக்கட்டத்தின் பிரதான முரண்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் மற்றொரு அடிப்படை முரண்பாடான ஏகாதிபத்தியத்துக்கும்—நமது நாட்டுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்க்க வழி வகுப்பது; இவ்விரு பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் புதிய ஜனநாயகப்புரட்சியைச் சாதிப்பதே இன்றைய கட்டத்தில் இந்தியப் புரட்சியின் நோக்கமாகும்.

நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக 'ஒரு கணிசமான அளவு மக்கள் தொகையில் விவசாயிகளைக் கொண்டதான ஒரு நாட்டிலும் ஒரு முதலாளித்துவப் புரட்சி நடக்கக்கூடும். இருப்பினும் அது விவசாயப் புரட்சியாக இல்லாமலிருக்கலாம். அதாவது குறிப்பாக விவசாயிகளை பாதிக்கும் விவசாய உற்பத்தி உறவுகளை புரட்சிகரமாக்காத ஒரு புரட்சியாக புரட்சியைத் தோற்றுவிப்பதில் முழுக்கவும் செயலூக்கமாக ஈடுபடும் ஒரு சிறப்புச் சக்தியாக விவசாயிகளை முன்னே கொண்டு வந்து நிறுத்தாத ஒரு புரட்சியாக அது இருக்கும்' (லெனின், தொகுதி 13, பக் 351) என்று லெனின் அக்டோபர் புரட்சிக்கு முன் எழுதினார்.

ஆனால் அக்டோபர் புரட்சிக்கும் முதல் உலகப்போருக்கும் பின் தோன்றிய லெனினிச சகாப்தத்தில் இது மாதிரியான விவசாயப் புரட்சி கூட சாத்தியமில்லை. எனவேதான் இந்திய புதிய ஜனநாயகப் புரட்சியின் பிரதான உள்ளடக்கம் விவசாயிகளின் விவசாயப் புரட்சியாகும். அதாவது புரட்சியை உருவாக்கும் ஒரு சமூக சக்தியாக விவசாயிகளை முன்னணியில் நிறுத்தும் வகையில் விவசாய உறவுகளைப் புரட்சி மயமாக்கும் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியாகும்.

"ஒவ்வொரு தேசிய இயக்கமும் ஒரு முதலாளித்துவ ஜனநாயக இயக்கமாகத்தான் இருக்கமுடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை; ஏனெனில் பின்தங்கிய நாடுகளில் மக்கள் தொகையின் மிகப்பெரும்பான்மையான மக்கள் விவசாயிகளாவர்; இவர்கள் முதலாளித்துவ உறவுகளையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். பாட்டாளி வர்க்க கட்சிகள்,

இப்படிப்பட்ட பின்தங்கிய நாடுகளில் தோன்றி வளருமே யானால், விவசாய இயக்கத்துடன் தீர்மானமான, குறிப்பான உறவுகளை நிறுவாமல், அதற்கு உரிய தகுதியான ஆதரவைத் தராமல், பொதுவுடமைப் போர்த்தந்திரங்கள் மற்றும் பொதுவுடமைக் கொள்கைகள் ஆகியவற்றைக் கையாள நினைப்பது முற்றிலும் கற்பனையாகவே இருக்கும்.'' (லெனின், தொகுதி 31, பக் ) என்று லெனின் ஒவ்வொரு தேசிய இயக்கமும் முதலாளித்துவ ஜனநாயக இயக்கமாக மட்டுமே இருக்கமுடியும் என்றும் பாட்டாளி வர்க்கம் விவசாயிகளின் இயக்கத்தோடு இணையவேண்டும் என்றும் விளக்கினார்.

''தேசிய (இன) பிரச்சனையை அனேகமாக விவசாயிகளின் பிரச்சனையே என்று கூறுவதற்கு செமிச் என்பார் துணிவு பெறவில்லை (விவசாயிகளின் பிரச்சனை என்று குறிப்பிடுகிறேனே ஒழிய, விவசாயப் பிரச்சனை என்று குறிப்பிடவில்லை. ஏனெனில் இவை இரண்டும் ஒன்றல்ல) தேசிய (இனப்) பிரச்சனையை விவசாயிகளின் பிரச்சனைக்கு ஈடாக்கி இவை இரண்டும் ஒன்றே என்று கற்பிக்கக் கூடாது என்பது உண்மையே. ஏனெனில், தேசிய (இனப்) பிரச்சனையில் விவசாயிகளின் பிரச்சனைகள் மாத்திரமின்றி தேசிய கலாச்சாரம், தேசிய இனத்தின் ஆதிபத்திய உரிமை முதலிய பிரச்சனைகளும் அடங்கி உள்ளன. ஆயினும் விவசாயிகளின் பிரச்சனைதான் தேசிய (இனப்) பிரச்சனையின் அடிப்படையாகவும் சாராம்சமாகவும் உள்ளது என்பதைப் பற்றி சந்தேகமில்லை. இதனால்தான் தேசிய இயக்கத்தில் அணிவகுத்துள்ள பிரதான படையாக விவசாயிகள் விளங்குகின்றனர்; விவசாயிகளால் ஆன இந்தப் படையில்லாமல் சக்தி வாய்ந்த தேசிய இயக்கம் உருவானதில்லை, உருவாகவும் முடியாது. தேசிய (இனப்) பிரச்சனை அனேகமாக விவசாயிகள் பிரச்சனை என்று சொல்வதற்கு இதுதான் அர்த்தம்.'' (ஸ்டாலின், தொகுதி 7, பக். 71-72)

தேசிய (இனப்) பிரச்சனையின் சாராம்சம் விவசாயிகளின் பிரச்சனை என்பதை ஏற்கத் தயங்குவதும் ''இவ்வாறு தேசிய இயக்கத்தின் ஆழ்ந்த வெகுஜனத் தன்மையையும் புரட்சிகரமான தன்மையையும் புரிந்து கொள்ளாதிருப்பதும் தேசிய இயக்கத்தில் அடங்கியுள்ள சக்தியைக் குறைத்து மதிப்பிடுவதும் பெரும் ஆபத்தாகும்'' என்று ஸ்டாலின் எச்சரிக்கிறார்.

— எனவேதான் இந்தியாவின் புதிய ஜனநாயகப்புரட்சி சாராம்சத்திலும், அடிப்படையிலும் விவசாயிகளின் விவசாயப் புரட்சியாகும்.

## இந்தியப் புரட்சியின் கட்டமும் தொலைநோக்கும்

இந்தியப் புரட்சியின் எதிர்காலமும் தொலைநோக்கும் இறுதியாக சோசலிசமும் கம்யூனிசமும் ஆகும்; முதலாளித்துவம் அல்ல. இதில் இம்மியளவும் சந்தேகத்துக்கு இடமில்லை.

மாறாக, புதிய சிறப்பு வகைப்பட்ட ஜனநாயகப்புரட்சி — ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியாகும். தற்காலிகமாக உலகப் பாட்டாளி வர்க்க சோசலிச இயக்கத்தில் பிளவு ஏற்பட்டு தேக்க நிலையை அடைந்திருந்தாலும், மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப் பின் — ஏகாதிபத்தியங்களின் இரு உலக யுத்தங்களைத் தொடர்ந்து அவற்றின் வீழ்ச்சி துரிதப்பட்டுள்ள நிலையில் — உலகப் பாட்டாளி வர்க்க சோசலிச இயக்கம் தொடர்ந்து எழுச்சியுற்றுக் கொண்டிருக்கும். ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் என்ற லெனினிச சகாப்தத்தில் இந்தியாவின் புதிய ஜனநாயகப் புரட்சி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இந்தியப் புரட்சியின் எதிர்காலமும், தொலைநோக்கும் சோசலிசம் மற்றும் கம்யூனிசமாக இருப்பினும், புரட்சியின் வெற்றிக்குப் பின் இந்திய சமுதாயத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்குத் தடைகளாக இருப்பவற்றைத் துடைத்தெறிய ஒரு குறிப்பிட்ட அளவு முதலாளித்துவப் பொருளாதாரம் வளர்க்கப்படும். மேலும் இன்றைய கட்டத்தில் இந்தியப் புரட்சியின் நோக்கம் தற்போதைய அரைக்காலனிய —அரைநிலப்பிரபுத்துவ சமுதாயத்தைத் தூக்கியெறிந்து, புதிய ஜனநாயகப் புரட்சியை செய்து முடிப்பதாகும். பொருளாதார ரீதியில் பின்தங்கிய இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட அளவு முதலாளித்துவ வளர்ச்சி ஜனநாயகப் புரட்சியினுடைய வெற்றியின் தவிர்க்க முடியாத விளைவாகும்.

ஆனால் பிரச்சனையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது முதலாளித்துவக் காரணிகளைப் போலவே சோசலிசக் காரணிகளும் வளர்க்கப்படும் என்பது தெளிவு. நாட்டிலுள்ள அரசியல் சக்திகளிலேயே பாட்டாளி வர்க்கமும் அதன் முன்னணிப் படையான கட்சியும் புரட்சியின் வளர்ச்சிப் போக்கில் ஒப்பீட்டு வகையில் கூடுதலான முக்கியத்துவம் பெறுகின்றன; விவசாயிகளும், படிப்பாளிகளும், நகர்ப்புற குட்டி முதலாளிகளும் பாட்டாளி வர்க்கத்தின் — அதன் கட்சியின் — தலைமையை ஏற்றுக்கொள்ளுவர்; பொருளாதாரத்தின் அரசுத்துறை புதிய ஜனநாயக சர்வாதிகார அரசுக்கும், கூட்டுறவுத்துறை உழைக்கும் மக்களுக்கும் உடைமையாகும். இவையனைத்தும் சோசலிசக் காரணிகளாகும். இத்துடன் மிகவும் சாதகமான சர்வதேச சூழ்நிலையும் சேர்ந்து இந்தியாவின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி இறுதியில் முதலாளித்துவ எதிர்காலத்தை தவிர்க்கவும் சோசலிச கம்யூனிச எதிர்காலத் தொலைநோக்கை அடையவும் உறுதி செய்கின்றன.

எனவே ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது பாட்டாளி வர்க்கத்தாலும் அதன் கட்சியாலும் தலைமை தாங்கப்படும் இந்தியப் புரட்சி, ஜனநாயகம் மற்றும் சோசலிசம் என்ற இரு கட்டங்களினூடே நிறைவேறும். இவ்விரு கட்டங்களும் சாராம்சத்தில் வேறு வேறான வளர்ச்சிப் போக்காகும். இரண்டாவது வளர்ச்சிப் போக்கு முதலாவதை நிறைவு செய்த பின்னர் மட்டுமே முன்னெடுத்துச் செல்ல முடியும். ஜனநாயகப் புரட்சியா

னது சோசலிசப் புரட்சியின் மிக முக்கியமான தயாரிப்பாகும். சோசலிசப் புரட்சியானது ஜனநாயகப் புரட்சியின் தவிர்க்க முடியாத தொடர்ச்சியாகும். பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் இறுதி லட்சியமும் சோசலிசம் மற்றும் கம்யூனிச சமுதாயங்களை அடைவதாகும். ஜனநாயக மற்றும் சோசலிச புரட்சிகளுக்கு இடையிலான வேற்றுமைகளையும் உள் உறவுகளையும் தெட்டத் தெளிவாக புரிந்து கொள்ளும் போது மட்டுமே புரட்சிகர இயக்கத்தை சரியான திசை வழியில் வழி நடத்திச் செல்ல முடியும்.

இதுவரை விவரிக்கப்பட்ட மார்க்சிய- லெனினிய- மாவோ சிந்தனை அடிப்படையிலான {கோட்பாட்டு முடிவுகள் மற்றும் திட்டத்தின் அடிப்படையிலும், வழிகாட்டுதலிலும் வகுக்கப்படும் பொழுது மட்டுமே மிகவும் சரியான விஞ்ஞானபூர்வமான யுத்த தந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களாலும், அவற்றுக்கான நியதிகள் மற்றும் வழிகாட்டும் நெறி முறைகளாலும் இந்தியப் புரட்சி வழிநடத்தப்படுவதாகிறது. எனவே கோட்பாடு, திட்டம், புரட்சியின் கட்டம் ஆகியவற்றிற்கும் யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் ஆகியவற்றுக்குமிடையிலான உறவுகளை வரையறுப்பதற்கான மார்க்சிய-லெனினிய அணுகு முறைகளைப் பார்ப்போம்.

"கட்சியின் யுத்ததந்திரம் என்பது நிரந்தரமான ஒன்றல்ல; எப்போதைக்கும் நிரந்தரமாக இருக்கும் ஒன்றல்ல. வரலாற்றுத் திருப்பங்களுக்கு ஏற்ப, வரலாற்று மாற்றங்களுக்கு ஏற்ப யுத்ததந்திரம் மாறுகிறது. வரலாற்றில் ஏற்படும் ஒவ்வொரு தனிப்பட்ட திருப்பத்திலும் அந்த திருப்பத்திற்கும் ஏற்றதான ஒரு யுத்ததந்திர திட்டம் தீட்டப்படுவதிலும், அந்த திருப்பத்திற்கும் அடுத்த திருப்பத்திற்கும் இடைப்பட்ட காலம் முழுவதும் அது நடைமுறையிலிருக்கிறது என்பதிலும் யுத்ததந்திரத்தால் ஏற்படும் இந்த மாற்றங்கள் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. புரட்சிகர சக்திகளினால் பிரதான தாக்குதலுக்கான திசையையும், அதற்கேற்றதாக சமுதாய முன்னணியில் பரந்துபட்ட மக்களை அணிவகுத்து நிறுத்துவதையும் யுத்ததந்திர திட்டம் வரையறுக்கிறது. இயல்பாகவே, தனக்கென குறிப்பிட்ட அம்சங்களைக் கொண்டுள்ள வரலாற்றின் ஒரு காலத்திற்குப் பொருத்தமான யுத்ததந்திர திட்டமானது முற்றிலும் வேறுபட்ட குறிப்பான அம்சங்களைக் கொண்ட மற்றொரு வரலாற்றுக் காலத்திற்குப் பொருத்தமாக இராது. வரலாற்றில் ஏற்படும் ஒவ்வொரு திருப்பத்திற்கும் ஏற்ப அதற்கு அத்தியாவசியமான யுத்ததந்திர திட்டம் அந்த திருப்பத்தின் கடமைகளை நிறைவேற்ற வகுக்கப்படுகின்றது." (ஸ்டாலின், தொகுதி 5, பக் 176-77)

மேலும் "புரட்சியின் பிரதான சக்திகளையும் அதன் ரிசர்வுகளையும் பற்றி யுத்ததந்திரம் கையாளுகிறது.

புரட்சி ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்கு மாறிச்செல்லும்போது யுத்ததந்திரம் மாறுகிறது. ஆனால் குறிப்பிட்ட ஒருகட்டம் முழுவதும் யுத்ததந்திரம் அடிப்படையில் மாறாமல் இருக்கின்றது.'' (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சனைகள், பக்-82)

வரலாற்றுத் திருப்பங்களில் ஏற்படும் புறநிலை மாற்றங்களை ஆய்வு செய்து வந்தடையும் கோட்பாட்டு முடிவுகளையும் திட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு அதை அடைவதற்காக யுத்ததந்திரம் வகுக்கப்படுகிறது. யுத்ததந்திரமானது புரட்சியின் வெற்றியை அதிகபட்சம் பாட்டாளி வர்க்கத்திற்கு சாதகமான திசைவழியில் எடுத்துச் செல்வதற்காக வகுக்கப்படும் அகநிலைக் கூறாகும். எனவே, யுத்ததந்திரமானது, ஒரு காலகட்டம் முழுவதற்குமான புரட்சியின் நலன்களைத் தழுவக்கூடிய நேக்கத்தை அடைவதற்கு இயக்கத்தை வழிநடத்துகிறது. இந்தக் காலகட்டம் முழுவதும் புரட்சிகர வர்க்கங்கள் தொடுக்கும் போரில் வெல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே, அக்காலகட்டம் முழுவதும் அடிப்படையில் மாறாமல் அப்படியே இருக்கிறது. வரலாற்றுத் திருப்பங்கள், திடீர் மாறுதல்களுக்குத் தக்கவாறு, அதாவது, பிரதான எதிரிகள், பிரதான அடியின் திசைவழி, நேரடி, மறைமுக ரிசர்வு சக்திகள் இவற்றில் மாறுதல் அடையும் அளவிற்கு வரலாற்று நிலைமைகள் மாறினால் யுத்ததந்திரம் மாறுகிறது. அடிப்படை முரண்பாடுகள் மாறும்பொழுது அல்லது தீரும்பொழுது அவற்றால் நிர்ணயிக்கப்படுகின்ற புரட்சியின் இலக்குகள் மாறுகின்றன; அதற்கேற்ப திட்டம் மாறுகிறது. எனவே, யுத்ததந்திரம் மாறுகிறது. ஒரு குறிபிட்ட புரட்சிக் கட்டம் மாறும்பொழுது யுத்ததந்திரம் மாறிவிடுகிறது.

எடுத்துக்காட்டாக, நிலப்பிரபுத்துவ-எதேச்சதிகார கட்டமைவைக் கொண்ட ஜாரிச ருஷ்யாவில் இரு அடிப்படை முரண்பாடுகள் இருந்தன. இந்த இரு அடிப்படை முரண்பாடுகளும் அடுத்தடுத்த இரு வரலாற்றுக் கட்டங்களுக்கான பிரதான முரண்பாடுகள்; இரு அடிப்படை முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கான திட்டம் சோசலிசத்தை அடைவதற்கான அதிகபட்ச பகுதியையும், ஜனநாயகத்தை அடைவதற்கான குறைந்தபட்ச பகுதியையும் கொண்டிருந்தது. ஜனநாயகப் புரட்சி திட்டத்தில் ஒரு அடிப்படை முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான யுத்ததந்திரம் (குறைந்தபட்சப் பகுதிக்கானது ) வகுக்கப்பட்டது. ஏனென்றால், வரலாற்றியல் பொருள்முதல்வாத விதியின்படி சமுதாயம் அடுத்தகட்டமாக ஜனநாயக கட்டத்தையே அடையமுடியும். இதனாலும் இன்னொரு அடிப்படை முரண்பாட்டைத் தீர்ப்பது அடுத்த கட்டத்திற்கு, அதாவது சோசலிச கட்டத்திற்கு உரித்தானதாலும் ஒரு அடிப்படை முரண்பாட்டைத் தீர்மானிக்கும் (இதுவே பிரதான முரண்பாடகவும் இருந்தது) திட்டமும் அதற்கேற்ற யுத்ததந்திரமும் வகுக்கப்பட்டன.

அரைக்காலனிய-அரைநிலப்பிரபுத்துவ சீன சமுதாயப் படிவத்திலும் இரு அடிப்படை முரண்பாடுகள் இருந்தன. இங்கே இந்த இரு அடிப்படை முரண்பாடுகளும் ஒரே வரலாற்றுக் கட்டத்திற்கானவைகளாகும். இந்த இரு அடிப்படை முரண்பாடுகளுமே சமுதாய வளர்ச்சி அடுத்த கட்டத்திற்குச் செல்ல தடைக்கற்களாக இருந்தது (ருஷியாவில் அடுத்த கட்டத்திற்குச் செல்ல ஒரு அடிப்படை முரண்பாடே தடையாக இருந்தது). எனவே, இந்த இரு அடிப்படை முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டது (குறைந்தபட்ச திட்டம்). இதை அடைவதற்கான யுத்ததந்திரம் வகுக்கப் பட்டது. இங்கேயும் ஒரு கட்டம் முழுவதற்குமான யுத்ததந் திரமே முன்வைக்கப்பட்டது.

ஒரு காலனிய நாட்டை எடுத்துக் கொள்வோம். இங்கேயும் சமுதாயம் தனது அடுத்த வரலாற்றுக் கட்டத்திற்கு [ஜனநாயக கட்டத்திற்கு] செல்வதற்கு தடைக் கற்களாக ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு என்ற இரு அடிப்படை முரண்பாடுகள் இருக்கும். இந்த இரு அடிப்படை முரண்பாடுகளையும் தீர்த்துதான் சமுதாயம் தனது அடுத்த கட்டத்திற்குச் செல்ல முடியும். அதற்கான திட்டமும் வகுக்கப்படுகிறது. இதை அடைவதற்கான யுத்ததந்திரம் வகுக்கப் படுகிறது. பிரதான முரண்பாட்டால் தீர்மானிக்கப்படுகிற சாராம்சமே ஒரு குறிப்பிட்ட இடைக் கட்டத்தில் புரட்சியின் சாராம்சமாக இருக்கின்றது. காலனிய நாட்டில் புரட்சியின் சாராம்சம் இந்த இடைக் கட்டத்தில் தேசிய விடுதலைப் புரட்சியாக இருக்கின்றது. எனவே, யுத்ததந்திரம் இந்த சாராம்சத்தின் அடிப்படையில் ஏகாதிபத்தியத்தை எதிரியாகக் கொண்டு, இலக்காகக் கொண்டு வகுக்கப்படுகின்றது.

இரு அடிப்படை முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கான திட்டம் அதிகபட்சமானதாகவும், ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதை சாராம்சமாகக் கொண்ட தேசிய விடுதலைப் புரட்சி அந்த திட்டத்தின் குறைந்தபட்சப் பகுதியாகவும் இருக்கின்றது. ஏகாதிபத்தியம் காலனிய சமுதாயத்தின் வளர்ச்சியையே மறித்துக் கொண்டு நிற்கிறது. எனவே, அதைத் தூக்கியெறிய வேண்டியது முதல் பணியாக உள்ளது. இந்த இடைக் கட்டத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு இரண்டாம் பட்சமானதாக இருக்கின்றது. ஏகாதிபத்தியத்தை மட்டும் [நிலப்பிரபுத்துவத்தை தூக்கியெறியாமலே] ஒரு காலனிய நாட்டில் தூக்கியெறிய முடியுமென [இந்தோனேசியா, அல்ஜீரியா மற்றும் பிற நாடுகளது] வரலாறு காட்டியிருக்கின்றது. எனவே தான் திட்டம் அடிப்படை முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக வைக்கப் படும் பொழுதே யுத்ததந்திரமானது இந்த அதிகபட்ச திட்டத்திற்கு வைக்கப்படாமல், ஏகாதிபத்தியத்தை மட்டும் தூக்கியெறியும் தேசிய விடுதலைப் புரட்சிக்கு 'மட்டும் வகுக்கப்படுகின்றது. ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிந்து ஏகாதிபத்திய

எதிர்ப்புச் சக்திகளைக் கொண்ட ஒரு அரசாங்கம் உருவாகிறது என்று வைத்துக் கொள்வோம்; அப்போது ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான அடிப்படை முரண்பாடு தீர்ந்து விடுகிறது. புரட்சியும் தனது அதிகபட்ச திட்டத்தை நிறைவேற்றும் இடைக்கட்டத்தில் நுழைகிறது. நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாகிறது. விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சி இடைக்கட்டத்தினுள் நுழைகிறது. அதற்குத் தகுந்தாற் போல் புதிய யுத்ததந்திரம் வகுக்கப்பட வேண்டும்.

ஒரு அரைக் காலனிய — அரை நிலப்பிரபுத்துவ நாட்டில் மேற்கண்ட இரு அடிப்டை முரண்பாடுகளே நிலவுகின்றன. நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாக இருக்கின்றது. விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்டு, இரு அடிப்படை முரண்பாடுகளையும் தீர்க்க திட்டம் வகுக்கப்படுகிறது; அத்திட்டத்தினை நிறைவேற்ற ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் என்ற இரண்டையும் தூக்கியெறிய யுத்ததந்திரம் வகுக்கப் படுகின்றது. யுத்ததந்திரத்தின் இலக்குகளாக ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் இரண்டும் இருக்கின்றன. [காலனிய நாட்டில் முதல் இடைக்கட்டத்தில் ஏகாதிபத்தியம் மட்டும் யுத்ததந்திரத்தின் இலக்காக இருந்தது.] இங்கே நிலப்பிரபுத்துவத்தை மட்டும் தனியே தூக்கியெறிய முடியாது. ஏனெனில் ஏகாதிபத்திய சுரண்டலின் பிரதான சமூக அடிப்படையாக நிலப்பிரபுத்துவம் இருக்கிறது. எனவே, நிலப்பிரபுத்துவத்தை தூக்கியெறிவது ஏகாதிபத்தியத்தையும் சேர்த்து தூக்கியெறிவதோடு இரண்டறக் கலந்துள்ளது; ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது. இதன் பொருள்: அரைக்காலனிய—அரைநிலப்பிரபுத்துவ தன்மையிலிருந்து முதலாளித்துவத்தின் சுதந்திரமான வளர்ச்சிக்கு வழிவகை செய்யும் இந்தப் புரட்சிக் கட்டத்தில் ஏகாதிபத்தியம் நேரடியாக ஆக்கிரமிப்பு செய்யாமலிருந்தால் புரட்சியின் கட்டம் முழுவதும் விவசாயப் புரட்சி சாராம்சமாகவே இருந்து நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் இரண்டுமே தூக்கியெறியப்பட்டு புதிய ஜனநாயகப் புரட்சி முழுமையடையும். ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு நடந்து பிரதான முரண்பாடு ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலானதாக மாறலாம். அப்போதும் கூட யுத்ததந்திரம் மாறாது. ஏனெனில் யுத்ததந்திரம் வகுக்கும் போதே இந்த நிலைமைகளால் எழும் சாத்தியங்களைக் கொண்டும் அதற்கேற்றவாறு யுத்ததந்திரம் ஆரம்பத்திலேயே வகுக்கப்பட்டுள்ளது. பிரதான முரண்பாடு மாறினாலும் அடிப்படையில், யுத்ததந்திரத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்து விடாது. இதனால் தான் ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கியெறிந்து புதிய ஜனநாயகத்தை நிறுவுவதை குறைந்த பட்ச திட்டமாகக் கொள்கிறோம். ஆனால் ஒரு காலனிய நாட்டில் ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிகிற முதல் இடைக்கட்டத்தில் அதனோடு சேர்ந்து நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கியெறிவதைக் குறிக்கோளாக வைக்க முடியாது. அப்படி வைப்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளில் பிளவை ஏற்படுத்தி ஏகாதிபத்தியத்தை

தூக்கியெறிவதற்கே கேடாக முடியும். எனவே, குறிப்பிட்ட ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கின்ற தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களின் ஒரு பகுதியோடு ஐக்கிய முன்னணி அமைத்து ஏகாதிபத்தியத்தை மட்டும் தூக்கியெறியக்கூடிய இடைக்கட்டத்தைத் தீர்மானித்து யுத்ததந்திரம் வகுத்து செயல்பட வேண்டியிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்திலேயே புரட்சியின் அடிப்படை முரண்பாடுகள், இலக்குகள், தலைமைச்சக்தி, பிரதானசக்தி, பிரதான சமரச சக்தி, புரட்சியின் தன்மை ஆகியவை மாறுவதில்லை. அதே போல சக்திகளை ஒதுக்கும் திட்டம், சமரச சக்திகள் ஆகியவைகளில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் அடிப்படையில் ஒரு கட்டம் முழுவதும் அவை ஒன்றாக இருக்கின்றன. எனவே அரசியல் யுத்ததந்திரமானது ஒரு கட்டம் முழுவதும் மாறாமல் இருக்கின்றது.

"புரட்சியின் பிரதான சக்திகளையும் சேமிப்பு (ரிசர்வு) சக்திகளையும் கையாளுவதே யுத்ததந்திரம். புரட்சி ஒரு குறிப்பிட்ட கட்டத்தை தாண்டிச் செல்லும் வரையில் இது மாறுவதே இல்லை. அந்த குறிப்பிட்ட கட்டம் பூர்த்தியாகும் வரையில் மாறாமல் இருக்கிறது. புதிய கட்டம் ஆரம்பமானவுடன் மாறுகிறது, [ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சனைகள் பக்-82]

மாறாக, ராணுவ யுத்ததந்திரத்தின் இலக்கு, பிரதான தாக்குதலின் திசைவழி, ராணுவ சக்திகளின் சேர்க்கை ஆகியவை ஒரு வரலாற்றுக் கட்டத்திற்குள்ளேயே பலதடவை மாறிவிடுகின்றன; அதாவது யுத்த நிலைமைகள் முற்றாக மாறிவிடுகின்றன; எனவே ராணுவ யுத்ததந்திரமும் அதற்கேற்ப மாறுகிறது. ஒரு கட்டத்திற்குள்ளேயே ராணுவ யுத்ததந்திரம் தற்காப்பு அல்லது தாக்குதலில் இருக்கலாம். அடுத்து அரசியல் ரீதியில் நடத்துகின்ற யுத்தம் நாடு தழுவிய அரசியல் அரங்கிலேயே நடக்கின்றது. ஆனால் ராணுவ ரீதியிலான யுத்தம் நாடு தழுவிய ரீதியில் எல்லா சமயத்திலும் நடக்க வேண்டிய அவசியமில்லை. எனவே அரசியல் யுத்ததந்திரமானது எப்பொழுதும் நாடு தழுவியதாக இருக்கின்றது. மாறாக ராணுவ யுத்ததந்திரம் அப்படி இருக்க வேண்டியதில்லை.

"யுத்ததந்திர [ராணுவ—மா.அ க.] விஞ்ஞானத்தின் பணி ஒரு முழுமையான யுத்த நிலைமையை ஆட்சி செய்வதான யுத்தத்தை வழி நடத்தும் விதிகளை ஆராய்வதாகும்... யுத்தமுள்ள பொழுதெல்லாம் முழுமையான யுத்தநிலைமை ஒன்றுள்ளது. ஒரு முழுமையான யுத்த நிலைமை உலகம் முழுவதையும் அடக்கக்கூடும்; ஒரு நாடு முழுவதையும் அடக்கக் கூடும்; அல்லது ஒரு சுதந்திர கொரில்லாப் பிராந்தியத்தையோ ஒரு சுதந்திரமான பெரிய போர் நடவடிக்கை முறையையோ அடக்கவும்கூடும். தன் பல்வேறு அம்சங்களினதும் கட்டங்களினதும் கூட்டு மொத்தமான கணிப்

பிடுதலைப் பெறும் எந்த யுத்தநிலைமையும் ஒரு முழுமை யான யுத்தநிலைமை ஆகிறது.'' [மாவோ, தேர்ந்தெடுக் கப்பட்ட ராணுவப் படைப்புகள், பக்கம் 150] எனவே ஒரு அரசியல் யுத்ததந்திரத்துக்குள்ளேயே ஒன்றுக்கு மேற்பட்ட ராணுவ யுத்ததந்திரங்கள் இருக்கும்.

அரசியலில் நாம் எப்பொழுதும் யுத்ததந்திர ரீதியில் தாக்குதலிலேயே இருப்போம். ஏனென்றால் வரலாற்று பூர்வ மாக சமுதாயம் தனது அடுத்தக் கட்டத்துக்குச் செல்வதைத் தடுக்கின்ற அரசியலை எதிர்த்து, வரலாற்றுச் சக்கரத்தை முன் னெடுத்துச் செல்கின்ற அரசியலை நிலைநாட்டப் போராடிக் கொண்டிருக்கிறோம்; எதிரியின் அரசியல் வரலாற்று ரீதியில் பிற்போக்கானது; பாட்டாளி வர்க்க அரசியல் முற்போக்கானது; அவனது சித்தாந்தம் காலம் கடந்தது; நமது சித்தாந்தம் நிகழ்கால எதிர்கால வாழ்க்கைக்குரியது. எதிரி அரசியல் ரீதியில் நம்மைவிட பலம் வாய்ந்தவனாக இருந்தா லும் சரி, பலவீனமானவனாக இருந்தாலும் சரி, நாம் எப் பொழுதும் அரசியல் யுத்ததந்திர ரீதியில் தாக்குதலிலேயே இருப்போம். ஆனால் ராணுவ யுத்ததந்திர ரீதியில் யுத்த நிலைமைகளைப் பொருத்து இருவரும் மாறிமாறி தற்காப்பு அல்லது தாக்குதலில் இருப்போம். ஆக நமது அரசியல் யுத்ததந் திரம் எப்போதும் தாக்குதலிலேயே இருக்கும்; ஆனால் நமது ராணுவ யுத்ததந்திரம் ஒரு சமயம் தற்காப்பாக இருக்கும்; இன்னொரு சமயம் தாக்குதலாக இருக்கும்.

மார்க்சியக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, திட்டத்தால் வழிகாட்டப்பட்டு, திட்டத்தில் முன்வைக்கப்பட் டுள்ள குறிக்கோளை அடைவதற்காக வகுக்கப்பட்ட யுத்ததந் திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் நான்கு நியதிகளைக் கொண் டவை. அவை:

1. அரைக்காலனிய — அரைநிலப்பிரபுத்துவ நாடான நமது நாட்டிலும் பாட்டாளி வர்க்கம் மட்டுமே மனித இனத்தை முற்றிலும் விடுவிப்பதில் அக்கறை கொண்டுள்ளது. ஆனால் இங்கே உடனடியாக முதலாளித்துவத்தை தூக்கி யெறியும் கடமை இல்லை; முதற்பட்சமாக நிலப்பிரபுத்துவத்தை யும் ஏகாதிபத்தியத்தையும் தூக்கியெறிய வேண்டியுள்ளது. இவைகளைத் தூக்கியெறியக்கூடிய போராட்டத்தில் அனைத்து ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்களின் தலைவனாக அது விளங்கக்கூடிய வகையில் அதனுடைய லட்சியத்திற்கான அமைப்பு விளங்குகிறது. அரைக்காலனிய — அரை நிலப்பிரபுத் துவ இந்தியாவில் எல்லாப் பணிகளும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் புதிய ஜனநாயக வர்க்கங்களின் சர்வாதிகாரத்தை நிறுவுவதை நோக்கி இயக்கப்பட வேண்டும்.

2. எந்தவொரு நாட்டு பொதுவுடைமைக் கட்சியின் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களும், ''அவர்களுடைய சொந்த'' நாடு, ''அவர்களுடைய சொந்த'' தாய் நாடு, ''அவர்களுடைய சொந்த'' பாட்டாளி வர்க்க நலன்களை

மட்டும் உள்ளடக்கியதாகக் கொண்டு வரையப்பட்டால் அது சரியாக இருக்கமுடியாது. மாறாக தங்களுடைய நாட்டு நிலைமைகளையும் நலன்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும் போதே சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்காகவும், இதர நாடுகளில் நடக்கும் புரட்சியின் நலன்களுக்காகவும் அவைகள் இருந்தால் மட்டுமே எந்த ஒரு நாட்டின் பொதுவுடைமைக் கட்சியின் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களும் சரியானவையாக இருக்கமுடியும். மிகவும் முக்கியமாக அதாவது பொதுவுடைமைவாதிகள் சாராம்சத்தில், உணர்வில் சர்வதேசியவாதிகளாக இருந்தால் ''எல்லா நாடுகளிலும் புரட்சியின் வளர்ச்சிக்காக, அதற்கு ஆதரவாக, அதனைப்பற்றிய விழிப்புணர்வைக் கொண்டுவருவதற்காக ஒரு [தங்களது சொந்த] நாட்டில் எவ்வளவு அதிகபட்சம் இயலுமோ'' அவற்றைச் செய்யும்போது மட்டுமே யுத்ததந்திரமும் போர்த்தந்திரங்களும் சரியானவையாக இருக்கமுடியும்.

3. யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களை மாற்றும்போது, புதிய யுத்ததந்திர - போர்த்தந்திரக் கொள்கைகளை வகுக்கும்போது எல்லா விதமான கண்மூடித்தனமான வரட்டுக் கோட்பாடு வாதங்களையும் (இடது, வலது) முறியடிப்பதை தொடக்க வேலையாக ஏற்றுக்கொள்ளுதல், சிந்தனையிலேயே இருந்துவரும் முறையையும் புத்தகங்களை மேற்கோள் காட்டி வரலாற்று ஒப்பீடுகளையும் போலியான திட்டங்களையும் உயிரற்ற சூத்திரங்களையும் வகுக்கும் முறையையும் முறியடிப்பதைக் கையாளுதல் என்ற மார்க்சியத்தின் நிலைப்பாட்டில் நிற்பது அவசியம்; மாறாக ''அதற்குத் திருத்தங்கள் வைப்பது'' கூடாது என்பதையும் ''உலகை மாற்றுவது'' என்பது அவசியம் மாறாக ''வெறுமனே அதை வியாக்கியானம் செய்வது'' அல்ல என்பதையும், பாட்டாளி வர்க்கத்திற்குத் தலைமை தாங்கி வழிகாட்டி உணர்வுபூர்வமற்ற (புறநிலை—மா.அ.க.) நிகழ்ச்சிப்போக்கின் உணர்வுபூர்வமான வெளிக்காட்டுதலாக விளங்குவது அவசியம் மாறாக ''பாட்டாளி வர்க்கத்தின் பின்னால் தலையைச் சொறிந்துகொண்டு'' நிகழ்ச்சிகளின் வாலைப் பிடித்துக்கொண்டு இழுபட்டு வருவதல்ல என்பதையும் அறிந்து கொள்ளுதல்.'' (ஸ்டாலின், தொகுதி 5, பக் 82)

4) அ) ஒரு நாட்டின் தொழிலாளர் வர்க்க இயக்கத்துக்கான வழிகாட்டுதல்களை வகுக்கும்போது பொதுவுடைமைக் கட்சியானது அந்நாட்டின் தேசிய சிறப்பு அம்சங்களையும் தேசிய பிரத்தியேக அம்சங்களையும் தவறாமல் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆ) ஒவ்வொரு நாட்டினுடைய பொதுவுடைமைக் கட்சியும் மக்கள் செல்வாக்குடைய கூட்டணியை-தற்காலிகமான ஊசலாடக்கூடிய, உறுதியற்ற, நம்பத்தகாத கூட்டாளியாக இருந்தாலும்-பெறுவதற்கான மிகச்சிறிய வாய்ப்பையும் தவற விடக்கூடாது.

இ) பாந்துபட்ட மக்களுக்கு அரசியல் கல்வி அளிக்கும் விஷயத்தில் பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சி மட்டும் போதாது. மக்களுக்கு என அரசியல் அனுபவமும் தேவைபடுகிறது என்ற உண்மையைக் கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டும். [ஸ்டாலின், எதிர்த்தரப்புபற்றி பக்-735]

அரசியல் மற்றும் ராணுவ யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் யாவும் மேற்கண்ட நியதிகளிலும் வழிகாட்டுதல்களிலும் நின்று வகுக்கப்படும்பொழுது மட்டுமே மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையில் நின்று ஒழுகுவதாகும்.

சர்வதேசப் புரட்சிகர பாட்டாளி வர்க்கம் இன்றைய யதார்த்த உலகின் வர்க்கப் போராட்ட நிலைமைகளையும் அரசியல் சக்திகளின் சேர்க்கையையும் விஞ்ஞானபூர்வமாகவும் பருண்மையாகவும் கணித்து அதனடிப்படையில் வகுக்கப்பட்ட மூன்றுலக கோட்பாடு, யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரத்தின் ஒளியில் தனது தேசிய, சர்வதேசியக் கடமைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் .இதுவே உலகப்புரட்சியின் பிரிக்க முடியாத அங்கமும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான நமது நாட்டின் புரட்சிக்கும் அதைத் தலைமையேற்று நடத்தும் பாட்டாளி வர்க்கத்துக்கும் பொருந்தும்.

தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களை ஆளும் வர்க்கமாகக் கொண்ட நமது நாட்டைச் சுரண்டி அடக்கி ஒடுக்கும் அனைத்து ஏகாதிபத்தியங்களுக்குள்ளும் அமெரிக்கா, ருஷியா என்ற இரு மேல்நிலை வல்லரசுகளின் ஆதிக்கமே பிரதானமாகி இருக்கிறது. இரு மேல்நிலை வல்லரசுகளும் நமது நாட்டுப் பொருளாதாரத்தின் உயிரோட்டமான துறைகளைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருக்கின்றன. தேசிய சுய நிர்ணய உரிமைக்கான போராட்டங்கள்பாலும் அண்மையிலுள்ள சிறிய நாடுகள்பாலும் இந்தியா கடைப்பிடித்து வரும் கொள்கைகள் இது ஒரு துணை வல்லரசாக விளங்குவதையே காட்டுகின்றன. மூன்றாம் உலக நாடுகளில் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக இருப்பதும் யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ள பெரிய, மக்கள் தொகையில் உலகிலேயே இரண்டாவது நாடாக இருப்பதும் இதற்கான அடிப்படைகளைக் கொடுக்கின்றன.

ஏகாதிபத்தியங்களுக்குள்ளே உள்ள முரண்பாடு கூர்மையடைந்து வருவதைத் தொடர்ந்து இந்திய ஆளும் வர்க்கங்களுக்குள் பிளவும் முரண்பாடும் கூர்மையடைந்துள்ளன. வெளிப்படையான ஆயுதந்தாங்கிய மோதலாக இன்னமும் இந்த முரண்பாடும் பிளவும் வெடிக்கவில்லை. யுத்தத்திற்கும் ஆக்கிரமிப்பிற்குமான ராணுவ ஒப்பந்தமான இந்தோ-சோவியத் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதன் மூலம் பாசிச இந்திரா கும்பல் நமது நாட்டை புதிய ஜார்களின் பேரரசு வட்டத்திற்குள் இழுத்துச் சென்றது. சமூக ஏகாதிபத்தியத்தின் போர்த் தேரில் பிணைத்தது. அதுமட்டுமல்ல, ருஷிய சமூக ஏகாதிபத்தியத்தின் உலகு

தழுவிய ராணுவ யுத்ததந்திரத்தினதும் அதன் ஒரு பகுதியாகிய ஆசியாவுக்கான யுத்ததந்திரத்தினதும் முக்கியமான இடத்தில் இந்தியா அமைந்திருக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்து மாகடலில் டிகோ-கார்சியாவில் வெளிப்படையான ராணுவத்தளத்தையும், செண்டோ ஒப்பந்த நாடுகளில் ரகசிய ராணுவத் தளங்களையும் வைத்துள்ளது. சமூக ஏகாதிபத்தியம் எத்தியோப்பியா, தெற்கு ஏமன், ஈராக் மற்றும் இந்தியாவில் 'கடற்படை நடமாட்டம்' என்ற பெயரில் கப்பற்படைத் தளங்கள் வைத்துள்ளன. பிரச்சனைகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் உடனடியாகத் தீர்வு காண்பது என்று சமாதானக் குரல் எழுப்பி நடித்துக் கொண்டிருக்கும் போதே இரு மேல்நிலை வல்லரசுகளும் நாள்தோறும் ராணுவ பலத்தை அதிகரிக்கின்றன. ஆசியா, ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சில அண்டை நாடுகள் இந்து மாகடலை சமாதான மண்டலமாக்கப் போராடும் போதே இந்தியா உட்பட சில நாடுகள் ராணுவ தளம் அமைக்க உதவுகின்றன. "ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தம்" என்னும் சமூக ஏகாதிபத்தியத்தின் ராணுவ ஒப்பந்தத்தை வெளிப்படையாக ஏற்கவில்லையாயினும் பாசிச இந்திரா கும்பல் இந்தோ-சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் அதை நேரடி நடைமுறைக்கானதாக மாற்றியிருக்கிறது. சமூக ஏகாதிபத்திய ஆதரவு, ஆளும் வர்க்கப் பிரிவினரின் அரசியல் பிரதிநிதியாகிய பாசிச இந்திரா கும்பல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியிருப்பதும், இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் மீதுள்ள திரிபுவாதிகளின் செல்வாக்கும், ஏற்கனவே இந்தியாவில் நிலவி வரும் பாகிஸ்தான் எதிர்ப்பு, சீன எதிர்ப்பு தேசிய வெறியும் சமூக ஏகாதிபத்தியத்துக்கு ஒருபடி கூடுதலான, சாதகமான செல்வாக்கு அளிப்பதாக உள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏற்கனவே மக்கள் முன் அம்பலப்பட்டுப் போயிருப்பது, கடந்த காலத்தில் அதன் அடிவருடிகள் தூண்டி வந்திருக்கும் பாகிஸ்தான் எதிர்ப்பு, சீன எதிர்ப்பு தேசிய வெறியின் காரணமாகவே, அமெரிக்க மேல்நிலை வல்லரசு ஆதரவு ஆளும் வர்க்க அரசியல் பிரதிநிதிகளேகூட சமூக ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் இறங்கத் துணியாத நிலையே நிலவுகின்றது. இந்தியாவைப் பொருத்த வரை சமூக ஏகாதிபத்தியத்திற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் போட்டியிட தளமாக அமைந்து பயன்படும் இந்து மாகடலில் புழங்குவதற்கு வசதி வேண்டும். இந்திய - சீன உறவு சீரடைவதைத் தடுத்து சீனத்தைச் சுற்றி வளைப்பதை அங்கீகரிக்க வேண்டும். சிறு ஆயுத தளவாடங்களில் இந்தியா ஓரளவு சுய தேவையை அடைந்திருப்பினும் கனரகத் தளவாடங்கள், பெரும் போர் ஆயுதங்களுக்கு இன்னமும் சமூக ஏகாதிபத்தியத்தையே சார்ந்திருக்கிறது. தெற்காசிய பிராந்தியத்தில் அமெரிக்காவிற்கு எதிராக மேலாதிக்கத்தை நிறுவுவதில் சமூக ஏகாதிபத்தியம் இந்தியாவிற்கே முதல் முக்கியத்துவம் அளிக்கிறது.

சர்வதேசிய ரீதியாக யுத்ததந்திரத்தின் குறிக்கோள் ஏகாதிபத்தியம், காலனிய ஆதிக்கம் மற்றும் மேலாதிக்கத்தை ந்

தூக்கியெறிவதாகும். யுத்ததந்திரத்தின் இலக்குகளாக இரு மேல்நிலை வல்லரசுகளும் இருக்கின்றன. ஏகாதிபத்தியத்தால் சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கின்றது. ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்கம் மேல்நிலை வல்லரசுகளின் மேலாதிக்கம் ஆகியவைகளுக்கு இந்தியா உட்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்தியப் புரட்சியின் குறிக்கோள்களில் ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிவதும், குறிப்பாக இரு மேல்நிலை வல்லரசுகளும் இருக்கின்றன. இந்த வகையில் சர்வதேசிய, தேசிய யுத்ததந்திரங்கள் ஒன்றோடொன்று இணைந்தே உள்ளன. உலக அளவில் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், மேலாதிக்கம் ஆகியவைகளைத் தூக்கியெறிவதின் ஒரு பகுதியாக, இந்தியாவில் இவைகளைத் தூக்கியெறியும் குறிக்கோளை நமது தேசிய யுத்ததந்திரம் கொண்டிருக்கிறது. அதன் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் பிரதான சமூக அடிப்படையாக இருக்கும் நிலப்பிரபுத்துவத்தை தூக்கியெறிவதையும் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. சர்வதேசிய யுத்ததந்திரத்தில் பிரதான சக்தியாக உள்ள மூன்றாம் உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்று. எனவே, இந்தியப் புரட்சியை எவ்வளவு விரைவாகவும் தீர்மானகரமாகவும் நடத்தி முடிக்கின்றோமோ அந்த அளவுக்கு அது சர்வதேசிய யுத்ததந்திர குறிக்கோளை நிறைவேற்ற உதவுகின்றது. மூன்றாம் உலக நாடுகளிலேயே தொழிற்துறையில் வளர்ந்த இந்தியா, சமூக ஏகாதிபத்தியத்தின் ஆசிய எதிர்புரட்சி யுத்ததந்திரத்தின் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகின்றது. எனவே இந்தியாவில் நடக்கின்ற புரட்சி சர்வதேசிய ரீதியில் உலக பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கு மிகப்பெரிய உந்துதலை அளிக்கும்.

இந்த வகையில் இந்தியப் புரட்சியின் யுத்ததந்திரம் நிறைவேறுவது சர்வதேசிய யுத்ததந்திரம் நிறைவேறுவதற்கு நேரடியாக உதவுகிறது. மேலும் சர்வதேசப் புரட்சிக்கு தலைமை தாங்கும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு அங்கமாக இந்தியப் பாட்டாளி வர்க்கம் இருக்கிறது. இந்திய நாட்டில் புரட்சியை வெற்றிகரமாக தலைமை தாங்கி நடத்துவதின் மூலம் இந்தியப் பாட்டாளி வர்க்கம் உலகப் புரட்சியை நடத்துவதில் பங்கு பெறுகிறது. நிலப்பிரபுத்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் குறிப்பாக இரு மேல்நிலை வல்லரசுகளையும் தூக்கியெறிவது வலது, இடது திரிபுவாதங்களுக்கு இந்தியாவில் மட்டுமல்ல உலக அரங்கிலும் பலத்த அடியைக் கொடுக்கும். அந்த வகையில் சமரசப்படுத்தும் இந்த சக்திகள் இந்திய, உலக மக்கள் முன் அம்பலப்படுகிறார்கள்; தனிமைப்படுத்தப்படுகிறார்கள்; இந்தியப் புரட்சி முன்னேற ஏகாதிபத்தியங்களின் குறிப்பாக இரு மேல்நிலை வல்லரசுகளின், போலி சமாதான நடிப்புகளும், விட்டுக்கொடுத்து சாந்தப்படுத்தும் கொள்கைகளை முன்வைக்கும் சக்திகளும் உலகத்தின் முன்னே அம்பலப்படுத்தப்படுகின்றன. இவைகளின் மூலம் உலக யுத்ததந்திரத்தின் பிரதான தாக்குதல் திசைவழி செப்பனிடப்படுகிறது;

தடைகள் அகற்றப்படுகின்றன. ரிசர்வு சக்திகள் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் பின்னே அணி திரட்டப்படுகின்றன. அதே போல உலகப் புரட்சியின் முன்னேற்றமும் இந்தியப் புரட்சியின் முன்னேற்றத்திற்கு உத்வேகமளிக்கும். இவ்வாறுதான் இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரமும் உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் யுத்ததந்திரமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து உள்ளன; ஒன்றின் வளர்ச்சி மற்றொன்றுக்கு உதவுகிறது; இந்தியப் புரட்சியும் யுத்ததந்திரமும் உலகப் புரட்சியினதும் யுத்ததந்திரத்தினதும் ஒரு பகுதியாக அதற்கு கீழ்ப்பட்டதாக இருக்கிறது.

# III இந்தியப் புரட்சிக்கான அரசியல் இராணுவ யுத்ததந்திரங்களின் அவசியம் - பிற நாடுகளின் அனுபவங்கள் - இந்தியப் புரட்சியின் அரசியல் இராணுவப் பாதை.

"எமது தளகர்த்தர்களுக்கு எதிரியை மிஞ்சும் துணிவு மட்டுமல்லாமல் யுத்தம் முழுவதினதும் மாற்றங்கள் ஏற்ற இறக்கங்கள் அனைத்தினூடும் நிலைமையைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கும் திறமையும் இருக்க வேண்டும். யுத்தமாகிய கடலில் நீந்தும் அவர்கள் அலைப்புற்றுவிடாது, ஒழுங்கான வலிப்புடன் நீச்சலடித்து மறு கரையை அடைவதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். யுத்தத்தை வழி நடத்துவதற்கான நியதிகள் என்ற வகையில் யுத்ததந்தரமும் போர்த்தந்திரங்களும் யுத்தக் கடலில் நீந்தும் கலையாக அமைகின்றன'' (மாவோ தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவப் படைப்புகள் பக் 467)

புரட்சிகர யுத்தத்துக்கு மட்டுமின்றி புரட்சிகர அரசியலுக்கும் இது பொருந்தும். புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் பற்றிய அரசியல் மற்றும் ராணுவ யுத்ததந்திரங்கள் மற்றும் போர்த்தந்திரங்களாகிய தலைமை முறை பற்றிய விஞ்ஞானத்தைக் கற்றுத் தேரவும் வகுத்து வரையறுத்துப் பிரயோகிக்கவும் வேண்டும். மாறாக பொதுவில் புரட்சி பற்றியும், புரட்சிகர யுத்தம் பற்றியும் கலவையாகப் பேசிக் கொண்டிருப்பதெல்லாம் வெறும் வாய்ச் சவடாலும் கபடத்தனமான மோசடியும் தான். நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதை மூலமாகவே — சமாதான முறையிலேயே புரட்சி செய்யப் போவதாக-சமுதாய மாற்றம் செய்யப் போவதாக-வெளிப்படையாகப் பிரகடனம் செய்துவிட்ட திரிபுவாதிகளை விட்டுத் தள்ளுங்கள். புரட்சி, புரட்சிகர யுத்தம் பற்றியும் அவற்றின் திட்டவட்டமான நிச்சயமான

போக்குகள் பற்றியும் பருண்மையான கருத்துக்களை பரந்து பட்ட மக்களிடையே எடுத்துச் சென்று, அணி திரட்டி அமைப் பாக்கி, அரசியல் மற்றும் ஆயுதப் படையைக் கட்டி தற் போதைய ஆளும் வர்க்கங்களையும், அவர்களின் சர்வாதிகார ஆட்சிக்கான அதிகாரவர்க்க ராணுவ அரசு எந்திரத்தையும் அடித்து நொறுக்கித் தூக்கியெறிவதற்கான பாதையைத் தீர்க்க மாக வகுத்து வரையறுக்காமலே பொதுவில் மக்களைத் திரட்டு வதாகவும் புரட்சிக்குத் தயாரிப்பதாகவும் ஏமாற்றித் திரியும் நவீன திரிபுவாதிகளும், டிராட்ஸ்கியவாதிகளும் பிற குட்டி முத லாளித்துவ குழுக்களும் சரி, புரட்சிகர இயக்கத்தின் தலைமை முறை பற்றிய ஒரு விஞ்ஞானமாகக் கருதாது, சீனத்துப் பாதையை அப்படியே பெயர்த்தெடுத்து எந்திர முறையில் நிலை நாட்ட முயலும் சாருவும் பிற 'இடது' சந்தர்ப்பவாதிகளும் மற்றும் பிற மார்க்சிய — லெனினியக் குழுக்களும் சரி இவற்றின் அவசியத்தை முன்னிறுத்துவது இல்லை. ஒன்று மார்க்சிய-லெனி னியப் பொது விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் சர்வ தேசப் பாட்டாளி வர்க்க அனுபவங்களும் இந்தியாவுக்குப் பொருந்தாது என்கின்றனர் அல்லது இன்றைய நிலையில் —அக நிலைக் கூறுகளின் வளர்ச்சி குறைவாக உள்ள நிலையும், பருண் மையான நிலைமைகள் பற்றிய ஆய்வின் பற்றாக்குறை உள்ள நிலையும் — அவற்றை வகுக்க முடியாது என்கின்றனர்.

ஆளும் வர்க்கங்கள் தங்களது அடக்குமுறை சுரண்டல் வர்க்க ஆட்சியை இரண்டு வழிகளில் நிலைநிறுத்தி வைத்திருக் கின்றனர். ஒன்று அரசியல் ரீதியிலும் மற்றொன்று ராணுவ ரீதியிலும். தங்களது அரசியல் கருத்துக்கள், கலை, கலாச்சாரக் கருத்துக்கள் நிறுவனங்கள் மற்றும் கல்வி, மத கருத்துக்கள் நிறு வனங்கள் மூலம் தங்களது வர்க்க சர்வாதிகாரத்தையும் சுரண்ட லையும் நியாயப்படுத்தும் கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரச் சாரம் செய்து மக்களை அதற்கு அடிமைப்படுத்தி வைக்கின்ற னர். இதை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் மக்களை வென் றெடுத்து ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக அவர்களை அணி திரட்டி அமைப்பாக்கிப் போராடுகிறது. அதா வது ஆளும் வர்க்க அரசியல் கருத்துக்களால் அவர்களுடைய வர்க்க சர்வாதிகாரத்தை இதுவரை ஏற்றுக்கொண்டிருந்த மக் கள் அதன் தளைகளிலிருந்து விடுபட்டு போராட ஆரம்பிக்கின்ற னர். இது பல்வேறு மட்டங்களில் பல்வேறு அளவுகளில் இருக் கலாம். இவ்வாறு மக்கள் ஆளும் வர்க்கங்களின் அரசியல் தளை களைத் தூக்கியெறிந்து போராடும் போது அவர்களை அடக்க ஆளும் வர்க்கங்கள் ராணுவத்தைப் பயன் படுத்துகின்றனர். பாட்டாளி வர்க்கமும் பரந்துபட்ட மக்களும் ஆளும் வர்க்க அரசு எந்திரத்தின் அடக்குமுறைக் கருவிகளை நேரடியாகச் சந்திக்கின்றனர்.

"இப்படிப்பட்ட நேரத்தில் எதிர்ப்புரட்சிக்கு எதிராக உண்மையான போர் நடத்தும் பணியைப் பற்றி கவனம் செலுத்துமாறு பாட்டாளி வர்க்கத்தின் கட்சி அறைகூவி

அழைப்பது குறிப்பாகப் பொருத்தமுடையதாகும். கடைசிப் பகுப்பாய்வில் பார்க்கும்போது, அரசியல் சுதந்திரம், வர்க்கப் போராட்டம் பற்றிய மாபெரும் பிரச்சனைகளைப் பலாத்காரம் ஒன்றுதான் தீர்த்துவைக்கிறது; பாதுகாப்புக்காக மட்டுமின்றி தாக்குதலுக்காகவும் இந்த பலாத்காரத்தை தயாரித்து ஒழுங்கமைப்பதும் தீவிரமாகப் பயன்படுத்துவதும் நம் வேலையாகும்.'' (லெனின், ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் இரு போர்த்தந்திரங்கள், பக் 24-25)

எனவே ஆளும் வர்க்க சர்வாதிகாரத்தை முறியடித்து மக்கள் ஜனநாயகத்தை நிறுவப் பாடுபடும் பாட்டாளி வர்க்கமும் பரந்துபட்ட மக்களும் இரு முனைகளில்—அரசியல் மற்றும் ராணுவம் — ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் போராட வேண்டி உள்ளது. எனவே அரசியல் ரீதியில் எதிரிக்கு எதிராக பிரதான அடியைக் கொடுக்கும் பிரதான திசைவழியையும், அதற்கேற்ப சக்திகளைப் பிரித்தொதுக்கும் திட்டத்தையும் கொண்ட அரசியல் யுத்ததந்திரத்தையும், இராணுவ ரீதியில் பிரதான அடியைக் கொடுக்கும் பிரதான திசைவழியையும் அதற்கேற்ப சக்திகளைப் பிரித்தொதுக்கும் திட்டத்தையும் கொண்ட ராணுவ யுத்ததந்திரத்தையும் வகுத்துச் செயல்படவேண்டியுள்ளது.

அரசியல், ராணுவ யுத்ததந்திரங்கள் இரண்டும் பாட்டாளி வர்க்கம் நடத்தும் புரட்சியிலும் புரட்சிகர யுத்தத்திலும் எதிரியை வீழ்த்த ஒட்டுமொத்த சூழ்நிலைகளைக் கணக்கில் கொண்டு தொலைநோக்கோடு வகுக்கப்படுபவை. அரசியல் படையைக் கட்டுவது, அரசியல் போர்க்களத்தில் சக்திகளை வியூகம் வகுத்து நிறுத்திப் போராடுவது, அரசியல் மேலாண்மைபெறுவது ஆகியவைகளை நிறைவேற்ற அரசியல் யுத்ததந்திரம் தீட்டப்படுகிறது. அதேபோல் ராணுவப் படையைக் கட்டுவது, யுத்தகளத்தில் சக்திகளை வியூகம் வகுத்துப் போராடுவது, ராணுவ மேலாண்மை பெறுவது ஆகியவைகளை நிறைவேற்ற ராணுவ யுத்ததந்திரம் தீட்டப்படுகிறது.

ஒரு நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கக்கட்சி எவ்வளவு சிறிதாக இருந்த போதிலும், பல்வேறு குழுக்களாக சிதறியிருந்த போதிலும், மிகவும் பலவீனமான நிலையிலிருந்தாலும் அது ஒரு அரசியல் யுத்ததந்திரத்தை ஆரம்பம் முதல் வகுத்துச் செயல்படவேண்டும். அதன் ஒவ்வொரு அரசியல் நடவடிக்கைக்கும் வழிகாட்டுவதே அரசியல் யுத்ததந்திரமும் அதனை நிறைவேற்றும் திசையில் அதன் ஒளியில் வகுக்கப்பட்ட போர்த்தந்திரங்களும்தான். அப்படிப்பட்ட சரியான ஒரு அரசியல் யுத்ததந்திரம் மற்றும் போர்தந்திரங்கள் இல்லையானால் அது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையாக செயலாற்ற முடியாது. தவிர்க்க முடியாமல் ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்வதில் தான் அதன் அத்தனை நடவடிக்கைகளும் இறுதியில் சென்று முடியும்.

எந்தெந்த சக்திகளைத் தனிமைப்படுத்துவது, யாருடன் கூட்டு சேர்வது; சேமிப்பு (துணை-ரிசர்வு) சக்திகள் என்னென்ன; அவைகளை எப்படி வென்றெடுப்பது ஆகியவைகளை கணிக்கின்ற அரசியல் யுத்ததந்திரம் இல்லாமல் பாட்டாளி வர்க்க கட்சி ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாது. பலவீனமான ஒரு கட்சியாக, பல குழுக்களாக பிரிந்திருப்பது இதற்குத் தடையாக இருக்கமுடியாது. மாறாக, பல குழுக்களும் ஒன்றுபடுவதும், பலமான கட்சியாக உருப்பெறுவதும் சரியான மார்க்சிய-லெனினிய யுத்ததந்திரத்தின் அடிப்படையில் தான் நடந்தேற முடியும். கட்சி பல குழுக்களாக சிதறியும் மிகவும் பலவீனமான நிலையிலும் இருப்பதால் அரசியல் படையைக் கட்ட இந்தக் கட்டத்தில் முடியாது எனவும், நாம் ஒன்றுபட்ட பலமான கட்சியாக ஆன பின்னர்தான் நாம் தனிமைப்படுத்தக் கூடிய சக்திகளை அம்பலப்படுத்தவும், எதிரி சக்திகளை அரசியல் ரீதியில் எதிர்த்துப் போராடவும், சேமிப்பு (ரிசர்வு) சக்திகளை நம் பக்கம் செயலுக்காக ஈர்க்க முடியும் எனவும் யாராவது செல்வார்களேயானால் அவர்கள் யுத்ததந்திரத்தின் நோக்கத்தையும் பணியையும் துளியும் புரிந்துகொள்ளவில்லை என்று பொருளாகும்.

> "ஏனென்றால் தனது அப்பழுக்கின்மை அல்லது குறைகளைச் சார்ந்து யுத்ததந்திரமாவது இயக்கத்தை முடுக்க அல்லது மட்டுப்படுத்த முடியும். மிகமிகக் குறைந்த தொலைவுள்ள பாதையில் இட்டுச் செல்லமுடியும். அல்லது மிகக் கடுமையான அல்லது துயரமான பாதையில் இழுத்துச் செல்ல முடியும்'' (ஸ்டாலின், தொகுதி எண் 5, பக் 164)

யுத்ததந்திரமே இல்லாவிட்டால் இயக்கமே இல்லை என்று சொல்லலாம். இராணுவ யுத்ததந்திரத்திற்கும் இது பொருந்தும். ஆரம்பத்திலிருந்தே ராணுவ யுத்ததந்திரம் ஒன்றைத் தீர்மாணித்து அதை நிறைவுசெய்யும் நோக்கத்துடன் பாட்டாளி வர்க்கத்தின் செயல்பாடுகள் அமையவேண்டும். எவ்வாறு அரசியல் படை ஒன்றில்லாதபோதே அதைக்கட்டவே அரசியல் யுத்ததந்திரம் தேவைப்படுகிறதோ அதேபோல ராணுவபடை ஒன்றில்லாதபோதே அதைக்கட்டவே குறிப்பிட்ட ராணுவ யுத்ததந்திரம் ஒன்று தேவைப்படுகிறது. மேலும் அரசியல் யுத்ததந்திரத்தின் மூலம் செயல்படும் அரங்குகளை சமூக முன்னணிகளைக் கூட ராணுவ யுத்ததந்திரத்துக்கு ஏற்பவும் தீர்மாணிக்க வேண்டியுள்ளது.

> 'அரசியலின் நீடிப்பே யுத்தம்;' இந்த அர்த்தத்தில் யுத்தம் அரசியலாகவும், யுத்தம் தானே அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகின்றது. புராதன காலம் முதல் அரசியல் குணாம்சம் இல்லாத யுத்தமே இருந்ததில்லை. "ஆனால் யுத்தத்திற்கு அதற்குரிய விசேஷ குணாம்சங்கள் உண்டு. இந்த அர்த்தத்தில், யுத்தத்தை சாதாரண அரசியலுடன் சமப்படுத்த முடியாது. 'விசேஷ நடவடிக்கைகள்

மூலம் அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது' (லெனின்) அரசியல் அதன் வழக்கமான வழிகளில் மேற்கொண்டு முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு வளர்ச்சி யடைந்ததும் அதன் பாதையிலுள்ள தடைகளை நீக்கு வதற்காக யுத்தம் வெடிக்கிறது.'' (மாவோ ராணுவப் படையெடுப்புகள் பக். 468) ''தடைகள் அகற்றப்பட்டு, அரசியல் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டதும் யுத்தமும் முடிவடைகின்றது. ஆனால் அத்தடைகள் முற்றாக நீக்கப் படாவிட்டால், அக்குறிக்கோள் பூரணமாக நிறைவேற்றப் படும் வரையில் யுத்தமும் தொடர்ந்து நடைபெறும்.'' ''எனவே, அரசியலை ரத்தம் சிந்தாத யுத்தம் என்றும், யுத்தத்தை ரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம். ஷெ நூல், பக். 469.)

இதுதான் யுத்தத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தெளி வான அடிப்படையான உறவாகும். ஒரு குறிக்கோளை அடை வதற்காக அரசியல், ராணுவம் ஆகிய இரு முனைகளில் போராட் டம் நடத்தப்படுகிறது. இதில் ஒன்று மற்றொன்றுக்கு உதவியாக இருக்கிறது. ஒன்றின் வெற்றியும் தோல்வியும் மற்றதின் வெற்றி தோல்விகள் மீது நேரடியான செல்வாக்கைச் செலுத்தி பாதிக் கின்றன; அரசியல் போராட்டங்கள் முதன் முதலாக தொடுக்கப் படுகின்றன; அதன் வளர்ச்சியில் ராணுவப் போராட்டங்கள் கைக்கொள்ளப்படுகின்றன. அரசியல் ரீதியில் போராட்டம் ஆரம்பிக்கப்படுகிறது; ராணுவ ரீதியில் முடிக்கப்படுகிறது. அது பூரணமாக நிறைவேறாதபோது மீண்டும் அரசியல் அரங்கில் போராட்டம் நடக்கிறது—மீண்டும் ஒரு உயர்ந்த கட்டத்தில் ராணுவ ரீதியாக மோதல் நடக்கிறது. இவ்வாறு குறிப்பிட்ட குறிக்கோள் ஈடேறும்வரை தொடர்கின்றது.

அரசியல் போராட்டங்கள் மூலம் குறிக்கோளை அடை வதற்கான சக்திகளைத் திரட்டுவதும் செல்வாக்கு பெறுவதும் மக்களை அணிதிரட்டுவதும் அமைப்பாக்குவதும் நடக்கின்றது. எடுத்துக்கொண்ட குறிக்கோள் சரியானது, மக்களுக்கானது என்று மக்கள் திரளிடையே பிரச்சாரம் செய்து பல அரசியல் போராட்டங்கள் மற்றும் இதர போராட்டங்கள் மூலம் அவை களின் சரியான தன்மையை மக்களே தங்களது சிந்தனை மற்றும் போராட்ட நடைமுறைகள் மூலம் ஏற்றுக்கொள்ளச் செய்யப் படுகின்றன. இது ஒரு கட்டத்தை அடைந்ததும் தவிர்க்கமுடி யாமல் யுத்தம் வெடிக்கிறது. ஏனென்றால் அரசியல் போராட் டம் காரணமாக ஏற்கனவே அரசியல் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் தங்களது இழக்கின்ற அரசியல் செல்வாக்கின் காரணமாக மக்களிடையே தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள ராணுவத்தைப் பயன்படுத்துகின்றனர். அரசியல் ஆதிக்கத்தை கைப்பற்ற முயலுபவர்கள் இதுவரை தாம் அடைந்த அரசியல் செல்வாக்கைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் ராணுவத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. மறுபுறத்தில் ராணுவப் போராட் டங்களில் ஏற்படும் வெற்றிகள் பரந்த அரசியல் செல்வாக்குபெற உந்து சக்தியாக அமைகின்றன; அதாவது நாடு தழுவிய ரீதியில்

புரட்சிகர எழுச்சியை துரிதப்படுத்துகின்றன; அல்லது அரசியல் ஆதிக்கத்தை தக்க வைத்துக்கொள்ள உதவுகின்றன.

> "ராணுவ நடவடிக்கைகளை வழிநடத்தும் எல்லாக் கோட்பாடுகளும் தனது சொந்த பலத்தைப் பாதுகாக்கவும் எதிரியின் பலத்தை அழிக்கவும் இயன்ற அளவு பாடுபடுவது என்ற ஒரு அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து வளர்கின்றன ஒரு புரட்சிகர யுத்தத்தில் இந்தக் கோட்பாடு அடிப்படையான அரசியல் கோட்பாடுகளுடன் நேரடியாகப் பிணைந்துள்ளது. (ஷை நூல் பக்கம் 312)

உதாரணமாக, நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டைப் பிரதான முரண்பாடாகக் கொண்டுள்ள புரட்சியின் இன்றைய இடைக்கட்டத்தில் நிலப்பிரபுத்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் தூக்கியெறிந்து மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவி புதிய சுதந்திரமான மகிழ்ச்சிகரமான இந்தியாவைக் கட்டியெழுப்புவது நமது அடிப்படையான அரசியல் குறிக்கோளாகும்; அடிப்படையான அரசியல் கோட்பாடாகும். ஆனால் இதை அடைவது எப்படி? ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தை அடித்து நொறுக்கிவிட்டு அந்த இடத்தில் புதிய ஜனநாயக அரசு எந்திரத்தை நிறுவுவது எப்படி? எதிரியானவன் தனது அரசியலதிகாரத்தைப் படைபலத்தின் மூலம் மட்டுமல்லாது அரசியல் ரீதியாகவும் நிலை நிறுத்தி வைத்துள்ளான். எனவே அதை முறியடிக்க பாட்டாளி வர்க்க கட்சி அரசியல் மற்றும் ராணுவம்—இரு முனைகளில் எதிரிமீது தாக்குதல் தொடுக்கின்றது. எனினும் அவை ஒரே நாளிலோ அல்லது ஒரே வருடத்திலோ அடையக்கூடியவை அல்ல; நீண்டகால கண்ணோட்டத்தில் அவனை வீழ்த்துவதற்கான அரசியல் ரீதியில் ஒரு அரசியல் யுத்ததந்திரத்தையும், ராணுவரீதியில் ஓர் ராணுவ யுத்ததந்திரத்தையும் வகுத்துக்கொண்டு பாட்டாளி வர்க்க கட்சி தனது தாக்குதலைத் தொடுக்கின்றது.

அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் புரட்சியின் மையமான பணியாகும். இதை அரசியல் ரீதியில் சாதிப்பதற்கான பிரதான தாக்குதலின் திசைவழி சக்திகளை அணிவகுத்து சமூக முன்னணியில் நிறுத்தும் திட்டம், அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சமர் ஆகியவைகளை அரசியல் யுத்ததந்திரம் தீர்மானிக்கிறது. இந்த யுத்ததந்திர வழிகாட்டுதலில் குறிப்பிட்ட நேரத்தில் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப அரசியல் யுத்ததந்திரத்தை செயல்படுத்துவதுதான் அரசியல் போர்த்தந்திரமாகும். அரசியலதிகாரத்தைக் கைப்பற்றும் கடமையை ராணுவ ரீதியில் சாதிப்பதற்கான பிரதான தாக்குதலின் திசைவழி அதற்காக சக்திகளை அணிவகுத்து நிறுத்தும் திட்டம் அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சமர் ஆகியவைகளை ராணுவ யுத்ததந்திரம் தீர்மானிக்கிறது. இந்த யுத்ததந்திர வழிகாட்டுதலில் ராணுவ போர்த்தந்திரம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

புரட்சியின் கடமையை சாதிப்பதென்பது ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தை — வன்முறைக் கருவியை — பலாத்கார

மாக அடித்து நொறுக்குவதும் அந்த இடத்தில் புதிய அரசு எந்திரத்தை நிறுவுவதுமாகும். பலாத்காரமின்றி, ஒரு புரட்சிகர யுத்தமின்றி அரசு எந்திரத்தைத் தகர்த்து தூக்கியெறிவதென்பது முடியாது என்பதையே வரலாற்றில் நடந்த எல்லாப் புரட்சிகளும் காட்டுகின்றன. 1871 பாரீஸ் கம்யூன் அனுபவங்களிலிருந்து பெற்ற படிப்பினைகளைக் கூறும்போது மார்க்ஸ் 'ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தை அப்படியே பாட்டாளி வர்க்கம் தனது நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாது' என்றார். எனவே ஏற்கனவே உள்ள அரசு எந்திரத்தை தகர்க்க ராணுவ ரீதியில் போராடுவது, அதாவது, புரட்சியின் மையப்பணியான அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற ஆயுதமேந்திய படையைக் கட்டிப் போராடுவது இன்றியமையாத ஒன்றாகும். இதுவே வரலாற்றுப் படிப்பினை.

அதே சமயம் பாட்டாளி வர்க்கம் அமைக்கின்ற அரசும் வர்க்க ஆட்சிக்கான, வன்முறைக்கான கருவியே. ஆனால் அரசு என்ற அர்த்தத்தில் அதுவே கடைசி அரசாகவும் இருக்கின்றது. அதாவது தனிவகைப்படை, அதிகாரவர்க்கம் ஆகியவற்றை ஒழித்தல், மக்கள் எல்லோருக்கும் ஆயுதமேந்தும் உரிமை, எல்லா மட்டங்களுக்கும் தேர்ந்தெடுக்கவும் திருப்பியழைக்கவும் உரிமை, எல்லா அதிகாரங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கமிட்டிகளுக்கே என்ற கோட்பாடுகளின் அடிப்படையிலான அரசையே பாட்டாளி வர்க்கம் நிறுவுகிறது. அரசு அதிகாரமும் பரந்துபட்ட மக்கள், மிகச் சிறுபான்மையான பழைய சுரண்டலாளர்கள் மீது செலுத்தும் சர்வாதிகாரமாக, அதே சமயத்தில் ··க்கள் ஜனநாயகமாக இருக்கின்றது. அரசு எந்திரம் உலர்ந்து உதிர்கின்ற நிகழ்ச்சிப் போக்கில் இருக்கிறது. எனவே தனிவகைப் படை, அதிகாரவர்க்க முறை ஆகியவை அழிக்கப்படுகின்றன. இதனால் படையானது மக்களுடைய படையாகவும் உற்பத்தியில் ஈடுபடுகின்ற படையாகவும் இருக்கின்றது.

எனவே ஆரம்பத்திலேயே அரசியல் யுத்ததந்திரமும் ராணுவ யுத்ததந்திரமும் வகுக்க வேண்டியுள்ளது. இந்த இரண்டும் ஒன்றோடொன்று நெருக்கமாகப் பிணைந்திருப்பவை; எதிரெதிரானவை அல்ல; மாறாக, ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. இருந்தும் வேறு வேறாக இருப்பவை. அரசியல் யுத்ததந்திரம் ராணுவ யுத்ததந்திரத்துக்கு அரசியல் ரீதியில் வழிகாட்டுகிறது.

"மார்க்சியக் கோட்பாடு மற்றும் திட்டத்தால் வழங்கப்பட்ட உண்மை நிலவரங்களின் அடிப்படையிலும் அனைத்து நாட்டு தொழிலாளர்களினுடைய புரட்சிப் போராட்டங்களின் அனுபவத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டும் ஒரு குறிப்பிட்ட நாட்டின் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பிரதான திசைவழியை சரியாகத் தீர்மானிப்பதுதான் அரசியல் யுத்ததந்திரத்தின் பிரதான பணியாகும்" (ஸ்டாலின், தொகுதி 5, பக் 168-69) "யுத்ததந்திர (ராணுவ - மா.அ.க.)

விஞ்ஞானத்தின் பணி ஒரு முழுமையான யுத்தநிலைமையை ஆட்சி செய்வதான, யுத்தத்தை வழிநடத்தும் விதிகளை ஆராய்வதாகும்.'' (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், பக், 150)

மார்க்சியக் கோட்பாட்டின் வழிகாட்டுதலிலும் மார்க்சியத் திட்டத்தின் அடிப்படையிலும் அரசியல், ராணுவ யுத்ததந்திரங்கள் இரண்டுமே வகுக்கப்படுகின்றன. பிரதான தாக்குதலின் திசைவழி, சக்திகளை ஒதுக்கும் திட்டம், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சமர் என்ற யுத்ததந்திரத்தின் மூன்று கூறுகளும் இரண்டுவகை யுத்ததந்திரத்திலும் இடம் பெறுகின்றன. இரண்டுமே பாட்டாளி வர்க்கம் தொடுக்கின்ற புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமை வகிப்பது பற்றிய விஞ்ஞானமாக அமைந்திருக்கிறது. எனினும் இந்த இரண்டு யுத்ததந்திரங்களும் வெவ்வேறு அரங்குகளில், முறைகளில் தொடுக்கப்படுபவை. எனவே அதற்கேற்றவாறு வேறுபடவும் செய்கின்றன.

உதாரணமாக, பிரதான தாக்குதலின் திசைவழியை எடுத்துக்கொள்வோம். அரசியல் யுத்ததந்திரத்தில் இதன் பிரயோகம் எதிரிகளிடம் மக்களை சரணடையச் செய்யும் சமரச சக்திகளை அம்பலப்படுத்தி, மக்களிடமிருந்து அவற்றைத் தனிமைப்படுத்தி, எதிரியின் அணிகளிலுள்ள புரட்சியின் சேமிப்பு (துணை - ரிசர்வு) சக்திகளை வென்றெடுப்பதாகும். ராணுவ யுத்ததந்திரத்தில் பிரதான தாக்குதலின் திசைவழி படைகளை எந்த வழியில் நடத்திச் சென்று எதிரிப்படைகளை எவ்வாறு ஒழித்துக்கட்டுவது என்பதாகும். அதேபோல சக்திகளை பிரித்தொதுக்குவதன் பிரயோகம் அரசியல் யுத்ததந்திரத்தில் எந்த வர்க்கத்துடன் பிரதானமாக கூட்டுவைத்துக்கொண்டு மற்றும் எந்தெந்த வர்க்கங்களுடன் அணிசேர்ந்து, எந்த ஊசலாட்ட சக்தியை தனிமைப்படுத்தி சமூக முன்னணியில் அரசியல் ரீதியில் அணிவகுத்து நிற்பது என்பதாகும். இதுவே ராணுவ யுத்ததந்திரத்தில் பல்வேறு படைப்பிரிவுகளில் எந்த சமயத்தில் எந்தப் படைப்பிரிவை போரில் ஈடுபடுத்துவது என்ற யுத்த வியூகத்தைக் குறிப்பதாகும். யுத்ததந்திரத்தின் மூன்றாவது கூறாகிய சமர் என்பது அரசியல் யுத்ததந்திரத்தில் 'இடது', வலது தவறுகளுக்கு உட்படாமல் யுத்ததந்திர குறிக்கோளை அடைய விடாப்பிடியாக, தீர்மானகரமாக, பிரதான தாக்குதல் திசைவழியே யுத்ததந்திர திட்டத்தை நிறைவேற்ற அரசியல் ரீதியில் போராடுவதாகும். இதுவே ராணுவ யுத்ததந்திரத்தில் தற்காப்பு யுத்ததந்திரமா தாக்குதல் யுத்ததந்திரமா என்பதைப் பொருத்து குறிப்பிட்ட யுத்ததந்திர கட்டம் முழுவதும் தற்காப்பு அல்லது தாக்குதல் திசையிலேயே போர் புரிவது என்பதாகும்.

மொத்தத்தில் வர்க்கங்களின் போராட்டங்களில் யுத்தங்களில் பாட்டாளி வர்க்கம் அரசியல் ரீதியில் வெல்வதை—பரந்துபட்ட மக்களை அரசியல் ரீதியில் வென்றெடுத்து அணிதிரட்டுவது அரசியலதிகாரத்தை வென்றெடுப்பதை—அரசியல் யுத்ததந்திரம்

குறிக்கோளாகக் கொண்டுள்ளது; ராணுவரீதியில் செல்வதை எதிரிப்படைகளை அழித்து தனது படைகளைப் பாதுகாத்துக் கொள்வது, அதன் மூலம் அரசியலதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வது அல்லது வென்றெடுப்பதை ராணுவ யுத்ததந்திரம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

மேலும், ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவது என்று பொதுவாகக் கூறினால் மட்டும் போதாது; பலாத்காரமாக அரசு எந்திரத்தை அடித்து நொறுக்க வேண்டும் என்றால் மட்டும் போதாது; அதை எந்த முறையில் எந்தப்பாதையில் செல்வதின் மூலம் தகர்க்கப் போகிறோம் என்றும் சொல்ல வேண்டும். இன்றைய நிகழ்ச்சி நிரலில் ஆயுதப் போராட்டம் இல்லை; இராணுவம் இல்லை; எனவே அதைப்பற்றி இப்பொழுது நாம் கவலைப்படத் தேவையில்லை என்பது திரிபுவாதமாகும். மாறாக எந்தப்பாதையில் சென்று பலாத்காரமாக அரசு எந்திரத்தை உடைத்தெறியப் போகிறோம் என்பதை ஆரம்பத்திலேயே ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அரசியல் போராட்டம் மட்டுமே இருக்கின்ற கட்டத்திலேயே கூட ராணுவ யுத்தப்பாதையை ஒட்டியும் பாட்டாளி வர்க்க கட்சியானது தனது நடைமுறைப் பணிகளை வகுத்து முறைப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது.

உதாரணமாக, மக்கள் யுத்தப்பாதை மூலமாகவே இந்தியப் புரட்சி சென்றடையும் என்பதாக இருப்பின் இந்தப் பாதையின்படி தளப்பிரதேசம் அமைப்பது முதற்கட்டமாக உள்ளது. தளப்பிரதேசம் அமைக்க செம்படையைக் கட்ட வேண்டும். இந்த செம்படையைக் கட்டுவதும் ஒரு நிகழ்ச்சிப் போக்கில் முகிழ்கிறது. மாறாக திடீரென்று ஒரு நாளில் அது உருவாகி விடுவது இல்லை. ஆக செம்படையைக் கட்ட நீண்ட நாள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியுள்ளது இந்தப்படையை எவ்வாறு கட்டுவது, எந்தப் பிரிவு மக்களை இதற்காகச் சார்ந்து நிற்பது, எந்தப் பகுதியில் கட்டுவது ஆகியவற்றைப்பற்றி உடனடியாகத் தீர்மானிக்க வேண்டியுள்ளது. அதை நிறைவேற்ற கட்சி தனது வேலைகளையும் சக்திகளையும் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். எனவே எந்தப்பாதை என்று தீர்மானிப்பது உடனடி, நேரடி நடைமுறைப் பிரச்சனையாக இருக்கின்றது. ஆயுதப் போராட்டம் நடக்காதபோதே அது அரசியல், அமைப்பு துறைகளிலான வேலைக்கான நடைமுறைப் பிரச்சனையாகவும் இருக்கின்றது. இது அரசியல் யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திரத்தோடு மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

இந்தியப் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் எந்தப் பாதையினூடாகச் செல்ல வேண்டும் என்பதைத் தீர்மானிக்குமுன் சர்வதேச பாட்டாளி வர்க்கம் இன்றைய புரட்சிகர சகாப்தத்தில் கண்ட புரட்சிப் பாதைகளின் அனுபவங்களையும் மார்க்சிய—லெனினிய—மாவோ சிந்தனை வகுத்தளித்த யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றியும் அவற்றை ஆளும் விதிகள்

மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் தொகுத்தறிந்திட வேண்டும். எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய சர்வவியாபகமான புரட்சி பற்றிய மார்க்சிய - லெனினியக் கோட்பாடு "ஆயுத சக்தியால் அதிகாரத்தைக் கைப்பற்றுவது, யுத்தத்தால் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது, புரட்சியின் கேந்திரக் கடமையும் அதன் அதி உயர்ந்த வடிவமும் ஆகும்." (மாவோ) இக் கோட்பாட்டை வேறுபட்ட நிலைமைகளுக்கு ஏற்ப வேறுபட்ட வழிகளில் பாட்டாளி வர்க்க கட்சிகள் பிரயோகித்து தமது யுத்ததந்திரங்களை வகுக்கின்றன.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள பொதுவுடமைக் கட்சிகளின் நாடு தழுவிய ஆயுதந் தாங்கிய பேரெழுச்சி என்னும் யுத்ததந்திரம் பின்வரும் முறையில் இக்கோட்பாட்டை பிரயோகிக்கிறது.

> "அவை போரிட விரும்பும் ஒரே ஒரு யுத்தம் அவை தயார் செய்து கொண்டிருக்கிற உள்நாட்டு யுத்தந்தான். ஆனால், முதலாளித்துவ வர்க்கம் உண்மையில் திறமையற்றதாக ஆகாத வரையிலும், பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மை ஆயுதமேந்தி எழுந்து நின்று போரிடுவதென்று உறுதிபூணாத வரையிலும் விவசாயிப் பெருந்திரள் பாட்டாளி வர்க்கத்துக்கு விருப்பமுடன் உதவியளிக்காத வரையிலும் இந்தக் கிளர்ச்சியும் யுத்தமும் தொடுக்கப்படக் கூடாது. இத்தகைய கிளர்ச்சியையும் யுத்தத்தையும் தொடுக்கும் காலம் வரும் போது, முதற்படி நகரங்களைக் கைப்பற்றுவதும், பின்னர் நாட்டுப்புறங்களுக்கு முன்னேறுவதுமாகவே இருக்கும், இதற்கு மற்ற பக்கமாக நடக்கக்கூடாது. இவையனைத்தும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள பொதுவுடமைக் கட்சிகளாற் செய்யப்பட்டு உள்ளன; அத்துடன் ருஷியாவில் அக்டோபர் புரட்சியால் இது சரியென்று நிரூபிக்கப்பட்டுள்ளது."
> (மாவோ, தேர்ந்த ராணுவப் படைப்புகள், பக் 559)

ஆனால் கிளர்ச்சியையும் யுத்தத்தையும் தொடுப்பதற்கான காலம் வரும் வரை — நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சி உருவாகும் வரை—பொதுவுடமைக் கட்சிகள் கையைக் கட்டிக் கொண்டு சும்மாயிரா. புரட்சிகரப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்த அது உருவாகும்பொழுது கிளர்ச்சியையும், யுத்தத்தையும் தொடுப்பதற்கான தயாரிப்புகளில் ஈடுபடுகின்றன.

அதற்காக அந்நாடுகளின் தன்னியல்புகளின் காரணமாக 'பாட்டாளி வர்க்க கட்சியின் கடமை ஒரு சட்டபூர்வமான நீண்டகாலப் போராட்டத்தின் மூலம் தொழிலாளர்களுக்குப் போதனையளித்து, பலத்தைக் கட்டி வளர்த்து முதலாளித்துவத்தை ஈற்றிற் தூக்கியெறியத் தயாரிப்பு செய்வதாகும். இந்த நாடுகளில் பிரச்சனை ஒரு சட்டபூர்வமான நீண்டகாலப் போராட்டமும், நாடாளுமன்றத்தை மேடையாக உபயோகிப்பதும், பொருளாதார, அரசியல் வேலை நிறுத்தங்கள் நடத்துவதும், தொழிற்சங்கங்களை அமைப்

பதும் தொழிலாளருக்கு போதனை அளிப்பதுமான ஒன்றாகும். அங்கே அமைப்பு வடிவம் சட்டபூர்வமானதாகவும் போராட்ட வடிவம் ரத்தம் சிந்தாததாக (யுத்த ரீதியற்றதாக)வும் இருக்கும்'' (ஷை நூல், பக் 558-59)

முதலாளித்துவ நாடுகளில் சட்டபூர்வமான வாய்ப்புகள் நிலவும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் மேற்கண்ட முறைகளையும், நாடாளு மன்றத்துக்கு வெளியே பரந்துபட்ட மக்கள் இயக்கங்களும் இறுதியாக அவற்றை ஆயுதந்தாங்கிய எழுச்சியாகவும் வளர்த்தெடுப்பதும், முதலாளித்துவ நாடுகளிலேயே சட்டபூர்வ வாய்ப்புகளின்றி எதேச்சதிகாரம் அல்லது பாசிசம் நிலவும் போது சட்ட விரோத மற்றும் ரகசிய போராட்ட வடிவங்களும் அமைப்பு வடிவங்களும் பின்பற்றப்படுகின்றன.

சீனா போன்ற காலனிய, அரைக்காலனிய, அரைநிலப் பிரபுத்துவ நாடுகளில் புறவயமான நிலைமைகள் காரணமாக அதாவது பொருளாதார வளர்ச்சி சமமற்றதாக இருத்தல் (பொருளாதாரம் ஒருமுகப்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரமாக இல்லாதது) பிரதேசம் பரந்ததாய் இருத்தல் (புரட்சிகர சக்திகள் தந்திரமிக்க போர் நடவடிக்கைகளில் ஈடுபட இது இடமளிக்கிறது)எதிர்ப்புரட்சிமுகாம் ஒற்றுமையற்றும் முரண்பாடுகள் நிறைந்தும் இருத்தல், புரட்சியின் பிரதான சக்தியாய் விளங்கும் விவசாயிகளது போராட்டம் பாட்டாளி வர்க்க கட்சியால் தலைமை தாங்கப்படுதல் ஆகிய காரணங்களினால் புரட்சி முதன் முதலில் கிராமப்புறத்தில்தான் வெற்றியீட்ட முடியும், இதே நிலைமைகளால்தான் புரட்சி சமமற்றதாகி, அதன் பூரண வெற்றி பெறும் கடமை நீண்டகாலமானதாகவும் கடுமையானதாகவும் செய்கின்றன. பிரதானமாக விவசாயிகளது கொரில்லா யுத்தம் என்ற புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் பின்தங்கிய கிராமப் பிரதேசங்களை முன்னேறிய ஸ்திரமான தளப்பிரதேசங்களாக மாபெரும் ராணுவ, அரசியல், பொருளாதார, கலாச்சார புரட்சிக் கோட்டைகளாக மாற்றி, இவற்றிலிருந்து நகரங்களைப் பயன்படுத்திக் கிராமப் பிரதேசங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் பயங்கர எதிரிகளை எதிர்த்துப் போராடுவதும் சொந்த பலம் போதாத சமயத்தில் பலம் வாய்ந்த எதிரிகளுடன் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் போராட்டம் நடத்துவதைத் தவிர்ப்பதும், புரட்சிகர சக்திகளைக் கட்டி வளர்ப்பதும்—என்று இவ்வாறு நீண்டகாலப் போராட்டத்தின் மூலம், புரட்சியின் வெற்றியைப் படிப்படியாகப் பெறுவதும் என்ற பாதையினூடே புரட்சி செல்ல வேண்டியிருக்கின்றது.

எனவேதான், ''அடிப்படையில் இங்குள்ள பொதுவுடமைக் கட்சியின் கடமை கிளர்ச்சியையும், யுத்தத்தையும் தொடுக்கும் முன் ஒரு சட்டபூர்வமான நீண்ட காலப் போராட்டத்தினூடே செல்வதுமல்ல முதலில் நகரங்களைப் பிடித்து பின்னர் நாட்டுப்புறங்களைக் கைப்பற்றுவதுமல்ல மாறாக இதற்கு மாறானது'' (ஷை நூல் பக் 559 60) என்றார் மாவோ.

**இதன் பொருள்: சட்டபூர்வமான போராட்டங்களையும் நகரங்களிலும் இதர கிராமப் பிரதேசங்களிலும் வேலை செய்வதையும், அரசியல் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களையும் மக்கள் யுத்தப்பாதை என்னும் இராணுவ யுத்ததந்திரம் மற்றும் அதன் போர்த்தந்திரங்கள் முற்றாக எதிர்க்கின்றன, இதன் காரணமாக அவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்ப**தல்ல.

"எதிரிக்கெதிரான போராட்டத்தில் மக்களுக்குத் தலைமை தாங்கும் போது கட்சி சட்டமும் விதிகளும் சமூகப் பழக்கமும் அனுமதித்தவை போன்ற பகிரங்கமான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் பயன்படுத்தி நியாயமானவையும் எமக்குச் சாதகமானவையும் கட்டுப்பாடுடையவையுமான போராட்டங்களை நடத்தும் கோட்பாடைக் கடைப்பிடித்து மெதுவாகவும் நிச்சயமாகவும் படிப்படியாகவும் முன்னேறும் போர்த்தந்திரத்தை கைக்கொள்ள வேண்டும்" "ஆனால் ஆயுதப்போராட்டத்தை வலியுறுத்தினால், அது இதர போராட்ட வடிவங்களை நாம் கைவிடுவது என்று பொருள்படாது. அதற்கு மாறாக இதர பல்வேறு போராட்டங்களும் ஆயுதப் போராட்டத்துடன் இணையாவிட்டால், ஆயுதப் போராட்டம் வெற்றிபெற முடியாது. கிராமியத் தளப்பிரதேசங்களின் வேலையை வலியுறுத்தினால், அது நகரங்களிலும் எதிரியாட்சியில் இன்னும் இருக்கின்ற விசாலமான இதர கிராமப்பிரதேசங்களிலும் நாம் செய்ய வேண்டிய வேலையைக் கைவிடுவதென்று பொருள்படாது. மாறாக நகரங்களிலும் இதரக் கிராமப்பிரதேசங்களிலும் வேலை செய்யாவிட்டால் கிராமியத் தளப்பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுவிடும்; புரட்சியும் தோல்வியடைந்துவிடும்; இன்னும் புரட்சியின் இறுதி லட்சியம் எதிரியின் பிரதான தளங்களாகிய நகரங்களைக் கைப்பற்றுவதாகும். நகரங்களில் போதுமான வேலை செய்யாவிட்டால் இந்த லட்சியத்தை நிறைவேற்ற முடியாது" (மாவோ, சீனக்கம்யூனிஸ்டுக் கட்சியும் சீனப் புரட்சியும் பக் 50 மற்றும் 48-49)

இந்த இறுதி லட்சியத்தை அடையும் முறை தளப் பிரதேசங்களிலிருந்து செஞ்சேனை அலையலையாக முன்னேறி எதிரியின் பிரதான தளங்களாகிய நகரங்களைச் சுற்றி வளைத்து தாக்குவதும், நகர்ப்புறங்களில் பரந்துபட்ட மக்களது பொது அரசியல் வேலை நிறுத்தங்களும், அரசியல் ஆர்ப்பாட்டங்களும், ஆயுதந் தாங்கிய எழுச்சிகளும் இணைந்து நாடு தழுவிய வெற்றியை ஈட்டுவதாகும். அதற்கு முன் தேவையாக அமைவது புரட்சியின் சமமற்ற வளர்ச்சி நிலையை மாற்றுவதும் நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவதுமாகும்.

ஆனால் ஒரு காலனிய, அரைக் காலனிய அல்லது நவீன காலனிய மற்றும் அரைநிலப் பிரபுத்துவ நாட்டில் ஒன்று, முதலாளித்துவ நாடுகளில் பின்பற்றப்படும் பாதையாகிய ஒரு சட்ட

பூர்வமான (பாசிசம் அல்லது எதேச்சதிகாரத்தால் அதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படும் போது சட்ட விரோதமான) போராட்டங்களின் மூலம், நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயுமான போராட்டங்களின் மூலம், பொருளாதார மற்றும் அரசியல் வேலை நிறுத்தங்கள் மூலம் அதாவது ரத்தம் சிந்தாத (யுத்த ரீதியற்ற) போராட்ட வடிவங்கள் மூலம் தொழிலாளர்களையும், பரந்துபட்ட மக்களையும் பயிற்றுவித்து பலத்தைக் கட்டி வளர்ப்பதும், இறுதியில் ஆளும் வர்க்கத்தை தூக்கியெறிவதற்கான தயாரிப்பும் அடங்கிய பாதையும் பொருந்தாது; அல்லது சாருவும் பிற 'இடது' சந்தர்ப்பவாதிகளும் நமது நாட்டில் பின்பற்றியது போன்ற 1927 சியாங்-கே-ஷேக் எதிர்ப்புரட்சிக் குடை கவிழ்ப்பை அடுத்து சீனத்து 'இடது' சந்தர்ப்பவாதிகள் பின்பற்றியது போன்ற — ''அலைந்து திரியும் கொரில்லா நடவடிக்கைகளை மாத்திரம் விரும்பும் கொள்கையால் நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப் படுத்தும் இந்தக் கடமையை நிறைவேற்ற முடியாது.'' (மாவோ, தேர்ந்த ராணுவப் படைப்புகள் பக்கம் 117-18)

மாறாக ஆரம்பத்திலிருந்தே செஞ்சேனை, கொரில்லாப் படைகள் மற்றும் தளப் பிரதேசங்களை ஸ்தாபிப்பதும், விரிவடையச் செய்வதும் மூலமாகத் தான் நாடு தழுவிய பேரெழுச்சியைத் துரிதப்படுத்த முடியும், புரட்சியின் சமமற்ற வளர்ச்சி நிலையை மாற்ற முடியும். இதை உறுதிப்படுத்தும் வகையில் மீண்டுமொரு முறை இது பற்றிய மாவோவின் போதனைகளைப் பார்ப்போம்:

''அதாவது தளப்பிரதேசங்களை நிறுவுதல்; அரசியலதிகாரத்தை திட்டமிட்டு நிறுவுதல்; விவசாயப் புரட்சியை ஆழமாக நடத்துதல்; முதலில் வட்டாரச் செங்காவலர்படை பின்னர் குறிச்சி செங்காவலர் படை, அதன் பின்னர் ஸ்தல செஞ்சேனை என கிரமமான செஞ்சேனையாக்கும் வரை கட்டியமைக்கும் தொடர்ச்சியான முறையில் மக்கள் ஆயுதப் படைகளை விரிவாக்குதல், அலையலையாக முன்னேறுவதன் மூலம் அரசியல் அதிகாரத்தைப் பரப்புதல்—இவை போன்ற இன்னும் பிற பற்றிய கொள்கை ஐயமின்றி சரியானதென்பதையும் புரிந்து கொள்ளலாம். இதன் மூலந்தான், சோவியத் யூனியன் உலகம் முழுவதுமுள்ள புரத்சிகர பரந்து பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது போல நாமும் நாடும் முழுவதிலுமுள்ள பரந்துபட்ட மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும். இதன் மூலந்தான் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுக்கு பிரும்மாண்டமான இடையூறுகளை உருவாக்குவதும் அவற்றின் அத்திவாரத்தை ஆட்டங்காணச் செய்து அவற்றின் உட்சிதைவைத் துரிதப்படுத்துவதும் சாத்தியமாகும்; இதன் மூலந்தான் வருங்கால மாபெரும் புரட்சியின் பிரதான ஆயுதமாக விளங்கக் கூடியதான செஞ்சேனை ஒன்றை உருவாக்குவது உண்மையில் சாத்தியமாகும்.

சுருங்கக் கூறின் இதன் மூலந்தான் புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவது சாத்தியமாகும்'' (ஷெ. நூல்) பக் 117-18)

நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிப் பாதையை மேற்கொள்ளும் முதலாளித்துவ நாடுகளினதும், மக்கள் யுத்தப் பாதையை மேள்கொள்ளும் காலனிய, அரைக் காலனிய அல்லது நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளினதும் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின் போக்குகள் பின்வருமாறு முக்கியமாக மாறுகின்றன. அவை:

1. புறவயமான நிலைமைகளில் உள்ள மாறுபாடு. அதாவது முதலாளித்துவ நாடுகளில் நடந்து முடிந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் யுத்ததந்திரம் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களுக்கு எதிராக விவசாயிகளைப் பிரதான கூட்டாளியாகக்கொண்டு ஊசலாடும் முதலாளித்துவ வர்க்கத்தை முடமாக்கி புரட்சியில் வென்று பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளது ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவதாக இருந்தது. புரட்சி ஒப்பு நோக்கில் பலவீனமான எதிரிக்கு எதிராக சமமாக வளர்ச்சியுற்று (மத்தியத்துவப் படுத்தப்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரம் ஒப்பு நோக்கில் வளர்ச்சியுற்று) இருந்த நிலைமைகளில் நடந்தது.

ஆனால் காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரைநிலப் பிரபுத்துவ நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் யுத்ததந்திரம் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக மட்டுமின்றி ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக, ஆக ஒப்புநோக்கில் பலம் வாய்ந்த எதிரிகளுக்கு எதிராகவும் இருக்கிறது. அத்துடன் உள்நாட்டில் முதலாளித்துவ வர்க்கம் ஒரே சங்கமமான ஒருமையாக இல்லாது தரகு அதிகார முதலாளித்துவ வர்க்கமாகவும் தேசிய முதலாளித்துவ வர்க்கமாகவும் பிளவுபட்டு, முன்னது நிலப்பிரபுத்துவத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் கூட்டு சேர்ந்துகொண்டு புரட்சிக்கு துரோகமிழைத்து எதிர்ப்புரட்சி முகாமில் உள்ளதால் அதற்கெதிராகவும் இருக்கும். தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் ஊசலாட்டம், பலவீனம் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற இரட்டைத்தன்மை காரணமாக குறிப்பிட்ட சமயங்களில் குறிப்பிட்ட அளவு அதனுடன் ஐக்கிய முன்னணி அமைவதும், சமமற்ற வளர்ச்சியுடைய (சிதறிய நிலப்பிரபுத்துவ உற்பத்தி மிகுநிலை பெற்றிருப்பது) நாட்டில் விவசாயிகளைப் பிரதான கூட்டாளியாகக் கொண்டு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை பாட்டாளி வர்க்கத் தலைமையில் நிறுவுவதுமாக இருக்கிறது.

இம்மாறுபாடுகள் காரணமாக புரட்சி நீண்ட நெடியதும், கொடியதும், கடுமையானதும், இடர்ப்பாடுகள் மற்றும் நெளிவு சுழிவு மிக்கதாகவும் ஏற்றத்தாழ்வாக வளர்வதாகவும் காலனிய அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளில் இருக்கும்.

2. மேற்கண்ட குணாம்சங்கள் மற்றும் மாறுபாடுகள் காரணமாக இரண்டாவது மாறுபாடு எழுகிறது. முதலாளித்துவ நாடுகளில் நடந்து முடிந்த முதலாளிததுவ ஜனநாயகப் புரட்சியின் யுத்ததந்திரத்தில் விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் பிரதான கூட்டாளியாக இருந்திருப்பினும், பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளது ஜனநாயக சர்வாதிகாரம் யுத்ததந்திர அடிப்படை முழக்கமாக இருந்திருப்பினும் அந்நாடுகளின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் முடிவோடு சோசலிசத்தின் தலைவிதி பிணைக்கப்பட்டதாக இல்லை. எனவேதான், "முதலாவதாக, ருஷியாவில் சோசலிசத்தின தலைவிதியை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் முடிவோடு மார்க்சியம் பிணைப்பதில்லை;'' (லெனின், சமூக ஜனநாயகத்தின் விவசாயத் திட்டம்) ஆனால் விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் இரு வளர்ச்சிப் போக்குகளை பிரஷ்யன் ஜங்கர் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ வளர்ச்சி மற்றும் விவசாயிகளது முதலாளித்துவ வளர்ச்சி - கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு வளர்ச்சிப்போக்கின் நிலைமைகளையும் சிறப்பம்சங்களையும் மக்களிடம் தெளிவாகக் காட்டும்; ஒரு தீவிரமான அரசியல் புரட்சியின்றி ஒரு தீவிரமான விவசாயப் புரட்சி சாத்தியமென்ற கருத்தை உக்கிரமாக முறியடிக்க வேண்டும் என்ற கொள்கையே விவசாயிகளது விவசாயப் புரட்சி பற்றியதாக இருக்கும். உண்மையில் ருஷியாவின் விவசாயிகளது விவசாயப் புரட்சி அக்டோபர் சோசலிசப் புரட்சியின் ஒரு துணை விளை பொருளாக மட்டுமே அமைந்தது.

ஆனால் காலனிய, அரைக்காலனிய, அல்லது நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளின் புதிய வகைப்பட்ட முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் சாராம்சமாக விவசாயிகளது விவசாயப் புரட்சி பின்வரும் இரு காரணங்களால் அமைகின்றது: ஒன்று, நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களுக்கெதிராக என்பதாக அல்ல, சமூக மற்றும் பொருளாதாரத்தில் மிகுநிலை பெற்றிருப்பதாக உள்ள நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக இருக்கிறது; மற்றொன்று ஏகாதிபத்தியத்துக்கு எதிரான "தேசியப் பிரச்சனை சாராம்சத்தில் விவசாயிகளது பிரச்சனை'' என்கிற முறையிலும் இருக்கிறது. இதனால் விவசாயிகளது விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சியின் முடிவோடு அடுத்த கட்டமான சோசலிசப் புரட்சியின் தலைவிதி நேரடியாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. எனவே விவசாயிகளது பிரச்சனை அதிமுக்கியத்துவமுடையதாகவும், பாட்டாளி வர்க்கத் தலைமையிலான விவசாயிகளது புரட்சியும், புரட்சிகர யுத்தமுமாக இருக்கின்றது.

3. முன்னிரு மாறுபாடுகள் காரணமாகவே மூன்றாவது மாறுபாடு எழுகிறது. முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவ வர்க்கம் உண்மையில் திறமையற்றதாக ஆகாதவரையிலும், பாட்டாளி வர்க்சத்தின் பெரும்பான்மை, ஆயுதமேந்தி

எழுந்து போரிடுவதென்று உறுதி பூணாதவரையிலும், விவசாயி மக்கள் திரளினர் பாட்டாளி வர்க்கத்திற்கு விருப்புடன் உதவியளிக்காத வரையிலும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான கிளர்ச்சியும், யுத்தமும் நாடு தழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சி - தொடுக்கப்படக் கூடாது. இத்தகைய நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சி புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது— நிலைமை உருவாகும்வரை ஒரு சட்டபூர்வமான, சட்டவிரோதமான நீண்டகாலப் போராட்டத்தை நாடாளுமன்றத்துக்குள்ளேயும், வெளியேயும் நடத்துவது, பொருளாதார, அரசியல் வேலைநிறுத்தங்கள் நடத்துவது, மற்றும் பிற மக்கள் திரள் அமைப்புகள் மக்கள் திறள் போராட்டங்கள் ஆகிய இரத்தம் சிந்தாத (யுத்தரீதியற்றதாக) போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களிலான அக நிலைத் தயாரிப்புகளில் ஈடுபடுவதும் இறுதியிற்தான் அரசியல் அதிகாரத்துக்கான புரட்சியும் புரட்சிகரயுத்தமும் வெடிப்பதும் இருக்கும். எனவே் புரட்சியின் அதி உயர்ந்த அமைப்பு வடிவங்களான அரசியல் படையும் எழுச்சிக்கான உறுப்பும் அதிகாரத்துக்கான உறுப்புமான சோவியத்துக்களும் ஆயுதப்படையும் இறுதியில்தான் புரட்சியினூடாகத்தான் கட்டியமைக்கப்படுகின்றன.

ஆனால், காலனிய அரைக்காலனிய நவீனகாலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில், புரட்சியின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி நிலையை மாற்றுவது மற்றும் நாடுதழுவிய புரட்சி பேரெழுச்சியை நாடுதழுவிய புரட்சி இயக்கத்தின் வெள்ளம்பெருகுவதைத் - துரிதப்படுத்துவதற்கான போராட்டங்களினூடாகத்தான் நாடுதழுவிய இறுதி வெற்றிக்கான அகநிலைத் தயாரிப்புகளை செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. இது இந்நாடுகளில் செஞ்சேனை, கொரில்லாப்படைகள் மற்றும் தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதும் வளர்ச்சியடையச் செய்வதும் மூலமாக மட்டுமே சாத்தியம். இறுதி வெற்றி நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சி உருவாகும் போது தளப்பிரதேசங்களில் இருந்து செஞ்சேனை அலையலையாக முன்னேறி நகரங்களைச் சுற்றி வளைத்து தாக்குவதும் நகர்ப்புறங்களில் புரட்சிகர சக்திகளின் பொது அரசியல் வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சி மற்றும் ஆயுதமேந்திய எழுச்சி ஆகியவற்றோடு இணைந்திருப்பினும், புரட்சியும் புரட்சிகர யுத்தமும் அதற்கான தயாரிப்புக் கட்டங்களிலேயே துவங்கி விடுகிறது. எனவே புரட்சியின் அதிஉயர்ந்த அமைப்பு வடிவங்களான அரசியல் படையும் —ஆயுதப் படையாகிய செஞ்சேனையும், ஆயுதமேந்திய மக்கள் படைக்குழுவும்—புரட்சிகர எழுச்சிக்கான, போராட்டத்துக்கான உறுப்பும், அதிகாரத்துக்கான உறுப்புமாகிய புரட்சிகர மக்கள் பிரதிநிதித்துவ சபையும் நிர்வாக கமிட்டியுமாகிய சோவியத்துக்களும் — புரட்சியின் ஆரம்பத்திலேயே கட்டி வளர்க்கப் படுகின்றன.

4. முதல் மூன்று மாறுபாடுகள் காரணமாகவே நான்காவது மாறுபாடும் எழுகிறது. அதாவது முதலாளித்துவ நாடுகளில் கட்சி கட்டும் முறை, மக்களைத் திரட்டும் முறை மற்றும்

புரட்சிகர ராணுவத்தைக் கட்டும் முறை பின்வருமாறு அமைகிறது. புரட்சியில் வென்று அரசியலதிகாரத்தைக் கைப்பற்றும் முன் கட்சியின் வளர்ச்சி இரண்டு காலகட்டங்களை உடையது. கட்சி தோற்றுவிக்கப்படும், உருவாக்கப்படும் முதற் காலகட்டத்தில் கட்சியின் தலைமைக் கருக்குழுவையும், அணியையும் கட்டுவதற்குப் பாட்டாளி வர்க்கத்நின் முன்னணியை வென்றெடுத்து அமைப்பாக்கும் உறுதிப்படுத்தும் பணியே—கட்சி அபின் கவனத்தையும் அக்கறையையும் தல சொந்த வாழ்வுக்கும் பாதுகாப்புக்குமான—ஒருவகை சுயதேவைப் பூர்த்தியுடைய சக்தியாக்குவதுதான். புறநிலை மற்றும் அகநிலைக் காரணங்களினால் கட்சியின் யுத்ததந்திரப் பிரயோகம் - நேரடி. (ரிசர்வு —துணை) சேமிப்பு சக்திகளைப் பயன்படுத்துவது அவசியமாகவே குறுகலாகவும் வரம்புக்குட்பட்டும், மறைமுக (ரிசர்வு—துணை) சேமிப்பு சக்திகளைப் பயன்படுத்துவது கிட்டத்தட்ட இல்லாமலும் இருக்கும். அதேபோன்று கட்சியினுடைய போர்த்தந்திரங்களின் பிரயோகம் — யுத்ததந்திர வெற்றிக்காகவும், பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பதற்காகவும் எல்லாப் போராட்ட வடிவங்களையும் அமைப்பு வடிவங்களையும் அவற்றின் இணைப்புச் சேர்க்கையிலும் பரஸ்பரத் துணை புரிவதிலும் பயன்படுத்துவதும் கூட அவசியமாக குறுகலானதாகவே இருக்கும்.

இரண்டாவது காலகட்டத்தில் — சுயதேவைப் பூர்த்தியுடையதாகவும், தனது வாழ்வையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்திக் கொண்டதாகவும் மாறியதால் —ஆளும் வர்க்கத்தைத் தூக்கியெறிந்து அரசியலதிகாரத்தைக் கைப்பற்றும் பொருட்டு பரந்துபட்ட தொழிலாளி விவசாயி பரந்துபட்ட மக்களைப் பாட்டாளி வர்க்கத்தினுடைய முன்னணியின் பக்கம் வென்றெடுக்கும் சக்தியாகி, கட்சி தயாரிப்புக் காலகட்டத்திலிருந்து புரட்சிகர செயலுக்கான தலைமை அமைப்பாகிறது. கட்சியின் யுத்ததந்திரப் பிரயோகம் பரந்து விரிந்ததாகவும் நேரடி, மறைமுக சேமிப்பு (ரிசர்வு—துணை) சக்திகளை வென்றெடுக்கவும் பயன்படுத்தவும். பிரதானமாக திசை திருப்பப்படும். அதேபோன்று கட்சியினுடைய போர்த்தந்திரங்களின் பிரயோகம் பரந்து விரிந்ததாகவும் பரந்துபட்ட மக்களது மற்றும் கட்சியினது அமைப்புகளும் இயக்கங்களும் பல்கிப் பெருகி பல புதிய வடிவங்களை உடையதாகவும் இருக்கும். கட்சியைக் கட்டும் முறையும் மக்களைத் திரட்டும் முறையும் இவ்வாறு இரு வெவ்வேறு கட்டங்களில் நடக்கும். ஆனால் இரு காலகட்டங்களிலுமே ஒரு தேசிய சக்தியாகவும், கிளர்ந்தெழும் புரட்சிகரக் கட்சியாகவும் இருக்க முடியும். ஆனால் செஞ்சேனையைக் கட்டுவது நாடு தழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சி மூலம் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தினூடே பகுதி அரசியல் வேலைநிறுத்தம், அரசியல் கிளர்ச்சி, பொது அரசியல் வேலைநிறுத்தம் எனத் தொடங்கி தடுப்புச்சுவர் போராட்டங்கள், தெருமுனைப் போர்கள், கொரில்லாப் போர்கள், புரடசிகர ராணுவப் படைப் பிரிவுகள் என்று வளர்ந்து இறுதியிலேயே புரட்சிகர அதிகாரத்துடன் கூடவே உருவாகும். உண்மையில் புரட்சியில் வென்ற பின்

தான் பூர்த்தியான கிரமமான செஞ்சேனை கட்டியமைக்கப் படும்.

ஆனால் காலனிய, அரைக்காலனிய நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் கட்சி கட்டும் முறை, மக்களைத் திரட்டும் முறை மற்றும் புரட்சிகர ராணுவத்தைக் கட்டும் முறை இதற்கு மாறுபாடானது. கருக்குழுவையும் அணிகளையும் கொண்ட ஒரு தேசிய சக்தியாக கட்டியமைப்பது ஒரு கட்டமாகவும், பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பது அடுத்த கட்டமாகவும் இறுதியில் செஞ்சேனையைக் கட்டியமைப்பது என்ற வளர்ச்சிப் போக்குடையதாக இராது. நாடு தழுவிய புரட்சிகரப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவதற்கான செம்படை, கொரில்லாப் படைகள் மற்றும் செந்தளப் பிரதேசங்களையும் ஸ்தாபித்து வளர்ப்பது என்ற புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தினூடாகவே இறுதி வெற்றிக்கான தயாரிப்பு நடந்தேறுவதன் காரணமாக ஆரம்பத்திலிருந்தே மக்களைத் திரட்டுவதோடும், ஆயுதப் போராட்டத்தோடும் கட்சி கட்டுவதும் பின்னிப் பிணைந்திருக்கிறது.

"கட்சியின் தோல்விகள் அல்லது வெற்றிகள், அதன் பின்னடைவுகள் அல்லது முன்னேற்றங்கள், அதன் சுருக்கங்கள் அல்லது விரிவுகள் அதன் வளர்ச்சி, ஸ்திரப்பாடு ஆகியன முதலாளித்துவ வர்க்கத்திற்கும் கட்சிக்கும், ஆயுதப்போராட்டத்துக்கும்—கட்சிக்கும் இடையிலான உறவுகளுடன் தவிர்க்க முடியாதபடி இணைக்கப்பட்டுள்ளன. முதலாளி வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பது அல்லது அதைத் தகர்க்க வேண்டி நிர்ப்பந்தம் ஏற்படும்போது அதைத் தகர்ப்பது என்ற பிரச்சனையில் சரியான அரசியல் மார்க்கமொன்றைக் கைக்கொள்ளும்போது எமது கட்சி தன் வளர்ச்சியிலும் ஸ்திரப்பாட்டிலும்போல்ஷவிய மயமாக்கத்திலும் ஒருபடி முன்னேறுகின்றது. ஆனால் முதலாளி வர்க்கத்துடனுள்ள உறவுகளில் தவறான மார்க்கமொன்றைக் கைக்கொள்ளும் போது எமது கட்சி தன் வளர்ச்சியிலும் ஸ்திரப்பாட்டிலும் போல்ஷவியமயமாக்கத்திலும் ஒருபடி பின்னேறுகின்றது. அது போலவே, எமது கட்சி புரட்சிகர ஆயுதப் போராட்ட பிரச்சனையைச் சரியான முறையில் கையாளும் போது தன் வளர்ச்சியிலும், ஸ்திரப்பாட்டிலும் போல்ஷவியமயமாக்கத்திலும் ஒருபடி முன்னேறுகின்றது. ஆனால் அந்தப் பிரச்சனையைத் தவறாகக் கையாளும்போது அது ஒருபடி பின்னேறுகின்றது." (கம்யூனிஸ்டை அறிமுகம் செய்வது, பக் 11-12)

எனவே முதலாளித்துவ நாடுகளைப் போலன்றி கட்சியின் வளர்ச்சியும் ஸ்திரப்பாடும் போல்ஷவியமயமாக்கலும் அரசியல், ராணுவ யுத்ததந்திரங்கள் மற்றும் போர்த்தந்திரங்களை ஏற்றத்தாழ்வான வளர்ச்சிக்கேற்ப — நகர்ப்புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்கும், கிராமப் புறங்களிலேயே ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் வெவ்வேறு கட்டங்களிலும் படிகளிலும்—பிர

யோகிப்பதாகவே கட்சியைக் கட்டும் முறை, படையைக் கட்டும் முறை மற்றும் மக்களைத் திரட்டும் முறை ஆகியவை நடந்தேறு கின்றன.

5. முன் நான்கு மாறுபாடுகள் காரணமாகவே ஐந்தாவது மாறுபாடும் எழுகிறது. அதாவது முதலாளித்துவ நாடுகளில் நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சி உருவாகி கிளர்ச்சியும் யுத்தமும் தொடுக்கும் காலம் வரும்போது, முதற்படி கேந்திரமான நகரங்களைக் கைப்பற்றுவதும், பின்னர் நாட்டுப்புறங்களுக்கு முன்னேறுவதுமாகவே இருக்கும்; இதற்கு மாற்றுப்பக்கமாக நடக்கக்கூடாது. இந்த அடிப்படையிலேயே நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிக்குத் தயாரிக்கும் போது கேந்திரமான நகரங்களுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் முன்னுரிமை கொடுத்து பொதுத்திசைவழி, பொது வேலைத்திட்டம் வகுத்துக் கொள்ளப்படும்.

ஆனால் காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் முதலில் நகரங்களைப் பிடித்து பின்னர் நாட்டுப்புறங்களைக் கைப்பற்றுவதல்ல; மாறாக இதற்கு மாறானது. பெரியவையும், சிறியவையுமான புரட்சிகரத் தளப்பிரதேசங்களையும் புரட்சிகர ஆட்சிகளையும் ஸ்தாபித்து நீண்ட காலத்திற்கு நிலைநிறுத்தி வைத்திருப்பதும், விரிவாக்குவதும், நாட்டுப்புறத்திலிருந்து நகரங்களைச் சுற்றி வளைப்பதற்கான புரட்சிகர யுத்தங்களை நீண்டகாலமாக நடத்துவதும் பின்னர் நகரங்களைக் கைப்பற்றுவதற்கும் தேச விசால வெற்றியை ஈட்டுவதற்கும் சிறிது சிறிதாக முன்னேறுவதும் ஆகும். இந்த அடிப்படையிலேயே கிராமப்புறங்களுக்கும் விவசாயி வர்க்கத்திற்கும் முன்னுரிமை கொடுத்து பொதுத்திசை வழியும் பொது வேலைத்திட்டமும் வகுத்துக் கொள்ளப்படும்.

6. இறுதியாக, இவையனைத்தும் காரணமாக எழும் மாறுபாடு. அதாவது முதலாளித்துவ நாடுகளில் நாடு தழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சி என்னும் புரட்சிகர யுத்தமும் புரட்சியும் விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்ததந்திர ரீதியிலானதாகும். தீர்மானகரமான மோதலையுடைய இறுதிப் போர்த்தந்திரங்களும் அவ்வாறே. புரட்சியின் சக்திகளை யுத்ததந்திர ரீதியில் பயன்படுத்துவதற்கு பின்வரும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படுகின்றன:

1. ஆயுதமேந்திய மக்கள் எழுச்சியை **விளையாட்டாகக் கருதி** நடக்காதே. அதை ஆரம்பிக்கிறபோது **அதன் முடிவை நீ எட்டித் தீரவேண்டும்** என்பதை உறுதியாக உணர்ந்து கொள்.

2. உயர்நிலையாயமைந்த இடத்தில், விதியை நிர்ணயிக்கும் தருணத்தில், **எதிரியின் சக்தியைவிட மிகவும் அதிகமாகஉனது சக்திகளை நீ திரட்டிக் குவிக்க வேண்டும்.**

இல்லாவிட்டால் உன்னை விடத் தயாரிப்புகளிலும் நிறுவன அமைப்பிலும் சிறப்பான வசதிகளை அனுபவிக்கும் எதிரி ஆயுதமேந்திய எழுச்சியாளர்களை ஒழித்துக் கட்டிவிடுவான்.

3. ஆயுதமேந்திய எழுச்சி ஆரம்பமாகிவிட்டால் நீ மகத்தான திட உறுதியுடன் நடவடிக்கைஎடுக்கவேண்டும். சகல சக்திகளையும், முறைகளையும் பிரயோகித்து தவறாமல் மேலேறித் தாக்கும் ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். தடுத்து நிறுத்தும் ரீதியான நடவடிக்கை ஒவ்வொரு ஆயுதமேந்திய மக்கள் எழுச்சிக்கும் சாவையே உண்டாக்கும்.

4. நீ எதிரியை எதிர்பாராதிருக்கும் போது தாக்கி திகைப்படையச் செய்ய முயற்சிக்க வேண்டும். அவனுடைய படைகள் சிதறி நிற்கும் சமயம் பார்த்துப் பாய வேண்டும்.

5. வெற்றி சிறியதாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு தினமும் வெற்றிகளைக்காண முயற்சிக்க வேண்டும். (எழுச்சி ஒரு நகரத்தில் மட்டும் நடப்பதாக இருந்தால், ஒவ்வொரு மணி நேரத்திலும் வெற்றிகளைக்காண முயற்சிக்க வேண்டும் என்று கூடச் சொல்லலாம்.) என்னவானாலும் சரி, உற்சாகமும் நம்பிக்கையும் எதிரியை விட உன்பக்கம் மேலோங்கி நிற்கும்படி எப்பொழுதும் பார்த்துக் கொள்ள வேண்டும். (லெனின் தொகுதிகள், எண் 21. பக்கம் 319-20)

ஆனால் காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளில் புரட்சியும், புரட்சிகர யுத்தமும் விரைவில் வெற்றி தோல்வி காணுவதாக ராணுவ யுத்ததந்திர ரீதியில் இருக்கா. நீண்டகால மக்கள் யுத்தப்பாதையின் மூலம் சிறிது சிறிதாக முன்னேறுவதாகவே இருக்கும். ஆனால் நடைமுறைப் போரியக்கம் மற்றும் போர்த்தந்திரங்களின் நெறிமுறைகள் இதற்கு நேரெதிரானவையாக அதாவது விரைவில் வெற்றி தோல்வி காணுவதாக இருக்கும்.

"யுத்ததந்திர ரீதியில் அமைந்த ஒரு நீண்டகால யுத்தமும் விரைவில் வெற்றி தோல்வி காணும் போரியக்கங்கள் அல்லது சண்டைகளும் ஒரே காரியத்தின் இரு அம்சங்களாகும். உள்நாட்டு யுத்தங்களில் ஒரே நேரத்தில் சமமாக வலியுறுத்தப்பட வேண்டியவையும், ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தங்களுக்கும் பொருந்துபவையுமான இரு கோட்பாடுகளாகும். பிற்போக்கு சக்திகள் மிகப்பலமானவையாகையால் புரட்சிகர சக்திகள் சிறிது சிறிதாக மட்டுமே வளர்கின்றன. இந்த உண்மை எமது யுத்தத்தின் நீண்ட தன்மையையும் நிர்ணயிக்கிறது. இங்கு பொறுன்மையின்மை தீங்கானதும் 'விரைவில் வெற்றி தோல்வி காணுவதைக்' கோருவது தவறானதும் ஆகும். இந்த விஷயத்திலிருந்து ஆரம்பித்து எமது நீண்டகால யுத்ததந்திரத்தை உருப்படுத்துவது எமது

யுத்ததந்திரத்தை வழிநடத்தும் முக்கிய கோட்பாடுகளில்
ஒன்று.

"இதற்கு நேர்மாறானதே போரியக்கங்களுக்கும்
சண்டைகளுக்கும் பொருந்தும்-இங்கு கோட்பாடு நீண்டிருத்
தல் அல்ல, விரைவில் வெற்றி தோல்வி காணுதலே. போரியக்
கங்களிலும் சண்டைகளிலும் விரைவான வெற்றி தோல்வி
வேண்டப்படுகிறது; இது எல்லாக் காலங்களிலும் எல்லா
நாடுகளிலும் சாமானதாகும்" (மாவோ, தேர்ந்த ராணுவப்
படைப்புகள், பக் 283-85)

எனவே முதலாளித்துவ நாடுகளில் புரட்சியும் புரட்சிகர
யுத்தமும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரம் ஆகிய இரண்டு
ரீதியிலும் விரைவில் வெற்றி தோல்வி காணுவதைக் கோட்
பாடாகக் கொண்டது. ஆனால் காலனிய, அரைக்காலனிய நவீன
காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளில் யுத்ததந்திர
ரீதியில் நீண்டகால யுத்தமாகவும் போர்த்தந்திர ரீதியில் விரை
வில் வெற்றி தோல்வி காணுவதாகிய போரியக்கங்களும் சண்டை
களும் அடங்கியவை ஆகும்.

நாடு தழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சிப் பாதையை
மேற்கொள்ளும் முதலாளித்துவ நாடுகளினதும் மக்கள் யுத்தப்
பாதையை மேற்கொள்ளும் காலனிய, அரைக்காலனிய நவீன
காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளினதும் புரட்சி
மற்றும் புரட்சிகர யுத்தம் மேற்கண்டவாறு மாறுபடுகின்றன.
இதன் பொருள் உலகில் உள்ள எல்லா நாடுகளும் இதில் ஏதாவது
ஒரு பாதையைத்தான் மேற்கொள்ள வேண்டும், அல்லது ஒரே
வகையான நாடுகளில் கூட யாந்திரீக முறையில் அப்படியே
பாவிக்க வேண்டும் என்பதல்ல. மூன்றாவது ஒரு பாதையையும்
சில நாடுகள் மேற்கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட இந்த
இரண்டு புரட்சிப் பாதைகளில் ஏதாவது ஒன்றின் வழியாக
துவக்கம் முதல் இறுதி வரை புரட்சி அப்படியே செல்லாமல்
தேசிய, சர்வதேசிய சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்
காரணமாக போலந்து, செக்கஸ்லோவாகியா, ருமேனியா
யுகஸ்லேவியா, அல்பேனியா போன்ற கிழக்கு ஐரோப்பிய
நாடுகள் வேறொரு விதமான பாதையில் நடந்தேறின அதாவது
ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பொதுவுடமைக் கட்சிகள் மேற்
குறித்த ஏதாவது ஒரு பாதையில் புரட்சியை முன்னெடுத்துச்
சென்று கொண்டிருக்கும் போதே எல்லா காலங்களிலும்
தயாராக இருந்து. அந்தந்த நாட்டு ஆளும் வர்க்கங்களுக்கு
நெருக்கடி ஏற்படும் போது குறிப்பாக ஏகாதிபத்திய யுத்தங்
களின் போது முதலில் உள்நாட்டு ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக
வும், பின்னர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும் அஞ்சாது
சமரசமின்றி போராடி-பொதுவுடமைக் கட்சிகளுக்கு ஆதரவாக
வரும் சோசலிச, மக்கள் ஜனநாயக மற்றும் நேச நாட்டுப் படை
களின் உதவிகொண்டும்-மக்கள் நம்பிக்கையைப் பெற்று ஆட்சி
யைக் கைப்பற்றுவது ஆகும். இவ்வகையான புரட்சிப் பாதைகள்
சர்வதேசிய-தேசிய ரீதியில் புரட்சியின் எதிரிகளிடையே

நெருக்கடிகள் மிகமிகத் தீவிரமடையும் போது நடக்க கூடியவைகள்தானே ஒழிய இது ஒரு பொதுவான திசைவழி அல்ல. மேலும் இம்மாதிரியானவைகள் வெற்றியடைவது மேற்குறித்த இரண்டு பாதைகளில் ஏதாவது ஒன்றின் வழியாக ஏற்கனவே அந் நாட்டுப் பொதுவுடமையாளர்கள் புரட்சியை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கிற அடித்தளத்தைப் பொறுத்தே உள்ளது. அந்த அடித்தளம் இல்லையேல் இவ்வகையான பாதைகள் சாத்தியமே இல்லை.

இந்த இரண்டு பாதைகளும் வெற்றி பெற்றதற்குகாரணம் பருண்மையான நிலைமைகளை ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்ப மார்க்சியத்தைப் பருண்மையாகப் பிரயோகித்து அதிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் படிப்பினைகளைத் தொகுப்பது; அதைக் கொண்டு வழிகாட்டும் நெறிமுறைகளை வளமாக்குவது, மீண்டும் பிரயோகிப்பது; அதிலிருந்து பெறப்பட்ட படிப்பினைகளைத் தொகுத்து மறுபடியும் பிரயோகத்தை செழுமையாக்குவது-இவ்வாறுதான் புரட்சிகள் வெற்றிகரமாக நடந்தேறின, படிப்பினைகளைத் தொகுத்து பொதுமைப்படுத்தி ஒரு பொதுப் பாதையையும் பொதுத்திசைவழியையும் வகுக்க முடிந்தது. தோல்விகண்டபோது துவளாது, வெற்றிகண்டபோது துள்ளாது, மார்க்சிய-லெனினிய பற்றுக்கோலை உறுதியாகப் பற்றி நின்றதன் பலனாகத்தான் இதைச் சாதிக்க முடிந்தது. ஆனால். குறிப்பிட்ட தோல்விகள், பின்னடைவுகள் ஆகியவைகளைக்கண்டு மனம் துவண்டு வலது சந்தர்ப்பவாத சரணடைவுப் பாதையையோ அல்லது இழப்புக்களையும், அடக்குமுறைக் கொடுமைகளையும் கண்டு வெகுண்டு தீவிரவாத-துணிகரவாத நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விடுவதனால் மட்டுமே புரட்சியை முன்னெடுத்துச் செல்லலாம் என்ற விரக்திப்பாதையையோ நாடாமல், மனம் தளராது, விடாப்பிடியாக, சரியான மக்கள் திரள் வழியைப் பின்பற்றியதால்தான் நடந்தேறியது. ஆனால் இந்த நூற்றாண்டின் பிற்பாதியின் ஆரம்பத்தில் குறிப்பாக அறுபதாம் ஆண்டுகளில் மார்க்சிய-லெனினிய ஒளியில் புரட்சிக்குப் புதுத்தடம் போடுகிறோம் என கூறிக்கொண்டு முழுக்க முழுக்க மார்க்சிய-லெனினியத்திற்கு குழிபறிக்கும் போக்கை, புரட்சிகர இயக்கத்திலிருந்து மக்களை ஓடவைக்கின்ற, புரட்சியைக் கண்டு மக்கள் அச்சம் கொள்ளத்தக்க தீவிர துணிகரவாதப் போக்கை கடைபிடித்த சில மாவீரர்களும் அவர்களுடைய குழுக்களும் வரலாற்றில் தோன்றினர்.

இவர்களுள் மிகப் பிரபலமானவர் சேகுவாரா. மக்கள் திரளின் வலிமையை மிகக் குறைவாக கணித்து, மக்கள் திரள் போராட்டங்களை நடத்துவதைக் கைவிட்டு, ஆயுதங்களே அனைத்தையும் ஆக்கவல்லது என்ற சித்தாந்தத்தைக் கொண்டிருந்தார். நாடு தழுவிய அளவில் — மக்களை அணி திரட்டாமலே, அவர்களை ஈடுபடுத்தாமலே, ஒரு சில முன்னோடிகளை மட்டும் கொண்டு — கொரில்லாப் போரைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் புரட்சியைச் சாதித்துவிடலாம் என சொன்னவர்.

புரட்சிகர கட்சியைக் கட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை; புரட்சிக்குத் தலைமை தாங்கும் வர்க்கம் படித்த அறிவாளி வர்க்கத்தினராக இருக்கவேண்டுமென்பதும் இவரது சித்தாந்தம். மக்களைச் சார்ந்து, அவர்களுடன் ஐக்கியப்பட்டு, மக்கள் திரளினரையே புரட்சியில் ஈடுபடச் செய்யும் பாதையைக் கைக்கொள்ளாமல் ஒரு சில தனி நபர்கள் ஆயுத வலிமையின் மூலமே ஒரு சதி போல கலவரம் செய்து அரசியலதிகாரத்தைக் கைப்பற்றி விடலாம் என்ற இவர் நடைமுறைப் படுத்தியப் புரட்சிப் பாதை இதுவரை உலகத்தில் — அவரே நேரிடையாகப் புரட்சியில் பங்கேற்றுக்கொண்ட பொலிவியா உட்பட — எங்கேயும் வெற்றி பெற்றதில்லை, வெற்றி பெறவும் முடியாது. 1971 ல் இலங்கையில் நடந்த இந்த பாணி எழுச்சி மிக விரைவாக நசுக்கப்பட்டு விட்டதும் அண்மைக்கால எடுத்துக் காட்டாகும்.

பத்திரிகையாளராக இருந்து பின்னர் தென் அமெரிக்க கொரில்லா, தீவிரவாத இயக்கங்களில் ஈடுபட்ட ரெஜிஸ் டேப்ரே (Regis Debray) என்ற பிரெஞ்சுக்காரரும் இவர்களில் ஒருவர். மார்க்சிய - லெனினிய அடிப்படையில் புரட்சிக்குப் புதுப்பாதை வகுப்பதாக சொன்ன இவர் முன் வைத்த கருத்துக்கள் பின் வருமாறு : (i) மக்களுக்காக, மக்களின் சார்பாக கொரில்லாக்கள் ஆயுதப் போராட்டத்தை தொடுப்பதோடு மட்டுமில்லாமல் மக்கள் மீது ஆயுதப் போராட்டத்தை திணிக்க வேண்டும். (இதன் மூலம் மக்களிடையே புரட்சிக்காரர்கள் மீன்கள் போல வாழ்வதை இவர் நிராகரிக்கிறார்) (ii) அரசியல் பணிகள் என்றால் ராணுவப் பணிகளை செய்வதேயாகும். (இதன் மூலம் இவர் அரசியல் வேலையையே நிராகரிக்கிறார்.) (iii) கொரில்லா சக்திகள் தான் கட்சியைக் கட்டுவதற்கான கருவாக அமையும்; எனவே முதலில் கொரில்லாக் குழுக்களையே கட்டவேண்டும். பின்னர் அதுவே முன்னணிக் கட்சியாக உருவெடுக்கும். மக்கள் தங்கள் எல்லா அரசியல் பாடங்களையும் சொந்த ஆயுதமேந்திய நடவடிக்கைகள் மூலமே கற்க முடியும். எனவே கட்சி ஸ்தாபனத்தை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. கொரில்லா நடவடிக்கைகளை ஆங்காங்கே அபிவிருத்தி செய்வதற்குத்தான் முழு முதல் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். (iv) ஆரம்பத்தில் அலைந்து திரிவது தான் பிரதானமாக இருக்கும்.

அரசியலைப் புறக்கணித்து விட்டு சுத்த ராணுவ அனுபவ வாதத்தையே முழுக்க முழுக்க முன் வைத்ததுதான் இவருடைய அடிப்படைத் தவறாகும்.

சேகுவாரா, ரெஜிஸ் டேப்ரே வரிசையில் வைக்கத்தக்க இன்னொருவர் பொலிவிய நாட்டைச் சேர்ந்த கார்லோஸ் மாரிகெல்லா (Carlos Mari Ghella) என்பவர். — பொலிவியா போன்ற பின்தங்கிய அரைநிலப்பிரபுத்துவ நாடொன்றில் நகர்ப்புற கொரில்லா இயக்கங்களை முழுமையாகச் சார்ந்து, பிரதானமான மையப்பணியாக வைத்துச் செயல்படுவது புரட்சிக்கு வழி வகுக்கும் என்ற பாதையை இவர் முன்வைத்தார்.

இவருடைய இயக்கத்தில் பெரும்பாலும் அறிவாளிகளும், இளம் மாணவர்களுமே ஈர்க்கப்பட்டனர். அரசியல் வன்முறை ஒன்றினால் மட்டுமே அனைத்தையும் சாதித்துவிடலாம் என நம்பினார். அரசியல் நெருக்கடி நேரும்போது வன்முறை நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விடுவதின் மூலம் அவைகளை ஆயுதமோதல்களாக மாற்றினால், அவை அதிகாரத்திலிருப்பவர்களை இந்த அரசியல் சூழ்நிலையை ஒரு ராணுவ சூழ்நிலையாக மாற்றக் கட்டாயப்படுத்தும்; பின்னர் மக்கள் போலீசையும் ராணுவத்தையும் எதிர்த்துக் கலகம் புரிவர்; இவ்வாறு ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டதற்கு அதிகாரத்திலிருப்போரை மக்கள் நிந்திப்பர்; இப்படியாக மக்களின் கோபமும், போலீசையும் ராணுவத்தையும் எதிர்த்துப் போராடும் மக்களின் நடவடிக்கைகளும் பெருகி இறுதியில் புரட்சி நடந்தேறும். இதுவே இவர் முன் வைத்த புரட்சிப்பாதை.

1969 ன் இறுதியில் நம் இயக்கத்தில் தோன்றிய இடது தீவிர, துணிகர, அராஜக வாதத்திற்கும் மேலேசொன்ன மூன்று போக்குகளுக்கும் நிரம்ப ஒற்றுமைகள் உண்டு. (i) வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பதே வர்க்கப் போராட்டத்தின் உயர்ந்த வடிவம், கொரில்லாப் போரின் துவக்கப்புள்ளி. (ii) வர்க்க எதிரியின் ரத்தத்தில் கையை நனைத்தவர் மட்டுமே கட்சி உறுப்பினர். (iii) ஒன்றிரண்டு புத்தகங்களைத் தவிர மற்றவைகளைப் படிக்கக் கூடாது. (iv) பரவலான அரசியல் பிரச்சாரம் தேவையில்லை. (v) நகர்ப்புறப் பணிகளை, சட்டபூர்வ, வெளிப்படையான வெகுஜன அமைப்புகள் இயக்கங்களைக் கைவிட வேண்டும் என்பன போன்றவைகள் சாருவால் முன்வைக்கப்பட்டன. பரந்துபட்ட மக்களிடமிருந்து தனிமைப்பட்டு பின்னடைவுகளுக்கு உள்ளாகி, சீர் குலைந்து, பின்னர் அது நகர்ப்புறங்களில் சிலை உடைப்பு, நூல்களை எரித்தல், பிற அரசியல் கட்சி அணிகள், பிரமுகர்கள், போக்குவரத்துப் போலீசைக் கொல்லுதல் என்ற வடிவங்களாக சீரழிந்தது. கருத்து வேறுபாடுகளை முன் வைத்தவர்கள் உறுதியான கட்சிக் கட்டுப்பாடு என்ற பெயரில் ஜனநாயகமற்ற முறையில் வெளியே தள்ளப்பட்டனர். இவைகளின் காரணமாக மொத்த இயக்கமும் தோல்விக்குள்ளாகி, பின்னடைந்து மக்களிடமிருந்து தனிமைப்பட்டது; தடம் புரண்டது.

மேலே குறிப்பிட்ட சேகுவேரா, ரெஜிஸ்டேப்ரே, கார்லோஸ் மாரிகெல்லா, சாரு பாதைகள் வரலாற்றில் மிக மிக மோசமான தோல்விகளையே சந்தித்ததன் காரணம் என்ன? ஒரே வார்த்தையில் சொல்வதென்றால் இவர்கள் புரட்சியை நிறைவேற்ற பாவித்துக் கொண்ட யுத்ததந்திரப் போர்த்தந்திரத் திட்டம் மார்க்சிய –லெனினிய விரோதமான, மிக பாமரத்தனமான 'மாடலாக' இருந்ததுதான். புரட்சிகர அரசியலிலும் ஆயுதந்தாங்கிய போராட்டத்திலும் மக்களைப் பயிற்றுவித்து வழிநடத்திச் செல்வதில் எல்லையற்ற பொறுமையும், விடாமுயற்சியும், இம்மியளவும் மனம் தளராமையும், எல்லாவற்றிற்கும் மேலாக புரட்சிக்கு மக்கள் வந்தே தீருவார்கள் என்பதிலும்

அவர்களின் புரட்சிகர நிலையாற்றலிலும் (Revolutionary Potential Energy) கரை காணா நம்பிக்கையும் இருக்க வேண்டும். இவைகள் இல்லாத போதுதான் மக்களைத் திரளாக தட்டி யெழுப்புவதில் பொறுமை இழந்து, விரக்தியடைந்து ஒரு சில அப்பட்டமான துணிகர நடவடிக்கைகள் மூலம் மக்கள் மீது ஆயு தப் போராட்டத்தை திணிக்க வேவண்டும். கொரில்லா நட வடிக்கைகளே அனைத்தையும் தீர்மானிக்கின்றன என்பன போன்ற சித்தாந்தங்கள் எழுகின்றன.

அரசு எந்திரம் என்பது முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அடக்குமுறை நிறுவனம் என்பதை நடைமுறையில் மறுத்து ஒரே ஒரு பீரங்கித் தாக்குதலால் சிதறுண்டு போகின்ற மண் கோட்டையாக கற்பித்துக் கொண்டது தான் இவர்களின் தலை யாய தவறாகும். அந்தந்த நாட்டில் உள்ள பருண்மையான அர சியல் —பொருளாதார நிலைமைகளோடு உயிரோட்டமான முறையில் சம்பந்தப்படாத, மக்கள்திரள் இயக்கத்திலிருந்து வெட்டி விடப்பட்ட, அங்கொன்றும் இங்கொன்றுமான கொரில்லா நடவடிக்கைகள் புரட்சிக்கான அகநிலைக் கனிவை ஏற்படுத்துமென நம்பியது அடுத்த தவறாகும். ஜனநாயக மத் தியத்துவம், விமர்சனம் — சுய விமர்சனம் ஆகியவைகளை அடிப் படையாகக் கொண்ட உருக்குப் போன்ற கட்டுப்பாடுள்ள மார்க்சிய—லெனினியக் கட்சியைக் கட்ட அக்கறை காட்டாதது —சிரத்தையே கொள்ளாதது இன்னொரு தவறாகும். மார்க் சிய—லெனினிய அடிப்படையில் குறிப்பிட்ட நாட்டின் சமுதாய அமைப்பை ஆராய்ந்து அதற்கொப்ப யுத்ததந்திரமும், குறிப் பிட்ட இடைக்கட்டத்தை (phase) கணக்கில் கொண்டு போர்த் தந்திரங்களும் வகுத்து புரட்சியை முன்னெடுத்துச் செல்வது என்ற கருத்தோட்டமோ, ஏன், அந்த திசையில் சிந்திப்பதோ இல்லாமல் இருந்ததுதான் இதற்கெல்லாம் அடித்தளமாக இருந்திருக்கிறது.

பரந்த ஆயுதமேந்திய எழுச்சிப்பாதை, நீண்டகால மக்கள் யுத்தப்பாதை ஆகிய இரு வேறுபட்ட புரட்சிப் பாதைகளும் ஆயுதமேந்திய புரட்சிகளே. யுத்ததந்திர ரீதியில் ஆயுதப் போராட்டம், ரகசிய கட்சி ஸ்தாபனம் சட்ட விரோத நடவடிக் கைகள் ஆகியவைகளே பிரதானமாக இருந்தன. எல்லா நாடு களிலும் பொதுவுடமைக் கட்சிகள் நடத்திய புரட்சிகளின் அனு பவங்களைத் தொகுக்கின்ற போது கிடைக்கின்ற படிப்பினை இவையே. ஆனால் குருஷ்சேவ் காலத்திலிருந்து பொதுவுடமைக் கட்சிகள் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு புதிய பாதை பகர்ந்து வரப்படுகிறது. இரண்டாம் அகிலத்தின் போது நிலவிய சமூக ஜனநாயக இயக்கப்போக்குகள் மீண்டும் புது மெரு கிட்டு நடமாட விடப்படுகின்றன. முழுக்கவும் வெளிப்படையாக வும் சட்டப் பூர்வமாகவும் இயங்கி வருவது, மக்களை ஆயுதமேந் திய புரட்சிக்குத் தயார் செய்வதைக் கைவிட்டுவிடுவது, நாடாளு மன்றத்தில் பெரும்பான்மை பெற்று அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவது, பல்வேறு அரசியல் கட்சிகளுடன் எப்படியாவது

கூட்டு வைத்துக்கொள்வது, இவ்வாறு படிப்படியாக அமைதியான முறையில் வளர்ச்சி பெறுவதன் வாயிலாக புரட்சியை முடிப்பது — இதுவே அவர்கள் முன்னிறுத்துகின்ற பாதை.

ஆனால் மார்க்சிய — லெனினியம் நாடாளுமன்றத்தின் மூலம் நாடாளும் அதிகாரத்தைக் கைப்பற்ற இயலும் என்பதை அதை ஒரு பாதையாக கொள்ளமுடியும் என்பதை என்றுமே அங்கீகரித்ததில்லை. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பொதுவுடைமைக் கட்சி அந்தந்த நாட்டின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப ஒரு கட்டம் முழுவதற்குமான யுத்ததந்திரமும், அதை நிறைவேற்ற பல்வேறு தருணங்களில் அந்தந்த குறிப்பிட்ட தருணத்தில் நிலவுகின்ற சமுதாய நிலைமைகளுக்கு ஏற்ப போர்த்தந்திரங்களும் வகுக்கும். அந்த குறிப்பிட்ட தருணத்தில் குறிப்பிட்ட போர்த்தந்திரத்தை நிறைவேற்ற பல ஸ்தாபன வடிவங்களையும் பல போராட்ட வடிவங்களையும் பொதுவுடைமைக் கட்சி வடிக்கும். ஆயுதந் தாங்கிய பேரெழுச்சி என்ற யுத்ததந்திரத்தின் கீழ் மட்டுமே புரட்சிக்குத் தயாரிப்பதற்கான ஒரு போராட்ட வடிவம், போராட்ட முறைதான் நாடாளுமன்றத்தில் பங்கேற்பது. அதாவது குறிப்பிட்ட போர்த்தந்திரத்தை நிறைவேற்ற தேர்தலில் கலந்துகொள்வதும் நாடாளுமன்றத்தில் பங்கேற்பதும் யுத்ததந்திர நலன்களுக்கு உதவுமாயின் அந்தப் போராட்ட முறையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வளவுதான்; பயன்படாது என்று தெரியும் பட்சத்தில் அதை நிராகரித்து விடவேண்டும். கேரோ, மறியல், ஆர்ப்பாட்டம் போல ஒரு போராட்டமுறை தான் தேர்தலில் நிற்பதும் நாடாளுமன்றத்தில் பங்கேற்பதும். இந்த மாதிரியான பல்வேறு போராட்ட வடிவங்களையும் ஸ்தாபன வடிவங்களையும் விவேகத்துடன் பயன்படுத்தி போர்த்தந்திர வெற்றியையும் சாதகமாக்கி, சங்கிலித் தொடர் போல போர்த் தந்திரங்களை நிறைவேற்றி யுத்ததந்திர வெற்றியையும் ஈட்டுவதன் மூலம் இறுதியாக பாட்டாளி வர்க்கம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றும். இந்த நிகழ்ச்சிப் போக்கைத் தான் மார்க்சியம்—லெனினியம் அறைந்து சாற்றுகிறது. மாறாக, ஒரு போராட்ட வடிவத்தையே முழு புரட்சிக்கான ஒரு பாதையாக – யுத்ததந்திரமாக — உருவாக்கி முன்னிறுத்துவது முழுமையான திரிபுவாதமாகும். ஐயந்திரிபில்லாமல் இது பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிக்கொடுக்கும் துரோகப் பாதையாகும்.

எனவே, புரட்சியின் பாதை மக்கள் யுத்தப்பாதையா அல்லது ஆயுதமேந்திய பேரெழுச்சிப் பாதையா என்பதைத் தெளிவாக ஆரம்பத்திலேயே வகுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த இரண்டு பாதைகளும் இந்தியாவிற்குப் பொருந்தாது என்று யாராவது சொன்னால் அவர்களுக்கும் ஒரு கடமை இருக்கின்றது. அதாவது, அந்த மூன்றாவது பாதையைத் தெளிவாக முன்வைக்க வேண்டும்; நேரடி நடைமுறையில் அது என்ன முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றது என்றும் வரையறுத்துச் சொல்ல வேண்டும். எங்கிருந்து தொடங்கி எங்குபோய் முடிப்பது, ஒரே சமயத்தில் நாடு தழுவிய ரீதியில் அரசியலதி

காரத்தைக் கைப்பற்றுவதா அல்லது கிராமப்புறங்களில் தளப் பிரதேசம் நிறுவி செஞ்சேனை அலையலையாக முன்னேறி கைப் பற்றுவதா என்பவைகளில் இந்த இரண்டு பாதைகளும் அடிப் படையிலேயே வேறுபடுகின்றன. இதையொட்டி கட்சியின் நடை முறைப் பணிகளும் செயல் மையங்களும் சக்திகளின் ஒதுக்கீடும் ஆரம்பத்திலிருந்தே வேறுபடுகின்றன. இந்த இரண்டு பாதை களையும் நிராகரித்து மூன்றாவது ஒரு பாதையை யாராவது வைத்தாலும் சரி, அதற்கேற்பவும் இவைகள் மாறுபடும்.

எனவே ஆரம்பத்திலிருந்தே எந்தப்பாதை என்று தீர்மானிப்பது அத்தியாவசியமானதாகும். பருண்மையாக எந்தப் பாதையில் புரட்சி சென்றடையும் என்பதை வரையறுக்காமல், பலாத்காரமாக அரசு எந்திரத்தை நொறுக்கி ஆயுதப் போராட் டத்தினால் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் எங்களது நோக்கமும் என்று சொல்வதால் மட்டும் புரட்சியை ஏற்றுக் கொண்டதாக ஆகிவிடாது. மாறாக, புரட்சியின் பாதையைப் பற்றித் தெளிவுபடுத்தி, அதையொட்டி தனது நடைமுறைப்பணி களை வகுத்துக் கொள்ளாததும் சக்திகளை ஒதுக்கீடு செய்யாத தும் புரட்சியில் முன்னேற மறுப்பதாகும்; புரட்சிக்குத் துரோகம் செய்வதாகும்.

நீண்டகால மக்கள் யுத்தப்பாதை—இந்தப்பாதையே ஆசிய ஆப்பிரிகக லத்தின் அமெரிக்க நாடுகளுக்கு மிகமிகப் பொருந்தக் கூடியதாகும். கம்பூச்சியா, வியட்நாம், லாவோஸ் போன்ற நாடு களில் இந்தப்பாதையின் மூலம் புரட்சி வெற்றிகரமாக நடை போட்டது இதை மேலும் நிரூபிக்கிறது. மலேசியா, தாய்லாந்து பர்மா போன்ற ஆசிய நாடுகளிலும், ஆப்பிரிக்க, தென்அமெரிக்க நாடுகளிலும் இன்று நடந்து கொண்டிருக்கும் புரட்சி அனுபவங் களும் இந்த நீண்டகால மக்கள் யுத்தப்பாதை காலனிய, அரைக் காலனிய, நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடு களுக்கு ஏற்ற புரட்சிப்பாதை என்பதை மேலும் மேலும் வலி யுறுத்துகிறது. இந்தியாவின் பருண்மையான நிலைமைகள் நம் முடைய புரட்சியின் பணிகள், இலக்குகள், மார்க்சிய-லெனினிய- மாவோ சிந்தனை ஆகியவையனைத்துமே எள்ளளவும் ஐயத்துக் கிடமின்றி இந்திய மக்களின் முன்னிறுத்தும் பாதை ஒளிமிக்க நீண்டகால மக்கள் யுத்தப்பாதையே என்பது திண்ணம்.

நீண்டகால மக்கள் யுத்தப்பாதையே இந்தியாவுக்கான புரட்சிப்பாதை என்று கணிக்க கீழ்க்கண்ட ஐந்துகுணாம்சங்கள் அடிப்படையாக அமைகின்றன:

முதலாவதாக, இந்தியா அரசியல் ரீதியிலும், பொருளா தார ரீதியிலும், கலாச்சார ரீதியிலும் ஏற்றத்தாழ்வாக வளர்ச்சி யடைந்துள்ள ஒரு பிரம்மாண்டமான அரைக்காலனிய—அரை நிலப்பிரபுத்துவ நாடாகும். எனவே இப்பரந்த நாட்டின் பல்வேறு பிராந்தியங்கள் பொருளாதார, அரசியல் சமூக கலாச் சாரத்துறைகளிலும் வர்க்க அரசியல் உணர்வு மட்டத்திலும் ஏற்றத் தாழ்வான வளர்ச்சி உடையதாக இருக்கின்றது. எனவே

மக்களின் போராட்ட வீச்சு நாடு முழுவதிலும் ஒரே வேகத்தில் இருக்காது. சில இடங்களில் போராட்டங்கள் ஆயுத மோதல்களாகவும் இருக்கலாம்; சில இடங்களில் மக்களின் போராட்ட உணர்வு மிகமந்தமாகவும் இருக்கலாம். எனவே, நாடு தழுவிய ரீதியில் ஒரே சமயத்தில் எழுச்சி என்பது இருக்க முடியாது. பெரிய நாடாக இருப்பதால் ராணுவரீதியில் நகர்ந்து செயல்பட மிகவும் வசதியாக இருக்கிறது. மிகுநிலை பெற்று உள்ள பிரஷ்யன் ஜங்கர் முறையிலான நிலப்பிரபுக்களைக் கொண்ட அரை நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்துடன் மேல்நிலை பெற்றுள்ள தரகு அதிகார வர்க்க உற்பத்தியும் அக்கம்பக்கமாக நிலவுகின்றன. நவீன வர்த்தகத் தொழில் நகரங்கள் தேக்க நிலையில் உள்ள பிரம்மாண்டமான நாட்டுப்புறத்துடன் ஒருங்கே அமைந்துள்ளன. பல பத்துலட்சம் தொழிலாளர்கள் பழைய ஆதிக்கத்தின் கீழுள்ள பல பத்துகோடி விவசாயிகளோடும் கைவினைஞர்களோடும் ஒருங்கிணைந்து உள்ளனர். மத்தியத்துவப் படுத்தப்பட்ட அரசு எந்திரம் இருக்கின்றது. அதே சமயத்தில் எதிரியின் ராணுவ பலம் நகர்ப்புறங்களில் குவிக்கப்பட்டிருக்கிறது; கிராமப்புறங்களில் பல இடங்கள் ராணு ரீதியில் எதிரியின் பலவீனமான இடங்களாக உள்ளன.

இரண்டாவதாக, இந்தியப்புரட்சியின் எதிரிகள் சக்திமிக்கவர்களும் பூதாகரமானவர்களும்ஆவர். இந்தியஅரசு தன் கீழ் மையப்படுத்தப்பட்ட வலிமையான நவீன ராணுவத்தை வைத்துள்ளது. புரட்சியை ஒடுக்குவது என்ற நோக்கில் அது ஏகாதிபத்தியங்கள் மற்றும் பிற்போக்கு அரசுகளின் ஆதரவைப் பெற்றுள்ளது. இந்திய அரசு அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் போக்குவரத்து மார்க்கங்களிலும் கேந்திர ஸ்தாபனங்களை அல்லது ஜீவநாடிகளைக் கட்டுப்பாடு செய்கிறது. அதன் அரசியல் அதிகாரம் தேசம் விரிந்த ஒன்றாகும். இவ்வாறு இந்தியப் புரட்சி பெரிய சக்தி மிக்க எதிரியை எதிர்ப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, பாட்டாளி வர்க்கத்தின் கையில் ஒரு செம்படை இல்லை; மாறாக, ஒரு ஒன்றுபட்ட நாடு தழுவிய அரசியல் சக்தியாககூட அது இல்லை. இதைக் கட்டவேண்டிய பாட்டாளி வர்க்க கட்சி பல பிரிவுகளாக இயங்கி ஒன்றுபட்ட தலைமையைக் கொடுக்காமல் இருக்கிறது. இன்று அரசியல் போராட்டம் மட்டுமே இருக்கிறது. ஆளும் வர்க்கங்களுக்கிடையில் உள்ள முரண்பாடுகளும் அரசியல் வடிவத்திலான மோதல்களாகவே வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நான்காவதாக, பல தேசிய இனங்களின் சிறைக்கூடமாக இந்தியா உள்ளது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தால் அதனுடைய அரசியல், ராணுவ, பொருளாதார நலன்களுக்காக வலிந்து ஒன்றிணைக்கப்பட்ட நாடாக பல்வேறு சிற்றரசுகளைக் கொண்டிருந்த இந்தியா மாற்றப்பட்டது. இதன் பொருள்: தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் எதிரியின் வலிமையை இரண்டு விதத்தில் பலவீன படுத்துகின்றன. (i) தேசிய இனங்களின் உரிமைக்கான போராட்டங்கள் ஒரே குவிப்பாக உள்ள இந்திய அர

சின் பொருளாதார வலிமையையும் யுந்ததந்திர ரீதியில் பூகோள ரீதியான வசதிகளையும் சிதறடிக்கும். (ii) மையப்படுத்தப்பட்ட அமைப்பாக இருந்த போதிலும் இந்திய ராணுவம் மெட்ராஸ் ரெஜிமெண்ட், சிக் ரெஜிமெண்ட் கூர்க் ரெஜிமெண்ட் என்று தேசிய இனப்பிரிவுகளின் அடிப்படையிலேயே பெருமளவு பிரித்து வைக்கப்பட்டுள்ளன. ஒரு மாநிலத்தில் நடக்கும் மிகப்பெரிய போராட்டங்கள் வேறு மாநிலங்களைச் சேர்ந்த ராணுவ வீரர்களைக் கொண்டே ஒடுக்கப்படுகின்றன. தேசிய இனப்போராட்டங்கள் வளர்வதற்கும் தீவிரமடைவதற்கும் பெருத்த வாய்ப்புள்ள இந்தியாவில் அந்தப் போராட்டங்களின் வளர்ச்சியில் மையப் படுத்தப்பட்ட இந்திய ராணுவம் சிதறுகின்ற வாய்ப்புகள் பிரகாசமாவே உள்ளன.

ஐந்தாவதாக, நிலப்புரட்சியும் அதை நடைமுறைப்படுத்த உறுதியாக நிற்கும் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியுமாகும். நிலச் சீர்திருத்தத்திற்கான பல்வேறு சட்டங்கள் கொண்டு வரப்பட்டிடிருப்பினும், வாய்கிழிய அதைப்பற்றி பல்வேறு அரசியல் கட்சிகள் பேசிக் கொண்டிருந்தாலும் நடைமுறையில் அவைகளும் அரசும் விவசாயப் புரட்சிக்கு எதிராகவே உள்ளன; அரை நிலப் புரபுத்துவத்தைப் பாதுகாக்கின்றன. மாறாக, விவசாயப் புரட்சியை அமுல்படுத்துவதில் உறுதியாகவும் விடாப்பிடியாகவும் தலைமை கொடுக்கவும் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி மட்டுமே இருக்கின்றது. எனவே பரந்த விவசாயிகளின் ஆதரவைத்திரட்டி தன்பக்கம் வைத்துக்கொள்ள முடியும்.

இந்த குணாதிசயங்கள் இந்தியாவினுடைய மக்கள் யுத்தப்பாதையின் மார்க்கத்தை நிர்ணயிக்கின்றன. முதலாம், நான்காம், ஐந்தாம் குணாம்சங்களிலிருந்து இந்தியாவில் செஞ்சேனை ஒன்று கட்டப்பட்டு வளர்வதும் இறுதியில் அது எதிரிகளை தேற்கடிக்கும் என்பதும் பெறப்படுகிறது. இரண்டாம், மூன்றாம் குணாம்சங்களிலிருந்து இந்தியாவில் செஞ்சேனை கட்டப்படுவது மிக விரைவாக நடந்தேறும் என்பதோ அது மிக விரைவாக எதிரியைத் தோற்கடித்து தனது ஆதிக்கத்தை சில பகுதிகளிலாவது நிறுவும் என்பதோ அசாத்தியமானது அல்லது நீண்டகாலப்போக்கு கொண்டதாயிருக்கும்; இதில் நாம் தவறு செய்தால் கட்சி சிதறுவதும் மக்களிடமிருந்து தனிமைப் படுவதும் நடக்கும் என்பது இவைகளிலிருந்து பெறப்படுகிறது.

நாம் ஏன் கிராமப்புறங்களிலிருந்து தொடங்க வேண்டும் என்று கூறுகிறோம்? ஏனென்றால் நகர்ப்புறங்கள் பலம் வாய்ந்த எதிரிகளின் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அவர்களின், சித்தாந்த அரசியல், பொருளாதார, ராணுவக் கோட்டைகளாக அவைகள் திகழுகின்றன. எனவே பின்தங்கிய கிராமப் புறங்களை புரட்சியின் மாபெரும் சித்தாந்த, அரசியல், பொருளாதார, கலாச்சார, ராணுவக் கோட்டைகளாக, முன்னேறி கெட்டிப்படுத்தப்பட்ட தளப்பிரதேசங்களாக மாற்ற வேண்டியது தவிர்க்க முடியாத கட்டளையாகிறது. இங்கிருந்து நகர்ப் புறங்களைத் தாக்கவும், வஞ்சக எதிரிகளை அழிக்கவும் இவை

களைத் தளமாகப் பயன்படுத்த வேண்டும். இவ்வழியாக நீண்ட கால மக்கள் யுத்தத்தின் மூலம் முழு வெற்றியை அடைய முடியும்.

மேலும் கிராமப்புறங்களில்தான் முதன்முதலாக புரட்சியில் வெற்றி சாத்தியமாகும். ஏனெனில், அங்கே உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி ஒரே சீராக இல்லாமல் மையப்படுத்தப்படமல் சிதறிய தன்மை கொண்டதாக உள்ளது: (அதாவது,ஒன்றிணைக்கப்பட்ட முதலாளித்துவ பொருளாதாரம் இல்லை; அதனால் புரட்சிகரக்கட்சி பொருளாதாரரீதியாக சுயமாககிராமப்புறத்தில் நிலைத்திருக்க முடியும்).விரிந்த பரந்த எல்லையிருக்கிறது. (புரட்சிகர சக்திகள் பல்வேறு தந்திரோபாங்களைக் கையாள சாதகமாக இது அமைகிறது); புரட்சியின் மிக முக்கிய சக்திகளான விவசாயிகளின் போராட்ட களமாக இருப்பதும் கிராமப்புறங்களே.

மறுபுறத்தில் இந்த சூழ்நிலைமைகள் புரட்சி ஏக காலத்தில் நாடு முழுவதும் வெற்றிபெறுவதை இயலாததாக்குகின்றன. முழுவெற்றியடையும் பணியை நீண்டகாலமானதாகவும் இடர்ப்பாடுகள் கொண்டதாகவும் ஆக்குகின்றன. எனவே கிராமப்புறங்களில் நீண்டகாலப் புரட்சிப் போராட்டம் என்பது மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கி நடத்தப்படுகின்ற கொரில்லாப் போர்முறையையே பிரதானமாகக் கொண்டிருக்கும். அதனால்தான் கிராமப்புறப் பகுதிகளை புரட்சிகர தளப்பிரதேசங்களாகப் பயன்படுத்துவதன் அவசியத்தைப் புறக்கணிப்பதோ, விவசாயிகளின் மத்தியில் அதிக அழுத்தம் கொடுத்து மனம் சோர்வடையாமல் பொறுமையுடன் செயல்படவேண்டிய கடுமையான பணியை ஒதுக்குவதோ, கொரில்லாப் போர்முறையை ஒதுக்குவதோ முழுக்க முழுக்கத் தவறாகும்; கலப்பிடமில்லாத திரிபுவாதமாகும்.

மேலும் புரட்சிகரப் பேரலையின் வீச்சும் மக்களின் போராட்ட உணர்வுகளும் நாடு தழுவிய ரீதியில் ஏற்றத் தாழ்வாகவும் இருக்கும். இதனால் நாடு தழுவிய ரீதியில் ஒரு பரந்த ஆயுதமேந்திய எழுச்சியை உருவாக்க முடியாது; அது சாத்தியமேயில்லை; மாறாக, எதிரியின் ஆதிக்க சங்கிலியின் கரணை எங்கே பலவீனமாக உள்ளதோ அங்கேதான்-ஒரு பகுதியில்தான் அரசியலதிகாரத்தை முதலில் கைப்பற்ற முடியும். அதை தளப் பிரதேசமாக உறுதிப்படுத்தி அங்கிருந்து கொண்டு அரசியலதிகார எல்லையை விரிவடையச் செய்து அலையலையாக முன்னேறி இறுதியில் நாடுதழுவிய அளவில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற பாதையில்தான் அரசியலதிகாரத்தை வென்றெடுப்பது சென்று முடியும். அதாவது ஒருநீண்டகால மக்கள் யுத்தப்பாதையின் மூலமே இது சாத்தியமாகும். ஒருபகுதியில் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றி தளப்பிரதேசம் அமைப்பது நாடு தழுவிய ரீதியில் உள்ள புரட்சியின் எழுச்சி அலையை மேலும் ஓங்கியடிக்கச் செய்யும்; புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கை துரிதப்படுத்தும்; ஆளும் வர்க்கங்களின் மத்தியில் மிகப்பெரிய பீதியையும், குழப்பத்தையும் உருவாக்கும்.

சர்வதேச ரீதியிலும் இதன் தாக்கம் மிக முக்கியத்துவம் உள்ளதாகவும், உலகம் முழுவதிலுமுள்ள புரட்சிகர சக்திகளுக்கு உற்சாகமூட்டக் கூடியதாகவும் இருக்கும். இதன் பிரதிபலிப்பாக சர்வதேசப் புரட்சிகர சக்திகள் இந்திய மார்ச்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சிக்கு செல்வாக்கு கொடுக்கின்ற தார்மீக மற்றும் பிறவகை ஆதரவுகளும் இந்தியாவில் உள்ள புரட்சிகர நிலைமையை மேலும் உயர்த்தும்; பரந்துபட்ட மக்களிடையே கட்சியின், படையின் செல்வாக்கு மேலும் பரந்ததாக அதிகரிக்கும்; இவைகளினால் ஒரு பகுதியில் ஏற்பட்ட தளப்பிரதேசம் உறுதியாவதும், விரிவடைவதும் உத்திரவாதமளிக்கப்படும்.

இந்தியா ஒரு முதலாளித்துவ ஜனநாயக் நாடு அல்ல. நாடாளுமன்ற தேர்தல் ஆட்சி முறையைக் கொண்ட – தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ—நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்தைக் கொண்ட—அரைக்காலனிய நாடு. முதலாளித்துவ நாடுகளில் நிலவுகின்ற ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பகிரங்கமான, சட்டபூர்வமான இயக்கங்களுக்கு குறுகலான வரம்புகள் உள்ளன. பல ஏகாதிபத்தியங்களின் அரைக்காலனிய நாடாக இருப்பதால் அவைகளின் போட்டியின் காரணமாக அவைகளினுடைய அடிவருடிகளுக்கிடையில் போட்டியும் பிளவும் இருக்கின்றது. எனவே புரட்சிகர அலை ஓங்கியடிக்கும் போது அவர்களுக்கிடையில் உள்ள பிளவுகளும் மோதல்களும் பகிரங்கமாக வெடிக்கவும் வாய்ப்பிருக்கின்றன. அவ்வாறு ஆளும் வர்க்கங்கள் தங்களுக்குள் மோதுவதன் காரணமாக அவர்களின் பலம் மொத்தமாக புரட்சிகர சக்திகள் மீது குவிக்கப்பட்டு இருக்காது. எனவே, மக்கள் யுத்தப்பாதையே இந்தியாவின் புரட்சிப் பாதையாக இருக்க முடியும்.

எனினும் இந்தியாவின் மக்கள்யுத்தப்பாதை சில சிறப்பான நிலைமைகளைப் பெற்றிருக்கிறது. முதலாவதாக, இந்தியா ஒரு மையப்படுத்தப்பட்ட, ஒன்றிணைக்கப்பட்ட அரசையும் பலமான ராணுவத்தையும் பெற்றிருக்கிறது. இன்றைய நிலையில் ஆளும் வர்க்கங்களிடையே பிளவுகளும் முரண்பாடுகளும் பகிரங்கமான வடிவத்தை இன்னும் எட்டவில்லை; நாடாளுமன்ற தேர்தல் அமைப்பும் பல்வேறு அரசியல் கட்சிகளின் செல்வாக்கில் மக்கள் இருக்கின்ற நிலைமையும் இருக்கிறது. மேலும், நாடாளுமன்ற தேர்தல் அமைப்பு காரணமாக அரசியல் கட்சித் தலைவர்கள்தான் ஆளும் வர்க்கங்களாக, ஒடுக்குபவர்களாக, கொடுங்கோலர்களாக மக்களின் கண்களுக்குத் தெரிகின்றனர்; ஆளும் வர்க்கத்தினர் மறைக்கப்படுகிறார்கள். தங்களுடைய சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைக்கும் ஆணிவேராக அரசியல்வாதிகளைத்தான் பார்க்கிறார்கள். சீனத்தில் ஆளும் வர்க்கங்கள் ஆயுதந்தாங்கி நேரிடையாக மோதிக்கொண்டிருந்தார்கள். நாடாளுமன்ற தேர்தல் அமைப்பு முறைகள் இல்லை; எனவே ஆளும் வர்க்கங்களே மக்களுக்கு நேரிடையாகவே எதிரியாகத் தெரிந்தார்கள். இவைகளினால் இந்தியாவில் ஆயுதப்போராட்டம் துவங்குவதற்கு முன்பு அரசியல் போராட்டம் கணிசமான காலத்திற்கு பிரதானமானதாக முன்னிபந்தனையாக இருக்கின்றது.

இரண்டாவதாக மூன்றாம் உலக நாடுகளிலேயே தொழில் துறையில் வளர்ந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஒரு துணை வல்லரசு நிலைக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. அரசு அதிகாரத்தில் மேல்நிலை வகிக்கின்ற தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவம் அண்டையிலுள்ள சிறுநாடுகளைத் தனது ஆதிக்கத்தில் கொண்டுவர முயற்சிக்கிறது. எனவே, இந்தியப் புரட்சி சக்தி வாய்ந்த ஒரு தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ எதிரியைச் சந்திக்க வேண்டியுள்ளது.

மூன்றாவதாக, இந்தியத் தொழிலாளர் வர்க்கம் எண்ணிக்கையிலும் போராட்ட அனுபவத்திலும் அமைப்பு ரீதியிலும் கணிசமான அளவு வளர்ந்த ஒன்றாகும். படித்த குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரும் கணிசமான அளவு உள்ளனர். தொழிலாளர்கள், நகர்ப்புற குட்டிமுதலாளிய அறிவு ஜீவிகள், மாணவர்கள் இவர்களின் பாத்திரம் அரசியல் அரங்கில் தீர்மானகரமாக இருக்கிறது. இதுவும் இரண்டாவது காரணமும் சேர்ந்து நகர்ப்புற வேலைகளின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்துகின்றன. கிராமப்புறத்தளப் பிரதேசம் கட்டும் பணியோடு சேர்ந்து நகர்ப் புறத்திலும் இதற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடத்துவதும், தளப்பிரதேசங்களின் மீது தாக்குதல் தொடுக்கப்படும் போது தளப்பிரதேசங்களுக்கு ஆதரவாக நகர்ப்புறங்களில் போராட்டங்கள் நடத்த இவர்களை அமைப்பு ரீதியாகத் திரட்டி வைத்திருப்பதின் அவசியம் இந்தியாவில் மிகுதியாக உள்ளது.

நான்காவதாக, பிரஷ்யன் - ஜங்கர் முறையிலான முதலாளித்துவ உற்பத்திமுறை புகுந்துள்ள அரைநிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு உள்ளது. பழைய நிலப்பிரபுத்துவக் கொடுங்கோல் ஆதிக்க வடிவங்கள் அடிப்படையில் நீடிக்கும்போதே புதிய நாசுக்கான வடிவங்களும் புகுந்துள்ளன. பல இடங்களில் நிலப்பிரபுக்களை விட விவசாயிகளுக்கு அமைச்சர்களும் அரசியல் கட்சிகளுமே எதிரியாகத் தெரிகின்ற நிலைமை இருக்கின்றது. இது கிராமப்புறங்களில் உள்ள நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்திகளுக்கு எதிராக நடத்த வேண்டிய போராட்டம் மிகவும் கடுமையானதாக இருக்கும் என்று சுட்டிக்காட்டுகிறது.

ஐந்தாவதாக, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு — ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட புரட்சியை முடிக்க மக்கள் யுத்தப்பாதைக்கு மக்களைத் தயார் செய்ய வேண்டியுள்ளது. இதுவரை இந்தியாவில் நாடு தழுவிய ரீதியில் ஏகாதிபத்திய எதிர்ப்பு — சமரசமற்ற தீர்மானகரமான எதிர்ப்பில்— போராட்டங்களில் மக்கள் திரட்டப்படவில்லை. ஏகாதிபத்திய கலாச்சாரம், சிந்தனை ஆகியவை மக்களிடம் நிலைத்து இருக்கின்றது. அதேபோல தீர்மானகரமான, சமரசமற்ற நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டங்களில் விவசாயிகள் பரந்த அளவில் திரட்டப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு உறுதியாக்கப்படவில்லை. இந்த நிலைமைகள் தளப்பிரதேசம் கட்டுவதற்கு முன் ஏகாதிபத்திய எதிர்ப்பு — நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்

டங்களில் பரந்துபட்ட மக்களை அமைப்பு ரீதியாகத் திரட்டி குறிப்பிட்ட காலம் போராட வைத்து பயிற்சியளிக்கும் கடமையை வலியுறுத்துகின்றன.

ஆறாவதாக, இந்தியப் பொதுவுடமை இயக்கம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. எனினும் அந்த வரலாறு பெரும்பாலும் ஏகாதிபத்தியத்திற்கும். நிலப்பிரபுத்துவத்திற்கும் சேவை செய்து, மக்களைக் காட்டிக் கொடுத்து, துரோகம் செய்த வரலாறாகவே இருக்கின்றது. பல்லாண்டுகளாக பரந்துபட்ட மக்களைத் திரிபுவாத, பொருளாதாரவாதச் சேற்றில் இந்த "கம்யூனிஸ்டு" தலைவர்கள் மூழ்கடித்து வந்துள்ளனர். இவைகளின் காரணமாக, இந்தியாவில் கம்யூனிசம், கம்யூனிஸ்ட் கட்சி என்று சொன்னாலே ஒருவித ஏளன மனப்பான்மை உருவாகி உள்ளது. அத்தோடு, மார்க்சிய - லெனினிய இயக்கத்தில் தோன்றிய இந்திய இடதுசாரி துணிகரவாதத்தின் காரணமாக "கம்யூனிஸ்டுகள்" என்றால் அராஜகவாதிகள் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த இரண்டு நிலைகளும் சேர்ந்து மார்க்சிய - லெனினிய இயக்கத்தின் பணிகளைச் சிரமமாக்கி உள்ளது.

ஏழாவதாக, இந்திய ராணுவம் மையப்படுத்தப்பட்ட நவீன ராணுவமாக உள்ளது. பல்வேறு அரை ராணுவப் பிரிவுகளும் உள்ளன. சாலைப் போக்குவரத்துகளும் தகவல் தொடர்பு சாதனங்களும் மிக வளர்ந்துள்ளன. இது செம்படையின் செயல் திறத்தைச் சிரமமாக்கும். மேலும், இந்திய ராணுவம் ஏகாதிபத்திய கலாச்சார, நிலப்பிரபுத்துவத் தன்மை கொண்டதாக இருப்பதும் சேர்ந்து ராணுவத்தினரிடையே அரசியல் விழிப்புணர்வு மட்டத்தை மிகக் கீழான நிலையில் வைத்துள்ளது.

எட்டாவதாக, உலக அரங்கில் புதிதாகத் தோன்றி மேல்நிலை வல்லரசாக வளர்ந்துள்ள ருஷிய சமூக ஏகாதிபத்தியத்தை இந்தியப் புரட்சி எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. இந்த மேல்நிலை வல்லரசு கம்யூனிச போர்வை போர்த்தியிருப்பதும் அதன் நேர் அடிவருடிகளான திரிபுவாதிகளும், நவீன திரிபுவாதிகளும் கம்யூனிசப் போர்வை போர்த்திக்கொண்டு மக்களை திசைதிருப்பி விடுவதும் சேர்ந்து புரட்சியில் உண்மையான கம்யூனிச இயக்கத்தின் தலைமையை நிலைநாட்டுவதை சிரமமாக்கியுள்ளது.

ஒன்பதாவதாக, இந்தியாவில் பிரத்தியேகமாக நிலவும் சாதிய அமைப்பு உழைக்கும் மக்களை ஒன்றாகத் திரட்டுவதற்கு கணிசமான அளவு இடையூறாக இருக்கின்றது. குறிப்பாக தளப்பிரதேசம் கட்டப்படும் கிராமப்புற பகுதிகளில் இதன் செல்வாக்கு மிக அதிகமாக உள்ளது.

பத்தாவதாக, மக்கள் யுத்தப்பாதையைத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லும் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சியானது ஒன்றுபட்ட, மையப்படுத்தப்பட்ட கட்சியாக இல்லாமல் பல குழுக்களாக சிதறிக் கிடப்பது மிகப்பெரிய பலவீனமாக இருக்கின்றது.

இந்தியாவின் மக்கள்யுத்தப் பாதையில் நிலவும் சில பிரத்தியேகமான நிலைமைகள்தான் இதுவரை சுட்டிக்காட்டப் பட்டது. இந்தக் காரணங்களை வைத்துக்கொண்டு அடிப்படை யிலேயே மக்கள் யுத்தப்பாதை இந்தியாவிற்கு ஏற்றதல்ல என முடிவுக்கு வந்துவிடக்கூடாது. அடிப்படையில் மக்கள் யுத்தப் பாதையே அரைக்காலனிய - அரைநிலப்பிரபுத்துவ இந்திய சமுதாய அமைப்பைத் தகர்த்தெறியக் கூடிய புரட்சியின் பாதையாகும். இந்த நிலைமைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படக் கூடிய சில விசேஷமான நிலைமைகளே. இவை அடிப்படையையே மாற்றிவிடக் கூடிய காரணங்கள் அல்ல.

# IV. இந்தியப் புரட்சிக்கான அரசியல் யுத்ததந்திரம் - அதன் கூறுகளும் விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளும் - பருண்மையான பிரயோகத்துடன்

புரட்சியில் அரசியல் யுத்ததந்திரத்தின் பாத்திரம் பற்றிய தவறான கோட்பாடும் நடைமுறையும் காரணமாக — புரட்சியின் எதிரிகளையும் தலைமை சக்தி மற்றும் பிரதான சக்திகளையும் மட்டும் தீர்மானிப்பதும் தலைமை மற்றும் பிரதான சக்தியை மட்டும் திரட்டி எதிரிகளை உடனடியாகவும் நேரடியாகவும் தாக்கி வீழ்த்துவது என்ற நடைமுறையும் கொண்டதே அரசியல் யுத்ததந்திரம் என்ற தவறான கோட்பாடும் நடைமுறையும் காரணமாக—விதர்ப்பமான, அரைகுறையான தாக்குதல்களில் இறங்கித் தோல்வியுறுவதே இந்தியப்பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வரலாற்றுப் போக்காக இருக்கிறது. இது சக்திகளை சிதறடிப்பதும் அரசியல் அணிதிரட்டல் முதிர்ச்சியுறாத நிலையில் தாக்குதலில் இறங்குவதும் அல்லது இந்நிலையை என்றுமே எட்டாத வகையில் செயல்படுவதும், மொத்தத்தில் புரட்சியை திசைதிருப்பி விடுவதும் தள்ளிப் போடுவதும் தாமதப்படுத்துவதும் என்ற போக்காகும்.

ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தை தூக்கியெறிவது குறிப்பாக சொல்வதானால் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களது சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிவது; அவர்களது வர்க்க ஆட்சிக்கான வன்முறைக் கருவியாகிய அரசு எந்திரத்தை புரட்சிகர வன்முறையின் மூலம் அடித்து நொறுக்கி வீழ்த்துவது என்ற புரட்சியின் குறிக்கோளிலிருந்து நேரடியாகவும் உடனடியாகவும் எந்த வர்க்கங்கள்—சக்திகளை வேண்டுமானாலும் திரட்டி, எந்த வகையிலும் அணிவகுத்து நிறுத்தி, எந்த முறையில் வேண்டுமானாலும் எதிரியைத்

தாக்குவதற்கு முயலுவது பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் தலைமைமுறை பற்றிய விஞ்ஞானத்தைப் பிரயோகிப்பதாகாது. மக்கள் அரசியல் படையையும் மக்கள் இராணுவப் படையையும் கொண்டு பலாத்காரப் புரட்சியின் தாக்குதலால் மட்டுமே எதிரியை வீழ்த்த முடியும். எனினும், இத்தாக்குதலை குறிப்பிட்டதொரு திட்டத்தின் அடிப்படையில், குறிப்பிட்டதொரு முறையில் தொடுக்கும் பொழுது மட்டுமே வெற்றி நிச்சயமாகும். இதற்கான பொதுத்திசையை, பொதுப்பாதையை பொதுவாகக் கூறுவதானால், பொதுத்திட்டத்தை யுத்ததந்திரம் வகுத்தளிக்கிறது.

"யுத்ததந்திரம் என்பது திட்டத்தால் வழிகாட்டப்பட்டு, மோதிக்கொள்ளும் சக்திகளின் — உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் — பலாபலங்களை அடிப்படையாகக் கொண்டு யுத்ததந்திரமானது பாட்டாளி வர்க்கம் கட்டாயம் மேற்கொள்ள வேண்டிய — தோன்றி வளர்ந்து கொண்டிருக்கிற சக்திகளின் உறவு நிலைகளில் மிக மிக அதிகபட்ச பலன்களை அடையும் நோககத்துடன் புரட்சிகரப் பாட்டாளி வர்க்க இயக்கம் வழிநடத்தப்பட வேண்டிய-பொதுவான பாதையை, பொதுவான திசையை வரையறுக்கிறது. இதற்கேற்ப பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் கூட்டாளிகளினதும் சக்திகளை சமூகப் போராட்ட முன்னணியில் ஒதுக்குவதை கோடிட்டுவரையறுக்கிறது. [இது சக்திகளின் பொதுவான ஒதுக்கீடாகும்"] [ஸ்டாலின், தொகுதி 5, பக்.64].

குறிப்பாக சொல்வதானால் யுத்ததந்திரத்தின் உள்ளடக்கக் கூறுகளும் பணிகளும் என்பன 1 பிரதானத் தாக்குதல் திசைவழியைத் தீர்மானிப்பது; 2 புரட்சிகர சக்திகளை அணிவகுத்து நிறுத்தும் திட்டத்தை வகுப்பது; 3 பிரதான தாக்குதல் திசைவழியிலிருந்து சிறிதும் வழுவாது புரட்சிகர சக்திகளை அணிவகுத்து நிறுத்தியிருக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக விடாப்பிடியாகப் போராடுவது — இம் மூன்றையும் ஆளும் விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் வகுத்து வரையறுப்பதும், நடைமுறையில் நிலைநாட்டுவதும் பிரதான எதிரிக்கு எதிராக பிரதான தாக்குதல் திசைவழியில் பிரதான அடிகொடுத்து எதிரியை வீழ்த்துவதற்காகப் போரிடுவதும் ஆகும்.

"யுத்ததந்திரம் என்பது புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பிரதான தாக்குதல் திசைவழியைத் தீர்மானிப்பது; அதற்குப் பொருத்தமாகப் புரட்சிகர சக்திகளை [பிரதான மற்றும் இரண்டாம் பட்ச சேமிப்புகளை — ரிசர்வுகளை] அணிவகுத்து பிரித்து ஒதுக்குவதற்கான விரிவான திட்டத்தை வகுப்பது; புரட்சியின் அந்த குறிப்பிட்ட கட்டம் பூர்த்தியாகும் வரையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போராடுவது" என்றார் ஸ்டாலின். [ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள், பக்-80]

மேலும் குறிப்பாகவும் சாராம்சமாகவும் கூறுவதானால் எந்தப் பாதையினூடாக, எந்தத் திசை வழியாக எதிரிக்கு எதிரான தீர்மானகரமானத் தாக்குதலைத் திருப்பிவிடும்பொழுது அதிக பட்ச பலன் கிட்டும் என்ற யுத்ததந்திரத்தின் அதிமுக்கியப் பணியையும், எந்தெந்த வர்க்கங்களைத் திரட்டி எவ்வாறு அணி வகுத்து நிறுத்துவதின் மூலம் இதைச் சாதிக்க முடியும் என்ற திட்டத்தையும் கோட்பாடு ரீதியில் வகுப்பதும், அவற்றை நிறைவேற்ற நடைமுறை ரீதியில் போராடுவதும்தான் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் தலைமைமுறை பற்றிய விஞ்ஞானமாகும்.

"யுத்ததந்திரத்தின் அதிமுக்கியப்பணி தொழிலாளர் வர்க்க இயக்கம் மேற்கொள்ள வேண்டியதும் திட்டத்தில் உருவாக்கிமுன் வைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு தனது எதிரியின் மீது மிகவும் சாதகமான முறையில் பாட்டாளி வர்க்கம் பிரதானத் தாக்குதல் தொடுப்பதுமான, திசைவழியைத் தீர்மானிப்பதாகும். ஒரு யுத்ததந்திர திட்டம் என்பது தாக்குதல் மிகவும் நிச்சயமாக அதிபட்ச பலனை அளிக்கக் கூடியதான திசைவழியிலான தீர்க்கமான தாக்குதலுக்கான ஒருஸ்தாபனத் திட்டமாகும்." (ஸ்டாலின், தொகுதி 5, பக்-166)

அதாவது, தாக்குதல் திசைவழி என்பது புரட்சியின் நிச்சயமான, திட்டவட்டமான பாதையை, இயக்கப் போக்கை, செயற் போக்கைக் குறிக்கின்றது; யுத்ததந்திர திட்டம் என்பது அதற்கான ஸ்தாபன திட்டத்தைக் குறிக்கின்றது.

யுத்ததந்திரத்தின் அதிமுக்கியப் பணியாகிய பிரதான தாக்குதல் திசைவழி குறித்தும், அதை நிறைவேற்றுவதற்கான, அதற்குப் பொருத்தமான யுத்ததந்திரத் திட்டம் குறித்தும் இந்தியப் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் தவறான கருத்துக்களே நிலவுகின்றன. இவற்றுக்கு நேருக்கு நேர், வார்த்தைக்கு வார்த்தை பொருள் கொண்டு தவறாக வியாக்கியானம் செய்து கொள்ளப்படுகிறது. அதாவது, திரிபுவாதிகள், நவீன திரிபுவாதிகளது பிரதான தாக்குதல் திசைவழி நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதையும் பொருளாதாரவாதமும் என்றும் மார்க்சிய—லெனினியப் பாதை புரட்சிகர வன்முறைப் பாதை என்றும் இதற்கேற்ற வெவ்வேறு ஸ்தாபன வடிவங்கள் என்றும் அல்லது கிராமப்புறங்களில் தளப்பிரதேசங்களை நிறுவும், செஞ்சேனையைக் கட்டும் மக்கள் யுத்தப்பாதை என்றும் அல்லது விவசாயிகளது விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட தேசிய மற்றும் ஜனநாயகப் புரட்சிப்பாதை என்றும் இவற்றுக் கேற்ற ஸ்தாபனத் திட்டம் என்றும் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். இவை இராணுவ யுத்ததந்திரம் அல்லது புரட்சியின் தன்மையைத்தான் குறிக்கின்றன; அரசியல் யுத்ததந்திரத்தின் அதிமுக்கியப் பணியாகிய பிரதான தாக்குதல் திசைவழியை குறிக்கவுமில்லை; அரசியல் யுத்ததந்திரத் திட்டத்தையும் குறிக்கவுமில்லை.

ஆளும் வர்க்கங்கள் தமது வர்க்க ஆட்சியை நிலைநாட்டவும் நீட்டிக்கவுமான மிக முக்கியமான சமூக அடிப்படைகளாக சில சமரச சக்திகளை சில வர்க்கங்களும் அவற்றின் அரசியல் கட்சிகளும்—பெற்றுள்ளன. பரந்துபட்ட மக்களை இந்த சமரச சக்திகள் தம் பின்னே திரட்டிக் கொண்டு புரட்சியின் எதிரிகளுக்கும் அவர்களுக்கும் மோதல் ஏற்படாமல் சமரசப்படுத்துகின்றன. இச்சமரச சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தி அவர்களின் தலைமையிலிருந்து பரந்துபட்டமக்களை-புரட்சியின் பிரதான சேமிப்பு சக்திகளை [ரிசர்வுகளை]-வென்றெடுக்காமல், புரட்சியின் எதிரிகளுக்கும் இவர்களுக்கும் நேரடி மோதல் ஏற்படாமல், ஆளும் வர்க்கங்களைத் தாக்கி வீழ்த்த முடியாது. பிரதான தாக்குதல் திசைவழி என்பது புரட்சியின் சமரச சக்திகளை தனிமைப்படுத்தி முடமாக்கி பரந்துபட்ட மக்களை [குறிப்பாக பிரதான சேமிப்புகளை] பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் வென்றெடுப்பதும் புரட்சியின் எதிரிகளுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் [குறிப்பாக பிரதான சேமிப்புகளுக்கும்] நேரடி மோதலை உருவாக்குவதும் ஆகிய செயல்பாடுகளையே, இயக்கப் போக்குகளையே குறிக்கிறது. இதன் மூலமாகத்தான் பிரதான தாக்குதல் மிகவும் நிச்சயமான வகையில் அதிகபட்ச பலன்களை அளிக்கக்கூடியதாக அமையும். இதற்குப் பொருத்தமானபடி புரட்சிக்குச் சாதகமான சக்திகளை எவ்வாறு எந்தச் சூழ்நிலைமைகளில் பயன்படுத்துவது என்பதற்கான ஸ்தாபனத் திட்டத்தையே தலைமை மற்றும் நேரடி-மறைமுக சேமிப்பு சக்திகளை [ரிசர்வுகளை] போரிடும் சமுதாய அரங்கில் பிரித்து ஒதுக்குவதையே-யுத்ததந்திர திட்டம் குறிக்கிறது. யுத்ததந்திர திட்டத்தால் வகுத்தளித்திருக்கும் சக்திகளைப் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப போரிடும் சமுதாய அரங்கில் கொண்டு வந்து நிறுத்தி பிரதான தாக்குதல் திசைவழியே, பிரதான அடியைத் தொடுக்கும் பொழுதுதான் எதிரியை வீழ்த்த முடியும்.

பிரதான தாக்குதல் திசைவழியைத் தீர்மானிப்பது என்பதன் பொருள் புரட்சியின் கட்டம் முழுவதுமான இயக்கப் போக்குகளை, செயற்போக்குகளை முன்கூட்டியே தீர்மானிப்பது; அதுவும் மொத்தப் புரட்சியின் விதியில் பத்தில் ஒன்பது பங்கு அளவுக்கு முன்கூட்டியே தீர்மானிப்பதாகும். புரட்சியில் மிகவும் நிச்சயமான, தீர்க்கமான முறையில் எதிரிக்கு எதிரான பிரதான தாக்குதல் தொடுப்பதற்கான பிரதான தாக்குதல் திசைவழியென்பது புரட்சியில் ஊசலாட்ட, சமரச சக்திகளை முடமாக்குவதும், மிகவும் நம்பகமான நேச சக்திகளைச் சார்ந்து நின்று தாக்குதல் தொடுப்பதுமாகும்.

ருஷிய போல்ஷ்விக்கட்சி 1917ஃபிப்ரவரி ஜனநாயகப் புரட்சியிலும் 1917 அக்டோபர் சோசலிசப் புரட்சியிலும் வகுத்துக் கொண்ட யுத்ததந்திரங்களின் பிரதான தாக்குதல் திசைவழி பற்றிய அனுபவங்களைத் தொகுத்து இந்தியப் புரட்சியின் பருண்மையான நிலைமைகளுக்குப் பிரயோகிப்போம். இந்த

வகையிலே அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். 1903-லிருந்து 1917ஃபிப்ரவரி வரையிலான ருஷியப் புரட்சியின் முதற்கட்டத்தில்

> "பிரதான தாக்குதல் திசைவழி விவசாயி மக்களைத் தம் பக்கம் இழுத்துக்கொண்டு ஜாரிசத்துடன் ஒரு சமரசம் செய்து கொள்வதின் மூலம் புரட்சியை சின்னாபின்னப்படுத்த முயன்று வந்த மிதவாத-முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தை தனிமைப்படுத்துவதாக இருந்தது. [ஷெ நூல் பக்-80 ஸ்டாலின்]

மென்ஷவிக்குகளது யுத்ததந்திரத் திட்டம் முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமையிலான மிதவாத முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களது ஒரு கூட்டணி என்ற பாதையினூடாக, பிரதான தாக்குதல் திசையினூடாக ஜாரிசத்திற்கெதிரான பிரதான தாக்குதல் தொடுப்பது என்பதாகும். மென்ஷவிக்குகளது இத்திட்டம் பிற்போக்குத்தனமானது; ஏனெனில் இது முதலாளித்துவ வர்க்கத் தலைமையையும் அதன் மூலம் புரட்சியின் தலைவிதியை நிர்ணயிப்பதையும் விட்டுக்கொடுத்து பாட்டாளி வர்க்கத்தை வால் பிடிக்கும் தன்மையுடையதாக மாற்றுவதானது; மேலும் புரட்சியின் மிக முக்கியமான உந்து சக்திகளில் ஒன்றான கோடானு கோடி விவசாய மக்களை கிட்டத்தட்ட அல்லது முற்று முழுதாகப் புறக்கணிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக மிதவாத முதலாளித்துவ வர்க்கம் புரட்சியின் முற்று முழுதான வெற்றியை ஈட்டுவதற்குப் பதில் ஜாரிசத்துடன் ஒரு சமரசம் செய்து கொள்வதற்கு எப்பொழுதும் தயாராக இருந்த வர்க்கமாகும்.

மென்ஷவிக்குகளது பிரதான தாக்குதல் திசை வழிக்கான இந்த யுத்ததந்திர திட்டத்திற்கு மாறாக போல்ஷவிக்குகளது திட்டம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளது ஒரு கூட்டணி என்ற பாதையினூடாக — பிரதான தாக்குதல் திசைவழியினூடாக — ஜாரிசத்திற்கெதிரான பிரதான தாக்குதல் தொடுப்பதாகவும் மிதவாத முதலாளிகளை நடுநிலைப்படுத்துவதாகவும் இருந்தது. இது மிகவும் அருமையான திட்டமாகும். ஏனெனில் புரட்சியின் அடுத்த கட்டத்திற்கு மாறிச் செல்வதற்கான கருவடிவிலான அடிப்படை என்கிற முறையிலும், புரட்சியின் முற்றும் முழுதான வெற்றிக்கு உத்திரவாதம் செய்யும் மிகவும் முன்னேறிய வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலானது என்கிற வகையிலும் அமைந்தது; புரட்சியின் மிக முக்கியமான உந்து சக்தியாகிய விவசாயிகளைச் சார்ந்திருந்தது; எல்லாவற்றுக்கும் மேலாக புரட்சியின் முற்றும் முழுதான வெற்றிக்குப் பதிலாக தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பலியிடும் — ஜாரிசத்துடன் சமரசம் செய்துகொள்ளும் — முதலாளித்துவ வர்க்கத்தை தனிமைப்படுத்தி, நடுநிலைப்படுத்தி முடமாக்குவதையும் விவசாயிகளை, பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு வென்றெடுப்பதையும் பாதையாகக் கொண்டது. இந்த யுத்ததந்திர திட்டத்தை நிறைவேற்றும் பாதையினூடாகத்தான் —பிரதான தாக்குதல் திசைவழியினூடாகத்தான் — ஜாரிசத்தை வீழ்த்த முடியும் என்பதால் மிதவாத—முடியரசுவாத முதலாளித்துவ

வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கேடட் கட்சியை [சமரசப்படுத்தும் அரசியல் சக்தியாக விளங்கிய கட்சியை] தனிமைப்படுத்தி முடமாக்குவதையும், ஜாரிசத்திற்கும் விவசாயிகளுக்கும் நேரடி மோதலை ஏற்படுத்துவதையும், விவசாயிகளை பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு வென்றெடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு போல்ஷ்விக் கட்சி செயல்பட்டது.

''ஜாரிசத்திற்கு எதிரான போராட்ட காலத்திலும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கான தயாரிப்புக் காலத்திலும் (1905-16) ஆக மிக அபாயகரமான ஜாரிச ஆதரவு சமூக சக்தியாக மிதவாத — முடியரசுவாதக் கட்சியாக கேடட் கட்சி கருதப்பட்டது. இது ஏன்? ஏனெனில் அது சமரசக் கட்சியாகும்; ஜாரிசத்திற்கும் பெரும்பாலான மக்களுக்கும் அதாவது, அனைத்து விவசாயிகளுக்கும் இடையில் சமரசக் கட்சியாகும். நமது கட்சி, அந்தக் காலத்தில் இயற்கையாகவே, தனது தாக்குதலை அவர்களை நோக்கியே பிரதானமாக தொடுத்தது. ஏனெனில் கேடட்டுகளைத் தனிமைப்படுத்தாவிட்டால் விவசாயிகளுக்கும் ஜாரிசத்திற்கும் இடையே பிளவு ஏற்படுத்தமுடியாது; அப்படி பிளவு ஏற்படுத்தாவிட்டால் புரட்சியின் வெற்றி பற்றி நம்பிக்கை கொள்ளமுடியாது. போல்ஷ்விக் யுத்ததந்திரத்தினுடைய இந்த தனிச் சிறப்பான அம்சத்தை பலர் அப்போது புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் போல்ஷ்விக்குகளுக்கு ''கேடட்பீதி'' அதிகமாக பிடித்துவிட்டதாக குற்றஞ் சாட்டினர். பிரதான எதிரியான ஜாரிசத்திற்கு எதிரான போராட்டத்தை ''மிஞ்சும்படி'' கேடட்டுகளுக்கு எதிரான போராட்டத்தை போல்ஷ்விக்குகள் கருதுவதாகக் கூறினர். பிரதான எதிரியின் மீதான வெற்றிக்கு வழி செய்வதற்கும், அதை விரைவுபடுத்துவதற்கும் சமரச கட்சியைத் தனிமைப்படுத்துவது என்ற போல்ஷ்விக் யுத்ததந்திரத்தை அவர்கள் புரிந்துகொள்ள தவறிவிட்டனர் என்பதையே இவர்களது குற்றச்சாட்டு அப்பட்டமாகக் காட்டியது.

''இந்த யுத்ததந்திரம் இல்லாமல் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் மேலாதிக்கம் பெறுவது சாத்தியமில்லாமல் போயிருக்கும் என்பதற்கு நிரூபணம் ஏதும் தேவையில்லை.'' [ஸ்டாலின், மேடி நூல் பக் 142-143]

1917 ஃபிரவரியிலிருந்து 1917 அக்டோபர் வரையிலான ருஷியப் புரட்சியின் இரண்டாவது கட்டத்தில், ''பிரதான தாக்குதல் திசைவழி: உழைக்கும் விவசாய மக்கள் திரளை தம்பக்கம் இழுத்துக்கொண்டு ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொள்வதின் மூலம் புரட்சியை தடுத்து நிறுத்திவிட முயற்சித்த குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளான மென்ஷ்விக்குகளையும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களையும் தனிமைப்படுத்துவது'' [மேடி நூல் ஸ்டாலின், பக்-81] என்பதாக இருந்தது.

மென்ஷவிக்குகள் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களது யுத்ததந்திர திட்டம் சிறிது சிறிதாக ஆனால் விடாப்பிடியாக தொடர்ந்து சோவியத்துகளிடமிருந்து அதிகாரத்தைப் பறித்து, நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் அரசியல் நிர்ணய சபையில் குவிப்பதன் மூலம் முதலாளித்துவ சர்வாதிகாரத்தை நிறுவுவதும், யுத்தம், சமாதானம் மற்றும் உழைப்பாளர்களது பிரச்சினைகளையும் விவசாய மற்றும் தேசிய இனப்பிரச்சினைகளையும் காலவரையறையின்றி ஒத்திப்போடுவதும், ''அனைத்து அதிகாரங்களும் அரசியல் நிர்ணய சபைக்கே'' என்பதும் ஆகும். படுபிற்போக்குத்தனமான இத்திட்டத்தின்படி ஒரு முதலாளித்துவ சர்வாதிகாரத்தை நிறுவுவதற்காக உழைக்கும் மக்களை குறிப்பாக விவசாயப் பெருமக்களை ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்வதும் புரட்சியை தடுத்து நிறுத்துவதுமாகும். இங்கு சமரச சக்திகளாக குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளாகிய மென்ஷவிக்குகளும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களும் இருந்தனர்.

மென்ஷவிக்குகள் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களது பிரதான தாக்குதல் திசைவழிக்கான இந்த யுத்ததந்திர திட்டத்திற்கு மாறாக போல்ஷவிக்குகளது யுத்ததந்திர திட்டத்தின் படி பிரதான தாக்குதல் பாட்டாளி வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளது இணைந்த சக்திகளைக் கொண்டு முதலாளித்துவ அதிகாரத்தை ஒழித்துக்கட்டுவதின் பாதையினூடாக இருந்தது. இதன்படி, ஏகாதிபத்தியத்துடன் மோதல், யுத்தத்திலிருந்து விலகிக்கொள்வது, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு விடுதலை, நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது, சோசலிச கட்டுமானத்துக்கு தயாரிப்பது மற்றும் ''அனைத்து அதிகாரங்களும் சோவியத்துக்களுக்கே'' ஆகியன அடங்கும். எல்லாவற்றுக்கும் மேலாக உழைக்கும் மக்களை குறிப்பாக ஏழை விவசாயிகளை பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு வென்றெடுக்கும் பொருட்டு குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளைத் தனிமைப் படுத்தும் பாதையினூடே-பிரதான தாக்குதல் திசைவழியினூடே —ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தாக்குதல் தொடுக்கப்பட்டது.

> ''அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்புக் காலத்தின் போது மோதிக்கொள்ளும் சக்திகளின் ஈர்ப்பு மையம் வேறொரு இடத்துக்கு மாறியது. ஜார் ஒழிந்து விட்டான். சமரச சக்தியாக இருப்பதிலிருந்து ஆளும் சக்தியாக, ஏகாதிபத்தியத்தினுடைய ஆளும் சக்தியாக கேடட் கட்சி மாற்றமடைந்து விட்டது. இப்போதைய சண்டை ஜாரிசத்திற்கும் மக்களுக்கும் இடையிலானதாக இல்லை; முதலாளித்துவ வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான சண்டையாகும். இந்தக் காலத்தில் குட்டி முதலாளித்துவ கட்சிகளான சோசலிஸ்ட் புரட்சியாளர்களும் மென்ஷவிக்குகளும் ஆகமிக அபாயகரமான ஏகாதிபத்திய ஆதரவு சமூக அடிப்படை கொண்ட கட்சிகளாக விளங்கினர். இது ஏன்? ஏனெனில் இந்தக் கட்சிகள் அப்போது சமரச கட்சிகளாக,

ஏகாதிபத்தியத்திற்கும் பரந்துபட்ட உழைக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள சமரசக் கட்சிகளாக விளங்கின. போல்ஷ்விக்குகள் அந்தக் காலத்தில், இயற்கையாகவே, தமது தாக்குதலை இந்தக் கட்சிகளை நோக்கித் தொடுத்தனர். ஏனெனில் இந்தக் கட்சிகளை தனிமைப் படுத்தாவிட்டால் உழைக்கும் மக்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையே பிளவை ஏற்படுத்த முடியாது; அப்படி பிளவை ஏற்படுத்த முடியாவிட்டால் சோவியத் புரட்சியின் வெற்றி பற்றி நம்பிக்கை கொள்ள முடியாது. போல்ஷவிக் யுத்ததந்திரத்தின் இந்த தனிச் சிறப்பான அம்சத்தை பலர் அப்போது புரிந்து கொள்ளவில்லை. சோசலிஸ்டு புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷவிக்குகளின் பால் போல்ஷவிக்குகள் "மிதமிஞ்சிய வெறுப்பை" வெளிப்படுத்துவதாகவும் பிரதான இலக்கை "மறப்பதாகவும்" போல்ஷவிக்குகள் மீது குற்றஞ் சாட்டினர். ஆனால் அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்புக் காலம் முழுவதும் இந்த யுத்ததந்திரத்தைக் கடைப் பிடித்ததின் மூலம் அக்டோபர் புரட்சியின் வெற்றியை போல்ஷவிக்குகள் உறுதிப் படுத்திக்கொள்ள முடிந்தது என்ற உண்மை தெள்ளத் தெளிவாக்கிற்று" [ஸ்டாலின், ஹி நூல், பக்-143-144]

புரட்சி வெற்றி பெற்ற பின்னரும் கூட ஒரு சோசலிச நாட்டின் யுத்ததந்திர திட்டமும் இந்த வகையிலே தான் உள்நாட்டில் முதலாளித்துவத்தை நிலை நாட்ட எத்தனிக்கும் முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராகவும் சோசலிசக் கட்டமைவை ஒழித்துக்கட்ட எத்தனிக்கும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவுமான புரட்சியின் பிரதான தாக்குதல் திசைவழி ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து புரட்சியை காட்டிக் கொடுக்கும் சக்திகளை தனிமைப் படுத்துவதாக அமைகின்றது. எனவே தான், அக்டோபர் புரட்சிக்கு பிந்திய கட்டத்தில் "பிரதான தாக்குதல் திசைவழி: ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொள்கிற கொள்கைக்கு முக்கிய தூண்களாக இருக்கும் குட்டி முதலாளிய ஜனநாயக வாதிகளையும் இரண்டாவது அகிலத்தின் கட்சிகளையும் தனிதமப்படுத்துவது" [ஷ நூல், பக்-82] என்றார் ஸ்டாலின்.

ருஷியாவின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தின் வரலாறு மிதவாத—முடியரசுவாத முதலாளிகளின் கேடட் கட்சிக்கும் போல்ஷவிக் கட்சிக்கும் இடையில் நடந்த பரந்துபட்ட மக்களை குறிப்பாக, விவசாயப் பெருமக்களை வென்றெடுப்பதற்கான போராட்ட வரலாறாகவேயிருந்தது. இதை சாதிக்கும் பொழுது மட்டுமே பிரதான, தீர்க்கமான தாக்குதலை ஜாரிசத்திற்கு எதிராகத் தொடுக்க முடியும் என்ற நிலையிருந்தது. ருஷிய— ஜப்பானிய யுத்தத்திலும், 1903 - 05 முதல் ருஷியப் புரட்சிலும் யுத்தத்தை ஆதரிப்பதும் புரட்சியை சின்னாபின்னப் படுத்துவதும், ஜாரிசத்துடன் சமரசம் செய்து கொண்டு ஜாருக்கும் புரட்சிகரமான மக்களுக்குமிடையே முடிந்தவரை அமைதியான

பேரத்தை நடத்துவதும் ஜாரிச எதேச்சதிகாரத்திற்கான சமூக அடிப்படையைத் தோற்றுவிக்கும் வகையில் நிலப்பிரபுக்களுடன் சமரசம் செய்துகொண்டு சீர்திருத்த முறையில் முதலாளித்துவ உற்பத்திமுறையைக் கொண்டு வருவதும் ஆகிய கேடட்டு களது சமரச சரணடைவுப் போக்குகளுக்கு எதிராக விடாப் பிடியான உறுதியான போராட்டத்தினூடாக புரட்சியை முன் னெடுத்துச் சென்றதின் மூலமே அவர்களைத் தனிமைப்படுத்தும் பிரதான தாக்குதல் திசைவழியை போல்ஷவிக் கட்சி பின்பற் றியது.

அதேபோன்று சோசலிசப் புரட்சிக் கட்டத்தின் வரலாறும் ஒருபுறம் மென்ஷவிக்குகள் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர் களுக்கும் மற்றொருபுறம் போல்ஷ்விக்குகளுக்கும் இடையில் நடந்த பரந்துபட்ட மக்களை குறிப்பாக உழைக்கும் விவசாயப் பெருமக்களை வென்றெடுப்பதற்கான போராட்ட வரலாறாகவே இருந்தது. நிலப்பிரபுக்களது நிலத்தைக் கைப்பற்ற மறுப்பது ஏகாதிபத்தியத்தை ஆதரிப்பதும் யுத்தத்தைத் தொடர்வதும், ஜூன் எழுச்சியின் மீதான தாக்குதல் ராணுவவீரர்களுக்கு எதிராக வதைக்கும் தண்டனை முறையைப் புகுத்துவது, சோர்னிலோவ் எதிர்ப்புரட்சி எழுச்சியின் போது ஊசலாடியது ஆகிய மென்ஷ விக்குகள் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களது முதலாளித் துவ சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்துவதும் ஏகாதிபத்தியத்து டன் பரந்துபட்ட மக்களை குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தை இழுத்துச் சென்று சமரசப்படுத்துவதும் புரட்சியை தடுத்து நிறுத்த முயல்வதும் ஆகிய போக்குகளுக்கு எதிரான விடாப் பிடியான உறுதியான போராட்டத்தினூடாகப் புரட்சியை முன் னெடுத்துச் சென்றதின் மூலமே அவர்களைத் தனிமைப்படுத்தும் பிரதான தாக்குதல் திசைவழியை போல்ஷவிக் கட்சி பின்பற் றியது.

"இந்தக் காலத்தின் தனிச்சிறப்பான அம்சம் என்னவென் றால் பரந்துபட்ட உழைக்கும் விவசாயிகள் மேலும் புரட்சி மயமாக்கப்படுவதுதான்; சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் மட் டும் மென்ஷவிக்குகளின் பால் அவர்கள் விரக்தியுற்றதுதான்; இந்தக் கட்சிகளை அவர்கள் கைவிட்டதுதான். உண்மையி லேயே உறுதியான புரட்சிகரமான சக்தி, நாட்டை சமாதா னத்துக்குக் கொண்டு செல்லக் கூடிய திராணியுடைய சக்தி பட்டாளி வர்க்கமே என்பதை உணர்ந்து பாட்டாளி வர்க் கத்தை சூழ்ந்து அவர்கள் அணி திரண்டதுதான்......போல்ஷ விக் யுத்ததந்திரத்திற்கு முழுக்க முழுக்க ஆதரவாக இந்தப் போராட்டப் பிரச்சினையில் முடிவெடுத்தனர்; சோசலிஸ்டு புரட்சியாளர்களையும் மென்ஷவிக்குகளையும் தனிமைப் படுத்தியிராவிட்டால் ஏகாதிபத்தியவாதிகளது அரசாங் கத்தைத் தூக்கியெறிவது அசாத்தியமாயிருக்கும். இந்த அரசாங்கம் தூக்கியெறியப்படாவிட்டால் யுத்தத்திலிருந்து உடைத்துக்கொண்டு வெளிவருவது அசாத்தியமாயிருக்கும். சோஷலிஸ்டு புரட்சியாளர்களையும் மென்ஷவிக்குகளையும்

தனிமைப்படுத்தும் கொள்கையே ஒரே சரியான கொள்கை என்பது நிரூபிக்கப்பட்டது'' [ஸ்டாலின் ஹ நூல், பக் 144]

ருஷிய போல்ஷவிக் கட்சியின் மேற்கண்ட மூன்று புரட்சிக் கட்டங்களுக்கான யுத்ததந்திர திட்டங்கள் மற்றும் பிரதான தாக்குதல் திசைவழிகளின் அனுபவங்களில் இருந்து தொகுக்கப்படவேண்டிய சாராம்சம்என்னவென்றால் புரட்சியின் உந்து சக்திகளை தன்பின்னே இழுத்துக்கொண்டு சென்று திசை திருப்பி விட்டு புரட்சியின் எதிரிகளுடன் சமரசம் செய்து புரட்சியை சீர் குலைக்கும் சமரச சக்திகளை தனிமைப்படுத்துவது மற்றும் அவர்களது தலைமையிலிருந்து புரட்சியின் உந்து சக்திகளை வென்றெடுப்பது ஆகிய பாதையே பிரதான தாக்குதல் திசைவழியாக இருக்க வேண்டும். எதிரிக்கு எதிரான பிரதான தாக்குதல் தொடுப்பதற்கான முன் நிபந்தனையாக இது இருக்கிறது. அப்பொழுதுதான் தாக்குதல் அதிகபட்ச பலனளிக்கக் கூடிய வகையினதாக இருக்கும்.

ஆனால் சாருவும் பிற இடது சர்ந்தர்ப்பவாதிகளும் போலவே பிற மார்க்சிய—லெனினியக் குழுக்களும் எதிரிகளுக்கும் சமரச சக்திகளுக்கும் இடையில் பாகுபாடின்றி இரு சக்திகளையும் ஒரே மாரிதித் தாக்குவதும் சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தும் பிரதான தாக்குதல் திசைவழியினூடே பிரதான தாக்குதல் தொடுப்பதற்குப் பதில் மூர்க்கத்தனமாக எதிரியுடன் மோதுவதும் பரந்துபட்ட மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் உணரச் செய்வதற்கு பதில் சில சமயங்களில் சமரச சக்திகளை வெறுமனே தாக்குவதும், யுத்ததந்திர ரீதியிலான வரையறை தொலைநோக்கின்றி நிலைமைகளின் நிர்ப்பந்தம் காரணமாக அவர்களுடன் சந்தர்ப்பவாதக் கூட்டு சேருவதும் [அவசர நிலைப் பிரகடனத்தின் போதும், தற்போது மூன்றுலக கோட்பாட்டைக் காட்டியும் சில குழுக்கள் இவ்வாறு நடந்து கொண்டிருக்கின்றன] என்ற கோட்பாடும் நடைமுறையும் கொண்டுள்ளனர். சீனப்புரட்சியின் புறவயமான நிலைமைகளோடு ஒப்பிட்டு புரட்சியில் வெவ்வேறு வர்க்கங்களின் பாத்திரம் குறித்து இவர்கள் முடிவுக்கு வந்திருப்பினும் ஆக்கபூர்வமான முறையில் பருண்மையாகப் பிரயோகிக்கத் தவறியதால் அரசியல் யுத்ததந்திரத்தின் இந்த அதிமுக்கியப் பணியை முற்றாகப் புறக்கணிக்கின்றனர்.

சமரச சக்திகளின் அரசியல் போக்குகள் புரட்சியை சீர் குலைப்பதாகவும் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டி எதிரிக்கு சமூக அடிப்படையாக விளங்குவதாகவும் இருப்பதால் அவற்றின் செயல்பாடுகள் புரட்சிக்கு ஊறு விளைவிப்பதாகவும் துரோகமிழைப்பதாகவுமே இருக்கின்றன. புரட்சியின் போக்கில் சமரச சக்திகள் நேரடியாக துரோகமிழைத்து எதிரியுடன் சேருகின்றன. எனினும் அவற்றின் சமூக அடிப்படைகளான வர்க்கங்கள் பெரும்பாலும் முடமாக்கப் படுகின்றன. அல்லது நடுநிலைப்படுத்தப் படுகின்றன. இவர்கள் புரட்சியின் எதிரிகளாகக் கருதி தூக்கியெறியப்படுவதில்லை. துரோகமிழைத்து எதிரியுடன் சேர்

பவர்கள் தவிர எஞ்சிய ஒரு பிரிவு, மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசிலும் கூட பங்கேற்பர்.

புரட்சியின் எதிரிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆளும் வர்க்க அரசியல் சக்திகள் அவற்றின் வர்க்கப் பின்னணி காரணமாக எதிரியின் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் நியாயப் படுத்தி அதை நிலைநாட்டத் திட்டமிட்டு உணர்வு பூர்வமாக பாடுபடும் அந்த நோக்கத்துடனேயே துவக்கப்பட்டு செயல்படுவனவாகும். ஆனால் சமரசப் படுத்தும் அரசியல் சக்திகள் அவற்றின் சமூக அடிப்படைகளான வர்க்கங்களது நலன்கள் புரட்சியின் வெற்றியில் அடங்கியிருப்பினும் இயல்பான ஊசலாட்டத் தன்மை காரணமாகவே பரந்துபட்ட மக்களை புரட்சியிலிருந்து திசை திருப்புவதாகவும் எதிரியுடன் சமரசம் செய்வதாகவும் ஆகிய போராட்ட முறைகளையும் ஸ்தாபன வடிவங்களையும் அரசியலையும் கொண்டிருக்கின்றன. எனவேதான், அரசியல் சக்திகள் இறுதியில் பெரும்பாலும் எதிரிகளுடன் சேரும் அதே வேளையில் ஊசலாடும் இந்த வர்க்கங்கள் முடமாக்கப் படுகின்றன அல்லது நடுநிலைப் படுத்தப் படுகின்றன. ஒரு காலனிய, அல்லது நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாட்டில் குறிப்பிட்ட அளவு குறிப்பிட்ட காலத்தில் புரட்சியின் பக்கம் அவை நிற்கும்படி நிர்ப்பந்திக்கப் படுகின்றன. அரசியல் முன்னணிப் படையான பாட்டாளி வர்க்கத்துக்கு தேவையான பின்னணிப் படைகள் சமுதாய அரங்கில் அப்படியே தயாராக வந்து அணி வகுத்து நிற்பதில்லை; மாறாக, சமரச சக்திகள் மற்றும் எதிரி சக்திகளின் பின்னே அணிவகுத்து நிற்கின்றன. பாட்டாளி வர்க்கத்திலேயே கூட பெரும்பான்மையினர் அவ்வாறு தான் இருக்கிறார்கள்.

எனவே, அரசியல் அணி திரட்டவும் அரசியல் படையைக் கட்டவும் முயற்சிக் பாட்டாளி வர்க்க கட்சிக்கு சமரச சக்திகளை தனிமைப்படுத்தி பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பதே பிரதான பணியாகிறது. ''புரட்சியின் முக்கிய சக்திகளையும் அவைகளின் சேமிப்பு [துணை—ரிசர்வு] சக்திகளையும் கையாள்வது யுத்ததந்திரமாகும்'' என்றும் ''புரட்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் அந்தக் கட்டத்தின் முக்கிய குறிக்கோளை சாதிப்பதற்காக சேமிப்பு [துணை—ரிசர்வு] சக்திகள் அனைத்தையும் சரியானபடி பயன்படுத்துவதே யுத்ததந்திரத் தலைமையின் கடமை'' [ஷை நூல், பக்-85] என்று ஸ்டாலின் தெளிவாக சுட்டிக் காட்டினார். ஆனால், இடது சந்தர்ப்பவாதிகள் நாடாளுமன்றத்திற்கு இட்டுச் சென்றுவிடும் என்ற அச்சத்தாலும், திரிபுவாத சேற்றில் இறங்கி விடும் அச்சத்தாலும் நாட்டையும் சமுதாயத்தையும் பாதிக்கும் உயிராதரமான அரசியல் பிரச்சினைகளில் ஊக்கமாகத் தலையிட்டு சமரச சக்திகளைத் தனிமைப் படுத்தி பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பதை முதலாளித்துவ அரசியல் என்று புறக்கணிக்கின்றனர்.

'இடது' வலது சந்தர்ப்பவாதங்களுக்கு மாறாகத் தாக்குதல் திசைவழி பற்றி பின்வருமாறு ஸ்டாலின் தொகுத்தளித்தார்.

''லெனினிசத்தினுடைய அடிப்படை யுத்ததந்திர விதி கள் எவை? இவை பின்வருவனவற்றை அங்கீகரிக்க வேண்டும்:

1. புரட்சி வெடிப்பதற்கான காலம் நெருங்கும் சமயங்களில் சமரசக் கட்சிகளே எதிரிகளுக்கு சமூக ஆதரவு தரும் அபாய கரமான மிகப்பெரிய சக்திகளாகும்.

2. இந்த ரகத்தைச் சேர்ந்த கட்சிகள் தனிமைப்படுத்தப் படா விட்டால் எதிரியை [ஜாரிசம் அல்லது முதலாளித்துவ வர்க்கம்] தூக்கியெறிவது சாத்தியமில்லை.

3. புரட்சிக்கான தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் இந்த ரகத்தைச் சேர்ந்த கட்சிகளைத் தனிமைப் படுத்து வதையும் பரந்துபட்ட உழைக்கும் மக்களை இவர்களிட மிருந்து வென்றெடுப்பதையும் முக்கிய படைக்கலன்களாக கொள்ள வேண்டும்.''

[லெனினிசத்தின் பிரச்சினைகள், ஸ்டாலின், பக்-142]

லெனினிசத்தின் இந்த அடிப்படை யுத்ததந்திர விதிகளை இந்தியாவின் பருண்மையான நிலைமைகளுக்குப் பிரயோகித்து சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தி, பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பதற்கான பிரதான தாக்குதல் திசைவழியையும் யுத்ததந்திர திட்டத்தையும் வகுக்க வேண்டும்.

புரட்சியில் வெவ்வேறு வர்க்கங்களின் பாத்திரங்களையும்—நண்பர்களையும் எதிரிகளையும்—புரட்சிக்குச் சாதகமான சக்திகளையும் வர்க்கங்களையும் முரண்பாடுகளையும் எவ்வாறு எந்தச் சூழ்நிலையில் கையாளுவது என்ற யுத்ததந்திர திட்டத்தை விரிவாகவும் தெளிவாகவும் மாவோ வகுத்தளித்தவாறு சீனத்தைப் போன்றே அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்புடைய இந்தியாவுக்குப்பொருந்தாதா? எதிரிக்கு எதிரான பிரதான தாக்குதல் திசைவழி பற்றிய அவரது வழிகாட்டுதல்கள் இல்லையா? என்ற கேள்விகளை சிலர் எழுப்புகின்றனர். இந்தியப் புரட்சியின் புறவயமான நிலைமைகளை யதார்த்தமாகவும் பருண்மையாகவும் ஆய்ந்தறியும் எவரும் அதன் தனிச் சிறப்பான குணாம்சங்களை அங்கீகரிப்பதும் அதற்கேற்ப பருண்மையாகப் பிரயோகிப்பதும் வேண்டும்; அப்படியே பெயர்த்தெடுத்து எந்திரமுறையில் பொருத்தக்கூடாது.

சீனத்தின் புதிய ஜனநாயகப் புரட்சியில் முன்வைக்கப்பட்ட இருவேறு தாக்குதல் திசை வழிகள் மற்றும் யுத்ததந்திர திட்டங் களைப் பரிசீலித்து அனுபவங்களைத் தொகுத்து இந்திய நிலைமைகளுக்குப் பருண்மையாக பிரயோகிப்போம். இந்தியாவிலுள்ள ரணதிவே-நம்பூதிரி கும்பலான நவீன திரிபுவாதிகளும், டிராட்ஸ்கிய மற்றும் பிற குட்டி முதலாளித்துவ கும்பல்களும் போலவே சீனாவின் இடது சந்தர்ப்பவாதிகளின் யுத்ததந்திரத்திட்டம் சாங்-கோ-தோ கும்பல் மற்றும் டிராட்ஸ்கியவாதிகள் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியையும் சோசலிசப் புரட்சியையும் இணைப்பதாகவும் தரகு அதிகார வர்க்க முதலாளி

களை தேசிய முதலாளிகள் என்றும் கணித்தனர். நகர்ப்புற தொழிலாளர் மற்றும் குட்டி முதலாளித்துவ கூட்டணி என்ற பாதையினூடே பிரதான தாக்குதல் திசைவழி இருக்க வேண்டுமென்றனர். இவர்களின் யுத்ததந்திர திட்டத்தின்படி புரட்சியின் மிகவும் நம்பகமான முக்கிய சேமிப்பு [துணை-ரிசர்வு] சக்தியாகிய விவசாயிகளைப் புறக்கணிப்பதாகவேயிருந்தது. புரட்சியின் தாக்குதல்முனை பிரதான எதிரிக்கு எதிராக இல்லாமல் இலக்குகளை பரந்து விரிந்ததாகவும் ஊசலாட்ட சமரச சக்திகளையும் உள்ளடக்கியதாகவும், முக்கிய சேமிப்பு சக்தியை விலக்குவதாகவும் உள்ள இந்த திட்டம் படு பிற்போக்கானது புரட்சியை சின்னாபின்னப்படுத்துவதாகும். சிறிது காலமே நிலவிய இந்த யுத்ததந்திர திட்டமும் தாக்குதல் திசைவழியும் தவிர வேறு இரு யுத்ததந்திர திட்டங்களும் தாக்குதல் திசைவழிகளும் முன்வைக்கப்பட்டன.

முதலாவது சென்-தூசி-யூ வலது சந்தர்ப்பவாதக் கும்பலினுடையது. இதன் யுத்ததந்திரத்திட்டம் முதலாளித்துவ வர்க்கத் தலைமையிலான முதலாளித்துவ வர்க்கம் பாட்டாளி வர்க்கம் அடங்கிய ஒரு கூட்டணி என்ற பாதையினூடாக —பிரதான தாக்குதல் திசையினூடாக—ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிரான பிரதான தாக்குதல் தொடுப்பதாகும். படு பிற்போக்குத்தனமான இத்திட்டத்தின்படி புரட்சியின் தலைமையும் அதன் மூலம் புரட்சியின் தலைவிதியை நிர்ணயிப்பதையும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு விட்டுக் கொடுத்து பாட்டாளி வர்க்கம் அதற்கு வால்பிடிக்கும் தன்மையுடையதாக மாற்றுவதாகும். மேலும் புரட்சியின் மிகவும் நம்பகமான உந்து சக்தியாகிய கோடான கோடி விவசாயப் பெருமக்களை முற்றும் முழுதாகப் புறக்கணிக்கிறது எல்லாவற்றிற்கும் மேலாக முதலாளித்துவ வர்க்கம் புரட்சியில் முற்றும் முழுதான வெற்றி ஈட்டுவதற்குப் பதில் ஏகாதிபத்தியத்துடனும் நிலப்பிரபுத்துவத்துடனும் சமரசம் செய்து கொள்ளும் ஊசலாட்டத் தன்மையுடையது; 1927 எதிர்ப்புரட்சிக் குடைகவிழ்ப்பின் போது இது நிரூபணமானது.

> ''முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை முதலாளித்துவ வர்க்கம் தலைமையேற்று நடத்த வேண்டும்; அதன் நோக்கம் ஒரு முதலாளித்துவ குடியரசை நிறுவுவதாகும், முதலாளித்துவ வர்க்கம் மட்டுமே ஜனநாயக சக்தி என்பதால் அதனுடன் மட்டுமே பாட்டாளி வர்க்கம் ஒன்று பட வேண்டும் என்று சென்-தூ-சியூவால் தலைமை தாங்கப்பட்ட வலது சந்தர்ப்பவாத கும்பல் கருதியது. முதலாளிகளுடன் கூட்டுறவு என்ற கருத்தோட்டத்தில் அவர்கள் எந்த அளவுக்கு மூழ்கியிருந்தார்கள் என்றால் மிகவும் பரந்துபட்ட மற்றும் அடிப்படையான கூட்டாளியான விவசாயிகளையே அவர்கள் மறந்துவிட்டனர். இதன் விளைவாக புரட்சிப் போராட்டங்களில் அவர்கள் தமது பலவீனத்தையும் கையாலாகாத்தனத்தையும் காட்டிக் கொண்டு விட்டனர்'' [நவீன சீனப் புரட்சியின் வரலாறு, ஹோ-கான்-சி, பக்-53]

சென்-தூ-சியூ வலது சந்தர்ப்பவாதக் கும்பலின் பிரதான தாக்குதல் திசைவழிக்கான யுத்ததந்திர திட்டத்திற்கு மாறாக மாவோவால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட யுத்ததந்திர திட்டம் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான தொழிலாளர்கள் விவசாயிகளது கூட்டை அச்சாகக் கொண்ட தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் நகர்ப்புற குட்டி முதலாளிகளது கூட்டணி என்ற பாதையினூடாக—பிரதான தாக்குதல் திசைவழியினூடாக—நிலப்பிரபுத்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்துற்கும் எதிரான பிரதான தாக்குதல் தொடுப்பது; தேசிய முதலாளிகளின் ஊசலாட்டம் மற்றும் சமரசத்திற்கு எதிராகப் போராடி முடமாக்குவதும் 'இடது'சாரிப் பிரிவை வென்றெடுப்பதும் வலதுசாரிப் பிரிவை தனிமைப்படுத்தும் ஆகும். இது மிகச்சரியான அற்புதமான திட்டமாகவும் திசைவழியாகவும் அமைந்தது. ஏனெனில் புரட்சியின் அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்லத்தக்க வகையில் பாட்டாளி வர்க்கத் தலைமையில் புரட்சியின் மிகவும் நம்பகமான சக்திகளையெல்லாம் திரட்டி எதிரியைத் தாக்குவதாகவும் இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக புரட்சியின் முற்றும் முழுதான வெற்றிக்காக உறுதியாகப் போராடுவது; ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்து கொள்ளும் தேசிய முதலாளிகளது சமரசத்திற்கும் ஊசலாட்டத்திற்கும் எதிராகப் போராடி தனிமைப்படுத்தி அவற்றை முடமாக்குவது; பரந்துபட்ட மக்களை குறிப்பாக தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் நகர்ப்புற குட்டி முதலாளிகளை வென்றெடுப்பதின் மூலம் பிரதான தாக்குதலுக்கு நிச்சயம் அதிகபட்ச பலன்கிட்டும் வகையிலான பிரதான தாக்குதல் திசை வழியினூடே புரட்சியை முன்னெடுத்துச் செல்வது ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

''மார்க்சிய-லெனினிய நிலைப்பாடு, கண்ணோட்டம், அணுகுமுறை மற்றும் காலனி நாடுகளில் தேசியப்புரட்சி பற்றிய லெனினியக் கோட்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தோழர் மாசேதுங் புதிய ஜனநாயகப் புரட்சி பற்றி இது பட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான தொழிலாளர் விவசாயிகளின் கூட்டின் அடிப்படையிலான பரந்துபட்ட மக்களின் ஒரு புரட்சி என்ற'' அடிப்படைக் கருத்துக்களை முன் வைத்தார். [நவீன சீனப் புரட்சியின் வரலாறு, ஹோ-கான்-சி, பக்கம்-53].

''பாட்டாளி வர்க்கத்தின் பரந்து விரிந்த விசாலமான மிகவும் நம்பகமான கூட்டாளிகள் விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகள்'' [ஷை நூல், பக்-54]. எனவே, ''தோழர் மாவோ புரட்சியினுடைய தலையாய கூட்டாளி பற்றிய அதிமுக்கியமான பிரச்சினையை வேறு வார்த்தைகளில் சொல்வதனால் தொழிலாளர் விவசாயிகளது கூட்டு பற்றிய பிரச்சினையை தெட்டத் தெளிவாக்கினார்.'' [ஷை நூல், பக் 54 ]

ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான தீர்க்கமான தாக்குதல் மிகவும் நிச்சயமாக அதிக பலனளிக்கக்

கூடியதான இந்த யுத்த தந்திர திட்டத்தை அமுலாக்குவதென்பது சீனப் புரட்சியின் இரண்டு முக்கிய விசேஷமான குணாம்சங்களில் ஒன்றான ஊசலாடும் சமரச சக்தியுடனான போராட்டத்தில் தங்கியிருந்தது.

"தேசிய முதலாளி வர்க்கம் புரட்சியின்பால் உறுதியற்ற ஒரு போக்கைக் கடைப்பிடித்தது; ஏனென்றால் புரட்சிகரமானது மற்றும் சமரசமானது என்ற இரு தன்மைகளையும் கொண்டதாக அது இருந்தது. இந்த இரட்டைக் குணாம்சம் அதன் சொந்த பொருளாதார அந்தஸ்தால் நிர்ணயிக்கப்பட்டது.

"சீன தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஏகாதிபத்தியத்தாலும் நிலப்பிரபுத்துவத்தாலும் தடுக்கப் பட்டிருந்தது. தோழர் மாவோவின் சொற்களில் கூறுவதானால் 'அன்னிய மூலதனத்தின் பலமான அடிகளாலும் யுத்த பிரபுக்களின் ஒடுக்குமுறையாலும் துன்பப்படுகையில் அது ஒரு புரட்சியின் அவசியத்தை உணர்கிறது; ஏகாதிபத்தியத்திற்கும் யுத்தபிரபுக்களுக்கும் எதிரான புரட்சி இயக்கத்தை ஆதரிக்கிறது' எனவே இந்த வர்க்கம் புரட்சியில் சேர்வதற்கு ஒரு சாத்தியம் இருந்தது; இதனால் கட்சியும் இதனுடன் ஒன்று சேர வேண்டும். ஆனால் மறுபுறம், இதன் வளர்ச்சியில் பல வழிகளில் ஏகாதிபத்தியத்துடனும் நிலப்பிரபுத்துவத்துடனும் தொடர்புடையதாக இருந்தது. பெரு முதலாளிகளின் அந்தஸ்துக்கு உயர அது எப்போதும் பலமான ஆவல் கொண்டதாயிருந்தது. இதனால் அது புரட்சியில் தீர்மானகரமான பிடிப்பு உடையதாக இல்லாமலிருந்தது. குறிப்பாக, உள் நாட்டில் பாட்டாளி வர்க்கம் புரட்சியில் போர்க்குணத்துடன் பங்கேற்கும் போதும், பெரு முதலாளிகளின் அந்தஸ்துக்கு தான் உயருவது என்ற தனது விருப்பம் அச்சுறுத்தப்படுவதை அது உணரும் போது அது புரட்சி பற்றிய நம்பிக்கையின்மை கொள்கிறது." ஒரு முற்று முழுதான புரட்சி பற்றி அது எப்போதும் அஞ்சியது. இந்தக் கோணத்திலிருந்து மதிப்பிடுகையில் இந்த வர்க்கம் சமரசம் மற்றும் ஊசலாட்டம் என்ற நிலையிலிருந்து அப்பட்டமாக புரட்சியைக் கைவிடுவது மற்றும் எதிர்ப் புரட்சியுடன் சேருவது என்றும் போகலாம். எனவே, கட்சி அதிக பட்சம் விழிப்பாயிருந்து இந்த வர்க்கத்தின் சமரச குணாம்சத்திற்கு எதிராக இடையறாத போராட்டத்தை கூடுதலாக அழுத்தம் கொடுத்து நடத்த வேண்டும்" [நவீன சீனப் புரட்சியின் வரலாறு, பக்-54]

சமரசம், ஊசலாட்டம் முதல் புரட்சிக்கு துரோகமிழைத்து எதிர்ப்புரட்சிக்கு ஓடுவது வரையிலான குணாம்சமுடைய தேசிய முதலாளி வர்க்கத்துக்கு நவீனகாலனிய, அரைக்காலனிய, காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளில் குறிப்பிட்ட சமயங்களில் குறிப்பிட்ட அளவு புரட்சியை ஆதரிக்கும் குணாம்சமும் உள்ளதால் அதனுடன் ஒற்றுமையும் போராட்டமும் —

ஐக்கிய முன்னணி அமைப்பது அல்லது அதைத் தகர்க்க நிர்ப் பந்திக்கப் படுவது — என்ற விசேஷ சரித்திர அம்சம் எழு கிறது. இச் சிக்கலான உறவுடன்தான் பிரதான தாக் குதல் திசைவழி அமைகிறது. சீனப் புரட்சியின் இரு விசேஷ அம்சங்களில் ஒன்றான இதுபற்றி

"சீன முதலாளித்துவ வர்க்கத்துடனுள்ள இவ்வகை யான சிக்கலான தொடர்பு மூலந்தான் சீனப் புரட்சியும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும் தம் வளர்ச்சியில் முன்னேற்ற மடைந்திருக்கின்றன. இது ஒரு விசேச சரித்திர அம்சம்; காலனிய, அரைக்காலனிய நாடுகளிலுள்ள புரட்சிக்குச் சிறப்பானதும் எந்த முதலாளித்துவ நாட்டுப் புரட்சிச் சரித்திரத்தாலும் காணமுடியாததும் ஆகியதோர் விசேஷ சரித்திர அம்சம்" என்று மாவோ [கம்யூனிஸ்டை அறிமுகம் செய்வது, தேர்ந்த படைப்புகள், மாவோ, பக்-486-487] கூறியது நமது நாட்டுக்கும் முற்றிலும் பொருந்தும்.

ஆனால் சீனப் புரட்சியின் பிரதான தாக்குதல் திசை வழியை தீர்மானித்த வேறொரு அடிப்படையான விசேஷ அம்சமும் இருந்தது. புரட்சியின் பிரதான வடிவமாக ஆயுதப் போராட்டம் ஆரம்ப முதல் இருக்கும்படியான நிலைமை தான் அது.

"சீனாவில் ஆயுதந் தாங்கிய புரட்சி ஆயுதந் தாங்கிய எதிர்ப் புரட்சியுடன் போரிடுகின்றது. அது சீனப் புரட்சியின் விசேஷ அம்சங்களில் ஒன்றாகவும் அதன் சாதகமான அம் சங்களில் ஒன்றாகவும் இருக்கின்றது" என்றார் ஸ்டாலின். புரட்சிக்கும் எதிர்ப் புரட்சிக்கும் இடையில் மட்டுமல்ல எதிர்ப்புரட்சி வர்க்கங்களுக்குள்ளேயே வெவ்வேறு பிரிவு களுக்கிடையிலும் கூட பிளவுகளும் மோதல்களும் யுத்தங் களாகவே பெரும்பாலும் இருந்தன. தேசிய முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப் படுத் திய அரசியல் சக்திகளும் கூட ஆயுதந்தாங்கிய படைகளைக் கொண்டிருந்ததோடு தங்கள் நலன்களுக்காக யுத்தத்தில் ஈடு பட்டிருந்தன. இராணுவத்தைப் பெற்றிராத கட்சிகள் ஒன்று பலமற்று போயின அல்லது இராணுவத்தைப் பெற்றிருந்தவை களைச் சார்ந்து நின்றன. மற்றொரு முக்கியமான சீன நிலைமை 1917 ருஷியப் புரட்சிக்கு 1905 ருஷியப் புரட்சி ஒரு ஒத்திகையாக அமைந்தது போன்றே 1924-27 முதல் மாபெரும் புரட்சியினூடே சீனப் புரட்சி வந்திருந்தது.

"ஆகவே, நாம் சீனாவின் புரட்சிகர யுத்தத்தின் முதலாவது குணாம்சம் அது அரசியல் பொருளாதார ரீதியில் ஏற்றத் தாழ்வாக அபிவிருத்தி அடைந்துள்ளதும் ஒரு புரட்சியினூ டாக சென்றுள்ளதுமான ஒரு பிரமாண்டமான அரைக் காலனித்துவ நாட்டில் நடத்தப்படுகிறதாகும் எனக் கூறு கிறோம். இந்த குணாதிசயம் எமது அரசியல் யுத்ததந்தி ரத்தையும் போர்த்தந்திரங்களையும் போலவே எமது

இராணுவ யுத்ததந்திரத்தையும் போர்த்தந்திரங்களையும் அடிப்படையாக நிர்ணயிக்கின்றது'' [மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ படைப்புகள், பக்-179]

இவ்விரு நிலைமைகளின் காரணமாக சீனாவில் யுத்தம் பிரதான போராட்ட வடிவமாகவும் இராணுவம் பிரதான ஸ்தாபன வடிவமாகவும் இருந்தன. புரட்சிகர சக்திகள் மற்றும் எதிர் புரட்சி ஆளும் வர்க்கத்தின் அரசியல் சக்திகள் மட்டுமல்ல பிற அரசியல் சக்திகளுக்கும் இது பொருந்தும். சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் கிராமப்புறங்களில் தனிப்பட்ட ஒரு சில நிலப்பிரபுக்களின தாக்குதல்களையும் புரட்சியாளர்கள் மீதான போலீஸ் தாக்குதல்களையும், வர்க்க எதிரிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளையும் காட்டி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சிக்கு எதிராக ஆயுதந்தாங்கிய புரட்சி போரிடுவதாகவும் இன்றே யுத்தம் பிரதான போராட்ட வடிவம், இராணுவம் பிரதான ஸ்தாபன வடிவம் என்றும் கூறுகின்றனர்; தெலுங்கானா, நக்சல்பாரி பேரெழுச்சிகளை கிட்டத்தட்ட புரட்சியினூடே வந்திருப்பது போலவும் சித்தரிக்கின்றனர். புரட்சிகர யுத்தமின்றி, பலாத்காரமின்றி ஆளும் வர்க்கத்தை முறியடிக்க முடியாது என்பதும், யுத்ததந்திர ரீதியில் யுத்தமே பிரதான போராட்ட வடிவம் இராணுவமே பிரதான ஸ்தாபன வடிவம் என்பதும் மார்க்சிய—லெனினியவாதிகள் அறிந்த உண்மை. ஆனால் இன்றைய புறவயமான நிலைமையே அதுவென்று சித்தரிப்பதும் செயல்படுவதும் யதார்த்தத்திற்குப் புறம்பானது.

''வேறு நாடுகளில் ஒவ்வொரு முதலாளித்துவ கட்சியும் தனது நேரடி ஆணையின் கீழ் ஆயுதப் படையொன்றை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் சீனாவில் விஷயங்கள் வேறு; இங்கு நிலப்பிரபுத்துவப் பிரிவு காரணமாக நிலப்பிரபு அல்லது முதலாளித்துவ குழுக்களிலோ அல்லது கட்சிகளிலோ எவை துப்பாக்கிகளை உடையனவாயிருக்கின்றனவோ அவை அதிகாரமுடையனவாயிருக்கின்றன. அதிகப்படியான துப்பாக்கி வைத்திருப்பவை அதிகப்படியான அதிகாரமுடையனவாயிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலைகளிலுள்ள ஒரு பாட்டாளி வர்க்க கட்சி இந்த விஷயத்தில் சாராம்சத்தை துருவிப் பார்க்க வேண்டும்.'' [மாவோ], தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ படைப்புகள், பக்கம்-568

இதிலிருந்துதான், 'துப்பாக்கி குழாயிலிருந்து அரசியலதிகாரம் பிறக்கிறது' என்றார் மாவோ. அதன் பொதுத்தன்மை உலகின் வேறுபல நாடுகளுக்கும் போலவே இந்தியாவுக்கும் பொருந்தும். ஆனால் இடது சந்தர்ப்பவாதிகள் சித்தரிப்பது போன்ற நிலைமை இன்றில்லை. 'வேறு நாடுகளில் ஒவ்வொரு முதலாளித்துவ கட்சியும் தனது நேரடி ஆணையின்கீழ் ஆயுதப் படையொன்றை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை' என்றாரே மாவோ அதுதான் இன்றைய காலகட்ட இந்தியாவின் புறவயமான நிலைமை. எனவேதான், சீனத்தின் விசேஷ நிலைமைகள் காரணமாக அவர்களது அரசியல் கடமையும்

எந்தக் கடமைக்கு அழுத்தம் கொடுப்பது என்பதும், பரந்துபட்ட மக்களை அணிதிரட்ட கையாண்ட முறைகளும் அப்படியே இந்தியப்புரட்சி எதிர் கொண்டிருக்கவில்லை. எனவே, செஞ் சேனையைக் கொண்டே ஊழியர்களையும் பாடசாலைகளையும் கலாச்சாரத்தையும் மக்கள் திரள் இயக்கங்களையும் உருவாக் கியதுமட்டுமல்ல ஆற்றல் மிகு கட்சி ஸ்தாபனங்களையும் உருவாக்கினர். சீனத்தின் மேற்கண்ட விசேஷ நிலைமைகளின் காரணமாகவே புரட்சியின் எதிரிக்கு எதிரான பிரதான தாக்குதல் திசைவழி பற்றிய பிரச்சினை, அரசியல் யுத்ததந்திர போர்த்தந்திரப் பிரச்சினைகள் மற்றும் அரசியல் போராட் டங்கள் அனைத்தையும்விட இராணுவ யுத்ததந்திரம், போர்த் தந்திரப்பிரச்சினைகள் மற்றும் ஆயுதப்போராட்டங்கள் பிரதான மானவைகளாக இருந்தன.

1) ஆயுதந்தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சி யுடன் போரிடுவது 2) 1924-27 முதல் பெரும் புரட்சியினூடே வந்தது. 3) சீர்திருந்தங்களுக்கான சமூக அடிப்படை இல் லாமலிருந்தது ஆகிய மூன்று காரணங்களினால் பரந்துபட்ட மக்களை-புரட்சியின் உந்து சக்திகளை-தம் பின்னே திரட்டிக் கொண்டு ஆளும்வர்க்கங்களுடன் சமரசம் செய்யும் சக்திகள் பலம் வாய்ந்தனவாகவும் சீனத்தில் இல்லை. பரந்துபட்ட மக்களும் அம் மாதிரியான சக்திகளை இனம் கண்டு வெறுத்தொதுக்குவதற்கும் புரட்சிகர சக்திகளை-யுத்தத்தின் காரணமாக ஒன்று திரட்டுவதற் கும் வென்றெடுப்பதற்கும் எளிதாக இருந்தது. ஆளும் வர்க்கங் களுடன் சமரசம் செய்து கொண்டுவிடும் சக்திகளோடு குறிப்பாக தேசிய முதலாளிகள் அவ்வாறு செய்யும் போது அவர்களுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் தொடுக்க வேண்டியிருந்தது; அல்லது அச்சக்திகள் ராணுவ ரீதியில் யாருடன் சேர்ந்து யாரை எதிர்க்கின்றனர் என்பதை அப்பட்டமாக மக்கள் அறிந்து கொள் வதற்கான புறநிலைமைகள் இருந்தன. எனவே தான்,

> ''புரட்சிகர யுத்தம் சீனப்புரட்சியின் விசேச அம்சங்களில் ஒன் றாகவும் அதன் மேம்பாடுகளில் ஒன்றாகவும் இருக்கின்றது' என்ற ஆய்வுரை சீன நிலைமைகளுக்கு நன்கு பொருந்துகிறது. சீனப் பாட்டாளி வர்க்கக் கட்சியின் பிரதான கடமை, கிட்டத்தட்ட அதன் ஆரம்பமுதலே அதை எதிர்நோக்கும் கடமை, இயலுமான அளவு அதிகமான நேச சக்திகளோடு ஒன்றுபட்டு, ஆயுதப் போராட்டங்களை ஸ்தாபனப்படுத்தி சூழ்நிலைகளுக்கேற்ப உள்நாட்டு வெளிநாட்டு ஆயுதந் தாங்கிய எதிர்ப்புரட்சியை எதிர்த்து, தேசிய சமூகவிடுதலைக் காகப் போராடுவதாக இருந்து வருகிறது'' [மாவோ, தேர்ந் தெடுக்கப்பட்ட இராணுவ படைப்புகள், பக் 563]

சீனத்தின் அன்றைய புறவயமான நிலைமைகளில் ஆயுதப் போராட்டம் மற்றும் இராணுவத்தின் அவசியத்தை புரிந்து கொண்ட பின் அதையே பிரதான போராட்ட மற்றும் ஸ்தாபன வடிவங்களாகவும் பிறவற்றை இரண்டாம் பட்சமாகவும் முன்னதற்கு துணையாகவும் நேரடியாக அல்லது மறைமுகமாக

இணைத்தனர். அதாவது, ஆயுதப் போராட்டத்துடன் தொழிலாளர் போராட்டம், விவசாயிகள் போராட்டம் [இதுதான் பிரதானமானது] இளைஞர், பெண்கள், மக்களின் ஏனைய பிரிவுகள் அனைத்தினதும் போராட்டங்கள், அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம், தேசதுரோக எதிர்ப்பு போராட்டம், பொருளாதார சித்தாந்த துறைகளிலுள்ள போராட்டங்கள், இதர போராட்ட வடிவங்கள் ஆகியவற்றுடன் தேசிய ரீதியில் நேரடியாக அல்லது மறைமுகமாக இணைத்தனர். இதற்கான புறவயமான நிலைமைகள் முதலில் இருந்தன. அதே போன்று ஊசலாடக்கூடிய சமரச சக்தியாகிய தேசிய முதலாளி வர்க்கத்துடனான ஐக்கிய முன்னணியில் ஐக்கியமும் போராட்டமும் என்பதும் கூட நேரடியாக ஆயுதப் போராட்டத்துடன் இணைந்திருந்தது. ஆரம்பம் முதல் தேசிய முதலாளி வர்க்கமும் இராணுவத்தைப் பெற்றிருந்தது; இதனாலும் புறவயமான நிலைமை காரணமாகவும் "ஐக்கிய முன்னணி ஆயுதப்போராட்டத்தை நடத்துவதற்கான ஐக்கிய முன்னணியாகும்" [கம்யூனிஸ்டை அறிமுகம் செய்வது, தேர்ந்த படைப்புகள் மாவோ, பக்-494] ஐக்கியமில்லாதபோது, பிளவுபட வேண்டிய போது ஆயுதப் போராட்டமாக மாறியது.

> "ஐக்கியமென்பது இங்கு முதலாளித்துவ வர்க்கத்துடனான ஐக்கிய முன்னணியைக் குறிக்கிறது. போராட்டம் என்பது இங்கு நாம் முதலாளித்துவ வர்க்கத்துடன் ஐக்கியமுடையவராயிருக்கையில் இருக்கும் "சமாதான" மான "ரத்தம் சிந்தாத," சித்தாந்த, அரசியல், ஸ்தாபன ரீதியிலான போராட்டத்தைக் குறிக்கிறது. நாம் அதனுடன் பிளவுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் பொழுது அது ஆயுதப் போராட்டமாக மாறும். குறிப்பிட்ட சமுதாயத்தில் முதலாளித்துவ வர்க்கத்துடன் ஐக்கியப்பட வேண்டுமென்பதை எமது கட்சி உணர்ந்து கொள்ளாவிட்டால் அதனால் முன்னேற முடியாது, புரட்சியும் வளர்ச்சியடைய முடியாது. முதலாளித்துவ வர்க்கத்துடன் ஐக்கியமுடையதாயிருக்கும் போது அதனுடன் திடமான, கடுமையான, "சமாதான" மான போராட்டம் நடத்தவேண்டும் என்பதை எமது கட்சி உணராவிட்டால் எமது கட்சி சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் சிதைவுறும், புரட்சியும் தோல்வியடையும். முதலாளித்துவ வர்க்கத்துடன் பிளவுபட நிர்ப்பந்திக்கப்படும் பொழுது எமது கட்சி திடமான, கடுமையான ஆயுதப் போராட்டத்தை நிகழ்த்தாவிட்டாலும் அது சிதைவுறும், புரட்சியும் தோல்வியடையும்" [மாவோ ஷை நூல் பக்- 490]

இவ்வாறு (1) புரட்சியில் ஊசலாடக்கூடிய சமரச சக்தியாகிய தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணியொன்றை நிறுவுவது அல்லது அதைத் தகர்க்க நிர்ப்பந்திக்கப்படுவது (2) ஆயுதப் போராட்டம் புரட்சியின் பிரதான வடிவமாக ஆரம்பத்திலிருந்தே இருப்பது ஆகிய இரு விசேஷ அடிப்படை அம்சங்களே சீனப் புரட்சியின் பிரதான தாக்குதல் திசை

வழியைத் தீர்மானித்தன. இவ்விரு விசேஷ அடிப்படை அம்சங்களின் காரணமாகவே முதலாளித்துவ நாடுகளைப் போலன்றி பாட்டாளி வர்க்கக் கட்சி அமைப்பும் போல்ஷவியமயமாக்கமும் விசேஷமான சூழ்நிலைமைகளிலான வளர்ச்சிப் போக்கில் முன்னேறுகின்றன என்றார் மாவோ. ஆகவே தான் ஏற்கனவே கூறிய படி கட்சியின் அமைப்பும் போல்ஷவியமயமாக்கமும் அதன் அரசியல் திசைவழியுடன் ஐக்கிய முன்னணி, ஆயுதப்போராட்டம் ஆகிய பிரச்சினைகளை சரியாக அல்லது தவறாக கையாள்வது துடன் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறது.வேறுவிதமாக கூறின், எவ்வளவுக்கு பலம் வாய்ந்ததாக, போல்ஷவியமயமாகின்றதோ அவ்வளவிற்கு அரசியல் திசைவழி சரியாகத் தீர்மானிக்கப்படுகிறது; ஐக்கிய முன்னணி, ஆயுதப்போராட்டம் ஆகிய பிரச்சினைகள் சரியாக கையாளப்பட முடியும். எனவேதான், ஐக்கிய முன்னணி—அரசியல் திசைவழி, ஆயுதப்போராட்டம் கட்சி அமைப்பு ஆகியன சீனப்புரட்சியில் எதிரியைத் தோற்கடிப்பதற்கான மூன்று முக்கிய மந்திர ஆயுதங்கள் என்றார். கட்சி முதலிரண்டு ஆயுதங்களை ஏந்திச் சுழற்றும் வீரமிக்க போராளி என்றார். சாரம்சமாக தொகுக்குமிடத்து 'ஊசலாடக் கூடிய சமரச சக்தியாகிய தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் இரட்டைத் தன்மை கட்சியின் அரசியல் திசைவழிக்கும் கட்சி அமைப்பிற்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றது; இதைப் புரிந்து கொள்ளாமல் புரட்சியின் அரசியல் திசைவழியையும் கட்சி அமைப்பையும் புரிந்து கொள்ளமுடியாது. ஆயுதப் போராட்ட வடிவம் புரட்சியின் பிரதான போராட்ட வடிவமாக இருக்கிறது. இதனுடன் புரட்சியின் அரசியல் திசைவழி கட்சி அமைப்பு ஆகிய இரண்டும் மாக நெருக்கமாக இணைந்திருக்கின்றன.ஆயுதப்போராட்டத்தை கைவிட்டால் புரட்சியின் அரசியல் திசைவழியைப் புரிந்து கொள்ளாததோடு கட்சி அமைப்பையும் புரிந்து கொள்ளமுடியாது என்பதும் எல்லாவற்றிற்கும் மேலாக "ஆயுதப்போராட்டம் எமது அரசியல் மார்க்கத்தின் ஒரு முக்கிய பகுதியாகும்" [ஷெ. நூல், பக் - 491 ]என்பதும் ஆரம்ப முதல் சீனப் புரட்சியின் புறவயமான நிலைமையாக இருந்தது.

இந்தியப் புரட்சிக்கான பிரதான தாக்குதல் திசைவழியும் அதற்குப் பொருத்தமானதாக பிரதான தாக்குதல் அதிகபட்ச பலனளிக்கக் கூடிய வகையிலான யுத்ததந்திர திட்டமும் வகுப்பதற்கு முன் இந்தியப் புரட்சியில் ஊசலாடக் கூடிய, சமரச சக்தியாகிய முதலாளித்துவ வர்க்கம், ஆயுதப்போராட்டம், கட்சி அமைப்பு இவை பற்றிய கடந்தகால அனுபவங்களையும் புறவய அகவயமான நிலைமைகளையும் தொகுத்தறிவோம்.

இந்திய தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஏகாதிபத்தியத்தாலும் நிலப்பிரபுத்துவத்தாலும் தடுத்து நிறுத்தப்படுகிறது; பாதிக்கப்படுகிறது. அன்னிய ஏகாதிபத்திய மூலதனம்ஏறி மிதிப்பதாலும் தாக்குவதாலும் நிலப்பிரபுத்துவத...ளகளாலும் தேசிய முதலாளித்துவ வளர்ச்சி பாதிப்புக்குள்ளாவதால் ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவதிற்கும் எதிரானதொரு புரட்சி தேசிய முதலாளிகளுக்கு அவசியமாகிறது; எனவே புரட்சிகர

சக்திகளை அவர்கள் ஆதரிக்கின்றனர். ஆனால் ஆயிரத்தெட்டு வழிகளில் நிலப்பிரபுத்துவத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் பிணைக்கப்பட்டுள்ளதால் அவர்கள் எப்பொழுதும் தரகுப்பெரு முதலாளிகளாக வளர்வதற்கும் முயற்சிக்கிறார்கள். அவர்கள் உறுதிப்பாடின்மையும் தீர்க்கமான புரட்சிகரமானதாக இல்லாமலும் குறிப்பாக பாட்டாளி வர்க்க இயக்கம் புரட்சிகரமானதாக வளரும்போது ஊசலாடும் போக்கையும் கொண்டிருக்கிறார்கள். எல்லா காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய நாடுகளில் உள்ள தேசிய முதலாளித்துவ வர்க்கத்தைப் போன்றே அது இரட்டைத் தன்மை உடையதாக இருக்கிறது. ஆனால் வெகுகாலமாக காலனிய ஒடுக்குமுறையின் கீழும் அன்னிய ஏகாதிபத்திய மூலதனத்தின் ஏறிமிதிப்பாலும் குறிப்பாக தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் திட்டமிட்ட வளர்ச்சியினாலும் இந்திய தேசிய முதலாளித்துவ வர்க்கம் வளர்ச்சி குன்றிப்போய் சில விசேஷமான முறையில் இந்த இரட்டைத் தன்மைகளைக் கொண்டுள்ளது அதாவது. இவ்வர்க்கம் ஓர் ஒன்று திரண்ட சக்தியாக சமுதாய ரீதியிலும் சரி, அரசியல் ரீதியிலும் சரி தன்னை ஸ்தாபனப்படுத்திக் கொண்டு காலனிய ஏகாதிபத்தியத்திற்கெதிராகவோ நிலப்பிரபுத்துவத்திற்கெதிராகவோ தேசிய விடுதலை இயக்கத்தையோ ஜனநாயகப் புரட்சியையோ வழிநடத்தவோ பங்கேற்கவோ என்றுமே விழையவில்லை. மாறாக சீனப்புரட்சியின் ஆரம்பத்திலிருந்தே சன்-யாட்-சென் தலைமையிலும் பின்னரும் —அதன் இரட்டைத் தன்மை இருப்பினும்-முக்கியமானதொரு பாத்திர மாற்றியிருக்கிறது; குறிப்பாக, 1924-27 முதல் மாபெரும் புரட்சியை வழிநடத்தியது.

ஆனால் இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கங்களையும் அமைப்புகளையும் திசை திருப்பி விட்டு, ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாக மாறிய தரகு முதலாளிகள் நிலப்பிரபுக்களின் தலைமையில் அவற்றைக் காலனிய அரசின் ஓர் அங்கமாக நிறுவனமயமாக்கும் ஆங்கிலேய காலனியவாதிகளது முயற்சியை எதிர்த்து நில்லாது — புரட்சிகரப் பாதையில் செல்லாது — தரகு முதலாளிகள் நிலப்பிரபுக்களின் பின்னே தேசிய முதலாளித்துவ வர்க்கம் அடிபற்றிச் சென்றது. ஆரம்பம் முதல் புரட்சியை கை கழுவி விட்டு எதிர்ப் புரட்சியுடன் மிதமிஞ்சிய ஊசலாட்டத்துடன சமரசம் செய்து கொண்டுள்ளது. இது அதன் இரட்டைக் குணாம்சத்தை மறுப்பதாகக் கொள்ள முடியாது. அதன் பொருளாதார, சமுதாய அந்தஸ்து காரணமாகவே நிச்சயம் குறிப்பிட்ட அளவு குறிப்பிட்ட காலம் புரட்சியில் சாதகமான பாத்திரமாற்றக் கூடியதாக, புரட்சிகர இயக்கத்தை ஆதரிப்பதாக இருக்கும். ஆனால் வெகுகாலமாகவே புரட்சியை கை கழுவி விட்டு எதிர்ப்புரட்சியுடன் மிதமிஞ்சிய ஊசலாட்டத்துடன் சமரசம் செய்து கொண்டுள்ளது; இதன் காரணமாகவே புரட்சியின் எதிரிகளுக்கு சமூக அடிப்படையாக இருந்து இச்சமரச சக்தி பரந்துபட்ட மக்களை, குறிப்பாக, பாட்டாளி வர்க்கத்தின் நம்பகமான கூட்டாளிகளை புரட்சியிலிருந்து திசை திருப்பி விடுவதாகவும் சமரசம் செய்வதாகவும் இருப்பதால் அதைத்

தனிமைப் படுத்துவதற்கானதும் பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பதற்கானதுமாகிய அரசியல் போராட்டம் அதிமுக்கியத்துவமுடையதாக இருக்கின்றது. அதன் ஊசலாட்டத்தை முடமாக்கும், சமரசப்போக்கை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தும் வகையிலான பிரதான தாக்குதல் திசைவழியினூடாகத்தான் எதிரிகளுக்கு எதிரான தீர்மானகரமான தாக்குதல் தொடுக்க முடியும்; பிரதான தாக்குதல் அதிகபட்ச பலனளிக்கக் கூடியதாக இருக்கும்; புரட்சி வெற்றி பெற முடியும்.

கடந்த அறுபது ஆண்டு கால பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பிரதானதாக்குதல் திசைவழி அரசியல் மார்க்கம்-முற்றிலும் தவறானதாகவே இருந்திருக்கிறது. அது புரட்சிகர இயக்கத்தின் தாக்குதல் முனையை திசைதிருப்பி விட்டிருக்கிறது; முடங்கடித்திருக்கிறது. காலனிய கால கட்டத்தில் கட்சியின் தலைமையிலிருந்த வலது சந்தர்ப்பவாதிகளது யுத்ததந்திர திட்டம் தேசிய முதலாளிகளது தலைமையிலான தொழிலாளர்கள் முதலாளிகளது கூட்டணி என்ற பாதையினூடாக—பிரதான தாக்குதல் திசை வழியினூடாக—எதிரிக்கு எதிராக பிரதான தாக்குதல் தொடுப்பதாக இருந்தது; புரட்சிக்கு விவசாயிகளைத் திரட்ட வேண்டும் என்று கோட்பாடு ரீதியில் ஒப்புக் கொண்டாலும் இரண்டாம் பட்சமாகவும் நடைமுறையில் முற்றும் முழுதாக புறக்கணிப்பதுமாகவே இருந்தது. கோட்பாடு ரீதியில் புரட்சியின் தலைமையை தேசிய முதலாளித்துவ வர்க்கத்திடம் சரணடைவதாகவும் வால் பிடிப்பதாகவும் பாட்டாளி வர்க்கம் வைக்கப்பட்டிருந்தது; நடைமுறையில் அதிலும் கேவலமான முறையில் புரட்சியின் எதிரிகளது பிரதான ஊன்று கோல்களான தரகு முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் காங்கிரஸ் தலைமையிடம் சரணடையச் செய்வதாகவும்வால் பிடிப்பதாகவும் இருந்தது. 1947 அதிகார மாற்றத்திற்குப் பின் டாங்கே-அஜாய் கோஷ் கும்பல் இதையுத்ததந்திர திட்டத்தின் அடிப்படையிலான தேசிய ஜனநாயகப் புரட்சி என்றும் முதலாளித்துவமற்ற பாதையினூடே சோசலிசத்தை நோக்கி சமாதான பூர்வமான மாற்றம் என்றும் கூறி புரட்சிக்கு துரோகமிழைத்தது. ரணதிவே—நம்பூதிரி கும்பல் கோட்பாடு ரீதியில் தொழிலாளர்கள் தலைமையிலான தொழிலாளர்கள் - விவசாயிகளது கூட்டணி என்ற பாதையினூடாக—பிரதான தாக்குதல் திசைவழியினூடாக—பிரதான தாக்குதல் என்ற போதிலும் இந்திய சமுதாய அமைப்பைப் பற்றிய கணிப்பு, புரட்சியின் தன்மை ஆகியவற்றில் தவறிழைக்கின்றனர்.

கோட்பாடு ரீதியில் ஜனநாயகப் புரட்சியையும் சோசலிசப் புரட்சியையும் இணைப்பதாகவும் நடைமுறையில் அதிகார வர்க்க அரசுஏகபோகத்தை ஆதரிப்பதாகவும் உள்ள திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் புரட்சியின் எதிரியுடன் சமரசம் செய்து, குறிப்பாக சமூக ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து புரட்சியின் உந்து சக்திகளை திசைதிருப்பிவிட்டு புரட்சியை சின்னாபின்னப் படுத்துகின்றனர்.

இந்தியப் பாட்டாளி வர்க்க இயக்கம் பெரும்பாலும் தேசிய முதலாளிகளுடனான உறவில் வலது சந்தர்ப்பவாதம் தவறும் கடந்த பத்தாண்டுகளாக இடது சந்தர்ப்பவாத தவறுத் இழைப்பதாக இருக்கிறது. வலது சந்தர்ப்பவாதம் பாட்டாளி வர்க்கத்தின் வேலைத்திட்டம், கொள்கை, சித்தாந்தம், நடைமுறை இன்னும் பிறவற்றை முதலாளித்துவ நலன்களுக்கு அடிமைப்படுத்தியது. தேசிய முதலாளிகள் மட்டுமல்ல தரகு முதலாளிகளும் கூட குட்டி முதலாளித்துவ வர்க்கம் மற்றும் விவசாயிகள் மீது மட்டுமன்றி பாட்டாளி வர்க்கம் மற்றும் பொதுவுடமைக் கட்சியின் மீதும் தனது செல்வாக்கை செலுத்தி அவற்றின் சித்தாந்த, அரசியல், ஸ்தாபன சுதந்திரத்தை அழித்தது; வலது சந்தர்ப்பவாதம் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு மட்டுமின்றி தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் நிலப்பிரபுக்களின் நலன்களுக்கும் இசைவாக பாட்டாளி வர்க்க இயக்கத்தை வழி நடத்திச் சென்றது. கடந்த பத்தாண்டுகளாக இடது சந்தர்ப்பவாதம் தேசிய முதலாளிகளையும் தரகு முதலாளிகளாகக் கருதி தேசிய முதலாளி வர்க்கத்தின் பாலும் அதனுடனான உறவிலும் கதவடைப்பு வாதத்தைப் பின்பற்றியது. ஒன்று எல்லாம் ஐக்கியம், மற்றொன்று எல்லாம் போராட்டம் என்ற போக்கைக் கொண்டிருந்தன.

தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் மிதமிஞ்சிய ஊசலாட்டம் மற்றும் சமரசப்போக்கு, தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களது துரோகத்தனம், ஆங்கிலேய காலனிய அரசின் ஓர் அங்கமாக நிறுவனமயமாக்கும் சீர்திருத்த நடவடிக்கைகளில் வெற்றி — இவை காரணமாக காலனிய காலத்திலிருந்தே நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய போராட்டங்கள் எதுவுமே நடக்கவில்லை. சில குட்டி முதலாளித்துவ குழுக்கள், கட்சிகளது தனி நபர் பயங்கரவாத நடவடிக்கைகளும், சிதறலான உழவர் எழுச்சிகளும், முதல் சுதந்தரப்போர் உட்பட சில உள்ளூர் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகளும், இவை தவிர மிக முக்கியத்துவம் வாய்ந்தவையான தெலுங்கானா மற்றும் நக்சல்பாரி ஆயுதந்தாங்கிய உழவர் பேரெழுச்சிகளும் நாட்டின் சில பகுதிகளில் வரம்புக்குட்பட்ட வீச்சை மட்டுமே ஏற்படுத்தின.

ஆரம்பம் முதல் சமரச சரணடைவுப் பாதையை மேற்கொண்ட, தெலுங்கானா ஆயுதந்தாங்கிய உழவர்போராட்டத்தை காட்டிக்கொடுத்து துரோகமிழைத்த, நக்சல்பாரி ஆயுதந்தாங்கிய உழவர் பேரெழுச்சியை முன்னின்று அடக்கி ஒடுக்கிய திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் காலனிய காலகட்டத்திலும் சரி, அரைக்காலனிய காலகட்டத்திலும் சரி ஆயுதப் போராட்டத்தை நடத்தவும் இராணுவத்தைக் கட்டவும் என்றுமே முயன்றதில்லை. 1948-50 இல் சிறிது காலமே ஆதிக்கத்திலிருந்த ரணதிவேயின் ட்ராட்ஸ்கிய இடது சந்தர்ப்பவாதம் இந்தியப் புரட்சி ஏற்ற தாழ்வான வளர்ச்சியுடைய, அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ நாட்டின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப நீண்டகால மக்கள் யுத்தப்பாதை, விவசாயிகளது புரட்சி ஆகியவற்றை சாடி நிராகரித்து நாடு தழுவிய நகர்ப்

புற ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிப் பாதையை முன்வைத்து ஆயிரக்கணக்கான புரட்சியாளர்களை பலியிட்டது. இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) தலைமை வலது திரிபுவாதத்தை நிராகரித்து ஆயுதப் போராட்டப் பாதையை மேற்கொண்டாலும் மக்கள் யுத்தப்பாதையின் நீண்ட காலத் தன்மை மற்றும் அதன் வளர்ச்சிப்போக்கு, விதிகள் பற்றிக் கொச்சையாகப் புரிந்துகொண்டு நடைமுறைப்படுத்தியது. ஆயுதப் போராட்டம் தவிர மற்றெல்லாப் போராட்ட வடிவங் களையும் நிராகரித்தது. குறிப்பாக, அரசியல் யுத்ததந்திரம், போர்த்தந்திரம், அரசியல்படை மற்றும் அரசியல் போராட் டங்களை முற்றாக அலட்சியம் செய்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப பிரதான தாக்குதல் திசைவழியைத் தீர்மானித்து, யுத்ததந்திர திட்டம் வகுத்து, சமரச சக்திகளை தனிமைப்படுத்தி பரந்து பட்ட மக்களை வென்றெடுக்காது முன்னணியினரை மட்டும் தாக்குதலில் இறக்கிவிட்டது.

இவைகளின் காரணமாக ஆயுதப்போராட்ட முறை மற்றும் இராணுவம் ஆகியவற்றின் நிலைமைகள் பின்வருமாறு உள்ளன:.

1) ஆயுதப் போராட்டம் இதுவரை இந்தியப் புரட்சியில் நிகழ்ச்சிநிரலுக்கு வரவேயில்லை. அரசியல் போராட்டத்தை யும் ஆயுதப் போராட்டத்தையும் இணைத்த அனுபவம் மார்க் சிஸ்ட்—லெனினிஸ்ட் கட்சிக்கு இல்லை; ஆயுதப் போராட்டத்தை கொச்சையாகப் புரிந்துகொண்டு அமுல்படுத்தியதின் விளைவாக இந்தந்த தவறுகள் செய்யப்படக் கூடாது என்ற எதிர்மறை அனுபவம் மட்டும் இருக்கின்றது. இன்றும் அரசியல் போராட் டமே பிரதானமாக இருக்கிறது. அரசியல் யுத்ததந்திரம், அர சியல் போர்த்தந்திர விதிகளின்படி கட்சியானது செயலாற்றி அரசியல் அரங்கில் நடக்கின்ற போராட்டத்தில் வெற்றிகண்டு பரந்த செல்வாக்கு பெறுவது ஆயுதப் போராட்டம் தொடங்கு வதற்கு முன் நிபந்தனையாகும்.

2) மக்கள் யுத்தப்பாதை நீண்டகாலமாக நிராகரிக்கப்பட் டது. பின்னர் அதன் இன்றியமையாத் தன்மை அங்கீகரிக்கப்பட் டாலும் அதைத் தவறாகப் புரிந்துகொண்டு அமுல்படுத்தினோம். கட்சி மக்களிடமிருந்து தனிமைப்படுவதற்கு இதுதான் காரணம். மார்க்சிய-லெனினிய இயக்கத்தில் இன்னும் அந்தத் தவறான போக்கு நீடிக்கிறது. அதாவது, புரட்சிகர எழுச்சி இருக்கும் போது ஓரிரு தளப்பிரதேசங்கள் நிறுவி நாடு தழுவிய புரட்சிகர பேரெழுச்சியைத் துரிதப்படுத்தி அலை அலையாக முன்னேறி இறுதியில் நாடு முழுவதையும் கைப்பற்றுவது என்ற நிகழ்ச்சிப் போக்கு தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

3) நாடு தழுவிய அளவில் நடக்கும் புரட்சிகரப் போராட் டங்களை ஒருங்கிணைத்து நடத்துவதற்கும் தலைமை கொடுப்ப தற்கும் புரட்சிகர ஓரேமையமாக மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி

இல்லாமல் சிதறுண்டு கிடக்கிறது; திரிபுவாத கட்சிகள் மக்களிடையே கணிசமான செல்வாக்கு பெற்றுள்ளன.

4) மார்க்சிஸ்டு-லெனினிஸ்ட் கட்சியிடம் ஒரு செஞ்சேனையோ, ஏன் சில முறையான ஆயுதந்தாங்கிய கொரில்லாக் குழுக்களோ கூட இல்லை.

5) ஆயுதந்தாங்கிய விவசாயப் புரட்சி அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு-நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்களில் இதுவரை நாடு தழுவிய ரீதியில் மக்கள் ஈடுபடுத்தப்படவில்லை. இந்த அடிப்படையில் நாடு தழுவிய ஓர் ஐக்கிய முன்னணியில் மக்கள் இதுவரை திரட்டப்படவில்லை; மக்களிடம் கணிசமானதொரு செல்வாக்கை வகிக்கும் அளவிற்குகூட இவைகள் நடந்தேறவில்லை.

பிரதான தாக்குதல் திசைவழி, யுத்ததந்திரதிட்டம், ஆயுதப் போராட்டம் ஆகிய பிரச்சினைகள் தவறாக கையாளப் பட்டதின் காரணமாக பாட்டாளி வர்க்கம் மற்றும் பிற பரந்து பட்ட மக்கள் ஆளும் வர்க்கங்கள் மற்றும் சமரச சக்திகளின் செல்வாக்கில் இருக்கின்றனர்; பல கூறுகளாக பிளவுபட்டுப் போயுள்ளனர். குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளான திரிபுவாத, நவீனதிரிபுவாத கட்சிகள் சமூக ஏகாதிபத்தியவாதிகளாக, சமரச சக்திகளாக சீரழிந்து போயுள்ளன. பாட்டாளி வர்க்க இயக்கம் பிளவுபட்டதோடு, புதிதாகத் தோன்றிய மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியும் பல குழுக்களாக சிதறுண்டுப் போயுள்ளது. அவையும் மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போயுள்ளன.

இந்தியப் புரட்சியின் புறநிலை மற்றும் அகநிலைக் கூறுகள் மேற்கண்டவாறு உள்ளதால் சமரச சக்திகளைத் தனிமைப் படுத்தி பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பது சீனப்புரட்சியைப் போன்று எளிமையானதாகவோ, ஆயுதப் போராட்டப் பிரச்சினையாக மட்டுமோ இல்லை. சீனப் புரட்சியை மட்டுமல்ல ருஷியப் புரட்சியிலும் பார்க்க சிக்கலானதாக உள்ளது. ஏனெனில் ருஷியாவில் இயல்பாகவே வெவ்வேறு வர்க்கங்களின் பிரதிநிதிகளாக இருந்த அரசியல் கட்சிகள் தமது வர்க்க நலன்களை அப்பட்டமாக வெளிப்படுத்தின. ஜாரிச டூமாவும் [நாடாளுமன்ற] தேர்தல் முறையும் வர்க்க அடிப்படையிலேயே இருந்தது. இருப்பினும் ஒவ்வொரு வர்க்கத்தின் பிரதிநிதிகளான அரசியல் சக்திகளும்பிற வர்க்கங்களின் பாலும் நாட்டையும் சமுதாயத்தையும் ஆள்வது நிர்வகிப்பது பற்றியும் புரட்சியின் பாலும் கொண்டுள்ள போக்குகளை வைத்து ஆளும் வர்க்கத்துடன் சமரசம் கொள்ளும் புரட்சியை சீர்குலைக்கும் வர்க்கங்களையும் அவர்களின் பிரதிநிதிகளாகிய அரசியல் சக்திகளையும் அம்பலப்படுத்தி தனிமைப் படுத்துவதும் பரந்துபட்ட மக்களை-பிரதான சக்திகளை வென்றெடுப்பதுமாகிய பிரதான தாக்குதல் திசைவழி பற்றிய பிரச்சினையில் ருஷிய போல்ஷவிக் கட்சி தனது கவனத்தைக் குவித்தது; பின்வரும் காரணங்களினால் இந்தியப் புரட்சியில்

அரசியல் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரப் பிரச்சினைகள் குறிப்பாக பிரதான தாக்குதல் திசைவழி மற்றும் அரசியல் போராட்டங்கள் பற்றிய பிரச்சினைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

1) ஆயுதந்தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சி யுடன் போரிடவில்லை. புரட்சிகர சக்திகள் செஞ்சேனையை மட்டுமல்ல அரசியல் சேனையை கூடப் பெற்றிருக்காத நிலையில் அரசியல் போராட்டங்களும் அதற்கான ஸ்தாபனங்களுமே பிரதானமானவையாக இருக்கின்றன. ஆளும் வர்க்கங்களுக் கிடையேயுள்ள வெவ்வேறு பிரிவுகளுக்கிடையிலான முரண்பாடும் வெளிப்படையான மோதல்களாகி யுத்தமாக வெடிக்கவுமில்லை. அரசியல் போராட்டங்களின் மூலமே அவர்களது நலன்களை அடைவதற்கான போட்டியும் முரண்பாடும் நீடிக்கின்றன. எந்தவொரு அரசியல் கட்சியும் தனது நேரடி ஆணையின்கீழ் சேனையை வைத்திருக்கவுமில்லை.

2) முதலாளித்துவ முறையிலான அதிகாரவர்க்க இராணுவ அமைப்பும் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையும் ஆளும் வர்க்கங்கள் தமது அரசியல் அதிகாரத்திற்கான நியாய உரிமை யைப் பெறும் முறையும் பெற்றிருப்பதால் பொருளாதார மற்றும் அரசியல் துறைகள் பிரிந்திருப்பதும், இன்னும் பிறவும் காரணமாக தற்போதைய அரசும் ஆட்சிமுறையும் நீடிக்கக் கூடாது, நீடிக்க முடியாது, தூக்கியெறியப்பட வேண்டும் என்ற அவசியத்தைப் பரந்துபட்ட மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் உணர முடியவில்லை. நாடாளுமன்ற ஆட்சி முறையால் தமது நலன்கள் அரசியல், நிர்வாகத்தில் பிரதிநிதித்துவப்படுத்து வதாக பரந்துபட்ட மக்கள் குறிப்பாக பிரதான உந்துசக்திகள் எண்ணுகின்றனர். நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையின் காரணமாக பல்வேறு வர்க்கங்களின் பிரதிநிதிகளாகிய அரசியல் கட்சிகள் தம் வர்க்க நலன்களை மூடி மறைத்து ஜனரஞ்சகமான கவர்ச்சி கோஷங்களால் வாக்குறுதிகளால் ஆளும் வர்க்கங் களுக்கு சமூக அடிப்படையைத் தேடித்தருகின்றன.

3) காலனிய காலகட்டத்திலும் சரி, அரைக்காலனிய காலகட்டத்திலும் சரி புரட்சியினூடே பரந்துபட்ட மக்கள் பயணம் செய்து அனுபவம் பெற்றதேயில்லை. காலனிய கால கட்டத்திலிருந்து தேசிய விடுதலை இயக்கங்களையும் அமைப்பு களையும் காலனிய அரசமைப்பின் ஓர் அங்கமாக நிறுவனமய மாக்குவதிலிருந்து தொடங்கி பல்வேறு வகையான அரசியல், பொருளாதார, சமூக சீர்திருத்தங்கள் மூலம் பரந்துபட்ட மக்கள் திசைதிருப்பி விடப்படுவதும், சமரசப்படுத்தப் படுவதும், திரிபுவாதிகளின் பொருளாதார வாதமும் நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதையும் ஆகியவை அனைத்தின் காரணமாக ஆளும் வர்க்கங்களுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் நேரடி மோதல் வெடிக்காமலிருக்கிறது.

4) மேற்கண்டவைகளோடு தேசிய இனங்கள், சாதி மதப் பிரிவுகளின் அடிப்படையிலான பல்வேறு அரசியல் சக்தி

கள் வளர்ந்திருப்பது ஆகிய காரணங்களினால், புரட்சியின் உந்து சக்திகளை ஆளும் வர்க்கங்களின் மற்றும் ஊசலாட்ட வர்க்கங்களின் அரசியல் பிரதிநிதிகளாகிய அரசியல் சக்திகள் தம் பின்னே திரட்டிக்கொண்டு புரட்சியை சீர்குலைக்கின்றன; அவர்களை திசை திருப்பிவிட்டு ஆளும் வர்க்கங்களுடன் சமரசம் செய்கின்றன. குறிப்பாக காலனிய காலத்திலிருந்தே ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இயக்கத்தில் உறுதியாக நில்லாது ஊசலாடக் கூடியதாகவும் சமரசப்படுத்தக் கூடியதாகவும் விளங்கும் தேசிய முதலாளித்துவ வர்க்கமும், சமூக ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொள்ளும் சமூக ஏகாதிபத்தியவாதிகளான திரிபுவாதிகள் மற்றும் நவீன திரிபுவாதிகளும் — இவர்கள் குட்டி முதலாளித்துவ சமூக அடிப்படையிலிருந்து வந்திருப்பினும் சமூக ஏகாதிபத்தியவாதிகளாக இருப்பதால் புரட்சியில் சமரச சக்திகளாகின்றனர் — தேசிய இன விடுதலை இயக்கங்களை உறுதியாக நடத்தாது தேசிய இன மக்களை ஆளும் வர்க்கங்களுடன் சமரசப்படுத்தும் சிறிய தேசிய இன முதலாளிகளுடைய இந்த வர்க்கங்களை, பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகளும் பரந்துபட்ட மக்களை தம் பின்னே திரட்டி ஆளும் வர்க்கங்களுடன் சமரசம் செய்கின்றன

மேற்கண்ட நான்கு காரணங்களினால் இருவினோதமான அடிப்படை குணாம்சங்கள் இந்தியப் புரட்சியில் உள்ளன.

1) ஏகாதிபத்தியத்துடனும் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்துடனும் நிலப்பிரபுத்துவத்துடனும் சமரசம் செய்துகொண்டு புரட்சியை சின்னாபின்னப்படுத்தும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தையும், தேசிய விடுதலை இயக்கங்களிலுள்ள தேசிய இன முதலாளித்துவ வர்க்கத்தையும் சமூக ஏகாதிபத்தியவாதிகளாக மாறியுள்ள குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளையும் தனிமைப்படுத்தி முடமாக்குவது; அவர்களது தலைமையிலிருந்து பரந்துபட்ட மக்களை குறிப்பாக விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகளை வென்றெடுப்பது; இந்த நோக்கத்துடன் ஊசலாடக்கூடிய சமரச சக்தியான தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் பாட்டாளி வர்க்கம் ஒன்றில் புரட்சிகர தேசிய ஐக்கிய முன்னணியை நிறுவுவது அல்லது அதை தகர்க்க நிர்ப்பந்திக்கப்படும் பொழுது அதற்கெதிராகப் போராடுவது;

2) அரசியல் போராட்டங்கள் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்கிடையிலான முக்கியத்துவத்தை சரியாகக் கையாளுவது; அதாவது, இந்தியப் புரட்சியின் முதற் கட்டத்தில் அரசியல் போராட்டங்கள் பிரதானமாகவும் இரண்டாவது கட்டத்தில் இரண்டும் சமநிலையாகவும் மூன்றாவது கட்டத்தில் ஆயுதப் போராட்டம் பிரதானமாகவும் அமைகின்றன. மொத்தத்தில், யுத்ததந்திர ரீதியில் ஆயுதப் போராட்டமே புரட்சியின் பிரதான வடிவமாயிருக்கும்.

*பிரதான தாக்குதல் திசைவழியும் ஐக்கிய முன்னணியும் பற்றிய பிரச்சினை, அரசியல் போராட்டங்கள், ஆயுதப்போராட்*

டங்களுக்கிடையிலான முக்கியத்துவத்தை சரியாக கையாள்வது என்ற பிரச்சினை ஆகிய இந்த இரண்டும் இந்தியப் புரட்சியின் விசேஷமான அடிப்படை அம்சங்களாகும். இதை நிறைவேற்றுவதற்கான யுத்ததந்திர திட்டமாகிய பாட்டாளி வர்க்கத் தலைமையிலான தொழிலாளிகள் விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகள் அடங்கிய உறுதியான ஒரு கூட்டணியை அமைப்பது. அதாவது, விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகளுடனான பாட்டாளி வர்க்கத்தின் உறவை தனிச்சிறப்பான விசேஷமாக இங்கு குறிப்பிடவில்லை. ஏனெனில் எல்லா முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியிலும் காணக்கிடக்கிற, பொதுவுடைமைக் கட்சிகள் எதிர்நோக்கிய பொது அம்சமே இது. அதே போன்று விவசாயிகளது விவசாயப் புரட்சியும் நீண்டகால மக்கள் யுத்தப் பாதையும் தனிச்சிறப்பான, அடிப்படையான, விசேஷமான குணாம்சங்களாக குறிப்பிடவில்லை; இவைகளும் காலனிய அரைக்காலனிய அல்லது நவீன காலனிய மற்றும் அரை நிலப் பிரபுத்துவ நாடுகளுக்கான பொது அம்சங்களாகவும் நீண்டகால மக்கள் யுத்தப் பாதையே விவசாயிகளது யுத்தமாகவும் இருக்கின்றது'.

இந்தியப் புரட்சியின் இந்த இரு விசேஷ அடிப்படை அம்சங்களின் காரணமாகவேதான் இந்தியாவில் பாட்டாளி வர்க்க கட்சி அமைப்பும் அதன் வாழ்வும் வளர்ச்சியும் போல்ஷவியமயமாக்கமும் விசேஷ சூழ்நிலைமைகளில் முன்னேறுகிறது. நமது நாட்டில் பொதுவுடைமை கட்சியில வளர்ச்சி வலது சந்தர்ப்பவாதிகள் அனைவரும் கூறுவது போல ஒரு முதலாளித்துவ நாட்டைப் போன்று முதற்கட்டம் ஒரு தலைமைக் கருவையும் அணிகளையும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையாக கட்டியமைப்பது; இரண்டாவது கட்டமாக பிரதான தாக்குதல் திசைவழியினூடாக அரசியல் போராட்டங்களை பிரதான வடிவமாகக் கொண்டு பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பது; நாடு தழுவிய ரீதியில் குறிப்பிட்ட அளவு எதிரியைவிடப் பலம் வாய்ந்ததாக வளர்ந்த பின் இறுதியில் ஆயுதப் போராட்டத்தை நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியைத் தொடுப்பது என்கிற முறையில் இராது. கட்சியின் வாழ்வும் வளர்ச்சியும் அல்லது தாழ்வும் வீழ்ச்சியும், வெற்றிகள் அல்லது தோல்விகள் சுருக்கங்கள் அல்லது விரிவுகள் மற்றும் ஸ்திரபபாடும் முன்னேற்றமும் ஆகியன பிரதான தாக்குதல் திசைவழி—ஐக்கிய முன்னணி பற்றிய பிரச்சினைக்கும் கட்சிக்கும் உள்ள உறவிலும் அரசியல் போராட்டங்கள் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்கிடையேயுள்ள முக்கியத்துவத்தைச் சரியாகத் தீர்மானிப்பதற்கும் கட்சிக்கும் இடையிலான உறவிலும் தவிர்க்கப்பட முடியாதவாறு இணைக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சரியாகக் கையாளும் போது கட்சி வளர்ச்சியிலும் ஸ்திரப்பாட்டிலும் போல்ஷவியமயமாக்குவதிலும் ஒருபடி முன்னேறுகிறது; தவறாகக் கையாளும் போது இவற்றில் ஒருபடி பின்னேறுகிறது. வேறுவிதமாகக் கூறின், கட்சியின் வளர்ச்சி, ஸ்திரப்பாடு மற்றும் போல்ஷவியமயமாக்கத்தைப் பொருத்து முன்னிரு அடிப்படை விசேஷ அம்

சங்களை சரியாகக் கையாளவும் முடியும். இந்தியப் புரட்சியை வழிநடத்திச் செல்வதில் யுத்ததந்திர போர்த்தந்திர தலைமையும் தகுதியும் இதில் தங்கியிருக்கிறது. இவற்றை அமுலாக்குவது பற்றி மேலும் பருண்மையாகப் பார்ப்போம்.

புரட்சியில் ஊசலாடும் சமரச சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தி முடமாக்குவதின் மூலம் அதன் சமூக பின்னணியாக உள்ள தேசிய முதலாளி வர்க்கத்தின் 'இடது' சாரிப் பிரிவை வென்றெடுப்பதோடு, சமரச சக்திகளின் தலைமையிலான பரந்துபட்ட மக்களை குறிப்பாக, நேரடி சேமிப்பு சக்திகளாகிய விவசாயிகள் மற்றும் குட்டி முதலாளிகளை வென்றெடுத்து எதிரிக்கு எதிரான பிரதான தாக்குதல் தொடுக்க வேண்டும். ஆனால் இதையே பாட்டாளி வர்க்க கட்சி குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப, புரட்சிகர எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களுக்கிடையிலான அவற்றின் சேர்க்கையிலான மாறுதலுக்கேற்ப அரசியல் நடத்தை வழி, முழக்கங்கள், போராட்ட ஸ்தாபன வடிவங்கள் அடங்கிய அரசியல் போர்த்தந்திரங்களை வகுத்து பிரயோகிக்கிறது. இந்த அரசியல் நடத்தை வழியை நெறிப்படுத்தும் யுத்ததந்திர திட்டம் போரிடும் சமூக அரங்கில் — முன்னணியில் — புரட்சிகர சக்திகளின் பிரித்தொதுக்கும் திட்டத்தையும் அவற்றைப் பருண்மையாகப் பிரயோகிக்கும் விதிகளையும் நியதிகளையும் வகுத்தளிக்கிறது. எனவே, புரட்சியின் நேரடி, மறைமுக சேமிப்பு சக்திகளை (துணை-ரிசர்வுகள்) பிரித்தொதுக்கும் பொதுத்திட்டம் கோட்பாடு ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

புரட்சியின் சேமிப்பு [துணை-ரிசர்வ்] சக்திகள் இரண்டு வகைப்படுகின்றன.

1. நேரடி சேமிப்பு சக்திகள்:- அ] குறிப்பிட்ட நாட்டில் பாட்டாளி வர்க்கமில்லாத மற்ற இடைப்பட்ட தட்டு பிரிவு மக்கள்; காலனிய, அரைக்காலனிய அல்லது நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் விவசாயிகள் புரட்சியின் பிரதான நேரடி ரிசர்வ் சக்திகளாக இருக்கின்றனர்; மற்றும் புறநிலை ரீதியாக புரட்சியின் மூலமே தங்களது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடிகின்ற வர்க்கங்கள் சமூகப்பிரிவுகள் புரட்சியின் நேரடி ரிசர்வ் சக்திகளாக அமைகின்றனர். ஆ] உலகம் முழுவதும் உள்ள பாட்டாளி வர்க்கமும் பாட்டாளி வர்க்க இயக்கங்களும் கட்சிகளும் இ] ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகர இயக்கங்கள் ஈ] பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வெற்றிகளும் சாதனைகளும்— இதில் ஒரு பகுதியை தன் பலம் குன்றாதிருக்கும் போதே இன்னும் அதிக பலத்தைத் திரட்ட அவகாசம் பெறும் பொருட்டு வலுவுள்ள எதிரிக்கு சிறிது விட்டுக் கொடுத்து தொலைவில் நிறுத்துவதற்காக, தற்காலிகமாக பாட்டாளி வர்க்கம் இழக்கக் கூடும்.

2. மறைமுக சேமிப்பு சக்திகள்:- அ] உள்நாட்டில் தொழிலாளி வர்க்கமல்லாத பிற வர்க்கங்களுக்குள் உள்ள முரண்பாடுகளும் சச்சரவுகளும் — இவற்றைத் தொழிலாளி வர்க்கம் தன் சேமிப்பு சக்திகளின் பலத்தைப் பெருக்கிக் கொள்ளவும் எதிரியை பலவீனப்படுத்தவும் பயன் படுத்திக் கொள்ள முடியும். ஆ] பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கும் அரசிற்கும் விரோதமான சக்திகள், அரசுகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளும் சச்சரவுகளும் யுத்தங்களும் [உதாரணமாக ஏகாதிபத்திய யுத்தம்]இவைகளை மேலேறித் தாக்குதல் தொடுப்பதற்கும் அல்லது நிர்ப்பந்தத்தினால் பின்வாங்கும் போது தந்திரோபாயமாக பயன்படுத்தவும் பாட்டாளி வர்க்கம் கையாள முடியும்.

இந்தியா போன்ற அரைக்காலனிய — அரைநிலப்பிரபுத்துவ நாடுகளில் விவசாயப் புரட்சியை அச்சாகக் கொண்ட ஜனநாயகப் புரட்சியை தலைமைதாங்கி வழிநடத்திச் செல்லும் பாட்டாளி வர்க்க கட்சி நேரடி சேமிப்பு சக்திகளில் மிக முக்கியமான சக்தியாகிய விவசாயிகளை வென்றெடுத்து தனது அணிக்கு திரட்ட அதிகபட்ச கவனத்தை செலுத்த வேண்டும். ஸ்தாபன, மாகத் திரளாத விவசாயப் பெருந்திரளை குட்டி முதலாளித்துவ, ஜனரஞ்சகமான கோஷங்களை முழக்கியும் நிலப்பிரபுத்துவ கலாச்சார, ஒடுக்குமுறை வடிவங்களை பயன்படுத்தியும் ஆளும் வர்க்கங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் சேவை செய்யும் சமரச சக்திகள் தங்கள் பின்னே அணிதிரட்டி வைத்திருப்பதை எதிர்த்து கடுமையான, விடாப்பிடியான போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

எனினும் மறைமுக சேமிப்பு சக்திகளின் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிடக்கூடாது. சில சமயங்களில் புரட்சியின் முன்னேற்றத்திற்கு அவைகள் மிகுந்த முக்கியத்துவமுடையனவாக இருக்கின்றன. இரண்டு மேல்நிலை வல்லரசுகளும் யுத்ததயாரிப்பிலும் நமது நாட்டைக் கட்டுப்படுத்த போட்டாப் போட்டியிலும் ஈடுபட்டுள்ள நிலையில் அதன் அடிவருடி ஆளும் வர்க்கப் பிரிவுகளுக்கிடையே தோன்றும் முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ள மார்க்சிஸ்ட் —லெனினிஸ்ட் கட்சி எப்பொழுதும் தயாராகவும் விழிப்புடனும் இருக்க வேண்டும். தளப் பிரதேசங்கள் அமைக்கவும் தக்க வைத்துக் கொள்ளவும் விரிவு படுத்தவும் ஆளும் வர்க்கங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளும் மோதல்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை. சீனப்புரட்சியில் இந்த வகையான மறைமுக சேமிப்பு சக்திகள் எவ்வளவு முக்கியத்துவம் உடையனவாக இருந்தன என்பதைப் பற்றி தோழர் மாவோ மிகவும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

பிரதான தாக்குதல் திசை வழி எந்த பாதையினூடாக இருந்திட வேண்டுமென்ற பொதுவான யுத்ததந்திர திட்டத்தைத்தான்—சக்திகளைப் போரிடும் சமூக அரங்கில் பிரித்தொதுக்கும் பொதுவான திட்டத்தைத்தான் — கோட்பாடு ரீதியில் யுத்ததந்திரம் தருகிறது. புரட்சியின் கட்டம் முடியும்

வரை அப்படியே இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்த முடியாது. ஏனெனில் புரட்சியின் கட்டம் முடியும் வரை, அடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்படும் வரை பொதுவான யுத்ததந்திர திட்டம் மாறாதிருக்கிற அதே வேளையில் குறிப்பிட்ட தருணத்தில் பருண்மையான நிலைமைகளில் எதிர்ப்புரட்சி மற்றும் புரட்சிகர வர்க்கங்களின் பரஸ்பர உறவில், சேர்க்கையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஆனால் யுத்ததந்திர திட்டம் இரு அடிப்படை முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கானதாக வகுக்கப்படுகிறது. இன்றைய இடைக்கட்டத்தில் நிலவுகின்ற நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான பிரதான முரண்பாடு மாறி ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு பிரதானமாக ஆனாலும் யுத்ததந்திர திட்டத்தில் சில அம்சங்கள் தான் மாறுதலடைகின்றன; எதிரிகளில் ஒரு பிரிவுடன் ஐக்கிய முன்னணி அமைகிறதேயொழிய அடிப்படையில் யுத்ததந்திர திட்டம் மாறுவதில்லை. அந்த நிலையில் தேசிய முதலாளித்துவ வர்க்கம் முழுவதும் நேரடி சேமிப்பாகிறது. மறைமுக சேமிப்பு சக்திகளில் ஒன்றான ஏகாதிபத்தியம் மற்றும் அதன் உள்நாட்டு அடிவருடிகளுக்குள்ளே உள்ள முரண்பாடு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகி விடுகிறது; விவசாய புரட்சி என்பது விவசாய சீர்திருத்தமாகவும் புரட்சியின் தன்மை தேசிய விடுதலைப் புரட்சியாகவும், புரட்சியின் பிரதான இலக்கு ஏகாதிபத்தியமும் துரோகிகளாகவும் மாறி விடுகின்றன. இந்த அடிப்படையில் சக்திகளின் அணிவகுப்பையும் சமரசப் படுத்தும் சக்திகளையும் கணித்து பிரதான தாக்குதல் திசைவழியையும் யுத்ததந்திர திட்டத்தையும் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப பிரயோகிக்க வேண்டும். ஆனால் இவை அனைத்தும் யுத்ததந்திர திட்டம் முழுவதையும் மாற்றி விடுவதில்லை.

ஆகவே தான், யுத்ததந்திரத்தில் சக்திகளை பொதுவாக பிரித்தொதுக்கும் திட்டத்தை நடைமுறையில் அப்படியே பிரயோகிக்க முடியாது.

> "சக்திகளைப் பிரித்தொதுக்கும் பொதுவான திட்டத்தை வரையிட்டுக் காட்டுவது என்பதை சக்திகளை [பருண்மையாக நடைமுறையில் — மா.அ.க] யதார்த்தமாக ஒதுக்குவதுடன் போட்டுக் குழப்பக் கூடாது. இவ்வாறு ஒதுக்கீடு செய்வதை யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரம் ஆகிய இரண்டுமே இணைந்து நிறைவேற்றுகின்றன." [ஸ்டாலின், பகுதி5, பக்-64]

புரட்சிகர வர்க்கங்களின் போரிடும் சக்திகளை அணிவகுத்து நிறுத்தும் திட்டத்தை விவரிப்பது, பொது திசைவழியை விளக்குவது என்பதோடு மட்டும் யுத்ததந்திரத்தின் பணி நின்று விடுவதில்லை. மாறாக, நடைமுறையில் இருக்கின்ற போர்த்தந்திரங்களை நெறிப்படுத்துகிறது. தேவையான திருத்தங்களைச் செய்கிறது. கிடைக்கக்கூடிய சேமிப்பு சக்திகளை போர்த்தந்திரத்திற்கு உதவும் வகையில் விவேகமாக பயன்படுத்துகின்றது. குறித்த யுத்ததந்திரம் நடைமுறையில் இருக்கும் கட்டம் முழுவதும் வகுக்கப்படுகின்ற போர்த்தந்திரங்கள் அனைத்திலும்

யுத்ததந்திரம் இவ்வாறு இயங்குகிறது. இதன் நோக்கம் யுத்த தந்திரம் வகுத்துள்ள பொது திசைவழியில் முன்னேறும் வகையில் பிறழ்வு இல்லாமல் போர்த்தந்திரங்கள் செயல்பட வேண்டும் என்பதாகும்.

இதைத்தான், "பாட்டாளி வர்க்க முகாமின் பொது திசைவழியை வரையறுப்பது, போரிடும் சக்திகளை ஒதுக்குவது ஆகியவற்றுடன் யுத்ததந்திரம் வரம்பிட்டுக் கொள்ளும் என்பது இதன் பொருளல்ல; மாறாக, வரலாற்றுத் திருப்பம் முழுமையான காலத்திற்கும் கிடைக்கக் கூடிய சேமிப்பு சக்திகளை திறமையாக பயன்படுத்தியும் போர்த்தந்திரங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடனும் யுத்ததந்திரமானது போராட்டத்தை நெறிப்படுத்துகிறது; அவ்வப்போது போர்த்தந்திரங்களில் திருத்தங்களைக் கொண்டு வருகிறது" [ஸ்டாலின், தொகுதி5, பக்-64] என்று ஸ்டாலின் குறிப்பிடுகிறார்.

உதாரணமாக, ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில் விவசாயப் புரட்சி மையக்கடமையாக இருக்கிறது. எனவே, இதில் விவசாயிகள் வர்க்கத்தைத் திரட்டி போராட அமைப்பாக்குவது முக்கியமான கடமையாகிறது. ஆகவே, பாட்டாளி வர்க்கம் விவசாயிகளிடம் பிரதானமாகக் கூட்டு வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடன் கூட்டு சேர்ந்து ஓர் அச்சாக செயல்படவேண்டும். குட்டி முதலாளிகளை நம்பகமான நட்பு சக்தியாகவும் தேசிய முதலாளிகளையும் பணக்கார விவசாயிகளையும் புரட்சியின் பக்கம் வென்றெடுக்கவும் வேண்டும். இதைத்தான் சக்திகளை ஒதுக்கும் பொதுவான திட்டம் எனக் குறிப்பிடுகிறோம். யுத்ததந்திர கட்டம் முழுவதற்கும் சக்திகளின் இந்த பொது ஒதுக்கீடு பொருந்தும் எனினும் புரட்சியின் ஒரு குறிப்பிட்ட தருணத்தில் சக்திகளைப் பருண்மையாக ஒதுக்குவது யுத்ததந்திரம் போர்த்தந்திரம் இரண்டாலும் தீர்மானிக்கப் படுகிறது. ஜனநாயகப் புரட்சிக் கட்டத்திலேயே பாசிச ஆட்சி வந்தால் பாசிச எதிர்ப்பு ஐக்கிய முன்னணி என்ற அமைப்பைக் கட்டி போர்த்தந்திர ரீதியில் போரிடுவோம். அப்போது பாசிச எதிர்ப்பில் நிற்கும் ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினரோடும் கூட சேர்ந்து போராடுவோம். அதாவது, சக்திகளை பொதுவாக ஒதுக்கீடு செய்யும் திட்டம் யுத்ததநதிர ரீதியிலான ஐக்கிய முன்னணிக்கான சக்திகளின் சேர்க்கையைக் குறிக்கிறது. குறிப்பிட்ட சமயத்தில் அமைக்கப்படும் ஐக்கிய முன்னணியின் சேர்க்கை யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரம் இரண்டாலும் தீர்மானிக்கப்படுகிறது.

புரட்சியோடு எந்தெந்த வர்க்கங்கள் எப்படிப்பட்ட கண்ணோட்டங்கள், உறவுகள் கொண்டிருக்கின்றன என்பதை வரையறுத்து அதன்பேரில் பாட்டாளி வர்க்கம் எவ்வாறு தனது பின்னே சக்திகளை அணிவகுத்துக்கொண்டு சமூக முன்னணியில் நிற்க வேண்டும். அதற்குப் பொது ஒதுக்கீடு மற்றும் குறிப்பான ஒதுக்கீடு சீனப் புரட்சியின் மூன்று கட்டங்களில் எவ்வாறு இருந்

திற்குச் சேரலாம். அப்படிப்பட்ட சமயங்களில் எதிரியை பலவீனப்படுத்தவும் தனது சொந்த சேமிப்பு சக்திகளைப் பலப் படுத்தவும் இந்திய பாட்டாளி வர்க்கம் இந்தப் பெரு முதலாளி வர்க்கக் கும்பலுடன் சாத்தியமான ஐக்கிய முன்னணி ஒன்றை ஏற்படுத்தலாம். அத்துடன் புரட்சிக்குச் சாதகமாக இருக்கின்ற வரை இயலுமான அளவு அதை நிலைநிறுத்த வேண்டும்.

2) தரகு அதிகார வர்க்கத் தன்மையுடைய பெரு முதலாளி வர்க்கம் ஐக்கிய முன்னணியில் சேர்ந்து பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்து பொது எதிரிக்கு எதிராகப் போராடும் போதும் அது தொடர்ந்து பிற்போக்குத்தனமாகவேயிருக்கும். அது பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் கட்சியினதும் சித்தாந்த அரசியல், ஸ்தாபன ரீதிகளிலான எந்த வளர்ச்சியையும் பிடிவாதமாக எதிர்க்கும். அவற்றிற்கு கட்டுப்பாடுகள் விதிக்க முயலும்; வஞ்சகம், முகஸ்துதி, தாக்குதல் போன்ற சீர்குலைக்கக்கூடிய கொள்கைகளைக் கடைப்பிடித்து எதிரிகளிடம் சரணடையவும் ஐக்கிய முன்னணியை பிளவுபடுத்தவும் முயற்சிக்கும்.

3) விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான நேச அணியாவர்.

4) படித்த குட்டி முதலாளி வர்க்கமும் ஒரு நம்பகமான நேசஅணியாகும்.

5) பல்வேறு ஏகாதிபத்தியங்களின் அடக்குமுறைக்கு இந்தியா உட்படுத்தப்பட்டுள்ளதால் இந்திய தேசிய முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிரான போராட்டத்தில் குறிப்பிட்ட அளவு குறிப்பிட்ட காலங்களில் பங்கேற்கும். ஆகவே, அப்படிப்பட்ட சமயங்களில் பாட்டாளி வர்க்கம் தேசிய முதலாளி வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்து அதை இயலுமானவரை நிலை நிறுத்த வேண்டும்.

6) இந்திய தேசிய முதலாளி வர்க்கம் தன் பொருளாதார அரசியல் உறுதிப்பாடின்மை காரணமாகவும் பிற சரித்திர சூழ் நிலைமைகளினாலும் ஊசலாட்டமும் மாறும் இயல்பும் உள்ளது. ஆகவே, புரட்சிகர ஐக்கிய முன்னணியின் அமைப்பு தொடர்ந்து எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்காது; மாறக் கூடியதாயிருக்கும். தேசிய முதலாளி வர்க்கம் ஒரு தருணத்தில் அதில் பங்கு கொள்ளலாம்; இன்னொரு தருணத்தில் பங்கு பெறாமலிருக்கலாம்.

மேலும் சீனப் புரட்சியின் அனுபவங்களைத் தொகுத்து தேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் குறிப்பாக எப்படிப்பட்ட உறவுகளை வைத்துக்கொள்ள வேண்டும் என தோழர் மாவோ குறிப்பிட்ட பின்வரும் கருத்துக்கள் இந்திய நிலைமைகளுக்கும் பொருந்தும்:

"முதலாளித்துவ வர்க்கத்துடன் [சிறப்பாக பெரு முதலாளித்துவ வர்க்கத்துடன்] ஐக்கிய முன்னணி அமைப்பதில்

பாட்டாளிவர்க்க அரசியல் கட்சி இரண்டு முன்னணிகளில் கடுமையான, திடமான போராட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். ஒருபுறம் முதலாளித்துவ வர்க்கம் ஒரு குறிப்பிட்ட காலத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவிலும் புரட்சிகரப் போராட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்ற சாத்தியப் பாட்டை அலட்சியம் செய்யும் தவறை எதிர்த்துப் போராடு வது அவசியம். இந்தத் தவறு சீனாவிலுள்ள முதலாளித்துவ வர்க்கத்தை முதலாளித்தவ நாடுகளில் உள்ளது போல கருதி முதலாளித்துவ வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணி ஒன்றினை உருவாக்கி அதை இயலுமான அளவுக்கு நிலை நிறுத்தும் கொள்கையை அலட்சியம் செய்வதில் அமைந்துள்ளது. இது "இடது சாரி" கதவடைப்பு வாதமாகும். மறுபுறம், பாட் டாளி வர்க்கத்தின் வேலைத்திட்டம், கொள்கை, சித்தாந்தம் நடைமுறை இன்னோரன்ன பிறவற்றை முதலாளித்துவ வர்க்கத்தினுடையவைவற்றைப்போல் கருதி, இவற்றிற்கிடை யிலான கோட்பாடு ரீதியான வித்தியாசங்களை அலட்சியம் செய்வது என்ற தவற்றை எதிர்த்துப் போராடுவது அவ சியம். இந்தத் தவறு முதலாளித்துவ வர்க்கம் [சிறப்பாக பெரும் முதலாளித்துவ வர்க்கம்] குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் மீதும் விவசாயிகள் மீதும் தன் செல்வாக்கை தீவிரமாக செலுத்துவது மட்டுமன்றி, பாட்டாளி வர்க்கத் தின் மீதும் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதும் தன் செல்வாக்கை செலுத்தி, பாட்டாளி வர்க்கத்தினதும் கம்யூனிஸ்ட் கட்சி யினதும் சித்தாந்த, அரசியல், ஸ்தாபன சுதந்திரத்தை அழிப் பதற்கும் அவற்றை முதலாளித்துவ வர்க்கத்தினதும் அதன் அரசியல் கட்சியினதும் தொங்கு சதையாக மாற்றுவதற்கும் தானோ, தன் அரசியல் கட்சியோ தனியாகப் புரட்சியின் கனிகளை அறுவடை செய்வதற்கும் தன்னால் இயன்ற மட் டும் இயலும் என்ற உண்மையை இலட்சியம் செய்வதில் அமைந்திருக்கிறது. அத்துடன் முதலாளித்துவ வர்க்கம் [சிறப்பாக பெரும் முதலாளித்துவ வர்க்கம்] தன் சொந்த சுய நலன்களுடனோ, தன் சொந்த அரசியல் கட்சியின் சுய நலன்களுடனோ புரட்சி மோதும் போது புரட்சிக்கு துரோ கம் செய்யும் என்பதை அலட்சியம் செய்வதிலும் இந்தத் தவறு அடங்கியிருக்கிறது. இவற்றையெல்லாம் அலட்சியம் செய்வது வலது சந்தர்ப்பவாதமாகும்.''

......... "முதலாளித்துவ வர்க்கத்தோடு ஐக்கியப்படுவ துடன் அதற்கெதிராகப் போராடுவது என்ற கொள்கை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் மார்க்கத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். உண்மையில், முதலாளித்துவ வர்க் கத்துடனுள்ள ஐக்கியத்திற்கும் போராட்டத்திற்கும் ஊடாக ஏற்படும் கட்சியின் வளர்ச்சியும் புடமிடப்படுதலும் கட்சி அமைப்பின் முக்கிய பகுதியாகும்.''

......... "முதலாளித்துவ வர்க்கத்துடன் ஐக்கியமுடைய தாயிருக்கும் போது திடமான, கடுமையான "சமாதான" மான போராட்டம் நடத்த வேண்டுமென்பதை எமது கட்சி

உணராவிட்டால், எமது கட்சி சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் சிதைவுறும்; புரட்சியும் தோல்வியடையும் முதலாளித்துவ வர்க்கத்துடன் பிளவுபட நிர்ப்பந்திக்கப்படும்போது எமது கட்சி கடுமையான, திடமான ஆயுதப் போராட்டத்தை நடத்தாவிட்டாலும் சிதைவுறும்; புரட்சி தோல்வியடையும்.'' (கம்யூனிஸ்டை அறிமுகம் செய்வது, தேர்ந்த படைப்புகள், பக் 489-490)

ஐக்கிய முன்னணியைக் கட்டி வளர்த்து போராடும்போது கீழ்கண்ட கோட்பாடுகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

1) பாட்டாளி வர்க்கக் கட்சியானது அரசியல் யுத்ததந்திரம் மற்றும் அரசியல் போர்த் தந்திர அடிப்படையில் ஓர் அரசியல் பொருளாதார திட்டத்தை முன்வைத்து அதனடிப்படையில் ஐக்கிய முன்னணியைக் கட்டவேண்டும்.

2) பாட்டாளி வர்க்க கட்சி ஐக்கிய முன்னணியில் பங்குபெறும் போதே அது தனது சுதந்திரத்தையும் முன்முயற்சியையும் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்; ஐக்கிய முன்னணியில் தலைமைப் பாத்திரத்தை வகிக்கவேண்டும்.

3) ஐக்கிய முன்னணி கூடாது என்ற கதவடைப்பு வாதத்தையும், ஐக்கிய முன்னணியில் தலைமைப் பாத்திரத்தையும் சுதந்திரத்தையும் முன்முயற்சியையும் கைவிட்டு விட்டு வால் பிடித்துப் போகும் போக்கையும் எதிர்த்து முறியடிக்கவேண்டும்.

4) நாம் கட்டும் ஐக்கிய முன்னணி (யுத்ததந்திர ரீதியில்) ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கியெறிந்து மக்கள் யுத்தப்பாதையின் மூலம் புதிய ஜனநாயகத்தை அடைவதற்காகக் கட்டும் ஐக்கிய முன்னணியாகும். ஆயுதந்தாங்கிய விவசாயப் புரட்சியை மையமாகக்கொண்டு உழவர்—தொழிலாளர் கூட்டை அச்சாகக்கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் சில சுரண்டும் வர்க்கங்களையும் உள்ளடக்கிய ஐக்கிய முன்னணியாகும்.

5) சில சுரண்டும் வர்க்கங்களையும் உள்ளடக்கி இருப்பதால் ஐக்கிய முன்னணி தற்காலிகத் தன்மை கொண்டதாக இருக்கும்.

6) ஐக்கிய முன்னணிக்குள் போராட்டம், ஒற்றுமை இரண்டும் இருக்கும். ஒற்றுமை என்பது பொது எதிரிக்கு எதிராக உள்ள ஒற்றுமையாகும். போராட்டம் என்பது பொது எதிரிக்கு எதிராக தீர்மானகரமான போராட்டம் நடத்தாமல் ஊசலாட்டம் செய்து குறுகிய வர்க்க நலன்களை அடைய சிலர் முயலும் போது அதை எதிர்த்து 'சமாதான'மான சித்தாந்த, அரசியல், ஸ்தாபன ரீதிகளிலான போராட்டத்தை நடத்துவதாகும். ஐக்கிய முன்னணியை உடைக்க நிர்ப்பந்திக்கப்படும்போது அவசியமானால் ஆயுதப் போராட்டம் உட்பட அனைத்து வடிவங்களிலும் எதிர்த்தரப்பிலுள்ள ஊசலாடும் சக்திகளையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

7) மக்கள் யுத்தப்பாதையின்படி தளப்பிரதேசம் கட்டுவதற்கே ஆயுதந்தாங்கிய விவசாயப் புரட்சியை அச்சாகக் கொண்ட ஐக்கிய முன்னணியைக் கட்டுவது முன் நிபந்தனையாகும்.

கட்சி, படை, ஐக்கிய முன்னணி இவைகளுக்கிடையிலான உறவு மிகவும் முக்கியமானதாகும். கீழ்கண்டவாறு தோழர் மாவோ சொல்லும் அடிப்படையில் கட்சி, படை, ஐக்கிய முன்னணி ஆகியவைகளைக் கட்டும் பணி மிகவும் கேந்திரமானதாகும்.

"ஐக்கிய முன்னணியும் ஆயுதந்தாங்கிய போராட்டமும் தான் எதிரியைத் தோற்கடிப்பதற்கான இரண்டு அடிப்படை ஆயுதங்கள் என எமது 18 ஆண்டு கால [1921-1939 — மா.அ.க] அனுபவங்கள் காட்டுகின்றன. ஐக்கிய முன்னணி ஆயுதந்தாங்கிய போராட்டத்தை நடத்துவதற்கான ஐக்கிய முன்னணியாகும். கட்சிதான் எதிரியின் நிலைகளைத் தாக்கி தகர்ப்பதற்கு இவ்விரு ஆயுதங்களையும் அதாவது, ஐக்கிய முன்னணியையும் ஆயுதந்தாங்கிய போராட்டத்தையும் ஏந்தும் விரமிக்க போர்வீரன். இவ்வாறுதான் மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாயுள்ளன." [ஷை நூல், மாவோ, பக்-494]

இன்றைய கால கட்டத்தில் ஆயுதப் போராட்டம் என்பது நிகழ்ச்சி நிரலில் இல்லை; எனவே, அரசியல் போராட்டம் பிரதானமாகவும் ஆயுத மோதல்களை இரண்டாம்பட்சமானதாகவும் கொண்ட போராட்ட வடிவங்களே இன்று இருக்கும். ஐக்கிய முன்னணியும் அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டத்தினூடே கட்டப்படும். அதன் வளர்ச்சிப் போக்கிலேயே பிரதானமாக ஆயுதப் போராட்டத்திற்கான ஐக்கிய முன்னணியாக வளர்க்கப்படும். இன்றைய கட்டத்தில் எதிரி வர்க்கங்களுக்கும் ஐக்கிய முன்னணிக்குமான போராட்டங்கள் ஆயுத மோதல்களுடன் கூடிய அரசியல் போராட்டமாகத்தான் இருக்குமே தவிர ஆயுதப் போராட்டமாக இருக்க முடியாது. இந்த மாதிரியான ஐக்கிய முன்னணி இதுவரைக் கட்டப்படாததால், இனிமேல்தான் கட்டி அனுபவம் பெற வேண்டியுள்ளது. இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் அமைப்பு நீண்டகாலமாக இருப்பதும் பல்வேறு சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் அரசியல் அரங்கில் தீவிரமாக வினையாற்றிக் கொண்டிருப்பதும் சேர்ந்து இன்று சக்திகளின் இந்த அணி வகுப்பை அடைவது பல்வேறு வர்க்கங்களின் அரசியல் பிரதிநிதிகளான கட்சிகளுடன் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதியான மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் கட்சி கூட்டு நடவடிக்கைகளுக்கான தற்காலிக ஐக்கிய முன்னணி அமைப்பதாகவே ஆரம்பத்தில் சாத்தியம் ஆக்கியுள்ளன. எனவே, அரசியல் அரங்கத்தில் நடக்கின்ற போராட்டத்தில் பாட்டாளிவர்க்கக் கட்சியானது இன்றைய நிலையில் வினையாற்றுவது மிக மிக அவசியமானது. இதற்கு பொருள்: நாடாளுமன்ற தேர்தல் நீரோட்டத்தில் கலந்து விடுவதல்ல; மாறாக, அரசியல் யுத்ததந்திர வழி காட்டுதலில்

அரசியல் போர்த்தந்திரம் வகுத்து அதன் முழக்கத்தில் மக்களை அரசியல் போராட்டத்தில் ஈடுபடுத்துவதாகும்; எதிரி சக்திகளை ஒழிக்கவும் சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தவும் புதிய ஜனநாயக ஐக்கிய முன்னணியைக் கட்டுவதாகும்.

சமுதாயப் பொருளாதார அந்தஸ்தின் அடிப்படையில் பிரதான தாக்குதல் திசைவழியையும் ஐக்கிய முன்னணியையும் பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பது எளிதானதாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் யுத்ததந்திர திட்டத்தையும் அதன் வழிகாட்டுதல், நெறிப்படுத்துதலில், அரசியல் போர்த்தந்திரத்தின் அரசியல் நடத்தை வழியையும் பருண்மையாகத் தீர்ப்பதும் கூட எளிமையானதாக இருக்கிறது.

ஆனால் முதலாளித்துவ முறையிலான அதிகார வர்க்க இராணுவ அரசுஎந்திரத்தையுடைய அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ அரசியல் கட்டமைவில் வெவ்வேறு வர்க்கங்களின் அரசியல் பிரதிநிதிகளைத் தீர்மானிப்பதும் அவற்றின் அடிப்படையில் பாட்டாளி வர்க்கம் சரியான அரசியல் நடத்தை வழியை வகுத்துக் கொள்வதும் சிரமமான, சிக்கல் மிக்கதான ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில் முதலாளித்துவ முறையிலான அரசியல் அமைப்பில் பொருளாதாரம் மற்றும் அரசியல் துறைகளும் வர்க்கங்கள் மற்றும் குடியுரிமை பெற்றவர்களும் வேறு வேறாக பிரிக்கப்பட்டுள்ளனர்; நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையின் காரணமாக ஆளும்வர்க்க கட்சிகள் உட்பட அனைத்து தேர்தல் அரசியல் கட்சிகளுமே தமது வர்க்க நலன்களையும் அந்த நலன்களுக்குரிய வர்க்கப் பின்னணியையும் மூடி மறைத்து ஜனரஞ்சகமான கவர்ச்சிக் கோஷங்களாலும் சீர்திருத்தங்களாலும் சட்டமன்ற-நாடாளுமன்ற சவடால்களாலும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு பேச்சுக்களாலும் கவசமணிந்துள்ளன. படு பிற்போக்கான வலதுசாரி தீவிரவாத கட்சிகளும் சோசலிசத்தின் பெயரால் மோசடி செய்கின்றன; அதிகார வர்க்க ஏகபோகத்தை 'பொதுத்துறை' என்றும் 'மக்களுடையது' என்றும் 'சோசலிசம்' என்றும் ஏமாற்றுகின்றன. அரசியலையே தொழிலாகக் கொண்ட காரியவாத கும்பல்கள் அனைத்து தேர்தல் அரசியல் கட்சிகளிலும் மலிந்துள்ளதோடு தனித்தனியே அரசியல் கட்சிகளையும் கொண்டுள்ளன. தனி மனிதர்கள், கும்பல்கள், சாதி, மத, இனப் பிரிவுகளுக்கிடையிலான போட்டியும் செல்வாக்கும் அவற்றில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனாலும் நாடாளுமன்ற அராஜகம் கூடுதலாயிருப்பதோடு கட்சிதாவல்களும் பிளவுகளும் கட்சிகள் உடைந்து சிதறுவதும், புதிய கட்சிகள் தோன்றுவதும் இருக்கின்றன. பாகிஸ்தான் எதிர்ப்பு, சீன எதிர்ப்பு என்ற தேசியவெறிக் கொள்கையில் அனைத்து தேர்தல் அரசியல் கட்சிகளுமே ஒன்றுபடுகின்றன. இக்காரணங்களால் சமரச வர்க்க கட்சிகளை மட்டுமல்ல, குட்டி முதலாளித்துவ கட்சிகளையே கூட ஆளும் வர்க்கங்கள் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வது எளிதாகிறது.

எனவே, ஆளும் வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சக்திகள்—கட்சிகளிலிருந்து ஊசலாடும் சமரசப் படுத்

தும் வர்க்கமான தேசிய முதலாளிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் சக்திகள்—கட்சிகளையும், தேசிய முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சக்திகள்—கட்சிகளிலிருந்து குட்டி முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சக்திகள்—கட்சிகளையும், இவற்றிலிருந்து சுய நல காரியவாத கும்பல்களின் அரசியல் சக்திகள்—கட்சிகளையும் பிரித்தறிவதும் கையாள்வதும் சிரமமானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கின்றன. இக்கட்சிகளுக்கிடையில் தெளிவான எல்லைக் கோடுகளின்றி கலங்கிய நிலை இருப்பதைத்தான் வலது சந்தர்ப்பவாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமது நாடாளுமன்ற சமரசவாதங்கள், சந்தர்ப்பவாதங்களை முன் வைத்து மோசடி செய்கின்றனர். சமுதாய அமைப்பு மற்றும் புரட்சியின் தன்மை பற்றிய கோட்பாடுகளையும் திரித்துப் புரட்டுகின்றனர். வெவ்வேறு வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளை வரையறுத்துக் கொள்வதில் உள்ள சிரமம் மற்றும் சிக்கல் காரணமாக எதிரிகளுக்கும் சமரசவாதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காண இடது சந்தர்ப்பவாதிகள் மறுக்கிறார்கள்; சமரச சக்திகளை தனிமைப் படுத்துவதாகவும் எதிரிகளுக்கு எதிராகவும், தாக்குதல் திசைவழி இருக்கவேண்டுமென்பதை நிராகரிக்கிறார்கள். உண்மையில் வெவ்வேறு அரசியல் சக்திகள்—கட்சிகளின் பின்னுள்ள வர்க்க நலன்களைத் தோலுரித்துக் காட்டுவதின் பாதையினூடாகத் தான் தாக்குதல் திசைவழியே அமைந்திருக்கிறது. அப்பொழுது தான் சமரச சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவதும் பரந்துபட்ட மக்களை வென்றெடுத்து எதிரி சக்திகளைத் தாக்கி வீழ்த்துவதும் சாத்தியமாகும்.

இன்றைய நிலையில் பொதுவாக கூறுமிடத்து அரசியல் சக்திகள்—கட்சிகளை பின்வருமாறு பிரிக்க முடியும்.

1) இந்திரா காங்கிரஸ், பாரதீய ஜனதா, ஜனதா, லோக்தளம் சோசலிச காங்கிரஸ் போன்ற ஆளும் வர்க்கக் கட்சிகள். யுத்ததந்திர ரீதியில் பிரதான தாக்குதல்முனை ஆளும்வர்க்கங்கள் அரசு எந்திரம் ஆகியவற்றோடு ஆளும் வர்க்க கட்சிகளுக்கும் எதிரானது. இவை தாக்கி அழிக்கப்பட வேண்டியவை.

2) தி.மு.க, அண்ணா தி.மு.க போன்ற முதலாளித்துவ தனி நபர் காரியவாதக்கட்சிகள். இவை ஆளும் வர்க்கங்களுக்கு சேவை செய்ய எப்பொழுதும் காத்திருப்பவை. இம்மாதிரியான கட்சிகள் மற்ற நாடுகளிலும் இருந்திருக்கின்றன. பரந்துபட்ட மக்களை தம் பின்னே திரட்டி ஆளும் வர்க்கங்களின் சேவையில் இவை வைக்கின்றன; உண்மையில் புரட்சிக்கு எதிரான பாத்திரமாற்றுகின்றன.

3) இந்தியக் 'கம்யூனிஸ்ட்'கட்சி, இந்தியக் 'கம்யூனிஸ்ட் [மார்க்சிஸ்ட்]' கட்சி ஆகிய திரிபுவாதக் கட்சிகள் மார்க்சிச லெனினிசம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு என்று பேசிக்கொண்டே நடைமுறையில் ஏகாதிபத்தியத்துடனும் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்துடனும் நிலப்பிரபுத்

துவத்துடனும் [குறிப்பாக, சமூக ஏகாதிபத்தியம், அதிகார வர்க்க முதலாளித்துவத்துடன்] சமரசம் செய்து புரட்சியை சின்னாபின்னப்படுத்தும் அரசியல் கட்சிகள்.

4) பார்வர்டு பிளாக், பல சோசலிஸ்ட் கட்சிகள், குழுக்கள் விவாசயத் தொழிலாளர் கட்சி இன்னும் பிற மாநிலக்கட்சிகள். இவை குட்டி முதலாளித்துவ ஜனநாயகக் கட்சிகள்; இவை பொதுவாக மக்களின் நல்வாழ்வுக்காக பல முற்போக்குத் திட்டங்கள் வைத்திருப்பதாகவும் செயல்படுத்துவதாகவும் கூறி ஜனரஞ்சக கவர்ச்சி முழங்கங்களை மக்கள் முன் வைத்து தங்களது செல்வாக்கைப் பாதுகாத்து அரசு, அரசாங்க சன்மானங்களைப் பங்கிடவும் முயலுகின்றன; மக்களைத் தம் பக்கம் வென்றெடுக்கவும், தக்க வைத்துக் கொள்ளவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் பேச்சுகள் பேசுகின்றன.

5) குடியரசுக்கட்சி, உழைப்பாளர்கட்சி, கிறித்துவ ஜனநாயக முன்னணி, முஸ்லீம் லீக் மற்றும் பல மாநிலங்களில் உள்ள சாதி மத அடிப்படையிலான கட்சிகள். இவை குறிப்பிட்ட சாதி அல்லது மதப்பிரிவு மக்களது வாழ்க்கை பாரபட்சமாக நடத்தப்படுவதால் நலிந்து போயிருப்பதாக கூறி சில சீர்திருத்தங்கள், சில சட்டங்கள் கொண்டு வருவதின் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டுகின்றன.

இக்கட்சிகளை அவர்களது கொள்கை அறிவிப்புகள் தேர்தல் அறிக்கைகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உரைகள், முழக்கங்கள் மற்றும் சில சீர்திருத்த நடவடிக்கைகளைக்கொண்டு அவற்றின் வர்க்கப் பின்னணிகளைக் கணிப்பதோ அதன் அடிப்படையில் புதிய ஜனநாயக வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கருதும் கட்சிகளுடன் யுத்ததந்திர ரீதியிலான புதிய ஜனநாயக ஐக்கிய முன்னணியை அமைப்பதோ கூடாது. மாறாக ஆளும் வர்க்கக் கட்சிகள் தவிர மற்றெல்லாக் கட்சிகளையும் சமரசக் கட்சிகளாகவே கருதி புரட்சியின் பிரதான தாக்குதல் திசைவழியில் அரசியல் ஆயுதப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் போது மட்டுமே அதன் வளர்ச்சிப் போக்கிலேயும் மேலும் அடிப்படை முரண்பாடுகள் கூர்மையடைவதிலேயும்தான் இந்த அரசியல் கட்சிகள் உண்மைச் சொரூபத்தில் வெளிபடுவதும் ஒருமுனைப்படுவதும் நடந்தேறும். அதுவரை ஆளும் வர்க்க கட்சிகள் தவிர பிற கட்சிகளுடன் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப குறிப்பிட்ட தருணத்தில் வகுக்கப்படும் போர்த்தந்திரத்தின் அரசியல் நடத்தை வழியை செயல்படுத்துவதற்கான கூட்டு நடவடிக்கைகளே இருக்கும். கூட்டு நடவடிக்கைகளை செயல்படுத்துவதின் மூலமாகத்தான பிரதான தாக்குதல் திசைவழி இருக்கும். கூட்டு நடவடிக்கைகளுக்காக அமைக்கும் போராட்ட அமைப்புகளை புதிய ஜனநாயக ஐக்கிய முன்னணியுடன் போட்டு குழப்பிக்கொள்ளக் கூடாது. கூட்டு நடவடிக்கைகளிலும் அதற்கான ஸ்தாபனங்களிலும் ஒற்றுமையும் போராட்டமும், சுதந்திரமும் முன்முயற்சி

யும் என்ற கொள்கையை பாட்டாளி வர்க்கக் கட்சி வழுவாது பற்றி நிற்க வேண்டும். இவ்வாறு செயல்படுவதன் மூலமாகத் தான் பிரதான தாக்குதல் திசைவழி பிறழாது எதிரிக்கு எதிரான பிரதான தாக்குதல் அதிகபட்சம் பலனளிக்கக் கூடியதாக இருக்கும்.

யுத்ததந்திரத்தின் முதல் இரண்டு கூறுகள்—பிரதான தாக்குதல் திசைவழியும் சக்திகளைப் பிரித்தொதுக்கும் யுத்ததந்திர திட்டமும்—யுத்ததந்திரத்தின் சாராம்சமான கோட்பாடாக அமைகின்றன. மூன்றாவது கூறு யுத்ததந்திர திட்டத்தை அமுலாக்குவதற்கான சமர் உறுதியாகப் போராடுவது. இதைப் பரந்துபட்ட மக்களிடம் எடுத்துச் செல்லும் தெட்டத் தெளிவான சாராம்சமான கருவுருவான யுத்ததந்திர முழக்கம் மற்றொரு அடிப்படைத் தேவையாகும்.

அடிப்படையான யுத்ததந்திர முழக்கம் அல்லது அடிப்படையான முழக்கம் என்பவை யுத்ததந்திர திட்டத்தில் சக்திகளின் அணிவகுப்பைப் பற்றிய சுருக்கமான தெளிவான வரையறுப்பாகும். எனவே, யுத்ததந்திரம் மாறும்போது, அதாவது ஒரு வரலாற்றுக் கட்டம் முடிந்து அடுத்த கட்டம் தொடங்கும் போது அடிப்படையான யுத்ததந்திர முழக்கமும் மாறுகிறது.

"மார்க்சிய ஆய்வுக் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே கட்சியின் யுத்ததந்திர முழக்கங்களை மதிப்பீடு செய்ய முடியும். இந்த ஆய்வானது, புரட்சியில் வெற்றி பெறுவதற்காகவும் புதிய வர்க்கத்தின் கரங்களில் அதிகாரத்தைக் குவிப்பதற்காகவும் வர்க்க சக்திகள் பற்றியும் பல்வேறு போராட்ட முனைகளில் புரட்சிகரச் சக்திகளைச் சரியாக பிரித்து ஒதுக்குவது பற்றியும் இருக்கவேண்டும்" [லெனினிசத்தின் பிரச்சினைகள், ஸ்டாலின், பக்-239]

ஒரு யுத்ததந்திர கட்டம் முழுவதற்கும் வைக்கப்படுகின்ற யுத்ததந்திர முழக்கத்தினை நோக்கி மக்களை அணி திரட்ட வேண்டும். கட்சியானது தனது ஒவ்வொரு நடவடிக்கையிலும் இதை மையமாக வைத்துப் பிரச்சாரம் செய்யவேண்டும். ஒவ்வொரு போர்த்தந்திரமும் இந்த முழக்கத்தை நிறைவேற்றுவதை நோக்கி செயல்படவேண்டும்; இதை நோக்கி செயல்படுத்தப்படவில்லையானால் கட்சி சேகரித்த சக்திகள் சிதறுவதும் கட்சியே பாதை தவறிப்போவதும் நடக்கும். யுத்ததந்திரத்தின் சாராம்சத்தை யுத்ததந்திர முழக்கம் தருவதால் இது எப்போதும் கலங்கரை விளக்கு போல யுத்ததந்திர பாதைக்கு வெளிச்சம் காட்டிக்கொண்டேயிருக்கிறது. எனவே, பாட்டாளி வர்க்கக் கட்சியானது யுத்ததந்திர முழக்கத்தை எப்போதும் மனதில் நிறுத்தி செயல்பட வேண்டும். மிகவும் முக்கியமான இதன் அம்சங்களைப் பற்றி ஸ்டாலின் பின்வருமாறு கூறுகிறார்:

'ஒவ்வொரு புரட்சியிலும் மையமான பிரச்சினை அரசு அதிகாரம் பற்றிய பிரச்சினையாகும்' என்று லெனின் [தொகுதி 2, பக்-142] கூறுகிறார். எந்த வர்க்கத்தின்

2. புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள் தோல்விகள், பின்னடைவுகள் ஏற்படலாம்; போர்த்தந்திர தவறுகள் நிகழலாம்; இழப்புகள் ஏற்படலாம். ஆனால் அவையெல்லாம் யுத்த தந்திர முழக்கத்தை தவறு என்று ஆக்கிவிடுவதில்லை.

3. புரட்சி நடந்து பழைய வர்க்கங்களின் ஆட்சி தூக்கியெறியப்பட்டு, ஆனால் யுத்ததந்திர முழக்கத்தினால் எழுந்த புரட்சியின் சில கேந்திரமான கோரிக்கைகள் நிறைவேற்றப் படாமல் இருக்கலாம்; அல்லது அவைகள் நிறைவு பெறுவது புரட்சிக்குப் பிறகும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பரவியிருக்கலாம். அல்லது ஒரு புதிய புரட்சியே கூட தேவைப்படலாம். எனினும், இவையெல்லாம் அடிப்படை யுத்ததந்திர முழக்கம் தவறென நிரூபிப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அதாவது, யுத்ததந்திர முழக்கத்தை சில குறிப்பிட்ட கோரிக்கைகளை அடையும் வடிவங்கள், காலம் ஆகியவைகளோடு போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

மேலும் யுத்ததந்திர முழக்கத்தின் இழையோடும கருத்து பற்றி பின்வருமாறு ஸ்டாலின் குறிப்பிடுகிறார்;

"யுத்ததந்திர முழக்கத்தினுடைய மையமான கருப்பொருள் புரட்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் அதிகாரம் பற்றிய பிரச்சினையாகும். எந்த வர்க்கம் தூக்கியெறியப் படுகிறது; எந்த வர்க்கத்தின் கரங்களுக்கு அதிகாரம் மாற்றப்படுகிறது என்பது பற்றிய பிரச்சினையாகும் [ஷை நூல் பக்-240]

இவ்வாறு கட்சியால் முன்வைக்கப்படும் யுத்ததந்திர முழக்கமானது மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுமாறு செய்யப்படும் பொழுதுதான் கட்சியின் தலைமையானது பரந்துபட்ட மக்களின் தலைமையோடு இணைக்கப்படுகிறது. இதைப்பற்றி ஸ்டாலின் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''விஷயம் என்னவென்றால், புரட்சியில்—அந்தப் புரட்சியானது உண்மையிலேயே மக்களுடைய புரட்சியாக, கோடானு கோடி மக்கள் பங்கேற்கும் புரட்சியாக இருக்குமானால் —வெற்றி பெறுவதற்கு கட்சியின் முழக்கங்கள் சரியாக இருந்தால் மட்டும் போதாது. புரட்சி வெற்றி பெறுவதற்கு இன்னும் ஒரு நிபந்தனை அவசியமாகும். கட்சியின் முழக்கங்கள் சரியானவை என்பதை பரந்துபட்ட திரளான மக்கள் தமது சொந்த அனுபவத்திலிருந்து தாமாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே கட்சியின் முழக்கங்கள் பரந்துபட்ட திரளான மக்களுடைய முழக்கங்களாகவே ஆகின்றன. அப்போது மட்டுமே புரட்சியானது மக்களின் புரட்சியாக ஆகிறது''. [ஷை நூல், பக்-148-149]

இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளை வகுப்பதற்கான அணுகுமுறைகள் அனைத்தையும் வரையறுத்து இந்தியா

வின் புறவயமான நிலைமைகள் பற்றிய பருண்மையான கோட்பாட்டு முடிவுகள், திட்டங்கள் வகுப்பதற்கான ஆய்வுமுறை அணுகுமுறைகள் அனைத்தையும் வரையறுத்து அவற்றின் அடிப்படையில் சர்வதேசிய, தேசிய அடிப்படை முரண்பாடுகள் அனைத்தின் வளர்ச்சிப் போக்கையும் ஆய்ந்தறிந்து கோட்பாட்டு முடிவுகள் மற்றும் திட்டத்தை வரையறுத்து பின்வருமாறு இந்தியப் புரட்சியின் யுத்ததந்திர கூறுகளை வரையறுக்கிறோம்.

**யுத்ததந்திரத்தின் குறிக்கோள்:-** நிலப்பிரபுத்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் தூக்கியெறிதல்.

**புரட்சியின் தலைமைச்சக்தி:-** பாட்டாளி வர்க்கம்.

**பிரதான நேரடி சேமிப்பு சக்தி:-** விவசாயிகள்.

**மற்ற பிற நேரடி சேமிப்பு சக்திகள்:-** குட்டி முதலாளித்துவ வர்க்கம் + ஒரு பகுதி தேசிய முதலாளிகள் + உதிரிப்பாட்டாளி வர்க்கம் + உலகம் முழுவதிலுமுள்ள பாட்டாளி வர்க்க இயக்கங்கள் + ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகர இயக்கங்கள் + பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், அவற்றின் வெற்றிகளும் சாதனைகளும்.

**மறைமுக சேமிப்பு சக்திகள்:-** உள்நாட்டில் நேரடி சேமிப்பு சக்திகளுக்கும் எதிரிகளுக்கும் இடையிலான மற்றும் எதிரிகளுக்குள்ளே உள்ள முரண்பாடுகளும் மோதல்களும்; அதாவது புரட்சியின் எதிரிகளைப் பலவீனப்படுத்தவும் தனது சேமிப்பு சக்திகளை பலப்படுத்தவும் பாட்டாளி வர்க்கம் பயன்படுத்திக் கொள்ளுகின்ற முரண்பாடுகள், மோதல்கள் + சர்வதேசிய, தேசிய பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும் விரோதமான சக்திகளுக்கிடையில், அரசுகளுக்கிடையில் உள்ள முரண்பாடுகள், மோதல்கள்; குறிப்பாக ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளும் மோதல்களும் யுத்தங்களும்.

**இந்தியப் புரட்சியின் பிரதான தாக்குதல் திசைவழி:-**
ஏகாதிபத்தியத்துடனும் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்துடனும் நிலப்பிரபுத்துவத்துடனும் சமரசம் செய்து கொண்டு பரந்துபட்ட மக்களை குறிப்பாக விவசாயிகளையும் குட்டி முதலாளிகளையும் தம் பின்னே இழுத்துச்சென்று புரட்சியிலிருந்து திசைதிருப்பிவிடும், அதன் மூலம் புரட்சியை சின்னாப்பின்னப்படுத்தும் தேசிய முதலாளி வர்க்கத்தையும் சமூக ஏகாதிபத்தியவாதிகளாக மாறியுள்ள குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளையும் தனிமைப் படுத்தி முடமாக்குவது; பரந்துபட்ட மக்களை குறிப்பாக, விவசாயிகளையும் குட்டி முதலாளிகளையும் பாட்டாளி வர்க்கத்தின் அணிக்கு வென்றெடுத்து எதிரிக்கு எதிரான நேரடி மோதலை ஏற்படுத்துவது.

**இந்தியப் புரட்சியின் சக்திகளைப் பிரித்தொதுக்கும் யுத்ததந்திரத் திட்டம்:-** பாட்டாளி வர்க்கத் தலைமையில் தொழிலாளர் விவசாயிகளது உறுதியான கூட்டை அச்சாகக் கொண்டு தொழிலாளர்கள், விவசாயிகள், குட்டி முதலாளிஏளது கூட்டணியை உருவாக்குவது; அத்துடன் தேசிய முதலாளிகளின் ஊசலாட்டத்தை ஸ்தம்பிக்கச் செய்து அதன் 'இடது' சாரிப் பிரிவை வென்றெடுத்து புதிய ஜனநாயக ஐக்கிய முன்னணியைக் கட்டி அமைப்பது.

**இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திர திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சமர்:-** யுத்ததந்திர திட்டத்தால் வழிகாட்டப்பட்டு நெறிப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப அரசியல் போர்த்தந்திரத்தின் அரசியல்நடத்தை வழியை அமுலாக்குவதற்கான சமர். யுத்ததந்திரத்தால் தீர்மானிக்கப்பட்ட பிரதான தாக்குதல் திசை வழியினூடே யுத்ததந்திர திட்டத்தை —சக்திகளைப் பிரித்தொதுக்கும் பொதுவான திட்டத்தைப் — பருண்மையாக அமுலாக்குவதும், ஐக்கிய முன்னணி பற்றிய பிரச்சினையை சரியாகக் கையாள்வதும், அரசியல் போராட்டங்களுக்கும் ஆயுதப் போராட்டங்களுக்கும் இடையிலான முக்கியத்துவத்தை சரியாகப் பிரயோகிப்பதும், 'இடது' வலது விலகல்களை முறியடித்து புரட்சிகர இயக்கத்தை பிரதான தாக்குதல் திசைவழியே வழிநடத்திச் செல்வது; இறுதி வரை, வெற்றிக்கு எடுத்துச்செல்ல விடாப்பிடியாக, உறுதியாகப் போராடுவது.

**இந்தியப் புரட்சிக்கான யுத்ததந்திர முழக்கம்:-** "பாட்டாளி வர்க்கத் தலைமையிலான தொழிலாளர் — விவசாயிகளது கூட்டை அச்சாகக்கொண்ட குட்டி முதலாளிகள் 'இடது சாரி' தேசிய முதலாளிகள் ஆகியோரின் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்" வேறுவிதமாக கூறின், "தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ — நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கி யெறிவோம்" "மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவோம்" "ஏகாதிபத்தியம் — நிலப்பிரபுத்துவம் ஒழிக" என்றும் வைக்கப்படும்.

நமது நாட்டில் இன்று மக்கள் இராணுவம் இல்லை; எதிரி இராணும் மட்டுமே இருக்கின்றது. செம்படையைக் கட்டுகின்ற கட்டத்தில் இருக்கின்றோம். செம்படையைக் கட்டி தளப் பிரதேசத்தை நிறுவி அதை எதிரி இராணுவம் சுற்றி வளைத்து நசுக்க முற்படும்போது மக்கள் யுத்தப்பாதையின் நிகழ்ச்சிப் போக்கில் யுத்தம் செல்லும். மக்கள் இராணுவம் இல்லாது அதைக் கட்டும் நிலைமையிலுள்ள இன்றைய கட்டத்தில் அரசியல் பிரச்சினைகளே பிரதான இடத்தைப் பெறுகின்றன; அடிப்படை முரண்பாடுகள் இன்னும் தீவிரமாக கூர்மையடையாத நிலைமைகளில், ஆளும் வர்க்கங்கள் மத்தியில் பிளவுகள் இருப்பினும்

அவை பகிரங்கமாக வெடித்து வெளிப்படையான மோதல்களாக, யுத்தமாக மாறாது, ஆளும் வர்க்கங்கள் பலமான நிலையிலும் பாட்டாளி வர்க்க இயக்கம் பல குழுக்களாக பிளவு பட்டு பலவீனமாக உள்ள நிலைமையில், ஆளும் வர்க்கத்தின் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் நாளும் அதிகரித்து வருகின்ற நிலையிலும் அதைப் பயன்படுத்தி மக்களை அணி திரட்டி தலைமை கொடுக்க இயலாமல் பாட்டாளி வர்க்க கட்சி தனது உள் முரண்பாடுகளிலேயே உழன்று கொண்டிருக்கும் சூழ்நிலைமைகளிலும் அரசியல் யுத்ததந்திரம், அரசியல் போர்த்தந்திரம், அரசியல் படைகட்டுதல், அரசியல் போராட்டங்கள் அமைப்புகள் போன்ற அரசியல் பிரச்சினைகள் இன்று அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. கோட்பாடு ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் இவ்வாறே இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளில் சரியான மார்க்சிய-லெனினிய நிலைப்பாடுகளின் அடிப்படையில் ஒரு கருத்தொற்றுமைக்கு வராததே மார்க்சிய-லெனினிய குழுக்கள் ஒன்றுபடாமைக்கும் மொத்தத்தில் பாட்டாளி வர்க்க இயக்கம் பலவீனமாக இருப்பதற்கும் முக்கிய காரணியாக அமைகின்றன. இராணுவப் படையைக் கட்டுவதற்கே அரசியல் செல்வாக்குப் பெறுவதும் அரசியல் படையைக்கட்டுவதும் முன்னிபந்தனையாக இருக்கின்றது. எனவே, இன்றைய நிலைமையில் அரசியல் யுத்ததந்திரத்திற்கு முதற்பட்சமான முக்கியத்துவத்தைக் கொடுத்து செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் பல்வேறு மார்க்சிய—லெனினிய குழுக்களும் அரசியல் பிரச்சினைகளைப் பற்றி பேசுவது குட்டி முதலாளிகளின் வெட்டிப் பொழுது போக்கு என்றும், நடைமுறைப் பிரச்சினைகளிலிருந்து திசைதிருப்ப கடுமையான நிலைமைகளில் புரட்சிப் பணியாற்ற அஞ்சுபவர்கள் செய்யும் தந்திரம் என்றும் சாடி இந்தப் பிரச்சினைகளை அலட்சியப்படுத்திவிட்டு ஒரு தொலைநோக்கற்ற கண்ணோட்டத்தில் நடைமுறை வேலைகளில் ஈடுபட்டு அதில் சுயதிருப்தியும் ஒருவித கர்வமும் கொள்கின்றனர். எனவே அரசியல் யுத்ததந்திரம், அரசியல் போர்த்தந்திரங்கள், அரசியல் போராட்டங்கள் அரசியல் அமைப்புகள் அரசியல் படைகட்டுவது ஆகிய அரசியல் பிரச்சினைகள் உடனடி முக்கியத்துவம் பெறுவது இன்னமும் அத்தியாவசியம் பெறுகின்றது.

## V அரசியல் போர்த்தந்திர விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளை வகுப்பதற்கான மார்க்சிய - லெனினிய அணுகுமுறை.

"கொள்கையும் போர்த்தந்திரங்களும் நமது கட்சியின் உயிர். எல்லா மட்டங்களிலுமுள்ள தலைமைத் தோழர்களும் அவற்றில் பூரண கவனம் செலுத்த வேண்டுமேயன்றி, எவ்விதத்திலும் பாராமுகமாய் இருக்கக் கூடாது" [மாவோ, மேற்கோள்கள்,பக்9]

ஒரு பாட்டாளிவர்க்கக் கட்சியின் உயிராதாரமான கொள்கையும் போர்த்தந்திரங்களும் பற்றிய பிரச்சினைகள் அளவிற்கு நமது கட்சியின் எல்லா மட்டங்களிலும் உள்ள தலைமைத் தோழர்களால் எல்லாவிதத்திலும் பாராமுகமாயிருந்து பூரண கவனம் செலுத்தத் தவறிய வேறு பிரச்சினைகள் இருந்திருக்க முடியுமா என்பது சந்தேகமே. வர்க்க எதிரியை அழித்தொழிக்கும் கொரில்லா நடவடிக்கைகளே வர்க்கப் போராட்டத்தின் உயர்ந்த வடிவமாகவும் கொரில்லாப் போரின் தொடக்கமாகவும் கொண்டு அதற்கேற்ற கொரில்லாக் குழுக்களையே அமைப்பு வடிவமாகவும் கொண்டு—அதாவது போர்த்தந்திரத்தின் மிக முக்கிய அம்சங்களான போராட்ட வடிவங்கள் மற்றும் போராட்ட அமைப்புகளாகவும் —வகுக்கப்பட்ட போர்த்தந்திரமே எல்லா இடங்களுக்கும் எல்லா காலங்களுக்குமானதாக சாருவாலும் பிற 'இடது' சந்தர்ப்பவாதிகளாலும் முன் வைக்கப்பட்டு உயர்த்திப் பிடிக்கப்பட்டது. இந்த 'இடது' சந்தர்ப்பவாதம் பெரும் இழப்புகளையும், தோல்விகளையும் பின்னடைவுகளையும், பிளவுகளையும் கொண்டு வந்து கட்சியை சிதறடித்த போதும்கூட போர்த்தந்திரங்கள் பற்றிய மார்க்சிய—லெனினிய விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும், தேசிய, சர்வதேசிய பாட்டாளி வர்க்க அனுபவங்களையும் கற்று சாராம்

சத்தைக் கிரகித்து, தவறுகளைக் களைந்து சரியான நிலைப்பாடு களை எடுக்க மறுத்தனர். சில மாறுதல்களுடன் கூடிய கொச்சை யான மையவாத நிலைப்பாடுகளையே திரும்பத் திரும்ப முன் வைத்து நடைமுறைப் படுத்துகின்றனர். ஒரு இந்துப் பெண் தன் கணவனுக்கு எவ்வளவு விசுவாசமாக—உடன்கட்டை ஏறும் அள விற்கு இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டதோ அந்த அள வுக்கு குறிப்பிட்டதொரு போராட்டம் மற்றும் அமைப்பு வடி வத்தை 'இடது' சந்தர்ப்பவாதிகள் உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டார்கள். ஆனால் போராட்ட வடிவங்கள் அமைப்பு வடிவங்கள்கள் பற்றி பின்வருமாறு ஸ்டாலின் தொகுத்தளித் தார்:

"போர்த்தந்திரங்கள் அவற்றின் மாறுதல்களோடும், சேர்க்கைகளோடும் போராட்ட வடிவங்கள் மற்றும் ஸ்தாபன வடிவங்களைக் கையாள்பவை. புரட்சியின் குறிப் பிட்ட கட்டத்தின் போது போர்த்தந்திரங்கள் புரட்சியின் எழுச்சி அல்லது வீழ்ச்சி, புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதைப் பொருத்து பல தடவைகள் மாறுகின்றன."

"போர்த்தந்திரத் தலைமையின் கடமை பாட்டாளி வர்க்கத்தின் எல்லாப் போராட்ட மற்றும் ஸ்தாபன வடிவங் களையும் கற்றுத் தேறுவதும், சக்திகளின் குறிப்பிட்ட ஒரு உறவு நிலையில் யுத்ததந்திர வெற்றிக்கு அடிகோலுவதற்கு அவசியமான அதிகபட்ச பலன்கள் கிட்டும் வண்ணம் அவற்றை சரியானபடி உபயோகப்படுத்துவதும் ஆகும்". [லெனினிசத்தின் பிரச்சினைகள்-பக்கம் 84, 89]

"பாட்டாளி வர்க்கக் கட்சி எல்லாப் போராட்ட வடிவங் களையும் கற்றுத் தேறுவதும், போராட்ட அரங்கில் அவற்றை அறிவுக் கூர்மையுடன் இணைப்பதுவும் குறிப்பிட்ட நிலை மைக்குத் தனிச்சிறப்பாக மிகவும் பொருத்தமான வடிவங்களால் போராட்டத்தை திறமையாக ஆழப்படுத்தவும் கற்றுத்தேரவும் அவற்றைப் பூரணத்துவப்படுத்தவும் ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் திறமையாக இணைத்து இயக்கவும் வேண்டும்" [ஸ்டாலின், தொகுதி-5, 172—173]

ஸ்டாலின் போதித்தவாறு எல்லாப் போராட்ட வடிவங் களையும் கற்றுத் தேரவும் தொடுக்கவும் தயாராக இருக்க வேண்டியதைப் போன்றே அவற்றுக்குப் பொருத்தமான எல்லா வடிவங்களிலுமான அமைப்புகளையும் கட்டியமைக்கவும் இயக்க வும் கற்றுத்தேரவும், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறிக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். ஆனால் சாருவின் 'இடது' சந்தர்ப்பவாதப் போர்த்தந்திர வழிகளையும், திரிபு வாதிகள் மற்றும் நவீன திரிபுவாதிகளது வலது சந்தர்ப்பவாத போர்த்தந்திர வழிகளையும் நிராகரித்து எல்லா போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களையும் கற்றுத்தேர்ந்து பிரயோகிக்க வேண்டுமென்ற மார்க்சிய—லெனினிய விதிகளையும் வழிகாட் டும் நெறிமுறைகளையும் பின்பற்றுவதாகக் கூறும் பிற மார்க்சிய

லெனினியக் குழுக்கள் தவறான பிரயோகம் காரணமாக
உண்மையில் பொருளாதாரவாதத்தையே முன் வைக்கின்றன.
அவை பின்வரும் தொகுப்பையே தமது போர்த்தந்திர வழிகளுக்
கான கோட்பாடாகவும் நடைமுறையாகவும் முன் வைக்கின்றன
அவை:-

விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்
கள், பெண்கள் போன்ற பல்வேறு வர்க்கங்களுக்கும் மக்கள் பிரி
வினருக்கும் தனித்தனியே மக்கள் திரள் அமைப்புகளை நிறுவுவது;
இப்பிரிவினருக்காக பகுதி கோரிக்கைகளுக்கான போராட்டங்
களை தீவிரமாக நடத்துவது; தற்காப்பு—தாக்குதல் நடவடிக்கை
களையும் இவை கொண்டிருக்கும். இவை தவிர கலை—இலக்கியம்
கலாச்சாரம், மக்கள் உரிமை, இந்திய—சீன நட்புறவு இவற்றிக்
காக மக்கள் திரள் அமைப்புகளை நிறுவி, பொதுவான பிரச்சார
இயக்கங்களை நடத்துவது. அவ்வப்போது எழும் தேசிய, சர்வ
தேசிய பிரச்சினைகள் மீதும், ஆளும் வர்க்கங்கள் மற்றும்
அரசாங்க எதிர்ப்பு பிரச்சினைகள் மீதும் போராட்டங்களை
நடத்துவது. இம்மாதிரியான போராட்டங்களை பொருளாதார
மற்றும் அரசியல் போராட்டங்கள் என்றும் இவை அனைத்தும்
புரட்சிகர மக்கள் திரள் இயக்கங்கள் என்றும் கூறுகின்றனர். இத்
துடன் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அவசி
யத்தையும், மக்கள் யுத்தப்பாதையின் அவசியத்தையும்
விவசாயத் திட்டத்தையும் பிரச்சாரம் செய்ய வேண்டும்; இவ்
வியக்கங்களின் மூலம் வரக்கூடிய முன்னணியினரை
வென்றெடுத்து ரகசியக் குழுக்களாக கட்டுவது; இப்பணிகள்
அனைத்தின் வளர்ச்சிப் போக்கில் அடக்குமுறையைக் கட்ட
விழ்த்துவிடும் நிலப்பிரபுக்கள் மற்றும் அரசு எந்திரத்தின் எதிர்ப்
புரட்சி வன்முறையை முறியடிக்க புரட்சிகர வன்முறையை
பிரயோகிக்க வேண்டும்; அதற்காக புதிய போராட்ட அமைப்
புகளும் முழக்கங்களும் முன்வைக்க வேண்டிய தேவை எழும்.
இதன் வளர்ச்சிப்போக்கில் கொடிய வர்க்க எதிரிகளான நிலப்
பிரபுக்களையும், எதிரி ஏஜெண்டுகளையும் அழித்தொழிக்க
வேண்டியது தவிர்க்க முடியாதது—சில குழுக்கள் இதை ஏற்ப
தில்லை—என்றும் கூறுகின்றனர்.

அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்கள் சட்டவிரோத
மானதும்—சட்டபூர்வமானதும், ரகசியமானதும்— வெளிப்படை
யானதும்; கிராமப்புற வேலைகளும் — நகர்ப்புறவேலைகளும்
என்பனவற்றை முறையே பிரதானமாகவும் இரண்டாம் பட்ச
மாகவும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். திரிபுவாதிகளும்
நவீன திரிபுவாதிகளும் முற்றிலும் சட்டபூர்வமான, வெளிப்
படையான, நகர்ப்புற வேலைகளை மையமாகக்கொண்டும்
குறிப்பிட்ட வரம்புகளுக்குட்பட்டும் அமைப்பு மற்றும்
போராட்ட வடிவங்களைக் கொண்டிருக்கிறார்கள்; உணர்வுப்
பூர்வமாக போராட்டங்களை உயர்ந்த கட்டங்களுக்கு எடுத்துச்
செல்வதில்லை; இதற்கு மாறாக பகுதிக் கோரிக்கைகளுக்கான
போராட்டங்கள் பல்வேறு அரசியல் பிரச்சினைகள் மீதான

போராட்டங்கள், விவசாயத்திட்டம், அரசியல் அதிகாரத்துக்கான பிரச்சார இயக்கங்கள், நிலப்பிரபுக்கள், அரசு எந்திரத்துக்கு எதிரான தற்காப்பு — தாக்குதல் நடவடிக்கைகள் ஆகியவைகளை வளர்த்து பின்னர் உணர்வுப்பூர்வமாக அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டமாக உயர்த்த வேண்டும். தாக்குதல் தற்காப்புக் குழுக்களை இணைத்து மக்கள் படையும் போராட்டம் உயர்ந்த மட்டத்தை அடையும் போது கிராம விவசாயிகள் புரட்சிக் கமிட்டி என்ற அதிகார அமைப்பையும், கொரில்லாப் பகுதிகளையும் அவற்றை உறுதிப்படுத்தி தளப்பிரதேசங்களையும் அமைப்பது; பின்னர் மாவோவின் மக்கள் யுத்தப்பாதையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இயக்கம் வளரும். இவையே புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிப் போக்காக பிற மார்க்சிய — லெனினியக் குழுக்கள் முன்வைக்கின்றன.

புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிப்போக்கு பற்றிய மேற்கண்ட வரையறுப்புகள் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது சரியானதாகத் தோன்றும். உண்மையில் இவை பொருளாதார வாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் தலைமைமுறை பற்றிய விஞ்ஞானம் என்கிற முறையிலான மார்க்சிய — லெனினியப் போர்த்தந்திர விதிகளும், வழிகாட்டும் நெறிமுறைகளும் இதில் பிரயோகிக்கப் படவேயில்லை. போர்த்தந்திரங்களின் கூறுகளாகிய அரசியல் நடத்தைவழி, குறிப்பிட்ட போர்த்தந்திரங்களில் பருண்மையாகப் புரட்சிகர சக்திகளைப் பிரித்தொதுக்கும் திட்டம், முழக்கங்கள், அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்கள், போர்த் தந்திரங்களின் தன்மை மற்றும் போரிடும் சமுதாய அரங்கம், இவற்றை ஆளும் விதிகள் இவையனைத்தையும் தீர்மானிக்கும் போர்த்தந்திரக் கோட்பாடு மற்றும் திட்டம் இவைபற்றிய மார்க்சிய-லெனினிய வரையறுப்புகள் பிரயோகிக்கப்படவேயில்லை; இவற்றை முழுமையாக வகுக்கவுமில்லை, எல்லாவற்றுக்கும் மேலாக திரிபுவாதிகள் நவீன திரிபுவாதிகளைப் போலவே போர்த்தந்திரம் ஒரு நிகழ்ச்சிப்போக்கு என்கிற முறையில் — மார்க்சிய-லெனினிய விரோதமான முறையில் — அணுகப்படுகின்றன. மாறாக மேற்கண்ட கூறுகள் அனைத்தையும் கொண்டதாக மார்க்சிய-லெனினிய விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் பிரயோகித்து போர்த்தந்திரம் ஒரு திட்டம் என்கிற முறையில் வகுக்கப்பட வேண்டும். இதைத்தான் எங்கல்ஸ்

> ''தன்னெழுச்சியான ஒரு வளர்ச்சிப்போக்கை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவதுதான் தொழிலாளர்களின் கட்சியாகும். வாழ்க்கை எந்தப் பாதையில் தன்னெழுச்சியாகப் போய்க்கொண்டிருக்கிறதோ அதே பாதையைக் கட்சி திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளவேண்டும்'' என்றார்.

புதிய பணிகள் சம்பந்தமாகவோ, ஒரு புதிய அரசியல் நிலையைக் கருத்தில் கொண்டோ கட்சி முழுவதின் அரசியல் நடத்தையை சரி நுட்பமாக வரையறுக்கப்படும் போர்த்

தந்திர தீர்மானங்கள் பற்றி, ''கட்சியின் போர்த்தந்திரங்கள் என்றால் கட்சியின் அரசியல் நடத்தை அல்லது கட்சியினுடைய நடவடிக்கையின் தன்மை, திசை மற்றும் வழிமுறைகள் என்று நாம் அர்த்தப்படுத்திக் கொள்கிறோம்'' [ஜனநாயகப் புரட்சியில் சமூக—ஜனநாயகத்தின் இருபோர்த் தந்திரங்கள்,பக்-13]என்றார் லெனின்.

போர்த்தந்திரங்களின் அதிமுக்கியமான பணி என்னவென்றால் குறிப்பிட்ட தருணத்தில் பருண்மையான சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமான வகையில் யுத்ததந்திர ரீதியிலான வெற்றி நிச்சயமாகும் வகையில் அதற்கான வழிவகைகள் மற்றும் சாதனங்களையும் போராட்ட அமைப்பு வடிவங்களையும் போராட்ட முறைகளையும் தீர்மானிப்பதாகும். இவ்வாறு யுத்ததந்திரத்தோடு அதன் பகுதி என்கிற முறையில் பிணைக்கப் பட்டிருப்பதால் போர்த்தந்திரங்களின் இயங்கும் செயல்பாடுகளையும், விளைவுகளையும் தனித்துவம் வாய்ந்தவையாகவோ உடனடி பலனது கண்ணோட்டத்திலிருந்தோ பார்க்ககூடாது; மாறாக, யுத்ததந்திர நோக்கங்கள் மற்றும் வாய்ப்புகள் என்ற கண்ணோட்டத்திலிருந்து அணுக வேண்டும். சில சமயம் போர்த் தந்திர வெற்றி யுத்ததந்திர நோக்கங்களை அடைவதற்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தி இறுதி வெற்றியை அருகில் கொண்டு வருகின்றது. மற்றும் சில சமயம் போர்த்தந்திர வெற்றி உடனடி விளைவு என்னும் நோக்கில் பிரகாசமானதாக இருப்பினும் யுத்ததந்திர வாய்ப்புகளில் எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தி தற்காலிகமான யுத்ததந்திர ரீதியிலான பின்னடைவையும் ஏற்படுத்தக்கூடும். இன்னும் சில சமயம் போர்த்தந்திர வெற்றியை நாமே வலிந்து புறக்கணிப்பது அல்லது வலிந்து இழப்புக்கும் பின்னடைவுக்கும் உள்ளானாலும் கூட எதிர்கால நோக்கில் யுத்ததந்திர ரீதியில் அவை பலனளிக்கும்.

இந்த வரையறுப்புகள் யுத்தத்திற்கு மட்டுமல்ல, நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய எழுச்சிகள் என்ற இராணுவ யுத்ததந்திரத்துக்கு மட்டுமல்ல, அரசியலுக்கும் மக்கள் யுத்தப்பாதை என்கிற இராணுவ யுத்ததந்திரத்திற்கும் கூட பொருந்தும். அதாவது ஒரு குறிப்பிட்ட தருணத்தின் தற்காலிகமான மாறக்கூடிய நலன்களுக்கு போர்த்தந்திரங்களை கீழ்ப்படுத்தக் கூடாது; உடனடி அரசியல் விளைவுகளைக் கவனத்தில் கொண்டு, அவற்றால் வழிநடத்தப் படக்கூடாது. அவ்வாறு செய்வது உறுதியான அடித்தளமிடப்படுவதற்கு பதில் ஆகாயக் கோட்டை கட்டுவதாகும். எனவே போர்த்தந்திரங்கள் யுத்ததந்திரத்தின் நோக்கங்கள், வாய்ப்புகள் மற்றும் மார்க்சிய—லெனினிய விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட தருணத்தில், போராட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்ப மிகவும் பொருத்தமான போரிடும் முறைகளையும் வடிவங்களையும் பிரதானமாகத் தீர்மானிக்க வேண்டும்.

"போர்த்தந்திரங்கள் என்பவை இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதும் அல்லது வடிவதும், புரட்சியின் அலை ஓங்குவதும் அல்லது ஓய்வுதுமாகிய ஒப்புநோக்கில் குறுகியதான காலகட்டத்தில் தொழிலாளர் வர்க்கத்தினுடைய நடத்தைவழியைத் தீர்மானிப்பது; பழைய போராட்ட வடிவங்களுக்கும் பழைய அமைப்பு வடிவங்களுக்கும் பதிலாக புதிய போராட்ட வடிவங்களையும், புதிய அமைப்பு வடிவங்களையும் கையாள்வதின் மூலமாகவும், பழைய முழக்கங்களுக்குப் பதிலாக புதிய முழக்கங்களை வைப்பதன் மூலமாகவும் இந்த வடிவங்களை எல்லாம் இணைப்பதன் மூலமாகவும் இன்னும் பிறவும் மூலமாகவும் இந்த நடத்தைவழியை நிறைவேற்றுவதற்காகப் போராடுவது" ஆகியன அடங்கியவையாகும்.

அதாவது யுத்ததந்திர ரீதியிலான நோக்கங்களுக்கும், வாய்ப்புகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ற வகையில் முழக்கங்களை முன்வைத்து பரந்துபட்ட மக்களைப் போராடப் பொருத்தமான அரங்கங்களில் நிறுத்தவும் போராடவுமான வழிவகைகளும் சாதனங்களும், வடிவங்களும், வழிமுறைகளும் அடங்கியவையாகும்.

யுத்ததந்திரம் என்பது புரட்சியின் கட்டம் முழுவதற்குமானது; ஒரு கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்திற்கு மாறிச் செல்லும்வரை அடிப்படையில் மாறாமலிருந்து புரட்சியின் பிரதான சக்திகளையும், சேமிப்புகளையும் பயன்படுத்தி புரட்சிகர இயக்கத்தை இறுதி வெற்றிக்கு இட்டுச்செல்வதை நோக்கமாகக் கொண்டிருக்கும். புதிய ஜனநாயகப் புரட்சியின் அரசியல் குறிக்கோளாகிய ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கியெறிவதும் — அதாவது தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்தையும் அதன் அரசு எந்திரத்தையும் அடித்து நொறுக்கித் தூக்கியெறிவதும் — மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தையும் அதன் அரசு எந்திரத்தையும் நிறுவுவதும் அதன்மூலம் தேசிய மற்றும் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதுமாகும். அதாவது அரசியல் யுத்ததந்திரம் புரட்சியின் கட்டம் முழுவதற்குமான பாட்டாளி வர்க்க நலன்களை உள்ளடக்கியது. வரலாற்றில் மிகமுக்கியமான, தீவிரமான மாறுதல் ஏற்படும்போது மட்டுமே மாறக்கூடியது ஆனால் அரசியல் போர்த்தந்திரங்கள் அதைவிடக் குறுகிநோக்கங்களை அடைவதற்கானவையாகும். ராணுவப் பிரச்னைகளோடு ஒப்பிடுவதானால் ராணுவ யுத்ததந்திரத்தின் நோக்கம் ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான யுத்தம் முழுவதிலும் வெற்றி பெறுவதாக இருக்கும். அதே வேளையில் போர்த்தந்திரங்களின் நோக்கம் அதைவிடக் குறுகிய நோக்கமாகிய குறிப்பிட்டதொரு கைகலப்பு, மோதல், போரியக்க நடவடிக்கைகளில் புரட்சி அலையின் எழுச்சி அல்லது வீழ்ச்சிக்கேற்றவாறு குறிப்பிட்ட தருணத்தில் பருண்மையான நிலைமைகளுக்கேற்ற ராணுவ நடவடிக்கைகளில் வெற்றி கொள்வதாகும். இவ்வாறு ராணுவப் பிரச்சினைகள் போன்றே அரசியல் பிரச்சினைகளிலும் அரசியல் போர்த்தந்திரங்கள் குறிப்பிட்ட தருணத்தில் பருண்

மையான நிலைமைகளுக்கேற்றவாறு நிர்ணயிக்கப்படும் அரசியல் இலக்கை அடைவதும், அரசியல் ரீதியில் வென்று மேலாண்மை பெறுவதும், அதற்காக நிர்ணயிக்கப்படும் சமுதாய அரங்கில் பரந்துபட்ட மக்களை கொண்டுவந்து நிறுத்திப் போராடுவதும் நோக்கமாகக் கொண்டவைகளாகும்.

> ''போர்த்தந்திரங்கள், மற்றொருபுறம், குறிப்பிட்ட திட்டத்தின் அடிப்படையில், குறிப்பிட்ட யுத்ததந்திர காலகட்டத்திலேயே புரட்சிவெள்ளம் பெருகுவது அல்லது வடிவதால் [புரட்சி அலை ஓதுங்குவது அல்லது ஓய்வதால் — பா.அ.க.] தீர்மானிக்கப்படுகின்றன; மோதிக்கொள்ளும் சக்திகளின் உறவால், போராட்டத்தின் [இயக்கத்தின்] வடிவங்களால், இயக்கத்தின் **வீ**ச்சால், ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்தின், ஒவ்வொரு குறிப்பிட்ட மாவட்டத்தின் போராட்ட அரங்கால் தீர்மானிக்கப்படுகின்றன. மேலும் ஒரு திருப்பத்திற்கும் மற்றொன்றுக்கும் இடையிலான காலகட்டத்தின் போது இடம் மற்றும் காலத்தின் நிலைமைகளுக்கு ஏற்ப, அவற்றுக்குப் பொருத்தமாக இக்காரணிகள் மாறுவதால் யுத்தம் முழுவதற்குமானதைத் தழுவியதாக இல்லாமல் யுத்தத்தின் வெற்றி அல்லது இழப்புக்கு இட்டுச்செல்லும் தனிப்பட்ட மோதல்களுக்கானதை மட்டுமே தழுவியதாக இருப்பதால் போர்த்தந்திரங்கள் யுத்ததந்திர காலகட்டத்தின் போக்கில் பலமுறை மாறும் [மாறக்கூடியவை]. ஒரு யுத்ததந்திர காலகட்டம் ஒரு போர்த்தந்திர காலகட்டத்தை விட நீண்டது''. [ஸ்டாலின், தொகுதி 5, பக்கம் 65]

இதன் பொருள் என்னவென்றால் புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதைப் பொருத்து, புரட்சியின் அலை ஓங்கி வீசுவது அல்லது ஓய்ந்துபோவதைப் பொருத்து போர்த்தந்திரங்கள் மாறும். ஒரே போர்த்தந்திரம் யுத்ததந்திர காலகட்டம் முழுவதும் நீடிக்காது. புரட்சியின் கட்டம் முழுவதும் யுத்ததந்திரப் பொதுத்திசைவழியும், பொதுப்பாதையும், சமுதாய அரங்கில் சக்திகளைப் பிரித்து ஒதுக்கியிருக்கும் பொதுத்திட்டம் மாறாமலிருக்கும் அதே வேளையில் பலமுறை போர்த்தந்திரங்கள் மாறும். இதையே ருஷியப் புரட்சி, சீனப் புரட்சி உட்பட தேசிய, சர்வதேசியப் புரட்சிகர அனுபவங்கள் காட்டுகின்றன.

ருஷியப் புரட்சியிலே, சான்றாக, ஜாரிசத்துக்கெதிரான புரட்சியின் முதற்கட்டத்தின்போதே, போர்த்தந்திரங்கள் பல தடவை மாறின; ''1903 லிருந்து 1905 வரையிலான காலகட்டத்தில் தாக்குதல் போர்த்தந்திரத்தைப் பின்பற்றியது. ஏனென்றால் புரட்சி வெள்ளம் பெருகிக் கொண்டிருந்தது, இயக்கம் மேல்மட்டத்தை நோக்கி எழுந்தது. போர்த்தந்திரம் இந்த உண்மையிலிருந்து தொடங்கி முன்னேற வேண்டியிருந்தது. அதற்கேற்றவாறு, புரட்சி வெள்ளம் பெருகுவதன் தேவைகளுக்குப் பொருத்தமாக போராட்ட வடிவங்கள் புரட்சிகரமானவையாக இருந்தன'' என்று கூறும் ஸ்டாலின் அக்காலகட்டத்தில்

பின்பற்றப்பட்ட போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களையும் அவற்றின் புரட்சிகரத் தன்மையையும் சுட்டிக்காட்டினார். "1907 லிருந்து 1912 வரையிலான காலகட்டத்தில் கட்சி பின் வாங்கும் போர்த்தந்திரத்தைக் கடைப்பிடிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது; ஏனென்றால் புரட்சிகர இயக்கத்தில் ஒரு வீழ்ச்சியை — புரட்சிவெள்ளம் வடிவதை — நாம் அனுபவித்தோம்: போர்த்தந்திரம் இந்த அவசியமான உண்மையை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அதற்கேற்றவாறு போராட்ட வடிவங்களைப் போலவே அமைப்பு வடிவங்களும் மாறின" என்று கூறும் ஸ்டாலின் அக்காலகட்டத்தில் பின்பற்றப்பட்ட போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களையும் அவற்றின் தற்காப்புத் தன்மையையும் சுட்டிக்காட்டினார். "புரட்சியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டம் பற்றியும் இதையே தான் சொல்லவேண்டும். இக்கட்டங்களின் போதும் போர்த்தந்திரங்கள் டஜன் கணக்கான தடவைகள் மாறின; அதே சமயம் யுத்ததந்திரத் திட்டங்கள் மாறாமலிருந்தன." [ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள், பக்-83-84].

ஒரு குறிப்பிட்ட புரட்சிகர கட்டத்தின் யுத்ததந்திர திட்டம் மாறாமலிருக்கும் போதே போர்த்தந்திரங்கள்—பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்றவாறு புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதற்குப் பொருத்தமாக ஒவ்வொரு திருப்பத்துக்கும் ஏற்றவாறு—மாறுதலடைகின்றன என்ற மார்க்சிய—லெனினிய விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும், நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய எழுச்சியை யுத்ததந்திரமாகக் கொண்ட ருஷியா போன்ற முதலாளித்துவ வளர்ச்சியுடைய நாடுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் மக்கள் யுத்தப் பாதையை யுத்ததந்திரமாகக் கொண்ட சீனா, இந்தியா போன்ற காலனிய, அரைக்காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளுக்குப் பொருந்தாது என்றும் 'இடது' சந்தர்ப்பவாதிகள் கூறுகின்றனர். இந்தக் கூற்று சரியல்ல என்பதற்குச் சான்றாக சீனப் புரட்சியின் படிப்பினைகளை எடுத்துக் கொள்ளுவோம்.

அரைக்காலனிய — அரை நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு எதிரான ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியின் தன்மையுடைய போக்கின் சாராம்சத்தில், அடிப்படையில் மாறுதல் ஏற்படாத அதே சமயம் சீனப்புரட்சியின் ஒரே கட்டத்தில்—அதன் வளர்ச்சிப் போக்கில் பலதடவை இடைக கட்டங்கள் மாறின. 1911 புரட்சியின் தோல்வி, வடக்கில் யுத்த பிரபுக்களின் ஆட்சி நிலைநாட்டப்படுதல், முதல் தேசிய ஐக்கிய முன்னணி உருவாதல் மற்றும் 1924-27 புரட்சி; ஐக்கிய முன்னணி உடைவதும், எதிர்ப்புரட்சியின் பக்கம் முதலாளித்துவ வர்க்கம் புரட்சியை கைவிட்டு ஓடிவிடுவதும் விவசாயப் புரட்சி யுத்தமும்; இரண்டாவது தேசிய ஐக்கிய முன்னணி நிறுவப்படுவதும், ஜப்பானுக்கெதிரான எதிர்ப்பு யுத்தமும்; மீண்டும் உள்நாட்டுப் போரும் புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றியும் ஆகிய முக்கியமான போக்குகள் அடங்கிய நான்கு பெரும் இடைக்கட்டங்களைக் கொண்டிருந்தது. அவற்றில்

1924-27 முதல் மாபெரும் புரட்சி, 1927 37 மாபெரும் விவசாயப் புரட்சி யுத்தம், 1937—45 ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் மற்றும் இறுதியான 1945—49 உள்நாட்டுப்போர் ஆகிய நான்கு இடைக்கட்டங்களில் சீனப்பொதுவுடைமைக் கட்சி முக்கிய பாத்திரமாற்றியது. ஒவ்வொரு இடைக்கட்டத்திலும் யுத்ததந்திர ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த போர்த்தந்திரங்களை வகுத்துச் செயல்படுத்தியதோடு ஒவ்வொரு இடைக்கட்டத்திலேயும் கூட புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதைப் பொருத்து—புரட்சி அலை ஓங்குவது அல்லது ஓய்வதைப் பொருத்து—குறிப்பிட்ட பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்றவாறு புதிய போர்த்தந்திரங்கள் வகுக்கப்பட்டன.

சீனாவின் புதிய ஜனநாயகப் புரட்சியினுடைய முதல் இடைக்கட்டமான 1921—27 குறிப்பாக 1924 27 மாபெரும் முதற் புரட்சிகர யுத்தகாலகட்டம்: மக்களுடைய மூன்று புரட்சிகரமான லட்சியங்களை அரசியல் அடிப்படையாகக் கொண்ட கோமிண்டாங், பொதுவுடைமைக் கட்சி மற்றும் பிற புரட்சிகர வர்க்கங்களின் முதல் தேசிய ஐக்கிய முன்னணி—அதாவது தொழிலாளர்கள், விவசாயிகள், நகர்ப்புற குட்டி முதலாளிகள் மற்றும் சீன முதலாளிகள் ஆகிய சமுதாய வர்க்கங்கள் அடங்கிய ஐக்கிய முன்னணியை—அச்சாணியாகக் கொண்ட நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சி அலை ஓங்கிய அல்லது புரட்சிகர இயக்க வெள்ளம் பெருகிய காலக்கட்டம். வெற்றிகரமான வடதிசைப் படையெடுப்பு, நாடு தழுவிய தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் இளைஞர்களது எழுச்சி உட்பட பருண்மையான நிலைமைகளுக்குப் பொருத்தமான போர்த்தந்திரம் பொதுவுடமை அகிலத்தின் வழிகாட்டுதலில் வகுக்கப்பட்டது. ஆனால் சீனப்புரட்சியின் விசேஷ அம்சங்களில் ஒன்றும், சாதகமான அம்சங்களில் ஒன்றுமான ஆயுதந்தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சியுடன் போரிடுகிறது என்பதையும் அதனால் சீனாவில் யுத்தம் பிரதான போராட்ட வடிவமாகவும் ராணுவம் பிரதான அமைப்பு வடிவமாகவும் இருக்கிறது என்பதையும் இவற்றின் அதிமுக்கியத்துவத்தையும் உணரவோ, தயாரிக்கவோ, ஆயுதப்படைகளை அமைப்பாக்குவதை பாரதூரமாக எடுக்கவோ தவறியது. ராணுவ யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திரங்களை கற்பதில் ஈடுபடாமல், அலட்சியம் செய்து மக்கள் திரள் இயக்கத்துக்கு மட்டுமே அழுத்தங்கொடுத்தது. இவ்வாறு முற்றிலும் சரியான முழுமையான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களை வகுத்து வரையறுக்கத் தவறி, சியாங்-கே-ஷேக் எதிர்ப்புரட்சிக்குடைகவிழ்ப்பு நடத்தியபொழுது எதிர்கொள்ள இயலாமற் போயினும் இக்காலகட்டத்திற்கான போர்த்தந்திரங்கள் புரட்சி அலையின் எழுச்சிக்கு, புரட்சி வெள்ளம் பெருகுவதற்கு ஏற்றவாறு வகுக்கப்பட்டன. மாவோவின் புதிய ஜனநாயகம், கம்யூனிஸ்டை அறிமுகம் செய்வது, யுத்தமும் யுத்ததந்திரமும் மற்றும் கட்சி வரலாறு பற்றிய தீர்மானம்: ஒரு இணைப்பு ஆகிய கட்டுரைகளில் இவற்றை அறியலாம்.

சீனாவின் புதிய ஜனநாயகப் புரட்சியினுடைய இரண்டாவது இடைக்கட்டமாகிய 1927 37 மாபெரும் விவசாயப் புரட்சி—உள்நாட்டு யுத்த காலகட்டம்: முதல் புரட்சிகர காலகட்டத்தின் இறுதியில் சீனப்பெரு முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்புரபுத்துவ சக்திகளின் எதிர்ப்புரட்சி முகாமில் சேர்ந்து விட்டதாலும், தேசிய முதலாளி வர்க்கம் அதன் பின்னால் வால்பிடித்துச் சென்றதாலும் புரட்சி முகாமில் ஒரு முக்கியமான மாறுதல் நடந்தேறியது; முன்பு புரட்சி முகாமில் இருந்த நான்கு வர்க்கங்களில் மூன்று மட்டுமே—அதாவது தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் புரட்சிகர புத்திஜீவிகள் உட்பட பிற குட்டி முதலாளிகள் மட்டுமே—தங்கியிருக்க சீனப் பொதுவுடமைக்கட்சி மட்டுமே பரந்துபட்ட மக்களுக்குத் தலைமையளித்து வழிநடத்திய ஒரு புதிய காலகட்டத்தில் சீனப்புரட்சி நுழைந்தது. 1927 சியாங்-கே-ஷேக் எதிர்ப்புரட்சி குடைகவிழ்ப்பிலிருந்து விவசாயப் புரட்சி உள்நாட்டுப்போர் முடியும் வரையிலான குறிப்பாக 1931-35 காலகட்டங்களில் சீனப்பொதுவுடமைக் கட்சியில் மார்க்சிய-லெனினிய விரோத யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திர விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளுக்கெதிராக நடந்த உக்கிரமான சித்தாந்தப் போராட்ட படிப்பினைகளிலிருந்து யதார்த்த பூர்வமாகக் கற்க விரும்பும் எவரும் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய எமது சரியான அணுகுமுறையை மறுக்க முடியாது. சீனப்பொதுவுடமைக் கட்சியில் நடந்த 1942 சீர்த்திருத்த இயக்கம், மற்றும் 1942—44 கட்சி வரலாறு பற்றிய விவாதம், இவற்றின் முடிவாக 1945ல் நிறைவேற்றப்பட்ட 'நமது கட்சி வரலாற்றில் சில பிரச்சினைகள் பற்றிய தீர்மானம்' ஆகியவை இவ்வுண்மைகளைத் தெளிவாகத் தொகுத்தளிக்கின்றன.

''எல்லாப் பிரச்சினைகளையும் ஆய்வு பூர்வமாக நடத்துக; எல்லாவற்றையும் மறுதலிக்காதே. சான்றாக நான்காவது பிளீனக்கூட்டத் தொடரிலிருந்து சுன்யிகூட்டம் வரையிலான [1931-35] காலகட்டத்தில் மத்தியத் தலைமையின் வழிபற்றிய பிரச்சினைகள் இரு அம்சங்களிலிருந்து ஆய்ந்தறியப்பட வேண்டும். இந்த காலகட்டத்தின்போது மத்திய தலைமை உறுப்பு மேற்கொண்ட அரசியல் போர்த்தந்திரங்கள், ராணுவப் போர்த்தந்திரங்கள் மற்றும் ஊழியர் கொள்கை ஆகியவை ஒரு புறம் அவற்றின் பிரதான அம்சங்களில் தவறானவை என்பது சுட்டிக் காட்டப்படவேண்டும்; ஆனால் மற்றொருபுறம் சியாங்-கே-ஷேக்கை எதிர்ப்பது, விவசாயப் புரட்சியை நிறைவேற்றுவது, செம்படையின் போராட்டம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளில் தவறிழைத்த தோழர்களுக்கும் நமக்குமிடையில் வேறுபாடுகள் கிடையாது. மேலும் போர்த்தந்திர தரப்பையும் ஆய்ந்தறிவது அவசியமாகும். நிலப்பிரச்சினையில் நிலப்பிரபுக்களுக்கு நிலமளிப்பதில்லை; பணக்கார விவசாயிகளுக்கு மோசமான நிலமளிப்பது என்ற அதீத இடது கொள்கையில் அவர்களது தவறு அடங்கியிருந்தது; ஆனால் நிலப்பிரபுக்களது நிலங்களைக் கைப்பற்றி சிறிதளவு நிலமுடைய அல்லது

நிலமற்ற விவசாயிகளுக்கு வினியோகிப்பதில் இத்தோழர்கள் நம்முடன் ஒருவராக இருந்தார்கள்'' [மாவோ, தேர்ந்த படைப்புகள் பக்-306]

சாராம்சமாக இதன் பொருள் என்னவென்றால் அடிப் படைப் பிரச்சினைகளில் ஒன்றுபட்டாலும், தவறின்றி இருப் பினும் அரசியல் மற்றும் ராணுவப் போர்த்தந்திரங்களில் வேறு பட்டதாகவும் தவறுடையதாகவும் இருந்தவைகளை ஆய்ந்தறிய வேண்டும் என்று வலியுறுத்துகிறார் மாவோ. இந்த அடிப்படை யில் சீனப்புரட்சியினுடைய இக்கால கட்டத்தின் யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய சிந்தாந்தப் போராட்டப் படிப்பினைகளைப் பின்வருமாறு தொகுத்தனர்.

1927 சியங்-கே-ஷேக்கின் எதிர்ப்புரட்சி குடைகவிழ்ப்பைத் தொடர்ந்து நடந்த கட்சியின் ஆகஸ்ட் 7 மத்தியக் கமிட்டியின் அவசரக் கூட்டம் சென்-து-சியுவின் வலது சந்தர்ப்பவாத சரணடைவுப் பாதையை முறியடித்து பொதுவாக விவசாயப் புரட்சி, கோமிண்டாங் படுகொலையை ஆயுதந்தாங்கி எதிர்ப்பது, பரந்துபட்ட மக்கள் மற்றும் கட்சியின் புரட்சிகரப் போராட் டத்தை தொடர்வது என்று முடிவெடுத்திருப்பினும் புரட்சி வெள்ளம் வடிவதை—புரட்சி அலை ஓய்வதை—சரியாக மதிப்பீடு செய்து, அத்தருணத்திற்கு ஏற்றவாறு பருண்மையான நிலைமை களுக்குப் பொருத்தமான போர்த்தந்திரம் வகுக்கத் தவறியது.

''ஆனால் வலது தவறுகளை முறியடிப்பதில் கூட்டம் 'இடது' தவறுகளுக்கு வழிவிட்டது. அரசியல் ரீதியில் புரட்சி கர அந்தஸ்துகளை (நிலைப்பாடுகளை) பேணிப்பாதுகாப்பது மற்றும் ஒரு திட்டமிட்ட வகையில் புரட்சிகர சக்திகளைத் திரட்டுவது ஆகியவற்றின் பொருட்டு வெவ்வேறு ஸ்தலங் களில் வெவ்வேறு நிலைமைகளுக்கு ஏற்றவாறு அந்த சம யத்தில் பொருத்தமான எதிர்த்தாக்குதல் அல்லது அவசி யமான போர்த்தந்திர பின்வாங்குதலை அமைப்பாக்கித் திரட்டவேண்டியதை உணரத் தவறியது. அதற்குப் பதில் அதிதீவிர சாகசவாதத்துக்கும், சண்டைவாதத்துக்கும் (குறிப்பாக தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் தள் ளியது) ஆகியவற்றை நோக்கிய போக்குகளை பொறுத்துக் கொண்டது, இணைத்துக்கொண்டது'' [மாவோ, ஷி நூல், பக்-322]

இப்போர்த்தந்திர தவறுகள் காரணமாக எதிரியின் பலம், புரட்சியின் தோல்விக்குப் பின்னர் பரந்துபட்ட மக்களது நிலைமை ஆகியவற்றைப் பற்றி அக்கரையின்றி, சிரமமான நெறிப்படுத்தப்பட்ட பின்வாங்குதலைத் திரட்ட வேண்டியதை உணரத் தவறியது. அதுமட்டுமின்றி மிக அற்ப எண்ணிக்கை யிலான கட்சியினரை நாடு முழுவதுமான உள்ளூர் எழுச்சிக்கான போராட்டங்களில் இறக்கியது. இதன் காரணமாக பெரும் இழப்புக்குள்ளாகி நாடுமுழுவதும் நடைமுறை வேலைகள் யாவும் நின்று போயின. இங்கு மக்கள் யுத்தப்பாதை என்ற ராணுவ

யுத்ததந்திரத்துக்குப் புறம்பான. நாடு முழுவதுமான உள்ளூர் ஆயுதந்தாங்கிய எழுச்சி என்ற போராட்ட வடிவத்தில் மட்டு மல்ல புரட்சி வெள்ளம் வடிவது—புரட்சி அலை ஓய்வது—என்ற பருண்மையான நிலைமைக்குப் பொருந்தாத தாக்குதல் தன்மை யுடைய போர்த்தந்திரம் முன்வைக்கப் பட்டதிலும் முக்கிய மான தவறு இருந்தது. இக்காலகட்டத்தில் ஏற்பட்ட இடது சந்தர்ப்பவாத தவறுகள் அனைத்திலும் இதைக் காணலாம்.

1927—28 காலகட்ட இடது சந்தர்ப்பவாதத் தவறுகளை ஜூலை 1928 ஆறாவது தேசிய காங்கிரசு அடிப்படையில் திருத்தியது. புரட்சியின் அடிப்படை நிலைப்பாடுகளை உறுதி செய்த "காங்கிரசு நிகழ்கால அரசியல் சூழ்நிலை புரட்சி அலையின் இரு எழுச்சிகளுக்கு [புரட்சிகர இயக்கத்தின் இரண்டு வெள்ளப் பெருக்குகளுக்கு மா.அ.கு.] இடையிலான ஒரு இடைவேளை என்றும் புரட்சியின் அலை ஏற்றத்தாழ் வானது என்றும் அந்த சமயத்தில் கட்சியின் பொதுக்கடமை தாக்குதல் தொடுப்பது அல்லது ஆயுதந்தாங்கிய எழுச்சி களுக்குத் திரட்டுவது அல்ல, மாறாக, பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பது என்றும் சரியாகச் சுட்டிக் காட்டியது...... இடைப்பட்ட வர்க்கங்களின் இரட்டைத் தன்மை மற்றும் பிற்போக்கு சக்திகளுக்கு இடையிலான முரண்பாடுகள் ஆகி யன பற்றி சரியான மதிப்பீடும் கொள்கைகளும் பெறத் தவ றியது. மாபெரும் புரட்சியின் தோல்விக்குப் பின்னர் ஒரு சிரமமான நெறிப்படுத்தப்பட்ட போர்த்தத்திரப் பின் வாங்குதலுக்கான கட்சியின் அவசியத்தையும் கிராமப்புறத் தளப்பிரதேசங்களின் அவசியத்தையும், ஜனநாயகப் புரட்சி யின் நீண்ட காலதன்மையையும் அவசியமான அளவு புரி தலையும்கூட பெறத்தவறியது.''] மாவோ, ஷெ நூல், பக்-323]

அன்றைய காலகட்ட அரசியல் சூழ்நிலைமைகளை கணிப்பதி லும் வலது மற்றும் இடது சந்தர்ப்பவாதத் தவறுகளை முறி யடிப்பதிலும் சீனப் பொதுவுடமைக் கட்சியின் ஆறாவது தேசிய காங்கிரசு சரியாக முடிவுகள் எடுத்திருப்பினும் போர்த்தந்திரத் தின் மிக முக்கியமான கூறுகளான அரசியல் நடத்தை வழி, மறை முக நேரடி சேமிப்புகளைக் கையாள்வது, போர்த்தந்திரத்தின் தன்மை—கிரமமான நெறிப்படுத்தப்பட்ட பின்வாங்குதல் தன்மை— இவற்றுக்குப் பொருத்தமான போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் மற்றும் முழக்கங்களையும் யுத்ததந்திர ரீதியில் மக்கள் யுத்தப் பாதையின் கோட்பாடுகளையும் பிர யோகிக்கத் தவறியது. இருப்பினும் காங்கிரசின் சரியான அம்சங் களையும் மார்க்சிய—லெனினிய அடிப்படையில் கட்சியையும் படையையும் ஒரு அரசியல் இராணுவ சக்தியாக மாவோ வளர்த்தெடுத்தார்.

ஆனால் 1929 இரண்டாவது பாதியிலிருந்து 1930 முதற் பாதி வரையிலான லிலிசானால் தலைமை தாங்கப்பட்ட 'இடது' சந்தர்ப்பவாதப் பாதையினர் சியாங்-கே-ஷேக்கும்

மாகக் கருதியது. அந்த அளவு சீனத்தில் புரட்சிகர நெருக்கடி ஒரு புதிய உயர்ந்த கட்டத்தை அடைந்துவிட்டதாக —இடது சந்தர்ப்பவாதத்தால் நேர்ந்த பின்னடைவுகளையும், கோமிண்டாங் பகுதியில் நிலவிய ஜப்பானிய எதிர்ப்பு ஜனநாயக மக்கள் இயக்கங்களையும் அலட்சியப்படுத்தி—ஒரு உடனடியான நாடு தழுவிய வெற்றிக்கான புரட்சிகர நிலைமை நிலவுவதாக இறுதிப் போராட்டத்தில் இறங்கியது. எனவே மூன்றாவது இடது சந்தர்ப்பவாதம் பெரும் சேதங்களையும், தோல்விகளையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்தியது.

1935 ஜனவரி, சுன்யியில் நடந்த மத்தியக் கமிட்டியின் தலைமைக்குழுவின் விரிவாக்கப்பட்ட கூட்டம் மாவோ தலைமையில் அரசியல், இராணுவ, அமைப்புத் தவறுகளைக் களைந்தது. 1) புரட்சியின் கடமைகள் மற்றும் புரட்சியில் வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகள் ஆகிய பிரச்சினையிலும் 2) புரட்சிகர யுத்தம் மற்றும் புரட்சிகரத் தளப்பிரதேசங்கள் ஆகிய பிரச்சினைகளிலும் அரசியல் ரீதியில் பல்வேறு இடது சந்தர்ப்பவாதத் தவறுகள் திருத்தபட்டன. 1927-35 வரையில் இவ்விரு தவறுகளுடன் முக்கியமான தவறுகளாக பின்வருவனவற்றை சீனப் பொதுவுடமைக் கட்சியின் ஆறாவது மத்தியக் கமிட்டியின் ஏழாவது பிளீனக்கூட்டத் தொடர் 1945ல் சுட்டிக்காட்டியது:

> "பல்வேறு 'இடது சாரி' பாதைகளும் தாக்குதல் மற்றும் தற்காப்புக்கான போர்த்தந்திரங்களுக்கு வழிகாட்டுவதில் கூட தவறிழைத்தன. போர்த்தந்திரங்களுக்கு சரியான வழிகாட்டுதல் தருவதற்கு தோழர் ஸ்டாலின் சுட்டிக்காட்டியதைப் போலவே நிலைமையைப் பற்றிய சரியான ஆய்வு [வர்க்கங்களுக்கிடையே நிலவும் உறவுகளைப் பற்றிய சரியான ஒரு மதிப்பீடு. இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதும் வடிவதும்— புரட்சி அலை ஓங்குவதும் ஓய்வதும் — பற்றிய ஒரு சரியான கணிப்பு] தேவை; அவற்றை அடிப்படையாகக் கொண்ட சரியான போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் தேவை; மேலும் எதிரி முகாமில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு பிளவையும் சரியாகப் பயன்படுத்துவதும், நேச சக்திகளைக் கண்டுகொள்ளும் திறமையும் தேவை. அதற்கு மிகச்சிறந்த மாதிரிகளில் ஒன்றே சீனப் புரட்சி இயக்கத்தில் மாவோ வழிகாட்டியவை. 1927-ல் புரட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பின், நாடு முழுவதும் புரட்சிஅலை ஓயும் கட்டத்தில் [புரட்சி இயக்கத்தின் வெள்ளம் வடியும் கட்டத்தில் — மா.அ.க.] உள்ளது என்றும் தேசம் முழுவதும் எடுத்துக் கொண்டால் எதிரி நம்மை விட பலமாக உள்ளான் என்றும் அதிதீவிரத் தாக்குதல்கள் தவிர்க்க இயலாமல் தோல்விக்கு கொண்டுசெலலும் என்றும் ஆனால் பிற்போக்கு ஆட்சிகளுக்குள்ளே முடிவற்ற பிளவுகளும் யுத்தங்களும் நிலவுகின்ற சமயத்தில் புரட்சிக்கான நிர்ப்பந்தம் மக்களிடையே மீண்டும் உயிர்பெற்று படிப்படியாக வளர்ந்து வருகின்ற சமயத்தில் முதல்பெரும் புரட்சிப் போராட்டத்தில் அனுபவம் பெற்றுள்ள மக்களும் குறிப்பிடத்தக்க பலம்கொண்ட

செம்படையும், சரியான கொள்கைகளை உடைய பொது வுடமைக் கட்சியும் உள்ள கட்டத்தில் 'வெள்ளைப் பிரதேசங் கள் சுற்றியும் இருக்கும்போதே அதன் நடுவே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறுபகுதிகள் சிகப்பு அரசியல் அதிகாரத்தின் கீழ்' உதிப்பது சாத்தியமே என்றும் தோழர் மாவோ சரியாகச் சுட்டிக்காட்டினார். மேலும் அவர், ஆளும் வர்க்கங்களுக்குள்ளேயே பிளவுகள் உள்ள சமயத்தில் சிகப்பு அரசியல் அதிகாரத்தின் விரிவு 'ஒப்பீட்டளவில் அதி தீவிரமாகவும், ராணுவ நடவடிக்கைகளினால் கைப்பற்றப் பட்ட பரப்பு ஒப்பீட்டளவில் பெரியதாக இருக்கமுடியும்; ஆனால் ஆளும் வர்க்கங்களுக்குள் ஓரளவுக்குப் பிளவின்றி உறுதியாக இருக்கும்பொழுது சிகப்பு அரசியல் அதிகாரத் தின் விரிவு ஒப்பீட்டளவில் படிப்படியாகவே முன்னேற்ற மாக இருக்கும் என்றார். இந்த மாதிரியான சமயத்தில், ராணுவ விஷயத்தில் உள்ள மோசமான நடவடிக்கை என்ன வென்றால் தீவிரமான முன்னேற்றத்திற்காக நமது சக்தி களைப் பிரிப்பதும், ஸ்தல வேலையில் [நிலத்தை விநியோ கித்தல், அரசியல் அதிகாரத்தை நிறுவுதல், கட்சியை விரிவு படுத்துதல், தளஆயுதப் படைகளைக் கட்டுதல்] உள்ள மோசமான நடவடிக்கை என்னவென்றால் நம்முடைய திறமை மிக்க ஊழியர்களை சிதறடிப்பதும், மத்திய மாவட் டங்களில் உறுதியான அடிப்படையைக் கட்டாமல் புறக் கணிப்பதும் ஆகும் என்றார்.

"ஒரே காலகட்டத்தில் கூட எதிரிகளின் பலத்தில் ஏற் படும் மாறுதல்களுக்கு ஏற்ப நம்முடைய போர்த்தந்திரங் கள் வேறுபடும்; எனவே ஹுனான்-கியாங்சி எல்லைகளில் நம்மிடமுள்ள பகுதிகளில் 'ஒப்பீட்டளவில் பலமான ஆட்சி உள்ள ஹுனானுக்கு எதிராக தற்காப்பு நிலையையும், ஒப் பீட்டளவில் பலவீனமான ஆட்சியுள்ள கியாங்சிக்கு எதி ராகத் தாக்கும் நிலையையும்' நாம் கைக்கொள்ளவேண்டும். பிறகு, ஹுனான்-கியாங்சி எல்லையிலுள்ள செம்படை ஃபியுக்கி-யான்-கியாங்சி எல்லையை அடைந்தபோது 'கியாங்சி மாகாணத்திற்கும் மேற்கு செக்கியாங் மாகாணங் களுக்காகவும் போரிடுவது' என்ற திட்டம் முன்வைக்கப்பட் டது. பல்வேறு எதிரிகளின் நலன்கள் மீதும் புரட்சி உண் டாக்கிய பல்வேறு பாதிப்பு நம்முடைய மாறுபட்ட பல போர்த்தந்திரங்களைத் தீர்மானிப்பதற்கு முக்கியமான தொரு அடிப்படையாகும். 'எதிர்ப் புரட்சிக்குள் நிலவும் ஒவ்வொரு முரண்பாட்டையும் பயன்படுத்திக்கொண்டு அதற் குள்ளே உள்ள பிளவுகளை விரிவுபடுத்த செயல் துடிப்பான நடவடிக்கைகளை எடு' என்றும் 'தனிமைப்படுதல் என்ற கொள்கையை எதிர்' அனைத்து சாதகமான கூட்டாளிகளை யும் வென்றெடுக்கும் கொள்கையை உறுதிப்படுத்து' என்றும் எப்போதும் தோழர் மாவோ கூறிவந்தார். 'முரண்பாடு களைப் பயன்படுத்திக்கொள், பலரை வென்றெடு, சிலரை எதிர், நமது பகைவர்களை ஒவ்வொருவராக நசுக்கு' என்ற போர்த்தந்திரக் கொள்கைகள் 'சுற்றிவளைத்து அழித்து

லுக்கு' எதிராக நடத்தப்பட்ட போரியக்கங்களிலும், சிறப்பாக சுன்யி கூட்டத்துக்குப் பின் நீண்ட பயணத்திலும், ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியிலும் தோழர் மாவோவால் மேதாவிலாசத்துடன் பிரயோகிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டன. வெள்ளைப் பிரதேசங்களில் உள்ள வேலை பற்றிய தோழர் லியூ-ஷோ-சியின் போர்த்தந்திரக் கருத்துக்கள் முன்மாதிரிகளாகும். வெள்ளைப் பிரதேசங்களில், எதிரியின் பலத்துக்கும் நம்முடைய பலத்துக்கும் இடையேயுள்ள வெளிப்படையான வேறுபாட்டைச் சரியாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு 1927 புரட்சியில் ஏற்பட்ட தோல்விக்குப் பின் குறிப்பாக நகரங்களில் நம்முடைய பின்வாங்குதல் மற்றும் தற்காப்பு ஆகியவற்றைத் திட்டமிட்ட அமைப்பு ரீதியாகச் செய்தல் மற்றும் சூழலும் நிலைமைகளும் நமக்கு பாதகமாக உள்ள இந்த சமயத்தில், தற்காலிகமாக எதிரியுடன் தீர்மானகரமான மோதலில் ஈடுபடுவதைத் தவிர்த்து எதிர்காலத்து புரட்சிகர தாக்குதல்களுக்கும், தீர்மானகரமான மோதல்களுக்கும் தயாரிப்பது' என்ற கருத்துக்களை தோழர் லியு-ஷோ-சி முன்வைத்தார். 1924-27 புரட்சிக் காலகட்டத்தில் வெளிப்படையாக இருந்த கட்சி அமைப்புகளை தலைமறைவு அமைப்புகளாகப் படிப்படியாக உறுதியுடன் மாற்றியமைக்க வேண்டும் என்றும் மக்கள்திரள் அமைப்புகளிடையே கட்சியின் தலைமறைவு அமைப்புகள் தங்களுடைய பலத்தை நீண்ட காலத்திற்கு மறைத்து வைத்துக்கொண்டு வேலை செய்வதற்காக மக்கள் திரள் வேலைகளில் 'சட்டபூர்வமான வழிகளை எவ்வளவு தூரத்துக்குப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு தூரத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளும் பொழுதே பரந்துபட்ட மக்களிடையே ஆழமாகச் செல்லவும், மக்கள்திரளின் சக்திகளை ஒன்றுபடுத்தவும், பலப்படுத்தவும், அவர்களின் அரசியல் உணர்வை உயர்த்தவும்' வேண்டும் என்று கூட அவர் வழிகாட்டினார்.

"இடம், காலம், அங்குள்ள மக்கள் திரளின் அரசியல் உணர்வு மட்டம் ஆகிய சூழல், குறிப்பிட்ட நிலைமைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப அங்குள்ள பரந்துபட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளும் சரியான முழக்கங்களையும், கோரிக்கைகளையும், போராட்ட வடிவங்களையும் முன்வைத்து மக்கள் திரள் போராட்டங்களை இயக்க வேண்டும். பிறகு, போராட்ட காலத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப, மக்கள் திரள் போராட்டத்தைப் படிப்படியாக ஒரு உயர்ந்த கட்டத்துக்கு உயர்த்த வேண்டும்' அல்லது 'எவ்வளவு தூரத்துக்குச் செல்ல முடியும் என்ற தெளிவுடன் தற்காலிகமாகப் போராட்டத்தை நிறுத்தி ஒரு உயர்ந்த கட்டத்தில் ஒரு பெரிய அளவில் நடைபெறப் போகும் அடுத்த போராட்டத்திற்கு தயார்படுத்த வேண்டும்'.

"தலைமை இவைகளை மக்கள்திரள் போராட்டங்களில் கடைபிடிப்பது அவசியம் என்று லியூ-ஷோ-சி கருதினார்.

''எதிரியின் உள்முரண்பாடுகளை பயன்படுத்திக் கொண்டு தற்காலிக கூட்டாளிகளை வென்றெடுப்பது பற்றிய பிரச்சினைகளில்—

அந்த முரண்பாடுகளை உச்ச கட்டத்திற்கு கொண்டு சென்று அவர்களைப் பிளவுபடுத்தி நம்மோடு ஒத்துழைக்கக் கூடிய அந்த முகாமில் இருக்கும் சக்திகளோடு அல்லது இன்னும் நமது பிரதான எதிரியாக மாறாதவர்களோடு இணைந்து ஒரு தற்காலிக கூட்டை உருவாக்க வேண்டியது அவசியம்' என்றும்,

'நம்மோடு ஒத்துழைக்க விரும்பும் கூட்டாளிகளுக்கு அவசியமான சலுகைகளைத் தந்து நம்மோடு இணைந்து பொது நடவடிக்கையில் பங்குகொள்ள அவர்களைத் தூண்டுவதும், பிறகு அவர்களை நமது செல்வாக்கின் கீழ் கொண்டு வந்து அவர்களைப் பின்பற்றும் மக்களை வென்றெடுக்க வேண்டியதும் அவசியம்' என்றும் அவர் கூறுகிறார்.

''1935 டிசம்பர் 9 இயக்கத்தின் வெற்றி வெள்ளைப் பிரதேசங்களின் வேலைமுறை பற்றிய இந்தப் போர்த்தந்திர நெறிமுறைகளின் சரியான தன்மையை நிரூபித்தது. இந்த சரியான போர்த்தந்திரங்களுக்கு முரணாகப் பல்வேறு 'இடது' சாரிப் பாதைகளை மேற்கொண்ட தோழர்கள் எதிரியின் சக்திகளுக்கும், நம்முடைய சக்திகளுக்கும் இடையேயுள்ள பலாபலத்தை யதார்த்தமாக ஆய்ந்து பார்க்கத் தவறினர். தகுந்த போராட்ட வடிவங்களையும், அமைப்பு வடிவங்களையும் மேற்கொள்ளத் தவறினர்; எதிரியின் உள் முரண்பாடுகளை அவர்கள் அங்கீகரிக்கவில்லை அல்லது அவைகளின்பால் போதுமான கவனம் செலுத்தவில்லை. எனவே அவர்கள் தற்காப்பு நிலையில் இருக்க வேண்டிய சமயத்தில், தாக்கும் நிலை என்று சொல்லிக் கொள்ளும் பாதையை கண்மூடித்தனமாகச் செயல்படுத்தியதால் தோல்வியுற்றனர். அத்தோடுகூட தாக்கும் நிலை வந்த சமயத்தில் ஒரு வெற்றிகரமான தாக்குதலை எவ்வாறு தொடுப்பது என்று தெரியாத காரணத்தினால் அப்போதும் அவர்கள் தோல்வியுற்றனர்'' [மாவோ, தேர்ந்த படைப்புகள், பக்கம் 339-42].

இவ்வாறு சீனப்புரட்சியிலிருந்து யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திரப் படிப்பினைகளைக் கற்கும் போது சீன ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான பிளவும் மோதலும் போரும் மட்டுமே முன்னேறித் தாக்குதலுக்கான புரட்சி அலை ஓங்கி வீசுவதற்கான—புரட்சி இயக்க வெள்ளம் பெருகுவதற்கான—அடிப்படைகளைக் கொள்ள வேண்டுமென இடது, வலது சந்தர்ப்பவாதிகள் யாந்திரீக முறையில் கொள்ளுகின்றனர் ஆனால் சீனத் தோழர்கள் அவ்வாறு கொள்ளவில்லை. எனவே தான் இடது சந்தர்ப்பவாதிகள் பற்றி ''அவர்கள் 'நிலைமைகளைக் கணிப்பதில்' மேற்கொண்ட வழி என்னவென்றால், அவர்களுடைய கருத்துக்குச் சாதகமான, தனிப்பட்ட

ஆரம்ப நிலையிலுள்ள மறைமுகமான, ஒருதலைப்பட்ச மான, மேலோட்டமான நிகழ்வுகளை எடுத்துக் கொண்டு அவற்றைப் பரந்ததாகவும், வளர்ச்சியுற்றதாகவும், நேரடி யானதாகவும், அனைத்துப் பகுதிகளை தழுவியதாகவும், அவசியமானதாகவும் பெரிதுபடுத்துவதே ஆகும். அவர் களது கருத்தோடு உடன்படாத உண்மைகளை ஒப்புக் கொள்ள அவர்கள் பயந்தனர். அல்லது அவைகளைக் கண்டு கொள்ளாமல் கண்களை மூடிக் கொண்டனர். [எதிரியின் பலமும், அவனுடைய தற்காலிக் வெற்றியும், நம்முடைய பலவீனமும், நம்முடைய தற்காலிக தோல்வியும், மக்கள் திரளின் குறைந்த அரசியல் உணர்வு மட்டமும், எதிரியின் உள் முரண்பாடுகள், நடுநிலையாளரின் முற்போக்கான பாத் திரம் போன்றவைகளை] மிகவும் கடினமான, சிக்கலான சூழ்நிலைமைகள் உருவாகலாம் என்று அவர்கள் எப்போதும் எண்ணியதில்லை; அவ்வாறு உருவாவதற்குச் சாத்தியமே இல்லாத மிகவும் சாதகமான, எளிமையான சூழ்நிலைமை கள் பற்றியே அவர்கள் எப்போதும் கனவு கண்டனர். செம் படை இயக்கத்தின் போது புரட்சிகரத் தளப்பிரதேசங் களைச் சுற்றி வளைத்திருந்த எதிரியைப் பற்றி அவர்கள் எல்லோரும் எதிரி 'மிகவும் நிலை குலைந்து' 'இறுதி அழிவை நெருங்கிக் கொண்டு' 'வெகு விரைவாக அழிந்து கொண்டு', 'ஒட்டு மொத்தமாக அழிந்து கொண்டு' இருக்கின்றான் என் பது போன்ற பல சொற்களில் ஒரே விதமாக விவரித்தனர். மூன்றாவது 'இடது' சாரிப்பாதையின் ஆதரவாளர்கள் இன் னும் ஒரு படி மேலே சென்று, கோமிண்டாங்கின் அனைத்து சக்திகளையும் விட செம்படை பலம் வாய்ந்தது என்றும், செம்படை எண்ணிக்கையில் கோமிண்டாங் படையை விட பன்மடங்கு அதிகமானது என்றும், எனவே நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலேயே ஓய்வு ஒழிச்சல் கூட இல்லாமல் செம்படை முன்னேற வேண்டும் என்றும் அவர் கள் வற்புறுத்தினர்.'' [மாவோ, ஷெ நூல் பக் 341—42]

மார்க்சிய—லெனினிய யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந் திர விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளை சீனப்புரட் சிக்கு பிரயோகிக்கையில் சீனா போன்ற காலனிய, அரைக் காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளின் ஏற்றத்தாழ் வான வளர்ச்சி என்னும் பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்ற வாறு பிரயோகிக்க வேண்டும் என்பதையும் சீனப்புரட்சியின் படிப்பினைகள் போதிக்கின்றன.

''1924-27 புரட்சியிலிருந்து அதன் விளைவாக தென்சீனம் மற்றும் வடசீனம் ஆகிய இரு பகுதிகளுக்கு இடையிலான புரட்சிகர வளர்ச்சியிலிருந்து ஏற்றத் தாழ்வை அவர்கள் மறுத்தனர். [இந்த நிலைமை ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் வரை மாறவில்லை]' வடக்கின் பின்தங்கிய நிலைமை பற்றிய கோட்பாடு' என்று அவர்களால் அழைக்கப்பட்ட கோட்பாட் டைத் தவறாக எதிர்த்தனர்; வடசீனாவின் கிராமப்புறங்கள்

எங்கும் சிவப்பு ஆட்சிகளை நிறுவ வேண்டும் என்றும் அனைத்து வெள்ளைப் படைகளிலும் கலகங்களை உருவாக்கு வதன் மூலம் செம்படைக் குழுக்களைக் கட்ட வேண்டும் என்றும் கோரினர். தளப்பிரதேசங்களின் மையப்பகுதி எல்லைப்பகுதி ஆகியவற்றுக்கு இடையேயுள்ள ஏற்றத் தாழ் வான வளர்ச்சியையும் அவர்கள் மறுத்ததோடு 'லோமிங் பாதை' என்று அவர்களால் அழைக்கப்பட்ட வழியினைத் தவறாக எதிர்த்தனர். செம்படையைத் தாக்கும் யுத்தபிர புக்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளைப் பயன் படுத்திக் கொள்ள அவர்கள் மறுத்ததோடு தாக்குதலை நிறுத்திக் கொள்ள விரும்பிய சக்திகளோடு சமரசம் செய்து கொள்ள அவர்கள் மறுத்தனர். வெள்ளைப் பிரதேசங்களில் உள்ள வேலை சம்பந்தமாக பின்வாங்குதலுக்கும், தற்காப் புக்குமான அவசியமான நடவடிக்கைகளை எடுக்க மறுத்த னர்; அல்லது புரட்சி அலை ஓய்ந்து [புரட்சி வெள்ளம் வடிந்து—மா.அ.க.] எதிர்ப்புரட்சி ஆளும் சக்திகள் மிகவும் பலமாக உள்ள நகரங்களில் அனைத்து சட்டபூர்வமான சாத்தியப்பாடுகளையும் பயன்படுத்திக் கொள்வது என்பதை மறுத்தனர். அதற்கு பதிலாக அங்கு நிலவுகின்ற நிலைமை களுக்குப் பொருந்தாத வடிவங்களில் தாக்கும் நிலையை அவர்கள் தொடர்ந்தனர். அவர்கள் பாதுகாப்பற்ற நிலை யில் பெரும் எண்ணிக்கையிலான பலகட்சி அமைப்புகளை யும் மக்கள் திரளிடமிருந்து பிரிந்து போன பல சிகப்பு மக்கள் திரள் அமைப்புகளையும் கட்டினர்; கட்சியை இருபதிப்பு களாக [டூப்ளிகேட்] அமைத்தனர். நிலைமைகளைக் கணக் கிலெடுத்துக் கொள்ளாமல் தொடர்ந்து அரசியல் வேலை நிறுத்தங்கள், கூட்டு வேலைநிறுத்தங்கள், மாணவர்கள், படைகள், போலீசு ஆகியவர்களின் வேலைநிறுத்தங்கள் மற் றும் ஊர்வலங்கள் கிளர்ச்சிகள், திடீர்கூட்டங்கள், ஆயுதந் தாங்கிய எழுச்சிகள் போன்ற மக்கள் திரளின் ஆதரவையோ அல்லது பங்கேற்பையோ வென்றெடுக்க இயலாத நட வடிக்கைகளுக்கு அறைகூவல் விடுத்தனர். இந்த நடவடிக்கை களின் தோல்விகளை அவக்கள் 'வெற்றிகள்' என்று வியாக் கியானம் செய்தனர். ஒட்டு மொத்தமாகத் தொகுக்கும் போது பல்வேறு 'இடது' பாதைகளிலும், குறிப்பாக மூன் றாவது 'இடது' பாதையிலும் சென்ற தோழர்கள் கதவடைப்புவாதம், துணிச்சல்வாதம், ஆகியவற்றில் சிறந்த வர்களாக இருந்தனர். 'எல்லாவற்றிற்கும் மேலானது போராட்டமே, "அனைத்தும் போராட்டத்திற்கே' 'தொடர்ந்து போராட்டத்தை விரிவு படுத்தி அதையொரு உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்' என்பனவற்றில் அவர்கள் குருட்டுத்தனமாக நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே தொடர்ந்து தோல்விகளைத் தவிர்த்திருக்க வேண்டிய சமயத்திலும் கூட, தவிர்க்கக் கூடியவையாக இருந்த போதிலும் கூட அவர்கள் தோல்விகளை சந்தித்த னர். [மாவோ, ஷெி நூல் பக்-342]

இவ்வாறு சீனாவின் புதிய ஜனநாயகப் புரட்சியினுடைய இரண்டாவது கட்டமாகிய—மாபெரும் விவசாயப் புரட்சி—உள்

நாட்டு யுத்த கால கட்டத்தில் யுத்ததந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் பற்றிய உக்கிரமான சித்தாந்த போராட்ட கால கட்டமாக விளங்கியது. வரலாற்றுச் சிறப்புமிக்க சுன்யி மாநாட்டில் வாங்மிங் இடது சந்தர்ப்பவாதக் கும்பல் முறியடிக்கப்பட்டு, அதன்பின் மாவோவின் தலைமையிலான சீனப்பொதுவுடமைக் கட்சியும் சீனப்புரட்சியும் மார்க்சிய–லெனினிய அரசியல் ராணுவ யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களைப் பற்றி நின்று முன்னேறியது.

சீனாவின் புதிய ஜனநாயகப் புரட்சியினுடைய மூன்றாவது இடைக்கட்டமாகிய 1937—45 ஜப்பானிய எதிர்ப்பு தேசியப் புரட்சி யுத்தகால கட்டம்: திருகு சுருள் வளைவான போக்குடைய சீனப்புரட்சி மீண்டும் நான்கு வர்க்கங்களின்—தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர புத்தி ஜீவிகள் உட்பட குட்டி முதலாளிகள் மற்றும் தேசிய முதலாளிகளது—ஐக்கிய முன்னணியும், இத்துடன் கூடவே ஆளும் வர்க்கங்களில் ஜப்பானிய எதிர்ப்பு ஏகாதிபத்தியங்களின் ஆதரவுப் பிரிவும் சேர்ந்து ஐக்கிய முன்னணியாக அமைந்த காலகட்டம். அதாவது ஜப்பானிய ஏகாதிபத்தியத்தைத் தீர்மானகரமாக எதிர்க்கும் பல்வேறு வர்க்கங்கள் மற்றும் தட்டுகளது கூட்டு உருவாகியது. இக்கால கட்டத்திலும் மூன்று வெவ்வேறு போர்த்தந்திரங்கள் கையாளப்பட்டன. முதல் போர்த்தந்திர காலகட்டம் வூஹான் வீழும் வரையிலானது; நாடு முழுவதும் ஒவ்வொரு துறையிலும் பிரகாசமான சூழ்நிலை நிலவிய. அரசியல் ரீதியில் 1935லிருந்தே தொடங்கி புரட்சி அலை ஓங்கிய—புரட்சி வெள்ளம் பெருகிய காலகட்டம்.

> "தற்போதைய நிலைமை தேசியப் புரட்சியில் நிச்சயமான — உடனடியான ஒரு புதிய வெள்ளம் பெருகும் ஒன்றாகும். (ஒரு புதிய புரட்சிஅலை ஓங்கும் ஒன்றாகும்—மா. அ.க.) மேலும் சீனாவில் ஒரு மாபெரும் தேசந்தழுவிய புரட்சிக்கான நிலைமை நிச்சயமானதாக நிலவுகிறது; சீனாவானது புரட்சியின் தலைவாயிலில் இருக்கிறது என்று நாம் சொல்லுகிறோம். இது தற்போதைய புரட்சிகர நிலைமையினுடைய ஒரு தனிச்சிறப்பான குணாம்சமாக இருக்கிறது. இது ஒரு உண்மை; இது பிரச்சினையின் ஒரு அம்சத்தைக் குறிக்கிறது. ஆனால் ஏகாதிபத்தியம் நிச்சயமான முறையில் கவனத்தில் எடுத்துக்கொண்டு தீரவேண்டிய சக்தியாக இன்னும் இருப்பது; புரட்சிகர சக்திகளின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி ஒரு பாரதூரமான பலவீனமாக இருப்பது; எதிரியைத் தோற்கடிக்க ஒரு நீண்டகால யுத்தத்தில் போரிடத் தயாராக இருக்கவேண்டும் ஆகியவற்றையும் கூட நாம் சொல்லவேண்டும்; இது தற்போதைய புரட்சிகர நிலைமையின் மற்றொரு தனிச்சிறப்பான குணாம்சமாகும். இதுவும் ஒரு உண்மை; இது பிரச்சினையின் மற்றொரு அம்சமாகும். இவ்விரு குணாம்சங்களும், இவ்விரு உண்மைகளும் நமது போர்த்தந்திரங்களை மாற்றும்படியும், நமது சக்திகளைப் பிரித்தொதுக்கும் நமது வழிவகைகளை மாற்றும்படியும், நிலைமைகளுக்குப் பொருத்தமாகப் போராட்டத்தை முன்

னெடுத்துச் செல்லும்படியும் போதிக்கின்றன, நிர்ப்பந்திக்கின்றன''. (மாவோ, ஷெ நூல், பக்கம்-159)

புதிய புரட்சிகர நிலைமைகளுக்கேற்றவாறு — புரட்சிஅலை ஓங்குவதற்கும், புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதற்கும் பொருத்தமாக — போர்த்தந்திரங்கள் வகுக்கப்பட்டன. 'உள்நாட்டுப்போரை நிறுத்து', 'ஒரு மக்கள் குடியரசு, ஜனநாயகக் குடியரசு' மற்றும் 'ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு' ஆகிய முழக்கங்களின் கீழ் தேசப்பற்று மிக்க மாணவர்கள், இளைஞர்களது அமைப்புகளும், மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் பிறபகுதி மக்களின் மாபெரும் தேசபக்த ஜனநாயக இயக்கங்களும், ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கெதிரான கூட்டு அமைப்புகளும் போராட்டங்களும், போரும் அடங்கிய போர்த்தந்திர காலகட்டமாகும். ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி உருவாவதும், ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் வெடிப்பதும், கொரில்லாப் போர்முறையும், எதிரியின் போர் முனைக்குப் பின்னே தளப்பிரதேசங்கள் நிறுவுவதும், ஐக்கிய முன்னணியில் சுதந்திரத்தையும் முன்முயற்சியையும் காக்கும் அதே சமயம் ஒற்றுமையும் போராட்டமும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதும் அடங்கிய போர்த்தந்திரக் கொள்கைகள் கடைபிடிக்கப்பட்டன.

ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியும் யுத்தமும் அடங்கிய இடைக்கட்டத்திலேயே, ஜப்பான் வூஹானைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அரசியல் நிலைமையில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. தரகுப்பெருமுதலாளிகளில் ஒரு பிரிவு ஜப்பானுடன் சமரச சரணடைவையும், மற்றொரு பிரிவு ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தை சீக்கிரம் முடித்துக்கொள்ளத் துடித்ததையும் தொடர்ந்து, யுத்ததந்திர ரீதியிலான அரசியல், இராணுவப் போர்த்தந்திரங்கள் மாறாமலிருக்கும்போதே புதிய சூழ்நிலைக்கேற்ப ஆளும் வர்க்கங்களின்பால் போர்த்தந்திர ரீதியிலான மாறுதல்களைச் செய்யவேண்டியிருந்தது. தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவம் மற்றும் விரைவான வெற்றித்தத்துவம் ஆகிய இரு போக்குகளையும் முறியடித்து ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியிலான சமநிலையின் ஆரம்ப கட்டத்தில் இரு கம்யூனிச எதிர்ப்பு எழுச்சிகளும் வென்றடக்கப்பட்டன. 'ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் ஊன்றிநில்; சமரச சரணடைவை எதிர்த்து நில்;' 'ஐக்கியத்தைப் பற்றி நில்; பிளவை எதிர்த்து நில்' என்ற முழக்கங்களின் கீழ் அரசியல் ராணுவ போர்த்தந்திரங்கள் வடிக்கப்பட்டன. ஆளும் வர்க்கங்களின் படுபிற்போக்காளர்களது கம்யூனிச எதிர்ப்புத் தாக்குதல்களை 'நாம் தாக்கப்படாவிட்டால் நாமும் தாக்கப்போவதில்லை, நாம் தாக்கப்பட்டால் நாமும் நிச்சயம் தாக்குவோம்' என்ற கொள்கையின் கீழ் 1939 டிசம்பர் - 1940 மார்ச் மற்றும் 1941 ஜனவரி ஆகிய இரு இராணுவத் தாக்குதல்களையும் முறியடித்தனர். அரசியல், ராணுவத் துறைகளில் மட்டுமல்லாது சித்தாந்தத் துறையிலும் போராட்டங்கள் நீடித்தன. சர்வதேச ரீதியில் பாசிச முகாமின் தற்காலிக ராணுவ மேலாண்மை நீடித்த ஒரு உக்கிர

மான காலகட்டத்தில் (ஜனவரி 1941—டிசம்பர் 1942) ஜப்பானிய எதிர்ப்பு மக்கள் யுத்தத்தில் மிகவும் கடினமான முறையில் ஊன்றி நின்ற அதேவேளையில் ஆளும் வர்க்கங்களின் ஊசலாட்டம் மற்றும் சமரச சரணடைவுக் கொள்கைக்கெதிராக மேற்கண்ட போர்த்தந்திரங்களே பின்பற்றப்பட்டன.

சர்வதேசிய ரீதியிலும், தேசிய ரீதியிலும் பாசிச முகாமுக்கு எதிரான யுத்தத்தில் மிக முக்கியமான திருப்பம் ஏற்பட்டு, விடுதலைப் பிரதேசங்கள் உறுதிப்படுத்தப்பட்டு வளர்க்கப்படுவதும், அவை பகுதி அளவிலான எதிர்த்தாக்குதல் தொடுப்பதுமானதாக மாறும் காலகட்டத்தில் [1943 ஜனவரி-1945 செப்டம்பர்] தாக்குதல் போர்த்தந்திரங்கள் முன்வைக்கப்பட்டன. ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் தோல்வி நிச்சயமான இக்கால கட்டத்தில் இறுதியில் பொதுவுடமைக் கட்சியையும், செம்படையையும், தளப்பிரதேசங்களையும் ஒழித்துக்கட்டிட நாடு முழுவதும் கோமிண்டாங் ஒரு கட்சி பாசிச சர்வாதிகாரத்தை நிறுவ ஆளும் வர்க்கங்கள் எத்தனித்ததை முறியடிப்பதற்கான போர்த்தந்திரங்களையும் இக்காலகட்டம் உள்ளடக்கியிருந்தது. மூன்றாவது கம்யூனிச எதிர்ப்பு எழுச்சி தடுத்து நிறுத்தப்பட்டு முறியடிக்கப்பட்டது. சீன - சோவியத் நட்புறவு மற்றும் கூட்டுறவு உடன்படிக்கை ஜப்பானுக்கெதிரான சோவியத் யூனியனது போர்ப் பிரகடனம், சீன மக்கள் விடுதலைப் படை நாடு தழுவிய எதிர்த்தாக்குதலை தளப்பிரதேசங்களிலிருந்து துவங்கி தொடுத்தது. சர்வதேசிய ரீதியில் பாசிச முகாமின் தோல்வி, இவை அனைத்தும் சேர்ந்து இறுதியில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் முறியடிக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்பே யுத்தத்திற்குப் பிந்திய காலகட்டம் பாசிச எதிர்ப்பு மக்களுக்கும் பாசிச மிச்சசொச்சங்களுக்குமிடையிலான போராட்டங்கள், தேசிய விடுதலைக்கும் தேசிய ஒடுக்கு முறைக்கும் இடையிலான போராட்டங்கள் தொடரும் என்பதை மிகச் சரியாக கணித்து ''ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முறியடித்து மொத்த மக்களையும் விடுதலை செய்து, நமது கட்சியின் தலைமையில் புதிய ஜனநாயக சீனத்தைக் கட்டியமைக்கும் பொருட்டு பரந்துபட்ட மக்களை செயலுக்கு தைரியமாகத் தட்டியெழுப்புவது, மக்கள் சக்திகளை பயன்படுத்துவது'' என்ற அரசியல் கடமைகளை முன்வைத்து அரசியல் இராணுவ போர்த்தந்திரங்கள் வகுக்கப்பட்டன. யுத்த கால மற்றும் யுத்தத்துக்குப் பிந்திய காலத்தின் உயிராதாரமான பிரச்சினைகள் பற்றிய குறித்த திட்டமொன்றின் அடிப்படையில் கூட்டரசாங்கத்திற்கான திட்டம் முன்வைக்கப் பட்டது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தை இறுதிவரை போரிட்டு வெற்றி கொள்வது, கோமிண்டாங்கின் ஒரு கட்சி பாசிச சர்வாதிகாரத்தையும், ஆளும் வர்க்கங்களின் உள்நாட்டுப் போர் மற்றும் கம்யூனிச எதிர்ப்பு முயற்சிகளையும் முறியடித்து ஒரு குறித்த திட்டத்தின் அடிப்படையிலான கூட்டரசாங்கம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த அரசியல், ராணுவப் போர்த்தந்திரங்கள் முன்வைக்கப் பட்டன. ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆயுதப்

போராட்டமாக யுத்தம் நீடித்த அதே வேளையில் சியாங்-கே-ஷேக் கும்பலின் கம்யூனிச எதிர்ப்பு ஒடுக்குமுறைகளுக்கு எதிரான தற்காப்பு, தேவையானால் தாக்குவது, கூட்டரசாங்கம் ஆகியவற்றுக்கான போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் வகுக்கபபட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. முதற்பணியை நிறைவேற்ற [யுத்தம்] ஆயுதப் போராட்டம் பிரதான வடிவமாக இருந்த அதே வேளையில் இரண்டாவது பணியை நிறைவேற்ற அரசியல் போராட்டங்கள் பிரதான வடிவமாக அமைந்தன.

மாவோவின் தலைமையிலான சீனப்பொதுவுடமைக் கட்சி சரியான மார்க்சிய-லெனினிய அரசியல் மற்றும் ராணுவ யுத்த தந்திரம் மற்றும் போர்த்தந்திரக் கோட்பாடுகளை பின்பற்றியது முற்போக்கு சக்திகளோடு ஐக்கியப்பட்டு, நடுநிலையாளர்களை வென்றெடுத்து, பிற்போக்காளர்களைத் தனிமைப்படுத்துவதற்கான அரசியல் நடத்தை வழியையும் சுதந்திரத்தையும் முன்முயற்சியையும் தக்கவைத்துக் கொண்டுள்ள ஒற்றுமையும் போராட்டமும் என்ற ஐக்கிய முன்னணிக் கோட்பாட்டை வகுத்தது; கம்யூனிச எதிர்ப்பு எழுச்சிகளையும் உள்நாட்டுப்போர் தயாரிப்பையும் முறியடிப்பது, சமரச சரணடைவை முறியடித்து இறுதி வரை யுத்தத்தை வழிநடத்தி ஆக்கிரமிப்பாளர்களை முறியடிப்பதற்கான அரசியல், ராணுவ போர்த்தந்திரக் கோட்பாடுகளைப் பின்பற்றியது; இவ்வாறு ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தாக்கி முழு வெற்றியடைந்த காலகட்டம் 'எழுச்சி வீழ்ச்சி மற்றும் மீண்டும் எழுச்சி' ஆகிய மூன்று போர்த்தந்திரக் காலகட்டங்களை உள்ளடக்கி இருந்தது. புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதை—புரட்சி அலை ஓங்குவதைப் பயன்படுத்தி தளப்பிரதேசங்களிலிருந்து ஒரு பரந்து விரிந்த போர் அரங்கைத் துவக்கிய 1937-40 வரையிலான காலகட்டம்; அதன் மூலம் பெரும் நெருக்கடியைக் கடந்து, ஜப்பான், அதன் கைப்பாவை மற்றும் கோமிண்டாங் துருப்புகளது மும்முனைத் தாக்குதலை எதிர்கொண்டு உறுதியாக நின்று முறியடித்த கடும் இடர்ப்பாடுகள் மிக்க 1941-42 காலகட்டம்; மற்றும் எதிரியை அவன் ஆக்கிரமித்த பகுதிகளில் முடக்கிப்போட்டு, தளப்பிரதேசங்களிலிருந்து முதலில் பகுதி அளவிலான எதிர்த்தாக்குதலைத் தொடங்கி பின்னர் அவற்றை இறுதித் தாக்குதலுக்கான யுத்ததந்திர தளப்பிரதேசங்களாக மாற்றிய 1942-45 காலகட்டம் ஆகியவையே அவை.

சீனாவின் புதிய ஜனநாயகப் புரட்சியினுடைய நான்காவது இடைக் கட்டமாகிய 1945-49 ஜப்பானிய சரணடைவுக்குப்பின் மூன்றாவது மாபெரும் புரட்சிகர உள்நாட்டுப் போருக்கான காலகட்டம்: தேசிய ஜனநாயக ஐக்கிய முன்னணியிலிருந்து ஆளும் வர்க்கப் பிரிவு முறித்துக்கொண்டு வெளியேறுவதும் சீனப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நான்கு வர்க்கங்களின்—தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர புத்திஜீவிகள் உட்பட நகர்ப்புற குட்டி முதலாளிகள் மற்றும் தேசிய முதலாளிகள் – உறுதியான ஐக்கிய முன்னணி கட்டிமைக்கப்பட்டு மூன்றாவது மாபெரும் உள்நாட்டுப் போரின் மூலம் சியாங்-கே-ஷேக்

கும்பலின் கோமிண்டாங் ஒரு கட்சி பாசிச சர்வாதிகாரம் தூக்கி
யெறியப்பட்டு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் நிறுவப்பட்ட
காலகட்டம். இக்காலகட்டத்திலும் உள்நாட்டு சமாதானம் மற்
றும் ஜனநாயகத்துக்கான சீன மக்களது போராட்டக் கட்டம்
[செப்டம்பர் 1945-ஜூன் 1946], கோமிண்டாங்கின் ராணுவத்
தாக்குதலை மக்கள் விடுதலைப் படை திருப்பித் தாக்கும்
யுத்ததந்திர ரீதியிலான தற்காப்புக் கட்டம் [ஜூலை 1940-ஜூன்
1947] மற்றும் மக்கள் புரட்சியின் நாடு தழுவிய வெற்றி ஈட்டிய
யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் காலகட்டம் [ஜூலை 1947
அக்டோபர் 1949] ஆகியவை அடங்கிய மூன்று தொகுதிகளான
அரசியல் ராணுவ போர்த்தந்திரங்கள் அடங்கும்.

கிட்டத்தட்ட பத்தாண்டு துன்ப துயரமிக்க தேசிய யுத்தத்
திலிருந்து வெற்றிகரமாக வெளிவந்த சீன மக்களது விருப்ப
மாகிய தேசிய சமாதானம், தேசிய சுதந்திரம், அரசியல் ஜன
நாயகம், சமுதாய விமோச்சனம், தேசிய ஐக்கியமும் ஒற்றுமை
யும், தேசிய புனர்நிர்மாணம் ஆகியவற்றுக்காகப் போராடு
வதும் ஆளும் வர்க்கங்கள் சீன மக்கள்மீது தொடுத்த தொல்லை
மிகு, அழிவு மிகு மூன்றாவது உள்நாட்டுப் போரைத் தவிர்ப்பது
என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டதும், பொது
வுடமைக் கட்சி, மக்கள் விடுதலைப் படை மற்றும் விடுதலைப்
பிரதேசங்களை ஒழிக்கும் கோமிண் டாங்கினது ராணுவத் தாக்கு
தல்களைத் திருப்பித் தாக்கி முறியடிப்பது ஆகியவற்றை அடிப்
படையாகக் கொண்ட அரசியல், ராணுவப் போர்த்தந்திரங்கள்
வடிக்கப்பட்டன. இதே சமயத்தில் விடுதலைப் பிரதேசங்களில்
நிலச்சீர்திருத்த இயக்கங்கள் முன்னேறி துரோகிகள் ஒழிக்கப்
பட்டு, கணக்குகள் தீர்க்கப்பட்டு, குத்தகையும் வட்டியும் குறைக்
கப்பட்டன. துரோகிகளும், உள்ளூர்க் கொடுங்கோலர்களும்,
நிலப்பிரபுக்களும் நகரங்களுக்கு ஓடி ஒளிந்தனர்; பரந்து விரிந்த
அளவு விவசாயிகள் தட்டியெழுப்பப்பட்டு புரட்சிகர அதிகாரம்
நிறுவப்பட்டது. தொடர்ந்து புரட்சி இயக்கத்தின் வெள்ளம்
பெருகுவதாக—புரட்சி அலை ஓங்குவதாக—இருப்பினும் அரசி
யல் போராட்டங்கள் பிரதானமாகவும் ஆயுதப் போராட்டங்கள்
இரண்டாம்பட்சமானதாகவும் இக்காலகட்ட போர்த்தந்திரங்
கள் வகுக்கப்பட்டன. ஏனெனில் உள்நாட்டுப் போரைத் தடுப்
பதற்கும் சமாதானத்தை அடைவதற்குமான போராட்டம்
தோல்வியுற்றாலும் இப்போர்த்தந்திரங்கள் மூலம் நாடு முழுவ
தும் சீன மக்கள் விரிவான, சக்திமிகுந்த படிப்பினைகளைப் பெற்
றார்கள். கோமிண் டாங்கும் பொதுவுடமைக் கட்சியும் செய்து
கொண்ட போர் நிறுத்தம், சமாதானம், ஜனநாயகம், ஒற்
றுமை, ஐக்கியத்தின் அடிப்படையில் புதிய சுதந்திரமான சக்தி
வாய்ந்த சீனத்தைக் கட்டியமைப்பது என்ற அக்டோபர் 10,
1945 ஒப்பந்தம், அரசியல் ஆலோசனை மாநாட்டுத் தீர்மானங்
கள் ஆகியவை மூலம் கட்சி அதன் கொள்கைகளுக்காக ஓய்வு
ஒழிச்சலின்றி சமாதானம் மற்றும் ஜனநாயகத்துக்காக போராடு
கின்றது என்ற உண்மையையும் மக்களிடையே பிரச்சாரம் செய்
தது. போர் நிறுத்த ஒப்பந்தத்தையும், அரசியல் ஆலோசனை

மாநாட்டுத் தீர்மானங்களையும் கோமிண்டாங் கிழித்தெறிந்ததையும், பேச்சு வார்த்தைகளுக்கு உதவுவது என்ற பெயரில் உள்நாட்டுப் போரைத் தூண்டும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளையும் நாடுமுழுவதும் அம்பலப்படுத்தியதன் மூலம் சமாதானம் பற்றியும், கோமிண்டாங்—, அமெரிக்கா ஆகியவை பற்றிய மாயைகளை படிப்படியாக விட்டொழிக்கும்படியும்' சமாதானத்தையும், ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும், நல்வாழ்வையும், அடைய வேண்டுமானால் கோமிண்டாங் பிற்போக்குவாதிகளையும், அதன் எஜமானர்களாகிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் தூக்கியெறிய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது. இவற்றின் மூலமும், கோமிண்டாங் ஏஜெண்டுகளுக்கெதிராகவும், குத்தகை மற்றும் வட்டிக் குறைப்புக்காகவும் மக்கள் போராட்டங்களுக்குத் தலைமை அளிப்பது நிலப்புரட்சியை முன் தள்ளுவது, உற்பத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான இயக்கத்தைக் கட்டவிழ்த்து விடுவது ஆகியவை மூலமும் பிற்போக்குவாதிகளை முற்றிலும் தோற்கடிப்பதும், நாடு தழுவிய ஒரு உள்நாட்டு யுத்தத்தை அவர்கள் தொடங்கினால், அதில் அவர்களை முறியடிப்பதையும் நோக்கமாகக் கொண்டவைகளே இப்போர்த்தந்திரங்கள்.

சீன மக்கள் விருப்பத்துக்கெதிராக சியாங்-கே-ஷேக் கும்பல் நாடு தழுவிய ஒரு உள்நாட்டு யுத்தத்தை தொடுத்த பின்னும் புரட்சிஅலை தொடர்ந்து ஓங்கி வீசினாலும் — புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகினாலும் — எதிரியுடனான பலாபலத்தைக் கொண்டு நிலைமைகளை மதிப்பீடு செய்த சீனப் பொதுவுடமைக் கட்சி உள்நாட்டு யுத்தத்தை இரண்டு கட்டங்களாக—யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு மற்றும் யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல்—பிரித்து அதற்கேற்றவாறு புரட்சிகர யுத்தத்தின் அரசியல், ராணுவக் கோட்பாடுகள், போர்த்தந்திரங்கள் வகுக்கப்பட்டன. இவ்விரு போர்த்தந்திரத் தொகுதிகளிலும் ராணுவ அமைப்பும், ஆயுதப் போராட்டமுமே பிரதான வடிவங்களாக இருந்திருப்பினும் அரசியல் அமைப்புகள் மற்றும் அரசியல் போராட்டங்களுக்கான முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இல்லையானால் நாடு தழுவிய உள்நாட்டு யுத்தத்தின் ஆரம்பத்தில் ஒப்பீட்டு ரீதியில் பலவீனமாக இருந்த சீனப் பொதுவுடமைக் கட்சியும், மக்கள் விடுதலைப் படையும் பன்மடங்கு பலம் வாய்ந்தவையாக வளர்ந்து இறுதி வெற்றியை ஈட்டியதும் பிற்போக்குவாதிகள் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டு முறியடிக்கப்பட்டதும் சாத்தியமின்றிப் போயிருக்கும்.

"கோமிண்டாங் ராணுவத் தாக்குதல் தோல்வியுற்றதோடு, அதன் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் பொருளாதாரம் சீரழிந்து தகர்ந்தது மற்றும் அதன் அரசியல் பித்தலாட்டங்கள் ஓட்டாண்டித்தனமாயின. கோமிண்டாங் பிற்போக்குவாதிகளுக்கெதிராக தீராப்பகைமையில் மூழ்கியிருந்த மக்கள் அவற்றை என்றும் சமரசப்படுத்திக் கொள்

ளாது போராட்டத்தில் எழுந்தனர்; அதன் காரணமாக நாள்தோறும் கோமிண்டாங் பகுதிகளில் உக்கிரமான தேச பக்த இயக்கங்களில் மக்கள் எழுந்தனர். இப்பகுதிகளில் தேச பக்த இயக்கமும், விடுதலைப் பிரதேசங்களில் ஆயுதப் போராட்டங்களும் இரு புரட்சிகர அரங்கங்களாக அமைந்தன'' [நவீன சீனப்புரட்சியின் வரலாறு, பக்-248]

''அமெரிக்கத் துருப்புகளே சீனத்தை விட்டு வெளியேறுக!'' என்ற இயக்கம் மாணவர்கள், சிறு வியாபாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களது பொது இயக்கங்களாக வெடித்தன. தாய்வான் சுயாட்சிப் போராட்டமும் வெடித்தது. அதே போன்று விவசாயிகளது குத்தகை, வரி, வட்டி, லெவி எதிர்ப்பு மற்றும் உள்ளூர்க் கொடுங்கோலர்கள், ஏகாதிபத்தியக் கூட்டுற வாளர்கள், நிலப்பிரபுகளுக்கெதிராகவும் போராட்டங்களில் பரந்து விரிந்த அளவு இறங்கினர். ஜூலை 1946—ஜூன் 1947 காலகட்டத்தின் போது பிற்போக்குவாதிகளது ராணுவத் தாக்குதல்களைப் போலவே அரசியல் பித்தலாட்டங்களும் தோற்றுப் போயின. மூன்றாவது மாபெரும் உள்நாட்டுப் புரட்சி யுத்தத்தின் இரண்டாவது கட்டத்தில்[ஜூலை 1947—அக்டோபர் 1949] மக்கள் விடுதலைப்படை உள்முனை மற்றும் வெளிமுனை இரண்டிலும் பெருமளவிலான தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டதைத் தொடர்ந்து, எல்லாவகையிலும் தாக்குதல் நிலையிலிருந்த கோமிண்டாங் படை முதலில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் தாக்குதல் நிலை என்றும், பின்னர் எல்லா வகையிலும் தற்காப்புநிலை என்றும், அதன் பின்னர் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் தற்காப்பு நிலை என்றும் சீரழிந்தது; இறுதியில் தோற்றது. உக்கிரமான ஆயுதப் போராட்டம், உள்நாட்டு யுத்தம் பிரதானமானதாக இருந்த அதே வேளையில் அரசியல் போராட்டங்கள் தொடர்ந்தன.

''கோமிண்டாங்கின் தாக்குதலை வெற்றிகரமாக எதிர்த்து தாக்குவதற்கும் மக்கள் விடுதலைப்படை தற்காப்பு நிலையிலிருந்து தாக்குதல் நிலைக்கு சீக்கிரம் மாறியதற்கு வழிவகுத்த பிரதானமான காரணிகளில் ஒன்று விடுதலைப் பிரதேசங்களில் நிலச்சீர்திருத்தங்களை அனைத்தும் தழுவிய முறையில் நிறைவேற்றியதாகும்.'' ''கோமிண்டாங் கட்டுப் படுத்திய பகுதிகளில் சீனப்பொதுவுடமைக் கட்சியால் அமைக்கப்பட்டு செல்வாக்கு செலுத்தப்பட்ட மாணவர் முன்னணியில் கொண்டிருந்த தேசபக்த ஜனநாயக இயக்கம் மக்கள் புரட்சியில் ஓர் இரண்டாவது அரங்கைத் திறந்து விட்டது; அது நாடு தழுவிய புரட்சியின் வெள்ளம் பெருகுவதை ஊதிப்பெருக்கியதன் ஒரு பகுதியாக அமைந்தது'' [நவீன சீனப்புரட்சியின் வரலாறு பக்252-254]

இறுதியாக, அக்டோபர் 10, 1947ல் மக்கள் விடுதலைப்படை ''சியாங்-கே-ஷேக் ஒழிக! மொத்த நாட்டையும் விடுதலை செய்!'' என்ற இறுதி முழக்கத்தினை முன்வைத்து நிலப்பிரபுத்துவ தரகு முதலாளித்துவ பாசிச ஆட்சியைத் தூக்கியெறிந்து மக்கள் ஜனநாயக சர்வாதிகார ஆட்சியை நிறுவியது.

இதுவரை விவரித்த சீனப்புரட்சி மற்றும் ருஷியப் புரட்சியின் அனுபவங்கள் மற்றும் படிப்பினைகளைப் போலவே சர்வதேசப்பாட்டாளி வர்க்க அனுபவங்களும் படிப்பினைகளும் மார்க்சிய-லெனினிய யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திர விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் சாராம்சமாகப் போதிப்பது என்னவென்றால் ஒரு புரட்சிக் கட்டத்திலேயே யுத்ததந்திரம் மாறாமலிருக்கும்போதே ஒவ்வொரு தருணத்திலும் பருண்மையான நிலைமைக்கேற்ப, அதாவது புரட்சி இயக்க வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது—புரட்சி அலை ஓங்கி வீசுவது அல்லது ஓய்வது—என்பதைப் பொருத்து, மோதிக்கொள்ளும் சக்திகளின் உறவு, இயக்கத்தின் வடிவங்கள், வீச்சு, ஒவ்வொரு தருணத்தில் ஒவ்வொரு பகுதியின் போராட்ட அரங்கம் ஆகியவற்றைப் பொருத்து அரசியல் மற்றும் ராணுவப் போர்த்தந்திரங்கள் மாறுகின்றன. புதிய போர்த்தந்திரங்கள் வகுக்கப்படவேண்டும்

> "புரட்சிகர நிலைமை மாறும்பொழுது புரட்சிப் போர்த்தந்திரங்களும் தலைமை முறையும் அதற்கு ஏற்றவாறு மாறவேண்டும்" [மாவோ-தேர்ந்த படைப்புகள், பக் 158]

மேலும் அரசியல், ராணுவப் போர்த்தந்திரங்களுக்கு இடையிலான உறவு மற்றும் அவற்றின் தாக்குதல் அல்லது தற்காப்புத் தன்மையில் மாறுதல் ஏற்படுவது பற்றிப் பின்வருமாறு மாவோ கூறுகிறார்.

"ஒரு புரட்சி அல்லது ஒரு புரட்சிகர யுத்தம் தாக்குதல் தன்மை உடையது என்ற கூற்று சரியானதுதான். ஒரு புரட்சி அல்லது புரட்சிகர யுத்தம் அது தோன்றுவதிலும் ஒரு சிறு சக்தியாக இருந்து பெரும் சக்தியாகவும், அரசியல் அதிகாரம் இல்லாமலிருந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவும், செஞ்சேனை ஒன்று இல்லாமலிருந்து செஞ்சேனை ஒன்றை உருவாக்குவதற்கும், புரட்சிகரத் தளப்பிரதேசங்கள் இல்லாமலிருந்து அவற்றை நிறுவுவதற்குமாக வளர்ச்சியடைவதிலும் தாக்குதலையே கைக்கொள்ள வேண்டும்; பத்தாம் பசலியாக இருக்க முடியாது; பத்தாம் பசலிவாதப் போக்குகள் எதிர்க்கப்பட வேண்டும்.

"முற்றிலும் சரியான ஒரே கூற்று ஒரு புரட்சி அல்லது ஒரு புரட்சிகர யுத்தம் ஒரு தாக்குதலே; ஆனால் அது தற்காப்பையும், பின்வாங்குதலையும் உள்ளடக்குவதாகும் என்பதே. தாக்கவேண்டி தற்காத்துக் கொள்வது முன்னேற வேண்டிப் பின்வாங்குவது, நேர்முக முன்னணியைத் தாக்க வேண்டி பக்கவாடுகளைத் தாக்குவது, நேர்ப்பாதைக்கு வர வேண்டி சுற்றுப்பாதையை எடுப்பது—இது பல காரியங்களின் விசேஷமாக ராணுவ நடமாட்டங்களின் அபிவிருத்தியில் தவிர்க்க முடியாதது.

"மேலே கூறப்பட்ட இரு கூற்றுக்களில் முதலாவது கூற்று அரசியல்துறையில் சரியானதாக இருக்கலாம். ஆனால் ராணுவத்துறைக்கு கொண்டுவரப்படும்போது அது தவறானது. மேலும் அரசியல் ரீதியிலும் கூட ஒரு நிலை

மையில் (புரட்சி முன்னேறுகையில்) மட்டுமே அது சரியானது;
ஆனால் மற்றொரு நிலைமைக்கு (புரட்சி பின்வாங்குகையில்
ருஷ்யாவில் 1906-ம் ஆண்டிலும், சீனாவில் 1927-ம் ஆண்டிலும்
போல பூரணமாகப் பின்வாங்குகையிலும், ருஷ்யாவில் 1918-ல்
பிரெஸ்ட்-லிடொவ்ஸ்க் உடன்படிக்கைச் சமயத்திலும்
போல பகுதிவாரியாகப் பின்வாங்குகையிலும்) கொண்டு
செல்லப்படும் போது தவறானது. இரண்டாவது கூற்று
மட்டுமே முற்றிலும் சரியான ஒரு உண்மையாகும். தற்
காப்பு ராணுவ நடவடிக்கைகள் கையாளப்படுவதை யாந்
திரீக ரீதியில் எதிர்த்த 1931-34 காலத்திய இடதுசாரி சந்
தர்ப்பவாதம் சிறு பிள்ளைத்தனமான சிந்தனையே தவிர
வேறில்லை''. (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவப்
படைப்புகள், பக்-194-195)

இவ்வாறு, மாறும் பருண்மையான அரசியல் நிலைமை
களுக்கு ஏற்ப, குறிப்பிட்ட தருணத்திற்கு ஏற்ப புரட்சி இயக்
கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது—புரட்சிஅலை
ஓங்குவது அல்லது ஓய்வது, எழுச்சியுறுவது அல்லது வீழ்ச்சியுறு
வதற்கு ஏற்ப — தற்காப்பு அல்லது தாக்குதல், முன்னேறுவது
அல்லது பின்வாங்குவது என்பதாக போர்த்தந்திரங்கள் மாற்
றப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட தருணம் மற்றும் பருண்
மையான நிலைமைகளுக்குப் பொருத்தமாக - சான்றாக, புரட்சி
இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதற்கு—புரட்சிஅலை ஓங்கி வீசு
வதற்கு — பொருத்தமான போர்த்தந்திரங்கள், அவற்றின்
அரசியல் நடத்தைவழி, வர்க்கங்களைப் பருண்மையாகப் பிரித்
தொதுக்கி (சேமிப்புகளைச்) சரியாகப் பயன்படுத்துவது என்ற
அரசியல் நடத்தைவழி, முழக்கங்கள், போராட்ட வடிவங்கள்,
அமைப்பு வடிவங்கள், மற்றும் சமுதாய அரங்கு ஆகியன அடங்
கிய கூறுகளின் ஒரு தொகுதி மற்றொரு தருணத்திற்கு, மற்
றொரு பருண்மையான நிலைமைக்கு—சான்றாக, புரட்சி இயக்
கத்தின் வெள்ளம் வடிவது, புரட்சிஅலை ஓய்வது—பொருத்தமா
னதாக அப்படியே பிரயோகிக்க முடியாது. தொடர்ந்து ஒரே
மாதிரியான தன்மையுடையதாக-சான்றாக புரட்சி இயக்கத்தின்
வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது, புரட்சிஅலை ஓங்கி வீசு
வது அல்லது ஓய்வதும் அடுத்தடுத்து தோடர்ந்து நீடித்தாலும்
வர்க்கங்களின் உறவு, வடிவங்களின் மாறுதல், வீச்சு, அரசியல்
நடத்தைவழியில் மாறுதல் ஆகிய மாற்றங்கள் புதிய போர்த்
தந்திரங்களை வடிக்கும்படி நிர்ப்பந்திக்கலாம். அவ்வாறு வடிக்
கப்படும் போர்த்தந்திரங்களின் தன்மை அதற்கு முந்திய காலகட்
டத்தைப் போலவே தாக்குதல் அல்லது தற்காப்புத் தன்மை
யுடையதாக நீடித்தாலும் ஒரு புதிய திட்டம் என்கிற முறையில்
புதிய போர்த்தந்திரக் கூறுகளின் தொகுதி என்கிற முறையில்
தான் அணுகப்பட வேண்டும். பழைய போர்த்தந்திரங்களின்
அரசியல் நடத்தைவழி, நோக்கம் முழுமையாக அடையப் படா
மல் நிலைமைகளில் மாறுதல் ஏற்பட்டாலோ, பழைய போர்த்தந்
திரங்களின் முழக்கங்கள், போராட்ட மற்றும் அமைப்பு வடி
வங்களில் சிலவோ, பெரும்பாலுமோ நீடித்தாலும் கூட, ஒரு

புதிய கால கட்டம் படிநிலை என்கிற முறையில்—புதிய போர்த் தந்திரக் கூறுகளின் தொகுதி என்கிற முறையில் அணுகவேண்டும்.

புரட்சியின் இடைக்கட்டங்களுக்கும் போர்த்தந்திர கால கட்டங்களுக்கும் ஏற்றவாறு பாட்டாளி வர்க்கக் கட்சியின் யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திரக் கொள்கைகளிலும், நெறி முறைகளிலும் ஏற்படும் மாறுதல்களை சரியாக வரையறுத்துணர வேண்டும்; யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்கள் ஏற்படும்போது, புரட்சி மற்றும் எதிர்ப்புரட்சி சக்திகளின் சேர்க்கைகளில் மாறுதல் ஏற்படும்போது, அதாவது, தேசிய முதலாளி வர்க்கத்துடன் மட்டுமோ அல்லது அத்தோடு ஆளும் வர்க்கங்களின் ஒரு பிரிவோடும் சேர்ந்தோ பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் ஐக்கிய முன்னணியில் சேரும்போது அல்லது அதை உடைத்துக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படும்போது, பிரதான முரண்பாடு ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறும் போது—இதுவும்கூட புரட்சி மற்றும் எதிர்ப்புரட்சி சக்திகளின் சேர்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வருவதுதான்—இடைக் கட்டம் மாறுகிறது. இம்மாதிரியான, புறவயமான நிலைமைகளி லான மாறுதல்களின்போது யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த சில மாறுதல்களோடு [யுத்ததந்திரமே மாறிவிடுவதில்லை, ஆனால் யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த சில மாறுதல்களை பாட் டாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் யுத்ததந்திரக் கொள்கை களிலும் நெறிமுறைகளிலும் கொண்டு வருகின்றன] போர்த்தந் திரங்களும் மாறுகின்றன. ஆனால் புரட்சியின் குறிப்பிட்ட இடைக்கட்டத்திலேயேகூட புரட்சி மற்றும் எதிர்ப்புரட்சி சக்தி களின் சேர்க்கைகளில் மாறுதல் ஏற்படாதபொழுதே கூட ஒவ் வொரு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான அரசியல் நிலைமைக்கேற்ப, புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது, புரட்சிஅலை ஓங்குவது அல்லது ஓய்வதற்கேற்ப போர்த்தந்திரங்கள் மாறும்.

இவ்வாறு அணுகுவதுதான் உணர்வுபூர்வமாக பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் தலைமைமுறை பற்றிய விஞ் ஞானம் என்கிற முறையில் குறிப்பிட்ட தருணத்திற்கான பருண்மையான நிலைமைகளுக்கேற்ப திட்டவகைப்பட்டதாக போர்த்தந்திரங்களை மார்க்சிய—லெனினிய விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளின் அடிப்படையில் வகுப்பதாகும்.

ஆனால் குறிப்பிட்ட தருணத்திற்கேற்ப—பருண்மையான நிலைமைக்குப் பொருத்தமாக—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதற்கேற்ப—புரட்சி அலை எழுச்சியுறு வது அல்லது வீழ்ச்சியுறுவதற்கேற்ப புதிய புதிய போர்த்தந்திரங் களை திட்டவகைப்பட்டதாக மாற்ற வேண்டும், வகுக்க வேண்டும் என்பதை ஆக்கபூர்வமான போராட்ட அமைப்பு வடி வங்களையோ, உணர்வுபூர்வமான அரசியல் திட்டம் மற்றும் தீர்வுகளையோ முன்வைக்காது புரட்சிகர இயக்கத்தை வழி நடத் துவதில் தனது ஒட்டாண்டித்தனத்தைக் காட்டும் அராஜகவாதி களான 'இடது' சந்தர்ப்பவாதிகள் நமது நாட்டுக்கும், பொது

வாக எல்லா காலனி, அரைக்காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாடுகளுக்கும் மக்கள்யுத்தப்பாதைக்கும் பொருந்தாது என்கின்றனர். உணர்வுபூர்வமாக அரசியலை ஆணையில் வைத்து புரட்சிகர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல விரும்பாத பொருளாதாரவாத சகதிக்குள் வீழ்ந்து கொண்டிருக்கும் பிற மார்க்சிய லெனினியக் குழுக்களும் இதைப் புறக்கணிக்கின்றன.

போர்த்தந்திரங்களை திட்ட வகைப்பட்டதாக, பருண்மையான நிலைமைகளுக்குப் பொருத்தமாக, குறிப்பிட்ட தருணத்திற்கேற்ப புதியதாக வழங்க வேண்டும் அல்லது மாற்ற வேண்டும் என்ற மார்க்சிய—லெனினிய அணுகுமுறைக்கு எதிராக நிகழ்ச்சிப் போக்கு வகைப்பட்டதாக முன்வைக்கின்றனர். புரட்சிகர சக்திகளுக்கும் எதிரிகளுக்கும் இடையிலான பலாபலத்தைப் பொருத்து உணர்வுபூர்வமாக, படிப்படியாக உயர்ந்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று அவர்கள் கோட்பாடு ரீதியாக ஒப்புக் கொண்டாலும் அவற்றை ஆளும் மார்க்சிய-லெனினிய விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் முற்றாக நிராகரிக்கின்றனர். எனவேதான் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்கள் எவ்வளவுதான் உணர்வுபூர்வமாக இயக்கத்தை வளர்த்துச் செல்வதாகக் கூறினாலும் தவிர்க்க முடியாமல் பொருளாதாரவாதத்திலேயே மூழ்கிப்போகக் கூடியவைகளாக இருக்கின்றன. சமுதாய வளர்ச்சிப்போக்கு வெறும் கொச்சையான நிகழ்ச்சிப்போக்கை கொண்டிருக்கவில்லை; பாய்ச்சல்களாலும் கட்டங்களாலும் குறியிட்டு முன்னேறுகிறது. அவற்றின் சாராம்சம் மாறாமலிருக்கும்போதே, முரண்பாடுகளின் வளர்ச்சிப்போக்கும் அதன் அம்சங்களும் கட்டங்களை உடையது; சமுதாய வளர்ச்சிப் போக்கே மாறுதல்களை உடையது; ஆனால் கொச்சையான நிகழ்ச்சிப்போக்கின் வகைப்பட்டதாக அன்றி பாய்ச்சல்களும் கட்டங்களும் உடையது என்ற பொருள்முதல்வாத இயங்கியல் கண்ணோட்டத்தை மார்க்ஸ் எவ்வாறு பிரயோகித்தார் என்று லெனின் பின்வருமாறு விவரிக்கிறார்:

"மார்க்ஸ் தமது பொருள்முதல்வாத— இயங்கியல் உலகக் கண்ணோட்டத்தின் எல்லா ஆதாரக் கூறுகளோடும் கறாராகப் பொருந்தும்படியாகத்தான் பாட்டாளி வர்க்கப் போர்த்தந்திரத்தின் பிரதான கடமையை வரையறுத்தார். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களையும் விதி விலக்கின்றி எடுத்துக்கொண்டு அவ்வர்க்கங்களுக்கிடையேயுள்ள பரஸ்பர உறவுகளின் மொத்த தொகையை யதார்த்த ரீதியிலே கருத்தில் கொள்வது—அதன் விளைவாக அந்தச் சமுதாயத்தின் யதார்த்த வளர்ச்சிக் கட்டத்தையும் அந்தச் சமுதாயத்துக்கும் இதர சமுதாயங்களுக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவுகளையும் கருத்தில் கொள்வது— இது ஒன்று தான் முன்னணி வர்க்கத்தின் சரியான போர்த்தந்திரத்துக்கு அடிப்படையாக இருக்க முடியும். அதே சமயத்தில் எல்லா வர்க்கங்களையும், எல்லா நாடுகளையும், நிலையமைதியில் பார்க்காமல் இயக்க நிலையில் பார்க்கிறோம்; அதாவது, அவற்றை அசையாத நிலையிலே பார்க்

காமல் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையிலே பார்க்கிறோம் [இந்த இயக்கத்தின் விதிகளை நிர்ணயிப்பவை ஒவ்வொரு வர்க்கத்தின் பொருளாதார வாழ்வு நிலைமைகள்தான்]. பிறகு, இயக்கத்தைப் பார்க்கும்போதும் சென்ற காலத்தைப் பற்றிய பார்வையுடன் மட்டும் அதைப் பார்க்காமல் எதிர் காலத்தைப் பற்றிய பார்வையுடனும் இயக்கத்தைப் பார்க்கிறோம். அதே சமயத்தில், அப்படிப் பார்க்கையில், மெதுவாக நடைபெறுகிற மாறுதல்களை மட்டும் பார்க்கிற 'பரிணாமவாதிகளின்' விஞ்ஞானக் கேடான கருத்தோட்டத்திற்கு இணங்க நாம் இயக்கத்தைப் பார்ப்பதில்லை; அதற்குப் பதிலாக, இயங்கியல் வகையில் அதை நாம் பார்க்கிறோம். 'இத்தகைய பிரமாண்டமான வளர்ச்சிகளிலே இருபது ஆண்டுகள் என்பது ஒரு நாளுக்கு மேல் இல்லை. இருந்தாலும், பின்னால் இருபது ஆண்டுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள நாட்களும் வரக்கூடும்' என்று மார்க்ஸ் எங்கல்ஸ்சுக்கு எழுதினார். (கடிதப்போக்குவரத்து, தொகுதி 3. பக்-127) வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு கணத்திலும் பாட்டாளி வர்க்கப் போர்த்தந்திரம், யதார்த்த ரீதியிலே, தவிர்க்க முடியாததாயுள்ள மனித வரலாற்றின் இயங்கியலைக் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். ஒரு புறம், அரசியல் தேக்கம் உள்ள அல்லது மந்தமான, 'அமைதியானதாகச்' சொல்லப்படும் வளர்ச்சி நிலவும் காலப் பகுதிகளை, முன்னணி வர்க்கத்தின் உணர்வையும் பலத்தையும் போர்த்திறனையும் வளர்ப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்; மற்றொரு புறம், இப்படி பயன்படுத்திக் கொள்ளும் வேலை அனைத்தையும் இந்த வர்க்கத்தினுடைய இயக்கத்தின் 'இறுதி இலட்சியத்தை' அடைவதற்காக, 'இருபது ஆண்டுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள' மகத்தான நாட்களில் மகத்தான பணிகளை நடைமுறையில் நிறைவேற்றி வைப்பதற்குரிய திறனை அந்த வர்க்கத்தினிடையே உண்டாக்கி வைப்பதற்காக நடத்திக் கொண்டு போக வேண்டும்'' [லெனின், மார்க்ஸ்-எங்கெல்ஸ்- மார்க்சியம், பக்'54-55].

போர்த்தந்திரங்களை வடிப்பதில் இடது வலது சந்தர்ப்பவாதங்களுக்கு எதிரான இச்சரியான மார்க்சிய-லெனினிய வழிகாட்டுதல்களைப் பிரயோகிக்க வேண்டும். அதற்கேற்றவாறு திட்டவகைப்பட்ட போர்த்தந்திரங்கள் வகுக்கப்பட வேண்டும்.

நிகழ்ச்சிப்போக்கு வகைப்பட்ட போர்த்தந்திரங்களை முன்வைக்க வேண்டும் என்றும், திட்டவகைப்பட்ட போர்த் தந்திரங்கள் மார்க்சியத்துக்கு முரணானது என்றும் கூறி பொருளாதாரவாதிகள் தமது திரிபுவாதத்தை நியாயப்படுத்தியதை லெனின் முறியடித்தார். வெறும் கோட்பாட்டுவாதிகளும், விமர்சகர்களும், பொருளாதார வாதிகளும் தொழிற்சங்கவாதமாக புரட்சிகர இயக்கத்தைச் சீர்குலைக்கும் போது பழைய தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்யும் பயங்கரவாதிகள் திட்ட வகைப்பட்ட 'போர்த்தந்திரங்களை' வலிந்து முன்

வைக்கும்போது, முன்முயற்சியும் திறனுமின்றி, போதிய அளவு பிரச்சாரம், கிளர்ச்சி மற்றும் அமைப்பு வளர்ச்சிக்கும் பரிமாணத்திற்கும் பற்றாக்குறை மற்றும் புரட்சிகர வேலைக்கான பரந்து விரிந்ததொரு அமைப்பிற்கான திட்டமில்லாத பற்றாக்குறை ஆகியவற்றால் இயக்கம் பாதிக்கப்படும்போது, திட்ட வகைப்பட்ட போர்த்தந்திரம் இந்தியப் புரட்சியின் நிலைமைகளுக்குப் பொருந்தாது என்பது கோட்பாடு ரீதியில் மார்க்சிய-லெனினியத்தைக் கொச்சைப்படுத்துவது மட்டுமல்ல, நடைமுறையிலும் கட்சியைப் பின்னுக்கிழுப்பதும், தமது ஓட்டாண்டித்தனத்தைத் தாமே அம்பலப்படுத்திக் கொள்வதுமாகும். திட்ட வகைப்பட்ட போர்த்தந்திரங்களன்றி கொச்சையான முறையில் "கட்சிப் பணிகளின் ஒரு வளர்ச்சிப் போக்கு, அது கட்சியோடு சேர்ந்து வளர்கிறது" என்றும் "இயக்கம் என்பது அந்த இயக்கத்தின் தொடக்கப் புள்ளிக்கும் பின்னிட்டு வரும் தொடக்கப் புள்ளிகளுக்கும் இடையேயுள்ள தூரத்தை மாற்றுகிற நிகழ்ச்சிப்போக்கு" என்றும் கூறுவது "எந்தப் போராட்டம் சாத்தியமோ அதுவே விரும்பத்தக்கது, அந்த குறிப்பிட்ட தருணத்தில் நிகழ்ந்து வரும் போராட்டமே சாத்தியமான போராட்டமாகும் என்பது—இதுதான் கடிவாளமற்ற சந்தர்ப்பவாதப் போக்கு, இது செயலற்ற முறையில் தன்னியல்போடு தன்னைச் சரி செய்து கொள்கிறது" என்று சாடினார் லெனின். பிற மார்க்சிய - லெனினியக் குழுக்கள் இவ்வாறுதான் செயலற்ற முறையில் தன்னியல்போடு தன்னைச் சரிசெய்து கொண்டு கடிவாளமற்ற சந்தர்ப்பவாதப் போக்கை மேற்கொண்டுள்ளன. அதாவது சந்தர்ப்பப் பொருத்தமுள்ள சாத்தியப்பாடான எல்லா போராட்ட சாதனங்களையும், எல்லாத் திட்டங்களையும், வழிமுறைகளையும் கோட்பாடு அளவில் அங்கீகரித்தாலும் ஒரு குறிப்பிட்ட அரசியல் தருணத்தில் வழிகாட்ட வேண்டிய திட்டவகைப்பட்ட போர்த்தந்திரங்களைப் புறக்கணிக்கின்றனர்; எல்லாவற்றையும் போட்டுக் குழப்பிக்கொள்ளுகின்றனர்.

"சந்தர்ப்பப் பொருத்தமுள்ள கறாரானதாக இருக்குமானால் எல்லாப் போராட்ட சாதனங்களையும், எல்லாத் திட்டங்களையும் வழிமுறைகளையும் கோட்பாடு ரீதியில் அங்கீகரிப்பதை, ஒரு குறிப்பிட்ட அரசியல் தருணத்தில், கண்டிப்புடன் பின்பற்றவேண்டிய திட்டத்தால் வழிகாட்டப் படவேண்டும் எனும் கோரிக்கையோடு குழப்பிக்கொள்வது—நாம் போர்த்தந்திரம் பற்றிப் பேசுவதால்—மருத்துவ இயலில் நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பல்வேறு வழிமுறைகளை அங்கீகரிப்பதை ஒரு குறிப்பிட்ட நோய்க்கு ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான சிகிச்சைமுறையைக் கையாளுவதின் தேவையோடு குழப்பிக் கொள்வதற்குச் சரிசமமாகும்" என்றார் லெனின். (என்ன செய்யவேண்டும்? பக்-73)

சாத்தியமான எல்லாப் போராட்ட சாதனங்களையும், எல்லாத் திட்டங்களையும், வழிமுறைகளையும் கோட்பாடு ரீதியில் அங்கிகரிப்பதும் அதேசமயம் எந்தக் குறிப்பிட்ட தருணத்திற்கும், பருண்மையான நிலைமைக்கும் எந்தப் போராட்ட

மற்றும் அமைப்பு வடிவங்கள், முழக்கங்கள், அரசியல் நடத்தை வழி அடங்கிய போர்த்தந்திரம் பொருத்தமானது என்பதை ஆளும் மார்க்சிய-லெனினிய விதிகளையும் வழிகாட்டும் நெறி முறைகளையும் புறக்கணிப்பதும் நிகழ்ச்சிப்போக்கின் வகைப் பட்ட போர்த்தந்திரங்களைப் பிரயோகிப்பதும் பொருளா தாரவதாமே.

"திட்டவகைப்பட்ட போர்த்தந்திரம் மார்க்சியத்துக்கு முரணானது என்பது மார்க்சியத்தை இழிவுபடுத்துவதாகும்; நம்மை எதிர்க்கும் போராட்டத்தில் நரோதினியவாதிகள் தூக்கிப்பிடிக்கும் கேலிச்சித்திரமாக மார்க்சியத்தை மாற்று வதுதான் அதன் பொருள். அது வர்க்க உணர்வுள்ள போர் வீரர்களின் முன்முயற்சியையும் ஆற்றலையும் சிறுமைப்படுத் துவதாகத்தான் பொருள்படுகிறது. மாறாக, மார்க்சியம் சமூக ஜனநாயகவாதியின் முன்முயற்சிக்கும் ஆற்றலுக்கும் மாபெரும் தூண்டுவிசை அளிக்கிறது, மிக விரிவான திசை வழிகளைத் திறந்துவிடுகிறது. மற்றும் (சொல்லக் கூடுமா னால்) 'தன்னியல்பாக' போராட்டத்திற்கு எழும் கோடிக் கணக்கான தொழிலாளர்களின் வலுமிக்க சக்தியை அதன் வசம் விடுகிறது. சர்வதேச சமூக - ஜனநாயகவாதத்தின் வர லாறு முழுவதிலும் அவ்வப்பொழுது அந்தந்த அரசியல் தலைவர் முன்வைத்துள்ள திட்டங்கள் நிறைந்துள்ளன; அவற்றில் சில அதனதன் ஆசிரியர்களின் தொலைநோக்கை யும், பிழையற்ற அரசியல், அமைப்புக் கருத்துக்களையும் உறுதிப்படுத்தின, மற்றவை அவரவர்களின் குறுகிய நோக் கையும் அரசியல் தவறுகளையும் வெளிப்படுத்தின" என் றார் லெனின். (ஷை நூல், பக்கம் -74)

குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளைப் பருண்மையாக ஆய்வு செய்வது, குறிப்பான தீர்வுகளையும், பொருத்தமான போர்த்தந்திரங்களையும் வடிப்பது என்பதே சரியான மார்க்சிய-லெனினிய அணுகுமுறையாகும். குறிப்பிட்ட ஒரு திட்டத்தின் பொது முழக்கத்திலிருந்து நேரடியாகவும் சாதாரணமாகவும் எளிய முறையிலும் உடனடியான நிச்சய மான போராட்டத்துக்கான முழக்கங்களை வடிக்கக்கூடாது என்பதை எந்தச் சூழ்நிலையிலும் மார்க்சிய - லெனினியவாதிகள் மறக்கமுடியாது.

"இந்த நோக்கத்துக்காக மொத்த வளர்ச்சிப்போக்கின் பருண்மையான வரலாற்று நிலைமையைப் பரிசீலிக்க வேண் டும்; புரட்சியின் மொத்தமான அடுத்தடுத்த அணிவகுப்பைப் பற்றித்தொடரவேண்டும்; நமது பணிகள், திட்டத்தின் இலட் சியத்திலிருந்து மட்டும் இதை வகுக்க முடியாது; மாறாக, இயக்கத்தின் பின் தொடர்ந்துவரும் படிகள் மற்றும் கட்டங் களிலிருந்து கூட வகுக்கப்பட வேண்டும். இம்மாதிரியான தொரு ஆய்வு மட்டுமே இயங்கியல் பொருள்முதல்வாத வரை யறுப்புடைய உண்மையான வரலாற்று ஆய்வாகும்" (லெனின், தொகுதி3, பக்-370] என்ற லெனின் போர்த்தந்

திரங்கள் பற்றிய கடிதத்தில் பின்வருமாறு எழுதினார்: "வர்க்கங்களின் உறவுகளிலும், ஒவ்வொரு வரலாற்று நிலைமைக்கும் தனிக்குறிப்பான பருண்மையான அம்சங்களிலும் ஒரு கறாராக, சரியாக மற்றும் யதார்த்தபூர்வமாக சோதித்தறியப்படக் கூடிய ஆய்வை மார்க்சியம் கோருகிறது. போல்ஷ்விக்குகளாகிய நாம் கொள்கைக்கு விஞ்ஞானபூர்வமான அடித்தளம் அமைக்க முற்றிலும் இன்றியமையாத அத்தேவையைப் பூர்த்திசெய்ய எப்பொழுதும் முயன்றிருக்கிறோம்.

"வரலாற்றுப் போக்கினுடைய ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்தின் பருண்மையான பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளால் அவசியமாகத் திருத்தியமைக்க வேண்டியதை — பொதுப்பணிகளில் இருந்துதான் மிகச் சிறந்த முறையில் திருத்தி அமைக்கக்கூடியதை — சூத்திரங்களாக வெறுமனே மனப்பாடம் செய்வதையும் மற்றும் திரும்பத் திரும்ப முன்வைப்பதையும் மார்க்சும் எங்கல்சும் சரியாக வெறுத்துச் சாடி 'நமது கோட்பாடு ஒரு வரட்டுத் தத்துவமல்ல, செயலுக்கான ஒரு வழிகாட்டி' என்றனர்".

இவ்வாறு பருண்மையான நிலைமைகளுக்குப் பொருத்தமாக குறிப்பிட்ட தருணத்திற்கேற்ப புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது—புரட்சிஅலை ஓங்குவது அல்லது ஓய்வதற்கு — ஏற்ப தாக்குதல் அல்லது தற்காப்பு போர்த்தந்திரங்கள் வகுக்கப்பட வேண்டும் என்கிறபோது நிலைமைகளின் இழுத்த இழுப்புக்கெல்லாம் தன்னியல்பாக, தாறுமாறாக மாற்றிக்கொண்டு செல்லவேண்டும் என்று வால்வாத அல்லது அராஜகவாதமான முறையில் பொருள்கொள்ளக் கூடாது. மாறாக, குறிப்பிட்ட சமுதாய வரலாற்றுக் கட்டத்தின் — புரட்சிக் கட்டத்தின் — அரசியல் யுத்ததந்திரத்தின் பொதுப்பாதை, பொதுத்திசை மற்றும் சமுதாய அரங்கில் சக்திகளைப் பிரித்தொதுக்கும் பொதுத்திட்டத்தின் வரம்புகளுக்குட்பட்டு, அவற்றின் வழிகாட்டுதல் மற்றும் நெறிப்படுத்துதலின் கீழ் பருண்மையாக வகுக்கவேண்டும் என்றே பொருள்கொள்ள வேண்டும்.

எனவே அனைத்து நாட்டுப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் புரட்சிகர அனுபவங்களும் படிப்பினைகளும், மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையும் பின்வரும் போர்த்தந்திர விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் நமக்களிக்கின்றன. அவை: போர்த்தந்திரங்கள் என்பவை,

—புரட்சியின் குறிப்பிட்ட கட்டத்திற்கான யுத்ததந்திரத்தின் பொதுப்பாதை, பொதுத்திசை மற்றும் சமுதாய அரங்கில் சக்திகளைப் பிரித்தொதுக்கும் பொதுத்திட்டம் ஆகிய வரையறுப்புக்குட்பட்டு அவற்றின் வழிகாட்டுதலில் குறிப்பிட்ட தருணத்திற்கேற்ப, பருண்மையான நிலைமைகளுக்குப் பொருத்தமாக வடிக்கப்படுபவை.

—யுத்ததந்திரத்தின் ஒரு பகுதி, யுத்ததந்திரத்துக்கு கீழ் படிந்தவை மற்றும் யுத்ததந்திரத்துக்குச் சேவை செய்பவை, யுத்ததந்திர காலகட்டத்தை விட குறுகலானவை, யுத்ததந்திர வெற்றிக்குத் தயாரிப்பு பணிகளைச் செய்பவை. ஆனால் சில சமயம் யுத்ததந்திர வெற்றியைத் தள்ளிப்போடுபவை அல்லது சீர்குலைப்பவையாக உள்ள தற்காலிக போர்த்தந்திர வெற்றிகளைக் கைவிட வேண்டியிருக்கும். பெரும்பாலும் போர்த்தந்திர வெற்றிகள் யுத்ததந்திர வெற்றியைத் துரிதப் படுத்தும்; போர்த்தந்திரத் தோல்விகள் யுத்ததந்திர வெற்றியைத் தள்ளிப்போடும்.

—யுத்ததந்திர வெற்றிக்காக குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப, அரசியல் நடத்தைவழியை வகுத்து, முழக்கங்களை முன்வைத்து, பொருத்தமான போராட்ட வடிவங்கள் மற்றும் அமைப்பு வடிவங்கள் மூலம் பரந்துபட்ட மக்களைப் போரிடும் சமுதாய அரங்கில் கொண்டு வந்து நிறுத்திப் போராடும் அதி முக்கியமான மையமான செயற்பாடுகளைத் தீர்மானிப்பவை.

—குறிப்பிட்ட யுத்ததந்திரக் கட்டத்திலேயே மோதிக் கொள்ளும் சக்திகளுக்கிடையிலான உறவு, போராட்டங்களின் வடிவங்கள், இயக்கத்தின் வீச்சு, குறிப்பிட்ட பகுதியில், குறிப்பிட்ட தருணத்தின் போராட்ட அரங்கம், பருண்மையான நிலைமைகளுக்கேற்ப—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது, புரட்சி அலை ஓங்குவது அல்லது ஓய்வதற்கேற்ப—தாக்குதல் அல்லது தற்காப்பு—முன்னேறும் அல்லது பின்வாங்கும் போர்த்தந்திரங்கள் வகுக்கப் படும்.

—போர்த்தந்திரங்களைத் தீர்மானிக்கும் மேற்கண்டவைகளில் ஏற்படும் மாறுதலுக்கேற்ப ஒவ்வொரு திருப்பத்திற்கும், ஒவ்வொரு தருணத்திற்கும் ஏற்ப போர்த்தந்திரங்கள் மாறுபடும். நிகழ்ச்சிப் போக்கு வகைப்பட்டதாக இல்லாமல் திட்ட வகைப்பட்டதாக வகுக்கப்படும்.

—காலனிய, அரைக்காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ, பின் தங்கிய நாடுகளில், நீண்ட கால மக்கள் யுத்தப்பாதை என்ற யுத்ததந்திரத்திற்கான காரணங்களால், நாடு தழுவிய பருண்மையான நிலைமைகளுக்காக குறிப்பிட்ட தருணத்திற் கேற்ப வகுக்கப்படும் போர்த்தந்திரங்கள் ஏற்றத்தாழ்வான நிலைமைகளுக்கேற்ப வெவ்வேறு படிகளில் பிரயோகிக்கப் பட வேண்டும்.

## VI. போர்த்தந்திர விதிகள் வழிகாட்டும் நெறிமுறைகளின் பருண்மையான பிரயோகம்: அரசியல் போர்த்தந்திரத்தின் கூறுகள் பற்றிய வரையறுப்புகள்.

அரசியல் போர்த்தந்திரங்களின் விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகள் பற்றிய மார்க்சிய-லெனினிய அணுகுமுறைகளையும், யுத்ததந்திரத்திற்கும் போர்த்தந்திரங்களுக்கும் இடையிலான உறவுகளையும் பற்றிய பொதுவான வரையறுப்புகளை இதற்கு முன்பு தொகுத்தளித்தோம். இனி, குறிப்பாக அவற்றை எப்படி பிரயோகிப்பது, அரசியல் போர்த்தந்திரங்களின் கூறுகள் எவையெவை மற்றும் அவற்றின் வரையறுப்புகளை ஆழமாகப் பரிசீலிப்போம்.

> "உண்மையான சமூக ஜனநாயகப் போர்த்தந்திரத்தைப் பின்பற்றுவதற்கு இரண்டு நிபந்தனைகள் வேண்டும். முதலாவதாக, இந்தப் போர்த்தந்திரங்கள் சமுதாய வாழ்வின் வளர்ச்சிப் போக்கிற்கு எதிரானதாகப் போகக்கூடாது. இரண்டாவதாக, அது பரந்துபட்ட மக்களின் புரட்சிகர உணர்வை மேலும் மேலும் உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்த வேண்டும்"

என்ற ஸ்டாலினது போதனைகளைப் பற்றிநின்று இந்தியப் புரட்சிக்கான இன்றைய காலகட்டத்திற்கான, இன்றைய தருணத்திற்கான பருண்மையான நிலைமைகளுக்கேற்பவும் பரந்துபட்ட மக்களது புரட்சிகர உணர்வை மேலும் மேலும் உயர்த்தும் வகையிலும் போர்த்தந்திரங்களை அவற்றின் ஒளியில் வகுத்திட வேண்டும்.

போர்த்தந்திரத்தின் கூறுகள் பற்றி ஸ்டாலினது பின்வரும் வரையறுப்புகள் தெளிவாக்குகிறது: ''போர்த்தந்திரங்கள் ...... மிகவும் நிச்சயமாக யுத்ததந்திர வெற்றிக்குத் தயாரிப்பதற்காக பரந்துபட்ட மக்கள் திரளை புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் வென்றெடுக்கவும், அவர்களைப் போரிடும் அரங்குகளில் சமுதாய அணிவரிசையில் (யுத்த தந்திரத் திட்டத்தில் விவரிக்கப் பட்டிருக்கும் சக்திகளைப் பிரித்தொதுக்கும் திட்டத்தை நிறைவு செய்வதற்காக) நிறுத்துவதற்குமான குறிப்பான வழிகளைச் சுட்டிக் காட்டுகின்றன.'' (ஸ்டாலின், தொகுதி 5, பக்-65). ''போர்த்தந்திரங்கள் என்பவை இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது, புரட்சியின் அலை ஓங்குவது அல்லது ஓய்வது மாகிய ஒப்புநோக்கில் குறுகியதான காலகட்டத்தில் தொழிலாளர் வர்க்கத்தினுடைய நடத்தைவழியைத் தீர்மானிப்பது, பழைய போராட்ட வடிவங்களுக்கும் பழைய அமைப்பு வடிவங்களுக்கும் பதிலாக புதியபோராட்ட வடிவங்களையும் புதிய அமைப்பு வடிவங்களையும் கையாள்வதன் மூலமாகவும், பழைய முழக்கங்களுக்கு பதிலாக புதிய முழக்கங்களை வைப்பதன் மூலமாகவும் இவை எல்லாவற்றையும் இணைப்பதன் மூலமாகவும். இன்னும் பிறவும் மூலமாகவும் இந்த நடத்தைவழியை நிறைவேற்றுவதற்காகப் போராடுவது'' (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள், பக்கம் 82).

இந்த வரையறுப்புகளின்படி. 1) அரசியல் நடத்தை வழி குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளை ஆய்ந்தறிந்து வந்தடையும் போர்த்தந்திர அரசியல் கோட்பாட்டு முடிவுகளின்படி. உயிராதாரமான, நாடு முழுவதற்குமான அனைத்து வர்க்கங்களுக்குமான, மையமான, அரசியல் பிரச்சினைகளின்பால் பாட்டாளி வர்க்க கட்சியின் அரசியல் கண்ணோட்டமும் போக்கும் யுத்ததந்திரத் திட்டத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் சக்திகளைப் பிரித்தொதுக்கும் திட்டத்தை. நிறைவு செய்யும் வகையில் போரிடும் அரங்கங்களின் சமுதாய அணிவரிசையில் பரந்துபட்ட மக்களைக் கொண்டுவந்து நிறுத்துவது; அதாவது புரட்சியின் நேரடி, மறைமுக சேமிப்புகளை 'ரிசர்வுகளை' சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது 2. போராட்ட முழக்கங்களும் ஆணைகளும் 3. போராட்ட வடிவங்கள் 4. போராட்ட அமைப்புகள் 5. அரசியல் நடத்தையை செயல்படுத்துவதற்காகப் போராடும் தலைமைமுறையின் போர்த்தந்திர விதிகள் அல்லது நெறிமுறைகள் ஆகிய கூறுகள் அடங்கியவை போர்த்தந்திரங்களாகும். ஆனால் ஒரு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளை ஆய்ந்தறிவதும் (மோதிக்கொள்ளும் வர்க்கங்களுக்கிடையிலான உறவு பற்றிய மதிப்பீடு செய்வதும், புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது—புரட்சி அலை ஓங்குவது அல்லது ஓய்வதை சரியாகக் கணிப்பதும்) அதனடிப்படையில் சரியான போர்த்தந்திர அரசியல் கோட்பாட்டு முடிவுகளை வந்தடைவதும், போர்த்தந்திரத்தின் அரசியல் குறிக்கோள் மற்றும்

தன்மை (தாக்குதல் அல்லது தற்காப்பு—முன்னேறுவது அல்லது பின்வாங்குவது) ஆகியவற்றைத் தீர்மானிப்பதும் மேற்கண்டவை அனைத்திற்கும் அடிப்படைகளாகும்.

**பருண்மையான நிலைமைகளை ஆய்வுசெய்வதும், போர்த்தந்திர குறிக்கோள் மற்றும் தன்மைகளைத் தீர்மானிப்பதும் பற்றி :**

ஒரு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளை ஆய்ந்தறிவது, அதாவது மோதிக்கொள்ளும் வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளைச் சரியாக மதிப்பீடு செய்வதும், புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதும்—புரட்சி அலை ஓங்குவது அல்லது ஒய்வதும்–பற்றி சரியாக கணிப்பதும், அவற்றின் அடிப்படையில் சரியான கோட்பாட்டு முடிவுகளை வந்தடைவதும் சரியான மார்க்சிய—லெனினியப் போர்த் தந்திரங்களை வகுப்பதற்கான முன்தேவைகளாகும். இதற்காகப் பின்வரும் காரணிகளின் அடிப்படையில் நாடு முழுவதற்குதான போர்த்தந்திர அரசியல் கோட்பாட்டு முடிவுகளைத் தொகுக்க வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் மற்றும் அதன் கூட்டாளிகளின் (உயர்ந்த அல்லது குறைந்த கலாச்சார மட்டம், அதிக அல்லது குறைந்த அளவு அமைப்பு மற்றும் அரசியல் உணர்வு, அப்போது நிலவும் இயக்கத்தின் மரபுகள் மற்றும் வடிவ முறைகள் பிரதான மற்றும் துணை அமைப்பு வடிவங்கள்) மற்றும் எதிரிகளின் முகாமிலுள்ள சக்திகளில் கூட இவைகளின் தன்மையும் எதிரிகளுக்குள்ளே உள்ள பிளவும் மோதலும் குழப்பமும், குறிப்பிட்ட ஒவ்வொரு தருணத்தின் மோதிக் கொள்ளும் சக்திகளுக்கிடையிலான உறவுகள், பலா பல நிலைமைகள் போராட்ட வடிவங்கள் மற்றும் இயக்கத்தின் வீச்சு, ஒரு குறிப்பிட்ட தருணத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியின் போராட்ட அரங்கம்-ஆகிய இவ்வளவு காரணிகளும் பருண்மையான நிலைமைகளை ஆய்ந்தறிவதற்கானவையாகும்.

போர்த்தந்திரங்களின் தாக்குதல் அல்லது தற்காப்பு, முன்னேறுவது அல்லது பின்வாங்குவதைத் தீர்மானிப்பதற்கு புரட்சி வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது—புரட்சி அலை ஓங்குவது அல்லது ஒய்வது இவற்றில் எதற்கான பருண்மையான நிலைமைகள் நிலவுகின்றன என்பதைச் சரியாகக் கணிக்க வேண்டும். புரட்சி இயக்கத்தின் வெள்ளம் வடிவது—புரட்சி அலை ஒய்வதற்கு ருஷியாவின் 1905-06 புரட்சியின் தோல்வியை அடுத்த காலகட்டமும், சீனப்புரட்சியின் 1927 சியாங்-கே-ஷேக் எதிர்ப்புரட்சிக் குடைகவிழ்ப்பைத் தொடர்ந்து, முதல் மாபெரும் உள்நாட்டு யுத்தத்தின் தோல்வியைத் தொடர்ந்து வந்த கால கட்டமும் இரு மிகச்சிறந்த உதாரணங்களாகும். ருஷியப் போல்ஷிவிக் பொதுவுடமைக் கட்சி பின்வாங்கும் போர்த்தந்திரத்தைப் பின்பற்றிய 1907-12 காலகட்டத்தின் புரட்சி இயக்க வெள்ளம் வடிவதை—புரட்சியின் அலை ஒய்வதைக் குறித்த அடிப்படைகளை போல்ஷிவிக் கட்சியின் வரலாறு என்ற நூலில் (பக். 158-61,207 மற்றும் 223) இருந்து தொகுத்தறிய முடியும்; சீனப்

பாதுவுடமைக் கட்சி தற்காப்புப் போர்த்தந்திரத்தைப் பின்பற்ற வேண்டியிருந்த புரட்சி இயக்கத்தின் வெள்ளம் வடிவது—புரட்சிஅலை ஓய்வது—பற்றிய மதிப்பீடுகளைத் தொகுத்தறிய நவீன சீனப் புரட்சியின் வரலாறு (பக் 89-90) மற்றும் மாவோவின் சிங்காங் மலைகளிலான போராட்டம் (பக் 112, 124-25 132) என்பவற்றிலும் தொகுத்தறியலாம். பின்வருபவை தற்காப்பு அல்லது பின்வாங்கும் தன்மையுடைய போர்த்தந்திரங்களை வகுப்பதற்கான நிலைமைகளாகிய புரட்சி இயக்கத்தின் வெள்ளம் வடிவதை — புரட்சியின் அலை ஓய்வதைக் குறிக்கும் அடிப்படை அளவுகோலாகும்:

1. ஆளும் வர்க்கங்கள் எதிர்ப்புரட்சி பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவது, புரட்சியாளர்களையும் மக்கள் திரள் அமைப்புகளையும் தடைசெய்வது, அவற்றின் முன்னணி ஊழியர்களைச் சிறையிடுவது, சித்திரவதை செய்வது, படுகொலை செய்வது.

2. பாட்டாளி வர்க்கத்தின் இன்னும் பிற புரட்சிகர மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளைக் கடுமையாகத் தாக்கி அழிப்பது; சட்டபூர்வமான வாய்ப்புகள் அனைத்தையும் குறுக்கிச் சுருக்கிவிடுவது; பரந்துபட்ட மக்களது போராட்டங்கள் மீது கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவது; கொடுமையான ஒடுக்குமுறை, துப்பாக்கிச் சூடு, சிறையிடுவது, தண்டிக்கும் படையெடுப்பு இன்னும் பிற நடவடிக்கைகளில் ஈடுபடுவது; ஆளும் வர்க்கங்கள் குறிப்பாக தரகுப் பெருமுதலாளிகள் தொழில்முடக்கம் இன்னும் பிற பொருளாதார நெருக்கடி காலங்களில் கதவடைப்பு, தொழிலாளர்களை வெளியேற்றுவது, ஊதியவெட்டு இன்னும் பிற நடவடிக்கைகளோடு வர்க்க உணர்வு பெற்ற முன்னணித் தொழிலாளர்களைக் களையெடுப்பது.

3. புரட்சியாளர்கள் மற்றும் பிற பரந்துபட்ட மக்கள் மீது ஒருபுறம் கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதும் மற்றொருபுறம் சீர்திருத்தங்களையும் சலுகைகளையும் காட்டுவது. ஆளும் வர்க்கங்களின் ஆட்சியை நீடிப்பதற்கான சமூக அடிப்படைகளைப் பரவலாக்கிக்கொள்ள இடைத்தட்டு வர்க்கங்களை வென்றெடுக்கும் நடவடிக்கைகளில் இறங்குவது.

4. ஆளும் வர்க்கங்களிடையே, பல்வேறு பிரிவுகளிடையே தற்காலிக ஒற்றுமை, ஸ்திர நிலைமையைத் தோற்றுவித்து புரட்சி இயக்கத்தை ஒடுக்குவதற்காக சக்திகளை ஒன்று குவிப்பது.

5. பாட்டாளி வர்க்கக் கட்சியிலும் புரட்சிகர மக்கள் திரள் அமைப்புகளிலும் உள்ள அணிகளில் புரட்சியின் சகபயணிகள், குறிப்பாக குட்டி முதலாளித்துவ புத்திஜீவிகள்— எதிர்த்தரப்பிலிருந்து புரட்சியின்அலை ஓங்கியபோது ஓடிவந்தவர்கள்—சிதைவதும், சீரழிவதும், துரோகமிழைத்து ஓடுவதும் பாட்

டாளி வர்க்கத்தையும் பரந்துபட்ட மக்களையும் புரட்சிப் பாதையிலிருந்து திசைதிருப்பி விடுவதும், சட்டவாதம் வெளிப் படையான அமைப்புகளுக்குள் சரணடைந்து பாட்டாளி வர்க்க கட்சியைத் தூற்றுவதும், இழிவுபடுத்துவதும், ஆளும் வர்க்கங் களுடன் சமரசம் செய்துகொள்வதும்.

6. பாட்டாளி வர்க்கத்தின் உணர்வுபூர்வமற்ற பின் னணிப் பிரிவும் பிற பரந்துபட்ட மக்களும் மேற்கண்ட காரணங் களால் சோர்வுற்று களைப்புற்று பின்தங்குவதும், அரசியல் அமைப்பு பலமிழந்து பின்தங்குவதும், உணர்வு குன்றிப்போவ தும்.

ஒரு தாக்குதல் போர்த்தந்திரம் — புரட்சிகர எழுச்சி— தோல்வியுற்றபின் எதிர்ப்புரட்சி திடீர்குடைகவிழ்ப்பு கட்டவிழ்த்து விடப்படும்பொழுது, மேற்கண்ட எல்லா அம்சங் களும் உக்கிரமாக, தீவிரமாக, முழுமையாக வெளிப்படும். அம் மாதிரியான சமயங்களில் கிரமமான, நெறிப்படுத்தப்பட்ட பின் வாங்கும் போர்த்தந்திரங்கள் வகுக்கப்படும். புரட்சிஅலை ஓங்கு வதற்கான—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதற்கான அறிகுறியான — அடிப்படையான அம்சங்கள் முதிர்ச்சியுறாமல் இருக்கும்வரை இந்த அளவு உக்கிரமாக, தீவிரமாக முழுமை யாக அனைத்து அம்சங்களும் வெளிப்படாமல் இருப்பினும் இவற்றையே புரட்சி இயக்கத்தின் வெள்ளம் வடிவது — புரட்சி யின் அலை ஓய்வதற்கான பருண்மையான நிலைமைகளைக் கணிப்பதற்கான அடிப்படை அம்சங்களாகக் கொண்டு அவற் றின் அளவு மற்றும் வீச்சுக்கேற்ப தற்காப்பு போர்த்தந்திரங்கள் வடிக்கப்பட வேண்டும்.

புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதை—புரட்சியின் அலை ஓங்குவதைக் குறிக்கும் அடிப்படை அம்சங்களை மாவோ வின் கட்டுரையான சிறுபொறி பெருங்காட்டுத் தீயை மூட்டும் (பக் 142-43) மற்றும் லெனினது நூலான 'இடதுசாரி' கம்யூனிசம்- இளம்பருவக் கோளாறு (பக்கம் 126-127) ஆகியவற்றிலிருந்து தொகுத்தறியலாம். அவை:

1. நமக்குப் பகையான எல்லா வர்க்க சக்திகளும் போதிய அளவு ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொள்கின்றனவா, தமது பலத்துக்கு அப்பாற்பட்ட போராட்டத்தில் சிக்கிப் போதிய அளவு தம்மை பலவீனப்படுத்திக் கொண்டு விட்டனவா;

2. நிலையின்றி ஊசலாடும் இடைநிலை நபர்கள் யாவரும் ஆளும் வர்க்கங்களிடமிருந்து வேறுபடுத்தப்பட வேண்டிய முத லாளித்துவ, குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் மக்களின் கண்களில் போதிய அளவு தம்மை அம்பலப்படுத்திக்கொண்டு நடைமுறையில் தமது கையாலாகாத்தனத்தால் தம்மைப் போதிய அளவு இழிவுபடுத்திக்கொண்டு விட்டனரா;

3. ஆளும் வர்க்கங்களை எதிர்த்து மிகவும் வைராக்கியமான துணிச்சலான, பற்றுறுதிமிக்க புரட்சிகரச் செயலில் இறங்கு

வதற்கு ஆதரவான மக்கள் திரள் உணர்ச்சி பாட்டாளி வர்க்கத்தினரிடையே தோன்றி சக்தி வாய்ந்த முறையில் வளரத் தொடங்குவதோடு எல்லா வர்க்கங்களும்—விதி விலக்கின்றி சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களும்—தீர்மானகரமான இறுதித் தாக்குதலுக்கு அணிவகுத்து நிற்கின்றனவா என்ற நிபந்தனைகள்தாம் அதிஉயர்ந்த இறுதித் தாக்குதலுக்கான அடிப்படை அம்சங்களான அளவுகோலாகும்.

மேலும் 1) ஆளும் வர்க்கங்கள் தமது ஆட்சியை எந்த மாற்றமுமின்றி தொடர்ந்து நடத்திச் செல்வது சாத்தியமற்றதாகுதல்; 'மேல வர்க்கங்களிடையே' ஏதேனும் ஒரு வடிவத்தில் நெருக்கடி ஏற்பட்டு, ஆளும் வர்க்கத்தினுடைய கொள்கை நெருக்கடிக்கு உள்ளாகி, இதன் விளைவாய் வெடிப்பு உண்டாகி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய அதிருப்தியும் ஆத்திரமும் இவ் வெடிப்பின் வழியே பீறிட்டெழுதல்; புரட்சி நடைபெறுவதற்கு பழைய வழியில் வாழ 'அடிமட்டத்து வர்க்கங்கள் விரும்பாதது' மட்டும் சாதாரணமாகப் போதாது; பழைய வழியில் வாழ 'மேல் வர்க்கங்களுக்கு முடியாமற் போவதும்' அவசியமாகும். 2) ஒடுக்கப்படும் வர்க்கங்களுடைய துன்பதுயரமும் வறுமையும் வழக்கமாக இருப்பதைக் காட்டிலும் அதிகக் கடுமையாகி விடுதல்; 3) மேற்கண்ட காரணங்களின் விளைவாய் மக்கட் பெருள்திரளினரது செயற்பாடு கணிசமாக அதிகரித்துவிடுதல்; மக்கட் பெருந்திரளினர் 'சமாதான காலத்தில்' தாம் சூறையாடப்படுவதற்கு முறையிடாமலே இடமளிப்பவர்களாயினும், கொந்தளிப்பான காலங்களில், வரலாறு படைக்கவல்ல சுயேச்சைச் செயலில் இறங்கும்படி நெருக்கடி நிலைமைகள் யாவற்றாலும் மற்றும் 'மேல் வர்க்கங்களாலுங் கூட' இழுத்துவிடப்படுகிறார்கள்.'' (லெனின், இரண்டாவது அகிலத்தின் தகர்வு, பக். 14-15, மாஸ்கோ வெளியீடு 1976) ஆனால் யுத்ததந்திர ரீதியிலான நாடு தழுவிய இறுதி வெற்றிக்கான தாக்குதல் போர்த்தந்திரங்களை வடிப்பதற்கு இவற்றை அடிப்படையாகக் கொள்ளும் அதே சமயம் இதை நோக்கி வளர்ச்சியுறும் போக்கையே அவற்றின் அளவு மற்றும் வீச்சுக்கேற்ப புரட்சிஅலை ஓங்கும்போக்கு—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகும்போக்கு இருப்பதைக் கணிப்பதற்கான பிற்காலகட்டங்களிலான தாக்குதல் போர்த் தந்திரங்களின் அடிப்படை அம்சங்களான அளவுகோல்களாகும்.

குறிப்பாக ''பல இடங்களிலும் வளர்ந்துவரும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களையும், விவசாயிகளின் கிளர்ச்சிகளையும், போர்வீரர்களின் கலகங்களையும், மாணவர்களின் பாட நிறுத்தங்களையும் மாத்திரம் கொண்டே இந்தப் 'பொறி' பெருங்காட்டுத்தீயை மூட்டுவதற்கு அதிக நேரமாகாது என்பதில் எவ்வித ஐயத்திற்குமிடமில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்''. '''புரட்சிகர எழுச்சியொன்று விரைவில் ஏற்படும்' என்ற வாக்கியத்திலுள்ள விரைவில் என்ற சொல்லை நாம் எப்படி விளக்கவேண்டும்? இது பல தோழர்கள் மத்தியிலுள்ள ஒரு பொதுக்கேள்வி.

மார்க்சியவாதிகள் சோதிடரல்லர். எதிர்கால வளர்ச்சிகளினதும், மாற்றங்களினதும் பொது மார்க்கத்தைத்தான் அவர்கள் தெரிவிக்கவேண்டும். அதைத்தான் உண்மையில் தெரிவிக்க முடியும். நாளையும் பொழுதையும் இயந்திர ரீதியில் நிர்ணயிக்கக் கூடாது. அப்படி நிர்ணயிக்கவும் முடியாது'' (சிறுபொறி பெருங்காட்டுத்தீயை மூட்டும், மாவோ, தேர்ந்த படைப்புகள், பக். 142-45) என்கிறார் மாவோ. ஒரு அரைக் காலனிய அரைநிலப்பிரபுத்துவ நாட்டில் புரட்சிகரப் பேரெழுச்சியொன்று—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது—எவ்வாறு உருவாகிறது என்று மாவோ விவரிக்கிறார்.

புரட்சியின் பேரெழுச்சியை ஏற்படுத்தும் பலவித முரண்பாடுகள் உண்மையிற் தொடர்ந்து வளர்கின்றனவா என்பதை அலசி ஆராய்வதன் மூலந்தான் அதற்குத் தீர்வுகாணமுடியும். உலகில் ஏகாதிபத்தியங்களுக்கிடையிலும், ஏகாதிபத்தியங்களுக்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள், நாடுகள், மக்களுக்குமிடையிலும் ஏகாதிபத்தியங்களுக்கும் அவற்றின் சொந்த நாடுகளிலேயே உள்ள பாட்டாளி வர்க்கத்துக்குமிடையிலுள்ள முரண்பாடுகள் வளர்வதினால், பிற நாடுகளுக்காக ஏகாதிபத்தியங்கள் போட்டியிடும் தேவை மேலும் அவசியமாகிறது. இதனால் ஒருபுறம் ஏகாதிபத்தியங்களுக்கும் பிற நாடுகளுக்குமிடையிலான முரண்பாடும், அந்நாடுகளின் ஆளும் வர்க்கப் பிரிவுகளுக்கிடையிலான முரண்பாடும் வளர்ந்து நாளுக்குநாள் கூர்மையாகி ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்தியக் கொள்ளைக்கான அவர்களுக்கிடையிலான போட்டி ஆகியவற்றுக்கான போராட்டங்களும் மோதல்களும் கடுமையாகின்றன. இம்முரண்பாடுகளின் வளர்ச்சிப்போக்கு சங்கிலித்தொடர் போன்று பிற முரண்பாடுகளையும் — ஆளும் வர்க்கங்களுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியத்திற்கும் தேசியத் தொழில்களுக்கும் இடையிலான முரண்பாடு, முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையிலான முரண்பாடு, நிலப்பிரபுக்களுக்கும் விவசாய மக்களுக்கும் இடையிலான முரண்பாடு—ஆகியவற்றைக் கூர்மையாக்கி தொழிலாளர்களை வேலை நிறுத்தங்களிலும், விவசாயிகளைக் கிளர்ச்சிகளிலும், மாணவர்களை பாட நிறுத்தங்களிலும், போர்வீரர்களைக் கலகங்களிலும் இறங்கும்படி செய்கின்றன. இந்த வளர்ச்சிப்போக்குதான் புரட்சிஅலை ஓங்குவதற்கு—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதற்கு—காரணமாக அமைகின்றது.

புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது—புரட்சிஅலை ஓங்குவது அல்லது ஓய்வது—குறித்த மேற்கண்ட அடிப்படை அம்சங்களை அளவுகோல்களாகக் கொண்டு கணிக்கவேண்டும். அதனடிப்படையில் முறையே தாக்குதல் அல்லது தற்காப்பு, முன்னேறுவது அல்லது பின்வாங்குவது என்ற தன்மையுடைய போர்த்தந்திரங்கள் வகுக்கப்படவேண்டும்.

ஒரு தாக்குதல் போர்த்தந்திரம் தோல்வியுறும் போதும் எதிர்ப்புரட்சி திடீர்த்தாக்குதல் மற்றும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படும் பொழுதும் கிரமமான நெறிப்

படுத்தபட்ட பின்வாங்கும் போர்த்தந்திரமும் வகுக்கப்பட வேண்டும். இந்தப் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப, குறிப்பிட்ட தருணத்தில் தனது பெரும்பான்மையான படைவரிசையை இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் அதன் அணிகளையாவது காக்கும் பொருட்டு எதிரியின் மேலாண்மைமிக்க பலம்வாய்ந்த சக்திகளை எதிர்கொள்ளும்போது எவ்வாறு திறமையாக பின்வாங்குவது என்ற அரசியல் நடத்தையையும் அதனுடன் ராணுவ நடத்தையையும் தீர்மானிப்பதே பின்வாங்கும் போர்த்தந்திரங்களாகும். இம்மாதிரியான நிலைமைகளில் திட்டமிட்ட, கிரமமான, நெறிப்படுத்தப்பட்ட பின்வாங்கும் போர்த்தந்திரங்களையன்றி சிதறியோடும் போர்த்தந்திரங்களைப் பின்பற்றுவது என்பது புரட்சிகர இயக்கத்தை யுத்ததந்திர ரீதியிலான பின்னடைவிற்கும், நெருக்கடிகளுக்கும், தேக்கத்திற்கும் இட்டுச் செல்லும். பின்வாங்கும் போர்த்தந்திரங்கள் மற்றும் சிதறியோடும் போர்த்தந்திரங்கள் ஆகியவற்றுக்கு மிகச் சிறந்த உதாரணம் 1905-06 ருஷியப்புரட்சிக்குப் பின் முறையே போல்ஷவிக்குகளும் மென்ஷவிக்குகளும் பின்பற்றியவையே ஆகும்.

''இத்தகைய தருணங்களில் புரட்சிகரமான கட்சிகள் தமது அறிவை நேர்த்தியாக்கிக் கொள்ள வேண்டும் என்று லெனின் சுட்டிக் காட்டினார். புரட்சி எழுச்சிக் காலத்தின் போது எப்படி முன்னேறுவது என்பதை அவை கற்றன; பிற்போக்கு மேலோங்கியுள்ள காலத்தில் முறையாகப் பின் வாங்குவது எப்படி என்பதை, தலைமறைவாகப் போவது எப்படி என்பதை, சட்டபூர்வமான வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது எப்படி என்பதை பரந்துபட்ட மக்களுடனான தமது தொடர்புகளைப் பலப்படுத்திக் கொள்வதற்காக இருக்கக் கூடிய எல்லா அமைப்புகளையும், குறிப்பாக மக்கள்திரள் அமைப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது எப்படி என்பதை அவை கற்றுக்கொள்ள வேண்டும்.

''மென்ஷவிக்குகள் பீதியடைந்த முறையில் பின்வாங்கினர்; புரட்சி எழுச்சியின் புதிய அலை எழும் சாத்தியப்பாட்டில் அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை; அவர்கள் கட்சித் திட்டத்தின் புரட்சிகரமான கோரிக்கைகளையும், கட்சியினுடைய புரட்சிகரமான முழக்கங்களையும் கேவலமான முறையில் கைவிட்டனர். பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரமான தலைமறைவுக் கட்சியைக் கலைத்துவிடவும், ஒழித்துவிடவும் அவர்கள் விரும்பினர். இக்காரணத்தினால், இந்த ரகத்தைச் சேர்ந்த மென்ஷவிக்குகள் கலைப்புவாதிகள் என்று அழைக்கப்படலாயினர்.

''மென்ஷவிக்குகளைப் போலல்லாமல் அடுத்த சில ஆண்டுகளிலேயே புரட்சியின் அலை உயருவது திண்ணமென போல்ஷவிக்குகள் நம்பினர்; இந்தப் புதிய எழுச்சிக்காக மக்களைத் தயாரிப்பது கட்சியின் கடப்பாடு என்று போல்ஷவிக்குகள் கருதினர்'' (சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷவிக்) கட்சி வரலாறு, பக் 207, மாஸ்கோ வெளியிடு, 1952)

புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதும்—புரட்சி அலை ஓங்குவதும்—போதிய அளவு முதிர்ச்சியுறாத காலகட்டங்களில் தற்காப்பு போர்த்தந்திரங்கள் வகுக்கப்படுகின்றன. தற்காப்புப் போர்த்தந்திரங்கள், பின்வாங்கும் போர்த்தந்திரங்களிலிருந்து வேறுபாடானவையும் உடனடியாகத் தவிர்க்க முடியாமல் வரப்போகும் தாக்குதல் போர்த்தந்திரங்களுக்கு முன் தயாரிப்புகளாகவும் அமைபவையாகும். "எதிர்காலப் போர்களுக்காக அணிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் சக்திகளைத் திரட்டிக் கொள்வதற்கும் ஒரு அவசியமான வழிமுறையாக தற்காப்புப் போர்த்தந்திரங்கள் தேவைப்படுகின்றன. அவை விதிவிலக்கின்றி எல்லா அரங்குகளிலுமான போராட்டத்தில் பங்கேற்கும் கடமையைக் கட்சியின் மீது சுமத்துகின்றன; எல்லா விதமான ஆயுதங்களையும், அதாவது, எல்லா அமைப்பு வடிவங்களையும் முறையான ஒழுங்கமைவுக்கு கொண்டுவரும் கடமையைக் கட்சியின் மீது சுமத்துகின்றன; பார்ப்பதற்கு மிகவும் முக்கியமற்றது போல் தோன்றினாலும்கூட எந்த ஒரு அமைப்பு வடிவத்தையும் புறக்கணிக்கக் கூடாது. ஏனெனில் போரின் முதல் அரங்கு எதுவாக இருக்கும் என்றோ, தீர்மானகரமான போர்கள் தொடங்கிய பிறகு இயக்கத்தின் எந்த வடிவம் அல்லது அமைப்பின் எந்த வடிவம் தொடக்கப் புள்ளியாகவும், எந்த ஆயுதம் சாத்தியமானதாகவும் இருக்கும் என்றோ முன்கூட்டி எவரும் கூற இயலாது.

வேறு சொற்களில் கூறுவதானால் தற்காப்பு மற்றும் சக்திகளைத் திரட்டிக் கொள்ளும் காலத்தில் தீர்மானகரமான போர்களை எதிர்நோக்கித் தன்னைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். போர்களை எதிர்நோக்கி... ஆனால் கட்சி கைகட்டி காத்திருக்க வேண்டுமென்பதும் (எதிர்க்கட்சியாக அது இருக்கும்போது) ஒரு புரட்சிகரக் கட்சியாக இருப்பதிலிருந்து காத்திருந்து பார்ப்போம் என்னும்படியாக ஆக்கங்கெட்ட பார்வையாளனாக கட்சி சீரழிய வேண்டும். என்பதும் இதன் பொருளா? இல்லை, அப்படி இல்லை. அவசியமான அளவு சக்திகளைக் கட்சி இன்னும் திரட்டவில்லை என்றால் அல்லது கட்சிக்கு நிலைமைகள் பாதகமாக இருக்குமென்றால் இப்படிப்பட்ட காலத்தில் கட்சி போர்களைத் தவிர்க்க வேண்டும்; அவற்றை ஏற்கக் கூடாது. ஆனால் சாதகமான நிலைமைகளின் போது, எதிரிக்குப் பாதகமானதாக இருக்கும் பட்சத்தில் எதிரியைப் போருக்குக் கட்டாயப்படுத்துவதற்கு எதிரியை நிரந்தரமாக ஒரு பதட்ட நிலையில் வைத்திருக்க, படிப்படியாக அவனையும் அவனது படைகளையும் சின்னாபின்னப் படுத்தவும் மனோபலத்தை இழக்கச் செய்யவும் பாட்டாளி வர்க்கத்தினுடைய அன்றாட நலன்களைப் பாதிக்கும் போராட்டங்களில் பாட்டாளி வர்க்க சக்திகளை ஈடுபடுத்தி, இத்தகைய வழியில் படிப்படியாக நமது சக்திகளை அதிகரித்துக் கொள்வதற்கான எந்தவொரு வாய்ப்பையும் கட்சி தவறவிடக் கூடாது.

''இதைச் செய்தால் மட்டுமே, தற்காப்பானது ஆக்க பூர்வமான தற்காப்பாக இருக்க முடியும். வெறும் ஆலோசனைகளிலேயே மூழ்கி 'காத்திருந்து பார்ப்போம்' என்னும் தன்மைகளைக் கொண்ட கட்சியாக இராமல், உண்மையான நடவடிக்கைகளுக்கான கட்சி என்பதற்கான குண நலன்களை கட்சி பேணிக் காத்துக் கொள்ள முடியும். அப்போது மட்டுமே கட்சி தீர்மானகரமான நடவடிக்கைகளுக்கான தருணத்தை தவறவிடுவதை, ஊன்றிக்கவனிக்காது விடுவதை, எதிர்பாராத நிகழ்ச்சிகளால் அதிர்ச்சிக்கு உள்ளாவதைத் தடுக்க முடியும்.'' (ஸ்டாலின், தொகுதி-5, பக். 79-80)

செயலூக்கமிக்க போர்த்தந்திரங்களையே மார்க்சிய-லெனினியவாதிகள் வகுத்திட வேண்டும். ஆனால் திரிபுவாதிகள் பொறுத்திருந்து பார்க்கும் செயலூக்கமற்ற போர்த்தந்திரங்கள் அல்லது நிகழ்ச்சிப் போக்கின் வகைப்பட்ட போர்த்தந்திரங்களை வகுப்பதன் மூலமாக எப்பொழுதும் எச்சரிக்கை விட்டுக் கொண்டே மந்தகதியில் இயங்குவதும், புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகும் போதும்—புரட்சி அலை ஓங்கும் போதும் தாக்குதல் போர்த்தந்திரங்களை வகுத்து செயல்படுத்தவோ நிலைமைகள் முதிர்ச்சியுறும்போது அதிகாரத்தைக் கைப்பற்றும் புரட்சிகர இயக்கங்களைக் கட்டவிழ்த்து விடவோ முன்முயற்சியின்றி செயலுக்கமின்றி பின்தங்கி விடுகின்றனர்.

''செயலூக்க மிக்க தற்காப்பிற்குத் தாக்குதல் தற்காப்பு அல்லது தீர்மானகரமான சண்டைகளைப் பெறுவதற்கான தற்காப்பு என்று பெயர். செயலூக்கமற்ற தற்காப்பிற்குச் சுத்தத் தற்காப்பான தற்காப்பு அல்லது சுத்தத்தற்காப்பு என்று பெயர். செயலூக்கமற்ற தற்காப்பு உண்மையில் போலியான தற்காப்பே. உண்மையான ஒரு தற்காப்பு செயலூக்கமிக்க தற்காப்பே, திருப்பித் தாக்குவதும், தாக்குதலில் இறங்குவதுமான நோக்கத்திற்கான தற்காப்பே'' (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவ படைப்புகள், பக்-200)

ஆனால் செயலூக்கமிக்க தற்காப்பும்கூட கேடாகவும் தாறுமாறாகவுமின்றி புறநிலை மற்றும் அகநிலை வரம்புக்குட்டும் நெறிப்படுத்தப்பட்டுமிருக்க வேண்டும். ஏனெனில், ''மற்றொருபுறம், செயலூக்கமிக்க தற்காப்பு போர்த்தந்திரங்களை, நடவடிக்கைகளுக்கான போர்த்தந்திரங்களை தவறாகப் பயன்படுத்திவிடவும் கூடாது என்பதுவும் கூடத் தெரிந்ததே. ஏனெனில் அவ்வாறு தவறாகப் பயன்படுத்துவது பொதுவுடமைக் கட்சியின் புரட்சிகரமான நடவடிக்கைகளுக்கான போர்த்தந்திரங்களை 'புரட்சிகர' உடற்பயிற்சிகளுக்கான போர்த்தந்திரங்களாக மாற்றப்பட்டுவிடும் அபாயத்தை தோற்றுவிக்கும்; அதாவது, பாட்டாளி வர்க்கத்தின் சக்திகளை திரட்டுவதற்கும் நடவடிக்கைகளுக்குமான அவர்களது கூடுதலாகி வரும் தயாரிப்புக்கும் இட்டுச்செல்லாத, ஆனால் அதே சமயம் பாட்டாளி வர்க்க சக்திகள்

ஒன்றுமில்லாது போவதற்கும், நடவடிக்கைகளுக்கான அவர்களது தயார்நிலை மேம்படைவதற்கும் இட்டுச் செல்லும். எனவே, இவை புரட்சியின் லட்சியத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு இட்டுச்செல்லும் போர்த்தந்திரங்களாக மாற்றப்பட்டு விடும் அபாயத்தைத் தோற்றுவிக்கும்'' (ஸ்டாலின், தொகுதி 5, பக்கம் 18).

புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகும்—புரட்சி அலை ஓங்கும்—பருண்மையான நிலைமைகளுக்கேற்ப அந்தக் குறிப்பிட்ட தருணத்திற்கு தாக்குதல் போர்த்தந்திரங்கள் வகுத்து செயல்படுத்தப்பட வேண்டும்.

''சிங்காங் மலைகளுக்கெதிரான கோமிண்டாங்கின் மூன்றாவது 'சுற்றி வளைத்து நசுக்கும்முறை' நடவடிக்கை எதிர்ப்புரட்சிப் பேரெழுச்சியின் மிக உயர்ந்த மட்டத்தைக் காட்டுகின்றது. ஆனால் அவ்வுயர் மட்டம் அத்துடன் நின்றுவிட்டது. அது முதல் எதிர்ப்புரட்சிப் பேரெழுச்சி படிப்படியாகத் தணிந்து வந்துள்ளது; புரட்சிப் பேரெழுச்சி படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது. கட்சியின் போராற்றலும் அமைப்பு ரீதியிலான வலிமையும் மத்தியக் கமிட்டியாற் கூறப்பட்ட அளவிற்குப் பலவீனப்படுத்தப்பட்டு இருப்பினும் எதிர்ப்புரட்சி பேரெழுச்சி படிப்படியாகத் தணியத்தணிய அவை விரைவாக மீட்கப்படுவதோடு, கட்சி ஊழியர்களிடையேயுள்ள ஊக்கமற்ற மனோபாவமும் விரைவாக மறைந்துவிடும் பரந்துபட்ட மக்கள் நிச்சயமாக எம்பக்கம் வருவார்கள். படுவதைவாதம் உண்மையில் 'மீன்களை ஆழமான நீருக்குள் ஓடச்செய்வது' போலுள்ளது. அத்துடன் சீர்திருத்தவாதத்தால் இனிமேலும் பொது மக்களை ஈர்க்க முடியாது. பொது மக்கள் கோமிண்டாங் பற்றிய பிரமைகளை விரைவில் களைந்து விடுவர் என்பதில் ஐயமில்லை. இனித்தோன்றும் நிலைமையில் பொதுமக்களை வென்றெடுப்பதில் பொதுவுடைமைக் கட்சியுடன் வேறெந்தக் கட்சியும் போட்டியிட இயலாது.'' ''கட்சியின் தற்போதைய கடமை ('பெரிய நகரங்களில்' என்ற வார்த்தை இங்கே சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்) பொதுமக்களை வென்றெடுப்பதே அல்லாது உடனடியான கிளர்ச்சிகளைத் தோற்றுவிப்பதல்ல. எப்படியிருப்பினும் புரட்சியானது தீவிரமாக வளர்ச்சியடையும். ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகளுக்கான பிரச்சாரத்திலும் தயாரிப்புகளிலும் நாம் ஒரு ஊக்கமான மனோபாவத்தை மேற்கொள்ள வேண்டும். தற்போதைய அல்லோல கல்லோலமான நிலைமையிலும் நாம் ஊக்கமான முழக்கங்களாலும் ஊக்கமான மனோபாவத்தினாலும் மட்டுமே பொதுமக்களை வழிநடத்த முடியும். இப்படியானதோர் ஊக்கமான மனோபாவத்தைக் கொள்வதனால் மாத்திரமே கட்சி தனது போராற்றலைத் திரும்பப்பெற முடியும்...பாட்டாளி வர்க்கத் தலைமையே புரட்சியின் வெற்றிக்கான ஒரே திறவுகோல். கட்சிக்கு பாட்டாளி வர்க்க அத்திவாரமிடுதல், கேந்திர பிரதேசங்களிலுள்ள தொழிற்சாலைகளில் கட்சிக்கிளைக்

கட்டியமைத்தல் ஆகியனவே அமைப்பு ரீதியில் கட்சியின் தற்போதைய முக்கிய கடமையாகும்; ஆனால் அதேவேளையில் நகரங்களிலுள்ள போராட்டத்திற்கு உதவி செய்வதற்கும் புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவதற்குமான பிரதானமான முன்கூட்டிய தேவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டுப்புறங்களில் போராட்டத்தின் வளர்ச்சியும் சிறிய பிரதேசங்களில் சிவப்பு அரசியலதிகாரத்தை நிறுவலும் செஞ்சேனையின் உருவாக்கமும் விரிவாக்கமுமாகும். ஆகவே, நகரங்களில் போராட்டத்தைக் கைவிடுவது தவறாகும். அத்துடன் எமது கருத்துப்படி, விவசாயிகளின் பலம் வளர்ந்து, தொழிலாளர் பலத்தை விஞ்சி, புரட்சிக்கு ஊறு விளைவிக்கலாம் என்று எமது கட்சி உறுப்பினர்கள் யாராவது அஞ்சுவதும் தவறாகும்'' (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவ படைப்புகள், பக்கம் 125-27)

நீண்டகால மக்கள்யுத்தப்பாதையை ராணுவ யுத்ததந்திரமாகக் கொண்டுள்ள ஜனநாயகப் புரட்சியில் இந்த அடிப்படையில் நகர்ப்புறங்களில் ஒன்றாகவும் கிராமப்புறங்களில் வேறொன்றாகவும்—எதிர்ப்புரட்சி மையங்களில் ஒன்றாகவும் புரட்சி மையங்களில் வேறொன்றாகவும் புரட்சியின் ஏற்றத் தாழ்வான வளர்ச்சிக்கேற்றவாறு இரண்டு தொகுதிகளிலான போராட்ட வடிவங்களையும், அமைப்பு வடிவங்களையும், வெவ்வேறு படிகளிலான வளர்ச்சியையும் போர்த்தந்திரங்கள் கொண்டிருக்கும். ஆனால் போர்த்தந்திரத்திற்கு அரசியல் நடத்தை வழி, முழக்கங்கள், குறிக்கோள் மற்றும் தாக்குதல் அல்லது தற்காப்புத்தன்மை ஒரே மாதிரியானவைகளாக இருக்கும். இவையே நடைமுறை ரீதியாக நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற போராட்டங்களையும் அமைப்புகளையும் இணைப்பதற்கான அரசியல் அடிப்படைகளாகும்.

ஒரு அரைக்காலனிய - அரை நிலப்பிரபுத்துவ நாட்டில், மக்கள்யுத்தப்பாதை என்னும் யுத்ததந்திரத்தின் வழிகாட்டுதலின்படி செஞ்சேனை, கொரில்லாப்படைகள், செம்பிரதேசங்கள் ஆகியவற்றின் ஸ்தாபிதமும் வளர்ச்சியும் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான விவசாயிகளது போராட்டத்தின் மிக உயர்ந்த வடிவமாகவும், விவசாயிகளது போராட்டத்தின் நிச்சயமான விளைவாகவும் விளங்குவதோடு அவை நாடு பூராவும் புரட்சியின் பேரெழுச்சியைச் சந்தேகத்துக்கிடமின்றித் துரிதப்படுத்தும் மிக முக்கியமான அம்சமாகவும் விளங்குகின்றன. தளப்பிரதேசங்களிலிருந்து செங்சேனை அலை அலையாக முன்னேறி நகரங்களைச் சுற்றி வளைத்து இறுதியில் நாடு தழுவிய வெற்றியை ஈட்டுவதற்கான முன்தேவையாக அமையும் புரட்சிகரப் பேரெழுச்சியை உருவாக்கும் வழியாக இருக்கும் அதே வேளையில் இறுதி வெற்றியை ஈட்டுவதற்கான அடிப்படைகளில் ஒன்றாகவும் இவை அமைகின்றன. எனவே, செஞ்சேனையையும் கொரில்லாப் படையையும் மற்றும் சிகப்பு அரசியல் அதிகாரம், தளப்பிரதேசம் ஆகியவைகளை நிறுவி உறுதியடையச் செய்து விரிவடையச் செய்வதன் மூலமாகத்தான் நாடு தழுவிய புரட்சிப்

பேரெழுச்சியைத் துரிதப்படுத்த முடியும் என்ற அரசியல் மற்றும் ராணுவ யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த குறிக்கோள் தான் பொதுவில் தற்காப்பு மற்றும் தாக்குதல் போர்த்தந்திரங்களை வழிநடத்துகின்றது.

எனவே நகர்ப்புறங்களைப் பொருத்தவரை உடனடியாக அரசியல் அதிகாரத்தைக் கைபபற்றும் தன்மையுடைய போர்த்தந்திரங்கள் புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகும்போது கூட, புரட்சியின் அலை ஓங்கும்போது கூட, இருக்ககாது. ஆனால் ஒப்பீட்டு ரீதியில் முன்னேறிய தொழில் வளர்ச்சி, மத்தியத்துவப் படுத்தப்பட்ட, முறையிலான அதிகார வர்க்க ராணுவ அரசு எந்திரம். நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை, ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடும். மோதலும் வனமுறை ரீதியிலானவையாக வெடிககாமலிருப்பது போன்ற இந்திய நிலைமைகளுக்கே உரித்தபன இன்றைய காலகட்ட தனிச்சிறப்பான குணாம்சங்கள் காரணமாக நகர்ப்புறங்களிலும் எதிர்ப்புரட்சி மையங்களிலும் அரசியல் போராட்டங்களை அமைப்பாக்கி அணிதிரட்டுவதோடு பொருந்தும் பொழுதுதான் சிகப்பு அரசியலதிகாரத்தை நிறுவுவதும், தளப் பிரதேசங்களை நிறுவுவதும், தற்காப்பு போர்த்தந்திரங்களின்போது அவற்றைத் தக்கவைத்துக் கொள்வதும், தாக்குதல் போர்த்தந்திரங்களின்போது துணிகரமாக விரிவடையச் செய்வதும் சாத்தியம். இத்தனிச்சிறப்பான அம்சங்களுடன் மாவோவின் வழிகாட்டுதல், ஏற்கனவே கூறப்பட்ட லியூ-ஷோ-சியின் வெள்ளைப் பிரதேசங்களில் போர்த்தந்திரங்கள் பற்றிய கருத்துகள் இவையே பின்பற்றப்பட வேண்டும். எனவே புரட்சி அலை ஓங்கும்போது, புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகும்போது தளப்பிரதேசங்களையும் சிகப்பு அரசியலதிகாரத்தையும் நிறுவுவதும் அவை விரிவடைவதும் ஒப்பிட்டு ரீதியில் துணிகரமானதாகவும், ராணுவ நடவடிக்கைகளால பிடிக்கப்படும் பிரதேசம் ஓப்புநோக்கில் பெரியதாகவும் இருக்கலாம்; பிற காலகட்டங்களில் விரிவடைவது படிப்படியாக மட்டுமே இருக்கும். யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு, யுத்ததந்திர ரீதியிலான சமநிலை, யுத்ததந்திர ரீதியிலான எதிர்த்தாக்குதல் ஆகிய எல்லா கட்டங்களிலும் வகுக்கப்படும் போர்த்தந்திரங்கள் இந்த வரம்புகளுக்குட்பட்டே இருக்கும். நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சியான—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதான — குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் காலகட்டங்களில் கிராமப்புறங்களிலில் இருந்து—தளப்பிரதேசங்களிலிருந்து—மக்கள் விடுதலைப் படையின் பொதுத்தாக்குதல் தொடுத்து துணிகரமாக அலை அலையாக முன்னேறி இறுதியில் நகரங்களைச் சுற்றி வளைத்துக் கைப்பற்றுவதோடு இணைந்த நகர்ப்புற உள்ளூர் அரசியல் வேலை நிறுத்தங்கள் அரசியல் ஆர்ப்பாட்டங்கள், தடுப்புச்சுவர் போராட்டங்கள், பொது வேலைநிறுத்தங்கள், ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிகள் ஆகிய போராட்ட வடிவங்கள் அதிகாரத்துக்கான புரட்சிகர முழக்கங்கள் மற்றும் இவற்றுக்குப் பொருத்தமான புரட்சிகர அமைப்பு வடிவங்கள்— வேலை நிறுத்தக்

கமிட்டிகள், போராட்டக் கமிட்டிகள், எழுச்சி மற்றும் அதிகாரத்துக்கான கமிட்டிகள்—இவை அனைத்தும் அடங்கிய தாக்குதல் போர்த்தந்திரங்கள் வகுக்கப்படும்.

போர்த்தந்திரங்களின் நோக்கம் பொதுவாக குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப — புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது, புரட்சி அலை ஓங்குவது அல்லது ஓய்வதற்கேற்ப — யுத்ததந்திர வெற்றிக்காக பரந்துபட்ட மக்களைப் போரிடும் அரங்கத்தின் சமுதாய அணிவரிசையில் — யுத்ததந்திரத்தில் விவரித்துள்ள சக்திகளைப் பிரித்தொதுக்கும் திட்டத்தின்படி பருண்மையாக — கொண்டுவந்து நிறுத்துவதற்கான அரசியல் நடத்தைவழியையும், முழக்கங்களையும், போராட்ட வடிவங்களையும், அமைப்பு வடிவங்களையும் தீர்மானிப்பதும் அவற்றை நிறைவேற்றுவதுமாகும். மேலும் தெளிவாகச் சொல்வதானால், இதன் நோக்கம் முன்னணி மட்டுமின்றி மொத்தப் பாட்டாளி வர்க்கமும், பிற பரந்துபட்ட புரட்சிகர மக்களும் தமது சொந்த அனுபவத்தின் மூலம் தவிர்க்கமுடியாமல் ஆளும் வர்க்கங்களது பழைய ஆட்சி, அரசு நீடிக்கமுடியாது, நீடிக்கக்கூடாது, தூக்கியெறிய வேண்டும் என்பதை உணர்த்தக் கூடிய போராட்ட வடிவங்களையும் அமைப்பு வடிவங்களையும் அதேபோன்று பரந்துபட்ட மக்கள் மிகச்சுலபமாக புரிந்துகொள்ளக் கூடிய சரியான புரட்சிகர முழக்கங்கள் மூலம் உணரவைப்பதாகும். எல்லாப் போர்த்தந்திரங்களுமே இந்த நோக்கத்தை உடையவையாக இருப்பினும் போர்த்தந்திரங்கள் யுத்ததந்திர நோக்கத்தை விட—ஒரு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப—குறைந்த முக்கியத்துவமுடைய மோதலில், கைகலப்பில் பிரச்சினைகளில் வெற்றிகொள்வதை நோக்கமாகக்கொண்டவை. அதாவது எடுத்துக்கொள்ளும் குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமையின் உயிராதாரமான பிரச்சினையை மையமாக வைத்து பாட்டாளி வர்க்கக் கட்சி எடுக்கும் அரசியல் நடத்தைவழியில் வெற்றியடைவதையும் அதன் வாயிலாக மேற்கண்ட யுத்ததந்திர நோக்கத்தைப் பூர்த்தி செய்வதையும் குறிக்கோளாக ஒவ்வொரு போர்த்தந்திரமும் கொள்ளுகிறது.

சான்றாக, (1) பாசிச ஆட்சி நிறுவப்படும்பொழுது பாசிச எதிர்ப்பு, பாசிச ஆட்சி தூக்கியெறியப்பட்டு ஜனநாயக ஆட்சி நிறுவப்படுவது; (2) துணை வல்லரசு விஸ்தரிப்புக்கொள்கை உடைய இந்தியா போன்ற நாடுகளில் யுத்த எதிர்ப்பு, சொந்த நாட்டு ஆளும் வர்க்கங்களைத் தோற்கடிப்பது; (3) அந்நிய நாடுகள் குறிப்பாக ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்பு—இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய ஏகாதிபத்தியங்களின் நவீன காலனிய முறைகளிலான ஆக்கிரமிப்பு—மற்றும் மேலாதிக்க எதிர்ப்பும், அவற்றை முறியடிப்பதும் போன்ற குறிப்பிட்ட தருணத்தின் உயிராதாரமான பிரச்சினையை மையமாகக் கொண்ட அரசியல் நடத்தைவழி வகுக்கப்படும். குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்பவும், அரசியல் நடத்தைவழிக்கு ஏற்பவும், போர்த்தந்திரங்களின் வரம்பு

அல்லது வீச்சு எந்த அளவு முன்னேறித் தாக்குவது அல்லது பின்வாங்குவது என்பது தீர்மானிக்கப்படுகிறது. தாக்குதல் போர்த்தந்திரங்களின் கீழ் நாடு தழுவிய ரீதியிலோ பகுதி ரீதியிலோ அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலிருந்து பின்வாங்கும் போர்த்தந்திரங்களின் கீழ் புரட்சி இயக்கத்தின் வெள்ளம் வடிவது—புரட்சியின் அலை ஓய்வதைப் பொருத்து அதிக பட்சம் சாத்தியமான அளவு அணிகளைத் தக்கவைத்து திறமையாகக் காப்பதற்கான வரம்பு, சறுக்கி விழுவதை புரட்சியின் அலை ஓய்வதை, புரட்சியின் வெள்ளம் வடிவதை—குறிப்பிட்ட எல்லைக்குள் தடுத்து நிறுத்துவது வரை பல்வேறு நிலைகளில் போர்த்தந்திரங்களின் வீச்சு அல்லது வரம்பின் எல்லையில் போராடும் அரங்கினுடைய சமுதாய அணி வரிசையில் கொண்டு வந்து பரந்துபட்ட மக்களை நிறுத்திப் போராடுவதன் மூலம் அவர்களது சொந்த அனுபவத்தால் தற்போதைய ஆட்சியும், அரசும் நீடிக்க முடியாது, நீடிக்க கூடாது, தவிர்க்க முடியாமல் தூக்கியெறியப்பட வேண்டும் என்பதை உணர்த்துவதுதான் குறிப்பிட்ட போர்த்தந்திரத்தின் நோக்கம் (குறிக்கோள்) ஆகும்

## போர்த்தந்திரக் காலகட்டங்களில் பாட்டாளி வர்க்கக் கட்சியினுடைய அரசியல் நடத்தைவழி:

குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளை ஆய்ந்தறிந்து வந்தடையும் போர்த்தந்திர அரசியல் கோட்பாட்டு முடிவுகளின்படி மையமாக, உயிராதாரமானதாக நாடு முழுவதற்குமாக, அனைத்து வர்க்கங்களுக்குமாக அமையும் அரசியல் பிரச்சினையின்பால் பாட்டாளி வர்க்கக்கட்சி மேற்கொள்ளும் அரசியல் கண்ணோட்டம் மற்றும் போக்கு; மோதிக்கொள்ளும் வர்க்கங்களுக்கிடையே உள்ள உறவைப் பொருத்தும் அவற்றின் நிலைப்பாடுகளைப் பொருத்தும், அவற்றோடு பாட்டாளி வர்க்கக்கட்சி அமைத்துக் கொள்ளும் உறவு; அதாவது யுத்ததந்திரத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் சக்திகளைப் பிரித்தொதுக்கும் திட்டத்தைப் பருண்மையாகப் பிரயோகிப்பதும், பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்பப் பொருத்தமாக நேரடி மற்றும் மறைமுக சேமிப்புகளை (ரிசர்வுகளை) இன்றைய போர்த்தந்திரக் காலகட்டத்தில் எவ்வாறு, எவைகளைப் பயன்படுத்துவது என்பதைத் தீர்மானிப்பதும், கையாள்வதும், அதாவது போர்த்தந்திரக் காலகட்டத்துக்கான நண்பர்களையும் எதிரிகளையும் தீர்மானித்து பிரதான எதிரிக்கு எதிராக இடைத்தட்டு வர்க்கங்களையும் சக்திகளையும் வென்றெடுப்பதும் ஊசலாட்டக்காரர்களையும், சமரசவாதிகளையும் தனிமைப்படுத்தி முடக்குவதும்—இவை அனைத்தும் அடங்கியவையே அரசியல் நடத்தைவழி ஆகும்.

ஒரு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்ப மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையின் அடிப்படையில் சரியான அரசியல் நடத்தைவழியைத் தீர்மானிப்பதில்தான் பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் கட்சியினதும்

முன்னணி மற்றும் தலைமைப்பாத்திரத்தின் உண்மையான தகுதியும் திறமையும் தங்கியிருக்கிறது. குறிப்பிட்ட போர்த்தந்திர காலகட்டத்தின் உயிராதாரமான, நாடுமுழுவதற்குமான, அனைத்துப் புரட்சிகர வர்க்கங்களையும் பாதிக்கும்படியான அரசியல் பிரச்சினையை மையமாகக் கொண்டு அரசியல் நடத்தைவழியை ஒரு திட்டவகைப்பட்டதாக வகுத்து அதனுடன் தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள் இன்னும் பிற பிரிவினர் மற்றும் வர்க்கத்தினருடைய அன்றாட, பகுதி அடிப்படையிலான அரசியல்,சமூகப், பொருளாதார பிரச்சினைகளையும் போராட்டங்களையும் இணைக்க வேண்டும். பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் கட்சியினதும் அரசியல் நடத்தைவழியைப் பற்றிநிற்பதிலேதான் பரந்துபட்ட மக்களது அன்றாடக் கோரிக்கைகளின் —பகுதிக்கோரிக்கைகளின் —தீர்வுக்கான உத்திரவாதத்தோடு அவர்களின் அடிப்படை கோரிக்கைக்கான —அரசியல், சமுதாய பொருளாதார மாற்றத்துக்கான— தீர்வும் தங்கியிருக்கிறது என்பதை உணர்த்த வேண்டும். அதன் மூலமாகத்தான் புரட்சியின் யுத்ததந்திரக் குறிக்கோளை ஈடேற்றுவதற்கான அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணியாகிய பரந்துபட்ட மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் தற்போதைய அரசும் ஆட்சியும் நீடிக்க முடியாது, நீடிக்கக் கூடாது, தவிர்க்க முடியாமல் அதைத் தூக்கியெறிய வேண்டும் என்பதை உணர முடியும். புரட்சிக்கான தயாரிப்பில் யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் போர்த்தந்திரப் பணியைப் புறக்கணித்து பொதுவில் புரட்சிக்காக மக்கள் பலத்தை திரட்டுவதாக தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு அலுவலர்கள், மாணவர்கள், இளைஞர்களுக்கான பகுதிக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களை மட்டும் நடத்துவதன் மூலம் திரிபுவாதிகளும் பொருளாதார வாதமென்னும் சக்திக்குள் மூழ்கி விட்டனர். இக்காரணத்தினாலேயே பிற மார்க்சிய—லெனினியக் குழுக்களும்கூட பொருளாதார வாதத்தையே முன்வைப்பதாகக் கூறுகிறோம். மற்றொரு புறம், சாருவும், பிற இடது சந்தர்ப்பவாதிகளும் நாடுதழுவிய ரீதியிலானதும் பரந்துபட்ட மக்களை பாதிக்கக்கூடியதுமான, உயிராதாரமான அரசியல் பிரச்சினைகள் அனைத்தையும் இவை முதலாளித்துவ அரசியல் எனப் புறக்கணித்து 'குறிப்பிட்ட சில கிராமங்களில் குறிப்பிட்ட சில நிலப் பிரபுக்களுக்கு எதிராக' என்ற வரம்புக்குட்பட்டு அராஜகவாதத்தை மேற்கொள்ளுகின்றனர்.

பாட்டாளி வர்க்கக்கட்சி பின்வரும் நெறிமுறைகளை வழுவாது பற்றிநின்று தனது அரசியல் நடத்தைவழியை வகுத்துக் கொள்ள வேண்டும். அவை: 1. அரசியல் யுத்ததந்திரத்தின் பொதுத்திசைவழி, பொதுப்பாதை, சமுதாய அரங்கில் சக்திகளைப் பிரித்தொதுக்கியிருக்கும் பொதுத் திட்டத்தால் வழிநடத்தப்பட வேண்டும்; யுத்ததந்திர விதிகள் மற்றும் நெறிமுறைகளால் வழி நடத்தப்பட வேண்டும். ஏனெனில் போர்த்தந்திரங்கள் யுத்ததந்திரத்தின் ஒரு பகுதியும், கீழ்படிதலானவையும், அதற்குச் சேவை செய்பவையும் ஆகும். ஐக்கிய முன்னணி பற்றி, குறிப்பாக தேசிய முதலாளிகளுடன் ஒரு புரட்சிகர

தேசிய ஐக்கிய முன்னணி நிறுவியிருக்கும்போதும் அல்லது அதை உடைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படும்போதும் சரியான அரசியல் நடத்தை வழியைப் பின்பற்றுவது இந்தியப் புரட்சி நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியப் புரட்சியும் இணைந்ததாக இருப்பதால் இது முக்கியத்துவப் பெறுகிறது; அரசியல் போராட்டத்துக்கும் ஆயுதப் போராட்டத்துக்கும் இடையிலான உறவைச் சரியாகக் கையாள்வது ஆயுதந்தாங்கிய எதிர்ப் புரட்சியுடன் ஆயுதந்தாங்கிய புரட்சி போரிடும் விசேஷமான சாதகமான நிலைமையின்றி இருப்பதாலும் முதலாளித்துவ முறையிலான அரசு வடிவமுறை மற்றும் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையினாலும் இது மேலும் கூடுதலான முக்கியத்துவம் பெறுகிறது; ஐக்கிய முன்னணி, அரசியல் போராட்டம் மற்றும் ஆயுதப் போராட்ட உறவு ஆகிய இந்தியப் புரட்சியின் இரு தனிச்சிறப்பான குணாம்சங்களினால் பொதுவுடமைக் கட்சி கட்டும் முறை மற்றும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமையை நிறுவும் முறை விசேஷமான அம்சமாக இருக்கிறது. இத்துடன் விவசாயிகளது விவசாயப் புரட்சி மற்றும் நீண்டகால மக்கள் யுத்தப்பாதை ஆகிய யுத்ததந்திர விதிகளாலும் நெறிமுறைகளாலும் போர்த்தந்திர அரசியல் நடத்தைவழி வழிநடத்தப்படவேண்டும்.

2. ஆளும் வர்க்கங்களுடனும் அவற்றின் அரசியல் சக்திகளுடனும் சமரசப் படுத்திக் கொள்வதன் மூலம் சேமிப்பு சக்திகளை திசை திருப்பிச் செல்லும் வர்க்கங்களையும் அவற்றின் அரசியல் சக்திகளையும் அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்துவதன் மூலம் —ஊசலாட்ட மற்றும் சமரச சக்திகளை முடமாக்குவதன் மூலம் —சேமிப்பு சக்திகளை வென்றெடுக்க வேண்டும். இது யுத்ததந்திரத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள பிரதான தாக்குதல் திசையின் பருண்மையான பிரயோகமாகும். சமரச சக்திகள் புரட்சியின் எதிரிகளினுடைய மிகவும் அபாயகரமான சமூக ஊன்றுகோல்களாகும்—ஆதரவு அடிப்படை சக்திகளாகும். இச்சக்திகளைத் தனிமைப்படுத்தாமல் எதிரிகளைத் தூக்கியெறிவது சாத்தியமே இல்லை. புரட்சிக்கான தயாரிப்புக் கால கட்டங்களில் பிரதான ஆயுதம் — பிரதான முனை சமரச சக்திகளைத் தனிமைப்படுத்துவதை நோக்கி, உழைக்கும் பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பதை நோக்கித் திருப்பி விடப்பட வேண்டும். அதன் மூலமாகத்தான் எதிரிகளுக்கும் இடைத்தட்டு வர்க்கங்களுக்கும் இடையிலான நேரடி மோதல் ஏற்பட முடியும்; இந்நேரடி மோதல்தான் புரட்சியின் வெற்றியை உத்திரவாதம் செய்யும்; பிரதான எதிரிக்கெதிரான வெற்றியைத் துரிதப்படுத்தும்; ஜனரஞ்சகமான கவர்ச்சியான முழக்கங்களும், சீர்திருத்தங்களும். சோசலிசத்தின் பெயரால் அதிகார வர்க்க ஏகபோக முதலாளித்துவமும், நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையும் கொண்டு பரந்துபட்ட மக்கள் திசை திருப்பி விடப்பட்டுள்ள நிலைமைகளில், காலனிய காலத்திலிருந்து ஆளும் வர்க்கங்கள் பரந்துபட்ட மக்களது போராட்டங்களை நிறுவனமயமாக்கும் கொள்கையைத் தீவிரமாகப் பின்

பற்றும் நிலைமைகளில், சமரச சக்திகளைத் தனிமைப்படுத்து வதற்கான முக்கியத்துவம் கூடுதலாகிறது.

3) புரட்சிகர மற்றும் எதிர்ப்புரட்சிகர சக்திகளின் சேர்க்கைகளில் ஏற்படும் மாறுதல்களைச் சரியாக மதிப்பீடு செய்து எல்லா நேரடி, மறைமுக சேமிப்பு சக்திகளையும் பயன்படுத்திக் கொள்ளத் தவறக்கூடாது. பிரதான எதிரிக்கு எதிராக சாத்தியமான எல்லா இடைத்தட்டு சக்திகளையும் வென்றெடுப்பதும், ஊசலாட்ட மற்றும் சமரச சக்திகளை நடுநிலைப்படுத்துவதும் அல்லது முடமாக்குவதும் செய்யவேண்டும்.

"முதலாவதுவகைப்பட்ட சேமிப்பு சக்திகளைப் பொருத்தவரை அதாவது நேரடி சேமிப்பு சக்திகளைப் பொருத்தவரை இவற்றை விரிவாக விளக்கவேண்டுவது அவசியமில்லை. இரண்டாவது வகைப்பட்ட சேமிப்பு சக்திகளைப் பொருத்தவரை அதாவது, மறைமுக சேமிப்புச் சக்திகளைப் பொருத்தவரை இவற்றின் முக்கியத்துவம் சில வேளைகளில் தெளிவாகப் புலப்படுவதில்லை; சில வேளைகளில் புரட்சியின் முன்னேற்றத்துக்கு இவை தலையாய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதைக் கூறத்தான் வேண்டும்." (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள், பக்-84.)

எதிரிகளுக்கும் சமரச — சக்திகளுக்கும், எதிரிகளுக்குள்ளேயும் உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்திக்கொண்டு, தற்காலிக துணை சக்திகளைச் சேர்த்துக்கொண்டு, பிரதான எதிரிகளைத் தாக்குவதுதான் சக்திகள் அனைத்தையும் திரட்டி எதிரிகளை வெல்வதற்கான முக்கியமான முறையாகும்.

"எதிரியின் உள்முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு தற்காலிக துணை சக்திகளை வென்றெடுப்பது பற்றிய பிரச்சினைகளில் அந்த முரண்பாடுகளை உச்சகட்டத்திற்கு கொண்டு சென்று அவர்களைப் பிளவுபடுத்தி, நம்மோடு ஒத்துழைக்கக்கூடிய அந்த முகாமில் இருக்கும் சக்திகளோடு அல்லது இன்னும் நமது பிரதான எதிரியாக மாறாதவர்களோடு இணைந்து ஒரு தற்காலிகக் கூட்டை உருவாக்க வேண்டியது அவசியம் என்றும் நம்மோடு ஒத்துழைக்க விரும்பும் கூட்டாளிகளுக்கு அவசியமான சலுகைகளைத் தந்து நம்மோடு இணைந்து பொது நடவடிக்கையில் பங்குகொள்ள அவர்களைத் தூண்டுவதும், பிறகு அவர்களை நமது செல்வாக்கின் கீழ் கொண்டுவந்து அவர்களைப் பின்பற்றும் மக்களை வென்றெடுக்க வேண்டியதும் அவசியம்." (கட்சி வரலாற்றில் சில பிரச்சினைகள் பற்றிய தீர்மானம், மாவோ, தேர்ந்த படைப்புகள், பக்-341)

4) முதலாளித்துவ வர்க்கத்துடன் (குறிப்பாக, ஏகாதிபத்தியம் பிரதான எதிரியாகும்போது அதற்கெதிரான தரகு பெருமுதலாளித்துவ வர்க்கப்பிரிவுடன்) ஐக்கிய முன்னணி அமைப்பதில் பாட்டாளிவர்க்க அரசியல் கட்சி இரண்டு விலகல்களுக்கு எதிராக திடமான, கடுமையான போராட்டமொன்றை மேற்கொள்ள வேண்டும். ஒருபுறம், முதலாளி வர்க்கத்துடன் ஒரு குறிப்பிட்ட

காலத்திலும், ஒரு குறிப்பிட்ட அளவிலும் புரட்சிகரப் போராட்டத்தில் கலந்துகொள்ள ஐக்கிய முன்னணி ஒன்றினை உருவாக்கி அதை இயன்ற அளவிற்கு நிலைநிறுத்தும் கொள்கையை — சாத்தியப்பாட்டை — அலட்சியம் செய்யும் 'இடது சாரி' கதவடைப்பு வாதம்; மற்றொரு புறம், ஐக்கிய முன்னணியில் சுதந்திரத்தையும் முன்முயற்சியையும் பாதுகாக்கத் தவறுவது.

"பாட்டாளி வர்க்க கட்சியின் வேலைத்திட்டம், கொள்கை, சித்தாந்தம், நடைமுறை இன்னோரன்ன பிறவற்றை முதலாளித்துவ வர்க்கத்தினுடையவற்றைப் போல் கருதி இவற்றிற்கிடையே உள்ள வித்தியாசங்களை அலட்சியம் செய்வது என்ற தவற்றை எதிர்த்துப் போரிடுவதும் அவசியம். இத்தவறு முதலாளித்துவ வர்க்கம் (குறிப்பாக பெருமுதலாளித்துவ வர்க்கம்) குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் மீதும் விவசாயிகள் மீதும் தன் செல்வாக்கைத் தீவிரமாக செலுத்துவது மட்டுமின்றி பாட்டாளி வர்க்கத்தின் மீதும், பொதுவுடமைக் கட்சியின் மீதும் தன் செல்வாக்கைச் செலுத்தி, பாட்டாளி வர்க்கத்தினதும் பொதுவுடமைக்கட்சியினதும் சித்தாந்த அரசியல் அமைப்பு சுதந்திரத்தை அளிப்பதற்கும் அவற்றை முதலாளித்துவ வர்க்கத்தினதும் அதன் அரசியல் கட்சியினதும் தொங்குசதையாக மாற்றுவதற்கும் தானோ, தன் அரசியல் கட்சியோ தனியாக புரட்சியின் கனிகளை அறுவடை செய்வதற்கும் தன்னாலியன்ற மட்டும் முயலும் என்ற உண்மையை அலட்சியம் செய்வதில் அமைந்திருக்கிறது. அத்துடன் முதலாளி வர்க்கம் (குறிப்பாக பெருமுதலாளித்துவ வர்க்கம்) தன் சொந்த சுய நலன்களுடனோ, தன் சொந்த அரசியல் கட்சியின் சுயநலனுடனோ புரட்சி மோதும்போது புரட்சிக்குத் துரோகம் செய்யும் என்பதை அலட்சியம் செய்வதிலும் இந்தத்தவறு அமைந்திருக்கிறது. இவற்றை எல்லாம் அலட்சியம் செய்வது வலதுசாரி சந்தர்ப்பவாதமேயாகும்" (மாவோ, தேர்ந்த படைப்புகள், பக். 489-90)

முதலாளித்துவ — ஜனநாயகப் புரட்சியில் இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் இரட்டை குணாம்சம் காரணமாக நமது அரசியல் நடத்தைவழி அதன்பால் ஒற்றுமையும் போராட்டமும் ஆகிய இரட்டைக்கொள்கையை பின்பற்ற வேண்டியிருக்கிறது.
5) புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமையும், பிரதான சக்தி விவசாயிகள் என்பதையும் எல்லாப் போர்த்தந்திரங்களின் அரசியல் நடத்தைவழியும் உத்திரவாதம் செய்ய வேண்டும். புரட்சியில் பாட்டாளி வர்க்கம் மட்டுமே மிகவும் தொலைநோக்குடையது, அதி உயர்ந்த அரசியல் மற்றும் அமைப்புணர்வுடையது? மாறாக தேசிய முதலாளித்துவ வர்க்கம் பரந்துபட்ட மக்களைக் கண்டஞ்சுகிறது, பலவீனமானது, போதிய தைரியமற்றது; தொலை நோக்கில்லாதது. எனவே பாட்டாளிவர்க்கத் தலைமையின்றி புரட்சி வெற்றிபெறாது. கோட்பாடு ரீதியில் எல்லா போர்த்தந்திர காலகட்டங்களிலும் பாட்டாளி வர்க்கத் தலைமையை நிறுவிட முடியாமல் போகலாம், குறிப்பாக ஆரம்ப காலங்களில்-பலவீனமான அகநிலை வளர்ச்சியுடைய காலகட்டங்களில்-இம்மாதிரியான காலகட்டங்களில் இதைக் காரணங்காட்டி

ஐக்கிய முன்னணி பற்றிய விஷயத்தில் கதவடைப்புவாதத்தை மேற்கொள்வது தவறு. மாறாக பாட்டாளி வர்க்க கட்சி ஐக்கிய முன்னணியில் முற்று முழுதாக புரட்சியை சமரசமின்றி முன்னெடுத்துச் செல்லத் தேவையான முன்னிபந்தனைகளைப் பெற்றிருக்க வேண்டும். அதன் மூலம் தலைமையை உறுதி செய்ய வேண்டும். என்ன முன்னிபந்தனைகள் என்பது-ஆயுதப்படைபலம் விவசாயிகளது அமைப்பு பலம் போன்றவை—பருண்மையான நிலைமைகளுக்கேற்பத் தீர்க்கப்படும். ஆனால் இந்திய நிலைமைகளில் தேசிய முதலாளி வர்க்கம் தனித்துவமான முறையில் புரட்சிகரமான இயக்கங்களை என்றுமே வழி நடத்தியதில்லை என்ற கடந்தகால யதார்த்தம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான ஐக்கிய முன்னணியும், புரட்சிகர போராட்டமுமே சாத்தியம் என்றே காட்டுகின்றன. பாட்டாளி வர்க்கத் தலைமையைப் போன்றே விவசாயிகள், புரட்சியின் பிரதான உந்து சக்தி என்கிற முறையில் அணிதிரட்டப்படுவதும் மிக முக்கியமானது. ஏனெனில் இது விவசாயிகளது விவசாயப் புரட்சியை மையமாகக் கொண்ட ஜனநாயகப் புரட்சியாக இருக்கும் அதேவேளையில் தேசியப் புரட்சியாகவும் இருக்கும்; ''தேசியப் பிரச்சினையும் சாராம்சத்தில் விவசாயிகளது பிரச்சினையாகும்''. (ஸ்டாலின்) எனவே இந்தியப் புரட்சி சாராம்சத்தில் ஒரு விவசாயிகளது புரட்சி; புதிய ஜனநாயக அரசியலின் சாராம்சம் விவசாயிகளுக்கு உரிமைகளை வழங்குவதாகும். எனவே நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு பிரதானமானதாக நிலவும் இடைக்கட்டத்தில் 'நிலப்புரட்சியாகவும்' ஏகாதிபத்தியத்திற்கும் நாட்டிற்கும் இடையிலான முரண்பாடு பிரதானமுரண்பாடாகும் இடைக்கட்டத்தில் 'நிலச்சீர்திருத்தமாகவும்'—இவ்வாறு விவசாயிகளது பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கும்.

மேற்கண்ட ஐந்து நெறிமுறைகளையும் வழுவாது பற்றி நின்று பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் தனது போர்த்தந்திர அரசியல்நடத்தைவழியை வகுத்துக் கொள்ள வேண்டும். தனது அரசியல் நடத்தைவழியின் ஒரு அங்கமாக ஒவ்வொரு குறிப்பிட்ட இடைக்கட்டத்தின் பருண்மையான அரசியல் நிலைமைகளுக்கேற்ப புரட்சிகர மற்றும் எதிர்ப்புரட்சிகர சக்திகளின் சேர்க்கையில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப வகுக்கப்பட்டிருக்கும் உடனடிக் கோரிக்கை அல்லது குறித்த திட்டத்தை உள்ளடக்கி இருக்கும். ஒவ்வொரு இடைக்கட்டத்திற்கும் இவ்வாறு வகுக்கப்படும் உடனடிக் கோரிக்கைகள் அல்லது குறித்த திட்டம் குறிப்பிட்ட இடைக்கட்டத்திலேயே ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மயான நிலைமைகளில் ஏற்படும் புரட்சி இயக்கத்தின் வெள்ளம் வடிவது அல்லது பெருகுவது —புரட்சியின் அலை ஓய்வது அல்லது ஓங்குவதற்கேற்ப—அவற்றுக்குப் பொருத்தமாக வடிக்கப்படும் போர்த்தந்திரங்கள் மாறும் பொழுதெல்லாம் மாறாது. குறிப்பிட்ட இடைக்கட்டம் முழுவதும் குறித்த திட்டம் நீடிக்கும், ஆனால் போர்த்தந்திரங்கள் மாறும்.

குறித்த திட்டம் அல்லது உடனடிக் கோரிக்கைகள் என்பது கட்சியின் இன்றைய கட்டத்திலுடைய பொதுத்திட்டத்தின் அடிப்படையிலானவையாகவும் அதைவிட ஒப்புநோக்கில் குறைந்தபட்சத் திட்டமாகவும் — குறிப்பிட்ட இடைக்கட்டத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியதாகவும் இருக்கும்.

"இந்தப் பொதுவான திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு காலத்துக்குமான குறித்த திட்டத்தையும் நமது கட்சி கொண்டிருக்கவேண்டும். முதலாளித்துவ - ஜனநாயகப் புரட்சியின் காலகட்டம் முழுவதும், அதாவது சில பத்தாண்டுகளுக்கு புதிய ஜனநாயகம் என்ற வேலைத்திட்டம் மாறுதல் எதுவுமின்றியே இருக்கும். ஆனால் இந்தக்கட்டத்திற்குள்ளேயே, அடுத்தடுத்த இடைக்கட்டத்தில் சூழ்நிலைகள் மாறியுள்ளன அல்லது மாறிக்கொண்டிருக்கின்றன; இந்த மாறுதல்களுக்கேற்ப நமது குறித்த திட்டத்தை நாம் மாற்றவேண்டியது இயல்பானதே. உதாரணமாக, வடதிசைப் படையெடுப்பு, விவசாயப்புரட்சி யுத்தம், ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆகிய காலங்களில் அனைத்திலும் புதிய ஜனநாயகம் என்ற நமது பொதுத்திட்டம் மாறாமலிருந்து வந்துள்ளது; நமது குறித்த திட்டத்தில் மாறுதல்கள் செய்யப்பட்டு இருக்கின்றன; ஏனெனில், இந்த மூன்று காலங்களிலும் நமது நண்பர்களும் எதிரிகளும் அப்படியே மாறாமல் இருக்கவில்லை." (மாவோ, ஷை நூல், பக். 266-67)

கட்சியின், புரட்சியின் இன்றைய கட்டம் முழுவதற்குமான பொதுத்திட்டத்தின் அடிப்படையிலான சில அரசியல், சமூக மற்றும் பொருளாதார உடனடிக் கோரிக்கைகளை உள்ளடக்கிய குறித்த திட்டம் அந்தக் குறிப்பிட்ட இடைக்கட்டத்தின் எல்லா ஐக்கிய முன்னணி வர்க்கங்களின் அரசியல், சமூக, பொருளாதாரத் தேவைகளையும், குறிப்பாக விவசாயிகளினுடைய விவசாயத் திட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கி இருக்கும். குறிப்பிட்ட இடைக்கட்டத்தின் பிரதான எதிரிகளைத் தூக்கியெறியும் போராட்டத்தில் நம்முடன் ஒத்துழைக்கும் ஐக்கிய முன்னணியில் பங்கேற்கும் வர்க்கங்களுக்கு—குறிப்பாக ஆளும் வர்க்கங்களில் ஒரு பிரிவு அவ்வாறு ஒத்துழைத்து ஐக்கிய முன்னணியில் பங்கேற்றால் அதற்கும் — குறித்த திட்டம் அல்லது உடனடிக் கோரிக்கைகளில் சலுகைகள் தரவும், ஐக்கிய முன்னணியைப் பாதுகாக்கவும் வேண்டும். அப்போதுதான் "எதிரிகளுக்குள்ளேயே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்து, பலருடன் ஐக்கியப்படு, சிலரை எதிர் மற்றும் எதிரிகளைத் தனித்தனியே ஒழித்துக்கட்டு" என்ற மாவோவின் போர்த்தந்திர நெறிமுறையைச் சரியாகப் பிரயோகிப்பதாகும்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட இடைக்கட்டத்தின் உடனடிக் கோரிக்கைகள் அல்லது குறைந்தபட்சத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது இரண்டு நிபந்தனைகள் கட்டாயம் கடைபிடிக்கப்பட வேண்டும். அவை: (1) அக்குறித்த திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் அதை ஒரு உந்துவிசையாகக் கொண்டு புரட்சியின்

அடுத்த இடைக்கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்வதற்கான அடிப்படைகளை குறிப்பிட்ட குறித்த திட்டமும் அரசியல் நடத்தைவழியும் பெற்றிருக்கவேண்டும். அதாவது அடுத்த இடைக்கட்டத்திற்குப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான தயாரிப்பாக இருக்கவேண்டும்; அதற்கான நிலைமைகளைத் தோற்றுவிப்பதாக இருக்கவேண்டும்; இல்லையானால் சந்தர்ப்பவாதமாக அமையும். (2) குறித்த திட்டம் அல்லது உடனடிக் கோரிக்கைகள் அரசியல் அதிகாரத்துக்கான தீர்வுடன் நேரடியாகவும் உடனடியாகவும் இணைந்துள்ளது. அதாவது குறிப்பிட்ட இடைக்கட்டத்தின் பிரதான எதிரிகளைத் தூக்கியெறிந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் அவை அமுலாக்கப்பட முடியாது. அரசியல் அதிகாரமின்றி, புரட்சிகரமான முறையில் அரசியல் தீர்வு காணாமல் குறித்த திட்டத்தை அமுலாக்க முயல்வது அல்லது அதற்காக ஏற்கனவே நிலவும் அரசிடம் கோரிகைகளை முன்வைத்து அமுலாக்கும்படி கோருவதும், எதிர்பார்ப்பதும் சீர்திருத்தமாகவே அமையும். பகுதி அடிப்படையில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் இடங்களில் கூட குறிப்பிட்ட இடைக்கட்டத்துக்கான குறித்த திட்டம் அல்லது உடனடிக் கோரிக்கைகளை மீறி அமுல்படுத்துவது கூடாது. அதுவும் பிரதான எதிரிகளுக்கெதிரான போராட்டத்தில் நட்புச்சக்திகளைச் சிதறடித்து ஐக்கிய முன்னணிக்கு ஊறு விளைவிக்கும்.

புரட்சியின் ஒவ்வொரு இடைக்கட்டத்திற்கும், புரட்சிகர மற்றும் எதிர்ப்புரட்சிகர சக்திகளின் சேர்க்கைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப பொருத்தமான குறித்த திட்டம் அல்லது உடனடிக் கோரிக்கைகளை முன்வைத்து பரந்துபட்ட மக்களைத் திரட்டவேண்டும் என்பதை சாருவும், பிற 'இடது' சந்தர்ப்பவாதிகளும் மற்றும் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்களும் ஏற்பதில்லை. குறிப்பிட்ட அளவு பலம் (மக்கள் செல்வாக்கு, கட்சியின் பலம், படைபலம் ஆகியவை) பெற்ற பின்னர் தான் அல்லது சீனாவில் நடந்ததுபோன்ற ஒரு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு நடக்கும்போதுதான் இவ்வாறு உடனடிக் கோரிக்கைகள் அல்லது குறித்த திட்டத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்று யாந்திரீக முறையிலும் குறுங்குழுவாத முறையிலும் கூறி அதுவரை பொதுத்திட்டங்களையும் முழக்கங்களையுமே சூத்திரங்களாக ஜபிக்க வேண்டுமென்கின்றனர். வலது சந்தர்ப்பவாதிகளோ நிகழ்ச்சிப் போக்கின் வகைப்பட்ட போர்த்தந்திர வழியையே பின்பற்றுவதால் இப்பிரச்சினைகளை முற்றிலும் சந்தர்ப்பவாதமாகவும், சீர்திருத்தவாதமுமாகவே அணுகுகின்றனர். இத்தவறுகளுக்கு மாறாக ஒவ்வொரு இடைக்கட்டத்துக்குமான குறித்த திட்டங்களை—ஆளும் வர்க்கங்களின் மற்றும் சமரச சக்திகளின் அரசியல், சமூக, பொருளாதாரத் திட்டங்களுக்கு மாற்றுத் திட்டங்களை முன்வைத்துப் போராடுவதன் மூலமே கட்சியின் அந்தஸ்தும் மேலாண்மையும் நிலைநாட்டப்பட்டு முன்னேறும்; கூடுதலான மக்களை ஆளும் வர்க்க மற்றும் சமரச சக்திகளின் பிடியிலிருந்து—தலைமையிலிருந்து — வென்றெடுக்க முடியும்;

சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தி ஆளும் வர்க்கங்களைத் தாக்கி முறியடிக்க முடியும். இவ்வாறின்றி பருண்மையான அரசியல் நிலைமைகள் பற்றியும், அவற்றில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றியும் அக்கறையின்றிப் புறக்கணிப்பதோ மாற்றுத் திட்டம்—குறித்த திட்டம்—ஒன்றையும் முன்வைக்காமல் அரசியல் நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்கள் பற்றி விளக்கிப் பொதுவான பிரச்சாரம் செய்வதோ மார்க்சிய—லெனினிய அடிப்படையற்ற, உண்மையில் புரட்சியில் தலைமை மற்றும் முன்னணிப் பாத்திமாற்றாத வால்வாதமும் அராஜகவாதமும் ஆகும்—ஒரு வகையில் பொருளாதாரவாதமே ஆகும். மக்களை அரசியல் படுத்தாமல் குறுகிய வட்டத்திற்குள்ளேயே உழலச் செய்வதும் ஆளும் வர்க்கங்களிடமும் சமரச சக்திகளிடமும் முன் முயற்சியை இழப்பதாகும்.

## போர்த்தந்திரங்களின் அதிமுக்கியப் பணியாகிய போராட்ட வடிவங்களும் அமைப்பு வடிவங்களும் பற்றி:

யுத்ததந்திரத்தின் தேவைகளை ஒட்டி, அனைத்து நாடுகளது தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்ட அனுபவங்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் போராட்டத்தின் பருண்மையான நிலைமைகளுக்கு மிகவும் பொருத்தமான போரிடும் வடிவங்களையும் முறைகளையும் தீர்மானிப்பதே போர்த்தந்திரங்களின் அதிமுக்கியப் பணியாகும். போராட்ட வடிவங்களுக்குப் பொருத்தமாகவும் குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்பவும் அமைப்பு வடிவங்களைத் தீர்மானிப்பதுவும் போர்த்தந்திரங்களின் அதிமுக்கியப் பணியாகும். அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்கான, அமைப்புகளுக்கான வடிவங்களையும் போர்த்தந்திரங்கள் தீர்மானிக்கின்றன.

“போர்முறைகள் — போர்வடிவங்கள் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வளரும் சூழ்நிலைகளுக்கேற்ப, பிரதானமாக, உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சிக்கேற்ப இவை மாறும்.

“எல்லாப் போர்முறைகளிலும் இத்துறையில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான சாதனைகள் அனைத்திலும் தேர்ச்சி பெறுவது, கூர்மையான மதியுடன் இவற்றைப் பயன்படுத்துவது, திறமையான முறையில் இவற்றை இணைப்பது அல்லது சூழ்நிலைகள் கோருகிறபடி இவற்றில் ஒன்று அல்லது மற்றொரு வடிவத்தைப் பொருத்தமான நேரத்தில் பயன்படுத்துவது; நவீன சூழ்நிலைகளில் இவற்றை உள்ளடக்கியதாகத்தான் போர்க் கலைகள் உள்ளன.

“அரசியல் துறையில் போராட்ட வடிவங்கள் பற்றியும் இவ்வாறே கூறவேண்டும். போர்முறையில் உள்ள வடிவங்களைக் காட்டிலும் அரசியல் துறையிலான வடிவங்கள் மிகப்பலவாக வேறுபட்டு உள்ளன. பொருளாதார, சமூக,

கலாச்சார வளர்ச்சி, வர்க்கங்களின் நிலைகள், ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கும் சக்திகளுக்கு இடையிலான உறவு, அரசாங்க வகை, சர்வதேசத் தொடர்புகள் இன்னும் பிறவற்றுக்கு ஏற்ப இவை மாறுபடுகின்றன''. (ஸ்டாலின், தொகுதி 5, பக்கம் 171-72)

அரசியல், ஆயுதப் போராட்ட வடிவங்கள் இவ்வாறு பல்வேறாக இருப்பதைப் போன்றே அரசியல், ராணுவ அமைப்புகளும் பல்வேறாகவும் மாறக்கூடியனவாகவும் இருக்கின்றன.

''போர் வடிவங்களுக்கும் போர் முறைகளுக்கும் ஏற்ப படை அமைப்பு வடிவங்களும், படைப்பிரிவுகளும் வழக்கமாக மேற்கொள்ளப்படுகின்றன. முன் கூறியவை மாறும்பொழுது பின் குறிப்பிட்டவை மாறுகின்றன...

''ராணுவத்தின் எல்லாப் படைப்பிரிவுகளையும் உத்திரவாதம் செய்வது, அவற்றைப் பூரணத்துவப்படுத்துவது, அவற்றின் செயல்பாடுகளைத் திறமையாக இணைப்பது, —இவையே போர்க்கலையின் முக்கிய கடமை.

''அரசியல் துறையிலான அமைப்பு வடிவங்கள் பற்றியும் இவ்வாறே கூறலாம். ராணுவத்துறையைப் போலவே அரசியல் துறையிலும் போராட்ட வடிவங்களுக்கு ஏற்ப அமைப்பு வடிவங்கள் அமைகின்றன''. (ஷ்டி நூல், பக் 172-73)

பாட்டாளி வர்க்க கட்சி எல்லாப் போராட்ட வடிவங்களையும் கற்றுத் தேறுவதும், போராட்ட அரங்கில் அவற்றை அறிவுக் கூர்மையுடன் இணைப்பதுவும், குறிப்பிட்ட நிலைமைக்குத் தனிச் சிறப்பாக மிகவும் பொருத்தமான வடிவங்களால் போராட்டத்தை திறமையாக ஆழப்படுத்துவது வேண்டும்; அதேபோன்று எல்லா அமைப்பு வடிவங்களையும் கற்றுத் தேரவும் அவற்றைப் பூரணத்துவப்படுத்தவும் ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் திறமையாக இணைத்து இயக்கவும் வேண்டும். ஆக்கபூர்வமான பல்வேறு முறைகள் மற்றும் வடிவங்களிலான போராட்டங்களைக் கற்றுத் தேரவும் பிரயோகிக்கவும் வேண்டியதன் அவசியத்தை லெனின் பின்வருமாறு வலியுறுத்துகிறார்:

''பொதுவாக வரலாறும், குறிப்பாகப் புரட்சிகளின் வரலாறும், மிகச்சிறந்த கட்சிகளும் மிகவும் முன்னேறிய வர்க்கங்களுடைய மிகுந்த வர்க்க உணர்வு படைத்த முன்னணிப்படைகளும் கற்பனை செய்யக்கூடியதையும் விட எப்பொழுதும் உள்ளடக்கத்தில் கூடுதலான செழுமையும், கூடுதலான வகைவளமும் கூடுதலான வடிவ வளமும், கூடுதலான உயிர்த்துடிப்பும் 'சாமர்த்தியமும் உடையனவாய்' விளங்குகின்றன. இது எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதே. ஏனெனில் மிகச்சிறந்த முன்னணிப் படைகளாலும்கூட பத்தாயிரக் கணக்கானோரின் வர்க்க உணர்வையும் சித்தத்தையும் உணர்ச்சிப் பெருக்கினையும் கற்பனைத் திறனையும்தான் வெளியிட முடிகிறது; ஆனால் மாபெரும் எழுச்சிக்கும் மனித ஆற்றல்கள் யாவற்

றின் மும்முரச் செயல்பாட்டுக்குமுரிய தருணங்களில் வர்க்கங்களிடையிலான மிகக்கடுமையான போராட்டத்தால் உந்தப்படும் கோடானு கோடியினரின் வர்க்க உணர்வாலும் சித்தத்தாலும் உணர்ச்சிப் பெருக்காலும் கற்பனைத் திறனாலும் புரட்சிகள் நடத்தப்படுகின்றன. இதிலிருந்து நடைமுறைத் துறையில் இரு மிக முக்கிய முடிவுகள் கிடைக்கின்றன: முதலாவதாக, புரட்சிகர வர்க்கம் தனது பணியை நிறைவேற்ற வேண்டுமாயின் அது சமுதாயச் செயல்பாட்டின் எல்லா வடிவங்களையும் அல்லது கூறுகளையும் விதிவிலக்கின்றி கற்றுத் தேர்ச்சி பெறும் ஆற்றலுடையதாய் இருத்தல் வேண்டும்; (அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னால் பூர்த்தி செய்யாது விட்டு வைத்தவற்றை அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு—சில நேரங்களில் மிகுந்த ஆபத்துக்கும் மிகப்பெரும் அபாயத்துக்கும் உட்பட்டு—அது பூர்த்தி செய்ய வேண்டி வரும்) இரண்டாவதாக, அந்தப் புரட்சிகர வர்க்கம் ஒரு வடிவம் மற்றொன்றாக மிகவும் விரைவாகவும் திடுதிப்பென்றும் மாற்றப்படுவதற்குத் தயாராய் இருக்க வேண்டும்.

''பகைவன் வசமுள்ள அல்லது அவனிடம் இருக்கக்கூடிய எல்லா ஆயுதங்களையும், போருக்கான எல்லா சாதனங்களையும் முறைகளையும் பயன்படுத்துவதற்கு தன்னைப் பயிற்றுவித்துக் கொள்ளாத எந்த சேனையும் விவேகமற்ற முறையில், ஏன் கொடுங்குற்றத்துக்குரிய முறையிலுங்கூட நடந்துகொள்கிறதென்பதை எவரும் தயக்கமின்றி உடனே ஒத்துக்கொள்வர். போர்க்கலையைக் காட்டிலும் அரசியலுக்கு இது இன்னும் அதிகமாய்ப் பொருந்துவதாகும். அரசியலில் குறிப்பிட்ட எதிர்கால நிலைமைகளில் எந்தப் போராட்ட முறைகள் ஏற்றவையாகவும் நமக்கு அனுகூலமளிப்பவையாகவும் இருக்குமென்று முன்கூட்டியே அறிந்து கொள்வது இன்னங்கூட கடினமானதாகும். எல்லாப் போராட்ட முறைகளையும் நாம் கையாளத் தெரிந்து கொள்ளாவிடில், நமது விருப்பங்களுக்கு அப்பாற்பட்ட வழியில் பிற வர்க்கங்களது நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டு நாம் மிகவும் பலவீனமாயிருக்கும் ஒரு செயல்முறை முன்னணிக்கு வரும்போது, நாம் கடுமையான, சில நேரங்களில் தீர்மானகரமான தோல்விக்கு உள்ளாக நேரலாம். ஆனால் எல்லாப் போராட்ட முறைகளையும் கையாள நாம் கற்றுக் கொண்டு விடுவோமாயின், வெற்றி நிச்சயமாய் நமதே; ஏனெனில், பகைவனுக்கு மிகவும் அபாயகரமான ஆயுதங்களை, மிகத் துரிதமாய் மரணஅடி கொடுக்கக் கூடிய ஆயுதங்களை நாம் பிரயோகிப்பதற்கு நிலைமைகள் நம்மை அனுமதிக்கா விட்டாலுங்கூட, நாம் மெய்யாகவே முன்னிலையிலுள்ள, மெய்யாகவே புரட்சிகரமான வர்க்கத்தினுடைய நலன்களைப் பிரதிபலிப்பவர்களாவோம்''. (லெனின், 'இடது சாரி' கம்யூனிசம் - இளம்பருவக் கோளாறு, பக் 129-30)

எல்லாப் போராட்ட வடிவங்களையும் எல்லா அமைப்பு வடிவங்களையும் கற்றுத் தேரவும் பிரயோகிக்கவும் வேண்டுமென்ற மார்க்சிய-லெனினிய நெறிமுறையை திரிபுவாதிகளும் நவீனதிரிபுவாதிகளும் தமது நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதைக்கும் பொருளாதார வாதத்துக்கும் கேடாகப் பயன்படுத்துகிறார்கள். இதையே காரணங்காட்டி முற்றிலும் வெளிப்படையானதும் சட்டபூர்வமானதும் புரட்சிகரமில்லாததுமான அமைப்புகளையும் முறைகளையும் பயன்படுத்துவது சந்தர்ப்பவாதமென்றும் அவற்றை முற்றிலும் நிராகரிக்க வேண்டுமென்றும் எல்லாம், சட்டவிரோதமானதாகவும், ரகசியமானதாகவும் உள்ளவை மட்டுமே புரட்சிகரமானவை என்றும் இடது சந்தர்ப்பவாதிகள் கூறுகின்றனர்.

"ஆனால் சட்டவிரோதமான போராட்ட வடிவங்களைச் சட்டபூர்வமான போராட்டத்துக்குரிய எல்லா வடிவங்களுடனும் இணைத்துக் கொள்ளும் திறனில்லாத புரட்சியாளர்கள் பரிதாபத்துக்குரிய புரட்சியாளர்களே யாவர். புரட்சி ஏற்கனவே வெடித்துப் பொங்கி வழிந்தோடும்போது, எல்லா ரகத்தினரும் கூட்டத்தோடு கூட்டமாய்ப் புரட்சிக்கு இழுத்துச் செல்லப்படும்போது—புரட்சியில் ஈடுபடுவதே நடப்பு நிலை என்பதாலும், சில நேரங்களில் பதவி மோகத்தால் உந்தப்பட்டுங் கூட எல்லா ரகத்தினரும் புரட்சியில் சேர்ந்து கொண்டு விடும்போது—புரட்சியாளராக இருப்பது கடினமல்ல. பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்ற பிறகு இத்தகைய போலிப் புரட்சியாளர்களிடமிருந்து தன்னை 'விடுவித்துக் கொள்ள' அது மிகக்கடுமையான முயற்சிகளை, பெருந் துயரத்துக்குரிய முயற்சிகளையுங்கூட மேற்கொள்ள வேண்டியதாகி விடும். நேரடியான, பகிரங்கமான மெய்யாகவே வெகுஜனத் தன்மை வாய்ந்த, மெய்யாகவே புரட்சிகரமான போராட்டத்துக்குரிய நிலைமைகள் இன்னமும் இல்லாதபோது புரட்சியாளராக இருப்பதானது புரட்சிகரமல்லாத நிறுவனங்களில், பல சந்தர்ப்பங்களில் முழுக்க முழுக்க பிற்போக்கான நிறுவனங்களில் இருந்து, புரட்சிகரமல்லாத ஒரு சூழ்நிலையில், புரட்சிகர செயல்முறைகளின் அவசியத்தை உடனடியாக உணரமுடியாத மக்கள்திரளிடையே புரட்சியின் நலன்களுக்காக (பிரச்சாரம், கிளர்ச்சி, நிறுவன அமைப்பு இவற்றின் மூலம்) முன்னின்று போராடுவதானது மிகமிகக் கடினம்—ஆனால் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது" (ஷ நூல், பக் 131-32)

இன்று கிட்டத்தட்ட எல்லா மார்க்சிய-லெனினியக் குழுக்களுமே சட்டபூர்வமானவற்றையும் சட்டவிரோதமானவற்றையும்; வெளிப்படையானவற்றையும்—ரகசிமானவற்றையும், அரசியல் போராட்டத்தையும்— ஆயுதப் போராட்டத்தையும் பரஸ்பர உறவில் இணைத்துக் கையாளவேண்டியதன் அவசியத்தையும் அங்கீகரிக்கின்றன; வலியுறுத்துகின்றன. ஆனால் பிரச்சினை இத்துடன் நின்றுவிடுவதில்லை, குறிப்பிட்ட தருணத்தில் பருண்மை

யான நிலைமைகளுக்கேற்ப இவற்றை எவ்வாறு பரஸ்பர உறவில் இணைத்துக் கையாள்வது என்பதுவும் அதை ஆளும் விதிகளும் நெறிமுறைகளும் வகுக்கப்பட வேண்டும். தேசிய, சர்வதேசியப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அனுபவத்தில் கண்ட, தனக்குத்தெரிந்த, தான் கற்றுத் தேர்ந்த எல்லாப் போராட்ட வடிவங்களையும், எல்லா அமைப்பு வடிவங்களையும் எல்லாப் போர்த்தந்திரங்களிலோ அல்லது குறிப்பிட்டதொரு போர்த்தந்திரத்திலோ உள்ளடக்கி பாட்டாளி வர்க்க கட்சி தனது போர்த்தந்திரங்களை வகுப்பதில்லை. குறிப்பிட்டதொரு போர்த்தந்திரத்தின் போராட்ட வடிவங்களையும், அமைப்பு வடிவங்களையும் தீர்மானிக்கும் காரணிகளாகிய குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளே—பாட்டாளி வர்க்கத்தின் மற்றும் அதன் கூட்டாளிகளின் (உயர்ந்த அல்லது குறைந்த கலாச்சார மட்டம் அதிக அல்லது குறைந்த அளவு அமைப்பு மற்றும் அரசியல் உணர்வு, அப்போது நிலவும் இயக்கத்தின் மரபுகள் மற்றும் வடிவமுறைகள், பிரதான மற்றும் துணை அமைப்பு வடிவங்கள்) மற்றும் எதிரிகளின் முகாமிலுள்ள சக்திகளில் இவைகளின் தன்மையும், எதிரிகளுக்குள்ளேயுள்ள பிளவும், மோதலும், குழப்பமும், இயக்கத்தின் வீச்சு, குறிப்பிட்ட பகுதியின் போராட்ட அரங்கம்—புரட்சி இயக்க அலையின் எழுச்சி அல்லது வீழ்ச்சி — புரட்சி இயக்க வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது—ஆகியவையே சட்டபூர்வமானவற்றுக்கும்-சட்டவிரோதமானவற்றுக்கும், வெளிப்படையானவற்றுக்கும்— ரகசியமானவற்றுக்கும், அரசியல் போராட்டங்களுக்கும் அமைப்புகளுக்கும்— ஆயுதப்போராட்டங்களுக்கும் அமைப்புகளுக்கும் இடையிலான பரஸ்பர வரம்புகளையும், உறவுகளையும் தீர்மானிக்கின்றன. எனவே குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளைச் சரியாக மதிப்பீடு செய்து திட்டவகைப்பட்ட போர்த்தந்திரத்தை வகுப்பதுதான் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும்.

ஆனால், பருண்மையான நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப போராட்ட வடிவங்களும் அமைப்பு வடிவங்களும் அவற்றின் சேர்க்கைகளில் ஒரு குறிப்பிட்ட முழுத்தொகுதியாகவோ பகுதியாகவோ மாறுதலடைகின்றன. சட்டபூர்வமானதும்—சட்ட விரோதமானதும், வெளிப்படையானதும் — ரகசியமானதும், அரசியல் போராட்டங்களும்,— ஆயுதப்போராட்டங்களும், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு,—அதாவது, போராட்டங்களின் நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப வடிவங்களில் மாறுதல்களைச் — சீக்கிரமாகச் செய்வதற்கு பாட்டாளி வர்க்க கட்சி எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டுமென்பது ஒரு பொது விதியாகும்.

"ஒவ்வொரு நிலைமையிலும் தயார்நிலையின் ஒரு அடிப்படையில் பொதுவுடமையாளர்கள் தமது ஆரம்பப் புரட்சிகர வேலைகளில் பூரணத்துவப்படுத்த வேண்டும்; ஏனெனில் மாறக்கூடிய புயலென அலை வீசுவதும் அமைதியானதுமான

காலகட்டங்களை முன்கூட்டியறிவது, அடிக்கடி கிட்டத்தட்ட சாத்தியமற்றதற்கு அடுத்ததாக இருக்கிறது; சிலவற்றில் வேண்டுமானால் சாத்தியமாகலாம்; தீர்க்கதரிசனமாக முன் கூட்டி அறிவது பலவற்றில் அமைப்பு மறு ஒழுங்கமைப்புக்கு பயன்படுத்த முடியாது, ஏனெனில் மாறுதல் சீக்கிரமானதாக வும் அடிக்கடி நிச்சயம் திடீரென்றும் வருவது ஒரு விதியாக இருக்கிறது'' (லெனின், கட்சி ஸ்தாபனத்தின் கொள்கைகள், பக்-42)

திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் ஆயுதப்போராட் டத்துக்கோ, சட்டவிரோதமாகப் போரிடவோ, நிர்ப்பந்தம் ஏற் பட்டால்கூட ரகசிய அமைப்புகளாக மாறவோ எவ்விதத் தயாரிப்புமின்றி நிரந்தரமாகவே சட்டபூர்வமாகவும் வெளிப் படையாகவும் இயங்குவதற்கும், அம்மாதிரியான போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களை மட்டுமே கொண்டுள்ளனர். இடது சந்தர்ப்பவாதிகளோ பரந்துபட்ட மக்களுடன் தொடர்ந்து நெருக்கமான ஐக்கியமின்றி அதற்காக எல்லா சட்ட பூர்வமான, வெளிப்படையான வாய்ப்புகளையும் பயன்படுத்தத் தவறி சதிக்குழுக்களாக கட்சி இயங்க வேண்டுமென்கின்றனர். இவ்விரு தவறுகளுமே பருண்மையான நிலைமைகளுக்கேற்ப போர்த்தந்திரங்களை வடிக்கத் தவறுவதிலிருந்து தொடங்குகின் றன.

புரட்சி அலை ஓங்கும்போதும்—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகும் போதும்—தாக்குதல் போர்த்தந்திரங்களும் அவற்றில் உள்ளூர் அரசியல் வேலைநிறுத்தங்களும், அரசியல் ஆர்ப்பாட்டங்களும், பொது அரசியல் வேலைநிறுத்தங்களும் பேரெழுச்சிகளும் ஆயுதந்தாங்கிய எழுச்சிகளும் வேறு வடிவி லான குறிப்பாக மக்கள் யுத்தப்பாதை யுத்ததந்திரங்களின்போது கொரில்லாப் போர்முறை, நடமாடும் போர்முறை, கிரமமான ஸ்தானப் போர்முறையும் என்ற வளர்ச்சிப்போக்கும்; நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய எழுச்சி என்ற யுத்ததந்திரங்களின் போது பொது வேலைநிறுத்தம், நகர்ப்புறத் தடுப்புச்சுவர் போராட்டங்கள், கொரில்லாத் தாக்குதல்கள், ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிகள் என்ற வளர்ச்சிப் போக்கும் போன்றவை போராட்ட முறைகளாகப் பின்பற்றப்பட வேண்டும். அவற் றுக்குப் பொருத்தமான அமைப்பு வடிவங்களாக வழக்கமாக உள்ள கட்சி, மக்கள் திரள் அமைப்புகள், ராணுவ அமைப்பு களுடன் குறிப்பாக ஆலைக் கமிட்டிகள், புரட்சிகர விவசாயிகள் கமிட்டிகள், வேலை நிறுத்தக் கமிட்டிகள், போராட்ட கமிட்டிகள் அல்லது எழுச்சிக்கான அமைப்புகள் பின்னர் சோவியத்துகள் என்றும் மக்களது பலத்துக்கேற்ப அவை கிட்டத்தட்ட வெளிப் படையாகவே இருக்கும்.

புரட்சிஅலை ஓயும்போது — புரட்சி இயக்கத்தின் வெள் ளம் வடியும்போது—தற்காப்புப் போர்த்தந்திரங்களும் — அவற் றில் எல்லா சட்டபூர்வமான சாத்தியமான வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்வது, கிட்டத்தட்ட வெளிப்படையான புரட் சிகர இயக்க வடிவங்களுக்குப் பதில், கீழ்நிலையிலான சில நட

வடிக்கைகள் ஆனால் செயலூக்க மிக்கவை; பொது அரசியல் வேலைநிறுத்தங்களுக்குப் பதில் பகுதி கோரிக்கைகளுக்கான போராட்டங்கள், கலாச்சார நடவடிக்கைகள் அவற்றுக்குப் பொருத்தமான அமைப்பு வடிவங்கள், புரட்சிகர போராட்ட காலகட்டங்கள் போலன்றி கட்சி அமைப்பு முற்றிலும் ரகசியமானதாகவும் புரட்சிகர மக்கள்திரள் அமைப்புகள், கல்வி, கலாச்சார சமூக, கூட்டுறவு இன்னும் பிற சட்டபூர்வ வடிவங்களையும் மேற்கொள்ளவேண்டும்.

பாசிசம், எதேச்சதிகாரம் அல்லது அதிகார வர்க்க ராணுவ சர்வாதிகாரமும் கடுமையான அடக்குமுறைகளும் நிலவும் காலகட்டங்களில் சட்டவிரோத மற்றும் ரகசிய வடிவங்களும், சட்டபூர்வமான வாய்ப்புகள் நிலவும் சாதாரண காலகட்டங்களில் வெளிப்படையான போராட்ட வடிவங்களும் பரந்துபட்ட மக்களின் அரசியல் வேலைநிறுத்தங்களும் அவற்றுக்குப் பொருத்தமான அமைப்பு வடிவங்களும் இருக்கும். சில காலகட்டங்களில் மக்கள்திரள் போராட்டங்கள் புரட்சி அலையின் எழுச்சி அல்லது வீழ்ச்சிக்கேற்றவாறு முறையே ஆயுதப் போராட்ட அளவுக்கு வளர்ச்சியுறும் அல்லது செயலூக்கமிக்க தற்காப்பு மற்றும் பின்வாங்குதல் அளவுக்கு சுருங்கிவிடும்.

போராட்ட வடிவங்கள் மற்றும் அமைப்பு வடிவங்கள் பற்றிய மேற்கண்டவை அனைத்தும் கோட்பாடுரீதியில் பொதுவானவை எனினும் ஒவ்வொரு நாட்டின் தனிச்சிறப்பான குணாம்சங்களும், கைக்கொள்ளப்படும் யுத்ததந்திரங்களும், குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகள் ஆகியவற்றுக்கேற்ப போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. அதாவது முதலாளித்துவ நாடுகளின் சோசலிசப் புரட்சிக்கானவையும், காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய, பின்தங்கிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளுக்கான தேசிய மற்றும் ஜனநாயகப் புரட்சிக்கானவையும் வேறுபடுகின்றன. வெவ்வேறு முதலாளித்துவ நாடுகளுக்கிடையேயும் அல்லது வெவ்வேறு காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய, பின்தங்கிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளுக்கிடையேயும்கூட ஒவ்வொரு நாட்டின் தனிச்சிறப்பான குணாம்சங்களுக்கேற்ப அவை மாறுபடுகின்றன. ஒரு குறிப்பிட்ட நாட்டிலும்கூட தற்காப்பு அல்லது தாக்குதல், பின்வாங்குதல் அல்லது முன்னேறுவது என்ற போர்த்தந்திரங்களுக்கேற்ப அவை மாறுபடுகின்றன. ஒரே தன்மையுடைய, சான்றாக தாக்குதல் தன்மையுடைய போர்த்தந்திரங்களேகூட புரட்சியின் வளர்ச்சிப் போக்கில் வெவ்வேறு காலகட்டங்களில் பிரயோகிக்கப்படும்போது ஒன்றுக்கும் மற்றொன்றுக்குமானவை வேறுபடுகின்றன.

## இந்தியப் புரட்சிக்கான அரசியல், ராணுவ யுத்ததந்திரங்களுக்கும், இந்தியாவின் தனிச்சிறப்பான குணாம்சங்களுக்கும் பொருத்தமான போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள்:

காலனிய, அரைக்காலனிய, நவீனகாலனிய, பின்தங்கிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளுக்கானவையும், அவற்றின்

அரசியல், ராணுவ யுத்ததந்திரங்களுக்கானவையுமாகிய போராட்ட மற்றும் அமைப்புவடிவங்கள் பெரும்பாலும் இந்தியாவுக்கும் பொருந்தும்; எனினும், இந்தியப் புரட்சிக்கே உரித்தான தனிச்சிறப்பான குணாம்சங்களுக்கேற்ற விதிகள் மற்றும் நெறிமுறைகளின்படி அவற்றைப் பிரயோகிக்க வேண்டும். குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப போராட்ட மற்றும் அமைப்புவடிவங்கள் வகுக்கப்படும்; எனினும் மேற்கண்ட வரையறை மற்றும் வழிகாட்டுதலுக்குட்பட்டே அவை இருக்கும். அரசியல் போராட்டங்களுக்கும் ஆயுதப் போராட்டங்களுக்கும் இடையிலான — அரசியல் பிரச்சினைகளுக்கும் ராணுவப் பிரச்சினைகளுக்கும் இடையிலான — உறவைச் சரியாகக் கையாள்வதுதான் இந்தியப் புரட்சியின் தனிச்சிறப்பான இரு அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். அதாவது, எல்லாக் காலகட்டங்களிலும் ஆயுதப் போராட்டங்களிலும் ராணுவ அமைப்புகளும் பிரதானமானவைகளாக இருக்காது. ஆரம்ப காலங்களில் அரசியல் போராட்டங்களும் அரசியல் அமைப்புகளும் பிரதானமானவைகளாகவும், பின்னர் சமநிலையாகவும், இறுதிக் காலகட்டங்களில் ஆயுதப் போராட்டங்களும் ராணுவ அமைப்புகளும் பிரதானமானவைகளாகவும் கொண்ட வளர்ச்சிப்போக்குடையது. அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களும் அமைப்புகளும் சமநிலையாகவும், ஆயுதப் போராட்டங்களும் ராணுவ அமைப்புகளும் பிரதானமானவையாகவும் கொண்ட காலகட்டங்களுக்கிடையே கூட சில சமயங்களில் அரசியல் போராட்டங்களும் அரசியல் அமைப்புகளும் பிரதானமானவையாக மாறும். ஆனால் யுத்ததந்திர கட்டம் முழுவதுமாக நோக்கில் ஆயுதப் போராட்டங்களும் ராணுவ அமைப்புகளும் பிரதானமானவைகளாக இருக்கும். இந்தியப் புரட்சிக்கே உரித்தான இத்தனிச்சிறப்பான குணாம்சங்களுக்கேற்ற இந்த விதிகளும் நெறிமுறைகளும் நீண்டகால மக்கள்யுத்தப் பாதைக்கு முரணானவையல்ல. நீண்டகால மக்கள்யுத்தப் பாதையின் சாராம்சத்தைக் கிரகித்துள்ளவர்கள் இதை நிச்சயம் அங்கீகரித்துதான் தீரவேண்டும்.

காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் ஏற்றத்தாழ்வான சமூக பொருளாதார, அரசியல் வளர்ச்சியுடைய பின்தங்கிய நிலைமைகளில் பலம் வாய்ந்த எதிரிகளைத் தூக்கியெறியும் கடமையை எதிர்கொள்ளும் புரட்சியில் சிகப்பு அரசியல் அதிகாரத்தையும் செஞ்சேனையையும் நிறுவி உறுதிப்படுத்தி விரிவாக்குவதன் மூலம் தேசந்தழுவிய புரட்சிப் பேரெழுச்சியை உருவாக்குவதும் இறுதியில் நகர்ப்புறங்களைச் சுற்றிவளைத்து நாடுதழுவிய வெற்றியடைவதும்தான் நீண்டகால மக்கள்யுத்தப்பாதையின் சாராம்சமாகும். ஏற்றத்தாழ்வான சமூகப் பொருளாதார அரசியல் வளர்ச்சியுடைய அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ இந்தியாவில், பலம் வாய்ந்த எதிரிகளைத் தூக்கியெறியும் கடமையை எதிர்கொண்டுள்ள இந்தியப்புரட்சி நீண்டகால

மக்கள் யுத்தப் பாதையை மேற்கொண்டுள்ள அதேவேளையில் எதிரிகளுக்குள்ளே உள்ள முரண்பாடும் பிளவுகளும், மோதல்களும் யுத்தமாகவின்றி அரசியல் போராட்டமாகவே இருப்பது; ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சிக்கெதிராக ஆயுதந்தாங்கிய புரட்சி போரிடுவது இந்தியப் புரட்சியின் விசேஷமானதும் சாதகமானதுமான அம்சங்களில் ஒன்றாக இல்லாமலிருப்பது ஆகிய இரு பருண்மையான நிலைமைகளோடு, முதலாளித்துவ முறையிலான மத்தியத்துவப்படுத்தப்பட்ட அதிகார வர்க்க ராணுவ அரசும், அரசு இயந்திரமும், நாடாளுமன்ற ஆட்சிமுறையும் நிலவுவது ஆகியவற்றின் காரணமாக இந்தியப் புரட்சிக்கே உரித்தான தனிச்சிறப்பான குணாம்சமாக ஆயுதப்போராட்டத்துக்கும் அரசியல் போராட்டத்திற்குமிடையிலான மேற்கண்ட விதிகளும் நெறிமுறைகளும் சரியாகப் பாவிக்கப்படும் பொழுதுதான் தளப்பிரதேசங்களையும் செஞ்சேனையையும் நிறுவுவதும் அதன் மூலம் தேசந்தழுவிய புரட்சிப் பேரெழுச்சியை உருவாக்குவதும் சாத்தியம்.

அரசியல் போராட்டங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றின் நடத்தைவழியையும், முழக்கத்தையும், போராட்ட மற்றும் ஸ்தாபன வடிவங்களையும் தீர்மானிப்பதற்கு இந்தியப் புரட்சியின் அடிப்படையான மற்றொரு விசேஷ குணாம்சமாகிய பிரதான தாக்குதல் திசைவழியும் ஐக்கிய முன்னணியும் பற்றிய யுத்ததந்திரக் கொள்கையைப் பிரயோகிக்க வேண்டும். ஊசலாடக் கூடிய சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தும் வகையிலும், ஐக்கிய முன்னணியில் இருக்கும்போது சுதந்திரத்தையும் முன்முயற்சியையும் கொண்டிருக்கும் வகையிலும், ஒற்றுமையும் போராட்டமும் என்ற அணுகுமுறையுடனும் போராட்ட மற்றும் ஸ்தாபன வடிவங்கள் இருக்கவேண்டும். சீனப் புரட்சியைப் போன்றவாறே நமது நாட்டில் ஐக்கிய முன்னணி ஆரம்பத்திலிருந்தே இருக்க வேண்டுமென்பதில்லை. எப்பொழுதும் பிரதானமாக ஆயுதப் போராட்டத்திற்கானதாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதும் இல்லை. அரசியல் — ஆயுதப்போராட்டங்களின் பரஸ்பர உறவில் வெவ்வேறு கட்டங்களில் தரப்படும் முக்கியத்துவத்தைப் பொருத்து அதற்கான ஐக்கிய முன்னணியாகவே இருக்கும். பிரதான தாக்குதல் திசைவழி பற்றிய யுத்ததந்திரக் கொள்கையைப் பிரயோகித்து சமரச சக்திகளை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்தி முடமாக்கும் வகையிலான போராட்ட மற்றும் ஸ்தாபன வடிவங்களை வகுக்கும்போது வெறுமனே அவற்றின் தேர்தல் மற்றும் பிற சந்தர்ப்பவாத நடவடிக்கைகளை மட்டும் விமர்சிப்பதாக இருக்கக்கூடாது. மாறாக, நாட்டையும் மக்களையும் பாதிக்கும் பாரதூரமான, மையமான அரசியல், பொருளாதார, சமூக, இன்னும் பிற பிரச்சினைகளில் அவற்றின் கொள்கைகளும், ஸ்தாபன மற்றும் போராட்ட வடிவங்களும் சமரசத்தன்மையுடையனவாக இருப்பதை அம்பலப்படுத்துவதோடு அவற்றுக்கு மாற்றாக, சரியான கொள்கை மற்றும் ஸ்தாபன, போராட்ட வடிவங்களை முன்

வைத்து உறுதியுடன் போராடி, அவற்றின் தலைமையிலிருந்து பரந்துபட்ட மக்களை வென்றெடுத்து சமரச சக்திகளை தனிமைப் படுத்தவேண்டும். ஊசலாடும் சமரச சக்திகள் முற்றாக தனிமைப்படும் முன் தீர்க்கமான தாக்குதலில் இறங்காத அதே வேளையில், மக்களின் போராட்ட உறவுகளுக்குப் பின்தங்காது, அவற்றின் வளர்ச்சிற்கேற்ப போராட்ட மற்றும் ஸ்தாபன வடிவங்களை மாற்றுவதின் மூலம், மார்க்சிய-லெனினிய யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திர விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளைப் பற்றிநிற்பதின் மூலம் இதைச் செய்ய வேண்டும்.

அரசியல் யுத்ததந்திரத்தில் விவரிக்கப்பட்டுள்ள இவ்விரு தனிச்சிறப்பான அம்சங்களோடு கட்சியைக் கட்டுவது இணைந்திருக்கிறது. எல்லா நாடுகளின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியைப் போன்றே விவசாயிகளது பிரச்சினையும் ஒரு அடிப்படைப் பிரச்சினையாகவும், உண்மையில் ஆயுதப் போராட்டம் என்பதே சாராம்சத்தில் விவசாயிகளது யுத்தமாகவும் இருப்பதும் யாவரும் அறிந்ததே. எனவே ஐக்கிய முன்னணி, அரசியல் மற்றும், ஆயுதப் போராட்ட உறவு, கட்சியைக் கட்டுவது, விவசாயிகளது விவசாயப் புரட்சி, நீண்டகால மக்கள் யுத்தப்பாதை ஆகிய ஐந்து அடிப்படை அம்சங்களில் அரசியல் மற்றும் ஆயுதப் போராட்ட உறவுகளைச் சரியாகக் கையாள்வது இந்தியப் புரட்சியின் தனிச்சிறப்பான அடிப்படைக் குணாம்சங்களில் ஒன்றாகும். இந்த விதிகள் மற்றும் நெறிமுறைகளின் வழிகாட்டுதலில்தான் போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் வடிக்கப்படுகின்றன.

பொதுவாக மக்கள் யுத்தப்பாதையின் வளர்ச்சிப்போக்கில் பின்வருமாறு போராட்ட வடிவங்களும், போராட்ட அமைப்புகளும் முன்னுரிமை கொடுத்து வடிக்கப்படும்; நகரங்களில் ஜனநாயக அரசாங்கங்களை ஏற்படுத்துவதற்குரிய ஒரு பொதுவான சூழ்நிலை உருவாகும்வரை புரட்சிகர இயக்கம் கிராமப்புற வேலையை முதன்மையாகவும் நகர்ப்புற வேலையைத் துணையாகவும் கொண்டிருக்கும்.

> 'கிராமப்பகுதிகளில் புரட்சியின் வெற்றியும், நகரங்களில் வெற்றிக்கான தற்காலிக இயலாமையும் கிராமப் பகுதிகளில் தாக்குதலும், நகரங்களில் பொதுவான தற்காப்பு நிலைமையும், கிராமப்பகுதிகளிலும்கூட ஒரு பகுதியில் வெற்றியும் தாக்குதலும் இன்னொரு பகுதியில் தோல்வி, பின்வாங்குதல் மற்றும் தற்காப்பும்—இவையனைத்தும் இந்தக் காலகட்டத்தில் புரட்சி, எதிர்புரட்சி அகியவற்றின் நாட்டின் ஏற்ற இறக்கத்தில் குறுக்காகவும் நெடுக்காகவும் வடிவுமைப்புடைய தன்மையைக் குறிக்கும்...வெற்றிக்குப் புரட்சி செல்ல வேண்டிய பாதையைத் தீர்மானிக்கும்'' (மாவோ, தேர்ந்த படைப்புகள், பக்-337)

இந்தியாவின்—அரைக்காலனிய. அரைநிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு இந்தியாவின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி ஒரு விவசாயிகளது புரட்சி, இந்தியப் புரட்சி ஏற்றத்

தாழ்வானதும், இடர்ப்பாடுகளும் நெளிவுசுளிவுகளும் மிக்கதானதும், நீண்டகாலத் தன்மையுடையதும் என்கிற குணாம்சங்கள் காரணமாக இவையே இந்தியப் புரட்சி செல்லவேண்டிய பாதையாக அமைகின்றன.

நீண்டகால மக்கள் யுத்தப்பாதை என்னும் ராணுவ யுத்ததந்திரத்தின்படி கொரில்லாப் போர்முறையும் ஒரு கொரில்லாத் தன்மையுடைய நடமாடும் யுத்தமுறையும் தலையாய போரிடும் வடிவங்களாக செஞ்சேனை மேற்கொள்ளும். படிப்படியாக கொரில்லாப் போர்முறை கிரமமான போர்முறையாகவும், நடமாடும் போர்முறை ஸ்தானப் போர்முறையாகவும் மாறும். செஞ்சேனை மக்கள் யுத்தத்தை உள்ளூர் படைக்குழுக்கள், கொரில்லா மற்றும் மக்கள் படைக்குழுக்களோடு கிரமமான படை மற்றும் ஆயுதமேந்திய மக்கள்திரள் ஆகியவற்றோடு பிரதான படை இணைந்து நடத்துகிறது. செஞ்சேனை, கொரில்லாப் படைகள், செம்பிரதேசங்கள் ஆகியவற்றின் ஸ்தாபிதமும் வளர்ச்சியும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான விவசாயிகளது போராட்டத்தின் அதிஉயர்ந்த வடிவமாகும். ராணுவ யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களைப் பற்றி விவாதிக்கும்போது மேலும் ஆழமாகப் பார்ப்போம்.

மேற்கண்ட ஆயுதப்போராட்ட வடிவங்கள் மற்றும் ராணுவ அமைப்புகளோடு இந்தியப் புரட்சியின் தனிச்சிறப்பான குணாம்சமாகிய அரசியல், ஆயுதப்போராட்டங்கள் மற்றும் அமைப்புகள் குறித்து முன்னர் விவரித்தபடி கூடுதலான முக்கியத்துவத்துடன் அரசியல் போராட்ட வடிவங்களும் அவற்றுக்கான அமைப்பு வடிவங்களும் வடிக்கப்பட வேண்டும். உள்ளூர் அரசியல் வேலைநிறுத்தங்கள், அரசியல் ஆர்ப்பாட்டங்கள், முற்றுகைப் போராட்டங்கள், பொதுஅரசியல் வேலைநிறுத்தங்கள் ஆகியவற்றிலிருந்து தொடங்கி உள்ளூர் ஆயுதந்தாங்கிய எழுச்சி, மற்றும் அதன் ஆயுதப் போராட்டங்களின் சில வடிவங்களான தெருமுனைப் போர்கள், தடுப்புச்சுவர் போராட்டங்கள், கொரில்லாத் தாக்குதல்கள் உட்பட போராட்டங்களும் இவற்றில் அடங்கும். ஆனால் இந்த அரசியல் போராட்டங்களின் நோக்கங்கள் உடனடியாக நகர்ப்புறப் பகுதிகளிலும், நாடு தழுவிய ரீதியிலும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக இருக்காது. தளப் பிரதேசங்களிலிருந்து செஞ்சேனை யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் தொடங்கி அலைஅலையாக முன்னேறி நகர்ப்புறங்களைச் சுற்றி வளைக்கும்போது மட்டுமே, செஞ்சேனையும் தளப்பிரதேசங்களும் நிறுவப்பட்டு உறுதியாகி விரிவடைந்து அதன் காரணமாக நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சி உருவாகும்போது மட்டுமே—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் நாடு தழுவியதாக பெருகும்போது மட்டுமே — அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிகளின் வடிவமாக அரசியல் போராட்டங்கள் வளர்ச்சியடையும். அதுவரை பரந்துபட்ட மக்களை சமரச சக்திகள் மற்றும் ஆளும் வர்க்கங்களின் தலைமையிலிருந்து வென்றெடுக்கவும், அதாவது, சேமிப்பு சக்திகளை அணிதிரட்டவும், பயிற்றுவிக்கவும், தமது சொந்த அனுபவங்களின் மூலம்

தற்போதைய அரசும் ஆட்சியும் நீடிக்கமுடியாது, நீடிக்க கூடாது, தவிர்க்க முடியாமல் தூக்கியெறியப்பட வேண்டும் என்பதை உணரச்செய்வதும் போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும்; அதே சமயத்தில் அரசியல் போராட்டங்கள் எதிரியின் ராணுவ சக்திகளைச் சிதறடித்துப் பலவீனப்படுத்துகின்றன, எதிரியின் பின்னணியைத் தகர்க்கின்றன. வேலைநிறுத்தக் கமிட்டிகள், அரசியல் போராட்டக் கமிட்டிகள், எழுச்சிக்கான கமிட்டிகள் போன்றவை இவற்றுக் கான அமைப்பு வடிவங்களாகும்.

அரசியல் ஐக்கியத்திற்கும், எழுச்சியுறும் மக்களை அமைப் பாக்கி அணிதிரட்டவும், அரசியல் போராட்டங்களில் அவர்களை வழிநடத்தவும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி பிரயோ கிக்கவுமான அரசியல் படையே — போராட்ட அல்லது எழுச் சிக்கான உறுப்பாக இருந்து, பின்னர் அதிகார உறுப்பாக மாறும் புரட்சிகர மக்கள் சோவியத்துக்களே — அரசியல் தலைமை அமைப்பும், அதிஉயர்ந்த அரசியல் போராட்ட அமைப்பு வடிவமுமாகும்; யுத்தத்திற்கும், பரந்துபட்ட மக்களை ஆயுதபாணியாக்கி வழிநடத்தவும், யுத்தத்தின் மூலம் எதிரி யைத் தூக்கியெறிந்து அதிகாரத்தை வென்றெடுக்கவும், வெற் றியைக் காக்கவும் விரிவுபடுத்தவுமாகிய ராணுவப் படையே — மக்கள் விடுதலைப் படையான செஞ்சேனையே — ராணுவத் தலைமையும் அதிஉயர்ந்த போராட்ட அமைப்பு வடிவமுமாகும். நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்தக்கூடிய மிக முக்கிய அம்சமாகியதும், விவசாயிகளது போராட்டத்தின் வளர்ச்சியில் தவிர்க்க முடியாத விளைவாகியதுமான செஞ் சேனை, கொரில்லாப்படைகள், தளப்பிரதேசங்கள் ஆகியவற் றின் ஸ்தாபிதமும் வளர்ச்சியும் பாட்டாளி வர்க்கத் தலைமை யிலான விவசாயிகளது போராட்டத்தின் அதிஉயர்ந்த வடிவ மாகும். நாடுதழுவிய இப்புரட்சிப் பேரெழுச்சியின் போது தளப்பிரதேசங்களில் இருந்து செஞ்சேனை அலையலையாக முன்னேறி நகர்ப்புறங்களைச் சுற்றிவளைத்து பரந்துபட்ட மக் களது ஆயுதந்தாங்கிய எழுச்சியுடன் நாடுதழுவிய வெற்றியை ஈட்டுவது — தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ நிலப்பிரபுத் துவ அரசு எந்திரத்தை அடித்துநொறுக்கித் தூக்கியெறிந்து மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசை நிறுவுவது — இறுதி வடிவமாகும்.

இந்தியப் புரட்சிக்கான போராட்ட வடிவங்கள் மற்றும் அமைப்பு வடிவங்களை வரையறுக்கும்போது (அ) நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்களைப் பயன்படுத்துவது குறித்தும்; (ஆ) தற்காலிகப் புரட்சி அரசாங்கம் என்னும் அமைப்பு வடிவம் மற்றும் அதன் மூலம் மேலிருந்து செயலாற்று வது என்னும் போராட்ட வடிவம்—இதைப் பயன்படுத்துவது குறித்தும்; (இ) அழித்தொழிப்பு மற்றும் கொரில்லாப் போர் முறை ஆகிய இரண்டின் பாத்திரம் குறித்தும்; (ஈ) மக்கள் திரள் அமைப்புகள் மற்றும் போராட்டங்கள், குறிப்பாக இவற்றின் பொருளாதார மற்றும் பிற பகுதிக் கோரிக்கைகளுக்கானதும்

சில பிரிவு மக்கள் மற்றும் வர்க்கத்தினருக்கானதுமான தொழில் ரீதியிலானவை குறித்தும்; (உ) நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சி என்னும் யுத்ததந்திரத்தின் சில அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்களை நீண்டகால மக்கள் யுத்தப்பாதையெனும் யுத்ததந்திரத்தின்கீழ் பிரயோகிப்பது குறித்தும்—ஆகிய இவ்வைந்தும் தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஏனெனில் இவ்வைந்தும் 'இடது' வலது சந்தர்ப்பவாதிகளால் மிகவும் குழப்பப்பட்டுள்ளவையும், அதன் காரணமாகவே கூடுதலான அக்கறையுடன் மார்க்சிய-லெனினிய வரையறையில் நின்று தீர்க்கப்பட வேண்டியவையும் ஆகும். இதன் துவக்கம் இருவகை யுத்ததந்திரங்களின் ஒற்றுமை வேற்றுமைகளைப் பகுத்தாய்வதிலும் அவற்றின் சாராம்சத்தை கிரகிப்பதிலும் இருக்கிறது.

ருஷியப் புரட்சியின் நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சியையும் சீனப்புரட்சியின் மக்கள் யுத்தப்பாதையையும் ஒப்பிட்டு ஏன் பின்னதை இந்தியப்புரட்சி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதையும், அதே சமயம் இந்தியப் புரட்சிக்கே உரித்தான தனிச்சிறப்பான குணாம்சங்களையும், அதற்கேற்றபடி பருண்மையான மாறுதல்களையும் முன்பே கண்டோம். புரட்சியின் போதிருந்த சீனத்தைப் போன்றே அரைக்காலனிய அரைநிலப் பிரபுத்துவ வகையினதாக இருந்து மக்கள் யுத்தப்பாதையை மேற்கொள்ளும் இந்தியப் புரட்சியும் புரட்சிகர யுத்தமும்கூட அதற்கே உரித்தான தனிச்சிறப்பான குணாம்சங்கள் காரணமாக அரசியல் மற்றும் ஆயுதப்போராட்டங்களுக்கு இடையிலான உறவு ஒரு விசேஷத்தன்மை உடையதாக இருக்கிறது. இந்த விசேஷத்தன்மையுடன் இந்தியப் புரட்சியின் மற்றும் புரட்சிகர யுத்தத்தின் போக்கு பற்றிய சாராம்சத்தின் கண்ணோட்டத்திலிருந்து பிரச்சினைக்குள்ளாகி இருக்கும் 'இடது' வலது சந்தர்ப்பவாதிகளால் குழப்பியிருக்கும் முன்பு குறிப்பிட்ட சில போராட்ட வடிவங்கள் மற்றும் அமைப்பு வடிவங்களைப் பிரயோகிப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டும். அவ்வாறின்றி பொதுவாக மக்களைத் திரட்டுவதற்கான எல்லா வழிகளையும் பின்பற்றுவதாகவோ, புரட்சிகரமானதாகக் கருதும் வழிகளை மட்டும் பின்பற்றுவதாகவோ கூறிக்கொண்டு இந்த வடிவங்கள் பற்றித் தாறுமாறாக முடிவெடுக்க கூடாது.

(அ) திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதையை மேற்கொள்ளுவதை நியாயப்படுத்தவும், அரசாங்க கட்சிகளாக மாறி ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்வதற்கும் மார்க்சிய-லெனினிய போதனைகளாகிய 'படுபிற்போக்கானவை உட்பட எல்லாப் போராட்ட வடிவங்களையும், அமைப்பு வடிவங்களையும் கற்றுத் தேர்ந்து பிரயோகிக்க வேண்டும்' என்பதைக் கேடாகப் பயன்படுத்துகிறார்கள். மார்க்சிய-லெனினிய போதனைகளாகிய படுபிற்போக்கானவை உட்பட எல்லாப் போராட்ட வடிவங்களையும் கற்றுத்தேர்ந்து பிரயோகிக்கவேண்டும் என்கிற முறையில் நாடாளுமன்ற அமைப்பு வடிவத்தையும் நாடாளுமன்ற

போராட்ட வடிவத்தையும் கோட்பாடு ரீதியில் எல்லா மார்க்சிய-லெனினியவாதிகளும் ஏற்றுத்தான் தீரவேண்டும். இச்சகாப்தத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் காலாவதியாகிப் போய்விட்ட வடிவங்களாக இருந்தாலும் பரந்துபட்ட மக்களுக்கு இன்னும் காலாவதியாகாத எல்லா வடிவங்களையும் பயன்படுத்தத்தான் வேண்டும் என்பது கோட்பாடு ரீதியில் சரியானதே. ஆனால் கோட்பாடு ரீதியில் சரியான ஒன்றைக்கூட யுத்ததந்திரத்திற்கும் பருண்மையான நிலைமைகளுக்கும் ஏற்ப மட்டுமே பயன்படுத்த முடியும். இந்திய நிலைமைகளில் பரந்துபட்ட மக்களது உணர்வு குன்றியுள்ள நிலைமைகளில் நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்களைப் பயன்படுத்தியாக வேண்டுமென்றும் அவ்வாறு செய்யாதது 'இடது' தீவிரவாதமென்றும் முத்திரை குத்துபவர்கள் மூன்று வகையினர்களாக உள்ளனர்.

முதல் வகையினர், நாடாளுமன்றப்பாதையின் மூலமாகவே —சமாதான பூர்வமாகவே — சமுதாய மாற்றம் செய்து சோசலிச சமுதாயத்தை நிறுவிட முடியுமென்ற பாட்டாளி வர்க்கத்துக்கு துரோகமிழைக்கும் 'வலது' திரிபுவாதிகளின் வாதங்களைப் பரிசீலிக்க வேண்டிய அவசியமே இல்லை. அவை அனைத்தும் நீண்டகாலத்திற்கு முன்பே இனங்கண்டு முறியடிக்கப்பட்டுவிட்டன.

இரண்டாவது வகையினர், இந்தியப் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின் போக்கு பற்றி நிச்சயமான பாதை எதுவும் வகுத்துக்கொள்ளாது—இந்தியாவின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சி மற்றும் கிராமப்புற விவசாயிகளது கொரில்லா யுத்தம் ஆகிய இரண்டையும் இணைப்பதாகக் கூறும் ரணதிவே நம்பூதிரிபாடு கும்பல் எந்தப்பாதை என்று இப்போது கூறமுடியாது, ஆனால் இந்தியப் புரட்சி வித்தியாசமான பாதையாக இருக்கும் என்கிற டிராட்ஸ்கிய மற்றும் பிற குட்டி முதலாளிய உதிரிக்கும்பல்களை-பொதுவில் மக்களைப் புரட்சிக்குத் தயாரிப்பதாகக் கூறிக்கொண்டு வரம்பற்ற காலத்திற்கு ஒரு நிகழ்ச்சிப் போக்கு என்கிற வகைப்பட்ட போர்த்தந்திரத்தின் ஒரு போராட்ட மற்றும் அமைப்பு வடிவமாகப் பயன்படுத்த வேண்டும் என்கிற 'வலது' சந்தர்ப்பவாதப்போக்கு—முற்றாக இன்னும் முறியடிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டம் ஆயுதப்போராட்டம் பற்றிய பிரச்சினையோடு இணைந்திருக்கிறது. மேலும் இந்த வகையினர் அப்பட்டமான சந்தர்ப்பவாதத்தைவிட மூடிமறைக்கப்பட்ட மிகமோசமான கபடமான சந்தர்ப்பவாதத்தை மேற்கொள்ளுகின்றனர்.

"உழைக்கும் மக்களுக்கு உடனடியாக வெறுப்பூட்டும் அப்பட்டமான சந்தர்ப்பவாதம் மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதத்தைப் போன்று அபாயகரமானதும் ஊறுவிளைவிக்கக்கூடியதும் அல்ல. மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம் தனது நடைமுறைக்கு, உரிய தருணம் வரவில்லை என்றும்

இன்ன பிறவாறும் நிரூபிக்க அடுக்கடுக்காக மார்க்சிய சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறது'' — என்று லெனின் எச்சரித்தவாறே இந்தவகை சந்தர்ப்பவாதிகளும் பொதுவாக மக்களைத் திரட்டுவதாகவும், புரட்சிக்குத் தயாரிப்பதாகவும் கூறும் மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதிகளாக இருக்கின்றனர்; ஆனால் இவர்கள் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் பற்றிய நிச்சயமான போக்கை பரந்துபட்ட மக்களிடையே எடுத்துச் செல்லாமல் மக்களைத் திரட்டிப் புரட்சிக்குத் தயாரிப்பதாக கூறுவதெல்லாம் கடைந்தெடுத்த பொய்யே. ஏனெனில் புரட்சிகர புறநிலை வளர்ச்சியுடன் கூடவே அகநிலை வளர்ச்சியும் இருக்கும்படியான புரட்சிகர சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு பாட்டாளி வர்க்க கட்சி "புரட்சியின் மிகமிக நிச்சயமான வளர்ச்சிப்போக்கு பற்றிய பருண்மையான கருத்துக்களை தொழிலாளர் வர்க்கத்திடையே பரப்ப வேண்டும்'' என்றார் லெனின். இவ்வாறு செய்யாமல் புரட்சிக்குத் தயாரிப்பதாக, மக்களைத் திரட்டுவதாகக் கூறிக்கொண்டே, அதே சமயம் நாடாளுமன்றப் பாதையைப் பின்பற்றுவது கடைகோடித்தனமான மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதத்தைத் தவிர வேறொன்றுமில்லை. இது, ஒன்று ஆளும் வர்க்கங்களுடன் சமரசம் செய்துகொண்டு பாட்டாளி வர்க்கத்துக்குத் துரோகமிழைக்கும் அரசாங்க கட்சிகளாக மாறுவதில் அல்லது பாட்டாளி வர்க்கத்தைப் படுகொலை செய்யும் எதிர்ப்புரட்சி குடைகவிழ்ப்பில் கொண்டு போய் முடிக்கும் என்பதற்கு நம் வாழ்நாளிலேயே பல சான்றுகள் உள்ளன—இத்தாலி, பிரான்சு, இந்தியா இந்தோனேசியா, சிலீ, பொலிவியா போன்றன.

நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையில் சமுதாயத்திலுள்ள வெவ்வேறு வர்க்கங்களும் பிரிவுகளும் ஒன்று அல்லது மற்றொரு அரசியல் கட்சியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. இந்த அரசியல் கட்சிகள், குறிப்பாக ஆளும் வர்க்க கட்சிகள், பரந்துபட்ட மக்களின் பிரதிநிதிகள் என்பதாகக் கூறி, மொத்த நாட்டின் முன்னேற்றத்துக்காக தற்போதைய அரசை நிர்வகிப்பதற்காக அரசாங்கத்தில் பங்கேற்கவோ அல்லது தனியாக அரசாங்கம் அமைக்கவோ போட்டியிடுகின்றன. ஆளும் வர்க்க கட்சிகளுடன் பிற வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமரசக் கட்சிகளும் இதற்காகவே போட்டியிடுவதன் மூலம், இவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதும், பங்கேற்பதும் நாட்டை நிர்வகிப்பதும் சாத்தியமென்று காட்டுவதற்கு முயன்று தமது நடவடிக்கைகள் மூலம் வர்க்க முரண்பாடுகளையும் வர்க்கப் போராட்டத்தையும் மழுங்கடிப்பதோடு ஆளும் வர்க்கங்களின் நலன்களையும், வர்க்க ஆட்சியும் அரசுமே நிலவுவதையும் மூடிமறைக்கப்படுகின்றன. ஆளும் வர்க்கங்களும் இதே நோக்கத்துக்காக சாத்தியமான எல்லா அரசியல் மற்றும் மக்கள் திரள் அமைப்புகளையும் இயக்கங்களையும், குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தினுடையவற்றை, தமது அரசியல் கட்டமைவின் ஒரு அங்கமாக மாற்றி நிறுவனமயமாக்குவதற்கு முயலுகின்றன. நாடாளுமன்றம் மற்றும் அரசாங்கத்தில் பங்கேற்பது அல்லது

அதற்காகப் பல்லிளித்துக் காத்து நிற்பது, பொருளாதார வகைப்பட்ட தொழிற்சங்கங்களை நடத்துவது என்று முற்றிலும் சமரசக்கட்சிகளாகவும், அரசாங்க கட்சிகளாகவும் பல்வேறு நாடுகளில் சமூக ஜனநாயகக் கட்சிகளும் ஏற்கனவே சீரழிந்து போய் விட்டன. எனவே அவற்றைத் தற்போது நிலவும் அரசியல் கட்டமைவின் அங்கமாகவே கருத வேண்டும்.

புரட்சிகரமான பாட்டாளி வர்க்க இயக்கம் ஆளும் வர்க்கங்களுக்கெதிராக எல்லா சட்டபூர்வமான, வெளிப்படையான ஜனநாயக உரிமைகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற பொதுவிதிக்கேற்ப நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தையும் பயன்படுத்திக் கொள்வது கோட்பாடு ரீதியில் ஏற்புடையதே. போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் போர்த்தந்திரத்தின் ஒரு பகுதி ஆகும்; ஆனால் போர்த்தந்திரங்கள் யுத்ததந்திரத்தின் ஒரு பகுதி, அதற்கு கீழ்ப்படிதலானது; அதன் வெற்றிக்குச் சேவை செய்பவை. இவ்வாறிருக்கையில் யுத்ததந்திரம் மற்றும் யுத்ததந்திரத்தால் வழிகாட்டப்படும் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் பற்றிய மிகமிக நிச்சயமான பாதை, வளர்ச்சிப்போக்கு பற்றிய பருண்மையான முடிவுகளன்றி, அவற்றைப் பரந்துபட்ட மக்களிடையே பரப்பாமல், நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தைப் பயன்படுத்துவதென்பது ஆளும் வர்க்க சித்தாந்தத்துக்கு சேவை செய்வதிலும், அதன் அரசைப் பலப்படுத்தி நீட்டிப்பதிலும், அதன் அரசியல் கட்டமைவில் ஒரு அங்கமாக நிறுவனமயமாவதிலும் தான் முடிக்கிறது. ஏனெனில் (1) நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் மக்களுக்குச் சேவை செய்யமுடியும் என்ற நம்பிக்கை வலுவடைந்து, ஆளும் வர்க்க அரசின் மீதும், நாடாளுமன்ற ஆட்சி முறையின் மீதும் மாயையை ஏற்படுத்துகிறது, அவற்றை நியாயப்படுத்துகிறது. (2) அரசாங்கத்தையும் அதிலுள்ள நபர்களையும் ஆளும் கட்சிகளையும் மட்டுமே விமர்சிக்க வேண்டியிருப்பதால், அரசுக்கும், அது எவ்வாறு தற்போதைய சமுதாய அமைப்பைக் காக்கிறது என்பதை அம்பலப்படுத்த முடியாது; எனவே அரசு எந்திரத்தை அடித்து நொறுக்க வேண்டிய அவசியத்தை மக்கள் உணர முடியாது. (3) ஆளும் வர்க்கத்தை தவிர பரந்துபட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாக மாறவும், வர்க்கத்தன்மையை இழக்கவும், புரட்சிகரமான ஐக்கிய முன்னணியினிடத்தில் முதலாளித்துவக் கட்சிகளுடன் சந்தர்ப்பவாத கூட்டு வைத்துக்கொள்ளும்படி நேர்கிறது. (4) அரசு எந்திரத்தை அடித்து நொறுக்கி தூக்கியெறியவும் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்துக்கான அமைப்புகளாக இல்லாது தேர்தல் அரசியலுக்குப் பொருத்தமாக மாறும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது.

இந்தியப் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் பற்றிய நிச்சயமானதொரு பாதை வகுத்துக்கொண்டுள்ள மார்க்சிய-லெனினிய வாதிகள் யுத்ததந்திர ரீதியிலும் சரி, போர்த்தந்திர

ரீதியிலும் சரி நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தைப் புறக்கணிப்பது குறித்து, இடது தீவிர வாதம் என்றும், குறுங்குழு அராஜகவாதம் என்றும், புறக்கணிப்பு வாதமென்றும் முதலில் குறிப்பிட்ட இரண்டுவகை வலது சந்தர்ப்பவாதிகளும் முத்திரை குத்துகின்றனர். நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து 'இடது சாரி கம்யூனிசம் — இளம்பருவக்கோளாறு' என்ற நூலில் லெனின் விளக்கியுள்ளதை கிளிப்பிள்ளை போல் திரும்பத் திரும்பக் கூறுகின்றனர். ஆனால் அந்நூல் முதலாளித்துவ நாடுகளின் நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தைப் பற்றி மட்டுமே பேசுகிறது என்பதையும் அன்றிருந்த வரலாற்று, அரசியல், சமுதாய, பொருளாதாரப் பின்னணியையும் இன்றைய பின்னணியையும் ஆராய்ந்து பருண்மையாக அதை பிரயோகிக்க வேண்டுமென்பதை மறுக்கின்றனர். இரண்டாவது உலகப் போருக்குப்பின், குறிப்பாக உலகு தழுவிய அளவில் வலது திரிபுவாதம் புரட்சி இயக்கத்தில் பிரதான எதிரியாக மாறியிருக்கும் இவ்வேளையில் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் திட்டமிட்ட முறையில் நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற ஏமாற்று வித்தையால் மக்களைத் திசை திருப்புகின்றனர். என்ன நிலைமைகளில் எவ்வாறு ருஷியப் பொதுவுடைமைக்கட்சி டூமாவில் (ருஷிய நாடாளுமன்றத்தில்) பங்கேற்றது என்பதை வலது சந்தர்ப்பவாதிகள் காண மறுக்கிறார்கள். தலைமறைவான அக்கட்சி தனது முழுக் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு சிறு டூமா குழு மூலம் பங்கேற்றனர். ஆனால் டூமாவிற்கு பதில் புரட்சியின் மூலம் ஓர் இடைக்காலப் புரட்சி அரசின் மேற்பார்வையில் தேர்தல் நடத்தி அதிலிருந்து ஓர் அரசியல் நிர்ணயசபை என்ற தீர்மானகரமான திட்டம், முழக்கம், இலக்குடன் வடிக்கப்பட்ட போர்த்தந்திரத்தின் ஒரு அமைப்பு மற்றும் போராட்ட வடிவமாக டூமாவில் பணியாற்றி அதை அம்பலப்படுத்தினர். மக்களை, மக்களது விருப்பங்களை டூமா பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை; மக்கள் தம் தேவைகளை, ஆட்சியதிகாரத்தை டூமா மூலம் கைப்பற்ற முடியாது, ஆயுத புரட்சியின் மூலமே சாத்தியம் என்று டூமாவிலேயே பிரகடனம் செய்து டூமாவின் அருகதையையே, அந்தஸ்தையே தட்டிக் கேட்டனர். ('கலைப்புவாதத்திற்கு எதிராக') என்ற லெனினுடைய நூலைப் பார்க்கவும்)

பொதுவான கட்சித் திட்டத்திற்காக, குறிப்பிட்ட போராட்டத்தினுடைய நியாயத்திற்காக, நீதி விசாரணைக்காக வாதிடுவதன் மூலமோ ஒரு குறிப்பிட்ட ஆளுங்கட்சி அல்லது கட்சிகளினுடைய அரசாங்கத்தின் போக்குகளை அம்பலப்படுத்துவதன் மூலமோ, நாடாளுமன்ற ஆட்சிமுறை முழுவதையும் அரசு எந்திரத்தையும், இவற்றுக்கும் சமுதாய அமைப்பிற்கும் இடையே உள்ள உறவையும் அம்பலப்படுத்த இயலாது. முதலாளித்துவ ஜனநாயக நாடுகளில் உள்ளதைப் போன்று அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ நாடான இந்தியாவில் நாடாளுமன்றத்தின் அருகதையையே, அந்தஸ்தையே கேள்விக்குள்ளாக்கும்

உரிமை இல்லாத நிலையில்—அரசுக்கெதிரான எல்லா கருத்துக்களும் பேச்சுக்களும் தடை செய்யப்பட்டு இருட்டடிப்புச் செய்யும் நிலையில்—அதில் பங்கேற்று அம்பலப்படுத்துவது சாத்தியமே இல்லை. கடந்த முப்பதாண்டுகளுக்குமேல் நாடாளுமன்ற போராட்ட மற்றும் அமைப்பு வடிவத்தை திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் பயன்படுத்துவதாகக் கூறிக்கொண்டு செயல்படும் அனுபவங்கள் அனைத்தும் இதையே காட்டுகின்றன. நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தைப் பயன்படுத்தும் நாடுகளில் 'நாடாளுமன்ற-தேர்தல் புறக்கணிப்பு' முழக்கம் முன்வைக்கப்படுவதற்கான முன் தேவை மாபெரும் எழுச்சியில் மக்கள் இறங்குவதும் புரட்சியானது நுழைவாயிலில் காத்துக்கொண்டிருப்பதுமான ஒரு புரட்சிகர நிலைமை இருக்க வேண்டும். ஏனெனில் நாடு தழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சி என்ற யுத்த தந்திரமும், அதற்கான பருண்மையான நிலைமைகளும் அங்கிருந்து அரசு எந்திரத்தைத் தூக்கி எறியும் அல்லது அதுபோன்ற யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதல் போர்த்தந்திரத்தில் 'நாடாளுமன்ற-தேர்தல் புறக்கணிப்பு' முன்வைக்கப்படுகிறது. ஆனால் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுடைய அரைக்காலனிய அரை நிலப் பிரபுத்துவ இந்தியாவில் நாடு தழுவிய மக்கள் பேரெழுச்சிக்காக காத்திருப்பது புறவயமான நிலைமைகளுக்கு முரணானது. எனவே நமது நாட்டில் நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தைப் பயன்படுத்துவதென்பது காலவரம்பற்றதாகவும், ஆளும் வர்க்கங்களின் அரசியல் கட்டமைவில் ஒரு அங்கமாக நிறுவனமயமாவதும்தான் நிச்சயமானதாக இருக்கும்.

மூன்றாவது வகையினர், அரைக்காலனிய - அரைநிலப்பிரபுத்துவ நாட்டின் மக்கள் யுத்தப்பாதை என்னும் யுத்ததந்திரத்தோடு, அதற்கு மக்களைத் திரட்டவும், புரட்சிக்குத் தயாரிக்கவும் நாடளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தை மேற்கொள்ளவேண்டும் என்கிற சத்தியநாராயண்சிங்-சந்திரபுல்லாரெட்டி கும்பல் பிற்போக்கான சக்திகளுக்கெதிராக முற்போக்கான சக்திகளை ஆதரிப்பது அல்லது குறைந்த பட்சம் படுபிற்போக்கான சக்திகளைத் தோற்கடிக்கும்படி மட்டும் அறைகூவல் விடுப்பது என்ற மார்க்சிய-லெனினியப் போர்வையிலான வலது சந்தர்ப்பவாதிகள் ஆகியோரைப் பொருத்தவரையில் உண்மையில் இவர்களுக்கு மக்கள் யுத்தப்பாதையில் எள்ளளவும் நம்பிக்கை இல்லை; புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தைத் தொடுப்பதிலும் அக்கறையோ சிரத்தையோ கிடையாது ஏனெனில் நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவமும்—முற்றிலும் சட்டபூர்வமானதும் வெளிப்படையானதும்-ஆயுதப்போராட்ட வடிவமும் ஒன்றிருக்கும்போது மற்றொன்று இருக்க முடியாதவாறு மறுதலிப்பவையாகும். ஏற்கனவே கூறியவாறு நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சிக்கான தயாரிப்பு காலகட்டங்களிலான போராட்ட வடிவமாகிய நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவம் மக்கள் யுத்தப்பாதைக்கு முரணானது. எனவேதான் சீனப்பொதுவுடமைக் கட்சியும், மக்கள்

யுத்தப்பாதையை மேற்கொண்டுள்ள இன்னும்பிற மார்க்சிய லெனினியக் கட்சிகளும் சட்டபூர்வமான வாய்ப்புகளைப் பயன் படுத்தாத போக்கை 'இடது' சந்தர்ப்பவாதம் என்று நிராகரித்த அதே வேளையில் நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தைப் பயன்படுத்துவதையும் வலது திரிபுவாதமென்று நிராகரித்தன.

சீனப் பொதுவுடமைக் கட்சியின் "1921 முதல் தேசிய காங்கிரசு இரண்டு தவறான கண்ணோட்டங்களை எதிர்த் தது. ஒன்று, வலதுசாரி 'சட்டபூர்வ மார்க்சியக்' கண் ணோட்டம். அது கட்சியை, மார்க்சியத்தை புத்திஜீவிகள் படிக்கும் ஒரு வகுப்பறை நிறுவனமாக மாற்றுவதை நோக் கமாகக் கொண்டது. தொழிலாளர் வர்க்க இயக்கத்தை நடத்துவதற்கான ஒரு கறாரான அமைப்பை நிறுவுவதற்கு பதில் சீனத்தில் மார்க்சியவாதிகள் பள்ளிகளை நிறுவுவது, செய்திப் பத்திரிக்கைகளைப் பதிப்பிப்பது மூலம் பிரச்சார வேலை செய்வதும், நாடாளுமன்றப் போராட்டங்களில் பங்கேற்பதும் மட்டும் செய்யவேண்டும் என்று 'சட்டபூர்வ மார்க்சியவாதிகள்' கருதினார்கள். மற்றொன்று, 'இடது' துணிச்சல்வாதக் கண்ணோட்டம். அது கட்சியின் உடனடி நோக்கம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்று கருதி யது; கட்சியானது முதலாளித்துவ ஜனநாயக இயக்கத்தில் பங்கேற்பது, சட்டபூர்வ நடவடிக்கைகளைத் தொடுப்பது, கட்சிக்குள் புத்திஜீவிகளை அனுமதிப்பது ஆகியவைகளை எதிர்த்தது" (நவீன சீனப் புரட்சியின் வரலாறு, பக். 21-22)

எனவே கட்சியானது ஆரம்ப காலத்திலிருப்பதால் இயக் கத்துக்கான கறாரான அமைப்புக்கு பதில் நமது நாட்டில் பள்ளிகள் நிறுவுவது, பத்திரிக்கைகள் நடத்துவது, மார்க்சியத் தைப் பயிலும் நிறுவனமாக்குவது மற்றும் நாடாளுமன்றப் போராட்டங்களில் பங்கேற்பது ஆகிய வேலைகளைச் செய்ய வேண்டுமென்று வாதிடுபவர்களை வலது சந்தர்ப்பவாத சட்ட பூர்வ மார்க்சியவாதிகள் என்று ஏன் அழைக்கக்கூடாது?

இவ்வாறு மக்கள் யுத்தப்பாதையை மேற்கொண்டுள்ள அனைத்துப் பொதுவுடமைக் கட்சிகளும் ஏன் நாடாளுமன்றப் போராட்ட மற்றும் அமைப்பு வடிவத்தை நிராகரித்தன என் றால் இந்நாடுகளின் நீண்ட நெடியதும் இடர்ப்பாடுகள் மற்றும் நெளிவு சுழிவுகள் மிக்கதுமான புரட்சி ஏற்றத்தாழ்வாக வளர் கிறது; புரட்சியின் சமனற்ற நிலையை மாற்றவும், நாடுதழுவிய புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்தவுமான ஆயுதப் போராட்டத்தினூடே தான் நாடுதழுவிய வெற்றிக்கான தயா ரிப்புகளையும் அடக்கியது மக்கள் யுத்தப்பாதையாகும். எனவே புரட்சியும் புரட்சிகர யுத்தமும் தொடக்கத்திலிருந்தே தொடுக் கப்படுவதால் சட்டபூர்வமான, வெளிப்படையான நாடாளு மன்றப் போராட்ட மற்றும் அமைப்பு வடிவத்தை மேற்கொள் ளுவது முரணானதும் சாத்தியமற்றதுமாகும். தெலுங்கானா ஆயுதப் போராட்டத்துக்கு துரோகமிழைத்து — காட்டிக்

கொடுத்து—முடித்து வைத்த பின்னர்தான் திரிபுவாத நவீன திரிபுவாதிகள் கட்சித் தலைமை நாடாளுமன்றத் தேர்தல்களில் பங்கேற்க முடிந்தது என்பதை நினைவு கூர்ந்தாலே இதைப் புரிந்துகொள்ள முடியும். புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தை தொடுப்பது—செஞ்சேனை, கொரில்லாப் படை மற்றும் தளப் பிரதேசங்களை நிறுவுவதென்பது—தற்போதைய ஆளும் வர்க்கங்களின் சர்வாதிகாரத்தை, அரசை ஒரு குறிப்பிட்ட பகுதியிலாவது தூக்கியெறியும் செயலில் இறங்குவதைக் குறிக்கிறது. எனவே ஆளும் வர்க்கங்கள் மக்கள் யுத்தப்பாதையை மேற்கொள்ளும் புரட்சிகரக் கட்சியை சட்டபூர்வமான வெளிப்படையான நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தை மேற்கொள்ள அனுமதிப்பதேயில்லை.

மேற்கண்ட அனைத்துக் காரணங்களாலும் நமது நாட்டில் நாடாளுமன்ற போராட்ட மற்றும் அமைப்பு வடிவத்தை மேற்கொள்ள வேண்டுமென்ற இம்மூன்று வகையினரின் வலது சந்தர்ப்பவாதங்களையும் நிராகரிக்க வேண்டி உள்ளது. ஆனால் நாடாளுமன்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்களைப் புறக்கணிப்பதென்பது இடது சந்தர்ப்பவாதிகளைப்போல் வாக்குச் சாவடிகளைத் தாக்குவது அல்லது செயலூக்கமற்ற புறக்கணிப்பாக இருக்க கூடாது. ஒரு குறிப்பிட்ட அரசியல் நடத்தை வழி, திட்டம், இலக்கு, முழக்கத்துடன் முன்வைக்கப்படும் போர்த்தந்திரத்தின் போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களில் ஒன்றான 'நாடாளுமன்ற-தேர்தல் புறக்கணிப்பு' என்ற முழக்கம் செயலூக்கமிக்கதாகவும், ஏற்றத்தாழ்வான நிலைகளில் பிரயோகிக்கப்படுவதாகவும் இருக்க வேண்டும்.

(ஆ) தற்காலிகப் புரட்சி அரசாங்கம் என்னும் அமைப்பு வடிவம் மற்றும் அதன் மூலம் மேலிருந்து செயலாற்றுவது என்னும் போராட்ட வடிவம் ஆகியவற்றைப் பயன்படுத்துவது குறித்த மார்க்சிய-லெனினிய போதனைகளையும் கூட திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் தமது நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதையின் தர்க்கரீதியான முடிவாகிய தற்போதைய தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ அரசினுடைய நிர்வாகத் தலைமையும் சட்டமியற்றும் உறுப்பின் ஒரு பகுதியுமாகிய அரசாங்கத்தில் பங்கேற்பதை நியாயப்படுத்துவதற்காக திரித்துப் புரட்டுகின்றனர். இந்தியாவின் சில மாநிலங்களில் இவர்கள் அமைத்திருக்கும் மந்திரி சபைகளைக் காட்டி, அவை உழைக்கும் வர்க்கத்தினரின் போராட்டங்களுக்கான கருவி என்றும் புரட்சிக்கான தயாரிப்புக்கு அவற்றைப் பயன்படுத்த முடியும் என்றும் கூறுகின்றனர். சிலி, பொலிவியா போன்ற நாடுகளில் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பைப் பெற்றபோது சோசலிசப் புரட்சி நடந்துவிட்டதாக குதியாட்டம் போட்டார்கள். ஆனால் அவற்றின் முடிவுகள் இவர்களது துரோகத்தனத்தையும் ஓட்டாண்டித்தனத்தையும் அம்பலமாக்கிவிட்டன. தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ — நிலப்பிரபுத்துவ அரசின் ஒரு அங்கமாகிய அரசாங்கத்தைக் கைப்பற்றுவது அரசு

அமைப்பையே உடைத்து நொறுக்கித் தூக்கியெறிவதாகாது; தற்போதைய அரசு அமைப்பை பாட்டாளி வர்க்கம் அப்படியே எடுத்துப் பயன்படுத்தமுடியாது ஆகியவை மார்க்சிய - லெனினியத்தின் அரிச்சுவடிகளாகும். அரசின் ஒரு அங்கமாகிய அரசாங்கத்தைக் கைப்பற்றி — அதைத் தக்கவைத்துக்கொள்ளும் பொருட்டு அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராக செயல்படத் துணியாது, — அவ்வாறு செய்தால் தூக்கியெறியப்படும் நிலை தவிர்க்க முடியாது — ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்கு ஊறு விளைவிக்காமல் சில சில்லரைச் சீர்திருத்தங்களைச் செய்வதும், உழைக்கும் வர்க்கங்களுக்குச் சலுகைகள் வழங்குவதும் இந்த அரசு அமைப்பின் மீது பரந்துபட்ட மக்களது பிரமைகளை வளர்ப்பதாகவும், ஆளும் வர்க்கங்களின் அரசியல் சித்தாந்தத்தையும் அரசையும் பலப்படுத்துவதாகவும், இறுதியில் அவர்களது நலன்களைக் காப்பதாகவும், அவர்கள் மீதான பரந்துபட்ட உழைக்கும் மக்களின் கோபாவேசத்தைத் தாங்கிக் கொண்டு ஆளும் வர்க்கங்களைப் பாதுகாக்கும் இடிதாங்கிகளாக மட்டுமே இருக்கமுடியும்.

திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் பழிகேடாகப் பயன்படுத்துகிறார்கள்— திரித்துப் புரட்டுகிறார்கள் என்பதற்காக தற்காலிகப் புரட்சி அரசாங்கம் என்னும் அமைப்பு வடிவம் மற்றும் அதன் மூலம் மேலிருந்து செயலாற்றுவது என்னும் போராட்ட வடிவம் குறித்த மார்க்சிய-லெனினிய போதனைகள் நிராகரிக்கப்பட வேண்டுமென்றோ, அரைக்காலனிய அரை நிலப்பிரபுத்துவ நாட்டின் மக்கள் யுத்தப்பாதைக்குப் பொருந்தாது என்றோ கருதக்கூடாது. மாறாக,ஜனநாயகப்புரட்சியின் காலப்பகுதியில் இவற்றை பயன்படுத்துவது கோட்பாடு ரீதியில் அனுமதிக்கத்தக்கதும், பருண்மையான நிலைமைகள் எழும்போது தேவையான நிபந்தனைகளுடன் பிரயோகிக்கப்பட வேண்டியதுமாகும். தற்காலிகப் புரட்சி அரசாங்கம் என்னும் அமைப்பு வடிவம் மற்றும் மேலிருந்து செயலாற்றுவது என்னும் போராட்ட வடிவமென்றால் என்னவென்று முதலில் தெளிவுபடுத்தியாக வேண்டும். புதிய ஜனநாயகப் புரட்சி முழுமையாக வெற்றியடைந்து யுத்ததந்திர இலக்கு குறிக்கோள்களைப் பூர்த்திசெய்யும் முன்னரே, அதற்கான புரட்சியின் போக்கில், புதிய ஜனநாயகத் திட்டத்தைவிடக் குறைவானதொரு குறைந்தபட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக புரட்சியின் மூலம் அமைக்கப்படும் தற்காலிகமானதொரு புரட்சிகர அரசாங்கத்தில் பங்கேற்பது, அதிலிருந்து போராடுவதன் மூலம், செயல்படுவதன் மூலம் யுத்ததந்திர வெற்றிக்கான தயாரிப்பில் ஈடுபடுவது-இவற்றையே குறிப்பிடுகிறோம். இம்மாதிரியான அமைப்பு மற்றும் போராட்ட வடிவத்தைப் பயன்படுத்துவது சமரச சந்தர்ப்பவாதமாகும் என்கிற அராஜக வாதக் கருத்துக்களை முற்றாக முறியடிக்க வேண்டும். கீழிருந்து மட்டும் செயலாற்ற வேண்டுமென்பது புரட்சியின் நெளிவு சுழிவான போக்குகளைப் புரிந்து கொள்ளாது நேர்க்கோட்டுப் பாதையில் முன்செல்ல முனைவதாகும். தற்காப்புப் போராட்டங்களை மட்டுமே பார்ப்பதற்கு

மிதமிஞ்சிப் பழகிப்போயுள்ளதைத்தான் இது காட்டுகிறது மாறாக, மிகவும் வலுவான, தாக்குதற் செயலுக்கான தயாரிப்புகளையும் அதற்கான நிலைமைகளையும் வடிவங்களையும் பயிலவேண்டும்.

"மேலிருந்து" செயல்புரிவது என்னும் போராட்ட வடிவம் மற்றும் தற்காலிகப் புரட்சிகர அரசாங்கம் என்னும் அமைப்பு வடிவம் ஆகியவற்றைக் கொண்ட போர்த்தந்திரங்கள் ருஷியப் புரட்சியில் (1905-06) மட்டுமல்ல சீனப்புரட்சியிலும் 1924-27 மற்றும் 1945-47 காலகட்டங்களிலும் முன்வைக்கப்பட்டன. இப்போர்த்தந்திரம் எவ்வாறு சரியென்பதைத்தான் லெனின் 'ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் இரு போர்த்தந்திரங்கள்' என்ற நூலில் விவரிக்கிறார். அப்படிப்பட்ட அரசாங்கத்தில் கலந்து கொள்வது அனுமதிக்கத்தக்கதா? அனுமதிக்கத் தக்கதே என்றால் எந்த நிபந்தனைகளின் கீழ் அனுமதிக்கத் தக்கது? அந்தச் சமயங்களில் நாம் கீழிருந்து புரியும் செயல் என்னவாக இருக்கும்? என்ற கேள்விகளுக்கு சரிநுட்பமான கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியில் விடையளிக்கிறார். இம்மாதிரியான போர்த்தந்திரத்தை 1924-27 முதல் மாபெரும் சீனப்புரட்சியில் பின்பற்றியது குறித்தும் அதன் படிப்பினைகள் குறித்தும் 'கம்யூனிஸ்டை அறிமுகம் செய்வதில்' தொகுத்தளிக்கும் மாவோ 1945-47 காலகட்டத்தில் 'கூட்டரசாங்கம் பற்றி' எழுதும்போது மேற்கண்ட கேள்விகளுக்கு விடையளித்துப் பருண்மையாக பிரயோகிக்கிறார். இந்த அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்கள் அடங்கிய போர்த்தந்திரங்கள் எந்த நிலைமைகளின் கீழ் பொருத்தமுடையதாக இருக்கும் என்பதை பருண்மையான நிலைமைகளே தீர்மானிக்கும் என்றும், சக்திகளின் பரஸ்பர ஒப்புநிலை முதலியவை போன்ற பருண்மையான நிலைமைகளைப் பற்றித் தற்சமயம் பேசுவது சாத்தியமில்லை என்றும், அறிவுள்ளவன் எவனும் இந்நிலைமைகளை முன்கூட்டி வரையறுக்கத் துணியமாட்டான் என்றும் லெனின் கூறினார். ஆனால் இப்போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களைப் பிரயோகிப்பதற்கான முன்னிபந்தனைகளைத் தெளிவாக வரையறுத்தார். தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தில்

பாட்டாளி வர்க்க கட்சி பங்கேற்றாலோ, இல்லாவிட்டாலோ "எப்படி இருந்த போதிலும், தற்காலிகப் புரட்சி அரசாங்கத்தின் மீது நாம் கீழிருந்து நிர்ப்பந்தம் கொண்டுவர வேண்டும். கீழிருந்து இந்த நிர்ப்பந்தத்தைச் செயல்படுத்த முடிவதற்குப் பாட்டாளி வர்க்கம் ஆயுதமேந்தியிருக்கவேண்டும். ஏனெனில் புரட்சிகரமான நிலைமைகளில் விவகாரங்கள் அசாதாரணமான வேகத்துடன் பகிரங்கமான உள்நாட்டுப்போர் கட்டத்துக்கு வளர்கின்றன—மற்றும் சமூக ஜனநாயகக் கட்சி பாட்டாளி வர்க்கத்துக்கு தலைமை வகித்திருக்கவும் வேண்டும். அது ஆயுதமேந்திச் செலுத்தும் நிர்ப்பந்தத்தின் நோக்கம் 'புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாப்பது, கெட்டிப்படுத்துவது, விரிவுபடுத்துவது'—அதாவது பாட்டாளி வர்க்க நலன்களின் நிலையிலிருந்து பார்க்கும்

போது அந்த ஆதாயங்கள் நம் குறைந்தபட்ச வேலைத் திட்டம் முழுவதையும் நிறைவேற்றுவதாக அமைந்திருக்க வேண்டும்'' (ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் இரு போர்த்தந்திரங்கள் பக் 25-26) என்றார் லெனின்.

1927ல் சீனாவின் முதலாம் மாபெரும் புரட்சி லெனின் வரையறுத்த மேற்கண்ட இரு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தவறியதால் தோல்வியுற்றது என்ற மாவோ, மேலிருந்து செயலாற்றும் போராட்ட மற்றும் அமைப்பு வடிவத்தை சரியே என்றார். எனவேதான் இவ்விரு நிபந்தனைகள் பூர்த்தியானபோது நிலைமைகள் கோரியபோது மீண்டும் அப்போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களைக் கொண்ட போர்த்தந்திரத்தை முன் வைத்தார்.

''குவாங்துங்கிலிருந்து தொடங்கி யாங்சி நதியை நோக்கிப் பரவிய 1926-27 புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தன் தலைமை அதிகாரத்தை உறுதியாக பிரயோகிக்கத் தவறியதால், தலைமை தரகு முதலாளிகள், உள்ளூர் கொடுங்கோலர், தீயபிரபு வர்க்கங்களால் பிடித்துக் கொள்ளப்பட்டு, புரட்சி ஒழிந்து அதனிடத்தில் எதிர்ப்புரட்சி ஏற்பட்டது'' (மாவோ, தேர்ந்த ராணுவப் படைப்புகள் பக் 3) மேலும் ''1927ல் புரட்சி பிரதானமாக தோல்வியுற்றது. ஏனென்றால் பொதுவுடமைக் கட்சியில் அப்போது சந்தர்ப்பவாதப்பாதை ஆதிக்கம் பெற்றிருந்ததோடு, நம்முடைய அணிகளையே தொழிலாளர் மற்றும் விவசாயி இயக்கங்களையும் பொது வுடமைக் கட்சியின் தலைமையிலான ஆயுதப்படைச் சக்திகளையுமே விரிவுபடுத்த முயற்சி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை; ஒரு தற்காலிக கூட்டாளியாகிய கோமிண்டாங்கையே முற்றும் முழுதாக சார்ந்து நிற்கும்படி இருந்தது'' (மாவோ, ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போர்த்தந்திரம் பற்றி, பக் 61)

எனவே பருண்மையான நிலைமைகள் கோரும்போது இவ்விரு நிபந்தனைகளுடன் மேலிருந்து செயலாற்றுவது என்ற போராட்ட முறையும் அதற்கான தற்காலிகப் புரட்சி அரசாங்கம் என்ற அமைப்பு வடிவமும் கொண்ட போர்த்தந்திரங்கள் வகுக்கப்படுவது அரைக்காலனிய - அரைநிலப்பிரபுத்துவ நாட்டிற்கும் அதன் மக்கள் யுத்தப்பாதையாகிய யுத்ததந்திரத்துக்கும் முரணானது அல்ல; மாறாக தேவையானதாகவும் இருக்கலாம்.

ஆனால் சீனத்தைப் போன்ற, குறிப்பாக அந்நிய ஆக்கிரமிப்பு காலகட்டங்களில் மட்டுமே அது அவசியமென்று யாந்திரீக முறையிலும், விவசாயப் புரட்சி மற்றும் உள்நாட்டு யுத்த காலங்களில் கூடாது என்றும், இதுபுரட்சியின் மையங்களை நகரங்களுக்கு மாற்றிவிடும் என்றும் இடது சந்தர்ப்பவாதிகள் வாதிடுகின்றனர். அந்நிய ஆக்கிரமிப்பில்லாத காலங்களிலும் நிலைமைகள் கோரினால் இம்மாதிரியான போர்த்தந்திரங்கள் முன்வைக்கப்படும், சான்றாக 1924-27 சீனப்புரட்சியே இருந்தது.

சீனத்தைப் போன்றதாக இல்லாத வேறு நிலைமைகளும் சான்றாக பாசிச எதிர்ப்பு புரட்சிக்குப் பின்னொரு ஜனநாயக ரீதியிலான தற்காலிகப் புரட்சி அரசு அதைக் கோரலாம் என்பதையும் மார்க்சியம்-லெனினியம் அனுமதிக்கிறது. மேலும் இம்மாதிரியான போர்த்தந்திர காலகட்டங்களில் புரட்சியின் மையங்கள் நகரங்களுக்கு மாறுவதாலேயே இப்போர்த்தந்திரங்கள் பொருந்தாது என்பதும் தவறு. மீண்டும் கூறுவதானால் 1924-27 சீனப்புரட்சியின் மையங்களில் சில நகரங்களாகத்தான் இருந்தன; எனினும் விடுதலைப் பிரதேசங்கள், விவசாயிகளது புரட்சியை அது மறுதலிக்கவில்லை.

"1924-27 ஆண்டுகளின் புரட்சிக் காலகட்டத்தில் கோமிண்டாங்-பொதுவுடமைவாதிகள் கூட்டோடு ஒரு கூட்டாட்சி அமைக்கப்பட்ட காலத்தில் தளப்பிரதேசப் பகுதிகள் தங்களுடைய மையங்களாக சில பெரும் நகரங்களைக் கொண்டிருந்தன, அப்போதும் கூட பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் உழவர்களைப் பிரதானமாகக் கொண்ட மக்கள் படையைக் கட்டவேண்டியதும், கிராமப் பகுதிகளில் நிலப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதும், அவசியமாயிருந்தது''. (மாவோ, தேர்ந்த படைப்புகள், பக். 366)

எனவே மீண்டும் பிரச்சினை என்னவென்றால் பாட்டாளி வர்க்கத் தலைமையும், ஆயுதப்படை சக்தியும் ஆகிய இரு நிபந்தனைகளும், ஒரு அரைக்காலனிய — அரைநிலப்பிரபுத்துவ நாட்டின் புரட்சியில் விவசாயிகளது புரட்சியும், பிரச்சினையும் மையமானது என்பதுதான். ஆகவே, நமது நாட்டுப் புரட்சியின் பருண்மையான நிலைமைகள் கோரினால் தற்காலிகப் புரட்சி அரசாங்கம் என்னும் அமைப்பு வடிவமும் அதன் மூலம் மேலிருந்து செயலாற்றுவது என்ற போராட்ட வடிவமும் கொண்ட போர்த்தந்திரங்கள் முன்வைக்கப்பட வேண்டுமே யொழிய அவற்றைப் புறக்கணிக்க முடியாது.

(இ) அழித்தொழிப்பு யுத்தம் மற்றும் கொரில்லாப் போர்முறை என்ற ஆயுதப் போராட்ட வடிவம் மற்றும் கொரில்லாப் படை என்ற அதற்கான அமைப்பு வடிவம் ஆகியவை பற்றிய மார்க்சிய - லெனினிய — மாவோ சிந்தனையை தமது தனிநபர் பயங்கரவாதத்துக்கு ஏற்றவாறு சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் திரித்துப் புரட்டினர். இதை நியாயப் படுத்துவதற்காக கற்பனையாக செஞ்சேனையைக் கட்டியமைத்தனர்; இந்தக் கற்பனை உலகில் மூழ்கித் திளைத்த ஜோகர் கற்பனையான செஞ்சேனையைக் கொண்டு நகர்ந்து செல்லும் எதிரிப்படைகளின் மீது தாக்குதல் தொடுத்தார். முழுக்க முழுக்க ராணுவப் பிரச்சினையாகிய இப்போராட்ட மற்றும் அமைப்பு வடிவம் குறித்து அரசியல் போர்த்தந்திரத்தின் கீழ் ஏன் விவாதிக்க வேண்டியிருக்கின்றதென்றால் இதை முழுக்க முழுக்க ஒரு அரசியல் பிரச்சினையாகவும், அதுமட்டுமல்ல அனைத்தும் தழுவிய தேசிய சர்வ தேசிய முக்கியத்துவம் வாய்ந்

ததாகப் போட்டு சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் குழப்பி விட்டார்கள். இன்னும் சில மையவாதிகள் ஏதாவது ஒரு வகையில் அதைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கின்றனர். —யுத்தம் ரத்தம் சிந்தும் அரசியல் என்கிற வகையிலே இதுவும் ஒரு அரசியல் பிரச்சினையே.

அழித்தொழிப்பு யுத்தம், கொரில்லாப் போர் முறை மற்றும் கொரில்லாப் படை குறித்து சாரு மற்றும் பிற 'இடது' சந்தர்ப்பவாதிகளின் நிலைப்பாடுகள் பின்வருவனவாகும்: 1) நிலப்பிரபுத்துவ வர்க்கங்களை ஒழித்துக்கட்டுவதால் மட்டுமே கொரில்லாப் போர் முறையைத் துவக்க முடியும்; 2) வர்க்க எதிரியை (நிலப்பிரபுத்துவ வர்க்கங்களை) அழித்தொழிப்பது வர்க்கப் போராட்டத்தின் உயர்ந்த வடிவம்; 3) கொரில்லா நடவடிக்கை மூலம் வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பது கொரில்லாப் போர்முறையின் துவக்கப்புள்ளி; 4) அழித்தொழிப்பு இயக்கம் நம்மை எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும் — அரசியல் உணர்வுடைய, மாசேதுங் சகாப்தத்தின் சாவுக்கும் துன்பங்களுக்கும் அஞ்சாத புதிய மனிதனையும், மக்கள் படையையும் தளப்பிரதேசத்தையும் உருவாக்கும்; 5) அழித்தொழிப்பு இயக்கம் நிலப்பிரபுத்துவ வர்க்கம் மற்றும் (அதனுடைய அரசின் ஒடுக்குமுறையிலிருந்து மட்டுமல்லாது சுய நலம், குலநலம், ஸ்தலவாதம், சாதியம், மத மூடநம்பிக்கைகள் ஆகிய விஷக்களைகள் மற்றும் பிற்போக்குக் கருத்துக்களிலிருந்தும் மக்களை விடுவிக்கும்; (6) அழித்தொழிப்பு இயக்கம் நமது நாட்டையும் மக்களையும் விடுவிக்கும் கடமை மற்றும் ஏகாதிபத்தியத்தையும் ஏகாதிபத்திய யுத்தத்தையும் முடிவுக்கு கொண்டுவரும் சர்வதேசியக் கடமை ஆகிய இரு புனிதமான கடமைகளோடு இணைந்துள்ளது; அவற்றை நிறைவேற்றும்— பொருளாதார அடிப்படையை—புதிய மனிதனது தோற்றத்தை ஏற்படுத்தி உள்ளது; (7) வர்க்க எதிரியை அழித்தொழிப்பது— நம் கையிலுள்ள இந்த ஆயுதம்—உலகம் முழுவதுமுள்ள பிற்போக்குவாதிகள் மற்றும் திரிபுவாதிகளுக்கு மிகப்பெரும் அபாயகரமானதாக இருக்கிறது. இவ்வளவும் ஏதோ யுத்தமுனையில் ராணுவ வீரர்களைத் தட்டியெழுப்பும் வீரஉரை அல்ல. எட்டாவது கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட சாருவின் அரசியல்—அமைப்பு அறிக்கையின் விளக்கவுரையிலே உள்ளவையே. (லிபரேஷன் மே-ஜூலை 1970, தொகுதி 3. எண் 7-9, பக். 22 23)

சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் முன்வைத்த இக்கருத்துக்கள் எவ்வளவு பேதமையானது —அராஜகமானது என்பதை நடைமுறையே அவர்களுக்கு உணர்த்தி இருக்கவேண்டும்; இவை கோட்பாடு ரீதியிலும் பல்வேறு கோணங்களிலிருந்து சாடி நிராகரிக்கப்பட்டுவிட்டன. ஆனால் குட்டி முதலாளித்துவ அகங்காரம் மற்றும் சுயவிமர்சனமற்ற போக்கு காரணமாக அழித்தொழிப்பு யுத்தம், கொரில்லாப் போர்முறை மற்றும் கொரில்லாப்படை ஆகியவற்றைப் பற்றிய தமது பழைய கருத்துக்களை ஏதோ ஒரு வகையில் நியாயப்படுத்தவும், நீடிக்கவும், அவை புரட்சிகர யுத்தப்பிரச்சினைக்கு மேலே ஏதோ

முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காட்டமுயலுகின்றனர். கிராமப் புறங்களுக்குச் சென்று புரட்சியாளர்கள் வேலை செய்யத் துவங்கினாலே, ஏதாவது இயக்கத்தை மேற்கொண்டாலே, வர்க்க முரண்பாடுகள் வளர்க்கப்படும்போதே, நிலப்பிரபுக்கள் புரட்சியாளர்களை அழித்தொழிக்கின்றனர்; புரட்சியாளர்கள் முந்திக்கொண்டு அம்மாதிரியான நிலப்பிரபுக்களை அழித்தொழிப்பதன்மூலம் தான இயக்கத்தை தக்கவைத்துக்கொள்ள முடியும்; உழைக்கும் மக்களது வர்க்க உணர்வு தளராமல்— தார்மீக உணர்வு குன்றாமல்—காக்க முடியும்; கிராமப்புறங்களின் வர்க்கப்போராட்ட வளர்ச்சிப்போக்கில் அழித்தொழிப்பது தவிர்க்க முடியாதது; எனவே குறைந்த பட்சம் அது ஒரு போராட்ட முறை என்று ஒப்புக்கொள்ள வேண்டும் என்று மையவாதிகள் வாதிடுகின்றனர்.

ஒன்று புரட்சிகர சக்திகள் பலவீனமாயிருக்கும் நிலையில் எதிரி தனது மேலாண்மையைப்—பலத்தைப்பயன்படுத்தி புரட்சியாளர்களை அழித்தொழிக்க முயலுவான் அல்லது புரட்சிகர சக்திகள் மேலாண்மை பெற்றிருக்கும்போது தனது பலவீனம் காரணமாக பீதியுற்று அராஜகரீதியிலான பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகிறான். இரண்டின்போதும் புரட்சிகர சக்திகளைச் சிதறடிக்கவும், தார்மீக உணர்வுகளை மழுங்கடிக்கவும் எத்தணிக்கிறான். எதிரி தனக்குச் சாதகமானதொரு நிலைமையில் புரட்சியாளர்கள்மீது, திணிக்கும் போராட்ட முறையை நாமும் ஏற்க வேண்டும் என்பதும், குறிப்பிட்ட நிலப்பிரபுவை அழித்தொழித்தபின் சங்கிலித்தொடர் போன்ற நிகழ்ச்சிகளையும் அதன் விளைவாக எழும் பிரச்சினைகளையும் அலட்சியம் செய்வதும் தான் உண்மையில் இயக்கத்தை தக்கவைக்க முடியாமற்செய்து உழைக்கும் மக்களது வர்க்க உணர்வுகளை, தார்மீக உணர்வுகளைக் குன்றச்செய்து புரட்சியாளர்களைத் தனிமைப்படுத்தும். இதைஉணராதது முற்றிலும் தவறாகும். புரட்சிகர சக்திகள் ராணுவ ரீதியில் மேலாண்மை பெற்றிருக்கும்போதுகூட ஆளும் வர்க்கத்தினரை வர்க்க ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும்-அணுகி அவர்களது சர்வாதிகாரத்தை—அது பிரதானமாக ஆயுதபலத்தில் தங்கியிருக்கிறது எனினும், அரசியல், சித்தாந்த ரீதியிலும் பரந்துபட்ட மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்பதால் - மக்கள் பங்கேற்புடன் தூக்கியெறிய வேண்டுமே ஒழிய சதித்திட்டமாக இருக்கமுடியாது; எனவேதான் வெளிப்படையான பொதுமக்கள் விசாரணையும், குற்றஞ்சாட்டுதலும், அரசியல், சித்தாந்த, தார்மீகபலத்தை உடைத்தெறிய 'இழிவான' முறைகளில் நடத்தவும் கொடிய நிலப்பிரபுக்கள் மற்றும் வர்க்க எதிரிகளுக்கு மரணதண்டனை உட்பட பல்வேறு நிலைகளில், வகைகளில் தண்டிப்பதும் புரட்சியில் முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றன. இவையனைத்தும் பின்தங்கிய விவசாயிகளை ராணுவரீதியிலான — பலாத்காரமான நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையில் இருந்து மட்டுமல்லாது அரசியல், சித்தாந்த, கலாச்சார, தார்மீக ரீதியிலான ஒடுக்கு முறைகளில் இருந்தும் விடுவிக்கின்றன. இவ்வாறு அரசியல் போராட்டத்தினூடே மரணதண்டனை அளிப்பதும், வர்க்க எதிரிகளை

ஒழித்துக்கட்டுவதும், மக்கள் பங்கேற்புடன் கூடியதாக இருக்கிறது; இது ஒரு போராட்ட முறையாகவும் இருக்கிறது. மாறாக, சதித்திட்ட வகைப்பட்டதாக வர்க்க எதிரியை அழித்தொழிக்கும் இயக்கத்தையும், அதற்கான ரகசியக் குழுக்களையும் போராட்ட மற்றும் அமைப்பு வடிவமாகக் கொள்ளமுடியாது.

அழித்தொழிப்பு யுத்தம், கொரில்லாப் போர்முறை மற்றும் கொரில்லாப்படை குறித்து மார்க்சிய-லெனினிய நிலைப்பாடுகள் பின்வருவனவேயாகும். நிலப்பிரபுத்துவ வர்க்கம் ஒரு வர்க்கம் என்ற முறையில் அரசின் பலாத்கார எந்திரங்களான போலீசு, துணைராணுவம், ராணுவத்தையே பிரதானமாக சார்ந்து நின்று புரட்சிகர இயக்கத்தை ஒடுக்குகிறது. இவ்வர்க்க ஆட்சியை ஒழிப்பது அல்லது அதன் அரசியல் ரீதியிலான ஒழிப்பு கொரில்லாப்படையும், செஞ்சேனையும் புரட்சிகர மக்கள் திரளும் வெற்றிகரமாக அவற்றை முறியடிப்பதில் தங்கியிருக்கிறது. எனவே புரட்சியின் அதி உயர்ந்த வடிவமாகிய புரட்சிகர யுத்தத்தின் மூலம் அவற்றை ஒழித்துக்கட்ட வேண்டும். பலவீனமாக ஒரு படை பலம் வாய்ந்த மற்றொரு படையைக் கூடியமட்டும் அழித்தொழிப்பதன் மூலமே பலம் வாய்ந்ததாக மாறமுடியும்.

> "தனக்கான பண்டங்களில் கிட்டத்தட்ட முழுவதையும் எதிரியிடமிருந்தே பெறும் செஞ்சேனைக்கு, அழித்தொழிக்கும் யுத்தமே அடிப்படைக் கொள்கை. எதிரியின் வினைத்திறனுடைய பலத்தை அழித்தொழிப்பதன் மூலம் மட்டுமே நாம் அவனது 'சுற்றி வளைத்து நசுக்கும்' நடவடிக்கைகளை துகளாக்கவும் எமது தளப்பிரதேசங்களை விரிவுபடுத்தவும் முடியும். இழப்புகளை ஏற்படுத்துவது எதிரியை அழித்தொழிக்கும் ஒரு வழிவகை, இல்லாவிடில் அதில் அர்த்தமே இராது. எதிரிக்கு இழப்புகளை ஏற்படுத்துவதில் நாமும் தேய்வுகளை உறுகிறோம்; ஆனால் அவனது கூறுகளை அழித்தொழிப்பதன் மூலம் எமது கூறுகளை நிரவிக்கொள்கிறோம்; அவ்வாறாக எமது இழப்புகளை நிரவிக்கொள்வது மட்டுமல்லாமல் எமது சேனையின் பலத்தைக் கூட்டியும் கொள்கிறோம். மிகப் பலம் வாய்ந்த எதிரியுடனுள்ள போட்டியில் எதிரியைச் சிதறியோடச் செய்யும் போர் அடிப்படையில் முடிவை நிர்ணயிப்பதல்ல. அழித்தொழிக்கும் போர் எந்த எதிரியின் மீதும் பெரிய உடனடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு மனிதனின் பத்து விரல்களையும் காயப்படுத்துவது அவற்றிலொன்றைக் கொத்தியெறிவது போன்று பயனுடையதாகாது; எதிரியின் டிவிஷன்கள் பத்தைச் சிதறியோடச் செய்வது அவற்றிலொன்றினை அழித்தொழிப்பது போன்று பயனுடையதாகாது" (மாவோ, தேர்ந்த ராணுவப் படைப்புகள் பக் 291-92)

இந்த அளவு அழித்தொழிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் மாவோ அதைத் தவறவிடவும் கூடாது என்பதை மேலும் வலியுறுத்துகிறார்.

''வெறுமனே எதிரிப்படையைப் புறங்காணுவது அல்லது அவைத் தப்பிச்செல்ல அனுமதிப்பது, முழுமையான சண்டை அல்லது போரியக்கத்தில் மெது பிரதானப்படை மற்றொரு எதிரிப்படைக்கு எதிராக தன் அழித்தொழிக்கும் நடவடிக்கைகளைச் செறிவாக நடத்திக்கொண்டிருக்கிறது என்றால் மட்டுமே அர்த்தமுடையதாக இருக்கும்; இல்லாவிடில் அது அர்த்தமற்றது. இங்கு இழப்புகள் லாபங்களால் சரியெனக் காட்டப்படுகின்றன'' (ஷி நூல், பக் 292-93)

ராணுவ ரீதியிலான அழித்தொழிப்பு யுத்தத்துக்கு ஏன் இந்த அளவு மாவோ முக்கியத்துவமளிக்கிறார் என்றால், யுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளின் பிரதான நோக்கமே இதில் தான் தங்கியுள்ளது.

''தன்னைப் பேணிக்கொண்டு எதிரியை அழித்தல் என்ற யுத்தத்தின் குறிக்கோள் யுத்தத்தின் சாராம்சமும் யுத்த நடவடிக்கைகள் அனைத்தினதும் அடிப்படையுமாகும்' போர் நுட்ப ரீதியானவை தொட்டு யுத்ததந்திர ரீதியிலானவை ஈறாக எல்லா யுத்த நடவடிக்கைகளிலும் இந்த சாராம்சம் ஊறிக்கிடக்கின்றது. யுத்தத்தின் இந்த குறிக்கோள் தான் யுத்தத்தின் அடிப்படையான கோட்பாடு; போர்நுட்பவியல் போர்த்தந்திரம், போரியக்கம், யுத்ததந்திரம் ஆகியவை சம்பந்தமான தத்துவங்களோ கோட்பாடுகளோ எதுவும் அதனின்றும் விலகமுடியாது'' (ஷி நூல், பக். 476)

எனவேதான் எதிரியை அழிப்பதை உடனடி நோக்கமாகவும் அதேசமயம் எதிரியை அழிக்காவிட்டால் நீ அழிக்கப்படுவாய் என்கிற முறையில் சுயபாதுகாப்பாகவும் விளங்கும் தாக்குதல் பிரதான சாதனமாகிறது; தன்னைப் பாதுகாப்பதை உடனடி நோக்கமாகவும் அதேவேளையில் தாக்குதலுக்கான தயாரிப்பு என்கிற முறையில், தாக்குதலைப் பூர்த்தி செய்யும் சாதனமான தற்காப்பும் இன்றியமையாததாகும். பெருந்தொகையில் எதிரியை அழித்தொழிப்பதன் மூலம் தான் பயனுள்ள முறையில் தன்னைப் பாதுகாக்க முடியும் என்பதால் யுத்தத்தின் பிரதான நோக்கம் எதிரியை அழித்தொழிக்கும் சாதனமாக விளங்கும் தாக்குதல் முதன்மையானதாகவும் அதே வேளையில் எதிரியை அழித்தொழிப்பதில் பூர்த்தி செய்யும் சாதனமாக விளங்கும் தற்காப்பு இரண்டாந்தரமானது.

சாருவின் 'வர்க்க எதிரியை அழித்தொழிக்கும் இயக்கத்தை' உயர்ந்த கட்டத்துக்கு வளர்த்தெடுத்ததாகக் கூறிக்கொண்டு தனிப்பட்ட போலீசைத் தாக்கும் நடவடிக்கைகளை கொரில்லா யுத்தமென்ற ஜோகர், ராணுவரீதியிலான அழித்தொழிப்பு யுத்தத்தின் பின்வரும் நிபந்தனைகளைப் புறக்கணித்தார்.

''அழித்தொழிப்பதான நோக்கத்திற்கு மக்கள் ஆதரவு, சாதகமான தயாரிப்பு, பாதிக்கப்படக்கூடிய எதிரிப்படையொன்று, திடீர்த்தாக்குதலின் சாதகத்தன்மை ஆகியன

போன்ற சூழ்நிலைகள் எல்லாம் இன்றியமையாதவை'' (ஷை நூல் பக். 292).

இன்றியமையாத இந்த நிபந்தனைகளின்றி ஒரு சில சிதறிய குழுக்களைக் கொண்டு 'நகர்ந்து செல்லும் எதிரிப்படையின் மீது தாக்குதல்' தொடுத்த அவர்களது நடவடிக்கைகள் மேலும் மக்களிடமிருந்து தனிமைப்படவும், இழப்புக்கும் வழி வகுத்தன. மாவோ அழித்தொழிப்பு யுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்தியபோது எதிரியின் படைகள் முழுவதையும் பௌதீக ரீதியில் அழித்தொழிப்பதை யுத்தம் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்றும் தெளிவுபடுத்தினார்.

''யுத்தத்தின் நோக்கம் குறிப்பாக 'தன்னைப் பாதுகாத்து எதிரியை அழிப்பதாகும். (எதிரியை அழிப்பது என்றால் அவனை நிராயுதபாணியாக்குவது, அதாவது, எதிர்க்கும் ஆற்றலை அவனிடமிருந்து பறிமுதல் செய்வது' அன்றி, அவனுடைய படைகள் முழுவதையும் பௌதீக ரீதியில் அழிப்பது அல்ல'' (ஷை நூல், பக். 474)

யுத்தத்தின் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் போர் முறைகளில் ஒன்று தான் கொரில்லாப் போர் முறையாகும்.

''கொரில்லா யுத்தம் என்றால் என்ன? ஒரு பின்தங்கிய நாட்டில், ஒரு பெரும் அரைக்காலனி நாட்டில், ஒரு நீண்ட காலத்துக்கு ஆயுதமேந்திய எதிரியை சமாளித்து தனது சொந்த பலம் வாய்ந்த தளங்களை உருவாக்கிக்கொள்ள மக்களது ஆயுதமேந்திய சக்திகளுக்கு மாற்றில்லாததும், எனவே மிகமிகச் சிறந்ததுமானதொரு போராட்டவடிவமாகும்'' (மாவோ.)

யுத்தத்தின் நோக்கத்தை—தன்னை பாதுகாத்து எதிரியை அழிப்பதை—கொரில்லா யுத்தமுறை மற்றும் கிரமமான யுத்த முறை இரண்டிலும் நிறைவேற்ற முடியும். என்றாலும் பலவீனமானதும் மற்றும் ஆரம்ப காலத்தினதுமானதொரு நிலையில் செஞ்சேனை மேற்கொள்ளும் முதற்கட்ட யுத்தமுறையே கொரில்லா யுத்த முறையாகும். இரண்டாவது கட்டம்கூட கொரில்லாத் தன்மையுடைய நடமாடும் யுத்தமாகவே இருக்கும். போராட்டத்தின் நீண்டகாலப் போக்கில் கொரில்லா யூனிட்டுகளும், கொரில்லா யுத்தமுறையும் கிரமமான படைகளாலும் கிரமமான யுத்தமுமாகப் படிப்படியாக மாறும். யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு மற்றும் இழுபறிநிலை இருக்கும்வரை முன்னதும், யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் நிலைக்கு உயர்ந்து விடும்போது பின்னதும் கைக்கொள்ளப்படும். இக்கொரில்லா யுத்தத்தையும் கொரில்லாத்தன்மையுடைய நடமாடும் யுத்தங்களையும் பிரதான சக்தியாகிய செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகளும் மக்கள் கொரில்லாக்களும் இணைந்தே நடத்தப்படும். இவையிரண்டும் மனிதனின் இடக்கையும் வலக்கையும் போன்று ஒன்றுக்கொன்று உதவியானவை. மக்கள்

கொரில்லாக்கள் என்பவை ஸ்தலஆயுதப்படைகளாகிய செங் காவலர் படைகளும் தொழிலாளர் விவசாயிகளின் எழுச்சிப் படைப்பிரிவுகளும் அடங்கும்.

இவ்வாறு அழித்தொழிப்பு யுத்தம், கொரில்லா யுத்தமுறை மற்றும் கொரில்லாப் படைகள் ஆகிய போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் அனைத்தும் ஆயுதப்போராட்ட வகைப் பட்ட ராணுவப் பிரச்சினைகளாக மட்டுமே யுத்ததந்திரம் மற் றும் போர்த்தந்திர ரீதியில் கருதப்படவேண்டும். ஆனால் புரட்சிகர யுத்தம் வெடிப்பதற்கு முன்பே, செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகளும், மக்கள் கொரில்லாக்களும் முறை யான கொரில்லா யுத்தத்தை தொடுக்கும் முன்பே எதிர்ப் புரட்சி சதிவேலைகளில் ஈடுபட்டு புரட்சியாளர்களை அழி தொழிக்க முயலும் நிலப்பிரபுக்களானாலும், போலீசு, ராணு வத்தினரானாலும் எதிரி வர்க்கம் திரட்டும் குண்டர் படையா னாலும், உளவு பார்க்கும் ஏஜெண்டுகளானாலும் சரி தாக்கப் படுவதும், தேவையானால் அழித்தொழிப்பதும் தவிர்க்க முடி யாததாகும். ஆனால் அவை குறிப்பிட்ட எந்தவொரு போர்த் தந்திரத்தின் கீழான போராட்ட மற்றும் அமைப்பு வடிவத்தி னதாகக்கொள்ள முடியாது. இம்மாதிரியான தாக்குதல்களுக்குப் பின்னும் இயக்கத்தைக் காத்துக்கொள்வதற்கும், வளர்ப்பதற் குமான அமைப்பு மற்றும் அரசியல் பணிகள் செய்து முடிக்கப் படவும் வேண்டும். அதாவது, எதிர்த்தாக்குதலை முறியடிப்ப தற்கான அமைப்பு ரீதியிலான தயாரிப்பும் நமது நடவடிக்கை களைச் சரியென்று மக்களிடம் எடுத்துச்செல்லும் அரசியல் தயாரிப்பும் செய்யவேண்டும்.

புரட்சி யுத்தம் வெடித்தபின் — ஆயுதப்போராட்டம் துவங்கப்பட்ட பின் இம்மாதிரியான எதிர்ப்புரட்சியாளர்கள் தாக்கப்படுவது அல்லது அழித்தொழிக்கப்படுவது கொரில்லா யுத்தத்தின்—ஆயுதப்போராட்டத்தின் ஒரு அங்கமாகும். குறிப் பாக புரட்சியின் உக்கிரமான வளர்ச்சிக்கட்டத்தில் எதிர்ப் புரட்சித் தலைமையினர் ஈவிரக்கமற்ற முறையில் இவ்வாறு அழித்தொழிக்கப்பட வேண்டும்.

> "இதை நாம் செய்திருக்க முடியும்; செய்திருக்க வேண் டும். ஈவிரக்கமில்லாமல் சிவில் மற்றும் ராணுவத் தலைவர் களை புரட்சிகர எழுச்சியின்போது தடம் தெரியாமல் துடைத்தெறிய வேண்டியது நமது கடமையாகும் என்று நீண்ட நாட்களுக்கு முன்பே சமூக ஜனநாயகப் பத்திரிகை (பழைய 'இஸ்க்காரா') சுட்டிக்காட்டியது'' என்றார் லெனின். (மாஸ்கோ எழுச்சி (1905) யின் படிப்பினைகள்).

அழித்தொழிப்பு யுத்தம், கொரில்லா யுத்தமுறை மற்றும் கொரில்லாப்படைகள் குறித்து மேலும் ஆழமாக ராணுவ யுத்ததந்திரம், போர்த்தந்திரங்கள் மற்றும் ஆயுதப்போராட் டங்கள் குறித்து விவாதிக்கும்போது விரிவாகப் பார்ப்போம். இதுவரை விவரித்தவை அனைத்தும் சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் முன்வைத்த 'வர்க்க எதிரியை அழித்

தொழிப்பது' என்ற 'சர்வரோக நிவாரணி'யிலிருந்து வேறுபாடானது என்பதை அறிய முடியும்.

(ஈ). அழித்தொழிப்பு யுத்தம், கொரில்லாப் போர்முறை மற்றும் கொரில்லாப் படைகள் என்ற அமைப்பு மற்றும் போராட்ட வடிவங்களை முற்றிலும் தவறாக வியாக்கியானம் செய்து நமது கட்சியைத் தோல்விக்கும், சேதத்துக்கும், பின்னடைவுக்கும், பிளவுக்கும் சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் தள்ளியதைத் தொடர்ந்து ஒருபுறம் மக்கள் யுத்தப் பாதையே நமது நாட்டிற்குப் பொருந்தாது என்றும், மாவோ சிந்தனையானது மார்க்சிய—லெனினியம் அல்லவென்றும் நிருபிக்கப்பட்டு விட்டதாக கொக்கரிக்கும் திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும், மற்றொரு புறம், இவர்களது நிலைப்பாடுகளை நிராகரிப்பதோடு சாருவின் 'இடது' சந்தர்ப்பவாதத்தையும் நிராகரிப்பதாகக் கூறிக்கொள்ளும் பிற மார்க்சிய—லெனினியக் குழுக்களும் ஆகிய இரு சாராருமே மக்கள்திரள் வழி—மக்கள் திரள் அமைப்புகளும், மக்கள்திரள் இயக்கங்களும் அடங்கியவை-என்பதாக ஒன்றைப்பற்றி வானளாவக் கூறுகின்றனர். ஆனால் அவ்வழி குறித்து எத்தனை வகைகளாக, வெவ்வேறானதா முடியுமோ அத்தனையாக வியாக்கியானம் செய்து கொண்டுள்ளனர். ஆனால் அவையனைத்தும் சாராம்சத்தில் ஒன்றாகவே பொருளாதார வாதமாகவே இருக்கின்றன. இன்னும் சில குழுக்கள் சாருவின் இடது சந்தர்ப்பவாதப் பாதையுடன் மக்கள் திரள் அமைப்புக்கள் மற்றும் இயக்கங்களை இணைத்து அதுவே மக்கள் திரள் வழி என்கின்றன. ,இடது, வலது சந்தர்ப்பவாதங்களை முறியடித்து புரட்சியை வழிநடத்த வல்லது உண்மையில் ஓர் ஆக்கபூர்வமான மாற்று வழியே—மக்கள்திரள் வழியே ஆகும் ஆனால் மார்க்சிய—லெனினிய — மாவோ சிந்தனையின் அடிப்படையிலான மாற்று வழியை—மக்கள்திரள் வழியை வகுத்து, வரையறுத்து, நிலைநாட்டுவது எவ்வாறு என்பதுதான் நம்முன் உள்ள பிரச்சினை.

சாருவின் இடது சந்தர்ப்பவாதத்தையும், திரிபுவாதிகள் நவீன திரிபுவாதிகளது வலது சந்தர்ப்பவாதத்தையும் நிராகரித்து சரியான மக்கள்திரள் பாதையை வகுத்துள்ளதாகக் கூறும் பிற மார்க்சிய—லெனினியக் குழுக்களின் மக்கள்திரள் அமைப்புகள், இயக்கங்கள் பற்றிய கோட்பாடு, நடைமுறைகளைப் பரிசீலித்த பின் மாற்று வழியான மார்க்சிய-லெனினிய மாவோ சிந்தனை அடிப்படையிலான மக்கள் திரள் வழியில் இவற்றின் வடிவங்கள் உள்ளடக்கங்கள் பற்றிப் பரிசீலிப்போம். திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் தமது போராட்டங்களைச் சட்ட வரம்புக்குள்ளும், வெளிப்படையானதாகவும், சமாதான சமரச எல்லைக்குள்ளும், பிரதானமாக நகர்ப்புறத் தொழிலாளர்களையும், குட்டி முதலாளிகளையும் சார்ந்தும் நாடாளுமன்ற அரசியல் நோக்கத்துக்காகவும் நடத்துகின்றனர் என்று கூறி இக்குழுக்கள் எல்லாம் உண்மையில் அவர்களது பொருளாதாரவாதத் தன்மையுடைய போராட்டங்களையே பிரதானமாக சட்டவரம்பை மீறியும், ரகசியமானதை இணைத்தும், சமரசமின்றி சமாதான எல்லையை

மீறியும், தற்காப்பு தாக்குதல் நடவடிக்கைகளுடன் கிராமப்புறங் களையும் விவசாயிகளையும் சார்ந்தும், ஆயுதப்போராட்ட அரசியல் நோக்கத்துக்கும் உணர்வுபூர்வமாக உயர்த்தப் போவ தாகவும் கூறுகின்றன. திரிபுவாதிகள் மற்றும் நவீன திரிபு வாதிகள் போலன்றி மக்கள் திரள் இயக்கங்களையும் அமைப்புக் களையும் எவ்வளவுதான் உணர்வுபூர்வமாக உயர்ந்த கட்டத்துக்கு —அரசியல் மற்றும் ஆயுதப்போராட்ட கட்டத்துக்கு—உயர்த்தப் போவதாக கூறினாலும் முன்னவர்களுடைய தவறு வெறும் வடிவத்திலும், போராட்டங்களின் தீவிரத்தன்மைக்கு வரம்பிடும் தலைவர்களது துரோகத்தனத்திலும் மட்டும் அடங்கியிருப்ப தில்லை. பரந்துபட்ட மக்களை, குறிப்பாக உழைக்கும் மக்களை எவ்வாறு எந்தப் பிரச்சினைகள் மீதான போராட்டங்கள் மூலம் அரசியல் படுத்துவது என்ற அடிப்படையிலேயே தங்கியிருக்கிறது. இதில் தான் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்களின் பொருளா தாரவாதமும் அடங்கியிருக்கிறது.

பொருளதார வாதத்தின் அடிப்படைக் கோட்பாடு எதில் அடங்கியிருக்கிறது என்பதையறிந்து கோட்பாடு ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் முறியடிக்க வேண்டும். தற்போதைய சமுதாயப் படிவத்தில் நிலவும் மேலாண்மை பெற்றுள்ள தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவ மற்றும் மிகுநிலை பெற்றுள்ள நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகளின் இயல்பிலேயே — அதன் உற்பத்தியிலும் மறு உற்பத்தியிலும்—உடனடியான, நேரடியான வர்க்கங்களுக்கும் பிரிவுகளுக்கும் இடையிலான தொழில் ரீதியி லான வர்க்க உறவுகள் தொழிலாளர்களுக்கும் — முதலாளி களுக்கும், விவசாயிகளுக்கும் — நிலப்பிரபுக்களுக்கும், மாணவர் களுக்கும் — கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கும் இடையி லான உறவுகள் நிலவுகின்றன. ஒற்றுமையும் போராட்டமும் ஆகிய இரட்டைத்தன்மையுடைய, முரண்பாடுடைய தொழில் ரீதியிலான இந்த வர்க்க உறவுகளில் திட்டமிட்டோ திட்டமி டாமலோ தன்னியல்பாக எழும் போராட்டங்களை தொழில் ரீதியில் எதிரியான வர்க்கங்களுக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக வழிநடத்திச் செல்வதன் மூலமாகவே பரந்துபட்ட மக்கள் அரசியல் உணர்வைப் பெறுகிறார்கள் என்பதுதான் பொருளா தார வாதத்தின் சாராம்சமாகும். புதிப் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு பழைய உற்பத்தி உறவுகள் தடையாகிப் போய் விட்டதின் காரணமாக புதிய அடித்தளத் தோற்றத்துக்கு பழைய மேற்கட்டுமானம் தடையாகிப் போய்விட்டதின் காரணமாக, அதாவது, பழைய உற்பத்தி உறவுகளுக்கும் புதிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடும் புதிய மேற்கட்டுமா ணத்திற்கும் பழைய அடித்தளத்துக்கும் இடையிலான முரண் பாடும் கூர்மையடைந்து தீர்க்க வேண்டியுள்ளதால் பழைய உற் பத்தி உறவுகளையும் பழைய மேற்கட்டுமாணத்தையும் தூக்கி யெறிய வேண்டும் என்பதை பரந்துபட்ட மக்களுக்கு உணர்த் துவதே புரட்சிக்குத் தயாரிப்பதும் அரசியல்படுத்துவதுமான கடமையாகும். ஆனால் இக்கடமையை தன்னியல்பான, தொழில் ரீதியிலான வர்க்க உறவுகளின் வரம்புகளுக்குள் — தொழில் ரீதி

யில் எதிரான வர்க்கங்களுக்கு எதிராகவும், தொழில் ரீதியிலான
பிரச்சினைகளில் அரசுக்கெதிராகவும் போராடுவதன் மூலமோ
அதன் வளர்ச்சிப்போக்கிலோ நிறைறவேற்றவே முடியாது. ஏனெ
னில் இவை தற்போதைய உற்பத்தி முறைகளை மறுஉற்பத்தி
செய்வதற்கானவைகளே ஆகும். தூக்கியெறிவதற்கான அவசி
யத்தை உணர்த்துபவை அல்ல. திடீரென்று, திட்டமிடாமல்
நடத்தப்படும் போராட்டங்களுக்கு மட்டும் தலைமையளிப்பது
'தன்னெழுச்சிக்குத் தலை வணங்குவது' என்றும் பொருளாதார
நலன்களுக்காக மட்டுமே போராடிக்கொண்டிருப்பது 'பொரு
ளாதாரவாதம்' என்றும் திட்டமிட்டு உணர்வுபூர்வமாகவும்,
பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக மட்டுமின்றி உரிமைகளுக்
காகப் போராடுவதும், அதுவும் அரசுக்கெதிராக தொழில் ரீதி
யிலான பிரச்சினைகளில் சாதகமான சட்டமிய ற்றும்படி போரா
டுவதும், இவையனைத்திலும் சட்டபூர்வ, சமாதான வரம்பு
களுக்குள் நிறுத்தாது அவற்றுக்கு மேலே செல்வதும் புரட்சி
கரமான மக்கள்திரள் பாதை என்றும் கருதுவதும் தவறான
தாகும். தன்னியல்பான, தொழில் ரீதியிலான வர்க்க உறவு
களில் எழும் எல்லாப் போராட்டங்களையும் எவ்வளவு தீவிர
மாக எவ்வளவு திட்டமிட்டு நடத்தினாலும் அதன் வளர்ச்சிப்
போக்கில் பரந்துபட்ட மக்கள் அரசியல் உணர்வுபெற முடி
யாது. ஆனால் பொருளாதாரவாதம் வெவ்வேறு காரணங்
களைக் கீழ்க்கண்டவாறு கூறி தன்னை நியாயப்படுத்திக் கொள்
கிறது.

1. பொருளாதாரப் போராட்டங்களுக்கே—தொழில் ரீதியி
லான போராட்டங்களுக்கே—அரசியல் தன்மை தருவது.
ஏனெனில் பொருளாதாரப் போராட்டங்களின் விரிந்த, வளர்ந்த
மிகவும் தீவிரமான வடிவமாகவே அரசியல் போராட்டங்கள்
இருக்கின்றன.

2. செயலூக்கமிக்க அரசியல் போராட்டங்களுக்கு மிகக் கூடுத
லான சாதனமாக இருக்கும் பொருளாதார ரீதியிலான தொழில்
ரீதியிலான—போராட்டங்களே மிகப்பரந்து விரிந்த அளவு
பிரயோகிக்க கூடியது.

3. தொட்டறியத்தக்க விளைவுகளை அளிக்கக் கூடிய
கண்ணுக்குப் புலப்படும் பலன்களை அளிக்க கூடிய பருண்மை
யான கோரிக்கைகளின் மீதே—அவசியமாக இவையும் தொழில்
ரீதியிலானவையாக இருக்கின்றன—அதிக பட்சம் பரந்துபட்ட
மக்களைத் திரட்ட முடியும்.

4. முதலில் தொழில் ரீதியிலான போராட்டங்கள், பின்னர்
வர்க்க ரீதியில் அதையே நடத்துவது, பின்னர் அரசாங்கம்
போலீசுக்கெதிரான போராட்டங்கள் என்று உடனடியான
பகுதிக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களிலிருந்து—அரசாங்
கத்தையும் போலீசையும் நேருக்கு நேர் எதிர்ப்பதிலிருந்து—படிப்
படியாக அரசியல் போராட்டங்களுக்கு பரந்துபட்ட மக்களை
வளர்ப்பது என்ற கட்டங்களிலான கோட்பாடு.

5. திட்டவகைப்பட்டதாகவின்றி போர்த்தந்திரங்களை நிகழ்ச்சிப்போக்கு வகைப்பட்டதாக வகுத்துக் கொள்வது.

திரிபுவாதிகள் நவீன திரிபுவாதிகளது வலது சந்தர்ப்பவாதத்தை நிராகரிப்பதாகக் கூறும் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்கள் மேற்கண்ட காரணங்களைக்கூறி, குறிப்பாக கட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிப்போக்கு வகைப்பட்ட போர்த்தந்திரங்களாகத் தமது கோட்பாடு மற்றும் நடைமுறைகளைக் கொண்டுள்ளன. எனவேதான் அவை பொருளாதாரவாதத்தைப் பின்பற்றுவதாகக் கூறுகிறோம்.

எனவே தொழில்ரீதியில் எதிரெதிரான உடனடியான நேரடியான வர்க்கங்களுக்கு இடையிலான வர்க்க உறவுகளில் இருந்து மட்டும் எவ்வளவு தீவிரமாக திட்டமிட்டு நடத்தினாலும் பரந்துபட்ட மக்கள் அரசியல் உணர்வு பெறமுடியாது; மாறாக இவ்வுறவுகளின் துறைக்கப்பால்—தொழில் ரீதியிலான போராட்டங்களுக்கப்பால்— வெளியிலிருந்துதான் பெறமுடியும். அரசின்பாலும் அரசாங்கத்தின் பாலும் எல்லா வர்க்கங்களுக்கும் மக்கட் பகுதிகளுக்கும் இருக்கும் உறவு முறைகளின் துறையிலிருந்து மட்டுமே, எல்லா வர்க்கங்களுக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவுமுறைகளின் துறையிலிருந்து மட்டுமே அரசியல் அறிவைப் பெறமுடியும்.

எனவே (1) அடக்கி ஒடுக்கப்படும் சுரண்டப்படும் ஒவ்வொரு வர்க்கமும் தம்மைப் பாதிக்கும் தொழில் ரீதியிலான வர்க்க உறவுகளினால் எழும் பிரச்சினைகள் மட்டுமல்லாது எல்லா அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சாரப் பிரச்சினைகளிலும் அடக்கி ஒடுக்கப்படுவதற்கு எதிராகவும் அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராகவும் போராடவேண்டும். அதற்கான பிரச்சாரம், அம்பலப்படுத்தல் கிளர்ச்சி மற்றும் போராட்டங்களை நடத்தவேண்டும். (2) ஒவ்வொரு வர்க்கமும் தம்மைப் பாதிக்கும் இப்பிரச்சினைகளில் மட்டுமல்லாது பிற வர்க்கங்களைப் பாதிக்கும் அரசியல், பொருளாதார, சமூக கலாச்சார பிரச்சினைகளிலும் அடக்கி ஒடுக்கப்படுவதற்கும் சுரண்டப்படுவதற்கும் எதிராகவும் அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராகவும் போராடவேண்டும். அதற்கான பிரச்சாரம், அம்பலப்படுத்துதல், கிளர்ச்சி, மற்றும் போராட்டங்களை நடத்த வேண்டும்.

தொழில் ரீதியாக மட்டுமின்றி சகல வாழ்க்கைத் துறைகளிலும், தன்னை மட்டுமின்றி பிற வர்க்கங்களையும் அடக்கி ஒடுக்கும், சுரண்டும் ஆளும் வர்க்கங்களையும், அரசு எந்திரத்தையும் தூக்கியெறிய வேண்டியதன் அவசியத்தை — தனது தொழில் ரீதியிலான அரசியலை மட்டுமல்லாது சமுதாய ரீதியிலான அரசியலை—பரந்துபட்ட மக்கள் உணரவேண்டும். இதற்கு மாறாக, தொழில் ரீதியிலான போராட்டங்களை முதற் கட்டமாகப் பிரித்தோ, பின்னர் அரசியல் போராட்டங்கள் என்பதோ, அல்லது தொழில் ரீதியிலான போராட்டங்களின் மூல

மாக அரசியல் போராட்டத்தின் அவசியத்தை உணருடபோது அரசியல் போராட்டங்கள் மற்றும் ஆயுதப் போராட்டங்கள் என்பதோ முற்றிலும் தவறானது. பரந்துபட்ட மக்களை நிலப்பிரபுத்துவ அல்லது முதலாளித்துவ சித்தாந்தத்தில் தள்ளக் கூடியது, மார்க்சிய-லெனினியத்துக்கு விரோதமானது.

3) மேற்குறிப்பிட்ட இருபெரும் கடமைகளுக்கும் மேலாக பாட்டாளி வர்க்கக் கட்சியின் திட்ட வகைப்பட்ட போர்த்தந்திரங்களின் அரசியலையும், அரசியல் முழக்கத்தையும் முன்னெடுத்துச் சென்று அரசியல் போராட்டங்கள் மூலம் பரந்துபட்ட மக்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். யுத்ததந்திர வெற்றிக்குத் தயாரிக்கவேண்டும். முன்னிரு கடமைகளும் தற்போதைய ஆளும் வர்க்கங்களும் அவர்களது அரசும் ஏன் நீடிக்க முடியாது, நீடிக்க கூடாது தூக்கியெறிய வேண்டுமென்பதை எதிர் மறையிலும், மூன்றாவது கடமை நேர்மறையிலும் பரந்துபட்ட மக்களுக்கு உணர்த்துவதோடு அவர்களது சொந்த அனுபவத்தில் பயிற்றுவிப்பதாகவும் இருக்கின்றன. இம்மூன்று கடமைகளாலும் கட்சியால் மக்கள் திரள் அமைப்புகளும் இயக்கங்களும் வழிநடத்தப்படும் பொழுது மட்டுமே அவை புரட்சிகரமானவையாக மார்க்சிய—லெனினிய—மாவோ சிந்தனை அடிப்படையிலானதாக அமைகின்றன.

தொழிற் சங்கங்களும் விவசாய சங்கங்களும் இன்னும் இவை போன்ற பிற மக்கள் திரள் அமைப்புகளும் தொழில் ரீதியிலானவை என்பதால் தொழில் ரீதியிலான பிரச்சினைகளில் மட்டுமே போராட முடியுமென்றும், இன்னும் பிற முதலிற் சொன்ன பொருளாதாரவாதங்களையும் முன்வைத்துதான் திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் வரம்பிட்டுக்கொண்டு அவற்றை தற்போதைய அரசியல் கட்டமைவின் அங்கமாக மாற்றிவிட்டதோடு தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளிடையே முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ சித்தாந்தத்தை — சுயநலப் பற்றுதலை — ஆழமாக வேரூன்றச் செய்துவிட்டனர். பொருளாதாரவாதத்தின் அடிப்படைக் கோட்பாட்டை, நடைமுறையை தகர்க்காமல் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்கள், அவர்களது போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் தீவிரத்தன்மையற்றிருப்பதை மட்டுமே பார்க்கின்றன. பொருளாதாரப் போராட்டங்களுடன் அரசியல் போராட்டங்களையும் இணைக்க வேண்டுமென்று சில குழுக்கள் கூறினாலும், கட்டங்கள் பற்றிய பொருளாதாரவாதக் கோட்பாட்டையும், நிகழ்ச்சிப்போக்கின் வகைப்பட்ட போர்த்தந்திரங்களையுமே வகுத்துக்கொண்டு உள்ளன. தொழிற்சங்கங்களும் விவசாய சங்கங்களும் இவை போன்ற இன்ன பிறவும் அவசியமாகவே தொழில் ரீதியிலான மக்கள்திரள் அமைப்புகளாக இருப்பினும் புரட்சிகர கட்சியால் தலைமை தாங்கப்படும் அவை மேற்கண்ட மூன்று கடமைகளையும் தம் கோணத்திலிருந்து பிரயோகிப்பவையாகவும் இருக்கவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப — புரட்சி வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதற்

கேற்ப — போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள், அரசியல் நடத்தைவழி, அரசியல் முழக்கம், அரசியல் கோட்பாடு ஆகியவை அடங்கிய போர்த்தந்திரங்களால் வழிநடத்தப்படும் பொழுது மட்டுமே மக்கள்திரள் அமைப்புகளும் இயக்கங்களும் வெற்றிபெறவும் புரட்சிக்கு உதவவும் முடியும். இல்லையெனில் அவை பொருளாதாரவாத வகைப்பட்டதாக சீரழிந்து போவதும் தற்போதைய சமுதாய அமைப்பையும் உற்பத்திமுறைகளையும் கட்டிக் காப்பதற்கான அரசியல் கட்டமைவின் ஒரு அங்கமாக நிறுவனமயமாகி ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்வதாகத்தான் இருக்கும். இதன் பொருள்: மக்கள்திரள் அமைப்புகளும் இயக்கங்களும் தொழில் ரீதியிலான, குறிப்பாக பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளின் பேரில் போராடக் கூடாது என்பதல்ல. மாறாக தொழில் ரீதியிலான மக்கள்திரள் அமைப்புகள் இந்த இயக்கங்களை நடத்துவதற்காகக் கட்டியமைக்கப்பட்டுள்ளன. அவை இப்போராட்டங்களை நடத்துவது அவசியமுங் கூட ஆகும். சாதாரண காலங்களில் பரந்துபட்ட மக்களை அமைப்பாக்கவும், பயிற்றுவிக்கவும் அவை பயன்படுகின்றன. குறிப்பாக புரட்சிகர காலகட்டங்களில் இவை கூடுதலான முக்கியத்துவமும் பெறுகின்றன.

"புரட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த தருணத்தில், பொருளாதார வேலைநிறுத்தங்களை, அரசியல் வேலை நிறுத்தங்களோடு இணைத்திருந்த முறைதான் தனிச்சிறப்பு வாய்ந்த அம்சம். வேலை நிறுத்தத்தின் இந்த இரு வடிவங்களும் நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தது மாத்திரம்தான் இயக்கத்துக்கு மிகப்பெரிய வலிமையைக் கொடுத்தது என்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை'' என்று 1905 ஆண்டுப் புரட்சியின் அனுபவத்தை தொகுத்தளித்தார் லெனின் (மொத்த தொகுதிகள், எண் 23 - பக்கம் 240-41). இந்த அளவு தொழில் ரீதியிலான, குறிப்பாக பொருளாதாரப் போராட்டங்கள் புறக்கணிக்க முடியாதவையும், முக்கியத்துவம் வாய்ந்தவையுமாகும். எனினும் அவற்றின் மூலமாகவோ, அல்லது கட்டங்கட்டமாகவோ பரந்துபட்ட மக்கள் அரசியல் உணர்வு பெற முடியாது. எனவேதான் புரட்சிகரக் கட்சியின் தலைமையிலான மக்கள்திரள் அமைப்புகள் மேற்கண்ட மூன்று கடமைகளின் வழிகாட்டுதலின்படி நடக்க வேண்டும்.

(2). ருஷியப் புரட்சியின் பாதையாகிய நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சிப் பாதையின் சில போராட்ட வடிவங்களையும் அமைப்புவடிவங்களையும் காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளின் மக்கள் யுத்தப்பாதையில் பிரயோகிக்கக் கூடாது என்றும், அவ்வாறு செய்வது இரண்டையும் இணைக்கும் ஒரு கலவைவாதமே என்றும் சிலர் கூறுகின்றனர். இவர்களின் கூற்றுப்படி ஒரு வகை யுத்ததந்திரத்தில் பிரயோகிக்கப்படும் எல்லாப் போராட்ட வடிவங்களும் எல்லா அமைப்பு வடிவங்களும் மட்டுமல்ல, பொதுவான

மார்க்சிய-லெனினிய யுத்ததந்திரம் மற்றும் போர்த்தத்திரங்களின் விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும்கூட மற்றொன்றுக்கு முற்றிலும் பொருந்தாது என்று நிராகரிக்க வேண்டும் என்பதாக உள்ளது.

இருவகை யுத்ததந்திரங்களையுமே இணைப்பதாகக் கூறும் நவீன திரிபுவாதிகளான ரணதிவே—நம்பூதிரிபாடு கும்பலின் சந்தர்ப்பவாதப் பாதைக்கும், ஒருவகை யுத்ததந்திரத்தில் பிரயோகிக்கப்படும் போராட்ட வடிவங்கள் மற்றும் அமைப்பு வடிவங்களில் சிலவற்றையும் பொதுவான மார்க்சிய-லெனினிய யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் மற்றொன்றுக்கு ஆக்கபூர்வமாகவும் பருண்மையான மாறுதல்களோடு பிரயோகிப்பதற்கும் உள்ள வேறுபாட்டை இவர்கள் உணர்வதில்லை. இருவகை யுத்ததந்திரங்களின் சாராம்சத்தையும் ஆழமாக கிரகித்து பகுத்தாய்வதுமில்லை, அவ்வாறு செய்தால் இருவகை யுத்ததந்திரங்களினால் வழிநடத்தப்படும் புரட்சி மற்றும் புரட்சியின் போக்குக்கு முரணற்ற, மாறாக, தேவையான, உதவிகரமான சில பொதுவான போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பதை அறிய முடியும்.

சான்றாக மக்கள் யுத்தப்பாதையில் யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த கொரில்லாப் போர்முறையும், கொரில்லாப் படையும் ருஷியாவின் நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சிப் பாதையில் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப மாறுதல்களுடன் பிரயோகிக்கப் பட்டிருக்கின்றன. 1905 டிசம்பர் மாஸ்கோ ஆயுதமேந்திய பேரெழுச்சியின் படிப்பினைகளைத் தொகுத்த லெனின் புதிய தடுப்புச்சுவர் போராட்டப் போர்த்தந்திரத்தைப்பற்றி எழுதியபோது பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"இந்தப் போர்த்தந்திரங்கள் கொரில்லா யுத்தமுறைப் போர்த்தந்திரங்களாகும். இத்தகைய போர்த்தந்திரங்களுக்குத் தேவையான நிறுவன அமைப்பு எப்படியிருக்கவேண்டும் என்றால், எளிதில் இயங்குகிற, நகரக்கூடிய அளவில் மிகவும் சிறியதாக இருக்கிற, அதாவது பத்து அல்லது மூன்று அல்லது இரண்டு பேர்களைக் கொண்ட சிறிய குழுக்களாக இருக்க வேண்டும், ஐந்து அல்லது மூன்று பேரைக் கொண்ட குழுக்களைப் பற்றிப் பேசினால் கேலிசெய்கிற சமூக ஜனநாயகவாதிகளை நாம் இப்பொழுதுகூட அடிக்கடி சந்திக்கிறோம். ஆனால், இவ்வாறு கேலி செய்வது, நவீன ராணுவ நுணுக்கமுறை திணித்திருக்கும் நிலைமைகளின் கீழ் தெருமுனைப்போர் எழுப்பியிருக்கும் போர்த்தந்திரம், அமைப்பு பற்றிய புதிய பிரச்சினைகளைச் சுலபமான வழியில் புறக்கணிப்பதாகும். .....ருஷியா முழுவதும் டிசம்பருக்குப் பிறகு இடைவிடாமல் யதார்த்தத்தில் தொடர்ச்சியாக கொரில்லா யுத்தமும் மக்கள்திரள் பயங்கரமும் நடைபெற்றிருக்கின்றன; இவை, ஒரு புரட்சிகரப் பேரெழுச்சியின் சரியான போர்த்தந்திரங்களைக் கற்பதற்குப் பரந்துபட்ட மக்களுக்கு

நிச்சயமாக உதவிபுரியும். மக்கள்திரள் பயங்கரத்தைச் சமூக ஜனநாயகவாதிகள் அங்கீகரிக்க வேண்டும்; தமது போர்த் தந்திரங்களில் அவற்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; அதைக்கட்டுப்படுத்த வேண்டும் என்பது உண்மையே; தொழிலாளர் இயக்கத்தின் பொதுவான புரட்சிகரமான போராட்டத்தின் நலன்களுக்கும், நிலைமைகளுக்கும் அது உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பது உண்மையே; அதே சமயத்தில் இந்த கொரில்லா யுத்த முறையில் தவறான அராஜகப் போக்குகள் தலை தூக்கினால் அவைகளை ஈவிரக்கமின்றி வெட்டியெறிய வேண்டும்; புரட்சிகரப் பேரெழுச்சி நடக்கும்போது நமது மாஸ்கோ தோழர்கள் அற்புதமான முறையிலும், ஈவிரக்கமில்லாமலும் செய்ததுபோல், லாட்வியக் குடியரசுகளின் புரட்சிப்போராட்டங்களின் போது லாட்வியத் தோழர்கள் செய்ததுபோல் அதைத்துடைத்தெரிய வேண்டும்'' (லெனின்-மாஸ்கோ எழுச்சியின் படிப்பினைகள் பக். 94-9o).

1905 டிசம்பரில் ஆயுதந்தாங்கிய தொழிலாளர்கள், பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் படைப்பிரிவுகள் சில லாட்வியன் நகரங்களைக் கைப்பற்றிக்கொண்டு, ஜாரின் ராணுவத்துக்கெதிராக கொரில்லா யுத்தம் தொடுத்ததையும், ராணுவ, போலீசு, சிவில் அதிகாரிகளை அழித்தொழித்ததையும், மக்கள்திரள் பயங்கரத்தைக் கட்டவிழ்த்துவிட்டதையும் லெனின் உயர்த்திப் பிடித்தார். கொரில்லா யுத்தம் அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட இயக்கத்தைச் சீர்குலைத்து, மக்களது தார்மீக உணர்வைக் குன்றச் செய்கிறது என்ற வலது சந்தர்ப்பவாதத்தையும், தனிநபர் பயங்கரவாதம் என்ற 'இடது' சந்தர்ப்ப வாதத்தையும் நிராகரித்த லெனின் ராணுவ ரீதியிலான கொரில்லா யுத்தத்தையும் மக்கள் திரள் பயங்கரத்தையும் உயர்த்திப் பிடித்தார். இதிலிருந்து நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சியில் கொரில்லா யுத்தமுறை, கொரில்லாப் படைப் பிரிவுகள் ஆகிய வடிவங்கள் பருண்மையான தேவைகளுக்கேற்ப நகர்ப்புற போராட்டங்களான தெருமுனைப்போர், தடுப்புச் சுவர் போர், ஆகியவற்றில் பிரயோகிக்கப்பட்டதை அறிய முடியும். நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சியில் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இரண்டாம் பட்சமானதாகவும் விளங்கிய இவ்வடிவங்களை நீண்டகால மக்கள் யுத்தப் பாதையின் யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு, யுத்ததந்திர ரீதியிலான இழுபறி நிலை ஆகிய இரு கட்டங்களில் முறையே கொரில்லா யுத்தமுறை மற்றும் கொரில்லாத் தன்மையுடைய நடமாடும் யுத்தமுறை என்று யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக மாவோ வளர்த்தெடுத்தார். பலம் வாய்ந்த எதிரிக்கெதிராக பலவீனமான படை மோதும்போது, விரைவில் வெற்றி தோல்வி காணும் போர்த்தந்திரங்களில் திடீர்த்தாக்குதல் மூலம் மக்கள்திரள் பயங்கரத்தைக் கட்டவிழ்த்துவிடுவது —இவையே இவ்வடிவங்களின் சாராம்சமானவை என்பதை கிரகிக்கும்போதுதான் இருவகை யுத்ததந்திரங்களிலும் பிரயோகிக்கப் படுவதன் அவசியத்தை நன்குணர முடியும்.

மற்றுமொரு சான்றாக, ஆயுதமேந்திய பேரெழுச்சியில் பிரயோகிக்கப்பட்ட போராட்ட வடிவங்கள் மற்றும் அமைப்பு வடிவங்களில் சில மக்கள்யுத்தப் பாதையிலும் பிரயோகிக்கப்பட்டதைப் பார்ப்போம். தளப்பிரதேசங்கள் மற்றும் செஞ்சேனை நிறுவப்படுவதற்கு முந்திய போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களாக உள்ளூர் ஆயுதமேந்திய எழுச்சிப் படைப்பிரிவுகளும ஆயுதமேந்திய எழுச்சிகள் மூலம் போராட்டங்களுக்கான உறுப்பாகவிருந்து அரசியல் அதிகாரத்துக்கான உறுப்பாக விவசாயிகள் தொழிலாளர்களின் சோவியத்துக்கள் நிறுவப்படுவது ஆகிய நாடு தழுவிய ஆயுதந்தாங்கிய பேரெழுச்சி என்ற யுத்ததந்திரத்தின் முக்கியமான இவையனைத்தும் நீண்டகால மக்கள் யுத்தப்பாதையில் பிரயோகிக்கப்படுகின்றன. உண்மையில் ஆயுதமேந்திய எழுச்சிகள் மூலமாகத்தான் சீனாவில் பல இடங்களில் விடுதலைப் பிரதேசங்களும்—ஆரம்பத்தில் கொரில்லா மண்டலங்களாகவே இவை இருந்தன—கொரில்லாப் படைப்பிரிவுகளும் கட்டியமைக்கப்பட்டு அரசியல் அதிகாரம் கைப்பற்றப்பட்டது.

1) 1927 ஆகஸ்டு இலையுதிர்கால அறுவடைப் பேரெழுச்சியைத் தொடர்ந்துதான் ஹூனான்—கியாங்சி எல்லையில் சிங்காங் மலைகளின் மத்தியத் தளப்பிரதேசமும் செஞ்சேனையும் நிறுவப்பட்டன. 2) ஹூபே—ஹோனான்—ஆன்வெய் தளப் பிரதேசம்: 1927 அக்டோபரில் ஹூவாங்கானிலும் 1928 ஜனவரியில் மாசெங்கிலும் நடந்த இரு பேரெழுச்சிகளால் தாப்பெய் மலைகளில் தளப்பிரதேசம் அமைக்கப்பட்டது. 1929 மார்ச் ஷாங்செங் பேரெழுச்சியால் தெற்கு ஹோனானிலும் தொடர்ந்து லியுஆன் பேரெழுச்சியால் வடமேற்கு ஆன்வெயிலும் தளப்பிரதேசம் நிறுவப்பட்டு இவை அனைத்தும் இணைந்து ஹூபே—ஹோனான்—ஆன்வெய் தளப்பிரதேசமானது. 3) ஃபுகியென்—செங்கியாங்—கியாங்ஸி தளப்பிரதேசம்: 1927 இறுதியில் கிழக்கு கியாங்ஸியில் நடந்த ஆயுதமேந்திய பேரெழுச்சி மூலம் ஏற்பட்ட தளப்பிரதேசம் வடகிழக்கு கியாங்ஸிக்குப் பரவியது. விவசாயிகள் இயக்கத்தினுடைய செல்வாக்கின் கீழ் வடக்குஃபுகியெனில் நடந்த ஆயுதமேந்திய எழுச்சி மூலம், கொரில்லா யுத்தம் மூலம் ஃபுகியென்—செங்கியாங்—கியாங்ஸி தளப்பிரதேசம் கட்டியமைக்கப்பட்டது. 4) குவாங்சி தளப் பிரதேசம்: 1927 அக்டோபரில் விவசாயிகள் படைவீரர்களும் கோமிண்டாங் படைவீரர்களும் யுகியாங், ஆற்றுப் பகுதியில் நடத்திய ஆயுதமேந்திய எழுச்சிக்குப் பின் குவாங்சி தளப் பிரதேசம் நிறுவப்பட்டது.

"1927-ல் நடந்த இலையுதிர் அறுவடைக்கால எழுச்சியிலிருந்து 1930 ஆரம்பம் வரை ஆயுதமேந்திய எழுச்சிக்கான பகுதிகள் மற்றும் கிராமப்புற புரட்சி தளப்பிரதேசங்கள் கியாங்கி, ஃபுகியன். ஹூனான், ஹூபே, ஆன்வெய், ஹோனான், குவாங்துங், குவாங்சி மற்றுப் சேசியெங் மாநிலத்தின் பகுதிகளை அடக்கியதாக விரிந்தது" (நவீன சீனப் புரட்சியின் வரலாறு, பக் 105.)

"இவையே 1927ல் சியாங்-கே-ஷேக்கும் வாங்சிங்-வெய் யும் அடுத்தடுத்துப் புரட்சிக்குத் துரோகிகளாக மாறியபின் எதிர்புரட்சி சக்திகளுக்கு எதிராக பொதுவுடைமைக் கட்சி யின் தலைமையின்கீழ், பல்வேறு இடங்களிலுள்ள மக்கள் தொடுத்த முதல் பதில் தாக்குதல்கள், 1927 டிசம்பர் 11ல் குவாங்-சௌ தொழிலாளர்களும் புரட்சிகர படைவீரர்களும் ஐக்கியமுற்று ஓர் எழுச்சியை நடத்தி, மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவினர். அவர்கள் நேரடியாக ஏகாதிபத் தியத்தினால் ஆதரிக்கப்பட்டவையான எதிர்ப்புரட்சிகரப் படைகளுக்கு எதிராக உக்கிரமாகப் போரிட்டனர். ஆனால் பலத்திலான ஏற்றத்தாழ்வு ஆகப்பெரியதாயிருந்ததனால் தோல்வியுற்றனர். குவாங்துங் மாகாணத்தின் கிழக்குக் கரை யோரத்தில் ஹாய்ஃெபங்கிலும் லூஃபெங்கிலுமான விவ சாயிகள், பொதுவுடமைக் கட்சியின் ஒரு அங்கத்தினரான தோழர் பெங்பாயின் தலைமையின் கீழ் 1923-25 ஆண்டு களின் போது சக்திமிக்க புரட்சிகர இயக்கமொன்றை ஆரம் பித்திருந்தனர்; இந்த இயக்கம் தேசியப் புரட்சிகரச் சேனை யால் சென்சியுங்-மிங்கின் தலைமையிலான எதிர்ப்புரட்சிகர கும்பலுக்கு எதிராக குவாங்சௌவிலிருந்து தொடுக்கப்பட்ட கிழக்கு முகமான படையெடுப்புகள் இரண்டினதும் வெற்றிக் குப் பெரிதும் உதவியது. 1927 ஏப்ரல் 12-ல் சியாங்-கே-ஷேக் புரட்சிக்குத் துரோகம் செய்த பின் இவ்விவசாயிகள் ஏப்ரலிலும் செப்டம்பரிலும் அக்டோபரிலுமாக மூன்று எழுச்சிகளை நடத்தி, 1928 ஏப்ரல் வரை நின்று பிடித்த புரட் சிகர ஆட்சியொன்றை நிறுவினர். கிழக்கு ஹூனான் மாகா ணத்தில் எழுச்சிகளில் எழுந்த விவசாயிகள் 1927 செப்டம் பரில் லியுயாங், பிங்கியாங், லீலிங், சூசௌ ஆகிய இடங் களை உள்ளடக்கிய பகுதியொன்றைக் கைப்பற்றினர். ஏறத்தாழ அதேசமயம், வடகிழக்கு ஹூபெய் மாகாணத் தில் பத்தாயிரக்கணக்கான விவசாயிகள் சியாஓகான், மாசெங், ஹூவாங் ஆன் ஆகிய இடங்களில் ஓர் ஆயுத மேந்திய எழுச்சியை நடத்தி, ஹூவாங் ஆனின் மாவட்டப் பட்டிணத்தை முப்பது நாட்களுக்கு மேலாக கைப்பற்றி வைத்திருந்தனர். தெற்கு ஹூனானில் யீச்சாங், சென்சௌ, வெய்யாங், யுங்சிங், ஸெசிங் மாவட்டங்களில் விவசாயிகள் 1928 ஜனவரியில் ஆயுதமேந்தி எழுச்சியுற்று, மூன்று மாதங் கள் நிலைத்திருந்த புரட்சிகர ஆட்சியொன்றை நிறுவினர்." (தேர்ந்த ராணுவப்படைப்புகள், பக். 19-20, குறிப்பு எண். 9.)

எழுச்சிகளினூடாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற் றித் தளப்பிரதேசங்களை நிறுவுவது பற்றியும், தொழிலாளர் கள் விவசாயிகளது எழுச்சிப் படைப்பிரிவுகள் அமைப்பது குறித் தும் மாவோ பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். ஹூனான் கியாங்சி எல்லைத் தளப்பிரதேசத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

"இந்த ஆட்சி ஹூனான், ஹூபெய், கியாங்சி மாகாணங் களில் தொழிளாலர்களினதும் விவசாயிகளினதும் எழுச்சி

களினூடாக அவற்றில் அரசியலதிகாரம் கைப்பற்றப்படும் போக்கில் பிரம்மாண்டமான ஒருபங்கை வகிக்கும் பின்வருவன ஹுனானிலும் ஹுபெயிலும் கியாங்சியிலும் மலர்ந்து வரும் எழுச்சிகள் சம்பந்தமாக எல்லைப்பிரதேசத்திலான கட்சிக்கான பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பணிகள்: எல்லைப் பிரதேசத்திலான நிலப்புரட்சியினதும் மக்களின் அரசியல் அதிகாரத்தினதும் செல்வாக்கை ஹுனானிலும் கியாங்சியிலும் சியாங், கான் இருநதிகளின் தாழ்ந்த அந்தங்களுக்கு ஹுபெய் வரையும் விஸ்தரிப்பது; மூன்று மாகாணங்களினதும் எதிர்வரும் பொதுவான எழுச்சியில் செஞ்சேனை அதன் உரிய பணியைப் பூர்த்திசெய்யவல்லதாயிருக்கப் போராட்டத்தின் ஊடாக அதனை இடையறாது விரிவாக்குவதும் அதன் தரத்தை உயர்த்துவதும்; மாவட்டங்களிலுள்ள ஸ்தல ஆயுதப்படைகள், அதாவது செங்காவலர் படைகளும் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் எழுச்சிப் படைப்பிரிவுகளும், இப்போது நிலப்பிரபுக் கட்டாயப்படைகளையும் சிறிய ஆயுதந்தறித்த கூறுகளையும் எதிர்த்துப்போரிடவும் எதிர்காலத்தில் எல்லைப்பிரதேசத்தின் அரசியலதிகாரத்தைப் பாதுகாக்கவும் வல்லவையாயிருக்க கூடியதாக அவற்றை விரிவுபடுத்தி அவற்றின் தரத்தையும் உயர்த்துவது'' (மாவோ, ஷெ நூல், பக். 13)

மேற்கண்ட ஆயுதமேந்திய எழுச்சிகளுக்கு முன்பே, அதாவது 1924-27 சீன முதல் பெரும் புரட்சியின் போதே ஆயுதப் படைகளின் கூறுகளைப் பெற்றிருந்தாலும், இந்த எழுச்சிகளினூடாகத்தான் கிரமமான செஞ்சேனை நிறுவப்பட்டது.

> ''பின்னர் புரட்சியின் தோல்வியிலிருந்து கசப்பான படிப்பினை பெற்று, கட்சி நான்சாங் எழுச்சி, இலையுதிர்கால அறுவடை எழுச்சி, குவாங்செள எழுச்சி ஆகியவற்றை அமைப்பாக்கி, செஞ்சேனையை நிறுவியதான புதிய கால கட்டமொன்றிற்குள் நுழைந்தது. அதுதான் எமது கட்சி ராணுவத்தின் முக்கியத்துவத்தை முற்றாகப் புரிந்துகொண்ட தீர்க்கமான காலகட்டமாகும்'' (மாவோ, ஷெ நூல், பக்-571)

இவ்வாறு ஆயுதந்தாங்கிய எழுச்சிகளினூடே பிறக்கும் அரசியல் அதிகாரத்தின் அமைப்பு வடிவமும் கூட ருஷியப் புரட்சியின் சோவியத்துக்கள் போன்றதொன்றே ஆகும். ஆனால் மக்கள் யுத்தப்பாதையின் கீழ் ஆயுதமேந்திய எழுச்சிகள் உள்ளூர் அடிப்படையிலானதாகவும், வரம்புக்குட்பட்டும் பிரதானமாக கிராமப் புறங்களில் விவசாயிகளது ஆயுதமேந்திய எழுச்சிகளாகவும், சோவியத்தினது இயல்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புதிய ஜனநாயக அரசியல் அதிகாரத் தன்மை உடையதாகவும் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப அமைந்தன.

''சீனாவின் அரசியலதிகாரத்தினுடைய அமைப்புவடிவம் கிட்டத்தட்ட சோவியத் அரசியலதிகாரத்தினுடையதை ஒத்திருந்தது. சோவியத் ஒரு பிரதிநிதிகள் சபை. 1905 புரட்சி

யின் போது ருஷியத் தொழிலாளர் வர்க்கத்தால் படைக்கப் பட்ட ஒரு அரசியல் நிறுவனமாகும். மார்க்சியத் தத்துவத் தின் அடிப்படையில் லெனினும் ஸ்டாலினும் ஒரு சோவி யத் குடியரசே முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறுவதற்கு மிக உகந்ததான சமூக, அரசியல் அமைப்பு வடிவிலான முடிவுக்கு வந்தனர். லெனினதும் ஸ்டாலினதும் போல்ஷவிக் கட்சியினுடைய தலைமையின் கீழ் 1917 ருஷிய அக்டோபர் சோசலிசப் புரட்சி உலக வரலாற்றில் முதல் தடவையாக இத்தகைய ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகார சோசலிச சோவியத் குடியரசைத் தோற்றுவித்தது. சீனா வில் 1927 புரட்சியினுடைய தோல்வியின் பின் தோழர் மாசேதுங் அவர்களைத் தலைவராகக் கொண்ட சீனப் பொதுவுடைமைக் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட மக்கள் திரள் புரட்சிகர எழுச்சிகளில் பல்வேறு இடங்களில் மக்க ளுடைய அரசியல் அதிகாரத்தின் வடிவமாகப் பிரதிநிதிகள் சபை கைக்கொள்ளப்பட்டது. இருப்பினும் சீனப் புரட்சியின் அந்தக் கட்டத்தில் அரசியலதிகாரம் அதன் இயல்பில் சோவியத் யூனியனிலான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத் தினின்றும் வேறுபட்டதான பாட்டாளி வர்க்கத்தின் தலை மையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு மக்கள் ஜனநாயக சர்வா திகாரமாக அமைந்தது'' (மாவோ, ஷி நூல், குறிப்பு எண் 7, பக். 17-18)

இவ்வாறு நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சியில் பிரயோகிக்கப்படும் போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களில் சில மக்கள்யுத்தப் பாதையின் தொடக்கத்தில் பின்பற்றப்படுவது மட்டுமல்ல, இறுதியிலும் தளப்பிரதேசங்களிலிருந்து செஞ் சேனை அலையலையாக முன்னேறி நகரங்களைச் சுற்றி வளைத்துத் தாக்கும் கிரமமான யுத்தத்துடன் கூடவே நகர்ப் புறங்களில் ஆயுதமேந்திய எழுச்சிகளோடு இணைந்தே நாடு தழுவிய இறுதி வெற்றி அடையப்படுகிறது. இதுவரை ராணுவ ரீதியிலான சில போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களை மட்டும் பார்த்தோம். இது மட்டுமின்றி நாடுதழுவிய ஆயுதமேந் திய பேரெழுச்சியின் சில அரசியல் போராட்ட வடிவங்களும் கூட மக்கள்யுத்தப் பாதையுடன் பிரயோகிக்கப்படுவதுண்டு. சான்றாக தற்காலிகப் புரட்சி அரசாங்கம் என்ற அமைப்பு வடிவம் மற்றும் அதன் மூலம் மேலிருந்து செயல்படும் போராட்ட வடிவங்களும் மக்கள்யுத்தப் பாதையுடன் எவ்வாறு பிரயோகிக் கப்படுகிறது என்று பார்த்தோம். இன்னுமொரு சான்றாக பொது அரசியல் வேலைநிறுத்தம், அரசியல் ஆர்ப்பாட்டங்கள் சில சமயம் அவை ஆயுதமேந்திய எழுச்சிகளாக வளர்வது ஆகிய போராட்ட வடிவங்களும் அவற்றுக்கான அமைப்பு வடிவங் களான வேலை நிறுத்தக் கமிட்டி, போராட்டக் கமிட்டி, எழுச்சிக் கான கமிட்டி போன்றவை சீனப்புரட்சியில் குறிப்பாக முதற் பெரும் புரட்சியிலும் (1924-27); ஜப்பானிய—எதிர்ப்புதேசபற்று மற்றும் ஜனநாயக இயக்கங்களும் (1931-35); கூட்டரசாங்கம்,

ஜனநாயக அரசாங்கம் மற்றும் சமாதானம், ஐக்கியத்துக்கான
உள்நாட்டு யுத்தத்துக்கெதிரான மக்கள் இயக்கங்களும் (1944-47);
இறுதியில் சியாங்-கே-ஷேக் எதிர்ப்பு இயக்கங்களும் (1947-49)
ஆகிய போராட்டங்கள் மற்றும் இவற்றை வழிநடத்திய அமைப்
புகள் இந்த வகையில் குறிப்பிடத்தக்க மிக முக்கியமானவை
யாகும். இவையனைத்தும் காட்டுவதென்னவென்றால் ருஷியா
வின் நாடு தழுவிய ஆயுதமேந்தியப் பேரெழுச்சியில் பிரயோகிக்
கப்பட்ட போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்கள் சிலவற்றை
மக்கள்யுத்தப் பாதையின் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின்
போக்குக்கு முரணற்ற அவசியமான வடிவங்களைப் பிரயோகிப்
பது தவறெனக் கொள்ள முடியாது. உண்மையில் சில வடிவங்கள்
தவிர்க்க முடியாதவைகளாக அமைகின்றன.

## குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப அரசியல் போர்த்தந்திர முழக்கங்கள் வடிப்பது பற்றி:

புரட்சியிலும் புரட்சிகர யுத்தத்திலும் முழக்கங்கள் தீர்க்க
மான முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அவை பரந்துபட்ட
மக்களை முன்முயற்சியுடன் தட்டியெழுப்பி போராட்ட உணர்வு
களில் கிளர்த்தெழச் செய்து, போரிடும் சமுதாய அரங்கில் நிறுத்
துகின்றன.

"ராணுவ வீரர்களிடையே பிரபலமானவைகளாக
இருக்கும். யுத்தம் அல்லது தனிப்பட்ட மோதல்களின் நோக்
கங்களைச் சித்தரிக்கும் வெகுதிறமையாக வடித்தெடுக்கப்
பட்ட தீர்மானங்கள் படையை செயலுக்கு கவர்ந்திழுக்கவும்
அதன் போரிடும் உணர்வை நிலைநிறுத்தவும் இவைபோன்ற
இன்னும் பிறவற்றுக்குமாகிய சாதனங்கள் என்கிற முறை
யில் போரிடும் முன்னணியில் சில சமயம் தீர்க்கமான
முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருக்கின்றன...

"கோடிக்கணக்கான லட்சக்கணக்கான பரந்துபட்ட
மக்கள்திரளை அவர்களது வெவ்வேறு வகைப்பட்ட
கோரிக்கைகள் மற்றும் தேவைகளுடன் ஒருவர் கையாளும்
போது அரசியல் துறையில் முழக்கங்கள் கூடுதலான முக்கியத்
துவமுடையவையாக விளங்குகின்றன" (ஸ்டாலின் தொகுதி
5, பக்-174)

புரட்சிக்கும், புரட்சிகர யுத்தத்துக்கும் முழக்கங்களை
வடிக்கும்பொழுது அவற்றை முழுமைக்கும் அல்லது பகுதிக்கும்
ஆனதாக வடிக்க வேண்டும். இத்தன்மைக்கேற்றவாறு
முழக்கங்கள் யுத்ததந்திர ரீதியில் பிரதான இலக்குக்கு எதிராக
வும் தாக்குதல் திசைவழி, பொதுப்பாதை, சமுதாய அரங்கில்
சக்திகளைப் பிரித்தொதுக்கும் திட்டம் ஆகியவற்றால் வழி
காட்டப்பட்டு வகுக்கப்படுகின்றன; போர்த்தந்திர ரீதியில்
மேலும் பருண்மையாக அரசியல் நடத்தை வழி, போர்த்தந்திரத்
தின் தன்மை, குறிக்கோள் ஆகியவற்றால் வழி நடத்தப்பட்டு
வகுக்கப்படுகின்றன.

"ஒரு முழக்கமென்பது உடனடி அல்லது நீண்டகால போராட்டத்தின் நோக்கங்களை ஒரு ரத்தினச் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஒரு குறிப்பிட்ட தலைமைக் குழுவால், சொல்வதானால் பாட்டாளி வர்க்கத்தால், அதன் கட்சியால், வகுக்கப்பட்டது. முழக்கங்கள், போராட்டத்தின் வெவ்வேறு நோக்கங்களுக்கு — குறிப்பிட்ட ஒரு வரலாற்றுக் காலகட்டம் முழுவதும் அல்லது குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தின் தனிப்பட்ட கட்டங்கள் மற்றும் நிகழ்வுகளின் நோக்கங்களுக்கு— பொருத்தமாக மாறக்கூடியவை" (ஸ்டாலின், ஷெ நூல், பக். 174)

இங்கே இரண்டு பிரச்சினைகளை வேறுபடுத்தி அறிய வேண்டும். அதாவது வரலாற்றுக் கட்டங்களில், வரலாற்றுத் திருப்பங்களில் புறவயமான நிலைமைகளில் ஏற்படும் மாறுதல் காரணமாக—யுத்ததந்திரமே மாறும்போது அத்துடன் யுத்ததந்திர முழக்கங்களும் மாறுகின்றன; புதிய முழக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட யுத்ததந்திர கட்டத்தில், புரட்சியின் அடிப்படையான, சாராம்சமான தன்மைகள் மாறாமலிருக்கும் போதே யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த, யுத்ததந்திரத்தில் சில மாறுதல்களைக் கொண்டுவருகிற அளவு புரட்சிகர மற்றும் எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களின்—சக்திகளின்—சேர்க்கையில் மாறுதல் ஏற்படும்போது அல்லது இம்மாறுதலைக் கொண்டுவருமாறு பிரதான முரண்பாடு மாறும்போது, புரட்சியின் இடைக்கட்டமே மாறும்போது முழக்கங்கள் மாறுகின்றன. புதிய முழக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு இடைக்கட்டத்திலேயே குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதற்கேற்ப முழக்கங்கள் மாறுகின்றன. புதிய முழக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. இம்மூன்று நிலைகளிலும் அவற்றின் நோக்கங்களுக்கேற்ப அமைகின்றன. இம்மாறுதல்களை வேறுவகையான மாறுதல்களுடன் போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது. அதாவது குறிப்பிட்டதொரு முழக்கமே பருண்மையாக அமுலாகும்போது இயக்கத்தின் வளர்ச்சிக்கேற்ப, புறவயமான நிலைமைகளுக்கேற்ப பிரச்சார முழக்கம், கிளர்ச்சி முழக்கம், செயல் முழக்கம் ஆகிய மூன்று கட்டங்களில் மாறுவதையும், முழக்கங்களே இறுதியில் கட்டளையாக — ஆணையாக—மாறிவிடுவதையும் முன்சொன்ன யுத்ததந்திர, இடைக்கட்ட மற்றும் போர்த்தந்திர ரீதியான முழக்கங்களோடு குழப்பக்கூடாது.

புறவயமான நிலைமைகளுக்கேற்பவும், அகவயமான நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டும் யுத்ததந்திர ரீதியிலான மற்றும் போர்த்தந்திர ரீதியிலான பொருத்தமான முழக்கங்களை முன்வைப்பதும், அவற்றின் மாறுதல்களுக்கேற்ப பழையவற்றை விலக்கிக்கொண்டு புதியவற்றை முன்வைப்பதும், இயக்கத்தின் வளர்ச்சிக்கேற்பவும் புறவயமான நிலைமைக்கேற்பவும் அவற்றை பருண்மையான கட்டங்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றி அமுலாக்குவதிலும்தான் மிக முக்கிய

மாக தலைமையின் முன்னணிப்பாத்திரமே தங்கியிருக்கிறது ருஷியப் புரட்சியின் முதற் கட்டத்தில்—ஜனநாயகப் புரட்சியில் ''எதேச்சதிகாரம் ஒழிக!'' என்றும் ''தொழிலாளர்கள் விவசாயிகளது சர்வாதிகாரம்'' என்றும் மிகச்சரியான யுத்ததந்திர முழக்கத்தையும் அந்த யுத்ததந்திர கட்டத்திலேயே 'ருஷிய—ஜப்பானியப்போர் எதிர்ப்பு' 'டூமாவைப் புறக்கணியுங்கள்' இன்னும் பிற போர்த்தந்திர முழக்கங்களும் முன்வைக்கப்பட்டு வெவ்வேறு கட்டங்களில் பருண்மையாக அமுலாக்கப்பட்டன. சோசலிசப் புரட்சியின் கட்டத்தில்—இரண்டாவது கட்டத்தில் ''அனைத்து அதிகாரங்களும் சோவியத்துக்களுக்கே!'' என்றும் ''தொழிலாளர்கள் ஏழை விவசாயிகளது சர்வாதிகாரம்'' என்றும் யுத்ததந்திர ரீதியிலான முழக்கங்களும் ''ஏகாதிபத்திய யுத்த எதிர்ப்பு'' இன்னும் பிற போர்த்தந்திர முழக்கங்களும் முன் வைக்கப்பட்டு வெவ்வேறு கட்டங்களில் பருண்மையாக அமுலாக்கப்பட்டன.

சீனத்தின் புதிய ஜனநாயகப் புரட்சியில் ''ஏகாதிபத்தியம் ஒழிக'' ''நிலப்பிரபுத்துவம் ஒழிக'' ''ஒரு ஜனநாயகக்குடியரசைக் கட்டியமைப்போம்'' ''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்'' ஆகியன யுத்ததந்திர முழக்கங்களாக இருந்தன. அதே சமயம் புரட்சியின் வெவ்வேறு இடைக்கட்டங்களில் வெவ்வேறு முழக்கங்கள் முன்வைக்கப்பட்டன. சான்றாக, 1924-27 முதல் மாபெரும் புரட்சி இடைக்கட்டத்தில் ''ஊழல் மிக்க அதிகாரிகள் ஒழிக'' ''உள்ளூர்க் கொடுங்கோலர்களும் தீய பிரபுக்களும் ஒழிக'' ''பிரபுத்துவ யுத்தபிரபுக்கள் ஒழிக'' என்ற முழக்கங்களும் 1927-37 விவசாயிகளது புரட்சி என்ற இடைக்கட்டத்தில் ''அனைத்து அதிகாரங்களும் விவசாயிகள் சங்கத்துக்கே'' ''தொழிலாளர்—விவசாயி குடியரசு'' என்ற முழக்கங்களும் 1937-45 தேசியப் புரட்சி ஜப்பானிய எதிர்ப்பு இடைக்கட்டத்தில் ''ஜப்பானிய ஏகாதிபத்தியம் ஒழிக!'' ஜப்பானிய-எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி'' ''ஒரு ஜப்பானிய எதிர்ப்பு மக்கள் குடியரசு'' என்ற முழக்கங்களும், 1945-49 மூன்றாவது உள்நாட்டு யுத்த இடைக்கட்டத்தின் முதற்பாதியில் ''உள்நாட்டு யுத்த எதிர்ப்பு, சமாதானம், ஜனநாயகம், ஐக்கியம்'' மற்றும் ''ஒரு கட்சி பாசிச சர்வாதிகாரம் ஒழிக!'' ''ஒரு ஜனநாயகக் குடியரசு'' என்ற முழக்கங்களும் பிற்பாதியில் ''சியாங்-கே-ஷேக் கும்பல் ஒழிக!'' ''நாடு முழுவதும் விடுதலை செய்!'' என்ற முழக்கங்களும் முன்வைக்கப்பட்டன; இத்துடன் ஒவ்வொரு இடைக்கட்டத்திலும் தேவையான போர்த்தந்திர முழக்கங்கள் முன்வைக்கப்பட்டன. சான்றாக, ஜப்பானிய எதிர்ப்பு தேசியப் புரட்சி இடைக்கட்டத்தில் ''உள்நாட்டுப்போரை நிறுத்து'' ''ஒரு கட்சி பாசிச ஆட்சி ஒழிக,'' ''ஒரு ஜனநாயகக் குடியரசு'' மற்றும் ''சரணடைவை எதிர்த்து நில், ஐக்கிய முன்னணியில் ஊன்றி நில்'' போன்றவை புய இன்னும் பிறவும் முன்வைக்கப்பட்டன. ஏற்றத்தாழ்வான சமுதாய, பொருளாதார, அரசியல் வளர்ச்சியும், புரட்சியின் சமனற்ற வளர்ச்சிப்போக்கும் காரணமாக, பொருத்தமான வளர்ச்சி நிலைமைகளுக்கேற்ப இம்முழக்கங்களைப் பருண்மையாக வகுத்து அமுலாக்குவது காலனிய, அரைக்காலனிய அல்லது

நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளில் சிக்கலானவையாக இருக்கின்றன. இது பற்றிப் பின்னர் காண்போம்.

இவ்வாறு யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர ரீதியிலும் கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்ததும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் தலைமைமுறை பற்றிய விஞ்ஞான வகைப்பட்டதுமான முழக்கங்கள் பற்றிய விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் முற்றாகப் புறக்கணித்து ஒருபுறம் சாருவும் பிறஇடது சந்தர்ப்பவாதிகளும் "எழுபதை விடுதலைக்கான பத்தாண்டுகளாக்குவோம்". "சீனத்தின் பாதையே நமது பாதை, சீனத்தின் தலைவரே நமது தலைவர்", "வர்க்க எதிரியை அழித்தொழிக்கும் இயக்கத்தை நாடு முழுவதும் நடத்துக" போன்ற மார்க்சிய—லெனினிய விரோத முழக்கங்களையே முன்வைத்தனர். மற்றொரு புறம், திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் தமது நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதைக்கேற்பவும், பொருளாதாரவாத நிகழ்ச்சிப் போக்கின் வகைப்பட்ட போர்த்தந்திரத்திற்கேற்பவும் "எதேச்சதிகார வகுப்புவாத எதிர்ப்பு," "இடதுசாரி ஜனநாயக முன்னணி," "மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்" போன்ற முழக்கங்களை முன்வைக்கின்றனர். பிற மார்க்சிய—லெனினியக் குழுக்களோ யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரம் பற்றிய மார்க்சிய—லெனினிய போதனைகளைப் பிரயோகிக்காது ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு என்பதை உள்ளடக்கிய பொதுத்திட்டத்தையே திரும்பத் திரும்ப வாட்டுச் சூத்திரங்களாக ஜபித்துக் கொண்டிருக்கின்றனர். பருண்மையான நிலைமைகளுக்கேற்ப யுத்ததந்திர, இடைக்கட்ட மற்றும் போர்த்தந்திர முழக்கங்களை வடிப்பதன் அவசியத்தையோ, இயக்கத்தின் வளர்ச்சிக்கேற்ப, புறவயமான நிலைமைகளுக்குப் பொருத்தமாக வெவ்வேறு கட்டங்களில் பிரயோகித்து அமுலாக்குவதன் அவசியத்தையோ முற்றும் உணராத நிலையிலிருக்கின்றனர். இவையெல்லாம் இந்தியப் புரட்சிக்குப் பொருந்தாதவை என்பது இவர்களது முடிவு. ஆனால் இதனாலெல்லாம் இவர்களது ஓட்டாண்டித்தனமே அம்பலப்பட்டுப் போகிறது.

## போர்த்தந்திரத் தலைமை பின்பற்ற வேண்டிய விதிகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும்:

புரட்சிகர இயக்கத்தின் தலைமை முறை பற்றிய விஞ்ஞானம் என்கிற முறையிலும், புரட்சியி(ன்) யுத்த தந்திர வெற்றிக்கு நிச்சயம் உத்திரவாதமளிக்கும் வகையிலும் போர்த்தந்திரங்கள் வகுத்து வரையறுத்து செயல்படுத்தப்பட வேண்டுமானால் போர்த்தந்திரத் தலைமை பின்வரும் விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் வழுவாது பற்றிநிற்க வேண்டும். அவை:

1. ஒரே கட்சியாகிய, பாட்டாளி வர்க்க கட்சியின் பிளவுபடாத தலைமையைப் பெற்றிருப்பதும் அதன் கீழ் மக்கள் திரள் அரசியல் படையைக் கட்டியமைப்பதும்,—யுத்ததந்திர

ரீதியிலும், போர்த்தந்திர ரீதியிலும் வெற்றிபெற இவைமுன் தேவையாகும். புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் ஆகிய கால கட்டம் முழுவதும், அதன் துவக்கத்திலிருந்து அரசியல் அதி காரத்தைக் கைப்பற்றும் இறுதிவரை அரசியல் அதிகாரத்துக் கான அரசியலை ஆணையில் வைப்பதற்கு இவை இன்றியமை யாத முன்தேவையாகும்.

செஞ்சேனை, தொழிலாளர்கள் - விவசாயிகள் பிரதிநிதி களின் அமைப்பாகிய சோவியத்துக்கள் உட்பட எல்லா மக்கள் திரள் அமைப்புகளையும், இயக்கங்களையும் இணைக்கும், வழி நடத்தும் அமைப்பான பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகிய கட்சி பிளவுபட்ட தலைமையைக் கொண்டிருப்பின் அல்லது பிற அரசியல் சக்திகளுடன் தலைமையைப் பகிர்ந்து கொள்ளும்பொழுது புரட்சியில் மற்றும் புரட்சிகர யுத்தத்தில் பல மையங்கள் உருவாகி, ஒருமுனைப்படுத்தி பிரதான இலக் கைத் தாக்கித் தகர்ப்பது இயலாமல் சக்திகள் சிதறடிக்கப் படும்; புரட்சி சமரசப் பாதையில் திசைதிருப்பி விடப்படுவதும் நடக்கும். பிளவுபடாத தலைமை புரட்சியை வழிநடத்தவும் வெற்றிபெறவும் முன்தேவையாக அமைகிறது என்பதன் பொருள் எல்லாவகையான சந்தர்ப்பவாதங்களுடனும் சமரசம் செய்துகொள்ளவேண்டும் என்பதல்ல. மாறாக எல்லா வகை யான சந்தர்ப்பவாதங்களுக்கும் எதிராக கடுமையான, ஈவிரக்க மற்ற போராட்டங்களினூடாக அரசியல் மற்றும் ராணுவ நடத்தைவழிகள் வகுத்து வரையறுக்கப்பட்டு நிலைநாட்டப்படு வதன் மூலமாக உருக்குப் போன்ற கட்சித் தலைமையை நிறுவ வேண்டும். உருக்குப் போன்ற ஒரே வார்ப்பான கட்சி என்ற குணாம்சத்துக்கு எதிராக, சந்தர்ப்பவாதிகளிடம் பகைமை பாராட்டுவதற்கெதிராக புரட்சியாளர்களும் சந்தர்ப்பவாதி களும் ஒன்றாக இருக்கமுடியும் என்ற கோட்பாட்டை முறியடிக்க வேண்டும். கட்சிக்குள் அரசியல், சித்தாந்த மட்டத்தை உயர்த் துவது, பாட்டாளிவர்க்க சித்தாந்தத்தை ஆணையில் வைப்பது, ஒருபுறம் அலைந்து திரியும் கலகக்கார, அராஜகவாத, தனி நபர் பயங்கரவாதப் போக்குகளையும் மற்றொரு புறம் பொரு ளாதாரவாதம், சமரச சரணடைவுவாதம், வால்வாதம் ஆகிய இடது, வலது சந்தர்ப்பவாதங்களையும் அவற்றின் அரசியல், சித்தாந்த, அமைப்பு வேர்களையும் களைவதன் மூலமாகத்தான் இதைச் சாதிக்க முடியும். கறாரான ஜனநாயக மத்தியத் துவத்தை உயர்த்திப் பிடித்து, ஜனநாயகம் அல்லது மத்தியத் துவம் இரண்டின் மீதான வரம்பீடுகளை எதிர்த்து சரியாகக் கையாள்வதன் மூலம் இதைச் செய்யமுடியும்.

பிளவுபடாத கட்சித் தலைமையின் கீழ் உறுதியான மக்கள்திரள் அரசியல் படை கட்டியமைக்கப்படுவதும் அரசியலை ஆணையில் வைப்பதற்கான முன்தேவையாகும். புரட்சியை அரசியல் ரீதியில் தலைமைதாங்கி வழிநடத்திச் செல்லவும், அர சியல் அதிகாரத்தை நிறுவவும், தரகு அதிகார வர்க்க முதலா ளித்துவ—நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்தைத் தூக்கி எறிந்து மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கும் தேவை

யான பொருத்தமான அரசியல் படை ஒன்றைக் கட்டி வளர்ப்பதும் பயிற்றுவிப்பதும் இன்றியமையாததாகும். யுத்ததந்திரத்தில் வகுத்தளிக்கப்பட்டிருக்கும் போரிடும் சமுதாய அரங்கில் சக்திகளைப் பிரித்தொதுக்கியிருக்கும் திட்டத்தால் வழிகாட்டப்பட்டு குறிப்பிட்ட இடைக்கட்டத்தில் குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப புரட்சிகர மற்றும் எதிர்ப் புரட்சிகர சக்திகளின்—வர்க்கங்களின் சேர்க்கையினால் தீர்மானிக்கப்படும் அரசியல் நடத்தை வழியினால் இந்த அரசியல் படையின் வர்க்கத்தன்மை அமையும். அரசியல் போராட்டங்ளான பொது அரசியல் வேலைநிறுத்தம், அரசியல் ஆர்ப்பாட்டங்கள், ஆயுதமேந்திய மக்கள்திரள் எழுச்சிகள் ஆகியவற்றுக்குத் தலைமையேற்கும் வேலைநிறுத்தக் கமிட்டிகள், போராட்ட கமிட்டிகள், எழுச்சிக்கான கமிட்டிகள், அதிகாரத்துக்கான அமைப்புகள் மற்றும் அவற்றின் தலைமையிலான அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட மக்கள்திரள் அமைப்புகளும் இயக்கங்களுமே அரசியல் படையாக அமைகின்றன. இவை தன்னெழுச்சியான போராட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டும், ஆனால் திட்டமிட்ட போராட்டங்களினூடேயும் கட்டியமைத்து வளர்த்தெடுக்கப்படுகின்றன. முன்கூட்டியே தயாரித்து ஏற்பாடு செய்யப்பட்ட அல்லது சாதாரண காலங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட அமைப்புகள் அல்ல.

''ஒரு அரசியல் படை ஒரு ராணுவப்படையைப் போன்றதல்ல. ஒரு ராணுவத் தலைமை ஏற்கனவே தயாராக தன்னிடமுள்ள ஒரு படையுடன் துவங்குகிறது; ஆனால் கட்சி அதன் (அரசியல்—மா.அ.க) படையை போராட்டத்தின் போக்குடன் கூடவேதான்—வர்க்க மோதல்களின் போக்கில்தான்—உருவாக்க வேண்டியிருக்கிறது; ஏனெனில் பரந்துபட்ட மக்கள் அவர்களாகவே தமது சொந்த அனுபவத்தின் மூலம் கட்சியின் முழக்கத்தையும் கொள்கையையும் சரியென்று உணர்ந்தேற்கின்றனர்'' (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள், பக்-140)

எனவே சித்தாந்தப் போராட்டங்களினூடே புடம்போட்ட, பிளவுபடாத ஒரே கட்சித் தலைமையும் மக்கள்திரள் அரசியல் போராட்டங்களினூடே வளர்த்தெடுக்கப்பட்ட அரசியல் படையும் புரட்சிகர இயக்கத்தின் வெற்றிக்கு இன்றியமையாத முன்தேவையாகும்.

(2) கோடிக்கணக்கான, லட்சக்கணக்கான பரந்துபட்ட மக்கள்திரளை புரட்சி முன்னணியில், அரங்கில் கொண்டுவந்து நிறுத்திப் பிரித்தொதுக்கி வியூகம் அமைத்துப் போராடும் வகையில் குறிப்பிட்ட தருணத்தில் புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவதற்கேற்ப—பருண்மையான நிலைமைகளுக்குப் பொருத்தமாக—போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களை வகுப்பது. முன்னணிப்படை மட்டுமின்றி பரந்துபட்ட மக்களும் தமது சொந்த அனுபவத்தின் மூலமாக தற்போதைய அரசு அமைப்பு நீடிக்க முடியாது, நீடிக்கக்கூடாது, தவிர்க்க முடி

யாமல் தூக்கியெறியப்பட வேண்டும் என்பதையும். புரட்சிகர முழக்கங்களின் சரியான தன்மையையும் உணர்ந்து கொண்டு முன்னணிப்படையை ஆதரிப்பதற்காக அணிதிரட்டக்கூடிய வகையிலான போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களை முன்வைக்க வேண்டும்.

வலது சந்தர்ப்பவதிகளது போர்த்தந்திரங்கள் பரந்துபட்ட மக்களைத் தமது சொந்த அனுபவத்திலேயே உணர வேண்டிய இந்தப் புரட்சிகர அரசியலைக் கொண்டிருப்பதில்லை. மாறாக, பொருளாதாரவாதமும், சில அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைமையிலான அரசாங்கங்களின் மீதான சிலவிமர்சனங்களைமட்டும் செய்வதாகவும் தற்போதயை அரசு அமைப்பை பாதுகாப்பதாகவும் இருக்கிறது. இடது சந்தர்ப்பவாதிகளது போர்த்தந்திரங்கள் தொழிலாளர் வர்க்கக்கட்சியை காலூன்றி நிற்கவும் இடமில்லாதவாறு, விரல்விட்டு எண்ணத்தக்க சில காரிய சூனியமான சதிகாரர்களின் கூட்டமாக மாற்றக் கூடியவையாகவே இருக்கின்றன.

> "முன்னணிப்படை மட்டும்கொண்டு வெற்றியைச் சாதித்துவிட முடியாது. வர்க்கம் அனைத்தும், விரிவான மக்கள் திரளினர் அனைவரும், முன்னிப்படைக்கு நேரடி ஆதரவு அளிக்கும் நிலையை அடையுமுன், அல்லது குறைந்தது அது குறித்துப் பரிவுடன் கூடிய நடுநிலையையும் பகைவனுக்கு ஆதரவளிக்காத நிலையையும் அடையுமுன், முன்னணிப் படையை மட்டும் முடிவுகட்டும் போரில் இறங்கச் செய்வதானது முட்டாள்தனம் மட்டுமின்றி கொடுங்குற்றமுமாகும். ஒருவர்க்கம் முழுவதும், உழைப்பாளி மக்களின் விரிவான பகுதிகள் யாவும், மூலதனத்தால் ஒடுக்கப்படுவோர் எல்லோரும் இத்தகைய ஒரு நிலையை அடைவதற்கு வெறும் பிரச்சாரமும் கிளர்ச்சியும் மட்டும் போதா. பரந்துபட்ட மக்கள் தாமே அரசியல் அனுபவம் பெறவேண்டியது அவசியமாகும்'' (லெனின், ''இடதுசாரி'' கம்யூனிசம்—ஒரு இளம் பருவக்கோளாறு, பக். 124-125)

பரந்துபட்ட மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் தற்போதைய அரசு அமைப்பு நீடிக்க முடியாது, நீடிக்கக் கூடாது, தூக்கியெறிய வேண்டும் என்பதை உணர்ந்து புரட்சியிலும் புரட்சிகர யுத்தத்திலும் இறங்கவேண்டுமானால் முதல் முன் தேவை சமரச சக்திகளை, கட்சிகளை முற்றாக அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தவும் முடக்கவும் பரந்துபட்ட மக்களைப் பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு வென்றெடுக்கவும் வேண்டும். ஏனெனில் (அ) புரட்சிகர காலகட்டங்களில் புரட்சியின் எதிரிகளுக்கு சமரச சக்திகளே மிகமிக அபாயகரமான சமுதாய அடிப்படைகளைத் திரட்டித் தருகிறார்கள். (ஆ) இச்சக்திகளை, கட்சிகளைத் தனிமைப்படுத்தாவிட்டால் எதிரிகளை தூக்கியெறியவே முடியாது. (இ) புரட்சிக்குத் தயாரிக்கும்போதும் புரட்சியின்போதும் இக்கட்சிகளை—சக்திகளைத் தனிமைப்படுத்துவதை நோக்கி, அவைகளிடமிருந்து பரந்து விரிந்த உழைக்கும் மக்கள்

திரளை வென்றெடுப்பதை நோக்கி பிரதான தாக்குதல் ஆயுதம் திசைதிருப்பிவிடப்படவேண்டும். எதிரிகளுக்கும் பரந்துபட்ட மக்களுக்குமிடையே சமரசம் செய்து திசை திருப்பும் சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தவில்லையானால் அவர்களுக்கிடையிலான மோதல் வெடிக்காது; புரட்சியின் வெற்றி சாத்தியமற்றதாகிவிடும்.

சமரச சக்திகளை—கட்சிகளைத் தனிமைப்படுத்தும் வகையில் அரசியல் நடத்தை வழியும், முழக்கங்களும், போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களும் முன்வைக்கப்பட வேண்டும். இவற்றை அவர்களது கோட்பாடு மற்றும் நடைமுறைக்கு மாற்றாக வைப்பதன் மூலமாகத்தான் சமரச சக்திகளை—கட்சிகளைத் தனிமைப்படுத்த முடியுமே ஒழிய, அவர்களது நாடாளுமன்ற சமரச சரணடைவையும் சந்தர்ப்பவாதத்தையும் வெறுமனே விமர்சனம் செய்வதன் மூலம் அவர்களைத் தனிமைப்படுத்த முடியாது. எதிரிக்கெதிரான போராட்டத்தில் சமரசப் போக்குகள் அனைத்தும் அம்பலப்பட்டு மக்கள் வெறுத்தொதுக்கும் வகையில் இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிடுவதும், அப்பட்டமான தவறுகளிழைத்து தனிமைப்படும்படி செய்வதும் ஆகிய போர்த்தந்திர நடவடிக்கைகள் மூலம் இதைச் செய்ய முடியும். குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்ப பரந்துபட்ட மக்கள் அனைவரையும், நாட்டையும் பாதிக்கும் உயிராதாரமான அரசியல் பிரச்சினைகளின் மீதும், எதிரிக்கு மிகவும் பாதகமான சிக்கலும் நெருக்கடியும் மிக்க அரசியல் பிரச்சினைகளின் மீதும் சரியான மார்க்சிய-லெனினியத் தீர்வுகளின், திட்டத்தின் அடிப்படையில் வகுக்கப்படும் போர்த்தந்திரங்கள் இயல்பாகவே சமரச சக்திகளை—கட்சிகளைத் தனிமைப்படுத்துவதாக அமைகின்றன, பரந்துபட்ட மக்களை வென்றெடுக்க கூடியவையாக அமைகின்றன.

மேற்கண்ட அரசியல் பிரச்சினைகளில் ஆளும் வர்க்கங்களும் அவற்றின் அரசியல் சக்திகளான கட்சிகளும்,-சமரச சக்திகளும்-கட்சிகளும், முன்வைக்கும் முழக்கத்திற்கு மாற்றாக பாட்டாளி வர்க்க கட்சியின் முழக்கங்களைப் பரந்துபட்ட மக்கள் தமது சொந்த அனுபவங்களின் மூலம் ஏற்கும்படி செய்ய வேண்டும். வேறு சொற்களில் சொல்வதானால் கட்சியின் தலைமையைப் பரந்துபட்ட மக்களது தலைமையோடு போட்டு குழப்பிக்கொள்ளக்கூடாது; முதல் வகைப்பட்ட தலைமைக்கும் இரண்டாவது வகைப்பட்ட தலைமைக்கும் இடையிலான வேறுபாட்டைப் பாகுபடுத்திப் பார்க்க வேண்டும். ஒன்று கட்சியின் தலைமை பற்றிய விஞ்ஞானம். மற்றொன்று பரந்துபட்ட உழைக்கும் மக்களது தலைமை பற்றிய விஞ்ஞானம். பல்வேறு போராட்ட மற்றும் அமைப்பு வடிவமுறைகளை மாற்றியும் இணைத்தும் நடைமுறை அனுபவரீதியாக கட்சியின் முழக்கத்தை பரந்துபட்ட மக்கள் தமது சொந்த முழக்கங்களாக ஏற்கும் வகையில் புரட்சிகர உணர்வு மட்டத்துக்கு உயர்த்துவதன் மூலமாகத்தான் அவர்களைப் புரட்சியின் பக்கம் வென்றெடுக்க முடியும்.

3. கட்சியின் முன்னுள்ள பல்வேறு பணிகளில் பிரதானப் பணியைத் தேர்ந்தெடுப்பது, எங்கிருந்து தொடங்குவது சகல பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு காண்பதற்கு வழிவகுக்கும் என்பதைத் தீர்மானிப்பது. ''வளர்ச்சிப் போக்குகள் எனும் சங்கிலித்தொடரில் எந்த ஒருகுறிப்பிட்ட கண்ணியை இறுகப் பிடித்துக் கொண்டால் சங்கிலி முழுவதையும் கையில் வைத்திருக்கவும் யுத்ததந்திர ரீதியிலான வெற்றிக்கான நிலைமைகளை உண்டாக்கவும் முடியுமோ அந்தக குறிப்பிட்ட கண்ணி எது என்று கண்டுகொள்வது.

"கட்சி எதிர்கொள்ள வேண்டிய கடமைகள் மத்தியிலிருந்து குறிப்பிட்ட எந்தக்கடமையை நிறைவேற்றுவது கேந்திரமாக இருக்கிறதோ, எந்தக்கடமையை நிறைவேற்றுவதானது மற்றெல்லா உடனடியான கடமைகளுக்கும் வெற்றிகரமாகப் பரிகாரம் தேடுவதை உறுதிபடுத்துமோ அந்தக் குறிப்பிட்ட உடனடியான கடமையை பொறுக்கியெடுப்பது என்பதுதான் விஷயம்'' (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள், பக். 92.)

கட்சியின் முன்னோ, புரட்சியின் முன்னோ இருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையிலான பரஸ்பர உறவுகளில் அவற்றை ஒப்பிட்டுப் பகுத்தாயும்போது இயல்பாகவே ஒரே ஒரு மையமான கடமையும், பிறதுணைக் கடமைகளுமே குறிப்பிட்ட சமயத்தில் இருக்க முடியும். உதாரணமாக இன்றைய காலகட்டத்தில் நம்முன்னுள்ள கடமைகளில், பல்வேறு பிரச்சினைகளில் மையமான கடமை, சங்கிலித்தொடரின் கேந்திரமான கண்ணி, கரணை என்னவென்று பார்ப்போம். சாருவின் அரசியல், அமைப்பு மற்றும் சித்தாந்தத் துறைகளிலான இடது சந்தர்ப்பவாதக் கோட்பாடு மற்றும் நடைமுறை காரணமாக தேக்கம், தோல்வி, பின்னடைவு மற்றும் பிளவுக்குள்ளான கட்சி இன்று பல்வேறு குழுக்களாகச் சிதறிப்போய் இருக்கின்றன; அவை பரந்துபட்ட மக்களிடமிருந்து தனிமைப்பட்டும் நிற்கின்றன. ஆகவே நம் முன்னுள்ள, சிதறியகட்சியை ஐக்கியப்படுத்துவது மற்றும் தனிமைப்பட்டகட்சியை மக்களுடன் இணைப்பது ஆகிய இரு முக்கியமான கடமைகளில், பிரச்சினைகளில் முதற்கடமையே பிரதானமானது. இன்றைய காலகட்டத்தில் புரட்சிகர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய சங்கிலித் தொடரில் கேந்திரமான கண்ணி, பிரதானப்பணி, மையமான கடமை சிதறிய கட்சியை ஐக்கியபடுத்துவதாகவே இருக்கிறது. ஏனெனில் அப்பொழுதுதான் பரந்துபட்ட மக்களுடன் கட்சியை இணைக்க முடியும். கட்டுப்பாடும் உறுதியும் மிக்க ஒரே வார்ப்பான பிளவுபடாத தலைமையே இதைச் சாதிக்க முடியும்.

இவ்வாறு ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்திலும் புரட்சிகர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான சங்கிலித் தொடரில் கேந்திரமான கண்ணியைப் பற்றிக் கொள்வதில் போர்த்தந்திரத் தலைமை கவனம் செலுத்தவேண்டும். எனவே

தான், "புரட்சிக்காரனாகவோ, சோசலிசத்தை ஆதரிப்பவனாகவோ அல்லது கம்யூனிஸ்டாகவோ இருந்தால் மட்டும் போதாது; ஒவ்வொரு குறிப்பிட்ட சமயத்திலும் எந்த ஒரு குறிப்பிட்ட இணைப்புக்கண்ணியை பிடித்துக்கொண்டால் சங்கிலி முழுவதையும் பிடித்துக்கொள்ளவும், அடுத்த இணைப்புக்கு உறுதியாக முன்னேற நிலைமையைப் பக்குவப் படுத்தவும் முடியுமோ, அந்த இணைப்பைக் கண்டுபிடிக்கவும் அவனுக்குத் தெரியவேண்டும்" (ஸ்டாலின், ஷெ நூல், பக். 93)

சங்கிலித்தொடரின் கேந்திரமான கண்ணியை பிடித்துக்கொள்வதில் சரியாக இருக்கும்பொழுது தான் புரட்சிகர இயக்கத்தில் ஒரு குறிப்பிட்ட தருணத்திலிருந்து மற்றொன்றுக்கு மாறும் பொழுது முன்முயற்சியை இழக்காமலிருக்க முடியும்.

இவை மூன்றும் தான் சரியான போர்த்தந்திரத் தலைமைக்கு உத்திரவாதம் செய்யும் நிபந்தனைகளாகும். இந்நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பொழுதுதான் பாட்டாளி வர்க்க கட்சி அனைத்துவிதமான போராட்ட மற்றும் அமைப்பு வடிவங்களையும் சரியானபடி பிரயோகிக்கும் நிலையை அடைந்ததாகக் கூறமுடியும்; அப்பொழுதுதான் மோதிக்கொள்ளும் பல்வேறு சக்திகளின்—வர்க்கங்களின் குறிப்பிட்ட உறவு நிலையில் யுத்ததந்திர வெற்றிக்கு அடிகோலுவதற்கு அவசியமான அதிகபட்சப் பலன்களைப் பெறும் வகையில் அவற்றைப் பிரயோகிக்க முடியும்.

## சீர்திருத்தவாதப் போர்த்தந்திரங்களை நிராகரித்து புரட்சிகரமான போர்த்தந்திரங்களை வகுப்பதுபற்றி:

சீர்திருத்தவாதப் போர்த்தந்திரங்களை நிராகரித்து — எதிர்த்து முறியடித்துப் புரட்சிகரமான போர்த்தந்திரங்களை வகுக்க வேண்டியதன் அவசியம் இந்தியப் புரட்சி இயக்கத்தில் விசேஷமான முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் இந்தியப் பொதுவுடமை இயக்கத்தின் முந்திய வரலாறே பிரதானமாக சீர்திருத்தவாத அடிப்படையிலானதும் எதிரிகளுடன் முற்றாக துரோகத்தனமாக சமரசம் மற்றும் ஒப்பந்தங்களின் வகைப்பட்டதாக இருந்திருக்கிறது. எஞ்சிய சில காலங்களிலோ இடது சந்தர்ப்பவாதமாக இருந்து சீர்திருத்தங்களைப் பொதுவாகவும், சமரசங்கள், ஒப்பந்தங்களைக் குறிப்பாகவும் எப்பொழுதுமே விதிவிலக்கின்றி நிராகரிக்க வேண்டுமென்பதாக இருந்திருக்கிறது னப்பொதுவுடமைக் கட்சியானது ருஷியப் பொதுவுடமைக் கட்சியைப் போன்றே ஒரு புதிய வகைப்பட்ட புரட்சிகரமான கட்சியாக கட்டியமைக்கப்பட்டது. அது புரட்சியை வெற்றிகரமாக இறுதிவரை வழி நடத்திச் சென்றது.

ஏனெனில், "முதலாவதாக, அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின் தோன்றியதால் சீனப் பொதுவுடமைக் கட்சி, தன்னை ருஷிய போல்ஷவிக் கட்சியை முன்மாதிரியாகக் கொண்டு அமைத்துக்கொள்ள இயன்றது; பொது

வுடமை அகிலத்தின் உதவியையும் வழிகாட்டுதலையும் பெற முடிந்தது. இரண்டாவதாக, ஐரோப்பிய நாடுகளைப் போன்று சீனாவில் முதலாளித்துவத்தினுடைய வளர்ச்சியின் ''சமாதானமான'' கட்டம் என்று எதுவும் கிடையாது; இதனால் தொழிலாளர் வர்க்கம் சமாதானமான முறைகளிலான நாடாளுமன்றப் போராட்டங்களை நடத்துவதற்கு வழியில்லை; சீனாவில் தொழிலாளர் பிரபுக்குலம் என்று எதுவுமில்லை. அதாவது, சீனாவில் சீர்திருத்தவாதத்துக்கான சமூக அடிப்படை இல்லாமலிருந்தது. இவ்வாறு துவக்கத்திலிருந்தே சீனப் பொதுவுடமைக் கட்சி ருஷிய போல்ஷவிக் கட்சியின் மிகச் சீரிய பாரம்பரியங்களை மேற்கொண்டது, எந்த வகையான சமூக சீர்திருத்தவாத நோயாலும் அது பீடிக்கப்படாமலிருந்தது''. (நவீன சீனப் புரட்சியின் வரலாறு, ஹோ-கான்-ஆ, பக். 21)

ஆனால் இந்தியப் பொதுவுடமை இயக்கம் ஆரம்பம் முதல் புரட்சிகர ருஷிய போல்ஷவிக் கட்சியை முன்மாதிரியாகக் கொண்டோ, மூன்றாம் அகிலத்தின் வழிகாட்டுதலிலோ இல்லாது ஐரோப்பியத் திரிபுவாதக் கட்சிகளை முன்மாதிரியாகக்கொண்டு, ஆங்கிலேயத் திரிபுவாதிகளின் வழிகாட்டுதலில் கட்டி வளர்க்கப் பட்டது. ருஷிய, சீனப்பொதுவுடமைக் கட்சிகளைப் போலன்றி புரட்சி இயக்கத்தினூடே புடம் போடப்பட்டதல்ல. நீண்டகாலமாகவே நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதையினூடே வந்திருக்கிறது. ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளது, தேசிய விடுதலை இயக்கங்களையும் அமைப்புகளையும் காலனிய அரசு அமைப்பின் அங்கமாக நிறுவனமயமாக்கும் கொள்கைக்கும் சீர்திருத்தங்களுக்கும் பலியாகியும், பொருளாதாரவாத சகதியில் மூழ்கித் திளைத்தும் சமூக சீர்திருத்தவாதத்தால் களங்கப்பட்டும் போயிருக்கிறது. 'நிலச்சீர்திருத்தம்' 'ஜனநாயக சோசலிசம்' போன்றவற்றால் சீர்திருத்தவாத ஜனரஞ்சக அரசியல் நாட்டில் ஆழமாக வேரூன்றி இருக்கிறது. இதிலிருந்து கடைகோடித்தனமான முடிவாகிய எல்லா சீர்திருத்தங்களையும் பொதுவாகவும் சமரசங்கள், ஒப்பந்தங்களைக் குறிப்பாகவும், எப்பொழுதும் முற்றாக நிராகரிக்க வேண்டும் என்பதும் சரியல்ல. சில நிலைமைகளில் அவை தவிர்க்க முடியாதவை அவசியமானவை; அவை பயனுடையனவாகவும் அமைகின்றன. உதாரணமாக சில நிலைமைகளில் எதிரிகளுடன் செய்து கொள்ள வேண்டிய சமரசங்களையும் ஒப்பந்தங்களையும் பற்றி லெனின் பின்வருமாறு கூறினார்.

''பாட்டாளி வர்க்கத்தவர் ஒவ்வொருவரும் வேலை நிறுத்தங்களை அனுபவித்து அறிந்தவர்; தொழிலாளர்கள் எதனையுமே சாதிக்காமல், அல்லது அவர்களுடைய கோரிக்கைகளில் ஒரு பகுதி மட்டுமே பூர்த்தி செய்யப்படும் நிலைமைக்கு ஒப்புதல் அளித்து, வேலைக்குத் திரும்ப வேண்டியதாகிவிடும் வண்ணம் வெறுக்கத்தக்க ஒடுக்குமுறையாளர்களுடனும் சுரண்டலாளர்களுடனும் 'சமரசங்கள்' செய்து கொள்ள நேர்வதை அனுபவித்து அறிந்தவர்; பாட்டாளி வர்க்கத்தவர் ஒவ்வொருவரும்

மக்கள் திரள் போராட்டத்தின் நிலைமைகளின் விளைவாகவும், அவர் எவற்றினிடையே வாழ்கிறாரோ அந்த வர்க்கப் பகைமைகள் வெகுவாகத் தீவிரமடைவதன் விளைவாகவும் புறநிலைமைகளில் (வேலை நிறுத்த நிதிகளின் பற்றாக்குறை வெளி ஆதரவு இல்லாமை, இனி தாளாது என்னும்படியான அளவுக்குப் பட்டினி, தளர்வு முதலான நிலைமைகளின் நிர்ப்பந்தத்தால் ஏற்படும் சமரசத்துக்கும்—இத்தகைய சமரசத்துக்கு ஒத்துக்கொண்ட தொழிலாளர்களுடைய புரட்சிகரப் பற்றுறுதியும் போராட்டத்தை நடத்திச் செல்வதிலுமுள்ள ஈடுபாடும் இச்சமரசத்தால் எவ்வகையிலும் குறைந்து விடுவதில்லை—மறுபுறத்தில் துரோகிகள் தமது சுயநலத்தையும் (கருங்காலிகளும் ''சமரசங்கள்'' செய்து கொள்கிறார்களே!) கோழைத்தனத்தையும், முதலாளிகளுக்குத் தொண்டூழியம் புரிவதில் தமக்குள்ள நாட்டத்தையும், முதலாளிகளின் அச்சுறுத்தலுக்கும் சில நேரங்களில் நயமான பேச்சுகளுக்கும் சில நேரங்களில் கைக்கூலிக்கும் சில நேரங்களில் புகழுரைகளுக்கும் பணியத் தாம் தயாராயிருப்பதையும் புறநிலைக் காரணங்களாகத் திரித்துக் கூறிச்செய்து கொள்ளும் சமரசத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டு கொண்டு விடுகிறார்'' (லெனின் ''இடதுசாரி'' கம்யூனிசம் இளப் பருவக் கோளாறு, பக், 82-83)

எனவே சீர்திருத்தங்களையும், சமரசங்கள், ஒப்பந்தங்களையும் பாட்டாளி வர்க்க கட்சி முற்றாக எப்பொழுதும் நிராகரிப்பதில்லை. ஆனால் பிரச்சினை இதுவல்ல. புறவயமான நிலைமைகளின் நிர்ப்பந்தம் காரணமாக புரட்சிகர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல சிலசமயங்களில் அவற்றை பயன்படுத்துவதையும், அவற்றையே மூலாதாரமாக நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தவாதப் போர்த்தந்திரங்களை வகுத்து துரோகமிழைப்பதையும் பாகுபடுத்துவதுதான்-சீர்திருத்தவாதிகளுக்கு சீர்திருத்தங்களே சகலமும்; புரட்சி வேலை இடையில் சம்பவிப்பதும் வாய்ச்சவடாலும் கண்துடைப்புமாகவே இருக்கிறது. ஆகவேதான் சீர்திருத்தவாதப் போர்த்தந்திரங்கள் பரந்துபட்ட மக்களை ஆளும் வர்க்கங்களுடன் சமரசம் செய்து திசைதிருப்புவதாகவும், தற்போதைய ஆட்சியை பலப்படுத்துவதாகவும், புரட்சியை சீர்குலைக்கும் கருவியாகவும் இருக்கின்றன. இதற்கு நேர்மாறாக புரட்சியாளர்களுக்கு பிரதான வேலை புரட்சியாகும்; புரட்சியின் துணை விளைவுகளான சீர்திருத்தங்கள் பிரதானமானவை அல்ல. ஆகவேதான் புரட்சிகர போர்த்தந்திரங்கள் தற்போதைய ஆட்சியை சீர்குலைக்கவும், புரட்சியை வலுப்படுத்தவும், புரட்சிகர இயக்கத்தை வளர்க்கவுமான தளங்களில் ஒன்றாக சீர்திருத்தங்களைப் பயன்படுத்துகின்றன.


''ஒரு சீர்திருத்தத்தை சட்டபூர்வமான வேலையுடன் சட்டவிரோதமான வேலையை இணைப்பதற்கு வாய்த்த ஒரு உதவியாகவும், அதன் மறைவில் நின்று முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்கு மக்களைப் புரட்சிகரமா

கத் தயார் செய்வதற்காக சட்டவிரோதமான வேலையைத் தீவிரப்படுத்தும் பொருட்டும், அதைப் புரட்சிக்காரன் ஏற்றுக் கொள்ளுவான்.

"இதுதான் ஏகாதிபத்திய ஆட்சி நிலைமையில் சீர்திருத் தங்களையும் புரட்சிகரமாகப் பயன்படுத்துவதென்பதற்கு அர்த்தம்.

"இதற்கு மாறாக சட்டவிரோதமான வேலைகள் அனைத் தையும் கைவிடுவதற்காகவும், புரட்சிக்குத் தயார் செய்ய முடி யாதபடி தடுப்பதற்காகவும் 'அருளப்பட்ட' சீர்திருத்தங் களின்நிழலில் ஓய்வெடுத்துக் காலத்தை கடத்துவதற்காகவும் சீர்திருத்தவாதி சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்கிறான்.

"இதுதான் சீர்திருத்தவாதத்தின் போர்த்தந்திரம் என் பது" (ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள் பக். 95).



## VII இந்தியப் புரட்சிக்கான ராணுவ யுத்ததந்திர, போர்த்தந்திர விதிகளும் நெறிமுறைகளும். இந்தியப் புரட்சிக்கான பாதை - மக்கள் யுத்தப் பாதையே.

*"ஆயுத சக்தியால் அரசியலதிராரத்தைக் கைப்பற்றுவது, யுத்தத்தால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, புரட்சியின் கேந்திரக் கடமையும் அதிஉயர்ந்த வடிவமும் ஆகும். புரட்சி பற்றிய இந்த மார்க்சிய-லெனினியக் கோட்பாடு சர்வவியாபகமாகப் பொருந்தியது; சீனாவுக்கு மாத்திரமல்ல இதர நாடுகளுக்கும் பொருந்தியது. கோட்டுபாடு ஒன்றாக இருந்தாலும் பாட்டாளி வர்க்கக்கட்சியால் அதன் பிரயோகம் வேறுபட்ட நிலைமைகளுக்கேற்ப வேறுபட்ட வழிகளில் வெளிப்படுகிறது"* (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவப் படைப்புகள், பக்கம் 557-58)

அரசு பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின்படி அரசு அதிகாரத்தின் பிரதானப் பகுதி அதன் வன்முறைக் கருவிகளான ராணுவமும் போலீசும் நீதிமன்றங்களும் சிறைச்சாலைகளும். எனவே புரட்சியில் வெல்வதற்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்த—அரசு அதிகாரத்தைக் கைப்பற்றவும் நிலைநிறுத்தவும் ஆயுத சக்தி, செஞ்சேனையும் மக்கள் குடிபடைகளும்—பெற்றி

ருக்க வேண்டும். அதுமட்டுமல்ல இந்தப் புரட்சியில் கேந்திரக் கடமையை நிறைவேற்றும் அதிஉயர்ந்த வடிவமாகிய யுத்தத்தை வழிநடத்தும்—பிரச்சினைக்குத் தீர்வுகாணும்—தலைமைமுறை பற்றிய விஞ்ஞானத்தையும் அதை ஆளும் நியதிகளையும் கற்றுத் தேரவும், பிரயோகிக்கவும் வேண்டும்.

இறுதியில் பார்க்கப்போனால் யுத்தத்தின் நோக்கம் அரசியல் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதாகும். எனவேதான்

"அரசியலின் நீடிப்பே யுத்தம்; இந்த அர்த்தத்தில், யுத்தம் அரசியலாகவும், யுத்தம் தானே அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகிறது. புராதன காலம் முதல் அரசியல் குணாம்சம் இல்லாத யுத்தமே இருந்ததில்லை... ...ஒரு வார்த்தையில் கூறுவதானால், யுத்தம் தனியொரு கணத்திற்குத் தானும் அரசியலிலிருந்து பிரிக்கப்பட முடியாது." (ஷெ நூல், பக் 467-68)

என்றார் மாவோ. ஆனால் யுத்தம் ரத்தம் சிந்தும் அரசியல் என்கிற வகையில் அதற்கே உரிய குணாம்சங்களைப் பெற்றிருக்கிறது. இந்த அர்த்தத்தில் யுத்தத்தை ரத்தம் சிந்தாத அரசியலுடன் சமமாக வைக்கமுடியாது என்றார்.

"யுத்தத்தின் குறிப்பான குணாதிசயங்களின்றும் குறிப்பான ஸ்தாபனங்களின் தொகுதியொன்றும் குறிப்பானமுறைகளின் தொகுப்பொன்றும் குறிப்பான ஒரு வகையான போக்கும் தோன்றுகின்றன. இந்த ஸ்தாபனங்கள் ஆயுதப் படைகளும் அவற்றோடு சம்பந்தப்பட்ட அனைத்துமாகும். இம்முறைகள் யுத்தத்தை வழிநடத்துவதற்கான யுத்ததந்திரமும் போர்த்தந்திரங்களுமாகும். இந்தப் போக்கு எதிரெதிரான ஆயுதப் படைகள் தத்தமக்குச் சாதகமானவையும் எதிரிக்குப் பாதகமானவையுமான யுத்தந்திரத்தையும் போர்த்தந்திரங்களையும் உபயோகித்து ஒன்றை ஒன்று தாக்குவது அல்லது ஒன்று மற்றதற்கெதிராகத் தன்னைத் தற்காத்துக் கொள்வதான சமூக நடவடிக்கையின் குறிப்பான வடிவமாகும்" (ஷெ நூல், பக். 469-70)

இவ்வாறு யுத்தத்தை வழிநடத்தும் நியதிகள் என்ற வகையில் யுத்ததந்திரங்களும் போர்த்தந்திரங்களும் யுத்தக் கடலில் நீந்தும் கலையாக அமைகின்றன. இக்கலையைக் கற்றுத் தேர்வதிலும் பிரயோகிப்பதிலும் அலட்சியம் செய்யுமாயின் பாட்டாளி வர்க்க கட்சி யுத்தமாகிய கடலில் ஒழுங்கான வாளிப்புடன் நீச்சலடித்து மறு கரையை அடைவது நிச்சயமற்றதாகி அலைப்புற்றுவிடும்.

யுத்தம் பற்றிய பத்தாம் பசலித்தனமான சித்தாந்தங்கள் அனைத்தையும் பொதுவுடமையாளர்கள் எதிர்க்கிறார்கள். நீதியான, புரட்சிகர யுத்தத்தை நாம் எப்பொழுதும் ஆதரிக்கிறோம். தனிநபர் பயங்கரவாதத்தை எதிர்க்கும் அதேசமயம் புரட்சிகர வெகுஜன பயங்கரத்தை உயர்த்திப் பிடிக்கிறோம்.

வன்முறை வெறியர்கள், யுத்த வெறியர்கள், அராஜகவாதிகள் என்றெல்லாம் எதிர்ப்புரட்சிவாதிகள் வசைபாடுவதைப் பற்றி நமக்கு அக்கறையில்லை. ஏனெனில் எமது யுத்தங்கள் அனைத்தும் நீதியானவை, புரட்சிகரமானவை. எல்லா யுத்தங்களையும் ஒழிக்கும் நமது ஆசையிலிருந்து புரட்சிகர யுத்தங்கள் பற்றிய கோட்பாடுகளும் பிறக்கின்றன என்பதுதான் நம்மையும் எதிரியையும் வேறுபடுத்தும் எல்லைக்கோடு.

"யுத்தம், மனிதர் தம்மைத்தாமே வதை செய்து கொள்ளும் பிசாசு, இது மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தால் இறுதியில் ஒழிக்கப்படும். இது ஒழிக்கப்படும் காலமும் வெகு தூரத்தில் இல்லை. ஆனால் இதை ஒழிக்கும் ஒரே வழி யுத்தத்தை யுத்தத்தால் எதிர்ப்பது, எதிர்ப்புரட்சி யுத்தத்தை, புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது; தேசிய எதிர்ப்புரட்சி யுத்தத்தை தேசியப் புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது, எதிர்ப் புரட்சி வர்க்க யுத்தத்தை புரட்சிகர வர்க்க யுத்தத்தால் எதிர்ப்பது ஆகும். (ஷி நூல், பக். 148) புரட்சிகர, நீதியான யுத்தங்கள் அனைத்தின் இறுதிக் குறிக்கோள் எல்லா வகையான யுத்தங்களையும் ஒழிப்பது ஆகும்.

ஆனால் எல்லா யுத்தங்களையும் போலவே, புரட்சிகர யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள் தன்னைப் பாதுகாத்து எதிரியை அழிப்பதாகும். "இங்கு நாம் மனிதனின் ரத்தம் சிந்தும் அரசியல் என்ற வகையில், எதிரெதிரான சேனைகளின் பரஸ்பர படுகொலை என்ற வகையில் யுத்தத்தின் அடிப்படையான குறிக்கோளைப் பற்றிப் பேசுகிறோம். யுத்தத்தின் நோக்கம் குறிப்பாகத் 'தன்னைப் பாதுகாத்து, எதிரியை அழிப்ப'தாகும் (எதிரியை அழிப்பது என்றால் அவனை நிராயுதபாணியாக்குவது, அதாவது, 'எதிர்க்கும் ஆற்றலை அவனிடமிருந்து பறிமுதல் செய்வது' அன்றி அவனுடைய படைகள் முழுவதையும் பௌதீக ரீதியில் அழிப்பது அல்ல)". (ஷி நூல், பக்.474)

போர் நுட்பவியல், போர்த்தந்திரம், போரியக்கம், யுத்ததந்திரம் ஆகியன பற்றிய கோட்பாடுகள், நடவடிக்கைகள் அனைத்தும் யுத்தத்தின் இந்தக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டவை. இவை எவையும் எவ்விதத்திலும் இந்தக் குறிக்கோளிலிருந்து விலக முடியாது; இக்குறிக்கோள் யுத்தம் முழுவதிலும் ஊறிக்கிடக்கிறது; யுத்தத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை இழையோடுகிறது.

போர் ஆயுத நுட்பவியலை எடுத்துக் கொள்ளுங்கள். புராதன யுத்த முறையில். ஈட்டியும் கேடயமும் முறையே எதிரியைத் தாக்கி அழிக்கவும் தன்னைப் பேணிக் காக்கவுமான ஆயுதங்களாக இருந்தன. இவையிரண்டின் வளர்ச்சிப் போக்காகவே இன்றைய எல்லா ஆயுதங்களும் இருக்கின்றன. குண்டு வீசும் விமானம், எந்திரத் துப்பாக்கி, நீண்டதூர பீரங்கி, விஷவாயு எல்லாம் தாக்குதலுக்கானவையாகவும், விமானப் பாதுகாப்பு அகழி, உருக்குகவசம், கான்கிறீட்கோட்டை, விஷவாயுப்

பாதுகாப்பு முகமூடி ஆகியவை தற்காப்புக்கானவையாகவும் டாங்கிகள் போன்ற இன்னும் சில நவீன ஆயுதங்கள் இரண்டும் இணைந்தவையாகவும் உள்ளன.

போர்த்தந்திரங்கள் மற்றும் போரியக்கங்களின் தற்காப்பு. அல்லது தாக்குதல் தன்மைகளையும் இவை அடங்கிய யுத்ததந்திரத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எதிரியை அழிக்கும் பிரதான சாதனம் தாக்குதல். அதன் உடனடி நோக்கம் எதிரியை அழிப்பது; அதே சமயத்தில் சுயபாதுகாப்பாகவும் விளங்குகிறது. காரணம் எதிரியை அழிக்காவிட்டால் நாம் அழிக்கப்படுவோம். மிக இன்றியமையாததாக இருக்கும் தற்காப்பின் உடனடி நோக்கம் தன்னைப் பாதுகாப்பதும், அதே சமயம் அது தாக்குதலைப் பூர்த்தி செய்யும் சாதனமாக அல்லது தாக்குதலுக்கான தயாரிப்புக் கட்டமாகத் திகழ்கிறது. பின்வாங்குவது தற்காப்பின் நீட்டிப்பு, துரத்துவது தாக்குதலின் நீட்டிப்பு.

இதுவே ஒரு குறிப்பிட்ட சண்டையில் எவ்வாறு இயக்கப்படுகிறது என்பதை மாவோ பின்வருமாறு விவரிக்கிறார்:

"உதாரணமாக சுடுவதில் 'மறைவிடம் தேடிக்கொள்வதும் சுடும் சக்தியைப் பூரணமாகப் பயன்படுத்துவதுமான' கோட்பாட்டின் பொருள் என்ன? முன்னையதன் நோக்கம் தற்பேணுதல், பின்னையதன் நோக்கம் எதிரியை அழித்தல். முன்னையது தரையமைப்பையும் அதன் தோற்றங்களையும் உபயோகப்படுத்துவது பாய்ந்து முன்னேறுவது, சிதறலாக அணிவரிசைப்படுத்துவது, ஆகியன போன்ற போர் நுட்பங்களைத் தோற்றுவிக்கிறது. பின்னையது துப்பாக்கிச் சூட்டுப் பகுதியிற் தடங்கல்களை அகற்றுவதும் சூட்டு வலையொன்றை அமைத்தலும் போன்ற வேறு போர் நுட்பங்களைத் தோற்றுவிக்கிறது. போர்த்தந்திர ரீதியிலான நடவடிக்கையில் தாக்குதல் படையும் எதிரியை நகராதபடி வரையறைக்குட்படுத்தும் படையையும் கையிருப்புப் படையையும் பொறுத்த வரையில், முதலாவது எதிரியை அழித்தொழிப்பதற்கும், இரண்டாவது தன்னை பேணிக்கொள்வதற்கும், மூன்றாவது சூழ்நிலைகளுக்கேற்றபடி இரண்டில் ஒரு நோக்கத்திற்கும்-ஒன்றில் எதிரியை அழித்தொழிப்பதற்கு (இப்படியானால் அது தாக்குதல் படைக்கு உதவிசெய்யும் படையாகிறது, அல்லது துரத்தும் படையாக பயன்படுகிறது) அல்லது தற்பேணுதலுக்கு (இப்படியானால் அது எதிரியை நகராதபடி வரையறைக்குட்படுத்தியிருக்கும் படைக்கு உதவி செய்யும் படையாகிறது, அல்லது பின்வாங்குதலுக்கு மறைப்பு தரும் படையாகப் பயன்படுகிறது)—ஆனவையாகும்." (ஷி நூல், பக். 476-77).

யுத்தத்தின் குறிக்கோள்கள் தவறாகப் பிரயோகிக்கப்படும் 'இடது', வலது சந்தர்ப்பவாத விலகல்களைத் தவிர்க்கும் பொருட்டு இரண்டு பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தியாக வேண்டும். அவை: (1) எதிரியை அழிப்பதற்கும்-தாக்குதலுக்கும்

தன்னைப் பேணுதற்கும்-தற்காப்புக்கும் இடையிலான பரஸ்பர உறவு, முக்கியத்துவம்; யுத்தத்தில் பிரதான நோக்கம் எதிரியை அழிப்பது; சுயபாதுகாப்பு இரண்டாந்தரமானது என்பதைக் குறிப்பிடவேண்டும். ஏனெனில் எதிரியை பொருந்தொகையில் அழிப்பதன் மூலம்தான் பயனுள்ள முறையில் தன்னைப் பாது காக்க முடியும். எனவே, எதிரியை அழிப்பதில் பிரதான சாத னமாகிய தாக்குதல் முதன்மையானது. அதே வேளையில் அதைப் பூர்த்தி செய்யும் சாதனமாக, ஒரு சுய பாதுகாப்பு சாதனமாக விளங்கும் தற்காப்பு இரண்டாம் தரமானது. யதார்த்த நடை முறையில் யுத்தத்தில் கூடிய அளவுகாலம் தற்பாதுகாப்பு, எஞ்சிய காலம் தாக்குதலும் பிரதானபாத்திரம் வகித்தாலும், யுத்தத்தைப் பிரதானமாக நோக்கினால், தாக்குதல் முதன்மை யானது. (2) யுத்தத்தில் வீரதியாகத்தை ஊக்குவிப்பது, இது தற்பேணுதலுக்கு முரண்படவில்லை;

''தியாகமும் தற்பேணுதலும் ஒன்றுக்கொன்று எதிரான வையும் துணையானவையும் ஆகும். யுத்தம் ரத்தம் சிந்தும் அரசியல், அது தன் விலையை, சில சமயம் மிக உயர்ந்த விலையை எடுத்தே தீரும். பகுதியளவானதும் தற்காலிக மானதுமான தியாகம் (பேணாமை) பொதுவானதும் நிரந் தரமானதுமான பேணுதலுக்காக உறப்படுகின்றது. அடிப் படையாக, எதிரியை அழிக்கும் ஒரு வழிவகையான தாக்குதல் தற்பேணுதலாகிய கருமத்தையும் உடையதென நாம் கூறு வதற்கு காரணம் இதுவேதான். தற்காப்புடன் கூடவே தாக்குதலும் இருக்க வேண்டும்; வெறுமனே சுத்த தற்காப்பு மட்டும் இருக்கக் கூடாது என்பதற்குக் காரணமும் இதுவே தான்'' (ஷை நூல், பக் 475-76)

''தன்னைப் பேணிக்கொண்டு எதிரியை அழித்தல் என்ற யுத்தத்தின் குறிக்கோள் யுத்தத்தின் சாராம்சமும் யுத்த நடவடிக்கைகள் அனைத்தினதும் அடிப்படையுமாகும். போர்நுட்ப ரீதியானவை தொட்டு யுத்ததந்திர ரீதியானவை ஈறாக எல்லா யுத்த நடவடிக்கைகளிலும் இந்த சாராம்சம் ஊறிக்கிடக்கின்றது. யுத்தத்தின் இந்தக் குறிக்கோள் தான் யுத்தத்தின் அடிப்படையான கோட்பாடு. போர்நுட்பவியல், போர்த்தந்திரம், போரியக்கம் யுத்ததந்திரம் ஆகியவை சம்பந்தமான தத்துவங்களோ கோட்பாடுகளோ எதுவும் அதனின்றும் விலக முடியாது''. (ஷை நூல், பக். 476)

யுத்தத்தின் குறிக்கோள் பற்றிய மேற்கண்ட வரையறுப்பு தான் எல்லா யுத்தங்களையும் ஆளும் விதிகளுக்கு அடிப்படை யாக அமைகின்றன. ஆனால் பொதுவில் யுத்தத்தையும், குறிப் பாக புரட்சிகர யுத்தத்தையும் மட்டுமல்ல, மேலும் குறிப்பாக அந்த நாட்டின் புரட்சிகர யுத்தத்தை ஆராய்வதும், அவற்றின் விதிகளை வகுப்பதும் பற்றிய அணுகுமுறையைப் பின்வருமாறு மாவோ தொகுத்தளிக்கிறார்.

''யுத்தம் என்பது வர்க்கங்கள், தேசங்கள், நாடுகள் அரசியல் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் நிலவும் முரண்

பாடுகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சியடைந்ததும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய அதிஉயர்ந்த போராட்டவடிவம்; தனியுடமை முறையும் வர்க்கங்களும் தோன்றியது முதல் யுத்தமும் இருந்து வருகின்றது. யுத்தத்தின் சூழ்நிலைகளை யும் அதன் இயல்பையும் பிற காரியங்களுடனான அதன் உறவுகளையும் புரிந்துகொண்டாலன்றி, யுத்தத்தின் விதிகளை அறிந்து கொள்ளவோ, யுத்தத்தை எவ்வாறு வழி நடத்துவதென்பதை அறிந்து கொள்ளவோ, வெற்றியை ஈட்டவோ முடியாது.

"புரட்சிகர யுத்தம், புரட்சிகர வர்க்க யுத்தமாயினும் புரட்சிகரத் தேசிய யுத்தமாயினும், பொதுவான யுத்தத்தின் சூழ்நிலைகளோடும் இயல்போடும் கூடவே அதன் சொந்த விசேஷமான குழ்நிலைகளையும் இயல்பையும் கொண்டிருக் கிறது. ஆகவே யுத்தத்தின் பொதுவிதிகளோடு கூடவே அது அதன் சொந்த விசேஷமான விதிகளையும் கொண்டிருக் கிறது. அதன் விசேஷமான சூழ்நிலைகளையும் இயல்பையும் புரிந்து கொண்டாலன்றி, அதன் விசேஷமான விதிகளைப் புரிந்துகொண்டாலன்றி, ஒரு புரட்சிகர யுத்தத்தை வழிநடத் தவும் அதில் வெற்றி பெறவும் முடியாது" (ஷை நூல் பக் 141-42)

தற்போது ஒரு யுத்தத்தில், புரட்சிகர யுத்தத்தில் அதிலும் குறிப்பாக அரைக்காலனிய—அரைநிலப்பிரபுத்துவ நாடான இந்தியாவின் புரட்சிகர யுத்தத்தில் ஈடுபடவிருக்கும் பாட்டாளி வர்க்க கட்சி இன்றைய இடைக்கட்டத்தின் உள்நாட்டு யுத்த மாயினும், பின்னர் ஒருவேளை தேசிய யுத்தமாயினும் இந்தியா வின் விசேஷமான சூழலில் நடப்பதாக உள்ளதால் பொதுவான யுத்தத்திலிருந்தும், பொதுவான புரட்சிகர யுத்தத்திலிருந்தும் வேறுபடுத்தும் அதன் விசேஷமான சூழ்நிலைகளையும், இயல்பை யும், அவற்றை ஆளும் பொதுவான விதிகளோடு அதன் சொந்த விசேஷமான விதிகளையும் ஆய்ந்தறிய வேண்டும். இவற்றைப் புரிந்துகொண்டலன்றி இந்தியாவின் புரட்சிகர யுத்தத்தில் வெல்ல முடியாது. நமது நாட்டினுடைய புரட்சிகர யுத்தத்தின் விதிகள் பற்றிப் பேசும்போது, அவை முற்றாக நிராகரித்து முறி யடிக்க வேண்டிய இரு தவறான போக்குகள் இருக்கின்றன. அவை இரண்டுமே யுத்தத்தின் அடிப்படையான குறிக்கோள் பற்றிய—தன்னைப் பாதுகாத்து எதிரியை அழிப்பது—யுத்தம் பற்றிய மிக ஆரம்பப்பாடமான பிரச்சினையையே முன்வைக்கத் தவறுகின்றன. ஒன்று, தன்னைப் பாதுகாப்பதையே மிதமிஞ்சிய தாகக் கொண்டுள்ளது. மற்றொன்று, எதிரியை அழிப்பதை மட்டுமே குறியாகக் கொண்டுள்ளது. அதாவது

—ஒரு புறம், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும், தம் அணிகளைத் தக்க வைத்துக்கொள்ளும் பொருட்டும் கபடத்தனமான மோசடி செய்யும் வாய்ச்சவடால் களாக ரணதிவே-நம்பூதிரி கும்பலின் ராணுவ யுத்ததந்திர மாகிய நகர்ப்புற தொழிலாளர்களின் ஆயுதமேந்திய பேரெழுச்

சியையும், கிராமப்புற விவசாயிகளது கொரில்லா யுத்தத்தையும் இணைப்பதாகக் கூறுவது. இந்தக் கும்பலுடன் டிராட்ஸ்கிய மற்றும் பிற குட்டி முதலாளித்துவ கும்பல்களது நகர்ப்புற ஆயுத மேந்திய பேரெழுச்சி பற்றிய பேச்சு. இவற்றை ஏன் கபடத்தன மான மோசடி என்கிறோமென்றால், நாடு முழுவதுமாக பெரும் பான்மை மக்களை வென்றெடுத்த பின்னரோ, காலமெல்லாம் இந்தியாவைப் பற்றி பருண்மையான ஆய்வு செய்துகொண்டே இருந்துவிட்டு கோட்பாடுகளின் பற்றாக்குறையைத் தீர்த்த பின்னரோ, இந்தியப் புரட்சி யுத்தம் பற்றிய பிரச்சினைகள் திடீரென்று தீர்க்கப்படுமென்று இவர்கள் கூறிக்கொண்டிருப் பதும் உண்மையில் நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதை யையும், பொருளாதாரவாதத்தையும் பின்பற்றுவதுமாகவே உள்ளன; ஏதாவது ஒரு வகையில் செஞ்சேனை பிறக்குமென்றும் பின்னரே இப்பிரச்சினைகள் பருண்மையாகத் தீர்க்கப்படும் என்றும் கூறுகின்றனர். இவர்களுக்கிடையிலான ஒற்றுமை என்னவென்றால்—இதுவொன்றும் ஆச்சரியப்படத் தக்கதல்ல—இந்தியப் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் ருஷியப் பாதை யினதும் அல்ல, சீனப் பாதையினதும் அல்ல, இந்தியப் பாதை யினது என்றும், இப்போது பருண்மையாகக் கூறமுடியாது என்றும் திடீரென்று வானத்திலிருந்து குதிப்பதாகவும் கூறுவது தான்.

—மற்றொருபுறம், சீனாவின் புரட்சிகர யுத்தம் பற்றிய, மக்கள் யுத்தப்பாதை பற்றிய மாவோவின் கோட்பாடுகளைக் கொச்சையாகப் புரிந்துகொண்டு அப்படியே பெயர்த்தெடுத்து நமது நாட்டுக்கு சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் பிரயோகிக்க முயன்றனர்; யுத்தத்தின் குறிக்கோளை—தன்னைப் பாதுகாத்து எதிரியை அழிப்பது—அரசியல் குறிக்கோளோடும் ராணுவ யுத்ததந்திரம் போர்த்தந்திரங்களை அரசியல் யுத்ததந் திரம் போர்த்தந்திரங்களோடும், புரட்சிகர யுத்தத்தில் ராணுவ ரீதியில் பயன்படுத்தப்பட்ட கொரில்லா யுத்தத்தையும் அழித்தொ ழிப்பு யுத்தத்தையும் அரசியல் போராட்டங்களுடனும் போட்டுக் குழப்பிக்கொண்டு செயல்படுத்தினர். பிற மார்க்சிய லெனினியக் குழுக்களும் கூட மாவோவின் கோட்பாடுகளை அப்படியே பெயர்த்தெடுத்து நமது நாட்டில் நிலைநாட்ட முயற் சிக்கின்றன. மேலும் சாராம்சமாக மாவோவின் மக்கள் யுத்தப் பாதை பற்றிய கோட்பாடுகளை அவர்கள் தொகுத்தறியவில்லை. உதாரணமாக (1) குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப—புரட்சிகர, எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களுக் கிடையிலான பலாபல மற்றும் சேர்க்கை பற்றிய கணிப்பு, புரட்சி வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது பற்றிய கணிப்பு—வகுக்கப் படும் அரசியல் போர்த்தந்திரத்தின் தன்மைக்கேற்பவும் பொருத்தமாகவும் ராணுவ நடத்தைவழி—போரியக்கங்களும் போர்த்தந்திரங்களும்—அமைய வேண்டும். (2) செஞ்சேனையும் கொரில்லாப் படைகளும், தளப்பிரதேசங்களும் நிறுவுவதும் வளர்ப்பதும் விவசாயிகளது ஆயுதப் போராட்டத்தின் உயர்ந்த கட்டம்; இவை நாடுதழுவிய புரட்சிகரப் பேரெழுச்சியைத்

துரிதப்படுத்துவதற்கானவை—ஆகிய மக்கள் யுத்தப்பாதை பற்றிய இரு அடிப்படை ஆரம்ப பாடத்தைக்கூட உணரவில்லை.

இந்தியாவினுடைய புரட்சிகர யுத்தத்தின் விதிகளை ஆராய்ந்து தீர்வுகாண வேண்டுமானால், பொதுவான யுத்தத்தின் விதிகளை மட்டும், அதாவது இந்தியாவின், அந்நிய நாடுகளின் பிற்போக்காளர்களது ராணுவ நூல்களையும், அனுபவங்களையும் ஆய்ந்தறிவது—இவற்றிலிருந்தும் கற்றுக் கொள்ள முடியும் எனினும்—மட்டும் போதாது. அத்துடன் ருஷியாவிலான புரட்சிகர யுத்தத்தின் அனுபவத்தை மட்டும் ஆய்ந்தறிவதோ அல்லது மேலும் குறிப்பாக சோவியத் யூனியனிலான உள்நாட்டு யுத்தத்தை வழி நடத்திய விதிகளையும், சோவியத் யூனியனின் ராணுவ நூல்களையும் ஆய்ந்தறிவது மட்டும் போதாது ஏனெனில், இவை சோவியத் யுனியனினதும், சோவியத் செஞ்சேனையினதும் தனிக்குறிப்பான குணாதிசயங்களைக் கொண்டிருக்கின்றன. புரட்சிகரமான சோவியத் யுத்தத்திலிருந்தும் நிச்சயம் கற்றுக்கொள்ள வேண்டும் எனினும் தன்மையில் வேறுபாடான இந்திய நிலைமைகளுக்கு அவற்றை அப்படியே பெயர்த்தெடுத்து பிரயோகிக்க முடியாது. பரந்து விரிந்த அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ நாடு, ஏற்றத் தாழ்வான அரசியல் பொருளாதார, சமூக வளர்ச்சி, விவசாயிகளது விவசாயப் புரட்சியை சாராம்சமாகக்கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சி போன்ற இந்தியாவுக்கும் புரட்சியின் போதிருந்த சீனத்துக்கும் இடையிலான ஒற்றுமை மற்றும் காலனிய, அரைக்காலனிய நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளுக்கான பொதுப்பாதையாக இருப்பது ஆகிய காரணங்களால் சீனாவில் மாவோவால் வகுத்தளிக்கப்பட்டு வெற்றிகரமாகப் பிரயோகிக்கப்பட்ட மக்கள் யுத்தப்பாதையின் கோட்பாடுகளும் நியதிகளும் நமது நாட்டுக்கும் பொருந்தும். இந்தியப் புரட்சி மக்கள் யுத்தப் பாதையின் மூலம் மட்டுமே வெற்றிபெற முடியும். ஆனால் (i) ஆயுதமேந்திய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சியுடன் போரிடும் நிலைமை; (ii) 1924—27 முதல் மாபெரும் புரட்சியினூடாக வந்தது; (iii) செஞ்சேனையையும் தளப்பிரதேசத்தையும் ஆரம்பம் முதல் பெற்றிருந்தது போன்ற சீனத்தின் மக்கள் யுத்தப்பாதைக்கே உரித்தான தனிச்சிறப்பான குணாதிசயங்கள் நமது நாட்டில் இல்லை; மாறாக (i) நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை (ii) முதலாளித்துவ முறையிலான மத்தியத்துவப் படுத்தப்பட்ட அதிகாரவர்க்க ராணுவ அரசு எந்திரம் (iii) ஆளும் வர்க்கங்களுக்குள் உள்ள முரண்பாடு வெளிப்படையான மோதலாகவோ பிளவாகவோ இல்லாமல் இருப்பது ஆகிய இந்தியாவின் விசேஷமான சூழ்நிலைமைகள் காரணமாக சீனப்புரட்சிகர மக்கள் யுத்தப்பாதையின் விதிகளை அப்படியே பெயர்த்தெடுத்துப் பிரயோகிப்பது தவறாகும். இந்தியாவின் புறவயமான பருண்மையான நிலைமைகளில் புரட்சிகர யுத்தத்தை ஆளும் விதிகளை ஆய்ந்தறிந்து வகுக்க வேண்டும்.

தெலுங்கான விவசாயிகளது ஆயுதப்போராட்டமும், நக்சல் பாரி உழவர் பேரெழுச்சியும் இந்தியப் புரட்சியில் இருமுக்கி

யமான புரட்சிகர அனுபவங்களாகும். ஆனால் அவற்றைத் தொகுத்து இந்தியப் புரட்சி யுத்தத்தில் அப்படியே பிரயோகிக்க முடியாது. மேலும் அவை முழுமையான யுத்தத்தின் விதிகளை உள்ளடக்கியிருக்கவில்லை. அவற்றின் படிப்பினைகள் மதிப்பு வாய்ந்தவை எனினும், நக்சல்பாரி வகையான போராட்டத்தை நாடு முழுவதும் துவங்கும்படியும், தெலுங்கானா போராட்டத்தை மீண்டும் கொண்டு வரவும் வெறுமனே முயலுவதில் ஈடுபடுவது தவறாகும். ஒருமுழுமையான யுத்தத்தினதும் மற்றும் தற்போதைய சூழ்நிலைகள் வேறுவிதமானவையாகையால் அவற்றை யாந்திரீக முறையில் எடுத்துப் பிரயோகிப்பது கூடாது. மேற்கண்டவை அனைத்திலிருந்தும், குறிப்பாக சீனாவினுடைய மக்கள் யுத்தப் பாதையின் நியதிகள் கோட்பாடுகளிலிருந்து பொருத்தமானவற்றைப் பிரயோகிக்கவும், தற்போதையதும் இந்தியாவினதும் விஷேச சூழ்நிலைமைகளின் பிரகாரம் சொந்தமான விஷயங்களைத் தீர்மானிக்கவும் வேண்டும்.

"இவ்வாறாக வெவ்வேறு யுத்தங்களை வழிநடத்துவதற்கான வெவ்வேறான விதிகள் அந்த யுத்தங்களின் வெவ்வேறான சூழ்நிலைகளால்-அவற்றின் காலம், இடம், இயல்பு ஆகியவற்றிலான வித்தியாசங்களால்-நிர்ணயிக்கப்படுகின்றன. கால அம்சத்தைப் பொறுத்தவரையில் யுத்தம், அதை வழிநடத்தும் விதிகள் இரண்டுமே அபிவிருத்தி அடைகின்றன; ஒவ்வொரு வரலாற்றுக் கட்டமும் அதன் விசேஷ குணாதிசயங்களைக் கொண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் யுத்தத்தின் விதிகள் அவற்றின் விசேஷ குணாதிசயங்களைக் கொண்டவையாக இருக்கின்றன; அவை மற்றொரு கட்டத்தில் யாந்திரீக ரீதியில் பிரயோகிக்கப்பட முடியாதவை. யுத்தத்தின் இயல்பைப் பொறுத்த வரையில் புரட்சிகர யுத்தம், எதிர்ப்புரட்சிகர யுத்தம் இரண்டும் அவற்றின் விசேஷ குணாதிசயங்களைக் கொண்டவையாகையால் அவற்றை ஆட்சி செய்யும் விதிகளும் அவற்றின் சொந்தக் குணாதிசயங்களைக் கொண்டிருக்கின்றன; ஒன்றிற்குப் பொருந்தும் விதிகள் யாந்திரீக ரீதியில் மற்றதற்குக் கொண்டு பொருத்தப்பட முடியாது. இட அம்சத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு நாடும் அல்லது தேசமும், விசேஷமாகப் பெரியதான ஒரு நாடு அல்லது தேசம், அதன் சொந்த குணாதிசயங்களைக் கொண்டுள்ளதாகையால் ஒவ்வொரு நாட்டுக்கும் அல்லது தேசத்திற்குமான யுத்தத்தின் விதிகளும் அவற்றின் சொந்த குணாதிசயங்களைக் கொண்டுள்ளன; இங்கும் ஒன்றிற்குப் பொருந்தும் விதிகள் யாந்திரீக ரீதியில் மற்றதற்கு கொண்டு பொருத்தப்பட முடியாது. வெவ்வேறு வரலாற்றுக் கட்டங்களில் நிகழ்பவையும், இயல்பில் வேறுபடுபவையும், வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு தேசங்களாலும் நடத்தப்படுபவையுமான யுத்தங்களை வழிநடத்துவதற்கான விதிகளை ஆராய்வதில் நாம் ஒவ்வொன்றினதும் குணாதிசயங்களுக்கும் அபிவிருத்திக்கும் எமது கவனத்தைச் செலுத்தவும், யுத்தப்பிரச்சினையைப் பொருத்து

யாந்திரீகமான அணுகுமுறையை மேற்கொள்ளுவதை எதிர்க்கவும் வேண்டும்'' (ஷே நூல் பக்.145-47)

எனவே யுத்தத்தின் விதிகள் அபிவிருத்தி ரீதியிலானவை என்ற இயங்கியல் அணுகுமுறையை நாம் பிரயோகிக்க வேண்டும். இவ்வளவு மட்டுமல்ல, யுத்தத்தை வழிநடத்தும் தளகர்த்தர்களும் கூட அபிவிருத்தி அடைபவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறின்றி தனியொரு திறமையுடனோ, நுனிப்புல் மேய்வதுடனோ இருந்து விட்டு எந்தவொரு முன்னேற்றமும் அபிவிருத்தியும் அடையாதிருப்பவர்கள் புரட்சியில் ஒரு குறிப்பிட்ட இடத்திலும் சமயத்திலும் ஏதேனும் ஒரு தனித்துறையிலோ முக்கியத்துவமற்ற முறையிலோதான் பங்காற்ற முடியும். மாறாக, யுத்தத்தை வழிநடத்தும் ஒரு தளபதி ஒரு சிறு படைப்பிரிவிற்கு ஆணைதர வல்லவராக இருந்து பெரிய படைப்பிரிவிற்கு ஆணைதர வல்லவராக வளர்வதும், தனக்கு நன்கு தெரிந்த ஒரு ஸ்தலத்தில் மட்டும் இயங்கவும் போர் நடத்தவும் வல்லவராக இருந்து பல ஸ்தலத்தில் போர்நடத்த வல்லவராகவும், எதிரி தரப்பிலும் நமது சொந்த தரப்பிலும் தொழில் நுட்ப, போர்த்தந்திர, யுத்ததந்திர அபிவிருத்திகள் காரணமாக ஒரு குறிப்பிட்ட யுத்தத்திற்குள் கட்டத்திற்கு கட்டம் மாறுபடும் சூழ்நிலைகளுக்கேற்ப, ஒரு யுத்தத்தின் தாழ்ந்த கட்டங்களில் அதற்கு ஆணை தரவல்லவராக இருந்து அதன் உயர்ந்த கட்டங்களில் ஆணைதர வல்லவராகவும் திறமைகளை வளர்த்துக் கொள்வது மேலும் மேலும் அதிக முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் குறிக்கின்றன. புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின் வளர்ச்சிப் போக்கில் இத்தகைய தளபதிகள் —யுத்தத்தை வழிநடத்துவதில் முக்கியத்துவமுள்ள பங்காற்றக் கூடியவர்கள்— தேவைப்படுகிறார்கள். இவ்வாறு யுத்தத்தின் விதிகள், அதை நிர்வகிப்பதற்கான விதிகள் எல்லாம் வரலாறு அபிவிருத்தி அடைவதோடும் யுத்தம் அபிவிருத்தி அடைவதோடும் கூடவே அபிவித்தி அடைகின்றன; மாற்றமற்றது எதுவுமே இல்லை என்ற இயங்கியல் விதி இதற்கும் பூரணமாகப் பொருந்துகிறது.

ஒரு முழுமையான யுத்தநிலைமையின் விதிகளை ஆய்ந்தறியும் யுத்ததந்திரத்தையும், ஒரு பகுதி நிலைமையை ஆட்சி செய்யும் ஒரு யுத்தத்தை வழிநடத்தும் விதிகளைஆராய்ந்தறியும் போரியக்கத்தையும். போர்த்தந்திரத்தையும் வகுப்பதென்பது உண்மையில் முழுமைக்கும் பகுதிக்கும் இடையிலான உறவை ஆராய்ந்தறிவதும் மிக முக்கியமான யுத்தம் பற்றிய விதிகளை அறிவதற்கான அணுகுமுறைகளாகும்.

''யுத்தமுள்ள போதெல்லாம் முழுமையான யுத்த நிலைமை ஒன்றுள்ளது. ஒரு முழுமையான யுத்த நிலைமை உலகம் முழுவதையும் அடக்கக்கூடும், ஒரு நாடு முழுவதையும் அடக்கக்கூடும், அல்லது ஒரு சுதந்திரக் கொரில்லாப் பிராந்தியத்தையோ, ஒரு சுதந்திரமான ஒரு பெரிய போர் நடவடிக்கை முனையையோ அடக்கவுங்கூடும். தன் பல்வேறு அம்சங்களினதும் கட்டங்களினதும் கூட்டுமொத்தமான கணிப்பிடுதலைப் பெறும் எந்த யுத்த நிலைமையும் ஒரு முழுமையான யுத்தநிலைமை ஆகிறது.

‘‘யுத்ததந்திர விஞ்ஞானத்தின் பணி ஒரு முழுமையான யுத்தநிலைமையை ஆட்சி செய்வதான, யுத்தத்தை வழிநடத்தும் விதிகளை ஆராய்வதாகும். போரியக்க விஞ்ஞானத்தினதும் போர்த்தந்திர விஞ்ஞானத்தினதும் பணி ஒரு பகுதி நிலைமையை ஆட்சிசெய்வதான, யுத்தத்தை வழிநடத்தும் விதிகளை ஆராய்வதாகும்.’’ ’(ஷை நூல், பக். 15))

முழுமையைப் பற்றிய ஒரு விளக்கம் ஒரு பகுதியை நன்கு கையாள்வதற்கு துணை செய்வதாலும், பகுதி முழுமைக்கு கீழ்ப்படிவதாலும் ஒரு போரியக்க நடவடிக்கையோ, ஒரு போர்த்தந்திர ரீதியிலான நடவடிக்கையையோ சரியாக வழி நடத்துவதற்கு யுத்ததந்திர விதிகளையும் ஓரளவிற்குப் புரிந்து கொள்வது அவசியம். யுத்ததந்திர ரீதியிலான வெற்றி போர்த்தந்திர ரீதியிலான வெற்றிகளால் நிர்ணயிக்கப்படுவதில்லை; ஏனெனில் ஒரு யுத்தத்தின் வெற்றி தோல்வியை முதலாவதாகவும் முக்கியமாகவும் முழுமையான நிலைமையையும் அதன் பல்வேறு கட்டங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்வது சரியாக இருப்பதையோ பாரதூரமான குறைபாடுகள் பிழைகள் இருப்பதையோ பொருத்திருக்கிறது. நிலைமையை முழுமையாகப் பாதிக்கும், நிலைமை முழுமைக்கும் தீர்க்கமான ஒரு செயலே யுத்தம் முழுவதையும் தீர்மானிக்கிறது. ஆனால் முழுமையான நிலைமை அதன் பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டு தனியானதாக இயங்குவதில்லை; ஏனெனில் அதன் பகுதிகளால் ஆனதே முழுமையான நிலைமை சில சமயங்களில் முழுமையான நிலைமைக்கு தீர்க்கமான முக்கியத்துவமற்ற சில பகுதிகளின் அழிவோ தோல்வியோ அதை பாரதூரமாக பாதிக்காமல் இருக்கக்கூடும். எனவே யுத்தத்திலும் சில போரியக்க ரீதியான நடவடிக்கைகள் அல்லது போர்த்தந்திர ரீதியான நடவடிக்கைகள் தீர்க்கமான முக்கியத்துவமற்ற சில தோல்விகள் பல சமயங்களில் முழுமையான யுத்த நிலைமையை மோசமாக்குவதில்லை. ஆனால் முழுமையான யுத்த நிலைமையை ஆக்கும் போர் நடவடிக்கைகளில் அனேகமானவற்றின் அல்லது ஓரிரு தீர்க்கமான போர் நடவடிக்கைகளின் வெற்றி தோல்வி—அவை தீர்க்கமானவையாக இருப்பதால்—உடனே முழுமையான யுத்த நிலைமையை மாற்றி விடுகிறது. யுத்தத்தின் வரலாற்றில் தனியொரு சண்டையிலான தோல்வி அடுக்கான பல வெற்றி வாய்ப்புகளை இழப்பதற்கும் பல தோல்விகளின் பின்னர் தனியொரு சண்டையிலான வெற்றி புதிய வாய்ப்புகளைத் திறந்து விடுவதற்கும் வழிவகுத்த பல உதாரணங்களுண்டு. இவற்றில் ‘அடுக்கான பல வெற்றிகளும்’ ‘பல தோல்விகளும்’ பகுதி இயல்பினவாயும் முழுமையான யுத்த நிலைமைக்கு தீர்க்கமானவையாக அல்லாமலும் இருந்தன. ‘தனியொரு சண்டையிலான தோல்வி’ அல்லது ‘வெற்றி’ தீர்க்
...பங்கை வகித்தன. இவை யாவும் நிலைமையை முழுமை
...ணக்கில் கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்த்துகி
...நிலைகளுக்கிணங்க ராணுவக் கூறுகளினதும், ப...
...ினதும் தொகுதிப்படுத்தல், போர் நடவடிக்கைகளு
...லான உறவுகள், பல்வேறு நடவடிக்கைக் கட்டங்களு

இடையிலான உறவுகள், நமது நடவடிக்கைகள் முழு
எதிரியின் நடவடிக்கைகள் முழுமைக்கும் இடையிலான உற
ஆகிய பிரச்சினைகளில் சிரத்தையாயிருப்பதும் கவனத்
குவிப்பதும் பிரதான முக்கியத்துவமுடையனவாகும்.

முழுமைக்கும் பகுதிக்கும் இடையிலான உறவு யுத்ததந்தி
திற்கும் போரியக்க நடவடிக்கைகளுக்கும் இடையிலான உ
களில் மட்டுமல்ல, போரியக்க நடவடிக்கைக்கும், போர்த்தந்தி
களுக்கும் இடையிலான உறவிற்கும் பொருந்துவதாகும். இ
றிலும், ஒரு படையின் பல்வேறு படைப்பிரிவுகளின் அடுத்தடுத்
மட்டங்களின் (டிவிஷன், ரெஜிமெண்டு, பட்டாளங்கள் பிற
நடவடிக்கைகளின் தொகுதிகளிலும் மிகமுக்கியமானதும் தீர்க்
மானதுமான பிரச்சினையில் அல்லது செயலில கவனத்தை
நிலைப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் யுத்தத்தையும்,
சண்டைகளையும், படைப்பிரிவுகளையும் சரியாக வழிநடத்த
முடியும். முக்கியமானது அல்லது தீர்க்கமானது எது என்பதை—
ஒரு போர் நடவடிக்கையில் சாடுதலின் திசையும் ஸ்தலமும்,
அத்தருணத்தில் எதிரியின் நிலைமை, தரையமைப்பு, நம்சொந்
படைகளின் பலம் —ஆகியதிட்டவட்டமான சூழ்நிலைகளின்
பிரகாரமே தீர்மானிக்க வேண்டும்.

''ஒரு வார்த்தையில் கூறினால் கோட்பாடு என்பது என்ன
வென்றால், நிலைமை முழுமைக்கும் சம்பந்தப்பட்ட முக்கிய
இணைப்புகளில் எமது கவனத்தை மையப்படுத்திச் செலுத்து
வது என்பதாகும்'' (ஷி நூல், பக். 154)

ஒரு முழுமையான யுத்தநிலைமையை ஆட்சி செய்யும்
விதிகளை — அவை சம்பந்தப்பட்ட விஷயம் கண்ணுக்குப் புலப்
படாததால்—புரிந்து கொள்ளும் ஒரே வழி கடும் சிந்தனையே
ஆகும். முழுமையான நிலைமை பகுதிகளால் ஆனதாகையால்
பகுதிகள் போரியக்க நடவடிக்கைகள் மற்றும் போர்த்தந்திரங்
களைப் பற்றிய அனுபவமிருந்து கடுமையாக சிந்திக்கும் மனமி
ருந்தால் இன்னும் உயர்ந்த தரத்து விஷயங்களைப் புரிந்து
கொள்ள முடியும்.

''யுத்ததந்திர பிரச்சினைகளில் பின்வருவன அடங்கும்:

''எதிரிக்கும் எமக்கும் இடையிலான உறவைத் தகுந்த
படி கருத்திற்கொள்வது:

''பல்வேறு போர் நடவடிக்கைகளுக்கு இடையிலோ, பல்
வேறு போர் நடவடிக்கை கட்டங்களுக்கிடையிலோ ஆன உற
வைத் தகுந்தபடி கருத்திற்கொள்வது;

''நிலைமை முழுமைக்கும் சம்பந்தப்பட்ட (தீர்க்கமான
வையான) பகுதிகளைத் தகுந்தபடி கரு

''பொதுவான நிலைமையில் அட
மான தன்மைகளைத் தகுந்தபடி கருத்

மா
யாகக் க
றன. சூழ்
பிரிவுகள்
இடையி

"முன்னணிக்கும் பின்னணிக்கும் இடையிலான உறவைத் தகுந்தபடி கருத்திற்கொள்வது;

"இழப்புகளுக்கும் அவற்றை நிரப்புதலுக்கும் இடையிலும், சண்டையிடுவதற்கும் இளைப்பாறுதலுக்கும் இடையிலும், ஓரிடத்திற்குவிப்பதற்கும் சிதறலாகப் பரவுவதற்கும் இடையிலும், தாக்குதலுக்கும் தற்காப்புக்கும் இடையிலும், முன்னேறுவதற்கும் பின்வாங்குவதற்கும் இடையிலும், மறைந்திருப்பதற்கும் வெளிப்படையாயிருப்பதற்கும் இடையிலும், பிரதான தாக்குதலுக்கும் துணைத்தாக்குதல்களுக்கும் இடையிலும், சாடுதலுக்கும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கும் இடையிலும், மத்தியப்படுத்திய ஆணைக்கும் பன்முகப்படுத்திய ஆணைக்கும் இடையிலும் நீண்ட யுத்தத்திற்கும் விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தத்திற்கும் இடையிலும், ஸ்தான யுத்தத்திற்கும் நடமாட்ட யுத்தத்திற்கும் இடையிலும், எமது படைகளுக்கும் நேசப்படைகளுக்கும் இடையிலும், ஒரு ராணுவ அங்கத்திற்கும் மற்றொரு ராணுவ அங்கத்திற்கும் இடையிலும மேல் மட்டங்களுக்கும் கீழ் மட்டங்களுக்கும் இடையிலும் இயக்குனர்களுக்கும் சாதாரண படையினருக்கும் இடையிலும், பழைய படைவீரர்களுக்கும் புதிய படைவீரர்களுக்கும் இடையிலும், சீனியர் இயக்குனர்களுக்கும் ஜுனியர் இயக்குனர்களுக்கும் இடையிலும், பழைய இயக்குனர்களுக்கும் புதிய இயக்குனர்களுக்கும் இடையிலும், செம்பிரதேசங்களுக்கும், வெண்பிரதேசங்களுக்கும் இடையிலும், பழைய செம்பிரதேசங்களுக்கும் புதிய செம்பிரதேசங்களுக்கும் இடையிலும், ஒரு குறிப்பிட்ட தளப்பிரதேசத்தின் மத்திய மாவட்டத்திற்கும் எல்லைப் பகுதிகளுக்கும் இடையிலும் வெய்யில் காலத்திற்கும் குளிர்காலத்திற்கும் இடையிலும் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையிலும், பெரிய படை பிரிவுகளுக்கும் சிறிய படைபிரிவுகளுக்கும் இடையிலும், கிரமமான சேனைக்கும் கொரில்லாப் படைகளுக்கும் இடையிலும், எதிரியை அழிப்பதற்கும் வெகுஜனங்களை வென்றெடுப்பதற்கும் இடையிலும், செஞ்சேனையை விரிவுபடுத்துவதற்கும் அதை ஸ்திரப் படுத்துவதற்கும் இடையிலும், ராணுவ வேலைக்கும் அரசியல் வேலைக்கும் இடையிலும் கடந்தகாலப் பணிகளுக்கும் தற்போதைய பணிகளுக்கும் இடையிலும், தற்போதைய பணிகளுக்கும், எதிர்கால பணிகளுக்கும் இடையிலும் ஒரு சூழ்நிலைகளிலிருந்து எழும் பணிகளுக்கும் மற்றொரு சூழ்நிலைகளிலிருந்து எழும் பணிகளுக்கும் இடையிலும், நிலையான முனைகளுக்கும் நிலையற்ற முனைகளுக்கும் இடையிலும், உள்நாட்டு யுத்தத்திற்கும் தேசிய யுத்தத்திற்கும் இடையிலும், வரலாற்று ரீதியான ஒரு கட்டத்திற்கும் மற்றொரு கட்டத்திற்கும் இடையிலும், இன்னும் பிறவற்றிற்கு இடையிலுமான வேற்றுமைகளையும் தொடர்புகளையும் தகுந்தபடி கருத்திற்கொள்வது'' (ஷி நூல், பக் 154-56)

கண்ணுக்குப் புலப்படாத இந்த யுத்ததந்திரப் பிரச்சினைகளில் கடுமையாக சிந்தித்து அனைத்தையும் தெளிந்து கிரகித்துக் கொள்வதும், தேர்ச்சி பெறுவதும் அதாவது யுத்தம் மற்றும் போர் நடவடிக்கைகள் சம்மந்தமான முக்கியப் பிரச்சினைகளை கற்றத்தேர்வது யுத்ததந்திரப் பிரச்சினைகளை ஆய்ந்தறிவதில் நமது இலக்காக இருக்க வேண்டும்.

இதில் முக்கியமான காரியம் கற்பதிற் சிறந்தவர்களாகவும் அக்கறையுடையவர்களாகவும் இருப்பதுதான். எதிரியின் நிலைமையினதும் நமது நிலைமையினதும் சகல அம்சங்களுடனும் பரிச்சயப்படுத்திக் கொள்வதும், இரு தரப்புகளினதும் செய்கைகளை ஆளும் விதிகளை கண்டறிந்து அவற்றைச் சொந்த நடவடிக்கைகளில் பிரயோகிப்பதும் என்ற முறையே வெல்வதற்கான அறிவு, துணிவு ஆகிய இரண்டையும் பெறுவதற்கும் கற்பதிலும் பிரயோகிப்பதிலுமான முறையாகும். 'சூழ்நிலைகளுக்கேற்ப கோட்பாடுகளை வளைந்து கொடுக்கும் யுத்ததில் பிரயோகிப்பதன்' அவசியம், தோல்வி ஏற்படும்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் இரண்டையும் முறையே கோட்பாடுகளை அளவிற்கதிகம் கறாராக பிரயோகிப்பது என்ற அகநிலைத் தவறை எச்சரிப்பதும், அகநிலைத் தவறுகள் அல்லது புறநிலையான சூழ்நிலைகளில் எதிர்பாராத, தவிர்க்க முடியாத மாற்றங்கள் நிகழ்ந்து விட்டால் நிலைமையைச் சமாளிப்பதற்கான வல்லமையைப் பெறுவது என்கிற முறையில் பலநாடுகளின் ராணுவ நூல்கள் குறிப்பிடுகின்றன. யுத்தத்திம் கேந்திரமான அம்சம் என்னவென்றால் அகநிலையானதற்கும் புறநிலையானதற்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்த்து, அவற்றை ஒன்றுடன் ஒன்று உரிய இணக்கத்திற்கு கொண்டுவருவதாகும். அதன் மூலம் கூடுதலான வெற்றிகளை ஈட்ட வேண்டும், குறைவான தோல்விகளைச் சந்திக்க வேண்டும். ஒரு யுத்தத்திலோ, சண்டையிலோ படைகள் செலுத்தப்படும் அல்லது வழிநடத்தப்படும் விதம் குறித்த காலத்தினதும், இடத்தினதும் நிலைமைகளுக்குப் பொருத்தமாகவும், அகநிலையான வழிநடத்தல் புறநிலையான உண்மையான நிலைமைகளுடன் இணங்குவதாகவும், வேறுபடாமலும் இருக்கவேண்டும்.

நமது சொந்தப்படைகளின் தன்மையுடன் (தளபதிகள், வீரர்கள், ஆயுதங்கள், பண்டங்கள் இன்னும் பிறவும், இவற்றின் கூட்டு மொத்தமும்) பரிச்சயப்படுத்திக் கொள்வதிலும், எதிரிப் படைகளின் தன்மையுடன் (அவ்வாறே தளபதிகள், வீரர்கள்: ஆயுதங்கள், பண்டங்கள். இன்ன பிறவும். இவற்றின் கூட்டு மொத்தமும்) பரிச்சயப்படுத்திக் கொள்வதிலும், அரசியல், பொருளாதாரம். புவியியல், காலநிலை ஆகியன போன்ற யுத்தத்திற்குச் சம்பந்தமுள்ள மற்றெல்லா நிலைமைகளோடும் பரிச்சயப்படுத்திக் கொள்வதிலும், வல்லமை பெற்று, நடவடிக்கையின் விதிகளைக் கண்டுபிடித்து, அகநிலையானவற்றிற்கும், புறநிலையானவற்றிற்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கவேண்டும். அறிதலின் இந்த நிகழ்வு மிக முக்கியமானது; கற்பதில் நமது முக்கியமான

மூறை யுத்தத்தை யுத்தத்தின் மூலம் கற்பதாகும். பரட்சி என்பது ஒரு வெகுஜன முயற்சி; இது, வழமையாக முதலில்படித்து பின்னர் பிரயோகிக்கும் ஒருவிஷயமல்ல; மாறாக, முதலில் செய்து, பின்னர் படிப்பது; காரணம் யுத்தம் செய்வதே படிப்பாகும். இந்த வகையிலே எழுதபடிக்கத் தெரியாத சாதாரணமான பரந்துபட்ட மக்களும் படைவீரராக முடியும்.

''யுத்தம் - தேசங்கள், அரசுகள். வர்க்கங்கள். அரசியல் குழுக்களுக்கிடையிலான போராட்டத்தின் அதியுயர்ந்த வடிவம். யுத்தத்தின் விதிகள் எல்லாம் போரிடும் தேசங்களால், அரசுகளால், வர்க்கங்களால், அரசியல் குழுக்களால் தத்தமக்கு வெற்றியை ஈட்டிக்கொள்ளும் நோக்கத்திற்காக பிரயோகிக்கப்படுகின்றன.'' (ஷெ நூல், பக். 166). புரட்சிகர யுத்தத்தை வழி நடத்தும் பாட்டாளி வர்க்கம் தமக்கு வெற்றியை ஈட்டிக்கொள்ள யுத்தத்தின் விதிகளை பின்வரும் வகையில் வகுத்துக்கொள்ள வேண்டும்:

> ''கோட்பாடுகளின் இயல்பினவாக உள்ளவையான ராணுவ விதிகள், ராணுவ தத்துவங்கள் எல்லாம் முற்காலத்தவர்களால் அல்லது தற்காலத்தவர்களால் தொகுக்கப்பட்டுள்ள கடந்தகால யுத்தங்களின் அனுபவமே. கடந்தகால யுத்தங்களின் ஒரு பிதிரார்ஜிதமான, ரத்தத்தை விலை கொடுத்துப் பெறப்பட இப்பாடங்களை நாம் பொறுப்புடன் கற்க வேண்டும். இது ஒரு அம்சம். ஆனால் இன்னுமொன்றும் உள்ளது, அதாவது நாம் இந்த முடிவுகளை எம்சொந்த அனுபவத்தின் சோதனையிலிட்டு, உபயோகமானதைக் கிரகித்துக் கொள்ளவும் உபயோகமற்றதைத் தள்ளவும், எமக்கு மட்டும் சொந்தமானவற்றைச் சேர்க்கவும் வேண்டும். பின்னையது மிக முக்கியமானது; ஏனெனில் இன்றேல் எம்மால் ஒரு யுத்தத்தை வழிநடத்த இயலாது'' (ஷெ, நூல், பக்- 163-164).

பொதுவான யுத்தத்தை மட்டுமல்ல, குறிப்பாக புரட்சிகர யுத்தத்தையும், மேலும் குறிப்பாக ஒவ்வொரு நாட்டின் குறிபான யுத்தத்தையும் எவ்வாறு ஆராய்வது, அவற்றின் விகளை வகுப்பது என்ற மாவோவின் போதனைகளையே இது வரை தொகுத்தளித்தோம்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு எல்லாக் காலனிய, அரைக் காலனிய, நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளுக்கும் நிலைமைகளுக்கும் பொருந்துவதாகிய சீனத்தின் மக்கள்யுத்தப் பாதையையும் அப்படியே பெயர்த்தெடுத்துப் பிரயோகிக்காது, நமது நாட்டின் விசேஷமான நிலைமைகளுக்கேற்ப பிரயோகித்து இந்தியப் புரட்சிகர யுத்தத்தை ஆளும் விதிகளை வகுத்திட வேண்டும். இந்திய நிலைமைகளுக்கேற்ப மக்கள்யுத்தப் பாதையின் பொதுவான போக்குகளையே இங்கு தொகுத்தளிக்கிறோம். புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம்

முழுமைக்குமான யுத்தநிலைமையைக் கணக்கில் கொண்டு யுத்ததந்திரம், போரியக்கம், மற்றும் போர்த்தந்திர விதிகளை வகுக்கிறோம். புரட்சிகர யுத்தம் வெடிக்கும் முன், யுத்தம் ஒரு யதார்த்தமாகும் முன் யுத்தத்தின் விதிகளைப் பற்றிப் பேசுவது அவசியமற்றதாகத் தோன்றலாம். ஆனால் முன்பே குறிப் பிட்டவாறு யுத்தத்திற்கான தயாரிப்புக் காலகட்டத்திலேயே கூட யுத்தத்தின் வளர்ச்சிப்போக்கு பற்றிய தொலைநோக்கில் லாவிட்டால் யுத்தம் என்றுமே சாத்திய ற்றதாகிவிடும் அல்லது அராஜகமானதாகவே தொடங்கப்பட்டு சீரழியும்.

உதாரணமாக, நாடுதழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சியை வழிநடத்தும் யுத்தவிதிகள் பற்றிய தெளிவின்றி இருந்ததால் யுத்தம் வெடித்த பின் 1905 ருஷியாவின் முதற்பெரும் புரட்சிக்குத் தலைமையேற்றதில் நேர்ந்த தவறுகளை லெனின் மாஸ்கோ எழுச்சி மற்றும் 1905 புரட்சிபற்றிய படிப்பினைகளில் விளக்கியிருக் கிறார். மற்றுமொரு உதாரணம்: தளப்பிரதேசங்களை நிறுவி குறிப்பிட்ட இடத்தில் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவது என்று இறங்கியவுடன், சிரிகாகுளம் சுற்றி வளைக்கப்பட்ட பின், எதிரி தாக்குதல் தொடுத்த பின் சிதறியோடும் போர்த் தந்திர நிலையே ஏற்பட்டது. மேலும் ஆயுதப் போராட்டப் பாதை என்று பொதுவாகவின்றி மக்கள்யுத்தப் பாதையா, நாடு தழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சிப் பாதையா, அல்லது மூன் றாவது ஒரு பாதையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்; அதன்பின் அந்த வகைப் பாதையில் யுத்தம் அபிவிருத்தி ரீதி யானது என்கிற முறையில் — யதார்த்தமான புறநிலை மேலும் பருண்மையாக யுத்தத்தை வழி நடத்துவதில் நிர்ணயமான பாத்திரத்தை ஆற்றுகிறது எனினும்—யுத்தத்தை ஆளும் விதி களில் பொதுவானவற்றைத் தீர்மானித்துவிட முடியும். உதாரண மாக, இந்தியப் புரட்சி மக்கள்யுத்தப் பாதையினூடே செல்வ தாகத் தீர்மானித்தால் தளப்பிரதேசப் பிரச்சினையும், அவற்றைச் சுற்றி வளைத்து நசுக்கும் போரியக்கம் மற்றும் எதிர் போரியக்கம் என்ற நியதியும், கொரில்லாப் போர்முறையும் இன்னும் பிற பொது விதிகளும் தீர்மானிக்கப்பட முடியும் என்பது மட்டுமல்ல, அவை அவசியமும் கூட.

எனவே, நமக்குச் சரியான மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையின் அடிப்படையிலானதொரு அரசியல் மார்க்கத்தோ மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையின் அடிப்படையி லானதொரு சரியான ராணுவ மார்க்கமும் தேவை. சரியான அரசியல், ராணுவ மார்க்கங்கள் தம்மியல்பாயும் அமைதியாயும் தோன்றி விருத்தியடைவதில்லை. சித்தாந்த மற்றும் நடை முறைப் போராட்டத்தின் ஊடாக மட்டுமே தோன்றி விருத்தி யடைகின்றன.

## இந்தியாவினுடைய புரட்சிகர யுத்தத்தின் குணாதிசயங்களும். அவற்றிலிருந்து பிறக்கும் மக்கள் யுத்தப்பாதையின் முக்கியமான அம்சங்களும:

இந்தியாவினது புரட்சிகர யுத்தத்தின் விதிகளைப் பின் வரும் ஆறு முதன்மையான குணாம்சங்கள் தீர்மானிக்கின்றன. (i) இந்தியா ஒரு பரந்து விரிந்த பெரிய அரைக்காலனிய-அரை நிலப்பிரபுத்துவ நாடு, பல்வேறு தேசிய இன மக்களையும் பழங்குடியினரையும் கொண்டதும் ஏற்றத்தாழ்வன அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சி உடையதும் யுத்தத்தந்திரோபாயங்களுக்கு ஏற்றதான அடர்ந்த அகன்ற காடுகளும் மலைகளும் கொண்டதும் ஆகும். (ii) ஏகாதிபத்தியம், தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவம் மற்றும் நிலப்பிரபுத்துவம் ஆகிய படுபிற்போக்கான எதிரிகளிடமுள்ள மத்தியத்துவப்படுத்தப்பட்ட அதிகாரவர்க்க ராணுவ அரசு எந்திரம், நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை, ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடு முற்றாமலிருப்பதும், அவை அரசியல் ரீதியிலேயே தீர்க்கப்படுவதும், மோதலாக வெடிக்காததும் (iii) பாட்டாளி வர்க்க கட்சி பல குழுக்களாக சிதறியிருப்பதும், புரட்சியில் பங்கேற்ற கட்சியோ, புரட்சிகர அனுபவம் பெற்ற மக்கள் திரளோ, எல்லாவற்றுக்கும் மேலாக செஞ்சேனையோ இல்லை. iv) பாட்டாளி வர்க்கத் தலைமையும் விவசாயிகளது புரட்சியும் புரட்சிகர யுத்தத்தின் பிரதான மூலாதாரமும் ஊன்றுகோலும் ஆகும். (v) பல்வேறு தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவது, அவை ஆயுதப் போராட்டங்களாக வெடித்திருப்பது. (vi) சர்வதேசிய அடிப்படை முரண்பாடுகள் கூர்மையடைந்து இரு மேல்நிலை வல்லரசுகளுக்கு இடையிலான மேலாதிக்கத்துக்கான போட்டியும் உலக யுத்தத்துக்கான தயாரிப்பும் அபாயமும், ஏகாதிபத்திய முகாமில் பிளவும், மோதலும், மூன்றாம் உலகநாடுகளின் எழுச்சிகளும், வெற்றிகளும், பலமும் நிலவுகின்றன.

இந்த ஆறு குணாம்சங்களே இந்தியப் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின் விதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திரக் கோட்பாடுகளையும் பிரதானமாகத் தீர்மானிக்கின்றன. ஏற்கனவே குறிப்பிட்டவாறு இந்தியப் புரட்சியின் தனிச்சிறப்பான குணாம்சங்களாக இருப்பவை (i) பிரதான தாக்குதல் திசைவழியும், ஐக்கிய முன்னணியும் பற்றிய பிரச்சினை; (ii) அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்கிடையிலான பரஸ்பர உறவையும் முக்கியத்துவத்தையும் சரியாகக் கையாள்வது ஆகிய இரண்டும் ஆகும்.

மேற்கண்ட குணாம்சங்களால் நிர்ணயிக்கப்படும் இந்தியப் புரட்சிகர யுத்தத்தின் அடிப்படை விதிகளாவன: (1) முதலாவது நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது குணாதிசயங்கள் இந்தியாவில் செஞ்சேனையை ஸ்தாபிப்பதும், வளர்ப்பதும் எதிரியை முறியடிப்பதும் சாத்தியம் என்பதையே காட்டுகின்றன.

(2) இரண்டாவது, மூன்றாவது குணாதிசயங்களிலிருந்து மிகத் துரிதமாக—அண்மைக்காலத்தில் செஞ்சேனை ஸ்தாபிக்கப்படுவதோ, வளர்வதோ, அதன் எதிரியைத் தோற்கடிப்பதோ சாத்தியமல்ல; அதாவது, யுத்தம் நீண்டகாலமானதாயிருக்கும்; தவறாகக் கையாளப்பட்டால் தோற்கடிக்கப்படவும் கூடும்.

இந்த இரு அடிப்படை அம்சங்களும் மக்கள் யுத்தப் பாதையை மேற்கொள்ளும் எல்லா காலனிய, அரைக்காலனிய ரவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளுக்கும் பொருந்தக் கூடியவைதான். ஆனால் நமது நாட்டில் செஞ்சேனையின் ஸ்தாபிதமும், வளர்ச்சியும், எதிரியை முறியடிப்பதும் பற்றிய இந்த இரு அம்சங்களும் பிரதான தாக்குதல் திசைவழியும் ஐக்கிய முன்னணியும் பற்றிய பிரச்சினை மற்றும் அரசியல் போராட்டங்கள் ஆயுதப் போராட்டங்களுக்கு இடையிலான பரஸ்பர உறவையும் முக்கியத்துவத்தையும் கையாளும் பிரச்சினை ஆகிய இந்தியப் புரட்சியின் விசேஷமான இரு அடிப்படை அம்சங்களைச் சார்ந்தே அமைகின்றன. குறிப்பாகச் சொல்வதானால், பிரதான தாக்குதல் திசைவழியினூடே எதிரிக்கெதிராகத் தொடுக்கப்படும் பிரதான தாக்குதல் மற்றும் அதற்கான அரசியல் போராட்டங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து பிரயோகிப்பதைப் பொருத்தே செஞ்சேனையின் ஸ்தாபிதமும், வளர்ச்சியும், அது எதிரியை முறியடிப்பதுவும் இருக்கிறது. இவை இந்தியப் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் பற்றிய விசேஷமான மையமான பிரச்சினையாகும். இந்தியப் புரட்சியின் விசேஷமான இவ்விரு அடிப்படை அம்சங்களிலிருந்தும் இந்தியப் புரட்சிகர யுத்தத்தின் விதிகள் பிறக்கின்றன. அதாவது புரட்சிகர செஞ்சேனையைக் கட்டி வளர்ப்பது, செந்தளப்பிரதேசங்களை நிறுவுவது மற்றும் செஞ்சேனையின் யுத்ததந்திர போர்த்தந்திரக் கோட்பாடுகளும் நியதிகளும் பிறக்கின்றன.

இந்தியப் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின் தனிச் சிறப்பான குணாம்சங்களிலிருந்து நமது யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திரக் கோட்பாடுகள் பின்வரும் விஷயத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பது தெளிவு: பரந்துபட்ட மக்களைச் சார்ந்து மக்கள் யுத்தத்தை நடத்திச் செல்ல வேண்டும்; கொரில்லாப் போர்முறையையும் கொரில்லாத் தன்மையுடைய நடமாடும் போர்முறையையும் போரிடும் தலையாய வடிவங்களாக கைக்கொள்ள வேண்டும். சாதகமான சூழ்நிலைகள் இருக்கும் பட்சத்தில் கிரமமான யுத்தத்துக்கு மாறவும் வேண்டும். யுத்ததந்திர ரீதியில் நீண்டகாலத் தன்மையும், ஒவ்வொரு சமரிலும் விரைவில் வெற்றி தோல்வி காண்பதும் யுத்ததந்திர நோக்கில் பார்க்கும்போது சிலரைக் கொண்டு பலரையும், தனித்தனியான போரியக்கங்களைப் பார்க்கும்போது பலரைக் கொண்டு சிலரையும் எதிர்க்க வேண்டியுள்ளதும் — என்று செஞ்சேனைக்கு இவை மிகவும் அவசியமாகும்.

எதிரியின் படைகள் பலமாகவும் பெரியவையாகவும், இருப்பினும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவதும் பலவீனமாவதும் சாத்தியமே; கட்டி

யைமக்கப்படும் செஞ்சேனை ஆரம்பத்தில் சிறியதாகவும் பலவீனமாகவும் இருந்த போதிலும் மக்களுடன் இறுகப் பிணைந்திருக்கும். எதிரியின் பலவீனங்களை முழுக்க முழுக்கத் தனக்குச் சாதகமானவைகளாக மாற்றுவதன் மூலமே செஞ்சேனை தோன்றுவதும், நீடிப்பதும், வளர்வதும், வெற்றி ஈட்டுவதும் காரிய சாத்தியப்படும். தன்னை விட பன்மடங்கு பலமான எதிரியை வீழ்த்தவும், ஒழிக்கவும் செஞ்சேனையானது தனது பிரதான படைகளை ஸ்தல படைப்பிரிவுகளுடனும், கிரமமான படைகளை கொரில்லா மற்றும் குடிபடைகளுடனும், ஆயுதமேந்திய படைகளை ஆயுதமேந்தாத பரந்துபட்ட மக்களுடனும் இணைக்கக் கூடிய முறையில் மக்கள் யுத்தத்தை நடத்த வேண்டும்.

பலத்தைப் பொருத்தவரை செஞ்சேனை எதிரியைவிட கீழான நிலையில் இருக்குமாதலால் யுத்ததந்திர ரீதியில் விரைந்து வெற்றி காணுவது என்பதை எண்ணிப் பார்க்கவும் முடியாது. எனவே நீண்டகால யுத்தத்தில் ஈடுபட்டு பாதகமான பலாபல நிலையில் யுத்ததந்திர ரீதியிலான மாற்றத்தைக் கொண்டு வரக் கூடிய கொள்கைகளை நாம் கைக்கொள்ள வேண்டும். ஆனால் போர்த்தந்திர நடவடிக்கைகள் மற்றும் கள நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் விரைந்து முடிவெடுத்தல் மற்றும் வெற்றி பெறல் என்ற கோட்பாட்டைக் கடைபிடிப்பதாக இருக்க வேண்டும். இதற்கான காரணங்கள்: முதலாவதாக, செஞ்சேனைக்கு எதிரிக்கு உள்ளது போல் ஆயுத தளவாடங்களுக்கான மூலாதாரம் இருக்காது. இரண்டாவதாக, எதிரிக்கு பல படைப் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் ஒன்றுக்கு எதிராக செஞ்சேனை நீண்ட நாட்களுக்குப் போரிடுமானால், தாக்கப்படும் படைப் பிரிவைக் காக்க எதிரியின் பல படைப்பிரிவுகளும் உதவிக்கு வந்து விடும். மூன்றாவதாக, ஒரு 'சுற்றி வளைத்து அழிக்கும் இயக்கத்தை' முறியடித்தபின் அடுத்து வரக்கூடிய நடவடிக்கைகளுக்கு எதிராக செஞ்சேனையானது தயாராக வேண்டியிருக்கும். இவையனைத்தும் ஒரு போரியக்கத்தில் விரைவில் வெற்றி தோல்வி காணுவதை அத்தியாவசிய மாக்குகின்றன. நீண்ட நாட்களுக்கு நீடிக்கும் சமர்கள் செஞ்சேனையின் நலனுக்கு எதிரானவை. யுத்ததந்திர ரீதியில் சிலரைக் கொண்டு பலரை எதிர்ப்பது மற்றும் போர்த்தந்திர ரீதியில் பலரைக் கொண்டு சிலரை எதிர்ப்பது— இதைக் கடைபிடிக்க செஞ்சேனையானது எதிரியுடனான ஒவ்வொரு மோதலின் போதும் எண்ணிக்கை ரீதியில் மேல்நிலை வகித்து, இதைக்கொண்டு தன்னைப் பேணிக்கொண்டு எதிரியை அடுத்தடுத்து ஒழித்து தீர்மானகரமான வெற்றியை இறுதியில் ஈட்ட வேண்டும்.

இந்தியப் புரட்சியின் குணாதிசயங்கள், அவற்றிலிருந்து பெறப்படும் அடிப்படை அம்சங்கள் ஆகியவற்றால் மூன்று பிரச்சுனைகள் அதிமுக்கியத்துவம் பெறுகின்றன. (1) செந்தளப் பிரதேசங்கள்—புரட்சிகர அரசியல் அதிகாரம். (2) செஞ்சேனை —புரட்சிகர மக்கள் படை. (3) நீண்டகால மக்கள் யுத்தம் — புரட்சிகர யுத்தம், இம்மூன்று பிரச்சினைகள் பற்றிய கோட்பாடு மற்றும் நடைமுறைகளை வகுப்பதே ராணுவ மார்க்கத்தை தீர்மானிப்பதாகும்.

## புரட்சிகரத் தளப்பிரதேசங்களை நிறுவுவதும் அதன் முக்கியத்துவமும்:

இந்தியப் புரட்சி, நகர்ப்புறத் தொழிலாளர்கள் மற்றும் பிற பரந்துபட்ட மக்களது போராட்டங்கள் தயாரிக்கப்பட்டு, எதிர்க்கெதிராக திடீரென்று வெடித்து முன்னேறி, கேந்திரமான நகரங்களில் ஆயுதமேந்திய பொதுப் பேரெழுச்சியாகி, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதியில் வெற்றியை ஈட்டி தேச விசாலமானதொரு புரட்சிப் பேரெழுச்சியைக் கொண்டுவந்து இறுதியில் தேச விசால வெற்றியை ஈட்டமுடியும் என்ற கோட்பாட்டையும் விதியையும் முற்றாகப் புறக்கணிக்கிறது. அதே போன்று அலைந்து திரியும் கொரில்லா நடவடிக்கையை மட்டும் விரும்பும் கொள்கையால் நாடுதழுவிய வெற்றியை ஈட்டவும் முடியும் என்ற கோட்பாடும் விதியும் கூட முற்றாகப் புறக்கணிக்கப்பட வேண்டும். இவை இரண்டுமே இந்திய நிலைமைகளுக்குப் பொருந்தாது, தவறானது என்றும் கண்டோம். பரந்துபட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் திரளினர் வாழும் அகன்ற விசாலமான கிராமப்புறப் பகுதிகள் இன்றியமையாததாகவும், இந்தியப் புரட்சியின் உயிராதாரமான முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளாகவும் இருக்கின்றன. மேலும் நீண்டகால மக்கள்யுத்தப்பாதை பிரதானமாக விவசாயிகளைச் சார்ந்தும், விவசாயியுளது கொரில்லாப் போர்முறை மற்றும் கொரில்லாத் தன்மைகடைய நடமாடும் போர்முறையைக் கொண்டதும், செஞ்சேனை விவசாயிகளைப் பிரதான, பெரும் அளவிலான உறுப்பாகக் கொண்டதும் ஆகும். ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுடைய நாட்டில் முதலாளித்துவ முறையிலான ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பொருளாதாரமின்றி ஸ்தல விவசாயப் பொருளாதாரம் நிலவுகையில் புரட்சிகர கிராமங்கள் நகரங்களைச் சுற்றி வளைக்க முடியும்; ஆனால் புரட்சிகர நகரங்கள் கிராமங்களிலிருந்து துண்டாகப்பட்டு தனியானதாக இருக்கமுடியாது. எனவே இந்தியப் புரட்சியின் நாடுதழுவிய வெற்றிக்கான துவக்கப் புள்ளியாக கிராமப் புறங்களில் புரட்சிகரத் தளப்பிரதேசங்களை, சிகப்பு அரசியலதிகாரத்தை நிறுவ வேண்டியுள்ளது; நிறுவவும் முடியும்

கிராமப்புறங்களில் செந்தளப் பிரதேசங்களை நிறுவுவது ராணுவ ரீதியிலான முக்கியத்துவமுடையது மட்டுமல்ல, அரசியல் ரீதியிலும் முக்கியத்துவமுடையதாகும். இந்தியப் புரட்சியின் புறவயமான நிலைமைகள் காரணமாக புரட்சியும் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுடையதாக இருக்கிறது. அதாவது, கிராமப்புறங்களில் முதலில் வெற்றி பெறுவது, தற்காலிகமாக நகர்ப்புறங்களில் வெற்றி பெற இயலாமல் இருப்பது; பொதுவில் கிராமப்புறங்களில் தாக்குதல் நிலை, நகர்ப்புறங்களில் ஒரு பொதுவான தற்காப்புநிலை, கிராமப்புறங்களில் கூட ஒரு பகுதியில் தாக்குதல் நிலையும் வெற்றியும் இருக்கும்போதே மற்றொரு பகுதியில் தோல்வியும், பின்வாங்குதலும், தற்காப்பு நிலையும் இவை அனைத்தும் நாட்டின் மேலும் கீழும், புரட்சி மற்றும் எதிர் புரட்சியின் குறுக்கான நெடுக்கான வடிவமைப்பைக் கொண்டதா

ஆக்குகின்றன. இதற்குப் பொருத்தமாக புரட்சியின் வெற்றியும் தோல்வியும், முன்னேற்றமும் பின்னேற்றமும் அமைகின்றன. ஒரு ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுடைய அரைக்காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாட்டின் புரட்சியின் தன்மையும் சாராம்சமாக விவசாயிகளது விவசாயப் புரட்சியாகையால் ஏற்றத்தாழ்வானதாக, இடர்ப்பாடுகள் மிகுந்ததாக, நீண்ட காலத்தினதாக அமைகின்றது. இந்த நிலையைப் போக்கவும், மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின் கருவடிவிலான புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவி நாடு முழுவதுமுள்ள பரந்துபட்ட புரட்சிகர மக்களிடையே நம்பிக்கையைக் கட்டி வளர்க்கவும், பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுக்கு கடும் இடர்ப்பாடுகளை உருவாக்கி, அவர்களது அடித்தளத்தையே உலுக்கி, உட்சிதைவைத் துரிதப்படுத்தவும், செஞ்சேனையை உருவாக்கவும் நாடு தழுவிய புரட்சிகரப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்தவும் கிராமப் புறங்களில் தளப் பிரதேசங்களை நிறுவ வேண்டி உள்ளது. இந்த வகையில் அரசியல் முக்கியத்துவமுடையது.

ராணுவ ரீதியிலும் இது முக்கியத்துவமுடையது. செஞ்சேனையை ஸ்தாபிப்பதற்கும், வளர்ப்பதற்கும், யுத்ததந்திர ரீதியான தற்காப்பு நிலையிலிருந்து தாக்குதல் நிலைக்கு உயரவும், இதைச் சாதிக்க பெரும் எண்ணிக்கையில் எதிரிப்படைகளை அழித்தொழிக்கும் யுத்தம் நடத்தவும் தளப்பிரதேசங்கள் நிறுவுவது அவசியமாகிறது. மேலும் புரட்சியின் இறுதியில் தளப் பிரதேசங்களில் இருந்து அவற்றைப் பின்னிலமாகக் கொண்டு அவற்றை விரிவடையச் செய்து, அலையலையாக முன்னேறி எதிரியின் கோட்டைகளான நகரங்களைச் சுற்றி வளைப்பதும், நாடு தழுவிய வெற்றியை ஈட்டுவதற்கும் இவை அவசியமாகின்றன. இவ்வாறு அரசியல் ரீதியிலும் ராணுவ ரீதியிலும் முக்கியமுடையதாக இருப்பதாலேயே தான் மக்கள் யுத்தப்பாதையில் செஞ்சேனை, கொரில்லாப்படைகள் இவற்றோடு தளப்பிரதேசங்களை நிறுவுவதும் வளர்ப்பதும் அரைக்காலனிய-அரைநிலப் பிரபுத்துவ இந்தியாவின் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான விவசாயிகளது போராட்டத்தின் மிக உயர்ந்த வடிவமாகவும், விவசாயிகளது போராட்டத்தின் தவிர்க்க முடியாத விளைவாகவும் நாடு பூராவுமான புரட்சியின் பேரெழுச்சியை சந்தேகமின்றி துரிதப்படுத்தும் மிக முக்கிய அம்சமாகவும் கொண்டுள்ளோம்.

மக்கள்யுத்தப் பாதையின் மிக முக்கியமான தளப்பிரதேசம் பற்றிய இந்த அம்சத்தைப் பற்றி சந்தேகித்து 'நாம் எவ்வளவு காலத்திற்குச் செங்கொடியை உயர்த்தி வைத்திருக்க முடியும்' என்ற கேள்வியை சிலர் எழுப்பியபோது சீனாவில் சிகப்பு அரசியலதிகாரத்தின் தோற்றத்துக்கும் அது நிலைத்திருப்பதற்குமான ஐந்து காரணங்களைக் காட்டி மாவோ விடையளித்தார். அவை: (i) ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான பிளவுகளும், யுத்தங்களும் ஒருபோதும் நிற்கமாட்டாததாக இருந்தது. (ii) தளப்பிரதேசங்கள் நிறுவப்பட்ட இடங்கள் 1924-27 முதல் பெரும் ஜனநாயகப் புரட்சியின் தாக்கத்துக்கு

உள்ளானவையும், தொழிலாளர்களும் விவசாயிகளும் ஸ்தாபன ரீதியில் திரட்டப்பட்டு போராட்டங்களினூடே திரண்டிருப்பதும், ஜனநாயக அரசியல் பயிற்சிக்கு ஊடாகச் சென்றதும், தொழிலாளர் விவசாயி மக்கள்திரளின் செல்வாக்கின் கீழ் வந்ததான தேசியப் புரட்சிகர சேனையிலிருந்து பிளவுபட்டு வந்ததும், எனவே ஜனநாயகப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டதாக செஞ்சேனை இருந்ததும். (iii) பரந்துபட்ட மக்களது போராட்டத்தாலும் ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான பிளவும் யுத்தங்களும் தொடர்ந்து தேசவிசாலப் புரட்சிகர நிலைமை அபிவிருத்தியடையச் செய்வது. (iv) தொழிலாளர் - விவசாயி மக்கள்திரளின் இயக்கங்கள் தீவிரமாக உள்ளபோதும் கூட போதிய பலமுடைய கிரமமான செஞ்சேனையைப் பெற்றிருப்பது. (v) பொதுவுடமைக்கட்சி ஸ்தாபனம் பலமாகவும் அதன் கொள்கை சரியாகவும் இருப்பது.

சீனாவில் சிகப்பு அரசியலதிகாரம் தோன்றுவதற்கும் நிலைத்திருந்ததற்குமான இந்த ஐந்து காரணங்கள் நமது நாட்டில் இல்லையாதலால், குறிப்பாக ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான பிளவும் யுத்தமும் இல்லாதிருப்பதும், மத்தியத்துவப்படுத்தப்பட்ட அதிகார வர்க்க ராணுவ அரசு எந்திரத்தைப் பெற்றிருப்பதும், ஓரளவு சீரான பொருளாதார வளர்ச்சியும் அதன் பாதிப்புகளும் உள்ளதாலும் குறிப்பாக தளப்பிரதேசம் பற்றிய கோட்பாடுகளும், பொதுவாக மக்கள் யுத்தப்பாதையும் நமது நாட்டுக்குப் பொருந்தாது என்று சிலர் வாதிடுகின்றனர். சீனாவில் சிவப்பு அரசியல் அதிகாரம் தோன்றுவதற்கும் நீடிப்பதற்கும் காரணங்களாக இருந்தவைகளில் முதல் காரணம் இன்றைய தேசிய, சர்வதேசிய நிலைகளில் தோன்றக்கூடியதே ஆகும். பிற காரணிகள் நாம் இனி உருவாக்க வேண்டியவையாகவும் அதற்கான சாத்தியப்பாடுகளும் இருக்கின்றன.

ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான பிளவுகளும் யுத்தங்களும் சீனத்திற்கே உரித்தான விசேஷமான நிலைமைகள் என்றும் தளப்பிரதேசங்கள் நிறுவப்படுவதும் நிலைத்திருப்பதும்கூட அதனாலேயே முன்பும், வேறு நாடுகளிலும் இல்லாத விசேஷமான ஒன்றென்றும் மாவோ கூறினார். ஆனால் பின்னர் சர்வதேசப் பாட்டாளி வர்க்க அனுபவங்கள் தளப்பிரதேசம் பற்றிய கோட்பாடுகள் எல்லா காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடுகளுக்கும் பொருந்தும் என்பதை நிரூபித்தன. வியட்நாம், லாவோஸ் கம்பூச்சியா இன்னும் பிற தென்கிழக்காசிய நாடுகளும் ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளும் இதை நிரூபித்தன. எனவேதான் மக்கள் யுத்தப் பாதையும் குறிப்பாக தளப்பிரதேசம் பற்றிய கோட்பாடும் குறித்து—சீனத்துக்கே விசேஷமானது என்பது—தேவையான மாற்றங்களை மாவோ செய்து கொண்டார். எனவேதான் ஆளும் வர்க்கத்திற்குள் பிளவும் யுத்தமும் சாத்திய மற்ற ''நேரடியான ஏகாதிபத்திய ஆட்சியின் கீழான காலனிகளில் சுதந்திர ஆட்சிகளை ஸ்தாபிக்கும் பிரச்சினையில் தோழர் மாசேதுங் அவர்கள் 1928ல் கொண்டிருந்த கருத்து மாறுபட்ட

நிலைமைகளின் காரணமாக மாற்றமடைந்துள்ளது'' என்பதை சீனாவில் சிவப்பு அரசியலதிகாரம் இருக்க முடிவது ஏன் என்ற கட்டுரைக் குறிப்புகளில் காணலாம். (மாவோ தேர்ந்தெடுக்கப் பட்ட ராணுவப் படைப்புகள், பக் 19) இதே போன்றுதான் முதலாளித்துவ முறையிலான மத்தியத்துவப் படுத்தப்பட்ட அதிகார வர்க்க-ராணுவ சர்வாதிகார அரசு எந்திரமும் அதனிடம் நவீன சாதனங்கள் இருப்பதும் காரணமாக மக்கள் யுத்தப்பாதையோ, தளப்பிரதேசம் பற்றிய கோட்பாடோ நமது நாட்டுக்குப் பொருந்தாது என்பதும் தவறாகும். அதிநவீனப் படுத்தப்பட்ட சாதனங்களையும், ராணுவத்தையும் பெற்றிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் அதன் அடிவருடிகளுக்கெதி ராகவும் மக்கள் யுத்தப்பாதையும், தளப்பிரதேசக் கோட்பாடும் வெற்றிகரமாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பதை தென்கிழக்காசிய நாடுகளின் அனுபவங்கள் காட்டுகின்றன.

எனவே இந்தியப் புரட்சியின் பணி, அதன் விசேஷமான நிலைமைகளுக்கேற்ப விசேஷமான அடிப்படை அம்சங்களைக் கண்டறியவும், அதன் அடிப்படையில் சிகப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்கும், நீடிக்க வைத்து விரிவடைவதற்கு மான அகநிலைக் கூறுகளை வளர்ப்பதும், புறவயமான நிலைமைகள் முதிர்ச்சியுறும்போது—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகும்போது—தாக்குதல் போர்த்தந்திரங்களை முன்வைக்கும் போது—தளப்பிரதேசங்களை நிறுவவும் வளர்க் கவும் வேண்டும். ஆனால் 'இடது' சந்தர்ப்பவாதிகளோ இந்தியா வின் விசேஷ நிலைமைகளையும் அதனால் பெறப்படும் இந்தியப் புரட்சியின் விசேஷமான அடிப்படை அம்சங்களையும் முற்றாகப் புறக்கணிக்கின்றனர். இதன் விளைவுகளைத் தவிர்க்க முடியாமல் அனுபவிக்க வேண்டியிருந்தது. இருப்பினும் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்கள் இன்னும் அதே தவறிழைக்கின்றனர். சில குழுக்கள் இந்தியாவின் விசேஷ நிலைமைகளை மட்டும் கூறுகின் றன. சில குழுக்கள் (இ.பொ.க. (மா-லெ) மக்கள் யுத்தக்குழு) இவை ''மேற்கொள்ள வேண்டிய சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அவசியத்தை சுட்டிக்காட்டு''வதாகச் சொன் னாலும் என்னவென்று குறிப்பிடுவதில்லை. (பார்க்க: நமது போர்த்தந்திர வழி, பக் 6) இந்தியாவின் விசேஷ நிலைமைகள் மேற்கொள்ள வேண்டிய சில முன்னெச்சரிக்கையான நடவடிக்கை களை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. மாறாக, ஏற்கனவே குறிப் பிட்ட விசேஷமான இரு அடிப்படை அம்சங்களையும் அவற்றுக் கேற்ற நடைமுறைகளையும் கோருகின்றன.

இக்கோணத்திலிருந்து பார்க்கும்போது இந்திய நிலை மைகளில் சிவப்பு அரசியலதிகாரம்—தளப்பிரதேசங்கள் நிறுவ வும், நிலைநிறுத்தவும் வளர்க்கவும் பின்வரும் நிபந்தனைகள் இருக்கவேண்டும்.

1. சமரச சக்திகள் தனிமைப்படுத்தப்பட்டு முடமாக்கப் பட்டு குறிப்பிட்ட பகுதிகளிலாவது ஆளும் வர்க்கங்களுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும், குறிப்பாக, விவசாயிகள் மற்றும்

தொழிலாளர்கள் ஆகிய மக்களுக்கும் இடையிலான நேரடியான மோதல் இருக்கவேண்டும். ஆளும் வர்க்கங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகள் முற்றிப் பிளவுகளும், ஸ்திரமற்ற தன்மையும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடும், பிளவும் வெடித்து அரசியலதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவோ கைப்பற்றவோ நாடாளுமன்ற முறைகளைத் தவிர வேறு முறைகளைக் கையாள்வது, ஒரு பிரிவுக்கெதிராக மற்றொரு பிரிவு ஆட்சிக்கவிழ்ப்பு கலவரங்கள் போன்ற பலாத்கார நடவடிக்கைகளில் இறங்குவது. இது வளர்ந்து ஆயுதந் தாங்கிய மோதலாக யுத்தமாக வெடிப்பது மிகவும் சாதகமான சூழ்நிலையாகும்.

2. முக்கியமாக ஆயுதமேந்திய உள்ளூர் எழுச்சிகள் உட்பட தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பரந்துபட்ட மக்கள் ஸ்தாபன ரீதியில் திரட்டப்பட்டு பல்வேறு மக்கள்திரள் இயக்கங்களில் குறிப்பாக அரசியல் போராட்டங்களில் பயிற்சி பெற்ற மக்கள்திரள் ஆதரவு. மக்களின் ஸ்தல அரசியலதிகாரத்துக்கான நிறுவனங்களான — போராட்டக் கமிட்டி மற்றும் எழுச்சிக்கான உறுப்பாக இருந்து சோவியத்துக்களாக மாறுபவை — அமைப்பதற்கும் உறுதிப்படுத்தவும் முக்கியமாக மக்களைத் தட்டியெழுப்ப வேண்டும். குறிப்பாக ஆயுதமேந்திய உள்ளூர் எழுச்சியினூடாக வரும் அரசியலதிகார அமைப்புகளும், ஆயுதப் படைகளும் — செஞ்சேனையும் — செங்காவலர்களும்— தொழிலாளர்கள் விவசாயிகள் செல்வாக்கிலுள்ளதாக இருப்பது.

3. போதிய பலமுடைய கிரமமான செஞ்சேனை ஒன்று இருப்பது தளப்பிரதேசம் நிறுவுவதற்கான போராட்டத்தினூடாகப் பிறந்து அதைக் காக்கும் உயிர் நாடியான ஆயுதமாக இது விளங்கும். பாட்டாளி வர்க்க கட்சியின் குழுக்களை கம்பெனி அடிப்படையில் கொண்டுள்ளதாக அதனால் தலைமை தாங்கப்படுவதாக, தொழிலாளர்கள் விவசாயிகள் செல்வாக்குடையதாக, ஜனநாயகத்தைக் கடைப்பிடிப்பதாக உள்ள செஞ்சேனை இருக்கவேண்டும். செஞ்சேனை அதன் துணை உறுப்புகளாக மக்களது ஆயுத எழுச்சிப் படைப்பிரிவுகள் செங்காவலர்களுடன் கிரமமான செஞ்சேனை உள்ளூர் கொரில்லாப்படை என்று இரு பிரிவுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

4. நாடு தழுவிய அளவில் புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதும்—புரட்சி அலை ஓங்குவதும்—தொடர்ந்து அது அபிவிருத்தி அடைவதும், ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான தற்காலிக ஒற்றுமையும், ஸ்திரத்தன்மையும் இடையிடையே தோன்றினாலும் அனேக காலகட்டங்களில் பிளவும் ஸ்திரமற்ற தன்மையும் இருப்பதாலும் பரந்துபட்ட மக்களது போராட்டங்களாலும் இது நீடிக்கவேண்டும். குறிப்பாக இந்திய நிலைமைகளில் நகர்ப்புறங்களிலும் பரந்து விரிந்த கிராமப்புறங்களிலும் அரசியல் போராட்டங்களை உக்கிரமாக நடத்துவதால் இந்த நிலைமைகளைத் தோற்றுவிக்க வேண்டும்.

5. பிளவுபடாத தலைமையைக் கொண்ட பலமான கட்சி ஸ்தாபனமும் அதன் சரியான கொள்கையும் புரட்சியின் முன்னுள்ள கடமைகளை முழுமையாகவும் தொலைநோக்கோடும் புரிந்துகொண்டு மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனை அடிப்படையிலான சரியான அரசியல் மற்றும் ராணுவ மார்க்கங்களால் வழி நடத்தப்படும் உறுதியான கட்சி அமைப்பு.

இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதால் மட்டுமே அதாவது இன்றைய நிலைமையிலிருந்து புரட்சிகரக் கட்சியை ஐக்கியப்படுத்த பலமானதாக வளர்த்து பரந்துபட்ட; மக்களைத் தட்டியெழுப்பி, அணிதிரட்டி, ஸ்தாபனப்படுத்தி பல்வேறு அரசியல் போராட்டங்களினூடே வளர்த்து—புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகும்போது புரட்சி அலை ஓங்கி வீசும்போது—ஆயுதமேந்திய உள்ளூர் எழுச்சிகளினூடாகத்தான் தளப்பிரதேசங்களும்—அரசியல் அதிகாரத்துக்கான நிறுவனங்களும்—செஞ்சேனையும் ஸ்தாபிக்கப்பட்டு நிலை நிறுத்தப்படும் வளர்க்கப்படும்.

சிவப்பு அரசியலதிகாரத்தை நிறுவிக் காக்கவும் வளர்க்கவும் மேற்கண்ட ஐந்து இன்றியமையாத நிபந்தனைகளுடன் மேலும் முக்கியமான இரு நிபந்தனைகள் இருப்பதும் அவசியமாகும். முதலாவதாக தரையமைப்பு. நான்குபுறங்களிலும் எதிரிகளால் சூழப்பட்டுள்ள இடங்களாக இருப்பினும் தளப்பிரதேசங்களை நிறுவுவதற்கும் காப்பதற்கும் அதன் தரையமைப்பு காரணமாக மலைகளும் அடர்ந்த காடுகளும் மிகச்சிறந்த நிலைமைகளைத் தருகின்றன; கொரில்லா யுத்தமுறைக்கு மிகவும் சாதகமான இந்த தரையமைப்பு அதற்கான தந்திரோபாயத்துக்கு ஏற்ற போர்க்களமாக அமைகின்றது. கடல், ஏரி, ஆறுகள் முகத்துவாரங்கள் கூட சமவெளிகளைக் காட்டிலும் அதிக வாய்ப்புகளைத் தரும்; ஆனால் மலைப்பகுதிகள் மற்றும் அடர்ந்த காடுகளையும் காட்டிலும் குறைவே. இதே நிலைமைகளை பரந்த பிரதேசங்களில் எண்ணிறந்த மக்கள் செல்வாக்கைப் பெறுவதன் மூலம் ஈடுகட்ட முடியுமாதலால் அந்த வளர்ச்சியிருக்கும்போது சமவெளிகளிலும் தளப்பிரதேசங்களை நிறுவ முடியும். காக்க முடியும். ஆனால் ஆரம்ப காலங்களில் எதிரிகளின் யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த மின்நிலையங்கள், அணைகள் தொழில் நிலையங்கள் போன்றவற்றிற்கு அருகில் இருக்ககூடாது.

இரண்டாவதாக, சிவப்பு அரசியலதிகாரம் நிலைத்து நிற்பதற்குப் போதுமான பொருளாதார வளங்கள்; எதிரியின் சுற்றிவளைப்பிற்குள் அவசியப் பொருட்களின் பற்றாக்குறை மக்கள் திரளினதும் செஞ்சேனை வீரர்களினதும் வாழ்வையும் மிகவும் பாதிக்க கூடியது. பொதுமக்களின் வாழ்வை சுலபமாக்கவும் செஞ்சேனைக்குப் போதிய பண்டங்களைப் பெறவும் ஏற்றவகையில் பொருளாதார சுய தேவையுடையதாக இருக்க வேண்டும். எதிரியின் சுற்றிவளைப்பிற்குள் தாக்குப்பிடித்து நிற்பதோடு விடுதலைப் பிரதேசங்கள் மற்ற பகுதிகளுடனான வர்த்தகம்

முதலான தொடர்புகளைக் காக்கவும் ஏற்பாடிருக்க வேண்டும். இல்லையேல் எதிரியின் ஆட்சி ஸ்திரமாக இருக்கும்போது, ஒப்பு நோக்கில் நீண்டகாலத்தின்போது பல கஷ்டங்கள் ஏற்படும்.

இந்த நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யக் கூடிய—அதற்கான அதிகபட்ச வாய்ப்புடைய — பகுதிகளை உணர்வுபூர்வமாகத் தெரிந்தெடுத்து தயாரிக்கப்பட்ட உள்ளூர் ஆயுதமேந்திய எழுச்சியினூடாக முதலில் கொரில்லா மண்டலமும், செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகளும் தோற்றுவிக்கப்படும்; பின்னர் அரசியலதிகாரத்தை உறுதிப்படுத்தியும் விவசாயப் புரட்சியை முன்னெடுத்துச் சென்றும் கொரில்லா மண்டலம் வளர்த்தெடுக்கப்பட்டு தளப்பிரதேசமாகும். அழித்தொழிப்பு யுத்தத்தின் மூலம், கொரில்லா யுத்தத்தின் மூலம், கூடுதலான சக்தியை ஒன்று செறிப்பதன் மூலம் எதிரியின் படையைவிட மேலாண்மை பெற்று கொரில்லாப் படைப்பிரிவுகள் கிரமமான செஞ்சேனையாகவும் வளர்க்கப்படும். இவையே தளப்பிரதேசம், கொரில்லாப் படைகள் மற்றும் செஞ்சேனை ஆகியவை ஸ்தாபிக்கப்படும் விதியாகும்.

கொரில்லாப் பிராந்தியங்களின் வளர்ச்சிப் போக்கில்தான் தளப்பிரதேசங்கள் ஏற்படுத்தபபடுகின்றன. செஞ்சேனையின் கொரில்லாப்படைப் பிரிவுகள் பலம் வாய்ந்தவையாக இருக்கும் போது அரசியலதிகாரம் நமது கையிலும் இல்லாதபோது எதிரிகளின் ஆதிக்கத்திலும் மாறிமாறி வருகின்ற இரட்டை அதிகாரமுடைய மண்டலங்களே கொரில்லா மண்டலங்களாகும். அவசியமான கொரில்லாப் போர்முறையின் மூலம் எதிரியின் துருப்புகள் பெருமளவு கொல்லப்பட்டுவிட்ட பின்னர், எதிரியின் அரசதிகாரம் முற்றாக அழிக்கப்பட்ட பின்னர், நடவடிக்கையில் ஈடுபட மக்கள் அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்டு தயாராக உள்ள நிலையில் உள்ளூர் மக்கள் ஆயுத சக்திகள் அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர் கொரில்லாப் பிராந்தியம் தளப்பிரதேசமாக மாறுகிறது. இது கடினமான ஒரு வளர்ச்சிப்போக்காகும். பிரதானமாக பின்வரும் மூன்றின் மேல் இது சார்ந்திருக்கிறது (i) எவ்வளவு எதிரிப்படைகளை அந்தப் பிரதேசத்தில் நாம் அழித்திருக்கிறோம் (ii) எவ்வளவு தூரம் நேரடி நடவடிக்கையில் ஈடுபட அந்தப் பகுதி மக்களைத் தட்டியெழுப்பி உள்ளோம்; அதைச் சுற்றிலுமுள்ள பரந்து விரிந்த கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் பரந்துபட்ட மக்களது அரசியல் போராட்டங்கள் பெருமளவு வளர்ந்திருப்பது.

முதலில் கொரில்லாப் பிராந்தியம் உருவாக்கப்படுவது அந்தப் பகுதியில் ஒரு பரந்த ஆயுதமேந்திய எழுச்சி மூலம் உருவாக்கப்படும். அதாவது தளப்பிரதேசம் அமைக்கின்ற பகுதியில் ஊன்றி நின்று ஒரு குறிப்பிட்ட காலம் வேலை செய்து பரந்த அரசியல் செல்வாக்கை உருவாக்க வேண்டும்; பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளில் மக்களைத் திரட்டி பல்வேறு அரசியல் போராட்டங்களில் ஈடுபடுத்தி அவர்களை உள்ளூர் ஆயுதமேந்

திய எழுச்சிக்குத் தயார் செய்யவேண்டும்; ஆயுதமேந்திய விவசாயப் புரட்சியை மையமாக வைத்து போராட்டங்களை நாம் நெறிப்படுத்த வேண்டும்; போராட்டங்களின் தொடக்கத்திலிருந்தே போராட்டங்களில் ஊக்கமாக பங்கெடுக்க முன்வருபவர்களையும் அரசியல் ரீதியில் முன்னேறியவர்களையும் கொண்டு ஆயுதமேந்திய ரகசிய தற்காப்புக் குழுக்களையும் அமைப்புகளையும் கட்சியானது உருவாக்கும்; ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்ட மக்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற் போலவும் போராட்டத் தேவைகள் கோருகின்றதின் அடிப்படையிலும் ரகசிய தற்காப்பு குழுக்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு உருவாக்கப்படும்: இந்தக் குழுக்கள் மக்கள்திரள் போராட்டங்களுடன் இணைந்து தற்காப்பு பணிகளில் ஈடுபடும்; உள்ளூர் அளவில் விவசாயிகள் தற்காப்புக் குழுவையும் அமைக்க வேண்டும்.

இவ்வாறு ஒரு பகுதியில் நாம் போராட்டத்தை வளர்த்துச் செல்வதை நாடு தழுவிய புரட்சிகர எழுச்சி அலை ஓங்குவதோடு இணைத்துச் செய்யவேண்டும். புரட்சிகர எழுச்சி அலை ஓங்கியடிக்கும்போது அந்தப் பகுதியில் போராட்டங்களை மேலும் மேலும் தீவிரமாக எடுத்துச் செல்ல வேண்டும. புரட்சிகர அலை பின்வாங்கும் போது நாம் ஏற்கனவே அடைந்த பலன்களை தக்கவைத்துக் கொள்வதையும் உறுதிப்படுத்துவதையும்தான் செய்ய முடியும். அத்துடன் எதிர்காலத்தில் போராட்டங்களுக்கு மக்களைத் தயார்செய்ய சக்திகளைப் பேணிப் பகது காக்க வேண்டும்.

ஒரு கொரில்லாப் பிராந்தியம் அமைக்கப்படும் பகுதியில் தான் செம்படை ஒன்று பெரும்பாலும் ராணுவ நடவடிக்கையைக் நெடுண்ட படையாக அமைக்கப்படுகிறது. இது கொரில்லாப் பிராந்தியம் முழுவதையும் தழுவியதாக இருக்கும். இந்தப் படை மட்டும் இல்லாமல் உள்ளூர் அளவுகளில் செங்காவலர் குழுக்களும் கொரில்லாக் குழுக்களும் புரட்சிகர கலக எழுச்சிக் குழுக்களும் இருக்கும். சிறிய நகர்ப்புறங்களில் உள்ள அரசாங்கத்தைப் பாதுகாப்பது, எதிரி தோன்றும் போது செம்படைக்கு உதவுவதும்தான் புரட்சிகர கலக எழுச்சிக் குழுக்களின் பணிகளாகும். கிராமங்களில் உள்ளூர் தற்காப்பு குழுக்கள் இருக்கும். புரட்சிகர கலக எழுச்சிக் குழுக்கள் சிறிய நகர்ப்புறங்களில் செய்யும் வேலைகளை இது கிராம அளவில் செய்கிறது. செங்காவலர் குழுக்கள் மக்கள் திரளின் ஆயுதந்தரித்த குழுக்களாகும். இவற்றின் உறுப்பினர்கள் ஒழுங்கான உற்பத்தி வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஆயுதமோதல்களில் மக்களின் பங்கு அதிகரிக்கும் போதும் முறையான ஆயுதமேந்திய கொரில்லாக் குழுக்களை அமைக்க வேண்டும். இந்தக் குழுக்கள் தற்காப்புக் குழுக்களைவிட அரசியல் உணர்வு மிக்கதாகவும் நன்கு ஸ்தாபனமாக்கப்பட்டவையாகவும் இடம் விட்டு இடம் பெயரக்கூடியதாகவும் இருக்கும். இந்த கொல்லா குழுக்கள் கொரில்லா முறைகளைக் கையாண்டு அரசின் ராணு

வத்தை தாக்கும்; ஆயுத மோதல்களை உயர்ந்த கட்டத்துக்கு எடுத்துச்செல்லும், தமக்குவேண்டிய ஆயுதங்களை எதிரி ராணுவத்திடமிருந்து பறித்துக் கொள்ளும். கொரில்லாக்குழு நடவடிக்கைகள் இந்தக் கட்டத்தில் பிரதானமாக இருக்கும்.

பின்னர் இதன் வளர்ச்சிப்போக்கில் கீழ்க்கண்ட நிலைமைகள் எழும்போது ஒரு உள்ளூர் ஆயுதமேந்திய எழுச்சி (ARMED UPRISING) மூலம் அந்தப் பகுதியில் அரசியலதிகாரத்தை வென்றெடுப்போம்: (1) மக்களின் புரட்சிகர உத்வேகம் நிரம்பி வழியும் போது, நடவடிக்கைக்கான நமது முழக்கங்களையும் ஆணைகளையும் விட மக்கள்திரள் இயக்கங்கள் முன்னேறி இருக்கும்போது; (2) எதிரியின் முகாமில் நிச்சயமற்ற தன்மையும் குழப்பமும் சீரழிவும் ஏற்பட்டு எதிரியின் முகாம் சின்னாபின்னமடைவது ஒரு உச்சநிலையை அடையும்போது—எதிரி முகாமை விட்டு ஓடி விடுபவர்கள் கணக்கிலடங்காமல் பெருகும்போது; சொல்லிக்கொள்ளப்படும் நடுநிலையாளர்கள் என்பவர்கள் எதிரியிடமிருந்து தீர்மானகரமாக முறித்துக்கொண்டு பாட்டாளி வர்க்கத்துடன் கூட்டுறவை நாடும்போது; இவையனைத்தின் விளைவாக எதிரியின் ஒடுக்குமுறை நிர்வாக எந்திரங்கள் செயல்படாமல் ஸ்தம்பித்து பயனற்றவையாகி இன்னும் இதுபோன்றவையும் நடக்கும்போது; இவ்வாறு பாட்டாளி வர்க்கமானது தனது உரிமையைப் பிரயோகிக்கும் வகையில் பாதை தங்குதடையின்றி திறந்து வைக்கப்படும் நிலை ஏற்படும்போது; (3) நமது அரசியல்படை கட்டப்பட்டு விட்ட முதிர்ச்சியான நிலைமைகளில் மேற்கூறிய நிலைமைகளில் கனிந்து கட்சியானது தாக்குதலுக்கு தயாராகும்போது எதிரிமுகாம் மற்றும் நமது சக்திகளின் கணக்கீட்டைத் துல்லியமாக எடுத்து, தளப்பிரதேசம் அமைக்கும் பகுதி மற்றும் அதன் சுற்று வட்டாரங்களிலும் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஓர் ஆயுதமேந்திய எழுச்சிக்கு இட்டுச்செல்லும் முதல் அடியைத் தொடுக்கவேண்டும். அதாவது பரந்துபட்ட மக்களுக்கு கண்கூடாகத் தெரியக்கூடிய பொருத்தமான காரணமாகத் திகழக்கூடிய அரசு நடவடிக்கையோ அல்லது ஸ்தல முக்கியத்துவ மிக்க ஏதோ ஒரு தன்னியல்பான எழுச்சியையோ முதல் அடியாகக் கொண்டு தாக்குதலைத் தொடங்கவேண்டும். ஒரு பொது அரசியல் வேலைநிறுத்தமாகவோ அல்லது ஒரு பொது அரசியல் ஆர்ப்பாட்டமாகவோ தொடங்கி அதை வளர்த்து ஆயுதமேந்திய எழுச்சி என்ற உச்ச கட்டத்திற்கு எடுத்துச் சென்று கொரில்லா மண்டலத்தை நிறுவவேண்டும். இந்த ஆயுதமேந்திய எழுச்சியில்தான் படையும், கொரில்லாப் பிராந்திய அரசாங்கமும் உருவாகின்றன. முதல் அடியாகத் தொடுக்கப்படுகின்ற பொது அரசியல் வேலைநிறுத்தம் அல்லது பொது அரசியல் ஆர்ப்பாட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் ஆயுதமேந்திய எழுச்சியை நடத்தக்கூடிய போராட்ட அமைப்புகளும் பின்னர் பரந்துபட்ட மக்களின் கூட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரத்திற்கான அமைப்புகளும் (சோவியத்துக்கள்) நிறுவப்படுகின்றன. ஆயுதமேந்திய எழுச்சி சமயத்தில்தான் சிவப்பு அரசியலதிகாரத்திற்கான படையாக ஏற்கனவே பரந்த பகுதியில்

செயலாற்றிக் கொண்டிருக்கும் கொரில்லாக் குழுக்கள், ரகசிய தற்காப்புக் குழுக்கள், செங்காவலர் குழுக்கள், புரட்சிகர கலக எழுச்சிக் குழுக்கள் மற்றும் எதிரி ராணுவத்திலிருந்து வென்றெடுக்கப் பட்டவர்களைக் கொண்டு செஞ்சேனையின் கொரில்லாப் படைப் பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன.

கொரில்லா மண்டலங்களைத் தளப்பிரதேசங்களாகவும் செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகளை கிரமமான செஞ்சேனையாகவும் ஆக்குவது பின்வரும் இரு கோட்பாடுகளிலான கொள்கையால் நிறைவேற்றப்படும்: முதலாவதாக ராணுவ செயற்பாடுகளில் எதிரியை சமாளிப்பதற்கும், கிட்டத்தட்ட சமநிலை அளவுக்காவது ஆயுதமேந்திய சக்திகளை ஒன்று செறிப்பது. ஆயுதமேந்திய சக்திகளை ஒன்று குவிப்பதின் மூலமாகத்தான் செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகள் ஒப்புநோக்கில் பலம் வாய்ந்த, மேலாண்மை பெற்ற எதிரி சக்திகளை அழித்தொழிப்பதும் சிறு நகரங்களையும் சந்தை நகரங்களையும் கைப்பற்றுவதும், அதன் பின்விளைவாக சங்கிலித்தொடர் போன்று அநேகமான கிராமங்களில் ஒரு புரட்சிகர ஆட்சியை நிறுவுவதற்கு பரந்துபட்ட பெரும் மக்கள்திரளை எண்ணிறந்த அளவு அணிதிரட்டவும் முடியும். இவ்வாறு ஆயுதமேந்திய சக்திகளை ஒன்று குவிப்பதன் மூலம் தான் கொரில்லா மண்டலங்கள் நீடிக்கவும் வளரவும் முடியும்; மாறாக, அவற்றைக் கலைப்பதும் அல்லது துண்டுதுண்டான இயங்கு நடவடிக்கைகளும் உண்மையில் பெரும்பாலும் தோல்விக்கே இட்டுச்செல்லும். இந்தக் காலகட்டத்தில் மிகவும் சாதகமான சூழ்நிலைமைகளில் ஆகப் பெருமளவில் பரந்துபட்ட மக்கள் திரளை வென்றெடுப்பது மற்றும் கொரில்லா மண்டலங்களை விரிவாக்கவும் உறுதிப்படுத்தவுமான நோக்கத்தோடு வெவ்வேறு தூர அளவுகளில் சக்திகளைப் பிரிப்பது சில சமயங்களில் வெற்றிகரமாக அமையலாம். புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது இதற்கு மாறாக வடிவது என்ற பருண்மையான நிலைமைகளைப் பொறுத்து போர்த்தந்திர போரியக்கம் மற்றும் நடவடிக்கைகள் அமையும். முதல்வகை நிலைமை இருக்கும் போது கொரில்லா மண்டலத்தை விரிவாக்குவதும் முன்னேற்றுவதும் தளப்பிரதேசமாக வளர்ப்பதும் ஒப்பீட்டு நோக்கில் துணிச்சல் மிக்கதாகவும், விரைவானதாகவும் இருக்கும்; இரண்டாவது வகை நிலைமை இருக்கும்போது சக்திகளைப் பிரிப்பதும், உள்ளூர் வேலைகளைப் புறக்கணிப்பதும் தவறு; துணிச்சல் மிக்க விரைவான விரிவாக்கம், முன்னேற்றம் ஆகியவை இருக்காது; இந்தக் கொள்கையிலேயே செஞ்சேனையின் போரியக்க மற்றும் போர்த்தந்திர நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக ஸ்தல வேலைகளில், கொரில்லா மண்டலங்களை உறுதிப்படுத்துவதற்கான வேலைகளில் கவனத்தைக் குவிப்பது. அதாவது விவசாயிகள் தொழிலாளர்களது ஜனநாயக அரசை நிறுவுவது, விவசாயப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வது, செஞ்சேனையையும் ஆயுதமேந்திய மக்கள் சக்திகளையும் பலப்படுத்துவது மற்றும் பாட்டாளி வர்க்க

கட்சியை உறுதிப்படுத்தி விரிவாக்குவது. அதற்காகப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வது: (1) கொரில்லாப் பிராந்திய காலகட்டங்களில் தொழிலாளர்கள், விவசாயிகள் பிற பகுதி மக்கள் மற்றும் ராணுவ வீரர்களது பிரதிநிதித்துவ சபைகள் மற்றும் நிர்வாகக் கமிட்டி என்ற அரசாங்க வடிவிலான ஒரு ஜனநாயக ஆட்சியை எல்லா மட்டங்களிலும் நிறுவுவது. மக்கள் திரள் கூட்டங்களில் அரசாங்கங்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் அல்லது காங்கிரசுகள் நடத்தி அரசாங்க அதிகாரத்தைப் பெறும் நிர்வாகக் கமிட்டிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். யதார்த்தத்தில் அரசியல் போராட்டத்துக்கான மற்றும் எழுச்சிக்கான தலைமை அமைப்புகளிலிருந்து பின்னர் அரசியலதிகாரத்துக்கான அமைப்பாக மாறும் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களது சோவியத்துக்களே ஒரு ஜனநாயக குடியரசு ஆட்சியை நிறுவும். அதன் வர்க்க சேர்க்கை குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப வகுக்கப்படும் போர்த்தந்திர அரசியல் நடத்தை வழியால் தீர்மானிக்கப்படும். அந்த இடைக்கட்டத்துக்கான குறித்த திட்டத்தையே அது அமுல்படுத்தும் (2) விவசாயப் புரட்சியின் பதாகையின்கீழ், குறித்த திட்டத்தின் வழிகாட்டுதலின்கீழ் அதன் ஒரு பகுதியாக நிலப்பிரபுக்களது நிலங்கள் கைப்பற்றப்பட்டு பஞ்சாயத்து அடிப்படையில் முழுக்கவும் பங்கீடு செய்யப்படும். நிலங்களைப் பறிமுதல் செய்வதில் குறிப்பிட்ட இடைக்கட்டத்தின் குறித்த திட்டத்தால் மற்றும் போர்த்தந்திரத்தின் அரசியல் நடத்தை வழியால் வரையறுக்கப்பட்ட பிரதான எதிரிகளது நிலங்களை மட்டும் கைப்பற்றுவதும், சமரச சக்திகளைத் தனிமைப்படுத்தி முடமாக்குவதும், இடைத்தட்டு வர்க்கங்களை வென்றெடுப்பதும் கொள்கையாக இருக்க வேண்டும்.

3) தொழிலாளர்கள் விவசாயிகளது ஒரு புரட்சிகர ஆயுதமேந்திய சக்திகளைக் கட்டியமைப்பது; அரசியல் போதமளிப்பது படையில் கட்சியின் தலைமையை உத்திரவாதம் செய்யும் வகையில் கம்பெனி அடிப்படையில் கட்சிக் கிளைகளையும், பிரதிநிதிகளையும் கொண்ட முறையை ஏற்படுத்துவது, வெவ்வேறு மட்டத்தினருக்கிடையே சமத்துவம் மற்றும் ஜனநாயக உரிமை உடையதாக—ராணுவ அதிகாரத்துவத்தை எதிர்ப்பது—அமைப்பது எதிர்ப்புரட்சியாளர்களை ஒடுக்கவும், ஸ்தல அரசாங்கங்களைக் காக்கவும், எதிரியுடனான மோதலில் செஞ்சேனைக்கு உதவும் ஸ்தல ஆயுதமேந்திய சக்திகளை பயிற்றுவிப்பது, எதிரித் துருப்புகள் சிறைப்படுத்தப்படும்போது கைதிகளை விடுவிப்பது, காயமுற்றோருக்கு மருத்துவ சிகிச்சை உட்பட ஒரு சரியான கொள்கையைக் கடைபிடிப்பது (4) பாட்டாளி வர்க்க கட்சிக் கிளைகளை மேலும் விரிவாக்கி, உறுதிப்படுத்துவது, 'இடது' வலது சந்தர்ப்பவாத விலகல்கள் தோன்றும்போது முறியடிப்பதும் பாட்டாளி வர்க்க சித்தாந்த தலைமையை உறுதியாக நிறுவுவதும், உட்கட்சி வாழ்வில் பாட்டாளி வர்க்க அணுகுமுறையைப் பின்பற்றுவது ஆகியவற்றைப் பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சியைக் கட்டி

வளர்க்க கேந்திரமான சித்தாந்த மற்றும் ஸ்தாபனப்பணிகளாக மேற்கொள்வது.

மேற்கண்ட இரு அடிப்படை நியதிகள் மற்றும் அவற்றின் அடிப்படையிலான நடைமுறை பற்றிய கொள்கைகள் மட்டுமே சரியானவை. இவற்றின் மூலம் மட்டுமே கொரில்லா மண்டலங் களைத் தளப்பிரதேசங்களாகவும், செஞ்சேனை கொரில்லாப் படைப்பிரிவுகளை கிரமமான செஞ்சேனையாகவும் கட்டி வளர்த்து, உறுதிப்படுத்தி, விரிவாக்கி, அவற்றைப் பயன்படுத்தி தேச விசாலமான புரட்சிகரப் பேரெழுச்சியைத் துரிதப்படுத் தவும், நகர்ப்புறங்களைச் சுற்றி வளைத்து இறுதியில் தேசந் தழுவிய வெற்றியை ஈட்டவும் முடியும்.

## புரட்சிகர மக்கள் படையைக் கட்டி வளர்ப்பது:

பாட்டாளி வர்க்க கட்சியின் தலைமையிலானதும் சரியான தொரு யுத்ததந்திர போர்த்தந்திரக் கொள்கைகளின் வழிகாட்டு தலினது அடிப்படையிலான, முற்றிலும் மக்களுக்குச் சேவை செய்வதும், ஜனநாயகமுடையதும் என்கிற முறையில் எல்லாப் பிற்போக்குப் படைகளிலிருந்தும் வேறானதாக செஞ்சேனை இருக்க வேண்டும்.

உள்ளூர் ஆயுதமேந்திய எழுச்சியினூடாக செஞ்சேனை யின் கொரில்லாப் படைப்பிரிவுகள் தோன்றி கிரமமான செஞ் சேனையாக எவ்வாறு கட்டி வளர்க்கப்படும் என்று முன்பு விவரிக்கப்பட்டது. அந்த செஞ்சேனையைக் கட்டி வளர்ப்ப தற்கு அடிப்படையாக அமையும் கோட்பாடு என்னவென்றால் பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தால் வழிகாட்டப்படுவதாகவும், மக்களது போராட்டங்களிலும் வாழ்விலும் உதவுவதாகவும், தளப்பிரதேசங்களைக் கட்டி வளர்ப்பதில் முக்கிய பாத்திர மாற்றுவதாகவும் இருக்க வேண்டும். இந்த அடிப்படை கோட் பாட்டிலிருந்தே, செஞ்சேனையின் செயல்பாடுகளுக்கான நியதி கள் வரையறுக்கப்படுகின்றன.

முதலாவதாக, செஞ்சேனையில் கட்சியின் ஸ்தாபன, அர சியல் மற்றும் சித்தாந்தத் தலைமை உறுதி செய்யப்பட வேண்டும். செஞ்சேனையின் வெவ்வேறு மட்டங்களில் கட்சிக் கிளைகளை அமைப்பது, அரசியல் கமிசார்களின் பிரதிநிதித்துவ முறை ஆகியவற்றால் கட்சியின் உறுதியான தலைமை பிரயோ கிக்கப்பட்டு கட்சியின் திட்டங்களும் கொள்கைகளும் தீர்மான கரமாக செயல்படுத்த வழி வகுக்கப்படும்; அதேசமயம் செஞ் சேனையில் ஒரு அரசியல் வேலைமுறை நிறுவப்பட்டு உறுதிப் படுத்தப்பட வேண்டும். அதன்பணி கட்சியின் திட்டங்கள் மற் றும் கொள்கைகளை செஞ்சேனைக்கு போதிப்பது; செஞ்சேனை யில் மக்கள் விரோதக் கருத்துக்களை எதிர்த்து குறிப்பாக பாட் டாளி வர்க்க சித்தந்த உணர்வூட்டி வளர்ப்பது. இவற்றால் செஞ்சேனை வெற்றி கொள்ளப்பட முடியாத உணர்வும், எதி ரிக்கு அடிபணியாது எதிரியைத் தேற்கடிக்கும் திறமையும், எவ்

வித இடர்ப்பாடுகள், தொல்லைகள், துன்பங்கள் நேர்ந்தாலும் இறுதிவரை போரிடும் உறுதியும் பெறும்.

இரண்டாவதாக, விவசாயிகளை முதுகெலும்பாகக் கொண்டு கட்டப்படும் செஞ்சேனை அவர்களைச் சார்ந்து நின்றே புரட்சிகர யுத்தத்தை நடத்தும். கிராமப்புறங்களில் நிறுவப்படும் தளப்பிரதேசங்களை உறுதிப்படுத்தவும் விரிவாக்கவும் பிரதானமாக விவசாயிகளது கொரில்லா யுத்தத்தை நடத்தும். எனவே செஞ்சேனையின் பணி, போரிடுவதாக மட்டுமிருக்காது. பரந்துபட்ட மக்களைக் கிளர்ந்தெழச் செய்வது, அவர்களை ஆயுதபாணியாக்குவது, புரட்சிகர அரசங்கத்தை நிறுவவும் காக்கவும் அவர்களுக்கு உதவுவது, கட்சி அமைப்புகளைக் கட்ட உதவுவது போன்ற பணிகளையும் ஏற்க வேண்டியுள்ளது. போரிடுவது, மக்கள் திரளினிடையிலான வேலை, உற்பத்தியில் ஈடுபடுவது—இவை செஞ்சேனையின் பணிகளது பிரிக்க முடியாத மூன்று அம்சங்களாகும். போர்கள் மற்றும் பயிற்சிக் காலங்களுக்கு இடையில் உற்பத்தியில் ஈடுபட்டு சுயதேவைகளைப் பூர்த்தி செய்ய முயல்வது, பொருளாதாரக் கஷ்டங்களைக் கடக்கவும், வாழ்க்கை நிலைமைகள் சிறப்பிக்கவும், மக்கள் மீதான சுமையை எளிதாக்கவும் முயல்வதும் செஞ்சேனையின் பணிகளாகும்.

மூன்றாவதாக, செஞ்சேனை அதன் அணிகளுக்கிடையிலும், அதற்கு வெளியே உள்ள அணிகளுடனும் சரியான உறவையும் நல்ல ஐக்கியத்தையும் நிறுவவேண்டும். உள்ளே அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையிலும், உயர் மட்டத்துக்கும் கீழ்மட்டத்துக்கும் இடையிலும், வெளியே ராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையிலும், ராணுவ மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு இடையிலும், சரியான உறவையும் நல்ல ஐக்கியத்தையும் நிறுவுவதும், அவற்றுக்கு ஊறு விளைவிக்கும் எதையும் வெற்றிகொள்ளுவதும் இன்றியமையாததாகும்.

நான்காவதாக, எதிரிப்படையின் கீழ்மட்ட அதிகாரிகள் மற்றும் அணிகளை வென்றெடுக்கவும் யுத்தக் கைதிகளைக் கையாள்வதற்குமான சரியான கொள்கையொன்றைப் பின்பற்ற வேண்டும். போரிடும் அமைப்புகளில் திரண்டிருக்கும்போது ஈவிரக்கமின்றி அழித்தொழிக்கும் கொள்கையைப் பின்பற்றும் அதே வேளையில் சரணடைகின்ற அல்லது நம் பக்கம் சேருகின்ற அல்லது நிராயுதபாணியாக்கப்பட்டபின் பொது எதிரிக்கு எதிராகப் போரிட விரும்புகிற எதிரிப்படைகளின் கீழ்மட்ட அதிகாரிகள் மற்றும் அணிகளை வரவேற்கவும் தகுந்த போதனை தரவும் வேண்டும். பொதுவில் யுத்தக்கைதியைக் கொல்வதோ, துன்புறுத்துவதோ, அவமதிப்பதோ கூடாது.

ஐந்தாவதாக, மக்கள் யுத்தத்திற்கு அவசியமான யுத்த தந்திர முறைகளையும் நியதிகளையும் பெற்றிருக்க வேண்டும். இது மாறுகின்ற திட்டவட்டமான சூழ்நிலைகளின் பிரகாரம் வளைந்து கொடுக்கும் யுத்தத்தை நடத்துவதில் திறமையும், சரியான அரசியல் மற்றும் ராணுவ மார்க்கமும் பெற்றிருக்க வேண்டும்.

ஆறாவதாக, செஞ்சேனை பலமுடையதாய் இருக்க வேண்டுமானால் அதனுடன் இசைவாகப் போரிடுகின்ற மக்கள் தற்காப்பு படைகளும், குடிபடைகளும் ஆகிய விசாலமான ஆயுத மேந்திய மக்கள்திரள் ஸ்தாபனங்களைப் பெறவேண்டும். இளம் வயது முதல் நடுத்தர வயது வரையான ஆண்கள், பெண்கள் எல்லோரும் சுயவிருப்பம் மற்றும் ஜனநாயகத்தின் அடிப்படை யில், உற்பத்தி மற்றும் சமூக வாழ்விலிருந்து விலகாத முறையில் தற்காப்பு படைகளில் அணிதிரட்டப்பட வேண்டும். பொதுமக் களின் இந்த ஆயுத சக்திகளின் ஒத்துழைப்பின்றி எதிரியைத் தோற்கடிப்பது சாத்தியமாகாது.

ஏழாவதாக, செஞ்சேனை பலமுடையதாக இருக்க வேண்டுமானால் இது தேவையானபோது எல்லா இடங்களுக்கும் சென்று போரிடும் பிரதானப் படைகள், குடிபடையுடனும், தற் காப்பு படைகளுடனும் ஒத்துழைத்து சொந்த இடங்களைப் பாதுகாத்து எதிரிகளைத் தாக்கும் ஸ்தல படைகள் என்று இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். மக்களது மன மார்ந்த ஆதரவைப் பெறும் இந்த உழைப்புப் பங்கீடு இல்லா விட்டால், ஏதாவது ஒன்று மட்டுமிருந்தால், ஸ்தலப்படைகளின் பாத்திரத்தை அலட்சியம் செய்தால் எதிரியை வெற்றிகொள் வது கூட சாத்தியமாகாது. ஸ்தலப்படைகளின் கீழ் ஆயுதந் தாங்கிய வேலைக் குழுக்களை நிறுவி நல்ல பயிற்சியும், ராணுவ விவகாரங்கள், அரசியல், மக்கள்திரள் வேலையில் திறமையும் பறவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக செஞ்சேனை மக்களுடன் ஐக் கியப்பட்டு மக்களுக்குச் சேவை செய்வதான மக்கள் படையா கவும், மக்கள் யுத்தம் நடத்துவதாகவும் இருக்கவேண்டும். பரந்துபட்ட மக்களை பல்வேறு மக்கள்திரள் ஸ்தாபனங்களில் திரட்டி, அவை ஆயுதப்படைகளுக்கு ஆதரவாகப் பல்வேறு பணிகளையும் மேற்கொள்வதாக இருக்கவேண்டும். இப்பணிகள் சேனையிற் சேர மக்களைத் திரட்டுவது, செஞ்சேனைக்கு தானியங்கள் மற்றும் பிற பொருட்களைச் சுமந்து செல்வது, செஞ்சேனை வீரர்களின் குடும்பங்களுக்கு உதவுவது போன்றவை. கொரில்லாக் குழுக்கள், குடிபடைகள், தற்காப்புப்படைகள் ஆகியன்வ எதிரிக்கெதிராக பரவலான எதிர்பாராத் தாக்குதல் நடத்துவது, எதிரியின் போக்குவரத்து செய்தித் தொடர்புகளைத் துண்டிப்பது, ஒற்றறிவது, துரோகிகளையும் ஒற்றர்களையும் பிடிப்பது, காயமுற்றோரை எடுத்துச்செல்வது பாதுகாப்பது போன்ற வகையில் செஞ்சேனையின் நடவடிக்கைகளில் நேரடி யாகப் பங்கேற்பதும், அணிதிரட்டுவதும் செய்யவேண்டும். மக்கள் உற்சாகத்துடன் பல்வேறு வகையான அரசியல், பொரு ளாதார, கலாச்சார, சுகாதார வேலைகளை மேற்கொள்ள உதவ வேண்டும். உற்பத்தி மற்றும் சுயதேவைப் பூர்த்திக்கான இயக் கங்கள் நடத்தவேண்டும். எதிரியின் நாச செயல்களுக்கு எதிரா கவும், இயற்கையின் சீற்றங்களுக்கு எதிராகவும் மக்கள் வாழ் வைக் காக்க வேண்டும்.

## மக்கள் யுத்தப்பாதையின் வளர்ச்சிப்போக்கு பற்றிய விதிகள்:

மக்கள் யுத்தப்பாதையின் வளர்ச்சிப்போக்கு எத்தகையதாக இருக்கும், அதன் பிரதான கட்டங்கள் மற்றும் விதிகள் என்னவென்பதை வரையறுப்பது அவசியமான ஒன்றாகும். இங்கு முற்றிலும் ராணுவ ரீதியிலான வளர்ச்சிப்போக்கு, கட்டங்கள் மற்றும் விதிகளையே குறிப்பிடுகிறோம். இங்கு நாடு முழுவதையும் உள்ளடக்கியதும், இன்றைய இடைக்கட்டத்தின் பிரதான முரண்பாடாகிய நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்குமிடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான உள்நாட்டு யுத்தம் முழுவதற்குமான யுத்தநிலைமையை ஆளும் விதிகளையும் பிரதான கட்டங்களையும் வளர்ச்சிப் போக்கையும் மட்டும் ஆய்ந்தறிவோம். குறிப்பிட்ட ஒரு இடைக்கட்டத்துக்கான யுத்த நிலைமையை மட்டும் முழுமையானதாக எடுத்துக்கொண்டு ராணுவ யுத்ததந்திரம் வகுப்பது, புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம் முழுவதற்குமான புரட்சிகர யுத்தத்துக்கு முரணானதோ, புரட்சியின் ஒரு பகுதியைக் கைவிடுவதோ ஆகாது. பகுதி, முழுமை என்பது ஒப்பீட்டு வகையானதும் குறிப்பிட்ட வரையறையுடன் கூடியதுமாகும். எனவே இன்றைய இடைக்கட்டமான உள்நாட்டு யுத்தத்துக்கான நிலைமையை மட்டும் முழுமையாக எடுத்துக்கொள்வதும் கூட ஜனநாயகப் புரட்சியின் உள்நாட்டு மற்றும் தேசிய யுத்தங்கள் அடங்கிய முழுமையின் ஒரு பகுதியே. ஆனால் இங்கு கவனிக்கத்தக்கது பிரதான முரண்பாடு மாறி தேசிய யுத்தமாக மாறினாலும் முன்முயற்சியைத் தக்கவைத்துக்கொண்டு அடுத்த இடைக்கட்டத்துக்கும் தயாராக இருப்பதற்கான முன்னிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். பிரதான முரண்பாடு ஏகாதிபத்தியத்துக்கும் நாட்டுக்கும் இடையிலானதாக மாறி தேசிய யுத்தமொன்றை நடத்தவேண்டி வந்தால் — அதற்கான வாய்ப்பும் உள்ளது — யுத்ததந்திர ரீதியிலான சில மாறுதல்கள் அரசியல் யுத்ததந்திரத்திலும், புதிய நிலைமைகளையே முழுமையான யுத்த நிலைமையாகக் கொண்டு ராணுவ யுத்ததந்திரமும் வகுக்க வேண்டும். ஆனால் இங்கு இன்றைய இடைக்கட்டத்தினுடைய உள்நாட்டு யுத்தமொன்றின் விதிகள், பிரதான கட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் போக்கை ஆய்வு செய்வதோடு தற்போதைக்கு வரம்பிட்டுக் கொள்கிறோம்.

உள்நாட்டு யுத்த நிலைமையை முழுமையாக எடுதது்க் கொண்டால் யுத்ததந்திர ரீதியிலான மூன்று கட்டங்களை அது கொண்டிருக்கும். அவை: (i) யுத்ததந்திர ரீதியிலான தற்காப்புநிலை (ii) யுத்ததந்திர ரீதியிலான இழுபறி நிலை (iii) யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் நிலை ஆகியனவாகும். இந்த மூன்று வட்டங்களினூடாகத்தான் யுத்தம் முன்னேறும். ஒவ்வொரு கட்டத்தின் கால அளவும் படிப்படியானதாக, குறைவானதாகப் பொதுவில் இருக்கும். எனினும் அனேகமான போரியக்கங்களிலும் போர்த்தந்திர நடவடிக்கைகளிலும் தோல்வியுறுவது அல்லது யுத்தத்தின் முழுமையான நிலைமையில் தீர்க்

கமானதாக உள்ள சில போரியக்கம் மற்றும் போர்த்தந்திர நடவடிக்கைகளில் தோல்வியுறுவது என்ற நிலை ஏற்பட்டால் இந்த முன்னேற்றம் பாரதூரமாக பாதிக்கப்பட்டு யுத்ததந்திர ரீதியிலான வெற்றி தள்ளிப் போடப்படுவதால் மேற்கண்ட மூன்று கட்டங்களின் கால அளவில் மாறுதலடையலாம். மாறாக யுத்தத்தின் நிலைமையில் தீர்க்கமானதாக உள்ள சில போரியக்கம் மற்றும் போர்த்தந்திர நடவடிக்கைகளின் வெற்றி மேலும் யுத்தத்தை துரிதப்படுத்தலாம், கட்டங்களின் கால அளவைச் சுருக்கலாம். இதுவுமன்றி அரசியல் மற்றும் பிற புரட்சிகரமான நிலைமைகளில் ஏற்படும் சாதகமான அல்லது பாதகமான நிலைமைகளும் கட்டங்களின் கால அளவைக் குறுக்கலாம் அல்லது நீட்டலாம், எவ்வாறாயினும் இந்த மூன்று கட்டங்களினூடாகத்தான் யுத்தம் முன்னேறும். புரட்சிகர யுத்தத்தின் அடிப்படை விதிகளில் இதுவும் ஒன்றா இருக்கிறது.

அதே போன்று யுத்த முறைகளும் மூன்றாக உள்ளன. அவை கொரில்லா யுத்தமுறை, நடமாடும் யுத்தமுறை மற்றும் ஸ்தான யுத்தமுறை. கொரில்லா யுத்தமுறை, கொரில்லா வாதத்தைக் கொண்டிராது; கொரில்லாத் தன்மையுடையதாகவே இருக்கும்; ஆனால் போதுமான அளவு கொரில்லா வாதத்தையும் கொண்டிருக்கும். இதற்கு மாறாக ஸ்தான யுத்தமுறை கிரமமான யுத்தமாகும். நடமாடும் யுத்தமுறை என்பது கொரில்லாத் தன்மையுடைய கிரமமான யுத்தமுறையாகும். கொரில்லா யுத்தமுறையிலிருந்து கொரில்லாத் தன்மையுடைய நடமாடும் யுத்தமுறையினூடே ஸ்தான யுத்தத்திற்கும், கொரில்லா யுத்தமுறையிலிருந்து கிரமமான யுத்தமுறைக்கும் படிப்படியாக யுத்தம் மாறிச் செல்லும். இது கொரில்லாப் படைப்பிரிவுகள் வளர்ந்து கிரமமான செஞ்சேனையாக மாறுவதுடனும், கொரில்லா மண்டலங்கள் உறுதிப்படுத்தப்பட்டு தளப்பிரதேசங்களாக மாறுவதுடனும், பல தளப்பிரதேசங்களாக வளர்ந்து விரிவடைவதுடனும், யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பிலிருந்து யுத்ததந்திர ரீதியான இழுபறி நிலையினூடே யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் நிலைக்கு உயர்வதுடனும் இணைந்திருக்கிறது. ஆனால் ஒன்றுக்கு ஒன்று என்கிற ரீதியிலும், உடனடியாகவும், நேரடியாகவும் சேர்க்கவும் கோர்க்கவும் கூடாது. அதாவது கொரில்லா யுத்தமுறை ஸ்தான யுத்தமுறை ஆகியவை முறையே யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு நிலை, யுத்ததந்திர ரீதியிலான இழுபறி நிலை, யுத்ததந்திரரீதியிலான தாக்குதல் நிலை ஆகியவற்றுடன் ஒன்றுக்கொன்று என்ற வகையில் நேரடியாக பிரயோகிக்கப்படுவதில்லை; அதே போன்று கொரில்லா யுத்தமுறை மற்றும் கிரமமான யுத்தமுறை ஆகியவை முறையே கொரில்லா மண்டலங்கள் தளப்பிரதேசத்துடன் ஒன்றுக்கொன்று என்ற முறையில் நேரடியாகப் பிரயோகிக்கப்படுவதில்லை. மாறாக, இவை அனைத்துக்கும் இடையிலான உறவுகளைத் தீர்மானிப்பதற்கான விதிகளைப் புரிந்து கொண்டு பிரயோகிக்க வேண்டும். அவ்விதிகளைச் சரியாகப் புரிந்துகொண்டு யுத்தத்தையும், போரியக்க மற்றும் போர்த்தந்திர நடவடிக்கைகளை

யும் இயக்குவதிலேயும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு நிலைமைகளுக்கு ஏற்ப சரியான முறையில் மாறிச் செல்வதிலேயும் தான் யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திரத் தலைமையின் திறமையே தங்கி இருக்கிறது.

"சுற்றி வளைத்து அடக்குதலும் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் உள்நாட்டு யுத்தத்தின் பிரதான வடிவமாகும் என்பது மக்கள் யுத்தத்தின் மற்றொரு விதியாகும். ஒவ்வொரு செந்தளப்பிரதேசமும், ஒவ்வொரு செஞ்சேனைக் கூறும், ஒவ்வொரு கசங்கொரில்லாப் பிரதேசமுல் எதிரியால் சுற்றி வளைத்து அடக்குதலுக்கு உட்படுத்தப்படுதலும், அவற்றுக்கெதிரான நடவடிக்கைகளும் என்ற வடிவிலான யுத்தம் உள்நாட்டு யுத்தத்தினிடத்தில் தேசிய யுத்தம் வந்தால் அல்லாமல், எதிரி பலவீனமானவனாயும் செஞ்சேனை பலமானதாயும் ஆகும் நாள் வரை அடிக்கடி நிகழும், தேசிய யுத்தம் வந்தாலும் செஞ்சேனையும் நேசப்படைகளும் எதிரியைச் சுற்றி வளைத்து அடக்குதலும் அதற்கு எதிரான எதிரியின் எதிர்நடவடிக்கைகளும் பிரதான வடிவமாக இருக்கும்; ஆனால் வேறு வகையினதாக இருக்கும்; உள்நாட்டு லத்தத்திலேயும் எதிரி பலவீனமானவரையும், செஞ்சேனை பலமானதாயும் ஆனபின்னர் எதிரியின் படைக்கூறுகளையும், எதிரியின் மையங்களையும் செஞ்சேனை சுற்றி வளைத்து அடக்குதலும் அவற்றிற்கு எதிரான எதிரியின் எதிர் நடவடிக்கைகளும் யுத்தத்தின் பிரதான வடிவமாக இருக்கும். ஆனால் இவையும் உள்நாட்டு யுத்தத்தில் நடப்பதும் தேசிய யுத்தத்தில் நடப்பதும் போன்ற வகையினதாக இருக்காது.

கொரில்லா யுத்தத்தில் கொரில்லாப் படைப்பிரிவுகள் தங்கள் நடவடிக்கைகளில் மிகவும் அதிகபட்சப் படைகளை ஒன்று குவிக்கவும், ரகசியமாகவும் துரிதமாகவும் செயல்படவும், எதிரியை எதிர்பாராதவிதமாகத் தாக்கவும், சண்டைகளை விரைவில் வெற்றி தோல்விக்குக் கொணரவும் வேண்டும். செயற்படாத் தற்காப்பையும், இழுத்தடித்து செயல்படுவதையும், கைகலப்புகளுக்கு முன் படைகளைச் சிதறலாகப் பரப்புவதையும் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும். சண்டைகளின் போதான எதிரிப்படைகளை எல்லைகளுக்கு உட்படுத்தி வைத்திருக்கும் நடவடிக்கைகள், புறக்காவல் நடவடிக்கைகள் எதிரியைத் தொகையிற் குறைக்கவும் களைப்புறச் செய்யவும் வேண்டி கேந்திரமான போக்குவரத்து வழிகள், குறியிடங்கள் அல்லது கிராமப்புறங்களில் எதிர்த்துப் போரிடுவது, வாபசாவதற்கு மறைப்பு தருவதற்கான நடவடிக்கைகள் ஆகிய போர்த்தந்திர ரீதியான தற்காப்பையும் அத்துடன் யுத்ததந்திர ரீதியான தற்காப்பையும் கொரில்லா யுத்தம் உள்ளடக்கி இருக்கிறது. ஆனால் கொரில்லா யுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடு தாக்குதலாகவே இருக்க வேண்டும்; கொரில்லா யுத்தம் தன்மையில கிரமமான யுத்தத்தவிட அதிகம் தாக்குதல் ரீதியானது. மேலும், தாக்குதலானது எதிர்பாராத் தாக்குதல்களின் வடிவத்தை எடுக்கும்; எனவே முற்றிலும் ரகசியமானதாக

இருக்கும். உதவியறுந்து போன சிறியதும்,தனிமைப் பட்டது மான எதிரிப்சடையொன்றின் மீதான ஒரு தாக்குதலில் ஏற்படுவது போல சில சமயங்களில் கொரில்லா சண்டை பல நாட்களுக்கு நீடித்து நடத்தப்படக் கூடுமாயினும் பொதுவாக கிரமமான யுத்தத்தைவிட அதிகமாக கொரில்லா யுத்தத்தில் சண்டைகள் விரைவில் வெற்றி தோல்விக்கு கொண்டுவரப்படும். இது எதிரி பலமானவன் நாம் பலவீனமானவர்கள் என்ற நிலைமையால் நிர்ணயிக்கப்படுவதாகும். கொரில்லா யுத்தம், அதன் சிதறலாகப் பரவிய இயல்பின் காரணமாக எல்லா இடங்களுக்கும் பரவ முடியும்; எதிரிப் படைகளைத் தொந்தரவு செய்வது, வரையறைக்குள் வைத்திருப்பது, சீர்குலைப்பது, சாத்தியமான அளவு அதிகமாக அழித்தொழிப்பது ஆகியவற்றிலும் மக்கள் திரள் வேலை போன்று அதன் பணிகளில் பலவற்றிலும் கொரில்லா யுத்தத்தின் கோட்பாடு என்பதே படைகளைச் சிதறலாகப் பரவுதல் ஆகும்; ஆனால் கொரில்லாக் கூறொன்று அல்லது வியூகமொன்று எதிரியை அழிப்பதில் ஈடுபட்டுள்ளபோது விசேஷமாக எதிரித் தாக்குதல் ஒன்றைத் தகர்க்க முயன்று கொண்டிருக்கும்போது அது தனது பிரதான படைகளை ஒன்று குவிக்க வேண்டும்.

"கொரில்லாக் கூறுகள் சிதறலாகப் பரவிய நடவடிக்கைகளைக் குணாதிசயமாகக் கொண்ட ஒரு தாழ்ந்த மட்டத்திய ஆயுதந்தறித்த அமைப்பாகையால், கொரில்லா யுத்தத்திலான படைத்தலைமை முறைகள் கிரமமான யுத்தத்தில் உள்ளது போன்று உயர்ந்த அளவு மத்தியப்படுத்தலை அனுமதிப்பதில்லை. கிரமமான யுத்தத்தின் படைத்தலைமை முறைகளைக் கொரில்லா யுத்தத்துக்குப் பிரயோகிக்க எந்த முயற்சியும் செய்யப்பட்டால் அதன் மிகுந்த வளைந்து கொடுக்கும் தன்மை தவிர்க்க முடியாதபடி குறுக்கப்பட்டு, அதன் வீரியமும் போக்கப்படும். உயர்ந்த அளவுக்கு மத்தியப்படுத்தப்பட்ட படைத்தலைமை கொரில்லா யுத்தத்தின் மிகுந்த வளைந்து கொடுக்கும் தன்மையுடன் நேரடியாக முரண்பட்டதாகும். இப்படிப்பட்ட மிகுந்த வளைந்து கொடுக்கும் தன்மையுடைய கொரில்லா யுத்தத்துக்கு உயர்ந்த அளவுக்கு மத்தியப்படுத்தப்பட்ட படைத்தலைமை பிரயோகிக்கப்படக் கூடாததும் முடியாததும் ஆகும்.

"இருப்பினும் மத்தியப்படுத்திய படைத்தலைமை சிறிதளவின்றிக் கொரில்லா யுத்தம் வெற்றிகரமாக விருத்தி செய்யப்பட முடியாது. விரிவான கிரமமான யுத்தமும் விரிவான கொரில்லா யுத்தமும் ஒரே சமயத்தில் நடைபெறும்போது, அவை ஒன்றுக்கொன்று இசைவாக நடக்க வேண்டும்; எனவேதான் இரண்டையும் ஒன்றுக்கொன்று இசைவாக நடத்தும் படைத்தலைமை ஒன்று, அதாவது தேசிய பொதுத்தலைமை பகுதிகளாலும் யுத்தப் பிராந்தியத் தளகர்த்தர்களாலும் அளிக்கப்படும் ஒருமைப்படுத்திய யுத்ததந்திர ரீதியிலான படைத்தலைமை ஒன்று தேவைப்படுகின்றது. பல கொரில்லாக் கூறுகளைக் கொண்ட கொரில்லாப் பிராந்தியம் அல்லது கொரில்லாத் தளப்

பிரதேசம் ஒன்றில், சாதாரணமாக, பிரதான படையை ஆக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கொரில்லா வியூகங்களும் (சில சமயம் கிரமமான ,வியூகங்களோடு கூடவே) துணைப் படையை பிரதிநிதித்துவம் செய்பவையான, பெரியவையும் சிறியவையுமான பிற கொரில்லாக் கூறுகள் பலவும் உற்பத்தியிலிருந்து விலகாதவர்களாலான ஆயுதந்தரித்த கூறுகள் பலவும் இருக்கின்றன; அங்குள்ள எதிரிப் படைகள் சாதாரணமாக கொரில்லாக்களுக்கு எதிரான தங்கள் நடவடிக்கைகளை ஒருமித்துச் செய்ய ஒன்றுபடுத்திய அமைப்பொன்றாக அமைகின்றன. இதன் விளைவாக, இத்தகைய கொரில்லாப் பிராந்தியங்கள் அல்லது தளப் பிரதேசங்களில் ஒன்றுபடுத்தப்பட்ட அதாவது மத்தியப்படுத்தப் பட்ட படைத்தலைமையொன்றை நிறுவும்பிரச்சினை எழுகின்றது

"எனவே அறவே மத்தியப்படுத்தல், அறவே பன்முகப்படுத்தல் இரண்டிற்கும் எதிரான வகையில், கொரில்லா யுத்தத்தில் படைத்தலைமையின் கோட்பாடு மத்தியப்படுத்திய யுத்ததந்திர ரீதியான படைத்தலைமையும் போர் நடவடிக்கைகளிலும் சண்டைகளிலும் பன்முகப்படுத்திய படைத்தலைமையுமாக இருக்க வேண்டும்.

"..... பொதுவான விஷயங்களில், அதாவது, யுத்ததந்திர விஷயங்களில், ஒருமித்த நடவடிக்கையை உறுதிப்படுத்தக் கூடியதாயிருக்கத் தாழ்ந்த மட்டங்கள் உயர்ந்த மட்டங்களுக்குத் த்கவல் தெரிவிக்கவும் அவற்றின் உத்தரவுகளைப் பின்பற்றவும் வேண்டும். இருப்பினும் மத்தியப்படுத்தல் இந்த அளவோடு நிற்கின்றது; இதற்கு அப்பாலும் சென்று, ஒரு போர் நடவடிக்கைக்கு அல்லது சண்டைக்கு ஆன குறிப்பான பணிகள் வகுத்தல் போன்ற விபர விஷயங்களில் தாழ்ந்த மட்டங்களில் தலையிடுவதும் அவ்வாறே தீங்கானதாக இருக்கும். ஏனெனில் இத்தகைய விபரங்கள், காலத்துக்கு காலமும் இடத்துக்கிடமும் மாறுபவையும், தூரத்திலுள்ள உயர்ந்த படைத்தலைமை மட்டங்களின் அறிவிற்கு அப்பாற்பட்டவையுமான குறிப்பான சூழ்நிலைகளின் ஒளியில் தீர்மானிக்கப்பட வேண்டியவை. போர் நடவடிக்கைகளிலும் சண்டைகளிலும் பன்முகப்படுத்திய படைத்தலைமைக் கோட்பாடு என்பதன் அர்த்தம் இதுதான். கிரமமான நடவடிக்கைகளிலும், விசேஷமாகத் தொடர்புகள் போதாதபோது, பொதுவாக இதே கோட்பாடே பொருந்தும். ஒரே வார்த்தையில் கூறினால், இதன் பொருள், ஒன்றுபடுத்தப்பட்ட ஒரு யுத்ததந்திரத்தின் வரம்புகளுக்குள்ளாகச் சுதந்திமாகவும் எம் கையில் முன்முயற்சியுடனும் நடத்தப்படும் கொரில்லா யுத்தம் என்பதாகும்." (ஷி நூல், பக் 376-379)

## <u>கொரில்லாப் போர்த்தந்திர நடவடிக்கைகளின் விதிகள் மற்றும் கோட்பாடுகள் பின்வருமாறு:</u>

எதிரிக்கு எதிராக உறுதியுடன் போராடுவது; பயந்தோடும் போக்கை எப்போதும் எதிர்த்து முறியடிப்பது.

குறிப்பிட்ட தளப்பிரதேசப் பகுதியில் நிலப்புரட்சியை ஆழப்படுத்துவது; கட்சி ஸ்தாபனங்களை உருவாக்குவது; விரிவு படுத்துவது; பலப்படுத்துவது; அதே போல கிரமமான சேனையின் உடனியுடன் ஸ்தல ஆயுதப்படைகளின் அபிவிருத்தியை முன்னேற்றுவது.

மக்களைத் தட்டியெழுப்ப நமது படைகளைப் பிரிப்பது எதிரியைச் சமாளிக்க நமது படைகளை ஒன்று குவிப்பது;

எதிரி முன்னேறும் போது நாம் பின் வாங்குவது; எதிரி முகாமடிக்கும்போது நாம் தொல்லை கொடுப்பது; எதிரி களைத்திருக்கும்போது நாம் தாக்குவது; எதிரி பின்வாங்கும் போது நாம் துரத்துவது;

பலம் வாய்ந்த எதிரியால் துரத்தப்படும்போது வட்டமிட்டுச் செல்லும் கொள்கையைப் பிரயோகிப்பது; ஸ்திரமான தளப்பிரதேசங்களை விஸ்தரிக்க, அலை அலையாக முன்னேறுவது;

மொத்தத்தில் நமது கொரில்லாப் போர்த்தந்திர நடவடிக்கைகள் அனைத்தும் வலை வீசுவது போன்று இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் நாம் அதை வீசவும் இழுக்கவும் கூடியவர்களாக இருக்க வேண்டும். மக்களை வென்றெடுப்பதற்கு நாம் அதை அகல விரிக்க வேண்டும்; எதிரியை சமாளிப்பதற்கு நாம் அதைச் சுருக்கி இழுக்க வேண்டும். குறிப்பாக மிகக் குறுகிய காலத்தில் சாத்தியமான மிகச்சிறந்த வழிகளில் மிகப்பெரிய அளவில் மக்களைத் தட்டியெழுப்ப நாம் எப்பொழுதும் தயாரிப்புடன் இருக்க வேண்டும்.

கொரில்லா யுத்தமுறை, கிரமமான யுத்தமுறை இரண்டுமே ஒரே யுத்ததந்திரத்தால் வழிநடத்தப்பட்டாலும் அவை அளவிலும் வடிவத்திலும் மாறுபடும்; மேலும் கொரில்லா யுத்தமுறையில் தாக்குதல்கள் பொதுவாக எதிர்பாராத் தாக்குதல்களின் வடிவத்திலானதாகவே இருக்கும். கிரமமான யுந்தத்திலும் எதிர்பாராத் தாக்குதல்கள் இருக்கலாம், இருக்கவும் வேண்டும்; எனினும், அவற்றில் எதிர்பாராத் தன்மையின் அளவு குறைவானதாகவே இருக்கும். கொரில்லா யுத்தத்தில் நடவடிக்கைகளை விரைவில் வெற்றி தோல்விக்கு கொணர வேண்டிய தேவை மிகப் பெரியதும், போர் நடவடிக்கைகளிலும் சண்டைகளிலும் எதிரியைச் சுற்றி வளைத்து தாக்கும் வளையம் மிகச்சிறியதாகவும் இருக்கும். இவையனைத்தும் கொரில்லா யுத்தமுறையை கிரமமான யுத்தமுறையிலிருந்து வேறுபடுத்துகின்றன.

கொரில்லாத் தன்மையுடைய கிரமமான யுத்தமுறையாக நடமாடும் யுத்தம் அமைகின்றது. நடமாட்ட யுத்தத்தின் குணாதிசயங்களில் ஒன்று மாறும் தன்மையாகும் (fluidity) ஒரு களச் சேனையைப் பெரும் அடிகளெடுத்து முன்னேறவும் பின்வாங்கவும் அனுமதிப்பது மட்டுமல்லாமல், இது அவசியமானதும் ஆகும். வெறுமனே நகர்ந்து செல்வதல்ல நடமாட்ட யுத்தமுறையின்

நோக்கம். யுத்தத்தின் முதன்மையான தேவை எதிரியை அழிப்பது, மற்ற தேவை தன்னைப் பேணுவது. தன்னைப் பேணுவதன் நோக்கம் எதிரியை அழிப்பது. மறுபுறம் எதிரியை அழிப்பதே தன்னைப் பேணுவதற்கான மிகவும் பயன்தரும் வழிவகை. எனவே, பயந்தோடுவது, தற்காப்புக்காக பின்னோக்கியே நகர்வதற்கானதல்ல நடமாடும் யுத்தமுறை. அதே சமயம் 'முன்னேறுவது மட்டுமே, ஒருபோதும் பின்வாங்குவதில்லை' என்ற துணிச்சல்வாதமும் தவறானது. போரியக்கங்களிலும், சமர்களிலும் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தத்தைச் சாராம்சமாகக் கொண்டதானது நடமாட்ட யுத்த முறை; அது இரண்டாம் பட்சமான பங்கை வகிக்கும் ஸ்தான யுத்தத்தையும், 'நடமாட்டத் தற்காப்பையும்' பின்வாங்குதலையும் உள்ளடக்குகின்றது; இவையன்றி நடமாட்ட யுத்தம் பூரணமாக நடத்தப்பட முடியாது. நடமாட்ட யுத்தமுறை ஒரு பிரதேசத்தை இழப்பதற்கும், ஒரு களச்சேனையை பெரும் அடிகளெடுத்து வைத்து முன்னேறவும், பின் வாங்கவும் தயாராக இருப்பதைக் கோருகிறது. ஆக்கமான ஒரு அம்சத்தில் எதிரியை அவனுக்குப் பாதகமான, ஆனால் எமக்குச் சாதகமான ஒரு சண்டைக்கு இழுப்பதற்கு, அவன் நகர்ந்துகொண்டிருப்பதும் சாதகமான தரையமைப்பு, சேதப்படக்கூடிய நிலையில் எதிரி இருப்பது, தகவல் வெளிப்படுவதைத் தடுக்கக்கூடிய உள்ளூர் மக்கள், எதிரியின் களைப்பும் தயாரின்மையும் ஆகியன போன்ற சாதகமான நிலைமைகளில் நடமாடும் யுத்தமுறை மிகவும் வெற்றிகரமானதாக இருக்கும். 'எம்மால் வெல்ல முடியும்போது நாம் போரிடுவோம். முடியாதபோது அகன்று விடுவோம்'— இதுவே நடமாட்ட யுத்தமுறையை வர்ணிப்பதற்கான பொது வாக்கியம். நடமாடும் யுத்தமுறையில், பொதுவில், சண்டையிடுவதிலும் பார்க்க நகருவதில்தான் அதிக காலத்தைச் செலவிட வேண்டியிருக்கும். ஆனால் 'நகருதல்' எல்லாம் சண்டையிடும் நோக்கத்திற்கானதும், எதிர்கொள்ளும் எதிரிப்படை ஆகப்பெரிதாக உள்ளபோதும், எதிரிப்படை அவ்வளவு பெரிதாக இல்லாவிடினும் அது பிற எதிரிப்படைகளுக்கு மிக அருகாமையில் உள்ளபோது சில சமயங்களிலும், தனிப்பட்டில்லாததும் பலமாக நிலை பெற்று உள்ளதுமான ஒரு எதிரிப்படையுடன் வெற்றிக்குச் சாத்தியப்பாடு இல்லாத ஒரு கைகலப்பைத் தொடர்வது, சண்டையிடுவது பொதுவாகத் தவறானதாகும். இந்த நிலைமைகளுள் எந்த ஒன்றிலும் விலகிச் சென்றுவிட வேண்டும். விலகிச் செல்வதின் அவசியத்தை அங்கீகரிப்பது சண்டையிடுவதின் அவசியத்தை அங்கீகரிப்பதையே அடிப்படையாகக் கொண்டது என்பதில்தான் நடமாட்ட யுத்தமுறையின் அடிப்படையான குணாதிசயம் உள்ளது.

நடமாட்ட யுத்தத்தை நடத்துவதாகிய செயல், வேவு பார்த்தல், மதிப்பிடல், முடிவு செய்தல், சண்டைக்குப் படைகளை அணிவகுத்தல், ஆணை, மறைப்பு, குவித்தல், முன்னேறல், படைக்கூறுகளை அணிவரிசைப்படுத்துவது, தாக்குதல், துரத்துதல், திடீர்த்தாக்குதல், ஸ்தானத் தாக்குதல், ஸ்தானத் தற்காப்பு, எதிர்ப்படும் போர், பின்வாங்கல், இரவுச்சண்டை,

விசேஷ போர்கள், பலமானவற்றிலிருந்து விலகிச் செல்வதும் பலவீனமானவற்றைத் தாக்குவதும், எதிரியின் உதவிக்கு வரும் படைகளைத் தாக்குவதற்காக முற்றுகையிடுவது, தாக்குவது போன்ற நடிப்பு, விமானங்களுக்கு எதிராகத் தற்காப்பு, பல எதிரிப் படைகளின் மத்தியில் செயல்படுதல், எதிரெதிரே சந்திப்பதை விலக்கித் தாக்குவது, அடுத்தடுத்த போர் நடவடிக்கைகள் பின்னணிப் பிரதேசம் இல்லாமல் செயல்படுதல், ஓய்வினது, சக்தியைச் சேகரித்துக்கொள்வதினதும் அவசியம் ஆகியன போன்ற பல பிரச்சினைகள் சம்பந்தப்பட்டது. பெரும் சேனையோ வெடிமருந்துக் கையிருப்புகளோ இல்லாதவரையும், ஒவ்வொரு தளப்பிரதேசத்திலும் சண்டை செய்வதற்கு ஒரே ஒரு செஞ்சேனைப்படை மட்டுமே உள்ளவரை நடமாட்ட யுத்தமே பிரதானமானதாக நீடிக்கும். இவை பூர்த்தியாகும் போது ஸ்தான யுத்தமுறை தொடங்கும். செஞ்சேனையில் இயந்திர நுட்பவியல், ஸ்தாபன ரீதியான சூழ்நிலைகள் மாறியும் செஞ்சேனையைக் கட்டி வளர்த்தல் ஒரு புதிய கட்டத்தில் பிரவேசித்தும் விட்டிருக்கும்போது, செஞ்சேனையின் போர் நடவடிக்கைத் திக்குகளும், சண்டை முனைகளும் ஒப்பீட்டளவில் ஸ்திரமாக இருக்கும்; இதுதான் ஸ்தான யுத்தமாகும்.

கொரில்லாவாதத்தை ஆரம்ப காலங்களில் செஞ்சேனை அடியோடு நிராகரிப்பதில்லை. கொரில்லா வாதத்திற்கு இரு அம்சங்கள் உள்ளன. ஒன்று கிரமமின்மை, அதாவது பன்முகப் பாடு, ஒரு சீரான தன்மை இல்லாதது, கறாரான கட்டுப்பாடின்மை, எளிமையான வேலைமுறைகள் ஆகியன. இந்த இயல்புகள் செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகளது இளமையினின்றும் தோன்றுபவை. இவற்றில் சில சரியாக அந்த சமயத்தில் தேவைப்படும். கொரில்லாவாதத்தின் மற்ற அம்சம் நடமாட்ட யுத்தமுறைக் கோட்பாடு. அவசியமான யுத்ததந்திர ரீதியான போர் நடவடிக்கைகள் இரண்டினதும் கொரில்லாத் தன்மை, தளப்பிரதேசத்தின் நிர்மாணத்தை திட்டமிடுதலில் வளைந்து கொடுக்கும் தன்மை, செஞ்சேனையைக் கட்டி வளர்ப்பதில் காலம் வருமுன்பான கிரமப்படுத்தலை நிராகரித்தல் ஆகியவற்றால் ஆனது. புரட்சிகர யுத்தத்தின் ஆதிமுதல் காலகட்டங்களில் இந்த மாதிரியான கொரில்லாவாத அடிப்படையிலான போர்முறை மிகவும் முக்கியமானதாகும். இதை மறுப்பதும், தேவையான காலம்வரை நீடிப்பதை எதிர்ப்பதும், எதிர்வரும் வளர்ச்சிக்காகவும், புதிய கட்டத்துக்காகவும் இப்பொழுதே குருட்டுத்தனமாக ஓடுவதற்காக கண்மூடித்தனமாக தாவிச் செல்வதும் பாதகமானவை; எதிர்க்கப்பட வேண்டியவை.

கொரில்லாப் படைப்பிரிவுகள் வளர்ந்து செஞ்சேனை மேலும் உயர்ந்த ஒரு கட்டத்தை எட்டுகையில் செஞ்சேனை மேலும் மத்தியப்பட்டதாகவும், மேலும் ஒரு சீரான தன்மையுடையதாகவும், மேலும் கட்டுப்பாடுடையதாகவும் அதன் வேலையில் மேலும் செம்மையுடையதாகவும் — சுருங்கக் கூறினால், தன்மையில் மேலும் கிரமமானதாக ஆக்கக் கூடியதாக கொரில்லா வாதத்தின் அம்சங்களைச் சிறிது சிறிதாகவும் அறிவுப்

பூர்வமாகவும் மாற்றிட வேண்டும். போர் நடவடிக்கைகளை வழி நடத்துவதில் மேலும் ஒரு உயர்ந்த கட்டத்தை எட்டும்போது தேவைப்படாத கொரில்லா குணாதிசயங்களையும் சிறிது சிறிதாகவும் அறிவு பூர்வமாகவும் குறைக்க வேண்டும். இந்த வகையில் முன்னேற்றமடைய மறுப்பதும், பழைய கட்டத்தில் முரண்டுப் பிடியாக நிற்பதும் தீங்கானவையும், பெரும் ரீதியிலான போர் நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிக்க கூடியதுமாகும். இந்தியப் புரட்சிகர யுத்தம் நீண்டதாகவும் ஈவிரக்கமற்றதாகவும் இருக்குமாதலால் கொரில்லா யுத்தம் அவசியமாக நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடைவதைத் தவிர வேறு வழியில்லை. இதன் காரணமாகவே கொரில்லாப் படைப்பிரிவுகள் அவசியமான புடமிடலுக்கு உட்பட்டுத் தம்மைச் சிறிது சிறிதாகக் கிரமமான படைகளாக மாற்றிக்கொள்வதும் அவ்வாறாக அவற்றின் நடவடிக்கை முறைகள் சிறிது சிறிதாக கிரமப்படுவதும் கொரில்லா யுத்தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடைவதும் சாத்தியம். கொரில்லாத் தளகர்த்தர்கள் கொரில்லா யுத்தத்தை நடமாட்ட யுத்தமாக மாற்றும் கொள்கையில் விடாப்பிடியாக இருக்கவும் அதை ஒழுங்கு முறையாக நிறைவேற்றவும் வேண்டுமெனில், இந்த அபிவிருத்தியின் அவசியமான தன்மையையும் சாத்தியமான தன்மையையும் தெளிவாக உணர்ந்து செயல்பட வேண்டும்.

கொரில்லா யுத்தம் நடத்தும் கொரில்லாக் கூறுகளை நடமாட்ட யுத்தம் நடத்தும் கிரமமான படைகளாக ாற்றுவதற்கு எண்ணிக்கையில் அதிகரிப்பு, தரத்திற் சிறப்படைவு ஆகிய இரு நிபந்தனைகளும் பூர்த்தி பெறவேண்டும். படைகளில் சேர மக்களை நேரடியாக அணிதிரட்டுவது போக சிறுகூறுகளை ஒன்று சேர்ப்பதாலும் கூடிய எண்ணிக்கை அடையப்படலாமாகையால், மேலும் சிறந்த தரம் யுத்தத்தினூடாக போராளிகளை உரமேற்றுவதிலும் அவர்களின் ஆயுதங்களைச் சிறப்பாக்குவதிலும் தங்கியுள்ளது. சிறு கொரில்லாப் படைப்பிரிவுகளை ஒன்று சேர்ப்பதில் ஒருபுறம், கவனம் பிரத்தியேகமாக ஸ்தல நலன்களிற் செலுத்தப்பட்டு மத்தியப்படுத்தல் தடங்கலுறுவதான ஸ்தலவாதத்திற்கு எதிராகவும், மறுபுறம் ஸ்தல நலன்களைச் சட்டை செய்யாது ஒதுக்கித் தள்ளப்படுவதான சுத்த ராணுவக் கண்ணோட்டத்திற்கு எதிராகவும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்.

பல சமயம் ஸ்தல நலன்களில் கண்ணும் கருத்துமாகப் பொது நலன்களைப் புறக்கணித்து அல்லது பெரிய குழுக்களாகச் சேர்ந்து செயலாற்றுவதில் பரிச்சயமற்றிருப்பதால் ஒவ்வொன்றும் தனியாக செயல்படுவதை விரும்புவது ஆகியவற்றின் காரணமாக ஸ்தலவாதம் ஸ்தலக் கொரில்லாப் படைப்பிரிவுகள் மத்தியிலும் ஸ்தல அரசாங்கங்கள் மத்தியிலும் நிலவும். பிரதான கொரில்லாப் படைப்பிரிவுகளின் அல்லது கொரில்லா வியூகங்களின் தளகர்த்தர்கள் இச்சூழ்நிலைகளைக் கணக்கில் எடுக்கவும் ஸ்தலங்களை அவற்றின் படைகளில் சிறிதளவைத் தொடர்ந்து விரிவுபடுத்தவும் விட்டுவிட்டு, ஸ்தலக் கூறுகளில் ஒரு பகுதியைச்

சிறிது சிறிதாக ஒன்றுசேர்ப்பதான முறையைக் கைக்கொள்ளவும் வேண்டும்; தளகர்த்தர்கள் முதலில் சிறு குழுக்கள் உரசலின்றிப் பெரிய குழுவில் ஒன்றக் கூடியதாக இந்தக் கூறுகளை கூட்டான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவும், பின்னர் அவற்றின் ஆதியி லிருந்த அமைப்பைத் தகர்க்காமலும், அவற்றின் இயக்குனர்களை இட, பதவி மாற்றங்கள் செய்யாமலும் அவற்றின் ஒன்றுபடுத் துதலை நடத்த வேண்டும்.

ஸ்தலவாதத்திற்கு மாறாக சுத்த ராணுவக் கண்ணோட் டம் பிரதான படைகளில் தங்கள் சொந்த பலத்தை வளர்ப்பதில் மட்டும் நாட்டமுள்ளவர்களும் ஸ்தல ஆயுதந்தரித்த கூறுகளுக்கு உதவி செய்வதைப் புறக்கணிப்பவர்களுமானோர் கொண்டுள்ள தவறான கண்ணோட்டமாகும். கொரில்லா யுத்தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தி அடைவது என்பதன் அர்த்தம் கொரில்லா யுத்தம் முழுமையாக கைவிடப்படுவதல்ல. மாறாகப் பரவலான கொரில்லா யுத்தத்தின் மத்தியில் நடமாட்ட யுத்தம் நடத்த வல்லதான பிரதானப் படையொன்று தன்னைச் சுற்றி இன்னும் விரிவான கொரில்லா யுத்தம் நடாத்தும் எண்ணிறந்த கொரில்லாக் கூறுகளைக் கொண்டே இருக்க வேண்டியதான படையொன்று சிறிது சிறிதாக உருவாக்கப்படுவதே என்பதை உணராததால் சுத்த ராணுவக் கண்ணோட்டம் எழுகிறது. எண் ணிறந்த கொரில்லாப் படைப்பிரிவுகள் பிரதான படைக்கு சக்தி மிக்கவையான துணைப்படைகளும், அதன் தொடர்ச்சி யான வளர்ச்சிக்கான முடிவுறாத கையிருப்பு படைகளாகப் பயன்படுபவையாகும். ஆகவே சுத்த ராணுவக் கண்ணோட் டத்தின் விளைவாக ஸ்தல மக்களினதும் ஸ்தல அரசாங்கத்தி னதும் நலன்களைப் புறக்கணிக்க கூடாது. பிரதானப் படை யின் விஸ்தரிப்பு ஸ்தல ஆயுதந் தரித்த கூறுகளின் அதிகரிப்பு இரண்டுக்குமே உரிய கவனம் செலுத்த வேண்டும்.

"கொரில்லாக் கூறுகளின் தரத்தை உயர்த்துவதற்கு அவை சிறிது சிறிதாகத் தம்மைக் கிரமமான படைகளின் மாதிரியில் அமைத்துக் கொள்ளவும் தம் கொரில்லாப் போக்குகளைக் களையவும் கூடியதாக, அவற்றின் அரசியல், ஸ்தாபன மட்டத்தை உயர்த்துவதும், அவற்றின் சாதனங்கள், இராணுவ நுட்பம், யோர்த்தந்திரங்கள், கட்டுப்பாடு ஆகியவற்றைச் சிறப் பாக்குவதும் இன்றியமையாதவை. அரசியல் ரீதியில் தளகர்த்தர் களையும் போராளிகளையும் கொரில்லாக் கூறுகளைக் கிரமமான படைகளின் மட்டத்திற்கு உயர்த்துவதன் அவசியத்தை உணரும்படி செய்வதும், அவர்களை இந்தக் குறிக்கோளுக்காகப் பிரயாசைப்பட ஊக்குவிப்பதும், அரசியல் வேலையைக்கொண்டு அது அடையப்படுதலை உத்திரவாதம் செய்வதும் இன்றியமை யாதன. ஸ்தாபன ரீதியில் பின்வரும் வகைகளில் கிரமமான வியூகமொன்றிற்கு அவசியமான தன்மைகளனைத்தையும் சிறிது சிறிதாக நிறைவு செய்வது இன்றியமையாதது—ராணுவ அரசியல் அங்கங்கள் உத்தியோகத்தர் வேலை முறைகள், கிரம மான பண்ட வரத்து ஒழுங்கு, வைத்திய சேவை இன்னும் இவை போன்றவை. சாதனாதிகள் விஷயத்தில், மேலும் சிறந்தவையும்

மேலும் பல ரகப்பட்டவையுமான ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதும் அவசியமான தொடர்பு சாதனங்களின் வரத்தை அதிகரிப்பதும் இன்றியமையாதவை. ராணுவ நுட்பத்தினதும் போர்த்தந்திரங்களினதும் விஷயத்தில் கொரில்லாக் கூறுகளைக் கிரமமான வியூகமொன்றிற்குத் தேவையான மட்டத்திற்கு உயர்த்துவது இன்றியமையாதது. கட்டுப்பாட்டின் விஷயத்தில் ஒரு சீரான தராதரங்கள் கடைபிடிக்கவும், ஒவ்வொரு உத்தரவும் தவறாது நிறைவேற்றவும், பொறுப்பற்ற தன்மையும் தளர்ச்சியும் முற்றாக ஒழிக்கப்படக் கூடியதாகக் கட்டுப்பாட்டின் மட்டத்தை உயர்த்துவது இன்றியமையாதது. இந்தப் பணிகளை எல்லாம் சாதிப்பதற்கு நீண்ட பிரயாசை தேவை, அது இரவோடிரவாகச் செய்து முடிக்கப்பட இயலாது; ஆனால் இதுவே நாம் அபிவிருத்தியடைய வேண்டிய திசை. இவ்வாறாக மட்டுமே ஒவ்வொரு கொரில்லாத் தளப்பிரதேசத்திலும் பிரதான படையொன்று கட்டி எழுப்பப்படவும் எதிரியின் மீது மேலும் பயனுள்ள விதமான தாக்குதல்களுக்காக நடமாடும் யுத்தமுறை தோன்றவும் முடியும். கிரமமான படைகளால் படைப்பிரிவுகள் அல்லது இயக்குனர்கள் அனுப்பப்பட்டுள்ளவிடத்து இவ்விலக்கு ஒப்புநோக்காக இலகுவாக அடையப்பட முடியும். ஆகவே கொரில்லாக் கூறுகளுக்கு அவை கிரமமான கூறுகளாக அபிவிருத்தியடைய உதவி செய்யும் பொறுப்பு கிரமமான படைகள் எல்லாவற்றுக்கும் உண்டு'' (ஷிநூல், பக் 374-375)

இந்தியப் புரட்சிகர யுத்தம் நீண்டகால யுத்தமாகையால் செஞ்சேனையைப் புதிதாகக் கட்டி வளர்த்து பலமான எதிரியை முறியடிக்க வேண்டியுள்ளதாலும், அது மூன்று கட்டங்களைக் கொண்டதாக இருக்குமென்று அனுமானிக்கலாம். முதலாவது கட்டம் எதிரியின் யுத்ததந்திர ரீதியிலான தாக்குதலும் எமது யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பும் அடங்கியதாயிருக்கும். இரண்டாவது கட்டம் எதிரியின் தெரிந்தெடுத்த தாக்குதலும், பாதுகாப்பினதும், எமது எதிர்த் தாக்குதலுக்கான தயாரிப்பினதும் காலகட்டமாக இருக்கும். மூன்றாவது கட்டம் எமது யுத்ததந்திர ரீதியிலான எதிர்த்தாக்குதலினதும் எதிரியின் யுத்ததந்திர ரீதியிலான பின்வாங்கலினதும் காலகட்டமாயிருக்கும். மூன்று கட்டங்களினதுமான திட்டவட்டமான நிலைமைகளை முன்னறிந்து கூறுவது அசாத்தியமெனினும், பிற நாடுகளது மக்கள்யுத்தப்பாதையின் வளர்ச்சிப்போக்கு பற்றிய அனுபவங்களிலிருந்தும், இன்றைய சூழ்நிலைகளிலிருந்தும் சில பிரதான போக்குகளைச் சுட்டிக்காட்ட முடியும். அது பின்னர் வரும் பருண்மையான உண்மைகளுடன் பூரணமாக இணங்காது போகவும் அல்லது அவற்றில் திருத்தப்படவும் கூடுமெனினும், அப்போதும் நீண்டகால யுத்தத்திற்கு உறுதியான குறிக்கோளுடன் கூடிய யுத்ததந்திர வழிகாட்டல் தருவ்துதும் அவசியமாகும். ஒரு முறை புரட்சிகர யுத்தம் தொடங்கியபின் போர்த்தந்திர ரீதியிலான தற்காப்பு மட்டுமே அனுமதிக்க முடியும், யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் மட்டுமே இருக்கவேண்டும்

என்று கூறுவோர் யுத்தத்தின் நீண்டகால மக்கள்யுத்தப்பாதையின் வளர்ச்சிப்போக்கு பற்றிய விதிகளைப் புரியாதவர்களே ஆவர்.

முதற் கட்டத்தில் பலத்தில் எதிரி உயர்ந்தவன், நாம் தாழ்ந்தவர்கள் என்ற நிலை இருக்கும். இந்தக் கட்டத்தில் பொறுமையாகவும், நிதானமாகவும், சிறிது சிறிதாகவே கொரில்லா மண்டலங்களையும் தளப்பிரதேசங்களையும் நிறுவி வளர்க்க முடியுமாதலாலும், எதிரி நம்மைத் துடைத்தொழிக்க மூர்க்கத்தனமான பலம்கொண்டு தாக்குவானாகையாலும், யுத்தம் நீண்டதாகவும், ஈவிரக்கமற்றதாகவும், இடர்ப்பாடுகள் மிக்கதாகவும் இருக்கும். எனவே புரட்சியின் பக்கமிருக்கும் அணிவரிசையில் ஊசலாட்டப்போக்குகள் தோன்றுவதும், உறுதியின்மையும் எழலாம்; அவை முறியடிக்கப்பட வேண்டும். அதே சமயம் கொரில்லாப் படைகள், செஞ்சேனை கொரில்லா மண்டலங்கள், தளப்பிரதேசங்கள் தோன்றி வளர்வதும், நீடித்திருப்பதும் பரந்துபட்ட மக்களிடையே நம்பிக்கையை உருவாக்குவதாகவும், நீண்டகால யுத்தமொன்றை நடத்துவதற்கும் இறுதி வெற்றியை ஈட்டுவதற்குமான வல்லமையும் அனுபவமும் என்ற சாதகமான அம்சங்களும் ஏற்படும். யுத்ததந்திர ரீதியிலான தற்காப்புக் கட்டத்திலேயும் கூட தாக்குதல் மற்றும் தற்காப்புத் தன்மையுடைய எண்ணிறந்த போரியக்க நடவடிக்கைகளும் போர்த்தந்திர நடவடிக்கைகளும் அடங்கும். யுத்தத்தின் இந்தக் கட்டத்தின் முன் பகுதியில் கொரில்லா யுத்தமுறை பிரதானமான வடிவமுடையதாகவும், பின்பகுதியில் நடமாடும் யுத்தமுறை பிரதானமான வடிவமுடையதாகவும், துணையாக கொரில்லா யுத்தமுறையும் ஸ்தான யுத்தமுறையின் சில அம்சங்களும் இருக்கும். கொரில்லாப் படைப்பிரிவுகள் கிரமமான செஞ்சேனையாக வளர்த்தெடுக்கப்பட்டு முன் பகுதியின் இறுதியில் பூரணமான கிரமமான செஞ்சேனையாக இருக்கும். ஆனால் இந்த நடமாடும் யுத்தமும் கொரில்லாத் தன்மையுடையதாக இருக்கும்.

இரண்டாவது கட்டத்தில், பலத்தில் எதிரி சிறிது சிறிதாகத் தாழ்வதும், நாம் சிறிது சிறிதாக உயர்வதும் எதிரிக்கும் நமக்கும் இடையில் கிட்டத்தட்டசம நிலையும் நிலவும். இதன் இறுதியில் தாழ்வு நிலையிலிருந்து நாம் மீளுவதும் உயர்ந்த நிலையை எதிரி இழப்பதும் சக்திகளின் பலாபலத்தில் முன்பு இருந்ததற்கு மறுபுறமாகத் திரும்புவதும் நடக்கும். இந்தக் கட்டத்தின் ஆரம்பத்தில் எதிரி எங்கெங்கும் தாக்குதல் என்ற நிலையிலிருந்து தெரிந்தெடுத்து தாக்குவது என்ற நிலைக்குத் தள்ளப்படுவான். இவற்றை முறியடித்து செஞ்சேனை எதிர்த் தாக்குதலுக்கான தயாரிப்பிலும் இறுதியில் தெரிந்தெடுத்து தாக்குதல் என்ற நிலைக்கும் உயரும். யுத்ததந்திர ரீதியிலான இழுபறி நிலை என்கிறபோது யுத்தமே இல்லாத ஒரு தேக்கநிலை சலனமற்ற நிலை என்பதல்ல பொருள்; மாறாக, போரியக்க நடவடிக்கைகளும், போர்த்தந்திர நடவடிக்கைகளும் தொடர்ந்து ஈவிரக்கமற்றவையாக நீடிக்கும். கணிசமான அளவு—ஒப்பு நோக்காக—நீண்டதாக இருக்கும் இக்கட்டத்தின் இடர்பாடு

களையும் துன்பங்களையும் ஈடுகொடுத்து சீர்குலைவுகளை முறியடிக்க வேண்டும். போர்நுட்பத்தை ஒழுங்குமுறையாக அபிவிருத்தி செய்வதும், ஆயுதப் படைகளை புனரமைப்பதும், முழு மக்களை அணிதிரட்டவும், எதிர்த் தாக்குதலுக்கு தயாரிக்கவும் வேண்டும். இந்தக் கட்டம் முழுவதும் நடமாட்ட யுத்தமே பிரதானமானதாகவும் கொரில்லா யுத்தமுறையும், ஸ்தான யுத்தமுறையும் துணையானவையாகவும் நீடிக்கும்.

மூன்றாவது கட்டத்தில், பலத்தில் எதிரி தாழ்ந்த நிலையிலும் நாம் உயர்ந்த நிலையிலும் இருப்போம். நமது யுத்தம் யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு யுத்தமாக இருக்காது; மாறாக யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல்களாக வெளிப்பாடு அடையும் ஒரு யுத்ததந்தர ரீதியிலான எதிர்த் தாக்குதலாக மாறும். இது நீண்டகால யுத்தத்தில் கடைசி கட்டமாக இருக்கும்; நாம் யுத்தத்தில் இறுதிவரை விடாப்பிடியாக இருப்பது பற்றிப் பேசும்போது நாம் கருதுவதும் இந்தக் கட்டத்தினூடாக இறுதிவரை செல்வதையே. இந்தக் கட்டத்திலும் நமது முதன்மையான போரிடும் வடிவம் இன்னும் நடமாட்ட யுத்தமாகவே இருக்கும், ஆனால் ஸ்தான யுத்தம் முக்கியத்துவம் பெறும். இரண்டாவது கட்டத்தில் ஸ்தான தற்காப்பு யுத்தமுறையும் நடமாட்ட யுத்தத்துக்கு துணையாக இருந்து மூன்றாவது கட்டத்தில் ஸ்தானத் தாக்குதலாகவும் கணிசமான முக்கியத்துவமுடையதாகவும் மாறும். இந்தியாவினுடைய அரசியல் பொருளாதார அபிவிருத்தியின் ஏற்றந்தாழ்வு காரணமாக மூன்றாவது கட்டத்தின் யுத்ததந்திர ரீதியான தாக்குதலும் அதன் முதற்பகுதியில் நாடு பூராவிலும் ஒரே சீரானதாக, சமமானதாக இருக்காது. மாறாக இங்கு உயர்ந்தும் அங்கு தாழ்ந்தும் பிரதேசவாரியான இயல்புடையதாக இருக்கும். பிற்பகுதியில் அலையலையாக முன்னேறி நகரங்களைச் சுற்றி வளைத்துக் கைப்பற்றுவதாக இருக்கும்.

கொரில்லா யுத்தம் தொடங்கியவுடன் ஒவ்வொரு செங்கொரில்லாப் படைப்பிரிவும், ஒவ்வொரு செஞ்சேனைக் கூறும், ஒவ்வொரு செந்தளப்பிரதேசமும் எதிரியால் அடிக்கடி 'சுற்றி வளைத்து அடக்குத'லுக்கு உட்படுத்தப்படும்; செஞ்சேனையின் நடவடிக்கைகள் 'சுற்றி வளைத்து அடக்குத'லுக்கு எதிரான நடவடிக்கைகளின் வடிவத்தை எடுப்பதும் தவிர்க்க முடியாததாகிறது. இவ்வாறு சுற்றிவளைத்து அடக்குதலும் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் உள்நாட்டு யுத்தத்தின் பிரதான வடிவமாக இருக்குமென்பது மக்கள் யுத்தப்பாதையின் விதியாகும். உள்நாட்டு யுத்தத்தினிடத்தில் தேசிய யுத்தம் வந்தால் அல்லாமல், எதிரி பலவீனமானவனாயும் செஞ்சேனை பலமானதாயும் ஆகும் வரை செஞ்சேனையும் தளப்பிரதேசங்களும் 'சுற்றி வளைத்து அடக்கு'தலுக்கு உட்படுவதும் அதற்கு எதிரான, நடவடிக்கைகளும் நீடிக்கும். செஞ்சேனையைப் பொருத்தவரை வெற்றி என்றாலே பிரதானமாக 'சுற்றிவளைத்து அடக்கு'தலுக்கு எதிராகப் போரிடுவதில் பெறும் யுத்ததந்திர ரீதியிலான வெற்றியும் போர் நடவடிக்கைகளிலான வெற்றியுமே ஆகும். ஒவ்வொரு 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கைக்கும்

எதிரான போராட்டம் வழமையாகப் பெரியவையும், சிறியவையுமான பல சண்டைகளைக் கொண்டதான ஒரு போரியக்கமாகிறது. பல சண்டைகள் வெல்லப்பட்டிருந்தபோதும்கூட ஒரு 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கை, அடிப்படையாகத் தகர்க்கப்படும்போது மட்டுமே யுத்ததந்திர ரீதியான வெற்றி அல்லது போர் நடவடிக்கையில் முழுமையான வெற்றி பெற்றதாகக் கருதவேண்டும். இவ்வாறு செஞ்சேனையினுடைய யுத்தத்தின் வ ர லா றே 'சுற்றிவளைத்து அடக்குத'லுக்கு எதிரான நடவடிக்கையின் வரலாறாக இருக்கும்.

எதிரியின் 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கைகளிலும் அவற்றுக்கு எதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகளிலும் சண்டையிடுதலின் இரு வடிவங்களிலும், தாக்குதல், தற்காப்பு இரண்டும் இருக்கும். எல்லா காலங்களிலும் எல்லா நாடுகளிலுமான யுத்தங்களிலும் இவை கொண்டிருக்கும்; எனினும் அவற்றிலிருந்து மக்கள் யுத்தப்பாதையின் விசேஷ குணாதிசயம் இவ்விரு வடிவங்களும் ஒரு நீண்ட காலத்திற்குத் திரும்பத் திருப்ப ஒன்று மாறி ஒன்று இடம் பெறுவதாகும். ஒவ்வொரு 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கையிலும் எதிரி செஞ்சேனையின் தற்காப்பிற்கு எதிராக தாக்குதலையும், அவனது தாக்குதலுக்கு எதிராக செஞ்சேனை தற்காப்பையும் கடைபிடிப்பது 'சுற்றிவளைத்து அடக்குத'லுக்கு எதிரான நடவடிக்கையின் முதற்கட்டம். பின்னர் எதிரி செஞ்சேனையின் தாக்குதலுக்கு எதிராகத் தற்காப்பையும், செஞ்சேனை அவனது தற்காப்புக்கு எதிராகத் தாக்குதலைக் கடைபிடிப்பது 'சுற்றிவளைத்து அடக்குத'லுக்கு எதிரான நடவடிக்கையின் இரண்டாவது கட்டம். ஒவ்வொரு 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கைக்கும் இந்த இரு கட்டங்கள் உள்ளன; இவை நீண்ட கால கட்டத்திற்கு ஒன்று மாறி ஒன்று இடம் பெறுகின்றன. அதாவது யுத்தத்தினதும் சண்டையிடுதலினதும் இந்த இரு வடிவங்களும் இந்த இரு கட்டங்களும் திரும்பத் திரும்ப இடம் பெறுகின்றன. ஆனால் ஒரு யுத்தத்தின் அல்லது சண்டையின் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில், அது வெறுமனே திரும்பத் திரும்ப இடம் பெறுவதால் ஆனதல்ல; மாறாக ஒவ்வொரு தடவையும் வேறு விதமானதாகும். இதே போன்று ஒவ்வொரு 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கையையும் விட, ஒவ்வொரு 'சுற்றிவளைத்து அடக்குத'லுக்கு எதிரான நடவடிக்கையையும் விட, அடுத்தடுத்தனவற்றின் அளவு மேலும் பெரிதாகிறது. நிலைமை மேலும் சிக்கலானதாகிறது, சண்டை மேலும் உக்கிரமானதாகிறது என்பதும் ஒரு விதியாகிறது. ஆனால் ஏற்ற இறக்கங்கள் எதுவும் இல்லையென்று அதற்குப் பொருளல்ல. செஞ்சேனை பெருமளவு பலவீனப்படுத்தப்படுவதாக ஒரு 'சுற்றிவளைத்து அடக்குதல்' செஞ்சேனைக்குத் தோல்வியானதாக—எதிரிக்கு வெற்றிகரமானதாக — முடிந்தால் நடவடிக்கைகளின் அளவு மீண்டும் சிறியதாகவும் நிலைமை எளிமையானதாகவும், சண்டை உக்கிரம் குறைந்ததாகவும் மாறிவிடலாம்.

ஒரு 'சுற்றிவளைத்து அடக்குத'லுக்கு எதிரான நடவடிக்கை முழுக்கவும் தோல்வியுறுவது மட்டுமே—ஆனால் அதுவும்கூட பகுதியளவிலானதும் தற்காலிகமானதும்தான்—யுத்ததந்திர ரீதியான தோல்வியாகும். செஞ்சேனை முழுக்கவும் அழிக்கப்படுவதுதான் உள்நாட்டு யுத்தத்தில் தோல்வியாகும்; ஆனால் சாதாரணமாக இது நடவாது. சில சமயங்களில் நமது தற்காப்பை எதிரியின் தாக்குதல் முறியடிக்குமனால்—நாம் நமது தற்காப்பைத் தாக்குதலாக மாற்றத் தவறினால்—நமது தற்காப்பு பின்வாங்குதலாகவும் எதிரியின் தாக்குதல் நம்மைத் துரத்துவதாகவும் மாறும். அதாவது நமது யுத்ததந்திர ரீதியான தற்காப்பு அதன் தொடர்ச்சியாக யுத்ததந்திர ரீதியான பின் வாங்குதலாகவும், எதிரியின் யுத்ததந்திர ரீதியான தாக்குதல் அதன் தொடர்ச்சியாக துரத்துவதாகவும் மாறும். இதன் விளைவு யுத்ததந்திர ரீதியான நகர்வு—நீண்ட பயணம். அதே போன்றுதான் எதிரிக்கும்; எதிரியின் ஒரு 'சுற்றிவளைத்து அடக்குதல்' நடவடிக்கை உடைத்தெறியப்பட்டு, நமது தற்காப்பு ஒரு தாக்குதலாகும்போது எதிரி தற்காப்பிற்குத் திரும்பி அடுத்த 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கை தொடுக்கும்முன் மறு அணிதிரட்டலுக்கு நிர்ப்பந்திக்கப்படும்போது எதிரிக்கு யுத்த தந்திர ரீதியிலான தோல்வி ஏற்படுகிறது. ஒரு 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்தில் எதிரியின் தற்காப்பு அதன் தொடர்ச்சியாக பின்வாங்குதலாக ஆகும்போது செஞ்சேனையின் தாக்குதல் தொடர்ச்சியாக துரத்துவதாகவும் மாறும். ஆனால் எதிரி நாடு முழுவதும் ஆள்வதாலும் பலமானவனாகையாலும் யுத்ததந்திர ரீதியான நகர்வு இராது; பகுதி ரீதியான நகர்வு மட்டுமே இருக்கும். சில சமயங்களில் செஞ்சேனை எதிரிப்படைகளைச் 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கை எடுத்து எதிரியின் தற்காப்பை முறியடிக்கும்போது எதிரி பகுதி ரீதியான நகர்வு செய்வான். உள்நாட்டு யுத்தம் நீண்டு, செஞ்சேனையின் வெற்றிகள் மேலும் விசாலமானவை யாக ஆகுமானால், இந்த விதமான காரியம் மேலும் அதிகமாக நடக்கும். ஆனால் எதிரிக்கு மக்கள் ஆதரவு இல்லாதது, அவனது தளபதிகளும் போர்வீரர்களும் தார்மீக உணர்வு குறைவுபட்டு பிளவுபடுவது போன்றவைகளால் செஞ்சேனையைப் போன்று யுத்ததந்திரம் பின்வாங்குதலை நீடிக்கவோ, வெற்றிகொள்ளவோ முடியாது.

ஒரு காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாட்டினுடைய மக்கள்யுத்தப்பாதையின் நீண்டகாலத் தன்மை, அசாதாரணமாக இந்த யுத்தத்தின் போது 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கைகளும், அவை தேற்கடிக்கப்படுவதும் நீண்டகாலமாகத் திரும்பத்திரும்ப இடம் பெறும் என்ற விதியையும் அங்கீகரிக்கத்தவறினால் 'இடது' சந்தர்ப்பவாத விலகல் நேரிடும். மக்கள் யுத்தப்பாதையை ஏற்ற சாருவும் பிற இடது சந்தர்ப்பவாதிகளும் அதன் இந்த விதியைப் பின்பற்றத் தவறினர், பெரும் இழப்புக்குள் தள்ளினர்.

இவ்வாறு எதிரியின் 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கைகள், அவற்றுக்கெதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகள்

திரும்பத்திரும்ப இடம் பெறும் வடிவம், உள்நாட்டு யுத்தம் நீடித்தால் எதிரியினதும் நமதும் சக்திகளின் பலாபலத்தில் அடிப்படையான மாற்றமொன்று நிகழும் போது முடிவுறும். அதாவது எதிரியைவிட செஞ்சேனை பலம் வாய்ந்ததாகும் போது அது முடிவுறும்; அப்போது நாம் எதிரியைச் 'சுற்றி வளைத்து அடக்கு'வோம்; 'சுற்றி வளைத்து அடக்குத' லுக்கு எதிரான நடவடிக்கைகளை எதிரி நாட வேண்டியிருக்கும்; ஆனால் அரசியல், ராணுவ நிலைமைகள் எதிரியைச் செஞ்சேனை 'சுற்றி வளைத்து அடக்குதலுக்கு' எதிரான அதன் நடவடிக்கைகளில் அடையும் அதே ஸ்தானத்தை அடைய அனுமதிக்கமாட்டா. அதே சமயம் 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கைகள் திரும் பத்திரும்ப இடம் பெறும் வடிவம் முற்றாக இல்லாவிட்டாலும் பெரும்பாலுமாவது முடிவுக்கு வந்துவிடுவது நிச்சயம்.

## மக்கள் யுத்தத்தின் பொதுவிதிகளின் தொகுப்பு

செஞ்சேனை ஒன்று உருவாகி அது நாட்டின் சில கிராமப்புறப் பகுதிகளில் தளப்பிரதேசங்களை உருவாக்கி நாடு தழுவிய புரட்சிகரப் பேரலையைத் துரிதமாக்கி, தளப்பிரதேசத்தை உறுதிப்படுத்தி, விரிவாக்கி, அலையலையாக முன்னேறி நகர்ப்புறங்களைச் சுற்றி வளைத்து, எதிரியை முறியடித்து இறுதியில் நாடுதழுவிய ரீதியில் அரசியலதிகாரத்தை வென்றெடுப்பதும் நடக்கும். பின்வருபவை இந்த மக்கள்யுத்தப்பாதையின் பொது விதிகளாகும்:

1) நீண்டகாலத் தன்மை கொண்டதாயும் ஈவிரக்கமற்றதாயும் இருக்கும்.

2) 'சுற்றி வளைத்து அடக்குதலும்' அதற்கு எதிரான நடவடிக்கைகளும் உள்நாட்டு யுத்தத்தின் பிரதான வடிவமாகும்.

3) எதிரியின் 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கைகளிலும் அவற்றுக்கு எதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகளிலும் சண்டையிடுதலின் இரு வடிவங்களும், தாக்குதல், தற்காப்பு இரண்டும் ஒரு நீண்ட காலத்திற்குத் திரும்பத் திரும்ப ஒன்றுமாறி ஒன்று இடம் பெறும்.

4) இவ்வாறு திரும்பத்திரும்ப இடம் பெறுவதாக இருந்தாலும் ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு விதமானதாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கையோடும் ஒவ்வொரு 'சுற்றி வளைத்து அடக்குத' லுக்கு எதிரான நடவடிக்கையோடும் அளவு மேலும் பெரிதாகிறது; நிலைமை மேலும் சிக்கலாகிறது; சண்டை மேலும் உக்கிரமாகிறது.

5) தாக்குதலில் ஈடுபட்டிருக்கும்போது துணிச்சல்வாதத்தை எதிர்க்க வேண்டும். தற்காப்பில் ஈடுபட்டிருக்கும் போது பத்தாம் பசலித்தனத்தையும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகரும்போது பயந்தோடும் தன்மையையும் எதிர்க்க வேண்டும்.

6) செஞ்சேனையில் கொரில்லாவாதத்தை எதிர்க்கையில் செஞ்சேனையினுடைய நடவடிக்கைகளின் கொரில்லாத் தன்மையை அங்கீகரிக்க வேண்டும்.

7) யுத்ததந்திர ரீதியான தற்காப்பிற்குள் போர் நடவடிக்கைகளிலும் சண்டைகளிலுமான தாக்குதல்களை உபயோகிப்பதும், யுத்ததந்திர ரீதியில் நீண்டகால யுத்தத்திற்குள் விரைவில் வெற்றி தோல்வி காணும் போர் நடவடிக்கைகளையும் சண்டைகளையும், யுத்ததந்திர ரீதியான உட்புற முனைகளுக்குள் வெளிப்புற முனைகளிலான போர் நடவடிக்கைகளையும் சண்டைகளையும் நடத்துவது சாத்தியமானவையும் அவசியமானவையும் ஆகும். இந்தப் போர் நடவடிக்கைகளையும் சண்டைகளையும் நடத்துவதில் முன்னோட்டம், வளைந்து கொடுக்கும் தன்மை, திட்டமிடுதல் ஆகியவற்றை உபயோகிக்க வேண்டும்.

8) நிலையான போர் முனைகளையும் ஸ்தான யுத்த முறைகளையும் பொதுவாக மேற்கொள்ள முடியாது. மாற்றமடையும் போர்முனைகளையும் நடமாட்ட யுத்த முறையையும் பிரதானமாகக் கையாள வேண்டும்.

9) எதிரியை வெறுமனே புறங்காணச் செய்யப் போரிடுவதைவிட எதிரியை அழித்தொழிக்கப் போரிட வேண்டும்.

10) இரண்டு முஷ்டிகளால் இரண்டு திசைகளில் ஒரே நேரத்தில் தாக்கும் யுத்ததந்திரத்தைக் கைக்கொள்ளக் கூடாது ஒரு சமயத்தில் ஒரு முஷ்டியால் ஒரு திசையில் தாக்கும் யுத்த தந்திரத்தை அங்கீகரிக்க வேண்டும்.

11) அறவே மத்தியப்படுத்தப்பட்ட படைத் தலைமையைக் கோரக்கூடாது; ஒப்புநோக்கில் மத்தியப்படுத்திய படைத்தலைமையை வைத்திருக்க வேண்டும்.

12) சுத்த ராணுவக் கண்ணோட்டத்தையும், அலைந்து திரியும் கலகக்காரர் சித்தாந்தத்தையும் முறியடித்து செஞ்சேனை இந்தியப் புரட்சியின் பிரச்சாரகன் என்பதை நிலைநாட்ட வேண்டும்.

13) செஞ்சேனையில் கொள்கைக்காரப் போக்குகள் ஏழா, மல் கறாரான அரசியல் கட்டுப்பாட்டை நிறுவ வேண்டும்.

14) செஞ்சேனையில் உரிய வரம்புக்குட்பட்ட ஜனநாயகம் அதிகாரம் பொருந்திய ராணுவக் கட்டுப்பாடு இரண்டையும் அங்கீரிக்க வேண்டும்.

15) தனிமைப்படும் கொள்கையை எதிர்த்து சாத்தியமான சகல சகாக்களையும் வென்றெடுக்கும் கொள்கையை நிலைநாட்ட வேண்டும்.

16) செஞ்சேனையை எப்போதும் அபிவிருத்தி செய்து கொண்டே இருக்கவேண்டும்.

17) நமது யுத்ததந்திரம் 'ஒருவர் பத்து பேருக்கு எதிராகப் போரிடுவது' என்பதாகவும், நமது போர்த்தந்திரங்கள் 'பத்து பேர் ஒருவருக்கு எதிராகப் போரிடுவது' என்பதாகவும் கொள்ள வேண்டும்.

18) பிரதான சக்தியான செஞ்சேனையும் மக்கள் கொரில்லாக் குழுக்களும் மனிதனின் வலது கையும் இடது கையும் போன்று ஒன்றுக்கொன்று உதவியானவை.

19) சகல முனைகளிலும் தாக்குதல் என்பதை நிராகரிக்க வேண்டும்.

20) எதிரியை நெடுந்தூரம் உள்ளே வர அனுமதிக்கும் தந்திரத்தைக் கையாள வேண்டும்.

## ராணுவப் போரியக்க மற்றும் போர்த்தந்திர நடவடிக்கைகள்:

செஞ்சேனையின் யுத்த வரலாறே 'சுற்றிவளைத்து அடக்குத'லுக்கு எதிரான நடவடிக்கைகளின் வரலாறாகவும், உள்நாட்டு யுத்தத்தின் பிரதான வடிவம் 'சுற்றி வளைத்து அடக்குத'லும் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் அடங்கியதாகவும் இருக்கும். எதிரியின் 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கைகளிலும் அவற்றுக்கெதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகளிலும், சண்டையிடுதலின் இரு வடிவங்களும், தாக்குதல் தற்காப்பு இரண்டும் இருக்கும். மக்கள் யுத்தப்பாதையினாலான உள்நாட்டு யுத்தத்தின் விசேஷ குணாதிசயம் இவ்விரு வடிவங்களும் ஒரு நீண்ட காலகட்டத்திற்குத் திரும்பத்திரும்ப ஒன்று மாறி ஒன்று இடம் பெறுவது ஒரு விதியாகும். எனவே ஒவ்வொரு 'சுற்றி வளைத்து அடக்குதல்' நடவடிக்கைக்கு எதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகளையும் சண்டைகளையும் எவ்வாறு வழிநடத்துவது என்ற விதிகளையும் பொதுக்கோட்பாடுகளையும் ஆய்ந்தறிந்து வரையறுப்பதே போரியக்க மற்றும் போர்த்தந்திர வழிகளை வகுப்பதாகும்.

எதிரிக்கெதிரான யுத்தத்தை முழுமையாக நோக்கின் அது ஒரு தாக்குதல் தன்மையுடையதாக இருக்கும்; ஆனால் ராணுவ ரீதியில் அது எதிரியின் 'சுற்றிவளைத்து அடக்கு'தலை உடைக்கும் வடிவமெடுக்கிறது. சாதாரணமாக யுத்தமென்பது தற்காப்பு தாக்குதல் ஆகியவற்றை ஒன்று மாறி ஒன்றாக அடக்கி இருக்கின்றது. பிரச்சினையின் மையமான அம்சம் 'சுற்றிவளைத்து அடக்குதலை' உடைத்தெறிவதுதான்; எனவே தாக்குதல் தற்காப்புக்கு முந்தியா பிந்தியா என்பதில் ஒன்றுமே இல்லை. ஒவ்வொரு 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கையையும் தகர்க்கும்வரை தற்காப்பு தொடர்கிறது. அதன்பின் தாக்குதல் தொடர்கிறது; இவை ஒரே விஷயத்தின் இரு கட்டங்களாகும்; மேலும் இவ்வாறு எதிரியின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும்பின் மற்றொன்று தொடர்கிறது. இவை இரண்டில் தற்காப்பு கூடுதலான முக்கியமானதும், கூடுதலான சிக்கலானதுமாகும்.

ஏனெனில் அது 'சுற்றி வளைத்து அடக்குதலை' எவ்வாறு தகர்ப்பதென்பதில் எண்ணற்ற பிரச்சினைகளை உள்ளடக்கி இருக்கிறது. இங்கு அடிப்படைப் பிரச்சினை செயல்படும் தற்காப்பை உயர்த்திப் பிடிப்பதும், செயலற்ற தற்காப்பை எதிர்ப்பதும் தான். செயல்படும் தற்காப்பிற்குத் தாக்குதல் தற்காப்பு அல்லது தீர்க்கமான சண்டைகளைப் பெறுவதற்கான தற்காப்பு என்றும் செயல்படாத் தற்காப்பிற்கு சுத்த தற்காப்பான தற்காப்பு அல்லது சுத்தத் தற்காப்பு என்றும் பெயர். செயல்படாத் தற்காப்பு உண்மையில் போலியானது; உண்மையான ஒரு தற்காப்பு செயல்படுவதும் திருப்பித் தாக்குதலில் இறங்குவதுமான நோக்கத்திற்கானது ஆகும். 'ஆயுதமேந்திய பேரெழுச்சியொன்று ஒருக்கால் தொடங்கப்பட்டதும் தாக்குதலில் ஒரு கணமும் ஓய்தலிருக்க கூடாது' என யுத்ததந்திர ரீதியான விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தத்தைப் பற்றி மார்க்ஸ் கூறியவைகளோ, யுத்ததந்திர ரீதியான தற்காப்பு பரந்துபட்ட மக்களது தார்மீக உணர்வை உலுப்பிவிடுகிறது என்ற பிற்போக்கு மற்றும் 'இடது' சந்தர்ப்பவாத ராணுவ தளபதிகள் கூறுவதும் நீண்டகால மக்கள்யுத்தப் பாதைக்குப் பொருந்தாது. புரட்சிகரமான யுத்தம் எதிலும் தற்காப்பு பரந்துபட்ட மக்களது தார்மீக உணர்வை உலுப்பிவிடும் என்ற கோட்பாடும் தவறானது.

> "ஒவ்வொரு நீதியான யுத்தத்திலும் தற்காப்பு அரசியல் ரீதியில் விரோதமான நபர்கள் மீது ஊக்கம் குன்றச் செய்யும் பாதிப்பு ஒன்றை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், பரந்துபட்ட மக்களில் பின்னடைந்த பிரிவுகளை யுத்தத்தில் சேரத் திரட்டுவதையும் அது சாத்தியமாக்குகிறது.....மேம்பாட்டை உடையவனாயுள்ள எதிரியுடன் ஏற்கனவே நாம் போரில் கைகலந்திருக்கும் போது, நாம் எதிரியால் அடக்கி ஒடுக்கப்படுகையில் கூட, புரட்சியாளர்களாகிய நாம் தற்காப்பு நடவடிக்கைகளைக் கைகொள்ளக்கூடாது என இதற்கு அர்த்தமில்லை. ஒரு வடிகட்டின முட்டாள் மட்டுமே இந்த விதமாகச் சிந்திப்பான்...... எமது உள்நாட்டு யுத்தத்தில், செஞ்சேனையின் பலம் எதிரியினதைக் கடந்ததும், எமக்குப் பொதுவில் அதற்குமேல் யுத்ததந்திர ரீதியிலான தற்காப்புத் தேவைப்படாது. அப்போது எமது கொள்கை யுத்ததந்திர ரீதியான தாக்குதலாக மட்டுமே இருக்கும். இந்த மாற்றம் எதிரியினதும் எமதும் சக்திகளின் சமன்பாட்டிலான ஒரு பொதுவான மாற்றத்தில் தங்கியுள்ளது. அந்தச் சமயமளவில் எஞ்சியிருக்கும் தற்காப்பு நடவடிக்கைகளும் பகுதிவாரியான இயல்பினவாக இருக்கும்". (ஷை நூல். பக். 502-204).

ஒவ்வொரு 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கையும் யுத்ததந்திர ரீதியான தற்காப்பு மற்றும் தாக்குதல் என்ற இரு கட்டங்களையும் கொண்டிருக்கும். இதன் கோட்பாடுகள் என்னவென்றால் "எதிரிமுன்னேறும் போது நாம் பின்வாங்கு

வோம்; எதிரி முகாமிடும்போது நாம் தொல்லை கொடுப்
போம்; எதிரி களைத்திருக்கும்போது நாம் தாக்குவோம்; எதிரி
பின்வாங்கும்போது நாம் துரத்துவோம்'' என்ற இயல்பில்
எளிமையான கொரில்லா யுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடு
களும் அதன் அபிவிருத்தி செய்யப்பட்ட ''எதிரியை வெகுதூரம்
உள்ளே இழுத்துச் செல்லும் கோட்பாடும்'' அடங்கியவையாகும்.

இக்கோட்பாடுகளின் அடிப்படையில் எவ்வாறு எதிரியின்
ஒவ்வொரு 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கையையும்
முறியடிப்பது, அதற்கான போரியக்க மற்றும் போர்த்தந்திர
நடவடிக்கைகளை ஆளும் விதிகள் போன்றவை குறித்து
விரிவாகப் பார்ப்போம்.

'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கைகளை முறியடிப்
பதற்கான தயாரிப்புகளின் போது அவசர கோலத்தில் சண்டை
யில் இறங்குவதும், எதிர்கொள்வதும் வெற்றியை இழப்பதாகும்.
எனவே எதிரி திட்டமிட்ட ரீதியில் ஒரு 'சுற்றி வளைத்து
அடக்கும்' நடவடிக்கைக்குத் தயாரிக்கும்பொழுது நாம் எதிர்
நடவடிக்கைக்காக தயாரிப்பது முற்றும் முழுதாக அவசிய
மாகிறது. இல்லையானால் நிச்சயம் செயலற்ற நிலைக்குத்
தள்ளப்படுவோம். எப்போதோ வரப்போகிறது என்றும்
தயாரிப்பு அனாவசியம் என்றும் இருப்பது குழந்தைத்தன
மானதும், வெறுத்தொதுக்க வேண்டியதும் ஆகும். ஒவ்வொரு
'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கையும் நம்முடைய
தாக்குதலுடன் முடிவடைகிறது. ஆனால் எதிரியின் இந்த 'சுற்றி
வளைத்து அடக்கும்' நடவடிக்கைக்கு எதிராக எப்பொழுது நமது
தாக்குதலை முடித்துக்கொண்டு அடுத்த 'சுற்றிவளைத்து
அடக்கும்' நடவடிக்கைக்கு எதிராக தயாரிப்பில் இறங்குவது
என்பது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை. நாம் வெற்றிகரமான
தாக்குதலிலும், எதிரி தற்காப்பிலும் ஈடுபட்டுள்ளபோது அடுத்த
'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கைக்கான எதிரியின்
தயாரிப்புகள் ரகசியமாக நடத்தப்படும்; எனவே எதிரியின்
தாக்குதல் எப்போது தொடங்கும் என்றிவது கடினமானது.
தயாரிப்புக் கட்டத்தில் பிரதானமான நடவடிக்கைகள், வாபசா
வதற்கான ராணுவத் தயாரிபபுகளும் அவற்றிற்கான அரசியல்
ரீதியான அணிதிரட்டலும்தான். ஆகவே தயாரிப்புக் கட்டத்தை
முந்தித் தொடங்கினால் முதற் தாக்குதலிலிருந்து கிடைக்கக்
கூடிய பலன்களைக் குறைத்தே தீரும்; சில சமயங்களில் செஞ்
சேனையின் மீதும் மக்களின் மீதும் சிற்சில தீய பாதிப்புகளைக்
கூட ஏற்படுத்திவிடும். மற்றொருபுறம், சில சமயங்களில் ஆக
முந்தித் தொடங்கிவிட்டால், இது எதிரிக்காக காத்துக்கிடக்க
வேண்டி வரலாம். இன்னும் சில சமயங்களில் நமது புதிய
தாக்குதல் தொடங்குகிற அதே சமயத்தில் எதிரி தனது தாக்கு
தலைத் தொடங்கி விடுவதனால் கஷ்டமான நிலைக்குத் தள்ளப்
படலாம். எனவே தயாரிப்புகளைச் தொடங்குவதற்குச் சரியான
தருணத்தை தெரிந்தெடுப்பது முக்கியமான ஒரு பிரச்சினை.
சரியான தருணத்தை எதிரியின் நிலைமை, நம் சொந்த நிலைமை
இரண்டிற்கும், அவற்றிற்கு இடையிலான உறவிற்கும் உரிய

கவனத்தோடு தெரிந்தெடுக்க வேண்டும். எதிரியின் அரசியல், ராணுவ, நிதி நிலைமைகளைப் பற்றியும், அவனது பிரதேசத்தில் பொதுஜன அபிப்பிராயத்தின் நிலைமையையும் பற்றித் தகவல் சேகரித்துத்தான் எதிரியின் நிலைமையைப் பற்றிக் கணிக்க வேண்டும். எதிரியின் மொத்த பலத்தையும் பூரணமாக கணிக்க வேண்டும். எதிரியின் உள்முரண்பாடுகள், நிதிக்கஷ்டங்கள் கடந்த காலத் தோல்விகளின் பாதிப்பையும் அளவையும் ஆகியவற்றை யதார்த்தமாக மதிப்பிட வேண்டும். அதே போன்று நமது தரப்பிலும் கடந்தகால வெற்றிகளின் அளவையும் பாதிப்பையும் சரியாக மதிப்பிட வேண்டும். தயாரிப்புக்கான தருணத்தை ஆகப்பிந்தி ஆரம்பிப்பதைவிட ஆகமுற்றி ஆரம்பிப்பதே நல்லது. ஏனெனில் முந்தி ஆரம்பிப்பது பிந்தி ஆரம்பிப்பதைவிடச் சிறிய இழப்புகளைக் கொணரும், தயார்நிலை ஆபத்தை விலக்கி தீர்க்கமான தோல்விகளைத் தவிர்க்கும்.

தயாரிப்புக் கட்டத்தில் பிரதானமான பிரச்சினைகள் (1) செஞ்சேனையை வாபஸ் பெறுவதற்கான தயாரிப்புகள் (2) அரசியல் அணிதிரட்டல் (3) சேனைக்கு ஆள் சேர்த்தல் (4) நிதிக்கும் தானியங்களுக்கும் ஒழுங்குகள் (5) அரசியல் ரீதியில் விரோதமானவர்களைக் கையாள்வது ஆகியன அடங்கும்.

1. பெருமளவிலான எதிரித் தாக்குதலொன்று தொடங்கவிருக்கும் தறுவாயில் செஞ்சேனை வாபசாவதற்கு குந்தகமான திசையில் நகராதபடியும், தன் தாக்குதல்களில் அளவிற்கதிக தூரம் முன்னேறி விடாதபடியும், அளவிற்கதிகம் களைப்புற்று விடாதபடியும் இருக்க கவனம் செலுத்துவது; செஞ்சேனை அதன் கவனத்தைப் பிரதானமாகப் போர்க்களங்களை உருவாக்குவது, பண்டங்கள் கொள்வனவு செய்வது. படைகளை விரிவுபடுத்துவது. பயிற்றுவிப்பது ஆகியவற்றைத் திட்டமிடுதலுக்கு அர்ப்பணிக்கவும் வேண்டும். இவை வாபஸ் பெறுவதற்கான தயாரிப்புகள்.

2. எதிரியின் தாக்குதல் தவிர்க்க முடியாதது, உடனடியாக நிகழப்போகிறது, மக்களுக்குப் பாரதூரமான தீங்கை விளைவிக்கும் என செஞ்சேனைக்கும் தளப்பிரதேச மக்களுக்கும் தெளிவாகவும், உறுதியாகவும் பூரணமாகவும் தெரிவிப்பது; அதே நேரத்தில் எதிரியின் பலவீனங்களையும், செஞ்சேனைக்குச் சாதகமாயுள்ள அம்சங்களையும், வெல்வதென்ற நமது தளராத உறுதியையும், பொதுவான வேலைத் திட்டத்தையும் விளக்குவது. எதிரியின் 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கையை எதிர்க்கவும், தளப்பிரதேசத்தைப் பாதுகாக்கவும் போரிடும்படி செஞ்சேனையையும் மக்களையும் அறைகூவியழைப்பது; ராணுவ ரகசியங்கள் சம்மந்தப்பட்ட இடங்களிற் தவிர மற்றபடி அரசியல் அணிதிரட்டல் பகிரங்கமாகவும் விரிந்த அளவிலும் இருக்கவேண்டும். இதில் கேந்திரமான கடமை இயக்குனர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவது. இவ்வாறு செய்யப்படும் அணிதிரட்டல் முதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

3. புதிய படைவீரர்களைச் சேர்ப்பதில் இரு விஷயங்களை, முதலாவதாக மக்களுடைய அரசியல் அறிவுணர்வின் மட்டத்தையும், ஜனத்தொகையின் அளவையும். இரண்டாவதாக, செஞ்சேனையில் அப்போதைய நிலையையும் 'சுற்றிவளைத்து அடக்கு'தலுக்கு எதிரான நடவடிக்கை முழுவதின் போதும் அதன் இழப்புகளின் சாத்தியமான அளவையும் கருத்திற் கொள்ளவேண்டும்.

4. நிதி, உணவு ஆகிய பிரச்சினைகள் மிகுந்த முக்கியத்துவமுடையவை. 'சுற்றி வளைத்து அடக்கும்' எதிரியின் நடவடிக்கை நீண்ட நாட்கள் நீடித்திருக்கும் சாத்தியக் கூற்றைக் கணக்கில் கொள்ளவேண்டும். அந்தக் காலகட்டம் பூராவுக்குமான குறைந்தபட்ச பொருட்தேவைகளின் — பிரதானமாக செஞ்சேனையின் தேவைகளுக்கும் அத்துடன் தளப்பிரதேச மக்களின் தேவைகளுக்கும் மதிப்பீடு செய்துகொள்வது அவசியம்.

5. அரசியல் ரீதியில் விரோதமானவர்கள் பற்றி எச்சரிக்கையின்றி இருப்பதோ, ஆனால் அவர்களின் பங்கில் துரோகத்தை எதிர்பார்த்து அனாவசியமான அளவு பயந்து மிதமிஞ்சிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பதோ கூடாது. வியாபாரிகளுக்கும், பணக்கார விவசாயிகளுக்கும் இடையில் வேறுபடுத்தவும், பரந்துபட்ட மக்களை அணிதிரட்டும்போது இவர்களுக்கும் விஷயங்களை அரசியல் ரீதியில் விளக்கி நடுநிலைப்படுத்துவதும் மிகமிக அவசியம். சமரச ஊசலாட்ட சக்திகளில் ஒரு பகுதியை வென்றெடுப்பது அல்லது நடுநிலைப்படுத்துவது அல்லது முடமாக்குவதும், வெகு அபாயகரமான மிகச் சிலருக்கு எதிராக கைதுசெய்வது போன்ற கடும் நடவடிக்கைகள் எடுக்கவும் வேண்டும்.

'சுற்றிவளைத்து அடக்குதலுக்கு' எதிரான போராட்டத்தில் வெற்றியின் அளவு தயாரிப்புப் பணிகளைப் பூர்த்திசெய்வதோடு நெருங்கிய சம்பந்தம் உடையதாகும். எதிரியைக் குறைத்து மதிப்பிடுவதன் காரணமாகத் தயாரிப்பு வேலைகளைத் தளர்த்துவதோ, எதிரியின் தாக்குதல்களைப் பற்றி பயங்கொண்டு பீதியடைவதோ இரண்டும் தீங்கானது. தேவையானது ஒரு உற்சாகமான, ஆனால் அமைதியான மனோநிலை; தீவிரமான, ஆனால் ஒழுங்கான வேலைமுறை.

யுத்ததந்திர ரீதியிலான பின்வாங்குதல்; பலம் குறைந்த ஒரு படை, விரைவில் தகர்க்க முடியாத தாக்குதலைத் தொடுக்கும் பலங்கூடிய ஒரு படையுடன் பொருதும்போது, அது தன் பலத்தைப் பேணிக்கொள்வதும் எதிரியைத் தோற்கடிக்கத் தருணத்திற்காக காலம் கடத்துவதற்கான நோக்கத்திற்காக எடுக்கும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே யுத்தந்திர ரீதியியான பின்வாங்கும் நடவடிக்கையாகும். "எதிரி முன்னேறும்போது நாம் பின்வாங்குவோம்; எதிரி முகாமிட்டிருக்கும் போது நாம் தொல்லை கொடுப்போம்; எதிரி களைத்திருக்கும்போது நாம் தாக்குவோம்; எதிரி பின்வாங்கும்போது நாம் துரத்துவோம்" என்ற கொரில்லா யுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளின்—

பதினாறு அட்சரச் சூத்திரத்தின்—அபிவிருத்திதான் "எதிரியை நெடுந்தூரம் உள்ளே இழுத்துச்செல்வது" எனவும் "முனையைச் சுருக்குவது" எனவும் உள்ள யுத்ததந்திர ரீதியான பின்வாங்குதல். "யுத்ததந்திர ரீதியான தற்காப்பான நடவடிக்கைகளில் பாதகமான தீர்க்கமான சண்டைகள் வழமையாக ஆரம்பத்தில் தவிர்க்கப்படுகின்றன; சூழ்நிலைகள் சாதகமானவையாகிவிட்டபோதே அவை நாடப்படுகின்றன" என்கிற முற்றிலும் சரியான கூற்றுக்கேற்ப யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலின் குறிக்கோள் ராணுவ பலத்தைப் பேணி எதிர்த்தாக்குதலுக்குத் தயாராவதாகும். இவ்வாறு செய்யாதது பலமான எதிரி தாக்கும்போது பேணுதற்கு குந்தகம் விளைவிக்கும். இதைச் "சுத்த தற்காப்பான ஒரு சந்தர்ப்பவாத மார்க்கமெனக் கருதி எதிர்ப்பது முற்றாகப் பிழையானதாகும்.

ஒரு எதிர்த்தாக்குதலுக்குத் தயாராவதற்கு எதிர்த்தாக்குதலில் இறங்கு முன்பாக எதிரிக்கும் நமக்கும் இடையிலான பலாபலத்தில் ஒரு மாற்றம் ஏற்படுத்தும்—நமக்குச் சாதகமான ஆனால் எதிரிக்குச் சாதகமற்றதான—பின்வரும் நிலைமைகளில் குறைந்தது இரண்டாவது நிலவ வேண்டும். அவை: (1) செஞ்சேனையை மக்கள் தீவிரமாக ஆதரிப்பது (2) தரையமைப்பு போர் நடவடிக்கைகளுக்குச் சாதகமாக இருப்பது (3) செஞ்சேனையின் பிரதான படைகளெல்லாம் ஒருங்கு குவிந்திருப்பது (4) எதிரியின் பலவீனமான ஸ்தானங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது (5) எதிரி களைப்பும் மனச்சலிப்பும் உற்ற நிலைக்கு வந்திருப்பது (6) எதிரி தவறுகள் செய்யத் தூண்டப்பட்டிருப்பது.

1) செஞ்சேனைக்கு மிக முக்கியமானதான மக்களின் தீவிர ஆதரவு—தளப்பிரதேசத்தைப் பெற்றிருந்தால் இறுதி மூன்று நிலைமைகளையும் அடைவது இலகு. எனவேதான் மக்கள் எதிரிக்கு தகவல் சொல்வதைத் தடுப்பதிலும், வேவு பார்ப்பதிலும், பண்டங்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு கொண்டு செல்வதிலும், சண்டையில் சேர்ந்து கொள்வதிலும் இன்னும் பிறவற்றிலும் எல்லைப் புறங்களைவிட மத்தியத் தளப்பிரதேசங்களும், எதிரியின் பிரதேசங்களைவிட தளப் பிரதேசங்களும் செஞ்சேனைக்கு அதிகம் சாதகமாக உள்ளதால் பொதுவாக பின்னதற்கே செஞ்சேனை வாபசாக வேண்டும். இந்தக் குணாதிசயம் சாதாரண நடவடிக்கைகளிலிருந்து செஞ்சேனையின் நடவடிக்கைகளை வேறுபட்டவையாக்குகிறது; எதிரிக்குப் பாதகமாக அமைகிறது.

2) உட்புற முனைகளில் போரிடுவதன் ஒரு சிறந்த சூழ்நிலை பின்வாங்கும் சேனைக்குச் சாதகமான தரையமைப்பைத் தெரிந்தெடுத்து அதில் போர் செய்யும்படி எதிரியை நிர்ப்பந்திக்கிறது. பலமான ஒரு சேனையைத் தோற்கடிப்பதற்கு பலவீனமான ஒரு சேனையானது கவனமாக சாதகமான ஒரு தரையமைப்பை போர்க்களமாகத் தெரிந்தெடுக்க வேண்டும். முதலாவதாக, மக்களின் ஆதரவு, இரண்டாவதாக களைப்புற்றோ, தவறுகள் செய்தோ, குறைபாடான வியூகமோ உள்ள

எதிரி, தோற்கடிக்கப்படக் கூடிய எதிரி போன்ற வேறு சூழ்நிலைகளின்றி தரையமைப்பு இருந்தால் மட்டும் போதாது. எனவேதான் நல்ல தரையமைப்புகள் கிடைத்தாலும் பிற சூழ்நிலைகள் இல்லையென்றால் தளப்பிரதேசத்துக்குப் பின்வாங்க வேண்டியிருக்கும். எதிரியின் பிரதேசங்களுக்கும் செந்தளத்திற்கும் வேறுபாடுள்ளதைப் போலவே செந்தளத்தின் எல்லைக்கும் மையப்பகுதிக்கும் வேறுபாடுள்ளது.

3) ஸ்தலப்படைகளும், எதிரியை வரம்புகளுக்குள் வரைப்படுத்தி வைக்கும் சக்திகளும் தவிர செஞ்சேனையின் தாக்குதல் துருப்புகள் எல்லாம், கோட்பாடளவில் ஒன்றாக குவிக்கப்பட்டிருக்க வேண்டும். யுத்ததந்திர ரீதியில் தற்காப்பில் ஈடுபட்டுள்ள ஒரு எதிரியைத் தாக்குகையில் செஞ்சேனை வழக்கமாக படைகளைப் பரப்பிச் செலுத்துகிறது; ஒருக்கால் எதிரி பெருமளவிலான தாக்குதலொன்றைத் தொடுத்ததும் செஞ்சேனை பின்வாங்கலுக்கான அந்தமாக வழமையாகத் தெரிந்தெடுக்கும் தளப்பிரதேசத்தின் மையப்பிரிவினை — சில சமயங்களில் அவசியத்தை முன்னிட்டு முன் அல்லது பின் பிரிவுகளாகவும் உண்டு— பகுதிக்கு ''மையத்தை நோக்கிப் பின்வாங்குதல்'' இருக்கும். மையத்தை நோக்கிய இத்தகைய ஒரு பின்வாங்கலினால் செஞ்சேனையின் பிரதானப்படைகள் எல்லாம் ஒன்றாகக் குவிக்கப்பட இயலும்.

4) எதிர்த்தாக்குதல் தொடங்குவதற்கான மற்றொரு அத்தியாவசியமான சூழ்நிலை தாக்குதலுக்கு எதிரியின் கூறுகளில் பலம் குறைந்தவற்றைத் தெரிந்தெடுப்பதாகும். ஆனால் எதிரியினுடைய தாக்குதல் நடவடிக்கையின் ஆரம்பத்தில் முன்னேறும் வியூகங்களில் அடுத்தடுத்து பலமானது, அடுத்தடுத்து பலவீனமானது எவை என்பவை சாதாரணமாகத் தெரியாது. வேவு பார்ப்பதன் மூலமே இதை அறிய முடியுமாதலால் பல சமயம் கணிசமானளவு காலம் பிடிப்பதுண்டு. இது யுத்ததந்திர ரீதியான பின்வாங்குதல் அவசியமாவதற்கு மற்றொரு காரணமாகும்.

5) மிகப் பலம் பொருந்திய எதிரி தளப்பிரதேசத்திற்குள் நெடுந்தூரம் ஊடுருவி, தொல்லைகளுக்கு உள்ளாகும்போது, பெருமளவு பலவீனப்படுத்தப்பட்டு, அவனது படைவீரர்கள் களைப்புற்று. தைரியம் குலைந்து பலவீனமான ஸ்தானங்களில் பலவும் வெளிப்பட வேண்டும். ஆனால் ஆரம்பத்தில் செஞ்சேனையோ பலவீனமானது; எனவே தன் பலத்தைப் பேணியும் சக்தியைத் தேக்கியும் கொண்டு களைப்புற்ற எதிரியை எதிர்நோக்கி ஆற அமரக் காத்திருக்க வேண்டி இருக்கும். இத்தகைய ஒரு சமயத்தில், பொதுவாக, இரு தரப்புகளுக்குமிடையில் ஒருவாறான சமநிலை அடைவது, அல்லது எதிரியின் அறுதியான உயர்ச்சியை ஒப்புநோக்கான உயர்ச்சியாகவும், நமது அறுதியான தாழ்ச்சியை ஒப்புநோக்கான தாழ்ச்சியாகவும் மாற்றுவதும், ஓரொரு சந்தர்ப்பங்களில் எதிரி எம்மை விடத் தாழ்ச்சியடைவதும், நாம் எதிரியை விட வளர்ச்சி அடைவதும் கூடச் சாத்தியம்.

6) பின்வாங்கலின் இறுதியான நோக்கம் எதிரியைத் தவறுகளிழைக்கும்படி தூண்டுவது அல்லது தவறுகளைக் கண்டு கொள்வது. ஒப்புநோக்காக நீண்ட காலத்தில் எதிரி இயல்பாகவே தவறுகளிழைக்கும்படி நேரும் அல்லது "ஒரு தோற்றத்தை நடிப்பதன்" மூலம் — ஆட்டங்காட்டுவதன் மூலம் — தவறுகளிழைக்கும்படி நாம் தூண்டி விடவும் முடியும். இவ்வாறு நேர வேண்டுமானால் பின்வாங்கலுக்கான அந்தம் ஒரு திட்டவட்டமான பகுதிக்குள் மட்டும் கறாராக இருக்கவேண்டுமென வரையறுக்க இயலாது. சில சமயங்களில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட பகுதிக்கு பின்வாங்கி விட்டும் இந்தச் சூழ்நிலை இல்லையானால் காத்திருக்க வேண்டியிருக்கும்.

பின்வாங்குதல் மூலம் செஞ்சேனை பெற முயலும் சாதகமான மேற்கண்ட சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படும் வரை எதிர்த்தாக்குதல் தொடுக்காது காத்திருக்க வேண்டுமென்பது மில்லை; சாத்தியமோ, அவசியமோ இல்லை. ஆனால் பலமான ஒரு எதிரிக்கு எதிராக உட்புற முனைகளில் போரிடும் ஒரு பலவீனமான படை எதிரி உள்ள நிலைமையின் ஒளியில் அவசியமான சூழ்நிலைகளைப் பெற முயல வேண்டும். இதற்கு மாறான கருத்துக்கள் எல்லாம் தவறானவை.

எதிரியின் 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கைக்கு எதிராக தயாரிப்புகளில் ஈடுபடும் — செஞ்சேனையின் தாக்குதலை முடித்துக்கொண்டு பின்வாங்குதலைத் துவங்கும் — தருணத்தை தீர்மானிப்பது போன்று முக்கியத்துவம் வாய்ந்தது பின்வாங்குதலுக்கான அந்தத்தை தீர்மானிப்பதும் ஆகும். பகுதி வாரியானதையும் தற்காலிகமானதையும் நிராகரித்து நிலைமை முழுமையையும் கவனத்திற் கொண்டு இது தீர்மானிக்கப்பட வேண்டும்; ஏனெனில், பகுதிக்கு மட்டும் பொருந்தியவை முழுமைக்குப் பொருந்தாமல் போகலாம். நாம் தூரதரிசினியாகவும் இருக்க வேண்டும். எதிர்த்தரப்பிலும் நம் தரப்பிலுமான அம்சங்கள், நாம் தாக்குதலொன்றை ஆரம்பிக்க ஓரளவிற்குச் சாதகமாக உள்ளனவா என்பதை கணிப்புகளுக்கு அடிப்படையாகக் கொண்டு முழுமையாக ஆய்ந்தறிய வேண்டும்.

ஒரு தளப்பிரதேசத்தில் பின்வாங்குதலுக்கான அந்தங்கள் பொதுவாகத் தளப்பிரதேசத்தின் முன்பிரிவில் உள்ளவையும், நடுப்பிரிவில் உள்ளவையும், பின்பிரிவில் உள்ளவையுமென மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஆனால் இதன் பொருள் எதிரியின் பிரதேசத்தில் சண்டை செய்ய ஒரேயடியாக மறுப்பதாகாது. பெருமளவிலான எதிரியின் 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கையைச் சமாளிக்க வேண்டியுள்ளபோது மட்டுமே நாம் எதிரியின் பகுதிகளில் சண்டையிட மறுக்கிறோம். எதிரியின் பலத்திற்கும் நம்முடையதற்கும் இடையில் பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளபோது மட்டுமே நமது பலத்தைப் பேணவும் எதிரியைத் தோற்கடிக்கவுமான காலத்தைக் கடத்தவும், எதிர்தாக்குதலுக்குச் சாதகமான சூழ்நிலைகளைச் சிருஷ்டிக்கவும் அல்லது அறிந்து கொள்ளவும், தளப்பிரதேசத்துக்குப் பின்வாங்கி எதிரியை

வெகுதூரம் உள்ளே இழுத்துச்செல்ல வேண்டியுள்ளது. நிலைமை அவ்வளவு பாரதூரமாக இல்லாவிடிலோ, அல்லது செஞ்சேனை அதன் எதிர்த்தாக்குதலைத் தளபிரதேசத்தில் கூட தொடங்க இயலாத அளவுக்கு நிலைமை பாரதூரமாக இருந்தாலோ, அல்லது எதிர்த்தாக்குதல் நன்றாக நடைபெறாமலிருந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய பின்வாங்குதல் அவசியமாக இருந்தாலோ, பின்வாங்குதலுக்கான அந்தம் எதிரியின் பகுதியில் விடிவு செய்யப்படலாம். பொதுவில் எதிரியின் பகுதியில் பின்வாங்குதலுக்கான அந்தங்களும் மூன்று வகையாகப் பிரிக்கலாம்: (i) நமது தளப்பிரதேசத்துக்கு முன்னால் உள்ளவை; (ii) அதன் பக்கவாடுகளில் உள்ளவை; (iii) அதன் பின்னால் உள்ளவை.

பின்வாங்கலை ஆரம்பிப்பதற்கான சமயத்தைத் தெரிவு செய்வது, அதற்கான அந்தத்தை தெளிவு செய்வது இயக்குனர்களுக்கும் மக்களுக்கும் அரசியல் ரீதியில் நம்பிக்கை ஏற்படுத்துவது — இவை இயற்கையாகவே யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலில் சிரமம் வாய்ந்தவை; தீர்வு கோருபவை. இயக்குனர்களும் மக்களும் யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலில் அனுபவம் பெறாமலிருக்கும்போது, சேனையின் தலைமை மட்டுமே முடிவு செய்ய வேண்டிய நேரத்தில்—இயக்குனர்களுக்கு அனுபவமோ, தலைமையின் மீது உயர்ந்த நன்மதிப்போ இல்லாதபோது—யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலின் அவசியத்தை இயக்குனர்களுக்கும் மக்களுக்கும் உணர்த்தி நம்பிக்கை ஏற்படுத்துவது மிக மிகக் கடினமானது. இருப்பினும் மக்களுக்கும் இயக்குனர்களுக்கும் நம்பிக்கையூட்டுவது, குறிப்பாக இயக்குனர்களுக்கு, முதலாவதும் அதிமுக்கியமானதுமான பணியாகும்.

யுத்ததந்திர ரீதியான பின்வாங்கல் எதிர்த்தாக்குதலுக்கு மாறுவதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டதும், வெறுமனே யுத்ததந்திர ரீதியான தற்காப்பின் முதற்கட்டமுமாகும். யுத்ததந்திரம் முழுவதிலும் தீர்க்கமான இணைப்பு, இதைத் தொடர்ந்து வரும் எதிர்த்தாக்குதல் கட்டத்தில் வெற்றி ஈட்டப்பட முடியுமா இல்லையா என்பதுதான்.

<u>யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல்:</u> நமக்குச் சாதகமானதும் எதிரிக்குச் சாதகமற்றதுமான சூழ்நிலைகளும் நிலைமையும் இருப்பது நமது வெற்றிக்கும் அவனது தோல்விக்குமான சாத்தியக் கூற்றைத் தருகின்றன. ஆனால் யதார்த்தமான வெற்றியை அல்லது தோல்வியை இது ஏற்படுத்துவதில்லை; இரு சேனைகளுக்குமிடையிலான ஒரு தீர்க்கமான சண்டை இதற்கு அவசியம்; இந்தப் பிரச்சினையை தீர்க்கமான சண்டையால் மட்டுமே முடிவாக்க இயலும். இதுவே யுத்ததந்திர ரீதியிலான எதிர்த்தாக்குதல் கட்டத்திலான ஒரே பணி. எதிர்த்தாக்குதல் ஒரு நீண்ட போக்கும், ஒரு தற்காப்புப் போர் நடவடிக்கையின் மிக விந்தையூட்டுவதும் மிக இயக்க ரீதியானதுமான கட்டமும் அத்துடன் அதன் இறுதிக்கட்டமும் ஆகும். செயல்படும் தற்காப்பென அழைக்கப்படுவது, தீர்க்கமான ஒரு கைகலப்பு என்ற இயல்பினதான இந்த யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதலையே பிரதானமாகக் குறிக்கிறது.

சூழ்நிலைகளும் நிலைமைகளும் எதிர்த்தாக்குதல் கட்டத்திலும் தொடர்ந்து உருவாக்கப்படுகின்றன. வடிவிலும் இயல்பிலும் அப்படியே இருந்து வரக்கூடிய சூழ்நிலைகள், நிலைமைகளுக்கு முற்றாகப் புதியதொரு சூழ்நிலையும் நிலைமையும் தோன்றியே தீரவேண்டும். உதாரணமாக எதிரி ஒரு தோல்வியையோ, ஒன்றுக்கு மேற்பட்ட தோல்விகளையோ பெற்றுவிட்டபோது அவனது களைப்பு, வீரர்களின் எண்ணிக்கை குறைப்பு முதலானதாக மட்டும் அவனது பாதகமான சூழ்நிலைகள் இல்லாமல் தோல்விகளை பெற்றுள்ளான் என்றதொரு புதிய அம்சமும் சேர்ந்திருக்கும். எதிரி தனது துருப்புகளை ஒழுங்கீனமான முறையில் நகர்த்தவும் பிழையான காரியங்களைச் செய்யவும் தொடங்கும்போது இரு சேனைகளினதும் ஒப்பு நோக்கான பலங்கள் முன்பிருந்தது போல் இருக்காது.

மாறாக, இதுவே மாற்றி நடந்தால் அப்போது சூழ்நிலைமைகள் எதிர் திசையில் மாற்றமுறும். அதுவும் முற்றிலும் புதியதும் வேறுவிதமானதுமான ஒன்றாக இருக்கும்.

இரண்டில், தோல்வியுறும் தரப்பு தனது விரசத்தை குறைக்கவும் தனக்கு சாதகமற்றதாகவும், எதிரிக்கு சாதகமாகவும் உள்ள நிலைமைகளை மாற்றி எதிரிக்கு சாதகமற்றவையும் தனக்கு சாதகமானதுமான சூழ்நிலைகளை, நிலைமைகளை மீண்டும் உருவாக்கப் பாடுபடும். வெல்லும் தரப்பு தனது வெற்றியைப் பயன்படுத்தி எதிரிக்கு இன்னும் பெரிய சேதத்தை உண்டுபண்ணவும் தனக்குச் சாதகமான நிலைமைகளைச் சிறப்பாக்கவும் எதிரியை அவனது சாதகமற்ற சூழ்நிலைகளிலும் சாதகமற்ற நிலைமைகளிலுமிருந்து வெளிப்படுவதிலும் விநாசத்தை தவிர்ப்பதிலும் வெற்றியடையாதபடி தடுக்கவும் முயலும்.

இவ்வாறாக, எந்த தரப்பிற்கும், தீர்க்கமான சண்டையின் கட்டத்தில் போராட்டம் யுத்தம் முழுவதிலும் அல்லது போரியக்கங்கள் முழுவதிலும் மிகவும் உக்கிரமானதாகவும், மிகச் சிக்கலானதாகவும் மாற்றங்கள் மிக ஏற்படுவதாகவும் அத்துடன் மிகக் கஷ்டமும் கடினமுமானதாகவும் இருக்கும்; இதுவே ஆணை தரும் கண்ணோட்டத்திலிருந்து நோக்குகையில் எல்லாத் தருணங்களிலும் மிகச் சிரமமான தருணம்.

எதிர்த்தாக்குதல் கட்டத்தில் பல பிரச்சினைகள் உள்ளன; அவற்றில் பிரதானமானவை எதிர்த்தாக்குதலைத் தொடங்குவது, துருப்புகளைக் குவிப்பது, நடமாட்ட யுத்தம், விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தம், அழித்தொழிக்கும் யுத்தம் ஆகியன.

ஒரு எதிர்த்தாக்குதலாயினும் ஒரு தாக்குதலாயினும் இவைகள் சம்மந்தமான கோட்பாடுகள் அடிப்படை இயல்பில் வேறுபடுவதில்லை; இருப்பினும் எதிர்த்தாக்குதலின் கோட்பாடுகள் எதிரி தாக்குதலில் ஈடுபட்டிருக்கையில் பிரயோகிக்கப்

படுபவை; தாக்குதலின் கோட்பாடுகள் எதிரி தற்காப்பில் ஈடு பட்டிருக்கையில் பிரயோகிக்கப்படுபவை.

**எதிர்த் தாக்குதலைத் தொடங்குதல்:** ஒரு எதிர்த்தாக்குதலைத் தொடங்கும் பிரச்சினை ''பூர்வாங்க சண்டை''யின் அல்லது ''பீடிகை''யின் பிரச்சினையாகும். தற்காப்பில் ஈடுபட்டிருக்கும் செஞ்சேனை பெரியதும் சக்தி மிக்கதுமான ஒரு எதிரி அடக்கும் படையை துகளாக்குவதாக இருந்தால் அதற்கு எதிர்த்தாக்கு தலிலான முதற்சண்டை மிகப்பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். முதற் சண்டையில் வெற்றியோ தோல்வியோ இறுதிக் கைகலப்பு வரை நிலைமை முழுவதின் மீது பிரம்மாண்டமான ஒரு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே, பின்வரும் முடிவுகள் இதிலிருந்து பெறப்படுகின்றது.

முதலாவதாக, முதற்சண்டை வெல்லப்பட வேண்டும். எதிரியின் நிலைமை, தரையமைப்பு, மக்கள் ஆதரவு எல்லாம் நமக்குச் சாதகமானதாகவும் எதிரிக்கு பாதகமானதாகவும் இருக்கின்றன என்று அறுதியாக நிச்சயமாக உள்ளபோது மட்டுமே நாம் தாக்கவேண்டும்; இல்லையேல் நாம் பின்வாங்கி கவனமாக காலத்தைக் கடத்துவதே நல்லது. கண்மூடித்தன மாக கண்டைக்குப் போய்விடக்கூடாது.

இரண்டாவதாக, முதற் சண்டைக்கான திட்டம் முழுப் போரியக்கங்களுக்குமான திட்டத்திற்குப் பீடிகையாகவும் அதில் இணைவாக அடங்கிய ஒரு பகுதியாகவும் இருக்கவேண்டும். முழுப் போரியக்கங்களுக்கான நல்ல திட்டமொன்று இல்லாமல் உண்மையில் நல்ல ஒரு முதற்சண்டையை நடத்துவது அசாத்தியம். அதாவது முதற் சண்டையில் வெற்றி ஈட்டப்பட்டாலும் கூட, அச்சண்டை போரியக்கம் முழுமைக்கும் உதவியாயிருப்ப தன்றித் தீங்கு செய்ததென்றால் அத்தகைய ஒரு வெற்றி ஒரு தோல்வியாகவே கருதப்பட வேண்டும். எனவே முதற் சண் டையைச் செய்யும் முன் அடுத்தடுத்து வரும் சண்டைகளில் ஒவ்வொன்றிலும் நாம் வென்றால் அல்லது தோற்றால் எதிரி, நாம் ஆகிய இரு தரப்புகளிலும் எழும் பொதுவான நிலைமை களின் பின்னணியில் வைத்து யதார்த்தமாகவும் கவனமாகவும் சிந்தித்து செயல்பட வேண்டும்.

மூன்றாவதாக, யுத்தத்தின் யுத்ததந்திர ரீதியான அடுத்த கட்டத்தில் என்ன நடக்கும் என்பதையும் சிந்தித்துப் பார்த்து செயல்பட வேண்டும். குறிப்பிட்ட யுத்ததந்திர ரீதியான கட் டத்தில் அடுத்து வரும் கட்டங்களை அல்லது ஆகக் குறைந்த பட் சம் அடுத்த ஒரு கட்டத்தையாவது கருத்தில் கொள்ளவேண்டும். அரசியலில் போலவே போகப்போக ஒரு சமயத்தில் ஒவ்வொரு அடியை மட்டும் திட்டமிட்டுக்கொண்டு போவது தீமையான தாகும். ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்தபின், அதைத் தொடர்ந்து ஏற்படும் திட்டவட்டமான மாற்றங்களைப் பரி சீலிப்பதும் அவற்றின் பிரகாரம் யுத்ததந்திர, போரியக்கத் திட்டங்களை மாற்றுவது அல்லது அபிவிருத்தி செய்வதும்

அவசியம். யுத்ததந்திர ரீதியான கட்டம் முழுவதையுமோ யுத்ததந்திர ரீதியான பல கட்டங்களைக் கூடவோ தழுவுவதும் பொதுவான வடிவில் சிந்தித்து ஆக்கப்பட்டதுமான ஒரு நீண்ட காலத் திட்டம் இருப்பது அறவே இன்றியமையாததாகும். இத்தகைய ஒரு திட்டத்தை தீட்டிக்கொள்ளத் தவறுவது, தயங்குவது தன்னைச் செயலின்றி கட்டிப்போட அனுமதிப்பது மான, உண்மையில் எதிரியின் யுத்ததந்திர ரீதியான நோக்கங் களுக்குப் பயன்படுவதும் தன்னை செயலற்ற நிலைமைக்குத் தள்ளுவதுமான தவறுக்கு இட்டுச்செல்லும். சுருங்கக் கூறின், பின்வாங்கலின் கட்டத்திலேயே, நாம் எதிர்த்தாக்குதல் கட் டத்தைக் காணவேண்டும்; எதிர்த்தாக்குதல் கட்டத்திலேயே தாக்குதற் கட்டத்தை நாம் காணவேண்டும்; தாக்குதல் கட் டத்திலேயே மீண்டும் ஒரு பின்வாங்கல் கட்டத்தைக் காண வேண்டும்.

மொத்தத்தில், முதற்சண்டை வெல்லப்பட வேண்டும் முழுப் போரியக்கத்திற்குமான திட்டம் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். அடுத்துவரும் யுத்ததந்திர ரீதியான கட்டமும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். இவையே ஒரு எதிர்த்தாக் குதலைத் தொடங்கும்போது அதாவது, முதற் சண்டையைச் செய்யும்போது, ஒருபோதும் மாறக்கூடாத மூன்று கோட்பாடு களாகும்.

<u>துருப்புகளைக் குவித்தல் :</u> ஒரு சிறிய படையைத் தோற்கடிக்க பெரிய படையொன்றை உபயோகிப்பது மிகச்சிறந்த முறை யாகும். துருப்புகளைக் குவித்தலில் மிக முக்கியமான விஷயம் சாத்தியமான அளவு பெரியதும் போரிடும் உணர்வு நிரம்பி யதுமான ஆயுதமேந்திய படையொன்றைப் பேணுவதும் ஒன் றாகக் குவிப்பதுமாகும். பல சமயம் எதிரியால் செயலற்ற தன்மைக்கு நிர்ப்பந்தித்து தள்ளப்படுவது நடக்கலாம். ஆனால் முக்கியமான காரியம் விரைவில் முன்னோட்டத்தை மீண்டும் பெறுவதாகும். அவ்வாறு செய்யத் தவறுவது தோல்வியில் போய் முடியும்.

முன்னோட்டத்தைப் பூரணமாகப் பிரயோகிப்பதற்கு தாக்குதல் யுத்தம் தருவதைவிட மிக குறைவான வாய்ப்பையே ஒரு தற்காப்பு யுத்தம் தருகிறது. எனினும் எப்போதும் முன் னோட்டத்தை விடாமல் கடைபிடித்து வடிவில் செயல்படாத தன்மையானதாகிய தற்காப்பு யுத்தம் உள்ளடக்கத்தில் செயல் படும் தன்மையானதாக இருக்கவும், அது வடிவில் செயல்படாத தன்மையானதாக இருக்கும் கட்டத்திலிருந்து வடிவம், உள் ளடக்கம் இரண்டிலும் செயல்படும் தன்மையானதாக இருக்கும் கட்டத்திற்கு மாற்றவும் வேண்டும்.

யுத்ததந்திர ரீதியான பின்வாங்குதல் நமது பலத்தைப் பேணிக்கொண்டு எதிரியைத் தோற்கடிக்கத் தருணம் பார்த்துக் காலத்தைக் கடத்தவும், எதிரியை வெகுதூரம் உள்ளே இழுத்துச் செல்லவும் நமது எதிர்த்தாக்குதலுக்குத் தயாராகவும் செய்யப்

படுவதாகும். மறுபுறம் பின்வாங்க மறுப்பது செயலற்ற தன்மையானதாகும். யுத்ததந்திர ரீதியிலான ஓர் எதிர்த்தாக்குதல் உள்ளடக்கத்தில் செயல்படும் தன்மையானது மட்டுமில்லாமல், வடிவிலும்கூட அது பின்வாங்கும் காலகட்டத்தின் செயல்படாத் தன்மையைக் கைவிட்டு விடுகிறது. எதிரியைப் பொறுத்தவரை நமது எதிர்த்தாக்குதல் அவனை முன்னோட்டத்தைக் கைவிடச் செய்யவும் அவனைச் செயலற்ற ஒரு நிலையில் இடவுமான நமது பிரயத்தனத்தை பிரதிநிதித்துவம் செய்கிறது.

இந்தக் குறிக்கோளைப் பூரணமாக அடைவதற்குத் துருப்புகளைக் குவிப்பது, நடமாட்ட யுத்தம், விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தம், அழித்தொழிக்கும் யுத்தம் எல்லாம் அவசியமான சூழ்நிலைகள். இவற்றில் துருப்புகளைக் குவித்தல் முதலாவதும் மிக அத்தியாவசியமானதும் ஆகும்.

துருப்புகளைக் குவித்தல் எதிரிக்கும் நமக்கும் இடையிலான நிலைமையை மறுபுறமாகத் திருப்பும் நோக்கத்திற்கு அவசியமானது.

முதலாவதாக, அதன் நோக்கம், முன்னர் எதிரி முன்னேறிக் கொண்டிருந்ததும் நாம் பின்வாங்கிக் கொண்டிருந்ததுமான நிலைமையை, நாம் முன்னேறுவதும் எதிரி பின்வாங்குவதுமான ஒரு நிலைமையை ஏற்படுத்தும் நோக்கத்துக்குச் செய்யப்படுகிறது. அந்த நோக்கம் அடையப்படும்பொழுது அது போரியக்கம் முழுவதும் பாதிப்பைச் செலுத்துகிறது.

இரண்டாவதாக, அதன் நோக்கம் தாக்குதலும் தற்காப்பும் சம்பந்தமாக நிலைமையை மறுபுறமாகத் திருப்புவது யுத்ததந்திர ரீதியான தாக்குதலுக்காகவே துருப்புகள் குவிக்கப்படுகிறது.

மூன்றாவதாக, அதன் நோக்கம் உட்புற முனைகளும் வெளிப்புற முனைகளும் சம்பந்தமாக நிலைமையை மறுபுறமாகத் திருப்புவதாகும். எதிரியால் நமக்கு எதிராக நடத்தப்படும் பெரும் 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கை ஒன்றை நாம் நம்மால் எதிரிக்கு எதிராக நடத்தப்படும் பல சிறிய, தனித்தனியான சுற்றிவளைத்து அடக்கும் நடவடிக்கைகளாக மாற்ற வேண்டும். யுத்ததந்திர மட்டத்தில் எதிரியால் நமக்கு எதிராக செலுத்தப்படும் குவிந்த தாக்குதலை நாம் போரியக்கங்களினதும் சண்டைகளினதும் மட்டத்தில் நம்மால் எதிரிக்கு எதிராக செலுத்தப்படும் குவிந்த தாக்குதல்களாக மாற்ற வேண்டும். யுத்ததந்திர ரீதியில் எதிரிக்கு உள்ள உயர்சியை நாம் போரியக்கங்களிலும் சண்டைகளிலும் பலவீனமான ஒரு ஸ்தானத்தில் இடவேண்டும். அதே நேரத்தில் நாம் யுத்ததந்திர ரீதியில் பலவீனமான நமது சொந்த ஸ்தானத்தை போரியக்கங்களிலும் சண்டைகளிலும் பலமான ஒரு ஸ்தானமாக மாற்ற வேண்டும். இதுவே உட்புற முனை நடவடிக்கைகளுக்குள் வெளிப்புறமுனை நடவடிக்கைகள் எனவும், 'சுற்றி வளைத்து அடக்குத' லுக்குள் சுற்றி வளைத்து அடக்குதல் எனவும், முற்றுகைக்குள் முற்றுகை

எனவும், தற்காப்புக்குள் தாக்குதல் எனவும், தாழ்ச்சிக்குள் உயர்ச்சி எனவும், பலவீனத்திற்குள் பலமெனவும், பாதக அம்சத்திற்குள் சாதக அம்சம் எனவும், செயலற்ற நிலைக்குள் முன்னோட்டம் எனவும் அழைக்கப்படுவதாகும்.

யுத்ததந்திர ரீதியான தற்காப்பில் துருப்புகளைக் குவிப்பது என்ற நடவடிக்கைக்கு எதிராக பல தவறான கருத்துகள் நிலவுகின்றன. சகல முனைகளிலும் தாக்குதல் என்ற முழக்கம் இதில் ஒன்றாகும். இது யுத்ததந்திர ரீதியான தற்காப்பிற்கு மட்டுமின்றி யுத்ததந்திர ரீதியான தாக்குதலுக்கும் தவறானது. இந்த முழக்கம் ராணுவ துணிச்சல்வாததுடன் கூடவே காணப்படும் ராணுவ சமத்துவவாதத்தை வெளிபடுத்துகிறது. அதேபோல இரண்டு முஷ்டிகளாலும் தாக்கும் தத்துவமாகும். நாம் ஒரு சக்தி மிக்க எதிரியை எதிர்நோக்கும்போது நமது சேனையின் அளவு எவ்வளவாக இருந்தாலும் சரி ஒரு சமயத்தில் ஒரு பிரதான திக்கில் மட்டுமே உபயோகிக்க வேண்டும். அதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட திக்குகளில் போராடினாலும் எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திலும் ஒரு பிரதான திக்குமட்டுமே இருக்க வேண்டும். எதிர்த் தாக்குதல்களாயினும் தாக்குதல்களாயினும் நாம் எப்போதும் எதிரிப் படைகளின் ஒரு பகுதியைத் தாக்க பெரிய படையொன்றைக் குவிக்க வேண்டும். மேலும் ஒரு சண்டையில் பிடிபட்ட பொருட்கள் மற்றும் சிறைபிடிக்கப்பட்டவர்கள் இழப்புகளைவிட கூடுதலாக இல்லாதபோது அந்த சண்டையின் முக்கியத்துவம் அற்பமே. மொத்தத்தில், நமது யுத்ததந்திரம் ''ஒருவர் பத்துபேருக்கு எதிராகப் போரிடு''வதும் நமது போர்த்தந்திரம் ''பத்துபேர் ஒருவருக்கு எதிராகப் போரிடு''வதும் ஆகும். இது எதிரியைத் தோற்கடிப்பதற்கான அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும்.

''எல்லா முனைகளிலும் எதிர்க்க'' வேண்டுமென்பவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால் நாம் நமது பிரதேசங்களை இழக்க நேரிடும் என்று கூறுகிறார்கள். இயல்பாகவே, பிரதானப்படைகளை ஒரு திக்கில் குவித்து, மற்ற திக்குகளில் வரைப்படுத்தி வைத்திருக்கும் படைகளை மட்டுமே விட்டு வைக்கும்போது பிரதேசம் இழக்கப்படுவதைத் தவிர்ப்பது அரிதே. ஆனால் இந்த இழப்பு தற்காலிகமானதும், பகுதிவாரியானதும், அத்துடன் தாக்குதல் செய்யப்படும் இடத்தில் வெற்றியால் இட்டு நிரப்பப்படுவதுமாகும். அத்தகைய வெற்றி ஒன்று ஈட்டப்பட்ட பின்னர், எதிரியை வரைப்படுத்தி வைத்திருக்கும் படைகளின் பகுதியில் இழக்கப்பட்ட பிரதேசம் திரும்ப பிடிக்கப்படலாம்.

படைகளை ஒன்று குவிப்பதற்கு எதிராக எழுப்பப்படும் இன்னொரு ஆட்சேபம், செஞ்சேனை தளப்பிரதேசத்தை விட்டு அதிக தூரம் நகர்த்தப்படுகிறது; தளப்பிரதேசங்களின் தற்காப்புக்காக படைகள் பிரிக்கப்பட வேண்டும் என்பதாகும். எதிரி எப்பொழுதும் தளப்பிரதேசத்திற்குள் புக அஞ்சுவான். மறுபுறம், அவனது பார்வையில் வெள்ளைப் பகுதியில் புகுந்துவிட்ட பிரதான சக்தியாகிய செஞ்சேனை எங்கிருக்கிறது என்

பதில் தான் நிலைத்திருக்கும். அவன் அரிதாகவே அதிலிருந்து பார்வையைத் திருப்பி தளப்பிரதேசத்தில் மட்டும் கவனத்தைச் செலுத்துவான். தளப்பிரதேசங்களின் பரப்பளவைக் குறைப்பது எதிரியின் குறிக்கோளாக இருந்தபோதிலும் அவனது வியூகங்களில் ஒன்றை அழித்தொழிக்க செஞ்சேனை தனது பிரதான பலத்தைக் குவித்தால் அதற்கு எதிராக பெரிய படையைக் குவிக்க எதிரி நிர்ப்பந்திக்கப்படுகிறான். இதன் மூலம் தளப் பிரதேசத்தின் பரப்பளவைக் குறைப்பதற்கான எதிரியின் திட்டம் தகர்த்தெறியப்படுவது சாத்தியமாகும்.

படைகளைக் குவித்தலுக்கு மக்களின் கொரில்லா யுத்தத்தைக் கைவிடுவதென அர்த்தமில்லை. புரட்சி யுத்தத்தை முழுமையாக நோக்கினால் மக்கள் கொரில்லாக்களும் பிரதான சக்தியான செஞ்சேனையும் மனிதனின் வலக்கையும் இடக்கையும் போல ஒன்றுக்கொன்று உதவியாக இருப்பவை. மாறாக, சிறு அளவிலான கொரில்லா யுத்தத்தைக் கைவிட்டு தனி ஒவ்வொரு துப்பாக்கியையும் செஞ்சேனையிற் திரட்டிக் குவிப்பதென்பது தவறாகும்.

படைகளைக் குவித்தல் என்பதை செஞ்சேனையின் படைகள் எல்லாவற்றையும் ஒன்றாகக் குவிப்பது என்று பொருள் கொண்டுவிடவும் கூடாது. நாம் கூறும் வகையான குவிப்பு போர்க்களத்தில் அறுதியான அல்லது ஒப்புநோக்கான உயர்ச்சியை உத்திரவாதப்படுத்திக்கொள்ளும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் எண்ணிக்கையில் உயர்வு பெற்றிருக்க வேண்டும் என்று இதற்கு அர்த்தமல்ல. மக்கள் ஆதரவு, தரையமைப்பு, கால நிலல ஆகியவை பெருமளவு நமக்குச் சாதகமாயுள்ள சூழ்நிலைகளில் பலங்கூடிய எதிரியின் தாக்குதலைத் தகர்க்க எதிரியின் நடுப்பாகத்தையும் ஒரு பக்கவாட்டையும் கொரில்லாக்களை அல்லது சிறிய படைப்பிரிவுகளைக் கொண்டு வரைப்படுத்திக் கொண்டு மற்றொரு பக்கவாட்டின் மீது திடீர்த் தாக்குதல் நடத்த செஞ்சேனையின் பிரதான பகுதியை குவித்து உபயோகிக்க வேண்டும். இங்கே கூட ஒரு பக்கவாட்டுத் தாக்குதலைப் பொறுத்தவரை தாழ்வான ஒரு படைக்கு எதிராக உயர்வான ஒரு படையை உபயோகிப்பதும் சிலரைத் தோற்கடிக்கப் பலரை உபயோகப்படுத்துவதுமான கோட்பாடே பிரயோகிக்கப் படுகிறது.

<u>நடமாட்ட யுத்தமுறை</u>: செஞ்சேனையின் நடவடிக்கைகள் நடமாட்ட யுத்தமுறைத் தன்மைகளைக் கொண்டிருக்கும்; ஸ்தான யுத்தமுறைத் தன்மைகளை அல்ல. நம்மிடம் ஒரு பெரும் சேனையோ வெடிமருந்துக் கையிருப்புகளோ இல்லாதவரையும் செஞ்சேனையின் எந்திர நுட்ப சாதனங்கள் குறைந்ததாக உள்ள வரையும் எதிரி சக்திமிக்கவனாக இருப்பதினாலும் அநேகமாக தளப்பிரதேசங்களில் சண்டை செய்வதற்கு ஒரேயொரு செஞ்சேனைப் படை மட்டுமே இருக்குமாதலால் ஸ்தான யுத்தம் என்பது அடிப்படையிலேயே செஞ்சேனைக்குப் பயனற்றதாகும்.

நடமாட்ட யுத்தமுறையே அடிப்படையானதாகும். ஆனால் ஸ்தான யுத்தமுறை அவசியமும் சாத்தியமானவிடத்தும் நாம் அதை நிராகரிப்பதுமில்லை. யுத்ததந்திர ரீதியான தற்காப்புக் கட்டத்தின் போது வரைப்படுத்தி வைத்திருக்கும் நடவடிக்கை ஒன்றிற் குறிப்பிட்ட கேந்திர ஸ்தலங்களை விடாப்பிடியாகப் பாதுகாக்கும்போதும், யுத்ததந்திர ரீதியிலான தாக்குதலின் போதும் தனிப்பட்டதும் உதவியிலிருந்து துண்டிக்கப்பட்டது மான ஓர் எதிரிப்படையை எதிர்ப்படும்போதும், ஸ்தான யுத்த முறை உபயோகப்படுத்தப்படவேண்டும். ''எம்மால் வெல்ல முடியும்போது போரிடுவோம்; முடியாதபோது அகன்று விடுவோம்''—இதுவே நடமாட்ட யுத்தமுறையை வர்ணிப்பதற் கான பொது வாக்கியமாகும்.

**விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தம் :** தனிப்பட்ட சண்டைகள் அல்லது வ்யாரியககங்களில் விரைவில் வெற்றி தோல்வி காணும் கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொரு சண்டையும் சில மணி நேரங்களில் அல்லது ஒன்றிரண்டு நாட்களில் முடிக்கப்பட வேண்டும். நமது திட்டம் ''எதிரியின் உதவிக்கு வரும் படைகளைத் தாக்குவதற்காக எதிரியை முற்றுகையிடுவதாக'' உள்ளபோதும் நமது நோக்கம் முற்றுகையிடப்பட்ட எதிரியை அல்லாமல் அவனது உதவிக்கு வரும் படைகளையே தாக்குவதாக இருக்கும்போது மட்டுமே நாம் நமது முற்றுகை நடவடிக்கை ஒரு அளவிற்கு நீண்டிருப் பதற்குத் தயாராக இருப்போம்; ஆனால் அப்போதும்கூட உதவிக்கு வரும் படைகளுக்கு எதிராக நாம் விரைவான வெற்றி தோல்வி காணவே முயலுவோம்.

**அழித்தொழிக்கும் யுத்தம்:** தனக்கான பண்டங்களைக் கிட்டத் தட்ட முழுவதையும் எதிரியிடமிருந்தே செஞ்சேனை பெற வேண்டியிருக்கும். எனவே, செஞ்சேனைக்கு அழித்தொழிக்கும் யுத்தமே அடிப்படைக் கொள்கையாகும். எதிரியின் வினைத் திறனுடைய பலத்தை அழித்தொழிப்பதன் மூலம் மட்டுமே நாம் அவனது ''சுற்றி வளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளைத் துகளாக்கவும் நமது தளப்பிரதேசங்களை விரிவுபடுத்தவும் முடியும். அழித்தொழிக்கும் போரானது ஒரு மனிதனின் பத்து விரல்களையும் காயப்படுத்துவது ஒரு விரலைக் கொத்தியெறி வது போன்று பயனுடையதாகாது என்ற கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டது. அழித்தொழிப்புக்கான யுத்தத்துக்கு மக்கள் ஆதரவு, சாதகமான தரையமைப்பு, பாதிக்கப்படக் கூடிய எதிரிப் படையொன்று, திடீர்த்தாக்குதலின் சாதகத் தன்மை ஆகியன போன்ற சூழ்நிலைகள் எல்லாம் இன்றியமை யாதவை.

நடமாட்ட யுத்தமுறை, விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தம், அழித்தொழிக்கும் யுத்தம் ஆகியவைகளைப் பற்றி ஏற்கனவே விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளதால் அவை களை விரிவாக இங்கே விளக்கவில்லை.

இந்தியப் புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தின் பிரதான வடிவம் 'சுற்றி வளைத்து அடக்கு' தலும் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் நிறைந்திருப்பது; எதிரியின் 'சுற்றி வளைத்து அடக்குதல்' நடவடிக்கைகளிலும் அவற்றுக்கெதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகளிலும் தற்காப்பு மற்றும் தாக்குதல் ஆகிய சண்டையிடுதலின் இரு வடிவங்களும் ஒரு நீண்ட கால கட்டத்துக்கு திரும்பத் திரும்ப ஒன்று மாறி ஒன்று இடம் பெறுவதும்; ஆனால் ஒரு யுத்தத்தின் அல்லது சண்டையின் உள்ளடக்கம் ஒவ்வொரு 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கையும். அதற்கெதிரான நடவடிக்கையும் அடுத்தடுத்த சுற்றுகளில் அளவில் மேலும் பெரிதாக, நிலைமையில் மேலும் சிக்கலானதாக சண்டை மேலும் உக்கிரமானதாக அதே சமயம் ஏற்ற இறக்கங்களுடன் அமைந்திருப்பினும் ஒரு பொது விதியாக இவையனைத்தும் திரும்பத் திரும்ப ஒன்று மாறி ஒன்று நிகழ்வதும் என்ற நிகழ்ச்சிப் போக்காகவே உள்நாட்டு யுத்தம் அமையும்; இக்காரணங்களால் இதுவரை விளக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட 'சுற்றி வளைத்து அடக்குதல்' நடவடிக்கை மற்றும் அதற்கெதிரான நடவடிக்கை எவ்வாறு நடந்தேறுகிறது என்பதையே மேலும் பருண்மையாகப் பிரயோகிக்க வேண்டும். யுத்தம் காலத்தாலும், இடத்தாலும் அபிவிருத்தியடையக் கூடியது என்பதை மறக்க கூடாது. இது பழையவற்றின் சரியான அம்சங்களை உயர்த்திப் பிடிக்கும் அதே நேரத்தில் புதியவற்றையும் கோருகின்றது.

உள்நாட்டு யுத்தம் நீடிக்கும்வரை—பிரதான முரண்பாடு மாறி தேசிய யுத்தம் வெடிக்கும்வரை — செஞ்சேனை எதிரியை விட பலம் வாய்ந்ததாக ஆகும்வரை இந்த 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப இடம்பெறும். ஒவ்வொன்றிலும் பல அல்லது பல பத்து போர் நடவடிக்கைகளும் சண்டைகளும் அடங்கிய பல 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கைகளையும் முறியடித்து அரசியல் மற்றும் ராணுவ ரீதியில் செஞ்சேனை வளர்ச்சியையும் எதிரி தாழ்ச்சியையும் அடையும்போது, யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் தொடங்கும் போது யுத்ததந்திர மற்றும் போரியக்க நடவடிக்கை கோட்பாடுகள் சில மாற்றங்களுக்குள்ளாகும். இதுவரை உள்முனையில் போரிட்டுக்கொண்டிருந்த செஞ்சேனை வெளிமுனையில் போரிடத் துவங்கும். சில நகரங்களையோ பகுதிகளையோ கைப்பற்றுவது, பாதுகாப்பது—மையமான தளப்பிரதேசங்களில் ஊன்றி நிற்கும்போதே—பிரதானமாக இராது. ஆகக்கூடுதலான அளவு செஞ்சேனை படைப்பிரிவுகளைக் குவிப்பதும், எதிரியை ஆகப் பெரும் அளவில் அழித்தொழிப்பதுமே பிரதானமாக இருக்கும். எதிரியின் அடுத்தடுத்த பலவீனமான படைப்பிரிவுகளை ஒவ்வொன்றாகச் சுற்றிவளைத்து தாக்கி அழித்தொழிப்பதும், சிறு கொரில்லாப் படைகளைக் கொண்டு பிற படைப்பிரிவுகளுக்குத் தொந்தரவும், இழுத்தடிப்பும் தருவதும் பெரும்பாலும் சாதகமான தரையமைப்பு மற்றும் மக்கள் திரள் ஆதரவைச் சார்ந்து நின்று தாக்குதல் தொடுப்பதும் இருக்கும். யுத்ததந்திர

ரீதியான தாக்குதல் தொடங்கிய பின்னர்கூட ஒரே சீராக எல்லாப் பகுதிகள் மற்றும் நகரங்களுக்கு அலையலையாக முன்னேறுவது இருக்காது. ஏற்றத்தாழ்வாகவே இருக்கும். யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் காலகட்டங்களில் பின்வரும் போர் நடவடிக்கை கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்:

1. "கலைந்து தனிமைப்பட்டிருக்கும் எதிரிப்படைகளை முதலில் தாக்குவது; செறிந்த, பலமான எதிரிப்படைகளைப் பின்னர் தாக்குவது.

2. "சிறிய மத்தியதர நகரங்களையும், விசாலமான கிராமப் பிரதேசங்களையும் முதலிற் கைப்பற்றுவது; பெரிய நகரங்களைப் பின்னர் கைப்பற்றுவது.

3. "வினைத்திறனுடைய எதிரியின் பலத்தைத் துடைத்தொழிப்பதைப் பிரதான இலக்காகக் கொள்ள வேண்டும். ஒரு நகரை அல்லது இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பதை அல்லது கைப்பற்றுவதைப் பிரதான இலக்காகக் கொள்ளக்கூடாது. ஒரு நகரை அல்லது இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பது அல்லது கைப்பற்றுவது, வினைத்திறனுடைய எதிரியின் பலத்தை அழிப்பதன் விளைவாகும். ஒரு நகரை அல்லது இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பதற்கு அல்லது கைப்பற்றுவதற்கு முன், அது பல தடவை கைமாறுவது வழக்கம்.

4. "ஒவ்வொரு சமரிலும் முற்றாக மேம்பாடான படைகளை (எதிரியின் பலத்திலும் பார்க்க இரண்டு, மூன்று, நாலு, சில சமயங்களில் ஐந்து அல்லது ஆறு மடங்கு படைகளை ஒன்று குவித்து, எதிரிப்படைகளை நாலு பக்கத்தாலும் சுற்றி) வளைத்து, அவற்றைப் பூரணமாகத் துடைத்தொழுக்கப் பாடுபட்டு, வலையிலிருந்து ஒருவரேனும் தப்பி ஓடாமற் பார்த்துக் கொள்வது; விசேஷ நிலைமைகளில், எதிரிக்கு அழிவு தரும் அடிகள் கொடுக்கும் முறையை உபயோகிப்பது; அதாவது, நமது பலம் முழுவதையும் ஒன்று குவித்து, எதிரி மீது நேர்முகத் தாக்குதல் தொடுத்தும் அவனது விலாப்புறத்தின் ஒரு புறத்தில் அல்லது இரண்டு புறங்களிலும் தாக்குதல் தொடுத்தும் அவனுடைய ஒரு பகுதியைத் துடைத்தொழித்து, இன்னொரு பகுதியைச் சிதறி ஓடச் செய்வது; இவ்வாறு, நமது படை இதர எதிரிப்படைகளைத் தாக்கி ஒழிப்பதற்கு, தன் துருப்புக்களை விரைவாக நகர்த்த முடியும். நாம் பெறுவதிலும் பார்க்கக் கூடுதலாக இழக்கின்ற, அல்லது இரு தரப்பும் சமமாக இழக்கின்ற தேய்க்கும் சமர்களைத் தவிர்க்கப் பாடுபடுவது. இப்படிச் செய்தால், முழுமையில் (எண்ணிக்கை அளவில்) நாம் தாழ்ந்தவர்களாய் இருந்தாலும், ஒவ்வொரு பகுதியிலும், குறிப்பிட்ட ஒவ்வொரு போரியக்கத்திலும் நாம் முற்றாக மேம்பாடுடையவர்களாய் இருப்போம். இது போரியக்கத்தின் வெற்றியை உத்திரவாதம் செய்யும். காலப்போக்கில், முழுமையிலும் நாம் மேம்பாடுடையவர்களாய் மாறி, இறுதியில் எதிரிகள் எல்லோரையும் துடைத்தொழிப்போம்.

5. ''தயார் செய்யாமல் எந்தச் சமரிலும் போரிடாதே; வெற்றி நிச்சயம் இல்லாத எந்தச் சமரிலும் இறங்காதே; ஒவ்வொரு சமருக்கும் இயன்றவை அனைத்தையும் செய்து தயாராய் இருக்கவேண்டும்; எதிரிக்கும் நமக்கும் உள்ள நிலைமைகளின் பிரகாரம் நாம் வெல்லக்கூடிய போரை நடத்தவேண்டும்.

6. ''சமரில் துணிவு, தியாகத்துக்கு அஞ்சாமை, களைப்புக்கு அஞ்சாமை, தொடர்ச்சியாகப் போரிடுவது (அதாவது, குறுகிய காலத்தில் ஓய்வின்றி அடுத்தடுத்துச் சமர் பல புரிவது) என்ற நமது போர் நடையைப் பூரணமாக வெளிப்படுத்துவது.

7. ''இயங்கிக் கொண்டிருக்கும் போது எதிரியைத் துடைத்தொழிக்கப் பாடுபடுவது; அதே சமயத்தில் நிலையங்களைத் தாக்கும் தந்திரோபாயங்களிற் கவனம் செலுத்தி, எதிரியின் அரண்களையும் நகரங்களையும் கைப்பற்றுவது.

8. ''நகரங்களைத் தாக்கும் பிரச்சினையில், பலவீனமான காவல்களையுடைய எதிரியின் அரண்கள், நகரங்கள் எல்லாவற்றையும் உறுதியாகக் கைப்பற்றுவது; சூழ்நிலைகள் அனுமதித்தால் நடுத்தர பலத்தால் காவல் செய்யப்பட்டிருக்கும் எதிரியின் அரண்கள், நகரங்கள் எல்லாவற்றையும் சந்தர்ப்பங்களைப் பார்த்துக் கைப்பற்றுவது. பலத்த காவல்களையுடைய எதிரியின் அரண்கள், நகரங்கள் அனைத்தையும் பொறுத்தவரையில், சூழ்நிலைகள் பக்குவம் அடையும் வரை காத்திருந்து அவற்றைக் கைப்பற்றுவது.

9. ''எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் எல்லாவற்றையும், ஆட்களில் பெரும்பாலானோரையும் கொண்டு, நமது பலத்தைப் பெருக்குவது. நமது படையின் ஆட் பலத்தினதும் பொருளாயத பலத்தினதும் ஊற்று மூலங்கள் பிரதானமாகப் போர்முனையில் இருக்கின்றன.

10. ''ஓய்வு எடுக்கவும், நமது படைகளைப் பயிற்றவும் ஸ்திரப்படுத்தவும் நல்ல முறையில் போர்களில வரும் இடைக் காலங்களை உபயோகிப்பது. ஓய்வு எடுத்து, பயிற்சி செய்து, ஸ்திரப்படுத்தும் காலங்கள் பொதுவாக நீண்டவையாய் இருக்கக் கூடாது. இயன்ற அளவில் எதிரிக்கு மூச்சுவிடவே அவகாசம் கொடுக்கக் கூடாது.'' (மாவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவப் படைப்புகள், பக். 704-707)

இதுவரை விவரிக்கப்பட்ட புரட்சிக்கான ராணுவ யுத்ததந்திரமும், போர்த்தந்திரங்களும், அவற்றின் விதிகளும் கோட்பாடுகளும் மாவோவின் தலைமையில் சீனப் பொதுவுடமைக் கட்சி வழி நடத்திய செஞ்சேனை உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளுக்கெதிராக நடத்திய நீண்டகால மக்கள் யுத்தப்பாதையின் வீரமும், தியாகமும், மதிப்பும் மிக்க படிப்பினைகளின் தொகுப்பே ஆகும். சீனப் புரட்சிகர யுத்தத்தின் போதும் அதைத் தொடர்ந்தும் பல்வேறு காலனிய, அரைக் காலனிய, நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாடு

களில் அவை பிரயோகிக்கப்பட்டு வெற்றியும் செழுமையும் அடைந்துள்ளன. இவை அனைத்திலிருந்தும் படிப்பினைகளைத் தொகுக்கும் அதே வேளையில் இந்தியப் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின் விசேஷ நிலைமைகளுக்கும் பிரயோகிக்க வேண்டும்.

நீண்டகால மக்கள்யுத்தப் பாதைக்கெதிராக, அதை முறியடிக்கப் பல்வேறு மாற்று முறைகளைத் தேடி அந்தந்த நாடுகளின் பிற்போக்குவாதிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் அலைந்துள்ளனர். அல்லது அலைந்து வருகின்றனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகச் சிறந்த தளகர்த்தர்களாகக் கருதும் தளபதிகளை தனித்துவத்தோடு வளர்க்கவும், பயிற்றுவிக்கவும் முயன்று வருகின்றனர். புரட்சிகர யுத்தத்தின் ராணுவ இலக்கியங்களையும் யுத்தத்திற் கைப்பற்றப்படும் சாசனங்களையும் விநியோகித்து, ஆராய்ச்சி செய்து அவற்றிலிருந்து கற்கவும் முயலுகின்றனர். செஞ்சேனையை அழிக்க ஒன்றன்பின் மற்றொன்றாகப் பலரக யுத்ததந்திரங்களையும் போர்த்தந்திரங்களையும் எல்லா வகையான நவீன ஆயுதங்களையும் சாதனங்களையும் பயன்படுத்துகின்றனர். இருப்பினும் புரட்சிகர யுத்தங்களை உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளாலும் ஏகாதிபத்தியவாதிகளாலும் வெல்ல முடியவில்லை. இதற்குக் காரணம் செஞ்சேனையின் யுத்ததந்திரமும் போர்த்தந்திரங்களும் மக்கள் யுத்தத்தின் அடிப்படையிலானவை. மக்களுக்கு எதிரான எந்தச் சேனையும், எந்த யுத்ததந்திரமும், போர்த்தந்திரங்களும், ஆயுதங்களும், சாதனங்களும் உண்மையில் இதை வெல்லவே முடியாது. செஞ்சேனையின் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களையும் கூட அவர்கள் பயன்படுத்த முடியாது. செஞ்சேனை மக்கள் யுத்தத்தின் அடிப்படையிலும், ராணுவத்துக்கும் மக்களுக்குமிடையே ஐக்கியம், தளபதிகளுக்கும் போராளிகளுக்கும் இடையே ஐக்கியம், எதிரிப்படைகளைச் சின்னாபின்னப்படுத்துவது என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் அதன் சக்தி வாய்ந்த புரட்சிகர அரசியல் வேலையை நிலைநிறுத்தி உள்ளது. மக்கள் யுத்தப்பாதை முறியடிக்கப்பட முடியாததன் அடிப்படைக் காரணம் அது மக்களைச் சார்ந்து மக்களுக்காக மக்களால் நடத்தப்படுவது தான்.

**அரசியல் நிலைமைகளும் போர்த்தந்திரங்களும் இராணுவ போரியக்க மற்றும் போர்த்தந்திர நடவடிக்கைகளின் தாக்குதல் அல்லது தற்காப்பு முன்னேற்றம் அல்லது பின்வாங்குதலை வழிநடத்துவது பற்றி:**

ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் தூக்கியெறிந்து மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவும் புதிய ஜனநாயகப் புரட்சியின் கட்டம் முழுவதும் அரசியல் யுத்ததந்திரம் தாக்குதல் தன்மையுடையதாக இருக்கும்போதே, குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப-புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவத்தைப்

பொறுத்து—தாக்குதல் அல்லது தற்காப்பு, முன்னேறுவது அல்லது பின்வாங்குவது என்ற தன்மையையுடைய அரசியல் போர்த்தந்திரங்கள் வகுக்கப்படுகின்றன. அரசியல் போர்த்தந்திரங்களின் இத்தன்மைகளுக்கேற்ப இராணுவ நடவடிக்கைகள் பொதுவாக வழிநடத்தப்படுகின்றன.

புதிய ஜனநாயகப்புரட்சியின் உள்நாட்டு யுத்தமாகட்டும் அல்லது தேசிய யுத்தமாகட்டும் யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு, யுத்ததந்திர ரீதியிலான இழுபறி நிலை, மற்றும் யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் ஆகிய மூன்று கட்டங்களைக் கொண்டிருக்கும். மேலும் யுத்தமானது, குறிப்பாக உள்நாட்டு யத்தமானது எதிரியின் 'சுற்றிவளைத்து அடக்குத'லும் அதற்கெதிரான செஞ்சேனையின் எதிர்நடவடிக்கைகளும் பிரதான வடிவமாக கொண்டிருக்கும். யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு கட்டத்திலேயே எதிரியின் பல'சுற்றிவளைத்து அடக்குத'லும், அதற்கெதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகளும் ஒவ்வொரு சுற்றிவளைத்து அடக்குதலும் அதற்கெதிரான நடவடிக்கைகளும் கூட பலபத்துக்கணக்கான சண்டைகளையும் கொண்டிருக்கும். அரசியல்போர்த்தந்திரங்களின் தற்காப்பு அல்லது தாக்குதல் தன்மை மாறினாலும் எதிரியின் பலத்தைப்போன்ற சமநிலை அல்லது உயர்ச்சி நிலை அடையும் வரை யுத்ததந்திர ரீதியிலான தற்காப்பு என்ற முதல் கட்டத்திலேயே யுத்தம் நீடிக்கும். இந்த முதற்கட்டத்திலேயே அரசியற்போர்த்தந்திரங்கள் முன்னேறுவது மற்றும் தாக்குதல் தன்மையுடையதாக இருக்கும் குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப மட்டுமே - புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகும்போது மட்டுமே - எதிரியின் 'சுற்றிவளைத்து அடக்குத'லுக்கெதிரான நடவடிக்கைகளில் யுத்ததந்திர ரீதியான பின்வாங்குதலுக்கு முன்பு அதிகபட்ச பலன்களை ஈட்டுமளவு முன்னேறித் தாக்குவதும், பின்வாங்குவதற்கான காலத்தை போதிய அளவு தாமதிப்பதும், பின்வாங்கிய பின் எதிர்த்தாக்குதலுக்கான தருணத்தை செஞ்சேனையின் வசதிக்காக முன்கூட்டியே கூட அமைத்துக் கொள்வதும் பின்வாங்குதலுக்கான அந்தத்தைத் தளப்பிரதேசத்தின் மையத்துக்கு முன்வரிசையில் மட்டுமல்லாது எதிரியின் ஆதிக்கமிக்க பிரதேசங்களிலேயே கூட அமைத்துக் கொள்வதும் சுருங்கக்கூறின், 'சுற்றிவளைத்து அடக்குத'லை முறியடித்து யுத்ததந்திர ரீதியிலான தாக்குதலைத் தொடுக்கும்போது இராணுவ ரீதியில் துணிச்சல் மிக்க முறையில் வீரதீரத்துடன் முன்னேறுவதாக - கொரில்லா மண்டலங்களை நிறுவுவது, தளப்பிரதேசங்களை அலை அலையாக விரிவடையச் செய்வது போன்றவை இருக்கும்.

குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப, புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் வடியும்போது வகுக்கப்படும் அரசியல் போர்த்தந்திரங்களின் தன்மை தற்காப்பு மற்றும் பின்வாங்குவதாக இருக்கும்போது எதிரியின் 'சுற்றிவளைத்து அடக்குத'லுக் கெதிரான நடவடிக்கைகளில் யுத்ததந்

திர ரீதியிலான பின்வாங்குதலை விரைவில் துவக்கி விடுவதும், பின்வாங்குதலுக்கான அந்தத்தை தளப்பிரதேச மையங்களில் தேவையானால் பின்வரிசையில் கூட அமைத்துக்கொள்வதும், முற்றிலும் சாதகமான சூழ்நிலையில் மட்டுமே எதிர்த்தாக்குதல் தொடுப்பதற்காகக் காத்திருப்பதும், சுற்றி வளைத்து அடக்குதலை முறியடிப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்வதும், சிறிது சிறிதாக மட்டுமே முன்னேறுவதும் — கொரில்லா மண்டலங்களை நிறுவுமளவு தீர்க்கமான தாக்குதலில் இறங்காதிருப்பதும், தளப்பிரதேசங்களை உறுதிப்படுத்துவதும், பலபான அடித்தள மிடுவதும் ஆயுதப் படைகளைப் பிரித்தொதுக்காது குவிப்பதும், இதுவரை பெற்ற வெற்றிகளைத் தக்கவைத்துக் கொள்வதாகவும், தேவையானால் சில போரிடும் முனைகளை மாற்றிக்கொள்வதும், கொரில்லா மண்டலங்கள், தளப்பிரதேசங்களை மாற்றிக்கொள்வது, தேவையானால் தற்காலிகமாகக் கைவிடுவதும் — என்கிற முறையிலானதாக இராணுவ நடவடிக்கைகள் அமையும்.

'சுற்றிவளைத்து அடக்குதல்' மற்றும் அதற்கெதிரான செஞ்சேனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பொழுதே புதிய அரசியல் சூழ்நிலைமைகள் காரணமாக—பருண்மையான நிலைமைகளுக்கேற்ப, புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதாகவோ, வடிவதாகவோ மாறிவிடுமானால், அதற்கேற்ப வகுக்கப்படும் அரசியல் போர்த்தந்திரங்களின் தற்காப்பு அல்லது தாக்குதல், முன்னேறுவது அல்லது பின்வாங்குவது என்ற தன்மைக்கேற்ப மேற்சொன்ன அடிப்படையில் —தக்க மாறுதல்களை உடனடியாகச் செய்யவேண்டும். அதேபோன்று இடைக்கட்டங்கள் மாறிவிடுமானால் (புரட்சிகர, எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களின் சேர்க்கையில் மாறுதல் ஏற்பட்டு விடுவதானாலோ, பிரதான முரண்பாடு மாறுவதனாலோ ஏற்படுவது) அதற்கேற்ற அரசியல் நடத்தை வழியால் தீர்மானிக்கும் பிரதான எதிரிக்கெதிராக யுத்தத்தின் தாக்குதல் முனை திருப்பப்படும். இவையும் இராணுவ ரீதியிலான போரியக்க மற்றும் போர்த்தந்திர நடவடிக்கையில் மாறுதலைக் கொண்டுவரும். சில சமயம் இராணுவ யுத்ததந்திர ரீதியிலான மாறுதல் கூட- உள்நாட்டு யுத்தம் தேசிய யுத்தமானால் கிராமங்களை மையமாகக் கொண்ட உள்நாட்டு யுத்தம் நகரங்களை மையமாகக் கொண்ட உள்நாட்டு யுத்தமானால் (தற்காலிக புரட்சி அரசும், மேலிருந்து செயல்படுவதுமாகிய ஸ்தாபன மற்றும் போராட்ட வடிவங்களை மேற்கொள்ளும் போது.)-நேரலாம். எனவே நிலைமைகள் முழுவதையும் கணக்கில் கொண்டு அரசியல் நிலைமைகளின் மாறுதலுக்கேற்ப இராணுவ நடவடிக்கைகளைத் திறமையாக மாற்றுவதில் இராணுவ யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திரத் தலைமையின் திறமையே அடங்கியிருக்கிறது. எதிரியை விட பலம் வாய்ந்ததாக செஞ்சேனை வளர்ந்து யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் நிலையை அடைந்தால் கூட பெரும்பாலும் நாமே புரட்சியின் போக்கைத் தீர்மானிக்கும் சக்தியாக வளர்ந்துள்ள நிலையிலும் கூட எதிர்பாராத அரசியல் நிகழ்ச்சிகள்

தற்காப்பு போர்த்தந்திரங்களை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கலாம். எனவே அரசியல் போர்த்தந்திரங்கள் தற்காப்பு நிலையுடையதாகஇருக்கும்போது இராணுவரீதியிலான போரியக்க மற்றும் போர்த்தந்திர நடவடிக்கைகள் துணிச்சல்மிக்கதாக அலைஅலையாக விரைந்து முன்னேறுவதாக இல்லாது தற்காலிகமாக முன்னேற்றத்தைக் குறைத்துக்கொண்டு, சிறிது சிறிதாக முன்னேறுவதாகவும் தேவையானால் தகுந்த தருணத்திற்காக வெறுமனே காத்திருக்க வேண்டியும் இருக்கலாம்.

# VIII அரசியல் மார்க்கத்தையும் ராணுவ மார்க்கத்தையும் இணைக்கும் முறை சில நடைமுறைப் பிரச்சினைகள். செஞ்சேனையையும் செந்தளப்பிர தேசத்தையும் நிறுவி வளர்க்கும் போக்கு.

இந்தியப் புரட்சியைத் தீர்மாணிக்கும் புறவயமான யதர்த்தத்தை ஆய்வு செய்து வந்தடையும் மார்க்சிய லெனினிய கோட்பாட்டு முடிவுகளின் அடிப்படையில் மார்க்சிய - லெனினியத் திட்டம் வகுக்கப்படுகிறது. கோட்பாட்டு முடிவுகள் மற்றும் திட்டத்தின் வழிகாட்டுதலில் அரசியல் யுத்ததந்திரம் வகுக்கப் படுகிறது. அரசியல் யுத்ததந்திரத்தின் வழிகாட்டுதலின் கீழ் அதற்கு கீழ்ப்படிதலான, சேவை செய்வதான வகையில் குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப புரட்சிகர மற்றும் எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களுக்கு இடையிலான உறவு பற்றிய மதிப்பீடு மற்றும் புரட்சி இயக்கத்தின் வெள்ளம் பெருகுவது அல்லது வடிவது பற்றிய கணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில்—அரசியல் நடத்தை வழி, போராட்ட மற்றும் ஸ்தாபன வடிவங்கள், முழக்கங்கள் அடங்கிய அரசியல் போர்த் தந்திரங்கள் வகுக்கப்படுகின்றன. இவையனைத்தும் நாடு முழுவதற்கும், அனைத்து வர்க்கங்களும் தழுவியதான முறையில் அணுகி வகுக்கப்படுகின்றன. ஆனால் அரசியல் போர்த்தந்தி

ரங்கள் நாடு முழுவதும், அனைத்து வர்க்கங்களும் தழுவிய முறையில் ஒரே சீராகவோ, அப்படியேயோ பிரயோகிக்க முடியாது. ஏனெனில் நமது நாட்டின் புரட்சியும் புரட்சிகர யுத்தமும் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி உடையதாகவே இருக்குமென்று அரசியல் மற்றும் ராணுவ யுத்ததந்திரங்கள் சுட்டிக் காட்டி இருக்கின்றன. எனவே புரட்சியினுடைய வளர்ச்சிப்போக்குகளின் அடிப்படையில் முன்னுரிமை தரும் பகுதிகளையும் கட்சி பிரதானமாகச் சார்ந்து நிற்கவேண்டிய வர்க்கங்களையும் திட்டமிட்ட முறையில் அறிவுபூர்வமாகத் தெரிந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப வகுக்கப்படும் அரசியல் போர்த்தந்திரத்தின் அரசியல் நடத்தை வழியே புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின் பொதுவான வளர்ச்சிப்போக்கில் இவைகளை நெறிப்படுத்தும்.

நமது நாட்டில் புரட்சியின் பொதுவான வளர்ச்சிப்போக்கு என்பது கிராமப்புறங்களில் புரட்சி வெற்றியடைவது; நகர்ப்புறங்களில் தற்காலிகமாக வெற்றிக்கான வாய்ப்பின்றி இருப்பது; கிராமப்புறங்களில் தாக்குதல் நிலை; நகர்ப்புறங்களில் தற்காப்பு நிலை; கிராமப் புறங்களிலேயே கூட ஒரு பகுதியில் தாக்குதல், மற்றொரு பகுதியில் தற்காப்பு, பின்வாங்குதல், தற்காலிகத் தோல்வி—இந்த வளர்ச்சிப் போக்குடனே ஒவ்வொரு காலகட்டத்திலும் நாட்டின் ஏற்றத்திலும் இறக்கத்திலும், மேலும் கீழும், புரட்சியும் எதிர்ப்புரட்சியும் அமையும்; இதற்கேற்றபடியே யுத்தமும் அமையும். இதன் பொருள் அரசியல் யுத்ததந்திரம் மட்டுமல்ல அரசியல் போர்த்தந்திரங்களே கூட நாடு தழுவியதான நிலைமைகளுக்கு நாடு தழுவிய முறையில் வகுக்கப்படக் கூடாது என்பதல்ல. மாறாக, நாடு தழுவிய புரட்சிகர நிலைமைகளுக்கேற்ப வகுக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப பிரயோகிக்கப்படும்; இயல்பாகவே பிரயோகிப்பதும் ஏற்றத் தாழ்வாக வெவ்வேறு நிலைமைகளினதாக இருக்கும். எனவே ருஷியப் புரட்சியின் அனுபவங்களை— ஸ்டாலின் தொகுத்தளித்தவைகளை — சீனப் புரட்சியில் மாவோ செய்தது போன்று பருண்மையாகப் பிரயோகிக்க வேண்டும்.

**1. பாட்டாளி வர்க்கக் கட்சி மற்றும் புரட்சியின் வளர்ச்சிப்போக்கு முதற் கட்டமாக பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையைக் கட்டியமைப்பது, அதாவது, கட்சித் தலைமைக் கருக்குழுவையும் அணிகளையும் வென்றெடுப்பது; இரண்டாவது கட்டமாக பரந்துபட்ட மக்களைப் புரட்சிக்கு வென்றெடுப்பது; மூன்றாவது கட்டமாக எதிரிக்கெதிரான தாக்குதல் தொடுப்பதும், புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதும் என்று மூன்று கட்டங்களினூடாகப் பயணம் செய்கிறது. 2. பாட்டாளி வர்க்க கட்சியின் யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திர முழக்கங்கள் முதற்கட்டமாக பிரச்சார முழக்கங்களாகவும் இரண்டாவது கட்டமாக கிளர்ச்சி முழக்கங்களாகவும், மூன்றாவது கட்டமாக செயல் முழக்கங்களாகவும் இறுதியில் கட்டளைகளாகவும் — ஆணைகளாகவும் — ஒரு வளர்ச்சிப்போக்கில் முன்னறுகின்றன.**

முதற் தொகுதியிற் சொன்ன மூன்று கட்டங்களையும், பின் தொகுதியிற் சொன்ன நான்கு கட்டங்களிலான முறைகளின் மூலம் நிறைவு செய்யவேண்டும். ஆனால் 'இடது' சந்தர்ப்பவாதிகளும் பிற மார்க்சிய-லெனினியக் குழுக்களும் இவை ருஷியப் புரட்சிக்கு—ஆயுதமேந்திய நாடு தழுவிய பேரெழுச்சிப் பாதைக்கு—மட்டுமே பொருந்தும், மக்கள்யுத்தப் பாதையிற் செல்லும் நமது நாட்டுப் புரட்சிக்கு அறவே பொருந்தாது என்கின்றனர். இன்னொருபுறம் திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் இன்னும் பிற குட்டி முதலாளித்துவக் குழுக்களும் நமது நாட்டுக்குப் பொருந்தாத நாடு தழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சிப் பாதையில் மேற்கண்ட முறைகள் பிரயோகிக்கப் பட்டவாறு அப்படியே பெயர்த்தெடுத்து—யாந்திரீக முறையில் பிரயோகிக்கின்றன. அதாவது நாடு தழுவிய ரீதியில் மேற்கண்ட இரு தொகுதிகளின் கட்டங்களைப பிரயோகித்து தற்பொழுது இவற்றில் முதல் அல்லது முதலிரண்டு கட்டங்களில் இருப்பதாக வைத்துக்கொண்டு தமது பொது வேலைத்திட்டத்தை வகுத்துக்கொண்டுள்ளன. இந்த இரு போக்குகளுமே தவறானவை. ஏனெனில், ஏற்றத்தாழ்வான அரசியல் பொருளாதார சமூக வளர்ச்சியுடைய நமது நாட்டின் பருண்மையான நிலைமைகளுக்கு ஸ்டாலின் தொகுத்தளித்த படிப்பினைகளைப் பிரயோகிக்கும் போது நாடு தழுவிய ரீதியில் என்றுமே புரட்சியின் சமமான வளர்ச்சிப்போக்கை அடைய முடியாது என்பதையும் உணரவேண்டும். இவ்வாறு நாடுதழுவிய ரீதியிலான பிரயோகம் மட்டுமே தவறானது என்பதை அறிவதற்கு பதில், மொத்தத்தில் நமது நாட்டு நிலைமைகளுக்கும் மக்கள்யுத்தப் பாதைக்கும் இவற்றை முற்றாகப் பிரயோகிக்கவே முடியாது என்று 'இடது' சந்தர்ப்பவாதிகள் மற்றும் பிற குழுக்கள் புறக்கணிக்கின்றன; இப்படியும் சொல்லலாம், அவற்றை அறியாமலிருக்கின்றன.

சீனப்புரட்சியின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சிப்போக்கை அங்கீகரித்து வகுக்கப்பட்டது மக்கள் யுத்தப்பாதை. சீனப்புரட்சியில் கட்சி கட்டுவதன் பொது வளர்ச்சிப் போக்கு முதலாளித்துவ வர்க்கத்துடனும் ஆயுதப்போராட்டத்துடனுமான உறவில் கட்சியின் சரியான அணுகு முறையில் தங்கியிருந்தது. கட்சியை வளர்ப்பதும் போல்ஷவியமயமாக்குவதும் ஒரு விசேஷமான வளர்ச்சிப் போக்கில் இருந்தது. எனினும் தலைமை முறை பற்றிக் கூறும்போது மாவோ எந்தவொரு இயக்கத்தையும் முன்னெடுத்துச் செல்லவும்கூட அணிகளைக் கொண்ட குழுக்களும், அதற்குத் தலைமைக் கருக்குழுவும், இவை இரண்டும் மக்களுடன் இணைக்கப்படுவதன் அவசியமும் பற்றியும், அரசியல் அணிதிரட்டலின் அவசியம் பற்றியும் வலியுறுத்தியுள்ளார். கட்சியைப் போல்ஷவியமயமாக்கலுக்கும், போர்த்தந்திரங்களை வகுத்து பிரயோகிப்பதற்கும் ஸ்டாலினது தொகுப்புரைகளைப் பருண்மையாக பிரயோகிக்கும்படி வலியுறுத்தியுள்ளார்.

கட்சியைக் கட்டுவது, மக்களைத் திரட்டுவது பற்றிய ஸ்டாலினது தொகுப்புகளை ஏற்றத்தாழ்வான ஒரு காலனிய

அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரைநிலப்பிரபுத்துவ நாட்டின் புரட்சியில் எவ்வாறு பிரயோகிப்பது என்பதே நம்முன் உள்ள பிரச்சினை. கருக்குழு மற்றும் அணிகளைக் கட்டுவது; புரட்சிக்கு மக்களை வென்றெடுப்பது; எதிரிக்கெதிரான தாக்குதல் தொடுப்பது ஆகிய மூன்று கட்டங்களோடு இவற்றுக்காக யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திர முழக்கங்களை பிரச்சார, கிளர்ச்சி மற்றும் செயல் முழக்கங்களாகவும், கட்டளைகளாகவும் பிரயோகிப்பது என்ற முறைகளுக்குள்ள உறவை முதலில் தொகுத்தறிவோம்.

இயக்கத்தின் உடனடி அல்லது நீண்டகாலக் குறிக்கோள் களைத் தெளிவாக வரையறுத்து கட்சியாலோ, முன்னணி வர்க்கத்தாலோ முன்வைக்கப்படும் முழக்கமானது போராட்டத் தின் வெவ்வேறு குறிக்கோள்களுக்குத் தக்கவாறு ஒரு வரலாற் றுக் கட்டம் முழுமைக்குமானதாகவோ, அல்லது தனித்தனியே பகுதிக் கால கட்டங்களுக்கானதாகவோ, குறிப்பிட்ட காலகட் டத்தின் ஒரு நிகழ்ச்சியை மட்டுமே தழுவியதாகவோ என்று பல்வேறு வகையிலானதாக இருக்க முடியும். அதாவது யுத்ததந் திர, போர்த்தந்திர முழக்கங்கள் அல்லது குறிப்பிட்ட போராட்ட இயக்கத்தினுடைய முழக்கங்கள் என்றும் இருக்க முடியும். முழக் கங்கள் எவ்வாறாயினும் அவை ஒவ்வொன்றும் தனித்தனி யேயோ, வெவ்வேறு சேர்க்கைகளிலோ குறிப்பிட்ட தருணத் தின் பருண்மையான நிலைமைகளைப் பொறுத்தது—பிரச்சார, கிளர்ச்சி மற்றும் செயலுக்கானவையாக மூன்று கட்டங்களி னூடே வளர்ந்து தலைமை மற்றும் அணிகள் கட்டப்பட்டு, மக்கள் திரட்டப்பட்டு போராட்டத்திற்கானதாகவும் கட்டளைக் கானதாகவும் வளர்கின்றன. இங்கே புரட்சிக்கான முழக்கம் என்னும்போது யுத்ததந்திர மற்றும் போர்த்தந்திர நடத்தை வழிகள் எவ்வாறு மூன்று வெவ்வேறு கட்டங்களினூடாக சென்று அரசியல் படையைக் கட்டுவதாகவும், மக்களுடைய முழக்கங்க ளாக மாறுகிறது என்பதாகவும் பின்னர் போராட்டத்தில் இறங்குவதற்கான கட்டளையாகிறது என்பதாகவும் குறிக்கப் படுகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகிய கருக் குழுவையும் அணிகளையும் வென்றெடுக்கும் நோக்கத்தோடு யுத்த தந்திர ரீதியிலான முழக்கம்—அதற்கான முறைகளுடன் பிரயோ சிக்கப்படும்பொழுது பிரச்சார முழக்கமாக இருக்கும். ஒப்பு நோக்கில் சிலரை மட்டுமே—தனிநபர்களையும் குழுக்களையும கட்சிக்கு வென்றெடுக்கும் வரம்புடையதாக அப்பொழுது இருக் கும். கருக்குழுவைப் பெற்றிருக்கும் பொழுதுதான் சரியான அரசியல், சித்தாந்த திசைவழியில் மக்களைத் திரட்டுவதும் வழிநடத்துவதும் சாத்தியம்; அணிகளைப் பெற்றிருக்கும் பொழுதுதான் கருக்குழுவின் அரசியல், சித்தாந்தக் கருத்துக்கள் பரந்துபட்ட மக்களைத் திரட்டுவது சாத்தியம். அணிகள் இல் லையானால் பரந்துபட்ட மக்களிடமிருந்து தனிமைப்பட்ட தலை மையாக கருக்குழு இருக்கும். இந்த வகையில் கருக்குழு மற்றும்

அணிகளைத் திரட்டுவது முதற்பணியாகிறது. இப்பணியை நிறைவேற்றும் கட்டத்தில் யுத்ததந்திர முழக்கம் பிரச்சார முழக்கமாக இருக்கிறது.

இந்நோக்கம் நிறைவேறியவுடன்—கருக்குழுவும் அணிகளும் வென்றெடுக்கப்பட்டவுடன்—பிரச்சார முழக்கம் கிளர்ச்சி முழக்கமாகிறது. புரட்சியின் உந்து சக்திகளான பரந்துபட்ட மக்களைப் புரட்சியின் பக்கம் வென்றெடுக்கும் நோக்கத்தோடு அதே யுத்ததந்திர ரீதியிலான முழக்கம்—அதற்கான முறைகளுடன் பிரயோகிக்கப்படும்பொழுது கிளர்ச்சி முழக்கமாக இருக்கும். பிரச்சார முழக்கத்தைப் போன்று ஒப்புநோக்கில் சிலரை வென்றெடுப்பதாக இன்றி பரந்துபட்ட மக்கள் திரள் அனைவரையும் வென்றெடுப்பதாக இருக்கும். கருக்குழுவும் அணிகளும் மட்டுமிருந்தால் போதாது; புரட்சிகர அரசியல் சித்தாந்தக் கருத்துக்கள் பௌதீக ரீதியான சக்தியாக மாறவேண்டுமானால் பரந்துபட்ட மக்கள் திரட்டப்பட வேண்டும். கட்சியின் முழக்கங்களைப் பரந்துபட்ட மக்கள் தமது முழக்கங்களாக உணர்ந்து ஏற்கவும் வேண்டும். அப்பொழுதுதான் பரந்துபட்ட மக்களுக்கும் எதிரிக்கும் இடையிலான வெளிப்படையான மோதல் சாத்தியம். எதிரிக்கெதிரான தீர்க்கமான பிரதான தாக்குதல் தொடுப்பதற்குள்ள முன்னிபந்தனைகளில் இது அதிமுக்கியத்துவம் வாய்ந்தது.

இங்கே பிரச்சினை என்னவென்றால் கட்சியின் முழக்கத்தை முன்னணியினர் மட்டும் அல்ல, பரந்துபட்ட மக்கள் தம் சொந்த அனுபவத்தின் மூலம் தமதாக ஏற்பதாகும். எனவே பிரச்சார முழக்கமாக உள்ள காலகட்டத்திலும், கிளர்ச்சி முழக்கமாக உள்ள காலகட்டத்திலுமான அவற்றுக்குப் பொருத்தமான முறைகள் என்னவென்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். பிரச்சாரகருக்கும் கிளர்ச்சியாளருக்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றி லெனின் பின்வருமாறு வரையறுப்பதிலிருந்து இதை அறிய முடியும்.

"வேலையில்லாமையை (உதாரணத்துக்காகச் சொல்லுகிறோம்) எடுத்துப் பேசுகிற பிரச்சாரகர் நெருக்கடிகளின் முதலாளித்துவத் தன்மை, தற்கால சமுதாயத்தில் அவற்றின் தவிர்க்க இயலாத் தன்மைக்குரிய காரணம், இச்சமுதாயத்தை சோசலிஸ்டு சமுதாயமாக உருமாற்றித் தீரவேண்டிய அவசியம் முதலியவற்றை விளக்கித் தீரவேண்டும் என்றுதான் நாம் (பிளெக்கானவ்வுடனும், சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மற்ற எல்லாத் தலைவர்களுடனும் சேர்ந்து) இதுவரை நினைத்து வந்தோம். சுருங்கச் சொன்னால், பிரச்சாரகர் 'பல கருத்துக்களை'' வைக்கவேண்டும். ஒருசிலர் மட்டுமே (ஒப்புநோக்கில் சொல்கிறோம் இணைப்புள்ள முழுமையாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு பலவாக இருக்கும் கருத்துக்களை வைக்க வேண்டும். ஆனால், கிளர்ச்சியாளர் இதே விஷயத்தை எடுத்துச் சொல்கிறபொழுது, கூட்டத்தினருக்கு மிக விளக்கமாக மிகப் பரவலாகத் தெரிந்துள்ள ஓர் உண்மையை—உதாரணமாக,

வேலையில்லாத தொழிலாளியின் குடும்பம் பட்டினியால் இறந்து போனது, வறுமையாக்கப்படுவது பெருகிவருவது, முதலியவை— எடுத்துப் பயன்படுத்தி 'மக்களிடம்' ஒரேயொரு கருத்தை அதாவது, செல்வம் பெருகி வருவதற்கும் வறுமை பெருகிவருவதற்கும் உள்ள முரண்பாட்டின் பொருளற்ற தன்மையை— விளக்க முயற்சி செய்வான், இந்தப் பழிகேடான அநீதியை எதிர்த்து மக்களிடையே அதிருப்தியையும் ஆத்திரத்தையும் எழுப்பிவிட முயல்வான்—இந்த முரண்பாடு பற்றிய மேலும் முழுமையான விளக்கத்தைக் பிரச்சாரகருக்கு விட்டுவிட்டு. ஆகவே, பிரச்சாரகர் வேலைக்கு முதன்மையாகப் பயன்படுத்தப் படுவது பேனா. கிளர்ச்சியாளர் முதன்மையாகப் பயன்படுத்துவது நா. பிரச்சாரகருக்கு இருக்கவேண்டிய பண்புகள் கிளர்ச்சியாளருக்கு வேண்டிய பண்புகளினின்று மாறுபட்டவை.'' (என்ன செய்ய வேண்டும்?''—லெனின் பக். 102-103).

லெனினது இந்த வரையறுப்புகளைத் தொகுத்து அதன் சாரம்சத்தைப் பிரயோகித்துக் கூறுவதானால், யுத்ததந்திர ரீதியிலான முழக்கமொன்று பிரச்சார முழக்கமாக இருக்கும்போது ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றைத் தூக்கியெறிய வேண்டியதன் அரசியல், பொருளாதார, சமூகத் தேவை, அதற்கான திட்டம், யுத்ததந்திரம், புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தம் பற்றிய முழுமையான சித்திரத்தை—அதாவது புரட்சி பற்றிய ஒப்புநோக்கில் முன்னணியினர் மட்டுமே புரிந்து கொள்ளும் இணைப்பான முழுமையான கருத்தை முன்வைப்பதாகும். பிரதானமாக அறிவுபூர்வமாக இவற்றைப் புரிந்துகொள்ளும் பரந்து விரிந்த சமுதாய நோக்குடைய பேராளிகளை— பாட்டாளி வர்க்க முன்னணியை—வென்றெடுக்க மட்டுமே இம்முறை பயன்படும். பிரச்சார முழக்கமே பல்வேறு வடிவங்களில் இருக்கலாம். பிரச்சாரப் பிரசுரங்கள், பத்திரிகைகள், குழு விவாதங்கள், தனிநபர் பிரச்சாரம், கருத்தரங்குகள், தெருமுனைக் கூட்டங்கள் இன்ன பிற.

யுத்ததந்திர ரீதியிலான முழக்கமொன்று அடுத்த கட்டமான கிளர்ச்சி முழக்கமாக இருக்கும்போது ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவ அமைப்பும் ஆட்சியும் நீடிப்பதன் பாதிப்புகளும், மக்களது துன்பங்களும் துயரங்களும் சமுதாயத்தின் நெருக்கடிகளும் அதன் வீச்சுகளும் இனியும் ஏன் சகித்துக் கொள்ள முடியாது என்பதைப் பல்வேறு வெளிப்பாடுகள் மக்கள் தொடர்புடைய அனேக அனுபவங்கள் பிரச்சினைகள் மீதான விளக்கங்கள், கிளர்ச்சிகள், போராட்டங்கள் மூலமாக பரந்துபட்ட மக்கள் ஆவேசம் கொண்டு கிளர்ந்தெழும் வண்ணம் உணர்வு பூர்வமாகத் தட்டியெழுப்புவதாகும். தற்போதைய ஆட்சியும் அரசும் நீடிக்க முடியாது, நீடிக்கக்கூடாது, தவிர்க்க முடியாமற் தூக்கியெறியப்பட வேண்டும் என்ற 'ஒரே கருத்தை' பல்வேறு அனுபவங்களிலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் போராட்டங்களிலிருந்தும் பரந்துபட்ட மக்கள் உணரும்படி செய்வது இதன் நோக்கம். கிளர்ச்சி முழக்கத்தையும் பல்வேறு

வடிவங்களில் மக்கள் முன் முன்னெடுத்துச் செல்ல முடியும். துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், நேரடி தெருமுனைக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் கலாச்சார வடிவங்கள், பகுதி ரீதியிலான அரசியல் வேலை நிறுத்தங்கள், கையுங்களவுமாகப் பிடித்து அம்பலப்படுத்தல்கள் இன்னபிற.

பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சி முழக்கங்களுக்கான கட்டங்களில் பாட்டாளி வர்க்க முன்னணிப் படையின் கருக்குழுவும் அணிகளும் வென்றெடுக்கப்பட்டு அரசியல் படை கட்டப்பட்டு விட்டபின், கட்சியின் முழக்கம் பரந்துபட்ட மக்களிடையே ஆதரவைப் பெற்றுத் தம் சொந்த அனுபவங்களின் மூலமாக அதை அவர்கள் தங்களுடைய முழக்கமாக ஏற்றுக்கொண்டபின் முன்னணிப் பகுதியினர் மட்டுமின்றி நடுநிலையாளர்களும் வென்றெடுக்கப்பட்டு பின்தங்கிய பகுதியினர் நடுநிலைப்படுத்தப் பட்டபின், சமரச மற்றும் ஊசலாடும் சக்திகள் தனிமைப்பட்டு முடமாக்கப்பட்டபின், பரந்துபட்ட மக்களுக்கும் எதிரிக்குமிடையிலான நேரடி மோதல் வெடிப்பதற்கான சூழ்நிலைகள் தோன்றியபின் கிளர்ச்சி முழக்கம் செயல் முழக்கமாகிறது. செயல் முழக்கமென்பது நேரடித்தாக்குதலில், போராட்டங்களில் இறங்குவதற்கான எல்லாத் தயாரிப்புகளையும் செய்வதும் பரந்துபட்ட மக்கள் இறுதித் தாக்குதலுக்கான உச்சநிலையை அடைவதும் ஆகிய கட்டமாகும். ஒரு குறுகிய காலத்திலேயே கட்சியின் தலைமையில், வழிகாட்டுதலில் நேரடி நடவடிக்கைகளில் இறங்குவதற்கான கட்டளை பிறப்பிக்கப்படுமென்ற முன்னெச்சரிக்கையுடன் முன்தயாரிப்புகளைச் செய்துமுடிப்பது; இறுதித் தாக்குதலில் யார்யார் எந்தெந்த அமைப்புகள் எந்தெந்த கால மற்றும் இடங்களில் தாக்குதல் தொடுப்பது, தாக்குதலின் போக்கு, விளைவுகள் மற்றும் பிற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் இறங்குவதாகும்.

பிரச்சாரம், கிளர்ச்சி மற்றும் செயல் முழக்கங்களுக்கான கட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதோடு தாக்குதலுக்கான தருணம் முதிர்ச்சியடைந்திருப்பின் — காலம் கனிந்திருப்பின் (எதிரி முற்றாகத் தனிமைப்பட்டிருப்பதும், அவன் கூடாரத்தில் முரண்பாடுகள் வெடித்திருப்பதும், பரந்துபட்ட மக்கள் ஐக்கியப்பட்டிருப்பதும், பிளவற்ற தலைமையும் ஆகிய இரு நிபந்தனைகளோடு எதிரி கண்ணுக்குப் புலப்படும்படியான தவறிழைப்பது அல்லது அதற்கான தூண்டுதலுக்குப் அவன் பலியாகி இருப்பது)-குறிப்பிட்ட நேரத்தில், நாளில், இடத்தில் தாக்குதல் தொடுக்கும்படி — யுத்ததந்திர ரீதியிலான முழக்கமாக இருப்பின் குறிப்பிட்ட நிறுவனங்களையும், சில இடங்களையும் கைப்பற்றும்படியும் எதிரியின் நிலைகளைத் தாக்கி அழிக்கும்படியும் கட்டளை இடப்படும். கட்சியின் உறுப்பினர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடியதான இந்தக் கட்டளை பரந்துபட்ட மக்களின் தேவைகளுக்கும், உணர்வுகளுக்கும் பொருத்தமாக இருப்பின், காலம் சரியாக முதிர்ச்சியுற்று இருப்பின் வழமையாக பரந்துபட்ட மக்கள் இயல்பாகவே கட்டளையை ஏற்று செயல்படுத்துவார்கள். கட்டளையை நிறைவேற்றும்

வடிவங்கள், வழிமுறைகள் பொது அரசியல் வேலைநிறுத்தம் தெருச்சண்டை கெரோ, தடுப்புச்சுவர் போராட்டங்கள் பொதுஆர்ப்பாட்டம், ஆயுதமேந்திய எழுச்சி, பிற ஆயுதப் போராட்ட வடிவங்கள் என்றும், சட்டபூர்வமானது - சட்ட விரோதமானது, ரகசியமானது- வெளிப்படையானது என்றும் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப மாறுபடும்.

யுத்ததந்திர ரீதியான அடிப்படை முழக்கம் மட்டுமல்ல, போர்த்தந்திர முழக்கங்கள் மட்டுமல்ல சில பகுதிக் கோரிக்கைகளுக்கான முழக்கங்களும், அரசியல் ரீதியிலான முழக்கங்கள் மட்டுமல்ல ராணுவ ரீதியிலான முழக்கங்களும் கூட இவ்வாறே இந்த முறைகளினூடே, இந்தக் கட்டங்களினூடேதான் நிறைவு செய்யமுடியும். புரட்சி வெற்றி பெறுவதற்கு முன்பு மட்டுமல்ல புரட்சி வெற்றி பெற்ற பின்னரும் கூட இது பொருந்தும். ஒவ்வொரு கட்டத்திற்குமான காலஅளவு பருண்மையான நிலைமைகளைப் பொறுத்து மாறுபடும். உதாரணமாக கருக்குழு, அணிகள் கட்டியமைக்கப்படாத நிலையிலும், பரந்துபட்ட மக்களது அரசியல் மற்றும் ஸ்தாபன உணர்வுகள், போராட்ட அனுபவங்கள் தாழ்ந்துள்ள நிலையிலும் ஸ்தாபன ரீதியில் அணிதிரளாத நிலையிலும், எதிரியின் தற்காலிக ஸ்திர நிலையிலும் இயல்பாகவே இந்தக் கட்டங்கள் நீண்டதாக இருக்கும்; இவை பூர்த்தியாகும்போது குறுகியதாக இருக்கும்.

முழக்கங்களை கட்டளைகளோடும், கிளர்ச்சி முழக்கத்தை செயல் முழக்கத்தோடும் போட்டுக் குழப்புவது முதிர்ச்சி அடைவதற்கு முந்திய அல்லது காலந்தாழ்த்திய செயலைப் போலவே அபாயகரமானது. சில சமயங்களில் பெரும் தீய பாதிப்புகளை ஏற்படுத்தும். சில சமயங்களிம் நிலைமைகள் முதிர்ச்சியுற்ற பின்னரும், நிபந்தனைகள் பூர்த்தியான பின்னரும் மேற்கோள்ளப்பட்ட முழக்கம் அல்லது கட்டளை விலக்கிக்கொள்ளப்படுவதும் அல்லது மாற்றுவதும் அவசியமாக இருக்கலாம். எதிரி விரித்திருக்கும் கண்ணியிலிருந்து நமது அணிகளைக் காக்கும் பொருட்டும் அல்லது மேலும் சாதகமான சமயத்தில் கட்டளையை நிறைவேற்றத் தள்ளி வைக்கும் தேவையின் பொருட்டும் இது அவசியமாகலாம். கிளர்ச்சி முழக்கத்தைச் செயல் முழக்கமாகவும் அல்லது செயல் முழக்கத்தைக் குறிப்பான பருண்மையான கட்டளைகளாகவும் சந்தர்ப்பம் பார்த்து மாற்றுவது கட்சியின் கடமையாகும். நிலைமைகளின் நிர்பந்தத்தைப் பொருத்து அவசியமானவாறு நெகிழ்ந்து கொடுத்தும் தீர்க்கமாகவும், குறிப்பிட்ட எந்த முழக்கத்தையும், கட்சி எவ்வளவு செல்வாக்குடையதாக இருப்பினும் காலம் முதிர்ச்சியுற்றிருப்பினும் சரியான சமயத்தில் விலக்கிக் கொள்வதும் கூட கட்சியின் கடமையாகும்.

ஆனால் அரசியல் நெருக்கடி கூர்மையடையும் போது சில பிரிவினா், குறிப்பாக, முதலாளித்துவ வர்க்கத்தினர் ஊசலாட்டத்துக்குள்ளாவர். அது குறித்து எச்சரிக்கையாகவும், கவனமாகவும் இருந்து கணக்கில் எடுத்துக்கொண்டு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இதற்குப் பலியானால் மிக

தையே மனதிற்கொள்கின்றன- —எடுத்துச்செல்ல வேண்டும்; இவ்வாறு உயர்ந்த கட்டத்திற்கு—இரகசியமான, சட்ட விரோத, வன்முறைக் கட்டத்துக்கு-எடுத்துச் செல்லாததில் தான் பிரதானமாக திரிபுவாதிகளின் சமரசம் தங்கியிருக்கிறது என்று கூறுகின்றன. ஆனால் இவர்கள் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் வெவ்வேறு படிநிலைகள் பற்றிய மார்க்சிய-லெனினிய அணுகுமுறையைப் புறக்கணிப்பதோடு அவற்றை ஆளும் விதிகளையும் இந்திய நிலைமைக்கேற்றவாறு வகுக்கத் தவறினர். வலது சந்தர்ப்பவாதிகளோ ருஷியாவைப் போன்று அவை அப்படியே பிரயோகிக்கப்பட வேண்டுமென்கின்றனர். (2) கிராமப்புறப் போராட்டங்களையும் வர்க்கங்களையும், நகர்ப்புறப் போராட்டங்களையும் வர்க்கங்களையும், கிராமப்பகுதிகளிலேயே முன்னுரிமை தரும் பகுதிகளின் போராட்டங்களையும் வர்க்கங்களையும் பிறபகுதிகளின் போராட்டங்களையும் வர்க்கங்களையும் பரஸ்பர உறவில் இணைப்பதற்கான முறைகளை அரசியல், இராணுவ மார்க்கங்களின் அடிப்படையில் வகுத்தளிக்கிறது. இதுவரை எல்லா மார்க்சிய-லெனினியக் குழுக்களும் வலது, 'இடது' திரிபுவாதிகளைப் போலவே நகர்புறத்திலிருந்து ஊழியர்களை அனுப்புவது, நிதி உதவி, கிராமப்புறபோராட்டங்களுக்கு உதவுவது-என்ன உதவியென்றால் முற்சொன்னவை—இதற்கான பாலமாக கட்சி இருப்பது என்ற அடிப்படையில் மட்டுமே அணுகுகின்றன. மாறாக, பொதுவான, யுத்ததந்திர போர்த்தந்திர முழக்கங்களும், அரசியல் நடத்தை வழியும்—குறிப்பாக, குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப அவை கொண்டிருக்கும் பொதுவான அரசியல் கடமைகள்-மட்டுமே முக்கியமாக அவற்றை இணைக்கும் பாலமாக அமைக்கின்றது. பிற ஸ்தாபன ரீதியான இணைப்பும், ஆதரவும் இதன் அடிப்படையில் எழுப்பப்படுவனவேயாகும்,

## அரசியல் போராட்டங்களை ஆயுதப் போராட்டங்களாக வளர்த்தெடுக்கும் முறை; செஞ்சேனையும் செந்தளப்பிரதேசமும் நிறுவும் போக்கு:

ஆயுதப் போராட்டம் என்பது எதிரிக்கு எதிராக தீர்மானகரமான தாக்குதலைக் குறிக்கும் அதியுயர்ந்த வடிவமாகும். அதற்கான முன்தேவையாக இருப்பது முன்னணியினர் மட்டுமின்றி பரந்துபட்ட மக்களும் தமது சொந்த அனுபவத்தின் மூலம் தற்போதைய ஆட்சியும் அரசும் நீடிக்க முடியாது, நீடிக்கக் கூடாது, அவை தவிர்க்க முடியாமல் தூக்கியெறியப்பட வேண்டுமென்பதை உணர வைப்பதாகும். பாட்டாளி வர்க்கத்தின் முன்னணியாளர் மட்டுமின்றி பாட்டாளி வர்க்கம் முழுவதுமே, பரந்துபட்ட மக்கள் அனைவருமே — ஆயுதப் போராட்ட மையங்களிலும் அவற்றைச் சுற்றிலுமுள்ள பரந்து விரிந்த கிராமப்புற பகுதிகளிலும் — நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை உணர்ந்து ஆதரிப்பதற்கு முன் தீர்க்கமான தாக்குதலில் இறங்குவது

பெரும் பிழையும் குற்றமுமாகும். பரந்துபட்ட மக்கள் குறிப்பாக விவசாயிகள் இந்த நிலைக்கு உயர்வதற்கு அவர்கள் தமது சொந்த அரசியலனுபவத்தைப் பெற வேண்டுமென்பது ஒரு அடிப்படை விதியென்று உலகின் மாபெரும் புரட்சிகளனைத்தும் நிரூபித்துள்ளன.

புரட்சி என்பது அடக்கி ஒடுக்கும் சுரண்டும் பிரதான எதிரிக்கு எதிராக அடக்கி ஒடுக்கப்படுபவர்களும் சுரண்டப்படுபவர்களும் நடத்தும் எழுச்சியாகும். எனவே, மக்கள் புரட்சி என்ற கண்ணோட்டத்தைப் பெறுவதும், புரட்சி என்பது அரசியல் படைகளும் ஆயுதப் படைகளும் கொண்டு அரசியல் போராட்டங்களும் ஆயுதப் போராட்டங்களும் இணைந்து நடத்துவது என்பதை உணர்வதும் மட்டுமே புரட்சிகர சூழ்நிலைமைகள் முற்றும் போது தீர்க்கமான தாக்குதலைத் தொடுக்கவும் அதை முழுப் பரிமாணத்தோடு புரிந்து கொள்ளவும் வழிவகுக்கும். இருவகை சக்திகளையும் இருவகைப் போராட்டங்களில் ஒன்றுக்கொன்று துணையாகவும், வெவ்வேறு கட்டங்களில் பரஸ்பரம் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு போராட்ட அரங்கில் நிறுத்தி போரிடுவதும்தான் புரட்சியின் சரியான தலைமை முறையாகும். அடிப்படைப் போராட்டங்களான அரசியல் போராட்டங்கள் எதிரிக்கெதிரான தாக்குதல் முறையாகவும் ஆயுதப் போராட்டத்துக்கான தயாரிப்பாகவும், யுத்தம் துவங்கிய பின் அதை வளர்ப்பதற்கான அடித்தளமாகவும் இருக்கின்றன. அரசியல் போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தும் அரசியல் படைகள் பரந்துபட்ட மக்களை அரசியல் ரீதியில் அணிதிரட்டி, போதமளித்து பயிற்றுவிக்கவும், புரட்சிகர சக்திகளை ஒருமுனைப்படுத்தி எதிரிக்கு எதிரான பிரதான தாக்குதலை பிரதான திசைவழியே தொடுக்கவும் அவசியமாகின்றன; ஆயுதமேந்திய படைகளை உருவாக்கிக் கட்டி வளர்க்கவும் உறுதுணையாக இருக்கின்றன.

ஆயுதப் போராட்டங்களும் ஆயுதமேந்திய படைகளும் மற்றொரு அடிப்படையான ஸ்தாபன மற்றும் போராட்ட வடிவங்களாகும். எதிரியின் ஆயுதப்படைகளை அழிப்பதில் நேரடியான, தீர்மானகரமான பங்கேற்று விரிவான மக்கள் திரள் அரசியல் போராட்டங்களை மேலும் உயர்ந்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லவும், மக்களது எழுச்சிகளில் இணைந்து மக்களைக் காக்கவும் இவை தேவையாகின்றன. புரட்சி என்பது வெறும் ஆயுதப் போராட்டம் மட்டும் எனக்கருதி அதன் விளைவாக எதிர்ப்புரட்சி, புரட்சி ஆகிய இரு தரப்புகளின் இராணுவ சக்திகளின் பலாபலன்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டால் புரட்சியின் சக்திகளைக் குறைத்து மதிப்பிடுவோம்; மக்களை கிளர்ச்சிக்காக தட்டியெழுப்பத் துணியமாட்டோம்; மக்கள் கிளர்ந்தெழுந்த பின் தாக்குதலைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லத் துணியமாட்டோம்; ஆயுதப்போராட்டம் துவங்கிய பின் செயலற்ற தற்காப்பு நிலைக்குத் தாழ்ந்துவிடுவோம்.

புரட்சியும் புரட்சிகர யுத்தமும் தொடுக்கப்படும் வரை இவ்வாறான அரசியல் போராட்டங்களே பிரதான வடிவமாக இருக்கும். ஒருபுறம் அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் மற்றொரு புறம் பாட்டாளி வர்க்கத் தலைமையில் பரந்துபட்ட மக்கள் குறிப்பாக விவசாயப் பெருமக்களுக்கும் இடையிலான மோதல் அப்பட்டமானதாகவும் நேரடியாகவும் மாறும் வரை, புரட்சியும் புரட்சிகர யுத்தமும் தொடுப்பதற்காக ஸ்தாபன ரீதியில் அவர்கள் திரட்டப்படும்வரை, இவற்றுடன் தாக்குதலுக்கான காலம் கனியும்வரை பரந்துபட்ட மக்களை ஸ்தாபனப்படுத்துவதும் அரசியல் போராட்டங்களில் ஈடுபடுத்திப் பயிற்றுவிப்பதுமே பிரதானப் பணியாக இருக்கும். திட்டவகைப்பட்ட போர்த்தந்திரங்களினாலான அரசியல் நடத்தை வழியாதலால் இது நிச்சயம் ஆயுதப் போராட்டத்துக்கான தயாரிப்பாகவும், பொருளாதாரவாதத்தை நிராகரிப்பதாகவும் இருக்கிறது.

ஆனால் ஆயுதப் போராட்டத்திற்கு முன்தேவை என்ற பேச்செடுத்தால் ஒருபுறம் 'இடது' சந்தர்ப்பவாதிகள் முகஞ்சுழிக்கின்றனர்; இவர்களுடைய நிலைப்பாட்டின்படி ஏற்கனவே ஆயுதப் போராட்டப் பிரதான வடிவமாக நடந்துகொண்டிருக்கின்றதென்று அங்கீகரிக்க வேண்டும்; மற்றொருபுறம், வலது சந்தர்ப்பவாதிகள் பொருளாதாரவாதத்தின் அடிப்படையிலான மக்கள் திரள் இயக்கங்கள் மூலமாகவே இந்த முன்தேவைகளை அடைய முடியுமென்கின்றனர். பிற மார்க்சிய-லெனினிய குழுக்கள் பொருளாதாரவாதத்துடன் நிகழ்ச்சிப் போக்கின் வகைப்பட்ட போர்த்தந்திரங்களால் இதைச் சாதிக்க முடியுமென்கின்றன. அல்லது பொதுவில் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் மீதான எல்லாப் போராட்டங்களையும் முன் வைக்கின்றன. பொருளாதாரவாதத்துடன் இணைந்த நிகழ்ச்சிப் போக்கின் வகைப்பட்ட போர்த்தந்திரங்கள் மூலமாக பரந்துபட்ட மக்களை அரசியல் படுத்துவதாகவும், இப்போரட்டங்களையே ஆயுதப் போராட்டங்களாக வளர்த்தெடுப்பதாகவும் கூறிக் கொள்ளும் இந்தப் போக்குதான் மார்க்சிய-லெனினிய இயக்கத்திற்குள் பிரதானமாகி வலது சந்தர்ப்பவாத அபாயத்தைத் தோற்றுவித்திருக்கிறது. புரட்சிகரமான சொல்லடுக்குகளால் தன்னை அலங்கரித்து மூடிமறைத்துக் கொண்டுள்ள இந்த வலது போக்கிற்கெதிரான உக்கிரமான சித்தாந்தப் போராட்டத்தினூடாகத்தான் சரியான மக்கள் திரள் வழியை வகுத்து வரையறுத்து நடைமுறையில் நிலைநாட்ட முடியும். பல்வேறு பிரிவு மக்களுக்கும் வர்க்கங்களுக்கும் தனித்தனியான வெகுஜன அமைப்புகளை நிறுவி அவர்களது பகுதி மற்றும் அன்றாட கோரிக்கைகளுக்கான போராட்டங்களை நடத்துவதன் மூலம் விவசாயத் திட்டத்தையும் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான 'ஆயுதப் போரட்ட அரசியலை' பிரச்சாரம் செய்வதின் மூலமும், பரந்துபட்ட மக்களுக்கு அரசியல் பிரக்ஞை ஏற்படுத்தும் பகுதி மற்றும் அன்றாடக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களையும் அரசாங்கத்திற்கெதிரான துண்டு துண்

டான சில அரசியல் பிரச்சினைகள் மீதான போராட்டங்களையும் நடத்தி அவற்றின் வளர்ச்சிப் போக்கையே ஆயுதப் போராட்டமாக மாற்றுவதும் என்கிற முறையிலேயே இந்த வலது சந்தர்ப்பவாதம் எழுகிறது. இவ்வாறு வரையறுப்பதால் அன்றாட மற்றும் பகுதிக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களையும், அரசாங்கத்திற்கெதிரான அரசியல் பிரச்சினைகள் மீதான போராட்டங்களையும் நடத்துவதையோ, விவசாயத் திட்டத்தையும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான 'ஆயுதப் போராட்ட அரசியலை'யும் பிரச்சாரம் செய்வதையோ கூடாது என்று நாம் கூறவில்லை. மாறாக, இவை அவசியமானவையே. ஆனால் இந்த முறையிலேயே, இவற்றின் மூலமாகவே பரந்துபட்ட மக்களுக்கு அரசியல் பிரக்ஞை ஏற்படுத்தவோ, இப் போராட்டங்களையே ஆயுதப் போராட்டங்களாக வளர்த்தெடுக்கவோ முடியாது என்று மட்டுமே சொல்கிறோம். குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப வகுக்கப்படும் அரசியல் நடத்தை வழியின் மற்றும் திட்டவகைப்பட்ட போர்த்தந்திரத்தின் ஓர் அங்கமாகவும் அதற்குத் துணைபுரியும் வகையிலேயும் இவை பயன்படுத்தப்பட வேண்டும். இல்லையானால் பொருளாதாரவாதமும் சீர்திருத்தவாத வகைப்பட்ட போர்த்தந்திரமுமாகவே அமையும். உதாரணமாக, குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகள் பாசிச எதிர்ப்பு அல்லது யுத்த எதிர்ப்பு அரசியல் நடத்தைவழியைக் கொண்ட போர்த்தந்திரத்தை வகுத்து நடைமுறைப்படுத்தும்படி கோரினால் அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தின் எல்லா பகுதி மற்றும் அன்றாட கோரிக்கைகளுடனும் அவற்றுக்கான போராட்டங்களுடனும் அரசு மற்றும் அரசாங்கத்திற்கெதிரான எல்லா அரசியல் பிரச்சினைகளுடனும் அவற்றுக்கான போராட்டங்களுடனும் பாசிச எதிர்ப்பு அல்லது யுத்த எதிர்ப்பு அரசியல் இணைக்கப்படும். பாசிச எதிர்ப்பு அல்லது யுத்த எதிர்ப்பு அரசியல் நடத்தைவழியைக்கொண்ட திட்டவகைப்பட்ட அரசியல் போர்த்தந்திரமே எல்லாப் பிரச்சினைகள் மீதான வரம்புகளையும் ஸ்தாபன மற்றும் போராட்ட வடிவங்களையும் தீர்மானிக்கும்.

எனவே, மக்கள்திரள் அமைப்புகள் மற்றும் இயக்கங்களின் அவசியத்தை அங்கீகரித்து, ஊக்கமாக அவற்றைக் கட்டி வளர்ப்பதற்காக நிற்கும் அதே வேளையில் அவை பற்றிய எல்லா சந்தர்ப்பவாதப் போக்குகளையும் எதிர்க்கிறோம். எல்லா புரட்சிகர வர்க்கங்களையும் மக்கள் பிரிவுகளையும் அணிதிரட்டவும் ஸ்தாபனப்படுத்தவும், போராட்டங்களில் பயிற்றுவிக்கவும் அரசியல் போதமளிக்கவும், பாட்டாளி வர்க்கக் கட்சியை மக்களுடன் தொடர்புபடுத்தும் இணைப்புச் சங்கிலியாக—பாலமாக—பல்வேறு மக்கள்திரள் அமைப்புகளை அமைக்க வேண்டும். இந்த மக்கள்திரள் அமைப்புகளும் இயக்கங்களும் (1) தமது வர்க்கம் அல்லது மக்கள் பிரிவின் கோணத்திலிருந்து புதிய ஜனநாயகப் புரட்சிக்கான பிரச்சாரத்தை நடத்தி மக்களுக்குக் கற்பிக்கும்; அவர்களை அணிதிரட்டும்; அவர்களுக்கு

வர்க்கப் போராட்ட உணர்வூட்டும்; ஸ்தாபன மற்றும் போராட்ட முறைகளைப் போதிக்கும். கட்சியினால் வழி நடத்தப்படும் இந்த மக்கள் திரள் அமைப்புகள் திட்டமிட்ட முறையில் தனித்தனியாகவோ, பிற மக்கள்திரள் அமைப்புகளுடன் தேவையான போது இணைந்தோ செயல்பட போராட்ட முன்னணிகளை நிறுவும். இயக்கங்கள் முடிவுற்றதும் போராட்ட முன்னணிகள் கலைக்கப்படலாம். ஆனால் மக்கள்திரள் அமைப்புகள் தொடர்ந்து விரிவடையும். பாட்டாளி வர்க்க முன்னணிப் படைக்கு புரட்சியாளர்களை வென்றெடுக்கவும் பயிற்றுவிக்கவுமான அமைப்புகளாகவும் இருக்கும். மக்கள்திரள் போராட்டங்களில் பங்கு கொண்டு உறுதியும் அனுபவமும் பெற்ற அணிகள் கிராமப்புறங்களுக்குச் செல்வதும் விவசாயிகளுடன் ஐக்கியப்பட்டு இறுதிவரை போராடுவதும்தான் வெற்றியை உறுதி செய்யும். (2) மக்கள்திரள் அமைப்புகளும் இயக்கங்களும் எதிரியை அரசியல், சமூகம், கலாச்சாரம் மற்றும் இராணுவ ரீதியில் செயலாற்ற முடியாமல் முடக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன; பலவீனப்படுத்துகின்றன. புரட்சிகர சக்திகளின் வளர்ச்சிக்கு இவை சாதகமான சூழ்நிலைமைகளை ஏற்படுத்துகின்றன. எதிரிகள் தமது சக்திகளை ஒருமுனைப்படுத்தி நமது போராட்ட மையத்தின் மீது தாக்குதல் தொடுக்க இயலாதபடிக்கு அவர்களது சக்திகளைச் சிதறடிக்கின்றன.

ஆனால் பல்வேறு புரட்சிகர வர்க்கங்களின், சமூகத் தட்டுகளின் மக்கள்திரள் அமைப்புகள் புரட்சிகரமான பங்கு வகிக்க வேண்டுமானால், அவற்றிலுள்ள பரந்துபட்ட மக்கள் புரட்சிகர அரசியல் உணர்வு பெற்று புரட்சியில் பங்காற்ற வேண்டுமானால் அவற்றின் செயல்படும் வரம்புகள் வழமையாக நமது நாட்டிலுள்ள மக்கள்திரள் அமைப்புகள் போன்று செயல்படக் கூடாது. அதாவது தொழில் ரீதியான போராட்டங்களை முதற்கட்டமாக பிரித்து பின்னர் அரசியல் போராட்டங்கள் என்பதோ, அல்லது தொழில் ரீதியான போராட்டங்கள் மூலமாகவே அரசியல் போராட்டங்களின் அவசியத்தை உணரும் பொழுது அரசியல் ஆயுதப் போராட்டங்கள் என்பதோ முற்றிலும் தவறானது. இது பரந்துபட்ட மக்களை நிலப்பிரபுத்துவ அல்லது முதலாளித்துவ சித்தாந்தத்தில் தள்ளக்கூடியது, மார்க்சிய-லெனினிய விரோதமானது. ஆகவே, தொழில் ரீதியாக மட்டுமின்றி சகல வாழ்க்கைத் துறைகளிலும், தன்னை மட்டுமின்றி பிற வர்க்கங்களையும் அடக்கி ஒடுக்கும் சுரண்டும் ஆளும் வர்க்கங்களையும் அரசு எந்திரத்தையும் தூக்கியெறிய வேண்டியதின் அவசியத்தை—தனது தொழில் ரீதியான அரசியலை மட்டுமல்லாது சமுதாய ரீதியான அரசியலை — அப்பொழுதுதான் பரந்துபட்ட மக்கள் உணர முடியும். எனவே பின்வரும் மூன்று அடிப்படைகளில் செயல்படுபவையாக இருக்கவேண்டும்: (1) அடக்கியொடுக்கப்படும் சுரண்டப்படும் ஒவ்வொரு வர்க்கமும் மக்கள் பிரிவும் தம்மைப் பாதிக்கும் தொழில் ரீதியான வர்க்க உறவுகளினால் மட்டுமல்லாது எல்லா அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சாரப் பிரச்சினைகளினாலும் அடக்கி ஒடுக்கப்படுவதற்கு

எதிராகவும் அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராக போராட வேண்டும். அதற்கான பிரச்சாரம், அம்பலப்படுத்துதல், கிளர்ச்சி மற்றும் போராட்டங்களை நடத்த வேண்டும். 2) ஒவ்வொரு வர்க்கமும் தம்மைப் பாதிக்கும் இப்பிரச்சினைகளில் மட்டுமல்லது பிற வர்க்கங்களைப் பாதிக்கும் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சாரப் பிரச்சினைகளிலும் அடக்கி ஒடுக்கப்படுவதற்கும் சுரண்டப்படுவதற்கும் எதிராகவும் அரசுக் ஆளும் வர்க்கங்களுக்கு எதிராகப்போராட வேண்டும். அதற்கான பிரச்சாரம், அம்பலப்படுத்துதல், கிளர்ச்சி மற்றும் போராட்டகளை நடத்த வேண்டும். (3) இவ்விரு பணிகளோடு, முதல் முக்கியத்துவமளித்துப் பாட்டாளிவர்க்கக் கட்சியின் திட்டவகைப்பட்ட போர்த்தந்திரங்களின் அரசியலையும், அரசியல் முழக்கத்தையும் முன்னெடுத்துச் சென்று அரசியல் பிரச்சாரம், கிளர்ச்சி மற்றும் அரசியல் போராட்டங்கள் மூலம் பரந்துபட்ட மக்கள் அரசியல்படுத்தப்பட்டு பயிற்றுவிக்கப்பட வேண்டும்; இவற்றின் மூலம் யுத்ததந்திர வெற்றிக்குத் தயாரிக்கவேண்டும்.

முன்னிரு பணிகளும் தற்போதைய ஆளும் வர்க்கங்களும் அரசும் ஏன் நீடிக்க முடியாது, நீடிக்கக்கூடாது, தூக்கியெறியப்பட வேண்டுமென்பதை எதிர் மறையிலும், மூன்றாவது பணி நேர் மறையிலும் பரந்துபட்ட மக்களுக்கு உணர்த்துவதோடு அவர்களது சொந்த அனுபவத்தில் பயிற்றுவிக்கவும் செய்கின்றன. இம் மூன்று பணிகளையும் வெவ்வேறு பிரிவு மக்களது மற்றும் வர்க்கங்களது மக்கள் திரள் அமைப்புகள் தத்தம் கோணத்திலிருந்து அணுகிப் பிரயோகிக்கும் இந்த அணுகுமுறை அனைத்துப் பிரிவு மக்களையும் வர்க்கங்களையும் வாழ்வின் எல்லாத்துறைகளிலும் எல்லாப் புரட்சிகர சக்திகளையும் அடக்கி ஒடுக்கி சுரண்டும் பொது எதிரிகளையும் அவர்களது அரசையும் இனங் கண்டு கொள்வதோடு, அவற்றிற்கெதிராக தமது சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி இறுதித் தாக்குதலுக்கு ஒரு முனைப்படுத்துவதாக இருக்கின்றது.

எனவே, பாட்டாளி வர்க்கக்கட்சி இந்த மூன்று பணிகள் அடிப்படையில் செயல்படக்கூடிய பல்வேறு பிரிவு மக்களது, வர்க்கங்களது மக்கள்திரள் அமைப்புகளையும் இயக்கங்களையும் கட்டி வளர்க்க வேண்டும். அத்துடன் யுத்ததந்திர ரீதியிலான சில அமைப்புகளையும்—கலை—இலக்கியம், மக்கள் உரிமை இன்னும் பிற மக்கள்திரள் அமைப்புகளும் போர்த்தந்திர ரீதியிலான சில அமைப்புகளும்—பாசிச எதிர்ப்பு மக்கள் இயக்கம் போன்றவை — அவற்றின் இயக்கங்களும் கட்டிவளர்க்கப்பட வேண்டும். பலவீனமானதாகவும் ஆரம்ப நிலையிலும் உள்ள பாட்டாளிவர்க்கக் கட்சி தேவையான எல்லா மக்கள்திரள் அமைப்புக்களையும் உடனடியாக கட்டி வளர்ப்பதும் தொடர்ந்து வழிநடத்துவதும் சாத்தியமற்றது. அத்துடன் ஏற்றத்தாழ்வான அரசியல், பொருளாதார, மற்றும் சமூக வளர்ச்சி காரணமாகவும் யுத்தந்திர ரீதியான கண்ணோட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் பகுதிகள்—பிரதானமாக கிராமப்புறங்கள் அதிலும்

தளப்பிரதேச நிபந்தனைகள் சாத்தியமான அளவு அடையக் கூடிய பகுதிகள் முக்கியத்துவத்துடன், இரண்டாம் பட்சமாக நகர்ப்புறங்கள்—மற்றும் வர்க்கங்களிடையே — பிரதானமாக கிராமப்புறங்களில் கூலி, ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகள்; இரண்டாம்பட்சமாக நகர்புறங்களில் தொழிலாளர்கள், அடுத்து மாணவர்கள், இளைஞர்கள், கலை இலக்கியம் மக்கள் உரிமைகள் மக்கள் திரள் அமைப்புகளை ஒவ்வொன்றாக சாத்தியமான அளவு நிறுவவேண்டும். இன்னும் ஒரு பிரச்சினை இராணுவ யுத்ததந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும்பகுதிகளையும் தெரிந்தெடுத்து முக்கியத்துவளிக்க வேண்டும். இந்த முன்னுரிமைகள் அடிப்படையில் இவ்வாறு கட்டி வளர்க்கப்படும் பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளும் மேற்கண்ட மூன்றுவகை அமைப்புகளை அந்தந்த அமைப்புகளது வரம்புக்குட்பட்டு மட்டுமே செயல்படுத்த முடியும். இவற்றோடு, சமுதாயச் சீரழிவுகளை உணர்வதோடு, நேர்மறையாக சமுதாய மாற்றம், புரட்சியின் கடமைகள் ஆகியவற்றைப் பரந்து பட்ட மக்கள் உணரவும், பயிற்றுவிக்கப்படவும், புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் நேரடித் தலைமையை நிறுவும் பொருட்டும் கட்சி நேரடியாக அறிவு பூர்வமாக திட்டமிட்ட முறையில் அரசியல் போர்த்தந்திரங்களை வகுத்து அவற்றின் அரசியல் முழக்கங்கள் மற்றும அரசியல் நடத்தைவழியின் அடிப்படையில் அரசியல் போராட்டங்களை நடத்தவேண்டும். குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான அகநிலை மற்றும் புறநிலை வளர்ச்சியின் அடிப் படையில் போராட்ட வடிவங்களையும் ஸ்தாபன வடிவங் களையும் கொண்டுள்ள இப்போராட்டங்கள் பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளுக்கும் புரட்சிக்கும் கட்சி நேரடித் தலைமை யேற்க இன்றியமையாதவையாகும். கட்சியின் அறைகூவலின் கீழ் அதன் அனைத்துமட்ட உறுப்பினர்களும்—நிலைமைக்கும் தேவைக்குமேற்றபடி—பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளின் ஆதரவோடும், நமது நிபந்தனைகளுக்குட்பட்ட பிற கட்சிகள் மற்றும் பிற மக்கள் திரள் அமைப்புகளின் கூட்டோடும் அரசியல் போராட்டங்கள் நடத்தப்படும். இவ்வாறு திட்டவகைப்பட்ட போர்த்தந்திரத்தின் அடிப்படையில் நடத்தப்படும் போராட் டங்கள் மட்டுமே அரசியல் போராட்டங்களாகும்.

கிராமப்புற விவசாயிகள், நகர்ப்புற தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பிற பிரிவினரது அரசியல் பொருளாதார, சமூக, கலாச்சார கோரிக்கைகளுக்கும் பிரச்சினை களுக்குமான போராட்டங்கள் துண்டு துண்டாக இல்லாது அரசியல் போர்த்தந்திரங்களோடும் யுத்ததந்திர முழக்கத் தோடும் இணைத்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இவ்வாறு புரட்சிகர வர்க்கங்கள் மற்றும் மக்கள் பிரிவினரது பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளும் இயக்கங்களும் பாட்டாளி வர்க்கக் கட்சியும் யுத்ததந்திர முழக்கத்தோடும் அரசியல் போர்த் தந்திரத்தின் நடத்தை வழியைப் பருண்மையான நிலைமை களோடும் இணைத்தும் யுத்ததந்திர ரீதியில் தீர்மானிக்கப்படும் பகுதிகள் மற்றும் வர்க்கங்களுக்கு முன்னுரிமை—அழுத்தம்

கொடுத்து பரந்துபட்ட மக்கள்திரளின் புரட்சிகர இயக்கங்களை நடத்துவது நாட்டின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சிக்கேற்ப வெவ்வேறு பகுதிகள் வர்க்கங்களிடையே பிரச்சார முழக்கம் கிளர்ச்சி முழக்கம் ஆகிய இருவேறு நிலைகளில் வளர்ச்சியடையும்

அதாவது, யுத்ததந்திர ரீதியான கண்ணோட்டத்துடன் வகுக்கப்பட்ட பொது திசைவழி- பொது வேலைத்திட்டத்துக்கான முன்னுரிமை தரும் பகுதிகள் மற்றும் வர்க்கங்களைத் தெரிவு செய்யவேண்டும். அரைக்காலனிய-அரைநிலப்பிரபுத்துவ நாட்டின் மக்கள் யுத்தப் பாதையில் புரட்சியையும் புரட்சிகர யுத்தத்தையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளதால் இயல்பாகவே கிராமப்புறங்களுக்கும் கூலி ஏழை மற்றும் நடுத்தர விவசாயி வர்க்கங்களுக்கும் முன்னுரிமை தரப்பட வேண்டும். இரண்டாம் பட்ச முக்கியத்துவமே நகர்ப்புறங்களுக்கும் தொழிலாளர்கள், அடுத்து மாணவர்கள், இளைஞர்களுக்கு அளிக்கப்படும். கிராமப்புறங்களிலேயே கூட இந்தியப் புரட்சியின் அதியுயர்ந்த வடிவமும், நாடு தழுவிய புரட்சிகரப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவதுமான செஞ்சேனை, கொரில்லாப் படைகள் மற்றும் செந்தளப் பிரதேசங்களை நிறுவி வளர்ப்பதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் அதிகபட்ச வாய்ப்புடைய பகுதிகளுக்கு அதி உயர்ந்த முக்கியத்துவமளிக்க வேண்டும். நிலப்பிரபுத்துவச் சுரண்டல், ஒடுக்குமுறை கொடூரமாகவும் தீவிரமாகவும் இருக்கின்ற, சமூக—பொருளாதார—அரசியல் முரண்பாடுகள் மிகக் கூர்மையடைந்து வர்க்கப் போராட்டத்தை ஆழப்படுத்தி முதிர்ச்சியடையச் செய்யுமளவு அதிகபட்சம் அரசியல், ஸ்தாபன விழிப்புணர்வு பெற்ற விவசாய மக்களும் கட்சியும் வளர்ந்துள்ள பகுதிகளில், எதிரியின் மீது தீர்க்கமான தாக்குதல் தொடுத்து ஆயுதப் போராட்டங்களைத் துவங்கி கொரில்லா மண்டலங்களை நிறுவி வளர்ப்பதற்கான வாய்ப்புள்ள பகுதிகளில், விவசாயிகளுடன் ஒன்றிணைந்து, கட்சி அமைப்புகளைக் கட்டி, சமரச ஊசலாட்ட சக்திகளைத் தனிமைப்படுத்தி, மு...மாக்கி, பரந்துபட்ட மக்களை பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையில் வென்றெடுக்கவும் அரசியல் போராட்டங்களைத் தொடர்ந்து, — தேவையான முன்னிபந்தனைகள் பூர்த்தியாகும் போது — ஆயுதந்தாங்கிய எழுச்சியைக் கட்டவிழ்த்து விடவும், அதையே அரசியலதிகாரத்தை நிறுவவும், செஞ்சேனையையும் கொரில்லாப்போரையும் வளர்க்கவும் தொடரவுமானதாக திட்டமிட்டு முன்னுரிமை அளிக்கவேண்டும்.

இன்றைய அகநிலை பலத்திற்கேற்ப வெவ்வேறு பகுதிகள் மற்றும் வர்க்கங்களுக்கு அளிக்க வேண்டிய முன்னுரிமை வரிசையின்படி பல்வேறு மக்கள்திரள் அமைப்புகள் மற்றும் கட்சி அமைப்புகளை நிறுவி முற்சொன்ன மூன்று வகையிலான பணிகளின் அடிப்படையில் பொதுவில் அரசியல் பிரச்சாரம், அம் பலப்படுத்துதல், கிளர்ச்சி மற்றும் போராட்டங்களையும் குறிப்பாக அரசியல் போர்த்தந்திரங்களின் அடிப்படையிலான அரசியல் போராட்டங்களையும் தொடர்ந்து நடத்துவதின் மூலம்

பரந்துபட்ட மக்களைத் தட்டியெழுப்பி அரசியல்படுத்தி, ஸ்தாபன ரீதியில் அணி திரட்டவேண்டும்.

இரண்டாம் பட்சப் பகுதிகளிலும், அதாவது, நகர்ப்புறங்களிலும் பரந்து விரிந்த கிராமப்புற பகுதிகளிலும் இப்போராட்டங்களை நடத்தும்போதே அவற்றை வழி நடத்துவதற்கான அரசியல் படையையும், போராட்டங்களைக் காப்பதற்கான ஆயுதந்தாங்கிய தற்காப்புக் குழுக்களும்-செங்காவலர் குழுக்கள்-கட்டப்பட வேண்டும் இரண்டாம்பட்ச பகுதிகளாக கொண்டுள்ள நகரப் புறங்களிலும் பரந்து விரிந்த கிராமப்புற பகுதிகளிலும் உடனடியாக அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஆயுதந்தாங்கிய எழுச்சிகள் உட்பட ஆயுதப் போராட்டங்கள் அளவு இயக்கங்கள் வளர்த்தெடுக்கப்பட மாட்டாவெனினும் பொது அரசியல் வேலைநிறுத்தம் பாதுஜன அரசியல் எழுச்சிகள் உட்பட உயர்ந்த அரசியல் போராட்ட வடிவங்களையும் பிரயோகிப்பது இந்திய நிலைமைகளில் இன்றியமையாததாக உள்ளது. இவை தற்காப்புத் தன்மையுடைய ஆயுத மோதல்களையும் உள்ளடக்கியும் இருக்கும். இரண்டாம்பட்ச பகுதிகளில் இவ்வாறு அரசியல் போராட்டங்களை உயர்ந்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்வது மூலமாகத்தான் எதிரியின் அரசியல், இராணுவ சக்திகளைச் சிதறடித்து பலவீனப்படுத்தவும் அவனது பின்னணி வரிசைகளைத் சுகர்க்கவும், ஆயுதப் போராட்டப் பகுதிகளைக் காப்பதில் மறைமுகமாக பணியாற்ற முடியும். ஒரு வகையிற் சொல்வதானால் எதிரியின் 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கைகளுக்கெதிரான செஞ்சேனையின் எதிர் நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்காக செஞ்சேனைக்கு உதவும் வகையில் எதிரியின் 'சுற்றி வளைத்து அடக்குதலுக்கு' மறு சுற்றும் பெரிய வளைவும் அடங்கிய எதிர்ச் சுற்றி வளைத்து அடக்குதல் முறையாக இவை அமைகின்றன. இந்தியப் புரட்சியின் புறவயமான நிலைமைகளில் உள்ள முதலாளித்துவ முறையிலான மத்தியத்துவப்படுத்தப்பட்ட அதிகாரவர்க்க இராணுவ அரசு எந்திரம், ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடும் பிளவும் மோதலாக — யுத்தமாக —இல்லாதது, நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை ஆகியவிசேஷமான குணாதிசயங்கள் காரணமாக செஞ்சேனையின் ஆயுதப் போராட்ட மையங்களை எதிரி 'சுற்றி வளைத்து அடக்கும்' நடவடிக்கைகளுக்கெதிராக செஞ்சேனையின் எதிர் நடவடிக்கைகளுக்கு உதவியாக இரண்டாம்பட்ச பகுதிகளை குறிப்பாக ஆயுதப் போராட்ட மையங்களைச் சுற்றிலுமுள்ள நகரங்கள் மற்றும் பரந்து விரிந்த கிராமப்புறங்களிலான அரசியல் போராட்டங்களைக் கொண்டு எதிர் 'சுற்றி வளைத்து அடக்குதல்' நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஒரு விதியாகக் கொண்டிருக்கிறது என்றும் கூறலாம். இந்த வகையில் அரசியல் போராட்டங்களும் ஆயுதப் போராட்டங்களும் முன்னுரிமை தரும் பகுதிகள், வர்க்கங்களும் பிற பகுதிகள், வர்க்கங்களுடன் ஒரு விசேஷமான உறவைக் கொண்டுள்ளன.

மத்தியத்துவப்படுத்தப்பட்ட அதிகாரவர்க்க இராணுவ அரசு எந்திரம், தொழில் ரீதியிலான வளர்ச்சி போன்ற இந்தியாவின் விசேஷமான—சீனத்திலிருந்து மாறுபட்ட—குணாதிசயங்களை அங்கீகரித்தாலும் பிற மார்க்சிய-லெனினிய குழுக்கள் வெறுமனே 'அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்' 'சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்' அல்லது 'மக்கள் யுத்தப் பாதையைப் பருண்மையாகப் பிரயோகிக்க வேண்டும்' என்று கூறுவதோடு சரி. அதற்கு மேல் கோட்பாடு ரீதியிலோ நடைமுறை ரீதியிலோ, இதை அங்கீகரிப்பதில்லை. இரண்டாம்பட்ச முக்கியத்துவம் அளிக்கப்படும் நகர்ப்புறங்கள் பிற பரந்து விரிந்த கிராமப்புறங்களில் செயலற்ற தற்காப்பு, வெறுமனே பலத்தைச் சேர்ப்பது, கட்சி ஊழியர்களுக்கு தங்குமிடம் உணவு, நிதி போன்ற உதவி, முன்னணி ஊழியர்களை கிராமப்புறங்களுக்கு அனுப்புவது பொதுவாக பொருளாதாரவாதம் மற்றும் துண்டு துண்டான அரசியல் பிரச்சினைகள் மீது போராடுவது என்ற பணிகளையே முன் வைக்கின்றன. இன்னமும் "கிராமப்புறங்களுக்கு முக்கியத்துவமளிப்பது நகர்ப்புறம் மற்றும் பரந்து விரிந்த கிராமப்புற பணிகளையும் புறக்கணிப்பதாகாது. ஆயுதப் போராட்டத்துக்கு முக்கியத்துவமளிப்பது பிற போராட்டங்களைப் புறக்கணிப்பதாகாது என்ற எதிர்மறைப் பாணியிலேயே அணுகுகின்றன. முன்னுரிமைப் பகுதிகளையும் வர்க்கங்களையும் பிறவற்றோடு இணைப்பதில்—கோட்பாடு மற்றும் நடைமுறையில் அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களில் எதிரிக்கு எதிரான பொதுத் தாக்குதலில் சக்திகளை ஒருங்கிணைப்பதில்—அவர்களிடம் முயற்சியும் இல்லை.

இதற்கு மாறாக, இரண்டாம்பட்ச முன்னுரிமை தரும், குறிப்பாக ஆயுதப் போராட்ட மையங்களைச் சுற்றிலுமுள்ள பகுதிகள், வர்க்கங்களின் மத்தியில் அரசியல் போராட்டங்களையும் ஆயுதந்தாங்கிய செங்காவலர் குழுக்களையும் கட்டி வளர்ப்பதும் கூட கூடுதலான முக்கியத்துவமளிக்கப்படவேண்டும். அங்கெல்லாம் வெறுமனே பிரச்சாரம், கிளர்ச்சி என்பதாக மட்டுமின்றி பொது அரசியல் வேலை நிறுத்தம் வெகுஜன அரசியல் எழுச்சி ஆகிய அரசியல் போராட்டங்களோடு எதிரியின் போக்குவரத்து, செய்தித் தொடர்பு, கேந்திரமான யுத்ததந்திர குறியிடங்களை தாக்கி அழிப்பது ஆகிய இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளும், தற்காப்பு அடிப்படையிலான ஆயுத மோதல்களையுடைய நடவடிக்கைகளும் கூட அடங்கியிருக்கும். பொது அரசியல் வேலை நிறுத்தம், வெகுஜன அரசியல் எழுச்சி ஆகிய அரசியல் போராட்டங்களை தலைமையேற்று வழி நடத்தும் அரசியல் படையாகிய தொழிற்சாலைக் கமிட்டிகள் போராட்டக் கமிட்டிகள் தற்காப்பு நடவடிக்கைகளுக்கான ஆயுதந் தாங்கிய செங்காவலர் குழுக்களும் கட்டப்பட்டாலும் அவை அரசியல் அதிகாரத்திற்கான ஆயுதந்தாங்கிய போராட்டங்களாகவோ அரசியல் அதிகாரத்திற்கான சோவியத் போன்ற உறுப்புகளாகவோ நீண்டகாலத்திற்கு மாற்றப்படக்கூடாது. அதாவது

"தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ—நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரம் ஒழிக!" "மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவோம்!" போன்ற யுத்ததந்திர ரீதியிலான முழக்கங்கள் பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சிக்கான முழக்கங்கள் என்ற வரம்புக்குட்பட்டே வளர்க்கப்படும். செயல் முழக்கமாகவோ கட்டளையாகவோ மாற்றப்படக்கூடாது. கிராமப்புறங்களில் முன்னுரிமை தரப்படும் பகுதிகளில் செஞ்சேனை, கொரில்லாப் படைப் பிரிவுகள், செந்தளப் பிரதேசங்கள் நிறுவி, வளர்க்கப்பட்டு அவை அலை அலையாக முன்னேறி, விரிவடைந்து நாடு தழுவிய புரட்சிகரப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்தும் போது, யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் நிலையை நாம் எட்டும்போது தளப்பிரதேசங்களிலிருந்து அலை அலையாக முன்னேறி நகர்ப்புறங்களை சுற்றி வளைத்து நாடு தழுவிய இறுதி வெற்றிக்கான போராட்டத்தின் போது மேற்கண்ட இயக்கங்கள் ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சிகளாக வளரும், மேற்கண்ட அமைப்புகள் அரசியல் அதிகாரத்திற்கான உறுப்புகளாக வளரும் யுத்ததந்திர ரீதியிலான அடிப்படை முழக்கங்கள் செயல் முழக்கங்களாகவும் கட்டளையாகவும் மாற்றப்படும்.

முன்னுரிமை தரப்படும் பகுதிகளிலும், வர்க்கங்களிலும் மக்கள் திரள் அமைப்புகளை நிறுவுவதோடு முக்கியத்துவத்தின் வரிசைப்படி படிப்படியாக பிற பகுதிகளிலும் புரட்சிகர வர்க்கங்கள் மற்றும் மக்கள் பிரிவுகளிடையேயும் அவர்களுக்கான மக்கள் திரள் அமைப்புகளையும், கலை இலக்கியம், மக்கள் உரிமைகள் மற்றும் போர்த்தந்திர ரீதியிலானவை போன்றவற்றுக்கான மக்கள் திரள் அமைப்புகளையும் கட்டி வளர்க்க வேண்டும். பரந்துபட்ட மக்களை அரசியல்படுத்தவும், அணி திரட்டவும், பயிற்றுவிக்கவும் ஸ்தாபனப்படுத்தவும் முற்சொன்ன மூன்று வகையான பணிகளை மேற்கொள்ள வேண்டும். பல்வேறு பிரிவு மக்களது, வர்க்கங்களது அன்றாட மற்றும் பகுதிக் கோரிக்கைகளையும், அடிப்படை நலன்களுக்கான கோரிக்கைகளையும், திட்டவகைப்பட்ட அரசியல் போர்த்தந்திரங்களோடும், யுத்ததந்திர முழக்கங்களோடும் குறிப்பாக அரசியல் அதிகாரத்திற்கானதும் மற்றும் விவசாயத் திட்டத்துக்கானதுமாகிய முழக்கங்களோடு இணைத்து அரசியல் போராட்டங்களை நடத்த வேண்டும். வெவ்வேறு பிரிவு மக்களது மற்றும் வர்க்கங்களது அரசியல் மற்றும் பிற பகுதிக் கோரிக்கைகளை துண்டு துண்டாக முன் வைத்துப் போராடாது அவற்றைத் தொகுத்து சில முழக்கங்களாக வடித்து, போர்த்தந்திர முழக்கங்களோடும அவற்றுக்கான ஸ்தாபன மற்றும் போராட்ட வடிவங்களோடும், யுத்ததந்திர அரசியலோடும் தொகுத்து இவற்றையும் பரந்துபட்ட மக்களிடையே முன்னெடுத்துச் செல்ல வேண்டும்; போராட்டங்களில் பயிற்றுவிக்க வேண்டும்.

விவசாயிகளைப் பொருத்தவரை எல்லாவகை நில வெளியேற்றத்தை எதிர்த்தும், கொத்தடிமை முறையை எதிர்த்தும், குறிப்பாக சாதிய அடக்குமுறைகளை எதிர்த்தும், குறிப்பாக சாதிய அடக்குமுறைகளை எதிர்த்தும், கூலி உயர்வுக்கும், சமமான வேலைக்கு சமமான ஊதியத்திற்கும், எல்லாவகை குத்

தகைவட்டி குறைப்பிற்கும் — பின்னர் இவற்றையும் ஒழிக்கவும், நிலப்பிரபுக்கள் மற்றும் அரசு நிலத்திற்காகவும், பொது நிலங்களை நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகளுக்குக் குத்தகை விடுவதை எதிர்த்தும், பழங்குடியினர் நிலம், உடமை ஆகியவற்றைப் பாதுகாக்கவும், கூட்டுறவு வங்கி, ஆலை, சொசைட்டிகள் மற்றும் அரசு, அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறை சுரண்டலை எதிரத்தும், கமிசன் மண்டி, லேவாதேவிகளை எதிர்த்தும் காட்டிலாகா அதிகாரிகள் மற்றும் போலீஸ் தொல்லைகளை எதிர்த்தும், பதுக்கல், விலைவாசி உயர்வு, வரிக்கொடுமை, ஜப்தி மற்றும் பிற கெடுபிடிகளை எதிர்த்தும் இன்னும் பிற சமூக, அரசியல், பொருளாதார ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் விவசாயிகளைத் திரட்டிப் போராட வேண்டும். இப்போராட்டங்கள் அரசியல் போர்த்தந்திரத்தால் பருண்மையாக வழி, நடத்தப்படும். இக்கோரிக்கைகள் போர்த்தந்திரங்களோடு இணைந்திருப்பதோடு, யுத்ததந்திர ரீதியான விவசாயத்திட்டம், யுத்ததந்திர ரீதியிலான முழக்கமாகிய 'அனைத்து அதிகாரங்களும விவசாயிகள் கமிட்டிக்கே' 'நிலப்பிரபுத்துவம்-ஏகாதிபத்தியம் ஒழிக!' ஆகிய முழக்கங்களோடு இணைந்திருக்கும்.

பொதுவில் பரந்துபட்ட மக்களை, குறிப்பாக விவசாயிகளை அரசியல்படுத்தவும், அணிதிரட்டவும், பயிற்றுவிக்கவும், ஸ்தாபனப்படுத்தவும் மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதே அதிஉயர்ந்த முக்கியத்துவமளித்து அரசியல் போர்த்தந்திரங்களால் தீர்மானிக்கப்படும் ஸ்தாபன மற்றும் போராட்ட வடிவங்களை மேற்கொண்டு, போர்ந்தந்திரங்களின் தற்காப்பு அல்லது தாக்குதல் தன்மைக்கேற்றவாறு அவற்றின் அரசியல் நடத்தைவழியைப் பின்பற்றி அரசியல் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும். அவற்றின் மூலம் சமரச மற்றும் ஊசலாட்ட சக்திகளை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்தி, முடமாக்குவதின் மூலம் பரந்துபட்ட மக்களை, குறிப்பாக, விவசாயிகளை கட்சியின் தலைமைக்கு வென்றெடுக்க வேண்டும். அரசியல் போர்த்தந்திரங்களின் அடிப்படையில் இவ்வாறு பரந்துபட்ட மக்களைத் திரட்டும்பொழுதே, "தரகு - அதிகார வர்க்க முதலாளித்துவம்-நிலப்பிரபுத்துவம் ஒழிக!", "அனைத்து அதிகாரங்களும் விவசாயிகள் கமிட்டிக்கே!", "மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் நிறுவுவோம்!" போன்ற யுத்ததந்திர ரீதியிலான முழக்கங்களையும் "நிலப்பிரபுக்கள், மத மற்றும் பிற நிறுவனங்கள், அரசு நிலங்களைக் கைப்பற்றுவோம்!" "உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவோம்!", "எல்லாக் கடன்களையும் குத்தகை செலுத்துவதையும் ரத்து செய்வோம்!", போன்ற விவசாயத் திட்டத்தின் அடிப்படையிலான முழக்கங்களையும் பிரச்சாரம் மற்றும் கிளர்ச்சி முழக்கங்களாக உயர்ந்த கட்டங்களுக்கு வளர்க்க வேண்டும்.

முன்னுரிமை தரப்படும் பகுதிகளில் அரசியல் மற்றும்பிற போராட்டங்கள் அனைத்தையும் ஒருமுனைப்படுத்தி வளர்ப்பதில் நமது நோக்கம் மேற்கண்ட யுத்ததந்திர ரீதியிலான மற்றும் விவசாயத்

திட்டத்தின் அடிப்படையிலான முழக்கங்களை பிரச்சார மற்றும் கிளர்ச்சி முழக்கங்களின் கட்டங்களிலிருந்து படிப்படியாகவும் அறிவு பூர்வமாகவும் செயற் முழக்கங்களாகவும் இறுதியில் கட்டளைகளாகவும் வளர்த்தெடுத்து சாத்தியமான அளவு பரந்து விரிந்த கிராமப்புற பகுதிகளில் ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியை நடத்துவதாகும். ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சி மூன்று அம்சங்களில் முக்கியத்துவமுடையதாக இருக்கும். (1) மிகவும் பின் தங்கிய பகுதியினர் உட்பட பரந்து பட்ட மக்கள் அனைவரையும் தமது சொந்த அனுபவத்தின் மூலம் (1905 ருஷியப் புரட்சியும், 1924-27 முதல் மாபெரும் சீனப்புரட்சியும் அந்நாடுகளின் மக்களுக்கு புரட்சிகர அனுபவமாக இருந்ததைப் போன்று) அரசியல் போதமளிப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் ஸ்தாபனப்படுத்துவதற்குமான அடிப்படைத் தேவையாக அமைகிறது. (2) செந்தளப் பிரதேசத்தையும் சிவப்பு அரசியலதிகாரத்தையும் நிறுவுவதற்கான துவக்கப் புள்ளியாகிய கொரில்லா மண்டலங்களையும் அரசியல் படையையும் இரட்டை அரசியலதிகார காலகட்டத்தையும் நிறுவுவதைக் குறிக்கிறது (3) புரட்சிகர மக்கள் யுத்தத்தையும் செஞ்சேனையையும் நிறுவுவதற்கான துவக்கப்புள்ளியாகிய கொரில்லா யுத்தத்தையும், செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகளையும் நிறுவுவதைக் குறிக்கிறது. சாராம்சமாகக் கூறுவதானால் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான விவசாயிகளது போராட்டத்தின் அதியுயர்ந்த வடிவமும், நாடு தழுவிய புரட்சிகரப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவதுமாகிய செஞ்சேனை, கொரில்லாப் படைப்பிரிவுகள் மற்றும் தளப்பிரதேசங்களை நிறுவி வளர்ப்பதற்கான ஆரம்பமாக—குணரீதியிலான மாறுதலைக் குறிப்பதாக அமைகிறது. பிரதான எதிரிக்கு எதிராக பிரதான தாக்குதல் திசை வழியே பிரதான, தீர்க்கமான தாக்குதல் தொடுப்பதைக் குறிக்கிறது.

புரட்சியையும் புரட்சிகர யுத்தத்தையும் தொடுப்பதின் துவக்கப்புள்ளியாகவும், எதிரிக்கெதிரான தீர்மானகரமான தாக்குதலாகவும் அமையும் முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியைத் தொடுப்பதற்கான நிலைமைகளும் முன்தேவைகளும் பொதுவாகக் கூறினால் ஆளும் வர்க்கங்கள் பழைய முறையில் ஆளமுடியாமற் போவதும், பிளவுகள் முரண்பாடுகளுக்குள் மூழ்கி ஸ்திரமற்றுப் போவதும், ஆளப்படும் வர்க்கங்கள் பழைய முறையில் வாழ விரும்பாது புரட்சிகரப் போராட்டங்களில் குதிப்பதுமாகும். குறிப்பாகக் கூறுவதானால் பின்வரும் நிலைமைகளையும் முன்தேவைகளையும் கொண்டிருக்க வேண்டும். அவை (1) ஆளும் வர்க்கங்கள் தமது ஆட்சியை எந்த மாற்றமுமின்றி தொடர்ந்து நடத்திச் செல்வது சாத்தியமற்றதாவது; 'மேல் வர்க்கங்களிடையே' ஏதேனும் ஒரு வடிவத்தில் நெருக்கடி ஏற்பட்டு, ஆளும் வர்க்கங்களின் அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகள் நெருக்கடிக்குள்ளாகி, அவற்றின் விளைவாக வெடிப்பு உண்டாகி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய அதிருப்தியும் ஆத்திரமும் இவ்வெடிப்பின் வழியே

பீறிட்டெழுவது; புரட்சி நடைபெறுவதற்கு பழைய வழியில் வாழ 'அடிமட்டத்து வர்க்கங்கள் விரும்பாதது' மட்டும் சாதாரணமாகப் போதாது; பழைய வழியில் வாழ 'மேல்மட்டத்து வர்க்கங்களுக்கு முடியாமற் போவதும்' அவசியமாகும். எனவே, முக்கியமாகப் புரட்சியின் எதிரிகளான—பகையான எல்லா வர்க்க சக்திகளும் போதிய அளவுக்கு நெருக்கடியில் சிக்குண்டு விட்டனவா, போதிய அளவுக்கு ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொள்கின்றனவா, தமது பலத்திற்கு அப்பாற்பட்ட போராட்டத்தில் சிக்கி தம்மைப் பலவீனப்படுத்திக்கொண்டு விட்டனவா என்பதை அறியவேண்டும். (2) ஆளும் வர்க்கங்களுடனும் அவற்றின் அரசுடனும், அரசியல் சக்திகளுடனும் சமரசப் படுத்திக்கொண்டு பிரதான சேமிப்பு (துணை-ரிசர்வ்) சக்திகளை திசை திருப்பி புரட்சியை சின்னாபின்னப்படுத்தும்—எதிரிகளின் சமூக அடிப்படைகளாக விளங்கும், ஊசலாடும் சமரச வர்க்கங்களையும் அரசியல் சக்திகளையும் —ஆளும் வர்க்கங்களிலிருந்து வேறுபாடான ஊசலாடும் தேசிய முதலாளிகள், சமூக ஏகாதிபத்தியவாதிகளாகிய குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் மற்றும் பிற இடைநிலை நபர்கள் அனைவரையும் விதிவிலக்கின்றி அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவதும் முடமாக்குவதும் இவர்கள் பரந்துபட்ட மக்களின் கண்களில் போதிய அளவு அம்பலப்பட்டு, நடைமுறையில் கையாலாகாத்தனத்தால் போதிய அளவு இழிவுபட்டு விட்டனரா என்பதை அறிய வேண்டும்.

(3). பல்வேறு வர்க்கங்கள் மற்றும் மக்கள் பிரிவுகளுக்கான மக்கள் திரள் அமைப்புக்களில் திரண்டுள்ள பரந்துபட்ட மக்கள் அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிரான அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ரீதியான எல்லா அடக்கி ஒடுக்கப்படும் சுரண்டப்படும் எல்லா வழக்குகளிலும் போராடுவதின் மூலமாகவும், பிரதானமாக அரசியல் போராட்டங்களின் மூலமாகவும் ஆளும் வர்க்கங்களின் மற்றும் ஊசலாடும் சமரச சக்தியின் தலைமையிலிருந்து விடுபட்டு அரசியல் போதமும் பயிற்சியும் பெற்று பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையில் ஸ்தாபன ரீதியில் அணி திரண்டிருப்பது; ஒடுக்கப்படும் வர்க்கங்களுடைய துன்பதுயரமும் வறுமையும் வழக்கமாக இருப்பதைக் கட்டிலும் அதிகக் கடுமையாகி விடுதல். முன்னுரிமை தந்து ஆயுதந்தாங்கிய எழுச்சி நடத்தப்படும் பகுதிகளைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் நகர்ப்புறங்களிலுமாவது பொது அரசியல் வேலை நிறுத்தம் மற்றும் வெகுஜன அரசியல் எழுச்சி உட்பட எதிரிகளது சக்திகளை சிதறடிக்குமளவு, கிளர்ச்சி முழக்கம் என்ற நிலையின் அளவு வளர்ச்சியுற்றிருப்பது அதாவது, மக்கள் பெருந்திரளினது போராட்டங்களும் செயற்பாடுகளும் கணிசமாய் அதிகரிப்பது. அவர்கள் ''சாதாரண காலங்களில்'' தம்மை சூறையாடப்படுவதற்கு எவ்வித எதிர்ப்புமின்றி இடமளிப்பவர்களாயிருப்பதை விட்டொழித்து அவற்றிற்கெதிராக அவர்களாகவே கிளர்ந்தெழுவதோடு, மேல்தட்டு வர்க்கங்களாலும் அவ்வாறான போராட்டங்களில் இழுத்து விடப்படும் நிலை தோன்ற வேண்டும்.

(4). பல்வேறு மக்கள்திரள் அமைப்புகளது மக்கள்திரள் இயக்கங்கள் மூலமாகவும் அரசியல் போராட்டங்கள் மூலமாகவும், அவற்றின் வளர்ச்சிப் போக்கில் வழமையான, போராட்ட அமைப்புகளைவிட உயர்ந்ததாகிய வேலை நிறுத்தக் கமிட்டிகள், போராட்டக் கமிட்டிகள், எழுச்சிக்கான கமிட்டிகள் போன்றவையாகிய எதிர்காலத்தில் அரசியல் அதிகாரத்திற்கான சோவியத்துக்களாக மாறும் உறுப்புகள் ஆகியவை அடங்கிய அரசியல் படையை அறிவு பூர்வாக கட்டி வளர்த்திருக்க வேண்டும். மக்கள்திரள் அமைப்புகளையும் இயக்கங்களையும் கட்சியையும் அரசியல் போராட்டங்களையும் எதிரியின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காக அறிவுபூர்வமாகக் கட்டி வளர்க்கப்பட்ட பயிற்சிபெற்ற தற்காப்புக் குழுக்கள் இருக்க வேண்டும், ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சிக்கு அரசியல் ரீதியிலான தலைமை அளிப்பதாக அரசியல் படையும், மக்களை ஆயுதபாணியாக்கி புரட்சிகர எழுச்சியை நடத்தும் இராணுவ ரீதியான தலைமையளிப்பதாக தற்காப்புக் குழுக்களும் வளர்ச்சியடைந்து அவை முறையே அரசியல் அதிகாரத்திற்கான சோவியத்துகளாகவும், செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகளாகவும் மாறுவதானால் மட்டுமே சமரச சக்திகள் முற்றிலும் தனிமைப்படுத்தி முடமாக்கப்படுவதும் எதிரி சக்திகள் முற்றிலும் முறியடிக்கப்படுவதும் சாத்தியம்.

5) பகுதிக் கோரிக்கைக்களுக்கானதும் மற்றும் அரசியல் போர்த்தந்திர ரீதியிலானதும் ஆன முழக்கங்களை மட்டுமின்றி அடிப்படையானதும் யுத்ததந்திர ரீதியானதும் மற்றும் விவசாயத் திட்டத்தின் அடிப்படையிலாதுமான பாட்டாளி வர்க்கக் கட்சியால்முன் வைக்கப்பட்ட முழக்கங்கள் தமது சொந்த முழக்கங்களாக தமது சொந்த நடைமுறை அனுபவத்தால் பரந்துபட்ட மக்கள், குறிப்பாக விவசாயிகள் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். முன்னணியினர் மட்டுமின்றிப் பரந்துபட்ட மக்களும் தமது சொந்த அனுபவத்தின் மூலம் தற்போதைய அரசும், ஆளும் வர்க்கங்களும் நீடிக்க முடியாது, நீடிக்கக்கூடாது, தவிர்க்க முடியாமல் தூக்கியெறியப்பட வேண்டுமென்பதையும், கட்சியின் கொள்கையையும் முழக்கத்தையும் ஏற்க வேண்டும்.

(அ) "நிலப்பிரபுத்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் தூக்கியெறிவோம்!" "தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரம் ஒழிக!"

(ஆ) "ஆயுதபாணியாவோம்! மக்கள் படையைக் கட்டுவோம்!" "அனைத்து அதிகாரங்களும் விவசாயிகள் கமிட்டிகளுக்கே!" "மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவோம்!"

(இ) "நிலப்பிரபுக்கள், நிலவுடமை நிறுவனங்கள் ஆகியோரின் நிலங்களைப் பறிமுதல் செய்வோம்!" "உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவோம்!"

(ஈ) "அரசுக்கு வரி, குத்தகை செலுத்துவதை நிறுத்துவோம்!" "தனியார், அரசுக் கடன்களையும் வட்டிகளையும் செலுத்த மாட்டோம்!"

—இவை போன்ற யுத்ததந்திர ரீதியிலான மற்றும் விவசாயத் திட்டத்தின் அடிப்படையிலான முழக்கங்களை மக்கள் ஏற்று செயல் முழக்கம் மற்றும் கட்டளைக்குத் தயாராக இருக்க வேண்டும்.

(6) புரட்சிகர அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும் அரசியல்படை, ஆயுதப்படை மற்றும் பிற புரட்சிகர அமைப்புகளிலும் பாட்டாளி வர்க்கத் தலைமையைப் பிரதிநித்துவப் படுத்தும், ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியை தலைமையேற்று வழிநடத்தும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகிய கட்சி பிளவுபடாத தலைமையைப் பெற்றிருக்க வேண்டும். புரட்சிகர மையங்கள் பலவாக இருந்து புரட்சிகர சக்திகள் பிளவுபட்டு சக்திகள் சிதறாத வண்ணம் எதிரிக்கெதிரான தீர்க்கமான பிரதான தாக்குதல் தொடுக்க மிகவும் இன்றியமையாதது பிளவுபடாத கட்சித் தலைமையாகும்.

மேற்கண்ட ஆறு நிபந்தனைகளும் முன் தேவைகளும் முன்னுரிமை தரப்படும் பகுதிகளில் பூர்த்தியாகும் போது நாடு தழுவிய புரட்சிகரச் சூழ்நிலை நிலவுவதாகவும்—புரட்சிகர இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதும், புரட்சிகர அலை ஓங்கிவீசுவதும்—தாக்குதல் தன்னுடைய அரசியல் போர்த்தந்திர காலகட்டமாகவும் இருக்க வேண்டும். ஆனால் புரட்சி மற்றும் புரட்சிகர யுத்தத்தின் துவக்கப்புள்ளியாக அமைகின்ற ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியை நடத்துவதற்கு குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப வடிக்கப்படும் போர்த்தந்திரம் தாக்குதல் தன்மையுடையதாக மட்டுமின்றி அரசியல் அதிகாரத்திற்கான போராட்ட வடிவங்களையும் ஸ்தாபன வடிவங்களையும் கொண்டிருப்பதாகவும் - அந்த அளவு உயர்ந்த போர்த்தந்திரக் குறிக்கோள் மற்றும் வரம்புகளையும், போரிடும் சமுதாய அரங்கத்தையும் கொண்டிருப்பதாகவும் இருக்க வேண்டும். மேற்கண்ட ஆறு நிலைமைகளும், நிபந்தனைகளோடு தளப் பிரதேசங்களை நிறுவுவதற்கான வேறு பிற நிபந்தனைகள் பூர்த்தியாகக் கூடிய முன்னுரிமை தரப்படும் தெரிந்தெடுத்த பகுதிகளில் யுத்ததந்திர ரீதியிலான மற்றும் விவசாயத் திட்டத்தின் அடிப்படையிலான முழக்கங்களை செயல் முழக்கங்களாக மாற்றி ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சிக்கான தயாரிப்புகளை திட்டமிட்ட முறையில் அறிவுபூர்வமாக செய்ய வேண்டும்.

விரைவில் வெற்றி தோல்வி காணும் தன்மையுடைய, தாக்குதல் தன்மையுடைய இராணுவப் போர்த்தந்திரங்களும், ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியை வழிநடத்தும் விரிவான நுணுக்கமான விவரங்களடங்கிய திட்டம் வகுக்கப்பட வேண்டும். ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியை அரசியல் ரீதியில் தலைமையேற்று நடத்தக் கூடியதாக—வழக்கமான போராட்டக்

கமிட்டிகள், வேலை நிறுத்தக் கமிட்டிகள், விவசாய சங்கங்கள் போன்ற மக்கள்திரள் அமைப்புகளின் முன்னணிக் கமிட்டிகள் போதாது. எனவே—தனிச்சிறப்பான அவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய—எழுச்சிக்கான கமிட்டிகள் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்; இவையே அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் சோவியத்துக்களாக வளர்க்கப்படும்; மாறும். ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியை இராணுவ ரீதியில் தலைமையேற்று வழிநடத்தும் அமைப்புக்களாக தற்காப்புக் குழுக்கள், செங்காவலர் குழுக்கள் மற்றும் எழுச்சிக்கான கலகப்படைப் பிரிவுகள் ஆகியவற்றின் தலைமைக் குழுவாக புரட்சிகர இராணுவக் கமிட்டிகளும் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியை வழி நடத்திச் செல்லும் தனிச் சிறப்பான அமைப்பாக பாட்டாளி வர்க்கக் கட்சியின் நடைமுறை மையக் கமிட்டியொன்றும், உள்ளூர்களில் எழுச்சியை நேரிலிருந்தும் வழி நடத்தும் அதன் பாட்டாளி வர்க்கக் கட்சிப் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட வேண்டும். அப்பகுதியிலுள்ள ஒவ்வொரு தொழிற்சாலை, கிராமங்கள் மற்றும் பிற தொழில் பிரிவுகள் உட்பட அனைத்துப் புரட்சிகர மக்கட் பிரிவினரையும் மற்றும் வர்க்கங்களையும் வழிநடத்த ஸ்தாபனப்படுத்தப்பட்ட கமிட்டிகளை அமைத்து எழுச்சிக்கான தயாரிப்புகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

சாத்தியமான அளவு கூடுதலான பரந்துபட்ட மக்களை ஆயுதபாணியாக்குவதற்கான அனைத்து தயாரிப்புகளும் முற்றிலும் இரகசியமான முறையில் செய்து முடிக்கப்பட வேண்டும். ஆயுதங்களும் பிற தளவாடங்களும் செய்தித் தொடர்புகளும் ஆகிய தேவைகள் திட்டமிட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டும். பதுங்கு குழிகள், குகைச்சண்டை—தெருச்சண்டை தயாரிப்புகள் கம்பி வேலிகள், தடுப்புச்சுவர் இன்னும் பிற கொரில்லா யுத்தத்துக்கான தயாரிப்புகளை விவரமாகவும் நுணுக்கமாகவும் திட்டமிட்டு செய்து முடிக்க வேண்டும். எதிரியின் உயிராதாரமான நிலைகளின் இராணுவப் பிரிவுகளைத் தாக்கி அழிப்பதோடு, எழுச்சியை அடக்கி ஒடுக்குவதற்காக வெளியிலிருந்து துருப்புகளை எதிரி குவிப்பதற்கான எல்லா சாத்தியப்பாடுகளையும் வழிவகைகளையும் முறியடிப்பதற்கும் கேந்திரமான அனைத்து செய்தித் தொடர்பு, போக்குவரத்து வழிகளையும் அறுத்தெறிவதற்கான திட்டங்களையும் வகுத்திட வேண்டும். அரசியல் ரீதியிலான விரோதிகளையும் ஊசலாட்ட சக்திகளையும் கையாளும் முறைகளையும் வகுத்திட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, தாக்க வேண்டிய, குறிப்பாக, முதலில் தாக்கி அழிக்க வேண்டிய கேந்திரமான நிலைகள் மற்றும் அரசியல் இராணுவ யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த குறியிடங்கள், எவ்வளவு செங்காவலர் குழுக்கள் மற்றும் எழுச்சிக்கான மக்கள், கலகக் குழுக்களை ஈடுபடுத்துவது, எந்த முறையில் தாக்குவது, தாக்கிக் கைப்பற்ற வேண்டிய எதிரியின் நிலைகள் மற்றும் குறியிடங்கள் ஆகியவற்றையெல்லாம் தெளிவாகவும் விரிவாகவும் முற்றிலும் இரகசியமாகவும் திட்டமிட வேண்டும்.

ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கான தயாரிப்பை செய்து முடிக்கும் பாட்டாளிவர்க்கக் கட்சி, தனது சக்திகளைக் கணக்கிடவும், பலத்தை எடை போடவும் முடியும். கிட்டத்தட்ட எந்த நேரத்திலும் மேற்கொள்ளக்கூடிய சாதாரணமான ஒரு ஆர்ப்பாட்டத்தாலும்—வேலை நிறுத்தத்துடன் கூடிய அல்லது வேலை நிறுத்தமில்லாத ஒரு மே தின ஆர்ப்பாட்டம் போன்றது கூட சக்திகளைக் கணக்கிட முடியும். வெளிப்படையானதொரு எழுச்சி இல்லாத தருணத்தில் சக்திகளைக் கணக்கிடுவதை மேற்கொள்ளும் போது—ஏறக்குறைய சமாதான காலங்களில்—கட்சிக்கு அல்லது எதிரிக்கு பெரும் இழப்புகளைத் தராத வகையில் அரசுத் துருப்புகள் அல்லது போலீசுடனான சிறு மோதல்களைக் கொண்டிருக்கும். பொங்கியெழும் நிச்சயமான எழுச்சியுடைய சக்திகளைக் கணக்கிடுவதை மேற்கொள்வது நிகழ்ச்சிகள் முதிர்ச்சியுறுமுன் எதிரியுடன் தீர்க்கமான மோதலைக் கொண்டதாகவும், அம்மாதிரியான மோதலுக்கு கட்சி தயாரிப்பின்றி பலவீனமாக இருப்பின் அதை எதிரி சாதகமாக எடுத்துக் கொள்வதாகவும் மாறி பாட்டாளி வர்க்கக் கட்சியையும் பரந்துபட்ட மக்களையும் எதிரி அடக்கி ஒடுக்க முடியும். எனவே ஏற்கனவே புரட்சிகர நெருக்கடி முதிர்ச்சியுற்றிருக்கும் ஒரு சூழ்நிலையில் சக்திகளைக் கணக்கிடும் முறையைப் பிரயோகிக்கும் போது கட்சி பலவீனமாக இருப்பின் எதிரி அதை சாதகமான கருவியாக மாற்றிக்கொண்டு புரட்சிகர இயக்கத்தைத் தோற்கடிக்கவோ அல்லது பாரதூரமாக பலவீனப்படுத்தவோ முடியுமென்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். ஆனால் மற்றொரு புறம் கட்சி செயலுக்கு தயாராக இருப்பின், எதிரியின் அணிகள் அப்பட்டமாகவே உணர்வு குன்றி நிலைகுலைந்திருப்பின் சக்திகளைக் கணக்கிடுவதைத் தொடங்கி விட்டிருந்தால் பலத்தை எடை போடுவதற்கும் அதன்பின் பொதுத்தாக்குதல் தொடுக்கவுமான வாய்ப்புகளை இழக்கக்கூடாது.

தீர்க்கமான செயல்களுக்கான தயாரிப்புகளை செய்து முடித்திருக்கும் போதிய அளவு சேமிப்புகளைச் சேர்த்திருக்கும் பாட்டாளி வர்க்கக் கட்சி, எதிரியின் பலத்தை சோதிக்கவும் தமது சொந்த சக்திகள் செயலுக்கு தயாராக உள்ளனவா என்று உறுதி செய்யவும் வேண்டுமானால் ஒரு மாதிரி (மாடல்) நடவடிக்கையை—செயலை மேற்கொள்ளலாம். இம்மாதிரியாக பலத்தை எடைபோடுவது நாமே உணர்வுபூர்வமாக அறிந்தே தெரிந்தெடுப்பது அல்லது சூழ்நிலைகளால் நிர்ப்பந்திக்கப்படுவது எதிரியால் முதிர்ச்சியும் முன்கூட்டியே தாக்குதல் அல்லது பொதுவில் எழும் எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படலாம். சக்திகளை எடை போடுவதற்கான முறையாக—மே தின ஆர்ப்பாட்டங்கள் போன்ற 'சாதாரண' நடவடிக்கைகளாக—பலத்தை எடைபோடுவதைக் கருதக்கூடாது. அதன் முக்கியத்துவம் மற்றும் சத்தியமான விளைவுகளைப் பொருத்தவரை ஒரு சாதாரண ஆர்ப்பாட்டத்தை விட சந்தேகத்திற்கிடமின்றி மேலானது. அதே சமயம் ஒரு ஆயுதந்தாங்கிய எழுச்சியை விடக் குறைவானது. அதாவது ஒரு ஆயுதந்தாங்கிய எழுச்சி

அல்லது பொது நிறுத்தத்துக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் இடைப்பட்டதாக கருதலாம். சாதகமான சூழ்நிலைமைகளில் பலத்தை எடைபோடும் நடவடிக்கை (சரியான தருணமாக இருப்பின்) முதற்தாக்குதலாகவும் ஓர் ஆயுதந்தாங்கிய எழுச்சியாகவும் வளரக்கூடும். சாதகமில்லாத சூழ்நிலைமைகளில் கட்சிக்கு அழிவுகளை விளைவிக்கக் கூடிய உடனடி அபாயமாகவும் மாறக்கூடும். எனவே கட்சி ஒரு குறிப்பிட்ட அளவு சேமிப்புகளை சேர்த்துக் கொண்டுள்ள போது, எதிரியின் முகாமில் போதிய அளவு சீர்குலைவு ஏற்பட்டுள்ளபோது, காலம் கனியும்போது பலத்தை எடைபோடும் ஒரு நடவடிக்கையை மேற்கொள்வது சாலச்சிறந்தது. அதாவது, சுருங்கக்கூறின், கட்சி ஒரு தாக்குதலுக்கு தயாராகவுள்ள போது சூழ்நிலைகள் காரணமாக பலத்தை எடைபோடுவது முதற்தாக்குதலாக மாறி விடும்படியும், அதன் பின் எதிரிக்கு எதிரான ஒரு பொதுத்தாக்குதலாக மாறி விடும்படியான வாய்ப்புகளால் கட்சி தைரியமிழந்து விடாதிருக்கும்போது, எல்லா எதிர்பாரா விளைவுகளுக்குமெதிராக கட்சி தயாராக உள்ளபோது பலத்தை எடைபோடும் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

தாக்குதல் தன்மையுடையதான போர்த்தந்திர காலகட்டம் துவங்கி விட்ட போதிலும் எதிரிக்கெதிரான தீர்க்கமான தாக்குதல் தொடுப்பதற்கு முன் நிபந்தனையாக பொதுவில் மேற்கண்ட நிலைமைகளும் நிபந்தனைகளும் இருப்பதோடு காலமும் கனிந்திருக்க வேண்டும்; நிச்சயம் வெற்றி தரும் தருணத்தைத் தெரிந்தெடுக்கத் தவறக்கூடாது.

1. எதிரிகளுக்கு எதிராக மிகவும் தீர்க்கமான, தைரியமான, தியாகமிக்க, வீரதீரமிக்க புரட்சிகரச் செயலுக்கானதொரு வெகுஜன தார்மீக எழுச்சியுணர்வு புரட்சிகர உத்வேகம் பரந்துபட்ட மக்களிடையே, குறிப்பாக விவசாயிகளிடையே தோன்றி நிரம்பி வழியும்போது; நமது செயல்முழக்கங்களும் கட்டளைகளும் பரந்துபட்ட மக்களது இயக்கத்துக்குப் பின் தங்கியிருக்கும் போது; சிரமப்பட்டும் அவர்களை வரம்பிடவோ, கட்டுப்படுத்தவோ இயலாதவாறு திமிறிக்கொண்டு முன்னேறும்போது.

2. எதிரிகளின் முகாமில் ஸ்திரமற்ற நிலையும், குழப்பமும், நிலைகுலைவும், சிதைவும் சின்னாபின்னப்படுத்துவதும், சீரழிவும் தோன்றி ஓர் உச்ச கட்டத்தை அடையும்போது, எதிரிகளின் முகாமில் குழிபறிப்பாளர்களும் ஓடுகாலிகளும் எண்ணிக்கைப் பாய்ச்சலோடும் படுவேகத்தோடும் அதிகரிக்கும் போது; ஊசலாடும் சமரச சக்திகள் முற்றாக முடமாக்கப்பட்டு தேசிய முதலாளிகள், பணக்கார விவசாயிகள் உட்பட இடைத்தட்டு வர்க்கங்களில் பலரும் எதிரியிடமிருந்து முறித்துக்கொண்டு பாட்டாளி வர்க்கத் தலைமையை ஏற்கும்போது; இவை எல்லாவற்றின் விளைவாக அடக்குமுறை உறுப்புகள் உட்பட எதிரியின் நிர்வாக எந்திரம் நிலைகுலைவதும் இருக்கும்போது அல்லது சிக்கலிலும் நெருக்கடியிலும் இருக்கும்போது;

3. மேற்கண்ட இரு காரணிகளும் ஒரே சமயத்தில் இணை சேர்ந்து நிகழும்போது;

தயாரிப்பு காலகட்டத்தை முடித்துக்கொண்டு செயலில் இறங்குவதற்கான காலம் கனிந்து விட்டதாகக் கொள்ளவேண்டும். தீர்க்கமான தாக்குதல் தொடுக்கும் பொருட்டு அதிகாரத்திலுள்ள வர்க்கங்களின் அழிவுறும் போக்காகிய புறவயமான நிலைமைகளைக் கணித்தால் மட்டும் போதாது. அத்துடன் தாக்குதல் வெற்றி பெறுவதற்கான அகவயமான நிலைமைகளும் அவசியமாகத் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதிகாரத்திலுள்ள ஆளும் வர்க்கங்கள் அழிவுறும் புறவயமான போக்குகளோடு பொருந்தக் கூடிய வகையில் தாக்குதல் தொடுப்பதற்கான புறவயமான நிலைமைகளைத் திறமையாகவும் சந்தர்ப்பப் பொருத்தமாகவும் தயாரிப்பதுதான் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் கறாரான பணிகளாகும்.

புறவயமான மற்றும் அகவயமான நிலைமைகளோடு காலம் கனிந்திருக்கும் மேற்கண்ட இரு நிலைமைகளோடு தீர்க்கமான தாக்குதல் தொடுப்பதற்கான மிகச்சரியான தருணத்தை தெரிவு செய்யவேண்டும். தீர்க்கமான தாக்குதலுக்கான தருணத்தைத் தெரிவு செய்வதைப் பொருத்தவரை உண்மையில் கட்சி தெரிவு செய்வதற்கும் நிகழ்ச்சிகளால் திணிக்கப்படாமல் இருப்பதற்கும் இரு நிலைமைகள் முன் நிபந்தனைகளாகும். அவை: (1) காலம் கனிந்திருப்பதும் (2) முதற் தாக்குதலைத் தொடுப்பதற்கு பரந்துபட்ட மக்களுக்கு அப்பட்டமானதும் மிகப் பொருத்தமானதொரு காரணமாக அமையக்கூடியதுமான உள்ளூர்த்தன்மைவாய்ந்த ஏதாவது ஒருதன்னெழுச்சியாக வெடித்துக் கிளம்பும் நிகழ்ச்சி அல்லது அரசின் நடவடிக்கை போன்றதொரு அப்பட்டமான நிகழ்ச்சி. இவ்விரு நிலைமைகளைக் கவனிக்கத் தவறினால் தாக்குதல், அதிகரிக்கும் அளவும் ஆழமும் கொண்ட பொதுத் தாக்குதல்களுக்கான துவக்கமாக இருப்பதிற் தவறுவது மட்டுமின்றி, தக்க தருணத்தை தெரிவு செய்யும் காரணத்தையும் பொருளையும் கறாராகக் குறிப்பதான ஓர் இடி முழக்கமாக, அடித்து நொறுக்குவதான தாக்குதலாக வளரத் தவறுவது மட்டுமின்றி அதற்கு மாறாக, வெறுக்கத்தகு, கேலிக்குரிய கலகமாக மாறிவிடும்; அதை அரசும் எதிரியும் பொதுவாக வரவேற்று தமது மதிப்பை - கௌரவத்தை உயர்த்த பயன்படுத்திக் கொள்வர். அது கட்சியைத் தாக்கி அழிப்பதற்கு அல்லது குறைந்த பட்சம் உணர்வு குன்றச் செய்வதற்கு முன் காரணமாகவும் துவக்கப்புள்ளியாகவும் அமையும். எனவே, பொதுவாக, முதற் தாக்குதல் வெறும் கேலிக்குரிய அல்லது வெறுக்கத்தக்க கலகமாக மாறிவிடாதபடி கவனமாக தாக்குதலுக்கான தருணத்தை தெரிவு செய்யவேண்டும். அதற்காக முன்சொன்ன இரு நிபந்தனைகளைக் கறாராகக் கடைபிடிக்க வேண்டும்.

இவ்வாறு அனைத்து தயாரிப்புகளும் செய்து முடிக்கப்பட்டு தீர்க்கமான தாக்குதலுக்கான தருணம் இருப்பின், ஆயுதந் தாங்கிய வெகுஜன எழுச்சியைத் தொடுக்குமபடி கட்டளை

பிறப்பிக்க வேண்டும். ஆனால் கட்டளை பிறப்பிக்கப்பட்டவுடன் நேரடியாக அது யுத்தமாக வெடிப்பதில்லை, (1) ஒரு பொது அரசியல் வேலை நிறுத்தமும் ஆர்ப்பாட்டங்களும் (2) தெருச் சண்டை, தடுப்புச்சுவர் போர், மற்றும் நகரும் எதிரிப்படைகளின் மீது திடீர்த் தாக்குதல் போன்ற கொரில்லாப் போரின் ஆரம்ப வடிவங்கள் (3) புரட்சிகர இராணுவப் படைப்பிரிவுகள்,—கொரில்லாப் படைப்பிரிவுகள் மற்றும் கிரமமான கொரில்லா யுத்தம்—ஆகிய மூன்று கட்டங்களில் ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சி முன்னேறும். புறவயமான நிலைமைகளும் அகவயமான நிலைமைகளும் பொருத்தமாக இணை சேர்ந்து சரியான தாக்குதல் தருணத்தில் கட்டளை பிறப்பிக்கப்படும்போது கட்சியின் முழக்கத்தை மக்கள் தமதாக ஏற்று தடுத்து நிறுத்த முடியாதவாறு ஒரு பொது அரசியல் வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டத்தை அவர்கள் ஆயுதமேந்திய வெகுஜன எழுச்சியாக உயர்ந்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்லத் தயங்கவே மாட்டார்கள். பொது வேலை நிறுத்தத்தை மற்றும் ஆர்ப்பாட்டத்தை துவக்கி உயர்ந்த கட்டத்திற்கு முன்னேறும்போது எதிரி சாதாரண வரம்புகள் எதையும் பாராது தடுப்புச் சுவர்கள் மீது, மக்களின் குடியிருப்புகள் மீது, ஆர்ப்பாட்டம் செய்யும் மக்கள்திரள் மீது பாயும்படி—வாழையாக உள்நாட்டுப் போரைத் துவக்கி வைக்குமாறு, துப்பாக்கி மற்றும் பிற ஆயுதங்களைக் கொண்டு தாக்குமாறு—தாக்குதல் தொடுப்பான். புரட்சியும் முன்னேறிச் செல்லும். தற்காப்புக் குழுக்கள், செங்காவலர் படைப்பிரிவுகள் பரந்துபட்ட மக்களை சாத்தியமான அளவு ஆயுதபாணியாக்கி ஆயுதந்தாங்கிய எழுச்சிப் படைப்பிரிவுகளை நிறுவுவதோடு, ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப்புற நகரங்களிலும் தடுப்புச் சுவர்களை எழுப்பியும் — பாதைகளை வெட்டி விடுவது, முற்களையும் கற்களையும் மரங்களையும் போட்டு தடுப்புச் சுவர் எழுப்புவது, பாதையிலே தீ மூட்டி விடுவது, பாலங்களைத் தகர்ப்பது போன்றவை—கிராமங்களிலும் நகரங்களிலும் தெருச்சண்டைகளையும், பரந்து விரிந்த கிராமப்புற பகுதிகளிலும் வயல் வெளிகளிலும் நகர்ந்து செல்லும் எதிரிக்கு எதிராக திடீர்த் தாக்குதல் தொடுப்பதும், ஆயுதங்களைக் கைப்பற்றுவதும் என்கிற முறையில் ஆரம்பகால கொரில்லாத் தாக்குதல்களை மிகப் பெரிய எண்ணிக்கையில் நடத்த வேண்டும். கவனமாக தெரிந்தெடுக்கப்பட்ட முதற் தாக்குதலுக்கான இலக்கு உட்பட எதிரியின் உயிராதாரமான, கேந்திரமான அரசியல் இராணுவ யுத்த தந்திரக் குறியிடங்களையும் நிலைகளையும் தாக்க வேண்டும். எதிரியின் சிவில், இராணுவத் தலைமையை அழித்தொழிக்கவும், ஈவு இரக்கமற்ற முறையில் வெகுஜன பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விடவும் சிறிதும் தயங்கவே கூடாது. ஆனால், ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியின் போக்கு முழுமையையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக அதன் அரசியல் இராணுவத் தலைமை எப்பொழுதும் நேரடியாக முன் நிற்க வேண்டும்.

செங்காவலர் குழுக்கள் மத்தியிலிருந்தும், ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சிப்படைப் பிரிவுகள் மத்தியிலிருந்தும் கிரமமான கொரில்லாப் படைப்பிரிவுகளும்,—தொடர்ந்து கிரமமான கொரில்லா யுத்தத்தை மேற்கொள்ளும் செஞ்சேனையின் ஆரம்ப ஸ்தாபனங்களாகவும், முழுநேர இராணுவ சேவைக்கானவர்களையும் கொண்டது; அவற்றின் புரட்சிகர இராணுவத் தலைமைக் குழுக்களும்— எழுச்சியினூடாக அறிவுபூர்வமாக நிறுவப்படவேண்டும். அதேபோன்று போராட்டக் கமிட்டிகள் மற்றும் எழுச்சிக்கான கமிட்டிகள் மத்தியிலிருந்து ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியினூடாகவே அவற்றை அரசியல் அதிகாரத்துக்கானவைகளான உறுப்புக்களாக— கிராம சோவியத்துக்கள் அல்லது புரட்சிக் கவுன்சில்கள் மற்றும் நிர்வாகக் கமிட்டிகள்—புரட்சிகர அரசாங்கத்தின் ஆரம்ப ஸ்தாபனங்களாக அறிவுபூர்வமாக நிறுவப்படவேண்டும். இந்த இராணுவ மற்றும் அரசியல் தலைமை இரண்டிலும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் பிரதிநிதிகள் பங்கேற்று வழிநடத்துவர்; இயல்பாகவே ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சிக்குத் தலைமையேற்று வீரதீரத்துடன், தியாகத்துடன் முன்னின்று பங்கேற்கும் பாட்டாளி வர்க்கக் கட்சியினர் அதிக எண்ணிக்கையில் இருப்பர், எனினும், பாட்டாளி வர்க்கக் கட்சியினர் மட்டுமே இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோ, அவற்றின் வெகுஜனத் தன்மையை—புதிய ஜனநாயக வர்க்கங்களின் கூட்டணி எனகிற தன்மையை—மறுப்பதோ கூடாது. ஒருபுறம் புரட்சிகர அரசியல் அதிகாரத்துக்கான உறுப்புகளும்—கிராம சோவியத்துக்களும்— மற்றொருபுறம் புரட்சிகர இராணுவத்தின் தலைமைக்குழுக்களும், செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகளும் ஆகிய இரண்டும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்; ஒன்றின்றி மற்றொன்று இருக்க முடியாது; கூடாது. இரண்டும் ஏககாலத்தில் நிறுவி வளர்க்கப்பட வேண்டியவை. இவை ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சி வெற்றி பெறவும், அதன் பலன்களை உறுதிப் படுத்தவும் சம அளவில்—சம அந்தஸ்தில்—அவசியமான முக்கியத்துவம் வாய்ந்தவையான இரு நிறுவனங்களாகும். இவையே உறுதியான தொடர்ச்சியான புரட்சிகர முழக்கங்கள் என்கிற முறையில் முன்வைத்து அழுத்தந்தரப்பட வேண்டிய இரு முழக்கங்களாகும்.

இராணுவத் தலைமைக் குழுவின் தலைமையில் செங்காவலர் குழுக்கள் மக்கள் எழுச்சிப்படைப் பிரிவுகள் கொரில்லாப்படைப் பிரிவுகள் ஆகியவற்றின் பணி பிற யுத்தங்களைப் போலவே உள்நாட்டு யுத்தத்திலும் மிகவும் இன்றியமையாததான பரந்துபட்ட மக்கள் திரளின் இராணுவத் தலைமையளிக்கும் பொருட்டும், வெளிப்படையான மக்கள் திரளின் போராட்டங்களுக்கான பலமிகு குறியிட்டங்களை உருவாக்கும் பொருட்டும், முன்னுரிமையளிக்கும் பகுதிகளெங்கும்—வரம்புக்குட்பட்டு—ஆயுதந்தாங்கிய எழுச்சியைப் பரப்பும் பொருட்டும் அரசியல் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அரசியல் அதிகாரத்தை நிறுவும் பொருட்டும், தற்போதைய

ஆட்சியையும் நிறுவனங்களையும் தட்டித் தகர்த்தெறிந்து புதிய அரசியல் அதிகாரத்தையும் நிறுவனங்களையும் புரட்சிகரமான முறையில் நிறுவும் பொருட்டும், சாதாரண காலகட்டங்களில் சலனமின்றியோ, சிறிதளவோ செயல்படும் மக்கள் திரளினர் இம் மாதிரியான புரட்சிகர எழுச்சிக்கான காலகட்டங்களில் முன்னணியில் நின்று போரிடுவதற்கான பரந்துபட்ட மக்கள் பெருந்திரளின் புரட்சிகரமான ஆக்கபூர்வமான செயல்களுக்கான முழுப் பரிமாணத்தையளிக்கும் பொருட்டும் ஆயுதந்தாங்கிய எழுச்சியைப் பிரகடனம் செய்ய வேண்டும். இப்புதிய பணிகளைத் தெட்டத்தெளிவாகப் புரிந்து கொள்வதன் மூலம் மட்டுமே, தைரியமாகவும், விசாலமாகவும் இவற்றை முன்நிறுத்துவதன் மூலம் மட்டுமே புரட்சிகர இராணுவப்படைப் பிரிவுகள் ஒரு புரட்சிகர அரசியல் அதிகாரத்துக்கான உறுப்புகளின் பலமிகு குறியிடங்களாக மாறவும் ஆயுதந்தாங்கிய எழுச்சியை வெற்றிகரமாக முடிக்கவும் முடியும். புரட்சிகர இராணுவப் படைப்பிரிவுகளைப் போலவே புரட்சிகர அரசியல் அதிகாரத்துக்கான உறுப்புகள் ஆயுதந்தாங்கிய எழுச்சியின் இந்தக் கட்டத்தில் உயிராதாரமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எதிரியின் ஆயுதப்படைகளுக்கெதிராக ஆயுதப்போராட்டத்தை நடத்தவும், பரந்துபட்ட மக்களுக்கு இராணுவத் தலைமையளிக்கவும் புரட்சிகர இராணுவப் படைப்பிரிவுகள் இன்றியமையாதவை. புரட்சியின் மையமான கடமைகளை புரட்சிகர வன்முறையின்றி, புரட்சிகர வன்முறையின் ஸ்தாபன ரீதியான சக்தியின்றி நிறைவேற்ற இயலாது என்பதால் புரட்சிகர இராணுவப் படைப்பிரிவுகள் அவசியமாகின்றன என்பதை மக்கள் உணர்வார்கள்; உணர்த்தப்பட வேண்டும்.

முதலில் ஒவ்வொரு கிராமத்துக்கும் அரசியல் அதிகாரத்துக்கான சோவியத்துகள் வடிவிலான தனித்தனி உறுப்புகளாகவும் பின்னர் அவை உறுதிசெய்யப்பட்டு மையப்படுத்தப்பட்டு ஆயுதந்தாங்கிய எழுச்சிப் பிரதேசங்கள் முழுவதற்குமான புரட்சிகர அரசாங்கமாகவும் விளங்கவேண்டிய பரந்துபட்ட மக்களது அரசியல் தலைமை அவசியமாக நிறுவப்பட வேண்டும். முதலில் கிராம சோவியத்துக்கள் மூலமாகவும், பின்னர் புரட்சிகர அரசாங்கம் மூலமாகவும் விவசாயத் திட்டத்தையும் அரசியல் சீர்திருத்தங்களையும் அமுலாக்குவதற்கு இவை அவசியம் வேண்டும். தற்போதைய அரசிடமிருந்தும், ஆளும் வர்க்கங்களிடமிருந்தும் முறித்துக்கொள்ளும், ஆயுதந்தாங்கிய எழுச்சியுறும் மக்களை அரசியல் ஸ்தாபனப்படுத்தவும், அரசியல் ஐக்கியத்தை நிறுவவும் புரட்சிகர அரசாங்கம் தேவையாகிறது.

ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சி வெற்றிகரமானதாக இருப்பினும் இறுதியாகவும் முழுமையாகவும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக இருக்காது. இரட்டை அதிகாரத்தை உடைய கொரில்லா மண்டலங்களையே முதலில் நிறுவமுடியும். ஏனெனில் பலம் வாய்ந்த எதிரியை உடனடியாகவோ, முற்றாகவோ அழித்தொழிக்க முடியாது. ஆயுதந்தாங்கிய வெகுஜன

எழுச்சியை அடக்கி ஒடுக்குவதற்காக எதிரி பிற பகுதிகளிலிருந்து தனது இராணுவம், போலீசை ஏவி விடுவதில் இறங்குவான்; நாமும் உடனடியாகப் பலம் வாய்ந்த கிரமமான செஞ்சேனையை நிறுவிவிட முடியாது. எனவே வெற்றிகரமான ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியைத் தொடர்ந்து விவசாயத் திட்டத்தையும், அரசியல் சீர்திருத்தங்களையும் படிப்படியாக அமுலாக்குவதன் மூலமும், செஞ்சேனையின் கொரில்லாப் படைப்பிரிவுகள், செங்காவலர்கள் மற்றும் மக்கள் எழுச்சிப் படைப் பிரிவுகளைக் கொண்டு கொரில்லா யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி எதிரியின் இராணுவம், போலீசை மிகப் பெரும் அளவில் அழித்தொழிப்பதும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதன் மூலமும் கிரமமான செஞ்சேனையையும் செந்தளப்பிரதேசத்தையும் நிறுவுவதற்கு நாமும், ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியையும், அதன் பின்னர் தொடங்கும் கொரில்லா யுத்தத்தையும் முறியடித்து இராணுவப் படைப்பிரிவுகள் மற்றும் கிராம சோவியத்துக்கள் அனைத்தையும் அழித்தொழிக்க எதிரியும், முற்றான அரசியல் அதிகாரத்துக்காக உக்கிரமான போராட்டம் நடத்தும் காலகட்டம் அடங்கியதும், யதார்த்தத்தில் இரட்டை அதிகாரத்தை—மாறி மாறி இருவரும் ஆட்சி செலுத்துவதைக் கொண்டிருக்கும் கொரில்லா மண்டலமாக இருக்கும். எனவே கிராம சோவியத்துக்களை மையப்படுத்தும் ஒரு அரசியல் ஸ்தாபனமும் (ஏறக்குறைய சோவியத்துக்களின் காங்கிரசு போன்ற அமைப்பு) அதன் தலைமை உறுப்பான புரட்சிகர அரசாங்கமும் தற்காலிகமானதாக நிறுவப்பட வேண்டியிருக்கும். இந்த இரு அமைப்புகளே மக்களின் சித்தத்தை நிறுவக்கூடியதும், மக்கள் செயல்படக் கூடியதுமான கருவிகளாகும். இரட்டை அதிகாரமுடைய கொரில்லா மண்டலங்களாக இருப்பினும் அவற்றின் வளர்ச்சிப்போக்கில் இந்த அமைப்புகள் நிறுவப்படுவதை உடனடியாகத் துவங்கி விடவேண்டும். இந்த அமைப்புகள் உறுதி செய்யப்பட்டு முழு அதிகாரத்தைப் பெறுவது கொரில்லா யுத்தத்தின் ஒவ்வொருபடி முன்னேற்றத்தோடும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அரசியல் ரீதியில் உறுதி செய்வதும் அரசியல் தலைமையளிப்பதும் ஒரு கணமும் தாமதிக்க முடியாது. இராணுவத் தலைமை இராணுவப் படைப் பிரிவுகளுக்கு எவ்வாறு அவசியமோ அதே போன்று ஆயுதந்தாங்கி எழுச்சியுறும் மக்களுக்கு அரசியல் தலைமையளிப்பதும் வெற்றிக்கு இன்றியமையாததாகும்.

ஆயுதந்தாங்கிய எழுச்சியைத் தொடர்ந்து கட்டி வளர்க்கப்படும் அரசியல் அதிகாரத்துக்கான உறுப்புக்களும், இராணுவப் படைப்பிரிவுகளும் முறையே அரசியல் இராணுவத் தலைமையளிக்க வல்லவைகளாக இருக்க வேண்டும். புரட்சிகர அரசியல் அதிகார உறுப்புகள் பரந்துபட்ட மக்களது குறிப்பாக உழைக்கும் மக்களது முழு ஆதரவையும் பெற முயலவேண்டும். இல்லையென்றால் அவை எதிரியின் தாக்குதலுக்கெதிராகத் தாக்குப்பிடித்து நிற்கவே முடியாது. மக்களது புரட்சிகர எழுச்சியின்றி அவற்றுக்குரியது ஒன்றுமே இல்லை; ஒன்றுமே இல்லை என்ப

தையும் விட மோசமான நிலையே இருக்கும். அதி தீவிரத் துணிச்சல் வாதத்துக்கெதிராக எச்சரிக்கும் போதே பரந்துபட்ட மக்களைத் தட்டியெழுப்பி புரட்சிகர நடவடிக்கைகளுக்காகத் தொடர்ந்து ஸ்தாபனப்படுத்த வேண்டும். புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்கு முன்புவரை பொது அறைகூவல் வகுப்பது போதுமானதாக இருக்கலாம். ஆனால் அதன் உண்மையான பொருளில் அறைகூவல் என்பது உடனடியாகத் தாமதமின்றி அரசியல் சீர்திருத்தங்களையும் விவசாயத் திட்டத்தையும்—குறிப்பிட்ட தருணத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப வகுக்கப்படும் அரசியல் போர்த்தந்திரத்தின் அரசியல் நடத்தைவழி மற்றும் குறிப்பிட்ட இடைக்கட்டத்தின் குறித்த திட்டத்தாலும் தீர்மானிக்கப்படுவது — அமுலாக்குவதற்கான நேரடி அறைகூவலாக இருக்கவேண்டும். ஏனெனில் மிகவும் பின்தங்கிய பகுதியினர் உட்பட அனைத்துப்பிரிவு மக்களும் மிகவும் தெட்டத் தெளிவாகவும், கூர்மையாகவும் புரட்சிகர அரசியல் அதிகாரத்தின் நோக்கங்களையும் குறிப்பொருளையும் உணரும்படி இருக்கும்பொழுது மட்டுமே புரட்சியின் பலன்களை சுவைக்கும்பொழுது மட்டுமே புரட்சிகர அரசியல் அதிகாரத்தை உறுதியாகக் காப்பதற்கான ஜீவ மரணப் போராட்டத்துக்கு மக்களைத் தட்டியெழுப்ப முடியும்.

அதேபோன்று, மக்களின் பெருந்திரளும், மக்களின் பல்வேறு வர்க்கங்களும் மிகவும் வரலாற்றுக் குறிபொருள் மிக்க மோதல்களை தீர்மாணித்துக் கொள்ளும் முறையாகவும், கருவியாகவும் இருக்கும் யுத்தம் மற்றும் இராணுவம் பற்றிய அறிவு பெறுவதற்கும், இராணுவ நுட்பங்களுக்கும், இராணுவ ஸ்தாபன முறைகளுக்கும் பாரதூரமான முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். தெலிங்கானா ஆயுதப் போராட்டத்தின் போதும், நக்சல்பாரியைத் தொடர்ந்து வந்த போராட்டங்களின் போதும் கூட இந்தியப் புரட்சியாளர்கள் இராணுவ விவகாரங்களுக்கு அதன் உண்மையான பொருளில் முக்கியத்துவமளித்ததே இல்லை. புரட்சிகர செஞ்சேனையைக் கட்டி வளர்க்கவும் செஞ்சேனையும் இராணுவ விவகாரங்களையும் சாதனங்களைப் பயன்படுத்துவதையும் கற்றுத்தேரவும், பிரயோகிக்கவும் வேண்டும். இதற்கு நடைமுறை ரீதியான முக்கியத்துவமளிக்கும் பிரச்சினை கொரில்லா மண்டலங்களை நிறுவும் போது முன்வரும்.

கொரில்லா மண்டலங்கள் தளப்பிரதேசங்களாக மாறும் பொழுது முழு வளர்ச்சியுற்ற நிலையை எய்தும் புரட்சிகர செஞ்சேனையும், புரட்சிகர சிகப்பு அரசியல் அதிகாரமும் இரண்டுமே ''கருவுரு''வான அமைப்புகளாகும். அவ்விரு நிறுவனங்களுமே மிகவும் சிக்கல்மிக்கனவும், மக்களுடையே வளர்ச்சியுற்ற புரட்சிகர அரசியல் உணர்வையும் கோருவனவாகும். எனவே உடனடியாகவோ, துவக்கத்திலோ அவற்றின் பணிகளைச் செய்யவல்ல முழுவளர்ச்சியுற்ற, பூரணத்துவம் பெற்ற நிறுவனங்களாக எதிர்பார்க்க முடியாது. மெதுவாகவும் இடர்பாடுகள்மிக்கதாகவும் வளர்ச்சியுறும். எனவே மக்களது

ஆக்கபூர்வமான சக்தியிலும், அரசியல் அதிகாரத்திலும் நம்பிக்கையிழப்பதோ, யாவற்றிலும் பாட்டாளி வர்க்கக் கட்சியை முன்னிறுத்த முயற்சிப்பதோ கூடாது. எங்கோ மூலையிலும், ஒதுக்குப்புறத்திலும், குடிசைகளிலும் அடைந்து கிடக்கும் சாதாரண மனிதர்களையும் தெருவில் வயல்வெளிகளில் எதிரிக்கெதிரான ஆயுதந்தாங்கிக் கிளர்ந்தெழும்படிச் செய்யும் புரட்சி பிரம்மாண்டமான போதமளித்து அவர்களை ஸ்தாபனப் படுத்தும் சக்தி வாய்ந்தது. பல பத்தாண்டுகள், நூறாண்டுகள் அசையாது நிலைகொண்டிருந்த பின்தங்கிய மக்கள் பிரிவினரையும் சில மாதங்கள், சில நாட்களில் புரட்சி தட்டியெழுப்பி புரட்சிகர அரசியலைப் போதித்துவிடுகிறது. புரட்சிகர வர்க்கத்தின் வர்க்கஉணர்வு பெற்ற தலைமையின் பணி எப்பொழுதுமே கற்றுக்கொள்வதில் முன்நிற்பதும் பரந்துபட்ட மக்களுக்கு புதிய பணிகளின் பொருளை விளக்குவதும், இறுதி லட்சியத்தை நோக்கி முன்னேறும்படி மக்களை வழிநடத்துவதும் தான். புரட்சிகர செஞ்சேனை மற்றும் புரட்சிகர அரசாங்கம் பற்றியும் படிப்பினையைத் தொகுத்து அவற்றை நிறுவுவதற்கான நடைமுறைப் பிரச்சினைகளில் பரந்துபட்ட மக்களை அவர்கள் வழிநடத்த வேண்டும்.

ஆயுதந்தாங்கிய வெகுஜன எழுச்சியின் வெற்றிகரமான விளைவுகளினால் எழும் கொரில்லாப் படைப்பிரிவுகளை வளர்த்தெடுத்து கிரமமான செஞ்சேனையை நிறுவுவது பற்றியும், அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் விவசாயத் திட்டத்தை அமுலாக்குவதன் மூலம் கிராம சோவியத்துக்களிலிருந்து புரட்சிகர அரசாங்கத்தையும் படிப்படியாக நிறுவுவது பற்றியும், மொத்தத்தில் கொரில்லா மண்டலங்களை செந்தளப் பிரதேசங்களாக வளர்த்தெடுப்பது பற்றியும் முந்திய அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இவையனைத்தையும் பருண்மையாகவும், நெழிவுசுழிவுடனும் பிரயோகிப்பதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான விவசாயிகளது போராட்டத்தின் மிக உயர்ந்த வடிவமாக செந்தளப்பிரதேசங்களையும், செஞ்சேனையையும், கொரில்லாப் படைப்பிரிவுகளையும் ஸ்தாபிக்கவும், வளர்க்கவும் வேண்டும். அதன்பின் நமது யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல்நிலை அளவு உயரும்வரை, எதிரியின் 'சுற்றி வளைத்து அடக்குதலும்' அதற்கெதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகளும் பிரதான வடிவமாகக் கொண்ட உள்நாட்டு யுத்தம் தொடரும். அதற்கான இராணுவ யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திர நியதிகள் ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளன. யுத்ததந்திர ரீதியிலான தாக்குதல் நிலைக்கு உயர்ந்த பின்னர் பின்பற்ற வேண்டிய இராணுவப் போரியக்க மற்றும் போர்த்தந்திர நடவடிக்கைகளுக்கான நியதிகளும் கோட்பாடுகளும் கூட ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பருண்மையாகப் பிரயோகிக்க வேண்டும். ஆனால் இராணுவ ரீதியிலான அனைத்து நடவடிக்கைகளையும் அரசியல் யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் அரசியல் நடத்தை வழி வழிநடத்தும். ❋

# பிழைதிருத்தங்கள்

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 9 | 3 | 25 | பொதிசை | பொதுநிசை |
| 14 | 3 | 4 | சிடைக்கட்டத்திலும் | இடைக்கட்டத்திலும் |
| 14 | 4 | 16 | பொயானது | பொய்யானது |
| 17 | 1 | 3 | இயல்பு | இயல்பும் |
| 19 | 1 | 9 | தொங்கி | தொடங்கி |
| 19 | 1 | 10 | கோபாடு | கோட்பாடு |
| 32 | 2 | 10-11 | சட்டிக்காட்டி | சுட்டிக்காட்டி |
| 34 | 3 | 5 | முநலாளித்துவ | மூதலாளித்துவ |
| 35 | 3 | 26 | இலகுகள் | இலக்குகள் |
| 49 | 4 | 10 | திபத்தியத்திற்கு | ஏகாதிபத்தியத்திற்கு |
| 74 | 1 | 1 | செல்வதை | வெல்வதை |
| 77 | 2 | 5 | க்கட்டுபபடுடையவை | கட்டுப்பாடுடையவை |
| 78 | 3 | 11 | புரத்சிகர | புரட்சிகர |
| 79 | 2 | 6 | மாறுகின்றன | மாறுபடுகின்றன |
| 81 | 1 | 5 | தயை | தழுவிய |
| 81 | 1 | 6 | — | என்ற |
| 85 | 5 | 10 | பொறுனமைன்மை | பொறுமையின்மை |
| 103 | 1 | 1 | நிலைாட்ட | நிலைநாட்ட |
| 107 | 1 | 19 | ஹி | ஷி |
| 107 | 2 | 13 | தனிதமப்படுத்துவது | தனிமைப்படுத்துவது |
| 109 | 3 | 4 | மாரிதித் | மாதிரித் |
| 110 | 3 | 2 | முயற்சிக் | முயற்சிக்கும் |
| 126 | 1 | 12 | கமூக | சமூக |
| 126 | 2 | 1 | இருவினோதமான | இருவிசேஷமான |
| 187 | 1 | 1 | பாதுவுடமைக்கட்சி | பொதுவுடமைக்கட்சி |
| 201 | 4 | 9 | சலுை | சலுகை |
| 224 | 4 | 6 | சமனந்த | சமனற்ற |
| 233 | 1 | 3 | மெது | எமது |
| 257 | 4 | 12 | னப்பொதுவுடமைக் | சீனப்பொதுவுடமைக் |
| 258 | 1 | 14 | ஹோ-கால்-ஆ | ஹோ-கான்-சி |
| 273 | 2 | 30-31 | வென்றெப்பதற்கு | வென்றெடுப்பதற்கு |
| 274 | 2 | 17 | யுத்தத்திம் | யுத்தத்தில் |
| 287 | 3 | 3 | கெடுண்ட | கொண்ட |
| 293 | 2 | 13 | பறவேண்டும் | பெறவேண்டும் |
| 295 | 2 | 21 | கொரில்ல யுத்த முறை ஸ்தான யுத்தமுறை | கொரில்லாயுத்தமுறை நடமாடும் யுத்தமுறை ஸ்தான யுத்தமுறை |
| 296 | 2 | 5 | கசங்கொரில்லாப் பிரதேசமுல் | செங்கொரில்லாப் பிரதேசமும் |
| 297 | 1 | 2 | எதிரிப்கடை | எதிரிப்படை |
| 308 | 2 | 5 | தீண்டகாலமாக | நீண்டகாலமாக |
| 314 | 1 | 11 | ஆகமுற்றி | ஆகமுந்தி |
| 319 | 1 | 8 | விடிவு | தெரிவு |
| 320 | 3 | 1 | விரசத்தை | விநாசத்தை |
| 342 | 2 | 6 | ற்றத்தாழ்வான | ஏற்றத்தாழ்வான |
| 345 | 2 | 17 | வவர்ப்பதற்கான | வளர்ப்பதற்கான |

● நடைமுறைப் புரட்சி நடவடிக்கைகளின் சூழ்நிலைமைகளைப் புரிந்து கொள்ளவோ அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடவோ முந்திய பொருள் முதல்வாதம் திறனற்றிருந்ததானது, அதன் பிரதான குறைபாடுகளில் ஒன்று; இதை 1844—45லேயே மார்க்சும், எங்கெல்சும் தெளிந்துரைத்து விட்டனர். ஆகவேதான் தமது கோட்பாட்டு வேலையோடு கூடவே பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் பற்றிய யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரப் பிரச்சினைகளில் தமது வாழ்க்கை நெடுகிலும் அவர்கள் அயராது கவனம் செலுத்தினர்.......இந்த அம்சத்தைத் தன்னகத்தே கொண்டிராத பொருள் முதல்வாதம் உறுதியற்றதாய், ஒருதலைப் பட்சமானதாய் இருக்கும் என்று அவர்கள் முழு நியாயத்தோடு கருதினர்.

● யுத்த தந்திரம் மற்றும் போர்த் தந்திரங்கள் பற்றிய மார்க்ஸ்-எங்கெல்சினுடைய கருத்துக்களை—இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளால் இருட்டடிப்பு செய்யப்பட்ட கருத்துக்களை-லெனின் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார்.ஆனால் அவர்களது குறிப்பான நிர்ணயிப்புகளை நிலைநாட்டியதோடுமட்டும் லெனின் தனக்கு வரம்பிட்டுக்கொள்ளவில்லை, அவர் அவற்றை மேலும் வளர்த்தெடுத்தார்; தமது புதிய கருத்துக்களையும்,நிர்ணயிப்புகளையும் கூடுதலாக இணைத்தார்; பட்டாளி வர்க்கத்தினுடையவர்க்கப் போராட்டத்தின் தலைமை முறைக்கான விதிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளது ஒரு கட்டமைவாக இவை எல்லாவற்றையும்இணைத்தார்.இவற்றையே பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கானவழிகாட்டுதல்களாக ஸ்டாலின் தொகுத்தளித்தார்.

● யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள் பற்றிய மார்ச்சிய—லெனினியக் கோட்பாடுகளை காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய மற்றும் அரை நிலப்பிரபுத்துவ நாடுகளுக்குப் பிரயோகிப்பதற்கானவையாக சிறப்பாக வகுத்து மா-சே-துங் மேலும் வளர்த்தெடுத்தார். இந்திய 'இடது மற்றும் வலது சந்தர்ப்பவாதிகளால் இதுவரை இருட்டடிப்பு செய்யப்பட்டவையும், பிற புரட்சிகர குழுக்களால் புறக்கணிக்கப்பட்டவையுமான யுத்ததந்திரம் மற்றும் போர்த்தந்திரங்கள்பற்றிய மார்ச்சிய—லெனினிய—மா-சே-துங் சிந்தனை அடிப்படையிலான இந்த அணுகுமுறைகளையே முதன் முறையாகவும், விரிவாகவும், ஒருங்கிணைந்த வகையிலும் இந்த அறிக்கையில் தொகுத்தளித்துள்ளோம்; இந்தியப் புரட்சிக்கான அரசியல் மற்றும் இராணுவப் பாதையை வகுப்பதற்காக பகுண்மையாகப் பிரயோகித்துமுள்ளோம்.